இந்திய அரசு

சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

இந்திய அரசமைப்பு

(2008, மார்ச் 31 வரை திருத்தம் செய்யப்பட்டவாறு)

THE CONSTITUTION OF INDIA

(As amended upto the 31st March, 2008.)

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

சட்ட (ஆட்சிமொழிப் பிரிவு)த் துறை

தலைமைச்செயலகம்,

சென்னை–9

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
2009

இந்திய அரசமைப்பு

(2008, மார்ச் 31 வரை திருத்தம் செய்யப்பட்டவாறு)

THE CONSTITUTION OF INDIA

(As amended upto the 31st March, 2008)

இந்திய அரசமைப்பு

பொருளடக்கம்

உறுப்பு முகப்புரை பக்கம்

பகுதி I

ஒன்றியமும் அதன் ஆட்சிநிலவரையும்

1. ஒன்றியத்தின் பெயரும் ஆட்சிநிலவரையும். 1
2. புதிய மாநிலங்களை ஏற்றிணைத்தல் அல்லது நிறுவுதல். 1
2அ. [நீக்கறவு செய்யப்பட்டது] 1
3. புதிய மாநிலங்களை உருவாக்குதலும் நிலவுறும் மாநிலங்களின் பரப்பிடங்களை, எல்லைகளை அல்லது பெயர்களை மாற்றம்செய்தலும். 1
4. 2, 3 ஆகிய உறுப்புகளின்படி இயற்றப்படும் சட்டங்கள், முதலாம், நான்காம் இணைப்புப்பட்டியல்களைத் திருத்துவதற்காகவும் துணைவுறு, சார்வுறு, விளைவுறு பொருட்பாடுகளுக்காகவும் வகைசெய்தல். 2

பகுதி II

குடிமை

5. அரசமைப்பின் தொடக்கநிலையில் குடிமை. 2
6. பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்துள்ள குறித்தசிலரின் குடிமை உரிமைகள். 2
7. பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்துள்ள குறித்த சிலரின் குடிமை உரிமைகள் 3
8. இந்தியாவுக்கு வெளியே குடியிருந்துவரும் குறித்தசில இந்திய மரபினரின் குடிமை உரிமைகள். 3
9. ஓர் அயல் நாட்டு அரசின் குடிமையினைத் தம் விருப்பாகப் பெற்றுள்ளவர்கள் குடிமக்கள் ஆவதில்லை. 3
10. குடிமை உரிமைகள் தொடர்ந்திருத்தல். 4
11. நாடாளுமன்றம் சட்டத்தினால் குடிமை உரிமையை ஒழுங்குறுத்துதல். 4

பகுதி III

அடிப்படை உரிமைகள்

பொதுவியல்

12. பொருள்வரையறை. 4
13. அடிப்படை உரிமைகளுக்கு முரணான அல்லது அவற்றைத் திறக்குறைவு செய்யும் சட்டங்கள். 4

சமன்மைக்கான உரிமை

14. சட்டத்தின் முன்னார்ச் சமன்மை. 5
15. சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் காரணமாக வேற்றுமை காட்டுதலுக்குத் தடை. 5
16. பொது வேலையமர்த்தங்கள் தொடர்பாகச் சமன்மையான வாய்ப்புநலம் 5
17. தீண்டாமை ஒழிப்பு. 6
18. விருதுப்பட்டங்கள் ஒழிப்பு. 6

உறுப்பு

பக்கம்

சுதந்திரத்திற்கான உரிமை

19. பேச்சுச் சுதந்திரம் முதலியவை பற்றிய குறித்தசில உரிமைகளுக்குப் பாதுகாப்பு. 7

20. குற்றச்செயல்களுக்கான குற்றத்தீர்ப்பு பொறுத்த பாதுகாப்பு. 8

21. உயிருக்கும், உடல்சார் உரிமைக்கும் பாதுகாப்பு. 8

21அ. கல்வி கற்பதற்கான உரிமை. 8

22. குறித்தசில நேர்வுகளில் கைதுசெய்தல், காவலில் வைத்தல் இவற்றிலிருந்து பாதுகாப்பு. 8

சுரண்டலைத் தடுப்பதற்கான உரிமை

23. மனிதரை வணிகப் பொருளாக்குதல், வலுக்கட்டாயமாக வேலை சுமத்துதல் ஆகியவற்றிற்குத் தடை. 10

24. தொழிற்சாலைகள் முதலியவற்றில் சிறார்களை வேலையமர்த்தம் செய்தலுக்குத் தடை. 10

சமயச் சுதந்திரத்திற்கான உரிமை

25. மனச்சான்று வழி ஒழுகுவதற்கான சுதந்திரமும் சுதந்திரமாகச் சமயநெறி ஓம்புதலும் ஒழுகுதலும் ஓதிப்பரப்புதலும். 10

26. சமயம் சார்ந்த காரியங்களை நிருவகிப்பதற்கான சுதந்திரம். 11

27. குறிப்பிட்ட சமயம் எதனையும் வளர்ப்பதற்கான வரிகள் செலுத்துவது குறித்த சுதந்திரம். 11

28. குறித்தசில கல்வி நிறுவனங்களில் சமயப் போதனை பயிலவருவது அல்லது சமய வழிபாட்டுக்கு வருகை தருவது குறித்த சுதந்திரம். 11

பண்பாடு, கல்வி பற்றிய உரிமைகள்

29. சிறுபான்மையினர் நலன்களுக்குப் பாதுகாப்பு. 11

30. கல்வி நிறுவனங்களை நிறுவவும் நிருவகிக்கவும் சிறுபான்மையினருக்குள்ள உரிமை. 12

31. [நீக்கறவு செய்யப்பட்டது] 12

குறித்தசில சட்டங்களுக்குக் காப்புரை

31அ. உரிமை நிலச்சொத்துகள் முதலியனவற்றைக் கையகப்படுத்துவதற்கு வகைசெய்யும் சட்டங்களுக்குக் காப்புரை. 12

31ஆ. குறித்தசில சட்டங்களையும், ஒழுங்குறுத்தும்விதிகளையும் செல்லுந்தன்மை உடையனவாக்குதல். 14

31இ. குறித்தசில நெறிப்படுத்தும் கோட்பாடுகளைச் செல்திறப்படுத்தும் சட்டங்களுக்குக் காப்புரை. 14

31ஈ. [நீக்கறவு செய்யப்பட்டது]. 14

அரசமைப்புத் தீர்வழிகளுக்கான உரிமை

32. இந்தப் பகுதியினால் வழங்கப்படும் உரிமைகளைச் செயலுறுத்துவதற்கான தீர்வழிகள். 14

32அ. [நீக்கறவு செய்யப்பட்டது]. 15

33. இந்தப் பகுதியினால் வழங்கப்படும் உரிமைகளைப் படையினர் முதலானோருக்குப் பொருந்துறச் செய்கையில் அவற்றை மாற்றமைவு செய்ய நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம். 15

34. வரையிடம் ஒன்றில் படைத்துறையாட்சி செல்லாற்றலில் இருக்குங்கால், இந்தப் பகுதி வழங்கும் உரிமைகள் மீதான வரைத்தடை. 15

35. இந்தப் பகுதியின் வகையங்களுக்குச் செல்திறம் அளிப்பதற்காகச் சட்டமியற்றுதல் 15

றுப்பு பக்கம்

பகுதி IV

அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள்

36. பொருள்வரையறை. 16

37. இந்தப் பகுதியில் அடங்கியுள்ள கோட்பாடுகளைப் பயன்படுத்துதல். 16

38. மக்கள் நலப்பாட்டை வளர்க்கும் வகையில், சமுதாய முறையமைவினை எய்திடுமாறு அரசு செய்தல் வேண்டும். 16

39. அரசு பின்பற்ற வேண்டிய குறித்தசில கொள்கைக் கோட்பாடுகள். 17

39அ. சமநீதியும் இலவசச் சட்ட உதவியும். 17

40. ஊராட்சி மன்றங்களை அமைத்தல். 17

41. வேலை, கல்வி, குறித்தசில நேர்வுகளில் பொது நல உதவி ஆகியவற்றைப் பெறுவதற்கான உரிமை. 17

42. இசைவானதும் இதமானதுமான வேலைச் சூழல்களுக்கும், பேறுகால உதவிக்கும் ஏற்பாடு செய்தல். 17

43. தொழிலாளர்களுக்கு வாழ்வுக்கேற்ற கூலி, முதலியன. 18

43அ. விசைத்தொழில்களின் மேலாண்மையில் தொழிலாளர்கள் பங்கேற்றல். 18

44. குடிமக்களுக்கு ஒரே சீரான உரிமையியல் தொகுப்புச்சட்டம். 18

45. ஆறு வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு குழந்தைப் பருவநிலையில் கவனிப்பும் கல்வியும் அளிக்க ஏற்பாடு செய்தல். 18

46. பட்டியலில் கண்ட சாதியினர், பட்டியலில் கண்ட பழங்குடியினர், பிற நலிந்த பிரிவினர் ஆகியோரின் கல்வி, பொருளியல் நலன்களை வளர்த்தல். 18

47. உணவுச் சத்தின் தரநிலை, வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை உயர்த்தவும் மக்களின் உடல்நலத்தை மேம்படுத்தவும் அரசிற்குற்ற கடமை. 18

48. வேளாண்மை, கால்நடை பேணுகை ஆகியவற்றின் அமைப்பு. 18

48அ. சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துதலும் காடுகள், காடுவாழ் உயிரினங்கள் ஆகியவற்றைப் பேணிக்காத்தலும். 19

49. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள், இடங்கள், பொருள்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல். 19

50. ஆட்சித்துறையினின்றும் நீதித்துறையைப் பிரித்தல். 19

51. பன்னாடுகளிடையே அமைதியையும் காப்புணர்வையும் வளர்த்தல். 19

பகுதி IV அ

அடிப்படைக் கடமைகள்

51அ. அடிப்படைக் கடமைகள். 19

பகுதி V

ஒன்றியம்

அத்தியாயம் I–ஆட்சித்துறை

குடியரசுத்தலைவரும் துணைத்தலைவரும்

52. இந்தியக் குடியரசுத்தலைவர். 20

53. ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரம். 20

54. குடியரசுத்தலைவரைத் தேர்ந்தெடுத்தல். 21

உறுப்பு		பக்கம்
55.	குடியரசுத்தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை.	21
56.	குடியரசுத்தலைவரின் பதவிக்காலம்.	22
57.	மீண்டும் தேர்ந்தெடுக்கப்பெறுவதற்கான தகுமை.	22
58.	குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்கான தகுதிப்பாடுகள்.	22
59.	குடியரசுத்தலைவரின் பதவிக்கான வரைமுறைகள் .	23
60.	குடியரசுத்தலைவருக்குற்ற ஆணைமொழி அல்லது உறுதிமொழி.	23
61.	குடியரசுத்தலைவர்மீது அவையில் பழிசாட்டுவதற்கான நெறிமுறை.	23
62.	குடியரசுத்தலைவரின் பதவி காலியிடமாகும் போது அதை நிரப்புவதற்காகத் தேர்தல் நடத்தவேண்டிய காலமும் இடைநேர்வான காலியிடத்தை நிரப்புவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பெறுபவரின் பதவிக் காலமும்.	24
63.	இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர்.	24
64.	குடியரசுத் துணைத்தலைவர் மாநிலங்களவைக்குப் பதவிவழித் தலைவராக இருப்பார்.	24
65.	குடியரசுத்தலைவரின் பதவி இடைநேர்வாகக் காலியிடமாகும் போது அல்லது அவர் இல்லாதபோது குடியரசுத் துணைத்தலைவர், குடியரசுத் தலைவராகச் செயலுறுவார் அல்லது அவருடைய பதவிப்பணிகளை ஆற்றிவருவார்.	24
66.	குடியரசுத் துணைத்தலைவரைத் தேர்ந்தெடுத்தல்.	25
67.	குடியரசுத் துணைத்தலைவரின் பதவிக்காலம்.	25
68.	குடியரசுத் துணைத்தலைவரின் பதவி காலியிடமாகும்போது அதை நிரப்புவதற்காகத் தேர்தல் நடத்த வேண்டிய காலமும் இடை நேர்வான காலியிடத்தை நிரப்புவதற்காகத் தேர்ந்தெடுக்கப் பெறுபவரின் பதவிக் காலமும்.	26
69.	குடியரசுத் துணைத் தலைவருக்குற்ற ஆணைமொழி அல்லது உறுதிமொழி.	26
70.	பிற எதிருறு நிகழ்வுகளில் குடியரசுத்தலைவரின் பதவிப் பணிகளை ஆற்றி வருதல்.	26
71.	குடியரசுத்தலைவரை அல்லது குடியரசுத் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுத்தல் பற்றிய அல்லது அதன் தொடர்பான பொருட்பாடுகள்.	26
72.	குறித்தசில நேர்வுகளில் குற்ற மன்னிப்புகள் முதலியன அளிப்பதற்கும் மற்றும் தீர்ப்புத் தண்டனைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு, இறுத்தல் செய்வதற்கு அல்லது மாற்றிக்குறைப்பதற்கும் குடியரசுத்தலைவருக்குற்ற அதிகாரம்.	27
73.	ஒன்றியத்து ஆட்சி அதிகாரத்தின் அளாவுகை.	27
	அமைச்சரவை	
74.	குடியரசுத்தலைவருக்கு அமைச்சரவை உறுதுணையாக இருத்தலும், தேர்வுரை வழங்குதலும்.	28
75.	அமைச்சர்களைப் பற்றிய பிற வகையங்கள்.	28
	இந்தியாவின் தலைமை வழக்கறிஞர்	
76.	இந்தியாவின் தலைமை வழக்கறிஞர்.	29
	அரசாங்க அலுவல் நடத்து முறை	
77.	இந்திய அரசாங்கத்தின் அலுவல் நடத்து முறை.	29
78.	குடியரசுத்தலைவருக்குத் தகவல் தருவது முதலியவை பொறுத்து தலைமை அமைச்சருக்குள்ள கடமைகள்.	29

உறுப்பு பக்கம்

அத்தியாயம் II—நாடாளுமன்றம்

பொதுவியல்

79. நாடாளுமன்றத்தின் அமைப்பு. 30

80. மாநிலங்களவையின் கட்டமைப்பு . 30

இலக்கியம், அறிவியல், கலை மற்றும் சமுதாயப்பணி

81. மக்களவையின் கட்டமைப்பு. 30

82. ஒவ்வொரு முறையும் மக்கள் கணக்கெடுப்பிற்குப் பின்பு மறுநேரமைவு செய்தல். 31

83. நாடாளுமன்ற அவைகளின் காலவரை. 32

84. நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கான தகுதிப்பாடு. 32

85. நாடாளுமன்றக் கூட்டத்தொடர்கள், அக்கூட்டத்தொடர்களை இறுதிசெய்தல் மற்றும் கலைத்தல். 33

86. நாடாளுமன்ற அவைகளில் உரையாற்றவும் அவற்றிற்குச் செய்தியுரை அனுப்பவும் குடியரசுத்தலைவருக்குள்ள உரிமை. 33

87. குடியரசுத்தலைவரின் சிறப்புரை. 33

88. நாடாளுமன்ற அவைகள் தொடர்பாக அமைச்சர்களுக்கும் தலைமை வழக்கறிஞருக்கும் உள்ள உரிமைகள். 33

நாடாளுமன்றப் பதவியாளர்கள்

89. மாநிலங்களவைத் தலைவரும், துணைத் தலைவரும். 33

90. மாநிலங்களவைத் துணைத் தலைவர் பதவியை விட்டகலுதலும் பதவி விலகுதலும் பதவியிலிருந்து அகற்றப்படுதலும். 34

91. மாநிலங்களவைத் தலைவரின் பதவிக்குற்ற கடமைகளைப் புரிந்துவரவோ தலைவராகச் செயலுறவோ துணைத் தலைவருக்கு அல்லது பிற உறுப்பினருக்கு உள்ள அதிகாரம். 34

92. மாநிலங்களவைத் தலைவரை அல்லது துணைத் தலைவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின் மீது ஓர்வு நிகழும்போது அவர் தலைமை வகித்தல் ஆகாது. 34

93. மக்களவைத் தலைவரும் துணைத் தலைவரும். 35

94. மக்களவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் பதவியை விட்டகலுதலும் பதவி விலகுதலும் பதவியிலிருந்து அகற்றப்படுதலும். 35

95. மக்களவைத் தலைவரின் பதவிக்குற்ற கடமைகளைப் புரிந்துவரவோ தலைவராகச் செயலுறவோ துணைத் தலைவருக்கு அல்லது பிற உறுப்பினருக்கு உள்ள அதிகாரம். 35

96. மக்களவைத் தலைவரை அல்லது துணைத் தலைவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின் மீது ஓர்வு நிகழும்போது, அவர் தலைமை வகித்தல் ஆகாது. 35

97. மாநிலங்களவைத் தலைவர், துணைத்தலைவர், மக்களவைத் தலைவர், துணைத்தலைவர் ஆகியோரின் வரையூதியங்களும் படித்தொகைகளும். 36

98. நாடாளுமன்றத்தின் செயலகம். 36

அலுவல் நடத்துமுறை

99. உறுப்பினர்களுக்குற்ற ஆணை மொழி அல்லது உறுதிமொழி. 36

100. நாடாளுமன்ற அவைகளில் வாக்களித்தல், காலியிடங்கள் இருந்தபோதிலும் செயலுறுவதற்கு அவைகளுக்குள்ள அதிகாரம் மற்றும் குறைவெண். 36

பக்கம்

உறுப்பு

உறுப்பினர்களின் தகுதிக்கேடுகள்

101. பதவியிடங்களை விட்டகலுதல். 37

102. உறுப்பினர் பதவித் தகுதிக்கேடுகள். 38

103. உறுப்பினர்களின் தகுதிக்கேடுகள் பற்றிய பிரச்சினைகளின் மீது முடிபு. 38

104. 99 ஆம் உறுப்பின்படி ஆணைமொழி அல்லது உறுதிமொழி ஏற்பதற்கு முன்போ தகுதியற்றவராக அல்லது தகுதிக்கேடுற்றவராக இருக்கும்போதோ, அவையில் அமர்ந்தாலும் வாக்களித்தாலும் அதற்குற்ற தண்டம். 39

நாடாளுமன்றத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் உள்ள அதிகாரங்கள், மதிப்புரிமைகள் மற்றும் காப்புரிமைகள்

105. நாடாளுமன்ற அவைகளுக்கும் அவற்றின் உறுப்பினர்களுக்கும் குழுக்களுக்கும் உள்ள அதிகாரங்கள், மதிப்புரிமைகள் முதலியன. 39

106. உறுப்பினர்களின் வரையூதியங்களும் படித்தொகைகளும். 39

சட்டமியற்றுவதற்கான நெறிமுறை

107. சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்தலும் நிறைவேற்றுதலும் பற்றிய வகையங்கள். 40

108. குறித்தசில நேர்வுகளில் ஈரவைகளின் கூட்டமர்வு. 40

109. பணச் சட்டமுன் வடிவுகள் பொறுத்த தனியுறு நெறிமுறை. 41

110. "பணச் சட்டமுன்வடிவுகள்" என்பதன் பொருள்வரையறை. 42

111. சட்டமுன்வடிவுகளுக்கு ஏற்பிசைவு. 42

நிதி பற்றிய பொருட்பாடுகளுக்குற்ற நெறிமுறை

112. ஆண்டு நிதிநிலை அறிக்கை. 43

113. மதிப்பீடுகள் பற்றிய நாடாளுமன்ற நெறிமுறை. 44

114. நிதி ஒதுக்களிப்புச் சட்ட முன்வடிவுகள். 44

115. துணை, கூடுதல் அல்லது மிகை மானியங்கள். 45

116. முன்னளிப்பு மானியம், முன்பற்றுத்தொகை மானியம், குறித்த தனிமானியம் இவற்றின் மீதான வாக்களிப்பு. 45

117. நிதிச் சட்டமுன்வடிவுகள் பற்றிய தனியுறு வகையங்கள். 46

பொதுவியலான நெறிமுறை

118. நெறிமுறை விதிகள். 46

119. நாடாளுமன்றத்தில் நிதிஅலுவல்கள் பற்றிய நெறிமுறையைச் சட்டத்தினால் ஒழுங்குறுத்துதல். 47

120. நாடாளுமன்றத்தில் பயன்படுத்தப்படவேண்டிய மொழி. 47

121. நாடாளுமன்றத்தில் விவாதத்தின்மீது வரையறை. 47

122. நாடாளுமன்ற நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றங்கள் விசாரித்தல் ஆகாது. 47

அத்தியாயம் III

குடியரசுத்தலைவருக்குள்ள சட்டமியற்றும் அதிகாரங்கள்

123. நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடர் இறுதி செய்யப்பட்டுள்ள காலத்தின்போது அவசரச் சட்டங்களைச் சாற்றம் செய்வதற்குக் குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரம். 48

உறுப்பு பக்கம்

அத்தியாயம் IV

ஒன்றியத்து நீதித் துறை

124. உச்ச நீதிமன்றத்தை நிறுவுதலும் அதன் அமைப்பும். 48

125. நீதிபதிகளின் வரையூதியங்கள் முதலியன. 50

126. செயலமர் தலைமை நீதிபதியை அமர்த்துதல். 50

127. குறித்தபணி நீதிபதிகளை அமர்த்துதல். 50

128. ஓய்வுபெற்ற நீதிபதிகள் உச்ச நீதிமன்றங்களின் அமர்வுகளில் பணியாற்றுதல். 50

129. உச்ச நீதிமன்றம் ஒரு நிலையாவண நீதிமன்றமாக இருக்கும். 51

130. உச்ச நீதிமன்றத்தின் அமர்கையிடம். 51

131. உச்ச நீதிமன்றத்தின் முதலேற்பு அதிகாரவரம்பு. 51

131அ. [நீக்கறவு செய்யப்பட்டது]. 51

132. குறித்தசில வழக்குகளில் உயர் நீதிமன்றங்களிலிருந்து எழும் மேன்முறையீடு களில் உச்ச நீதிமன்றத்திற்குள்ள மேன்முறையீட்டு அதிகாரவரம்பு. 51

133. உரிமையியல் பொருட்பாடுகள் குறித்து உயர் நீதிமன்றங்களிலிருந்து எழும் மேன்முறையீடுகளில் உச்ச நீதிமன்றத்திற்குள்ள மேன்முறையீட்டு அதிகாரவரம்பு. 52

134. குற்றவியல் பொருட்பாடுகள் குறித்து உச்ச நீதிமன்றத்திற்குள்ள மேன்முறையீட்டு அதிகாரவரம்பு. 52

134அ. உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்துகொள்வதற்கான உறுதியுரை. 53

135. நிலவுறும் சட்டத்தின்படி கூட்டாட்சிய நீதிமன்றத்திற்குள்ள அதிகாரவரம்பும் அதிகாரங்களும், உச்ச நீதிமன்றத்தாலும் செலுத்தத்தகுவன ஆகும். 53

136. உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்து கொள்வதற்கு அதன் தனியுறு அனுமதி. 53

137. உச்ச நீதிமன்றம், தன் தீர்ப்புரைகளை அல்லது ஆணைகளை மறுஆய்வு செய்தல். 53

138. உச்ச நீதிமன்ற அதிகாரவரம்பை விரிவாக்குதல். 53

139. குறித்தசில நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரங்களை உச்ச நீதிமன்றத்திற்கு வழங்குதல். 54

139அ. குறித்தசில வழக்குகளை மாற்றுகை செய்தல். 54

140. உச்ச நீதிமன்றத்தின் சார்பியல்பான அதிகாரங்கள். 54

141. உச்ச நீதிமன்றத்தால் விளம்பப்படும் சட்டநெறி, நீதிமன்றங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தும். 54

142. உச்ச நீதிமன்றத் தீர்ப்பாணைகள், ஆணைகள் இவற்றைச் செயலுறுத்துதலும் வெளிக்கொணர்தல் முதலியவை குறித்த ஆணைகளும். 55

143. உச்ச நீதிமன்றத்துடன் கலந்தாய்வு செய்வதற்குக் குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரம். 55

144. ஆட்சி முறை மற்றும் நீதிமுறை அதிகாரஅமைப்புகள் உச்ச நீதிமன்றத்திற்கு உதவும் வகையில் செயலுறும். 55

144அ. [நீக்கறவு செய்யப்பட்டது]. 55

145. நீதிமன்ற விதிகள், முதலியன. 55

உறுப்பு		பக்கம்
146.	உச்ச நீதிமன்றத்தின் அலுவலர்களும் பணியாளர்களும் செலவுகளும்.	57
147.	பொருள்கோள்.	57
	அத்தியாயம் V	
	இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையர்	
148.	இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர்.	57
149.	கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரின் கடமைகளும் அதிகாரங்களும்.	58
150.	ஒன்றியம், மாநிலங்கள் ஆகியவற்றின் கணக்குகளின் அமைவுமுறை.	58
151.	தணிக்கை அறிக்கைகள்.	58
	பகுதி VI	
	மாநிலங்கள்	
	அத்தியாயம் I—பொதுவியல்	
152.	பொருள்வரையறை.	59
	அத்தியாயம் II—ஆட்சித்துறை	
	ஆளுநர்	
153.	மாநிலங்களின் ஆளுநர்கள்.	59
154.	மாநிலத்தின் ஆட்சி அதிகாரம்.	59
155.	ஆளுநரை அமர்த்துதல் .	59
156.	ஆளுநரின் பதவிக்காலம்.	59
157.	ஆளுநராக அமர்த்தப்பெறுவதற்கான தகுதிப்பாடுகள்.	60
158.	ஆளுநரின் பதவிக்கான வரைமுறைகள்.	60
159.	ஆளுநருக்குற்ற ஆணைமொழி அல்லது உறுதிமொழி.	60
160.	குறித்தசில எதிருறு நிகழ்வுகளில் ஆளுநரின் பதவிப்பணிகளை ஆற்றிவருதல்.	60
161.	குறித்தசில நேர்வுகளில் குற்றமன்னிப்புகள், முதலியன அளிப்பதற்கும் மற்றும் தீர்ப்புத்தண்டனைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு, இறுத்தல்செய்வதற்கு அல்லது மாற்றிக்குறைப்பதற்கும் ஆளுநருக்குள்ள அதிகாரம்.	61
162.	மாநில ஆட்சி அதிகாரத்தின் அளாவுகை.	61
	அமைச்சரவை	
163.	ஆளுநருக்கு அமைச்சரவை உறுதுணையாக இருத்தலும் தேர்வுரை வழங்குதலும்.	61
164.	அமைச்சர்களைப் பற்றிய பிற வகையங்கள்.	61
	மாநிலத்தின் தலைமை வழக்குரைஞர்	
165.	மாநிலத்தின் தலைமை வழக்குரைஞர்.	63
	அரசாங்க அலுவல் நடத்துமுறை	
166.	மாநில அரசாங்கத்தின் அலுவல் நடத்துமுறை.	63
167.	ஆளுநருக்குத் தகவல் தருவது முதலியவை பொறுத்து முதலமைச்சருக்குள்ள கடமைகள்.	63

உறுப்பு பக்கம்

அத்தியாயம் III—மாநிலச் சட்டமன்றம்

பொதுவியல்

168. மாநிலச் சட்டமன்றங்களின் அமைப்பு. 64

169. மாநிலங்களில் சட்டமன்ற மேலவைகளை ஒழித்தல் அல்லது உருவாக்குதல். 64

170. சட்டமன்றப் பேரவைகளின் கட்டமைப்பு. 64

171. சட்டமன்ற மேலவைகளின் கட்டமைப்பு. 65

இலக்கியம், அறிவியல், கலை, கூட்டுறவு இயக்கம் மற்றும் சமுதாயப்பணி

172. மாநிலச் சட்டமன்றங்களின் காலவரை. 66

173. மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கான தகுதிப்பாடு. 67

174. மாநிலச் சட்டமன்றக் கூட்டத்தொடர்கள், அக்கூட்டத்தொடர்களை இறுதிசெய்தல் மற்றும் கலைத்தல். 67

175. சட்டமன்ற அவையில் அல்லது அவைகளில் உரையாற்றவும் அவற்றிற்குச் செய்தியுரை அனுப்பவும் ஆளுநருக்குள்ள உரிமை. 67

176. ஆளுநரின் சிறப்புரை. 67

177. சட்டமன்ற அவைகள் தொடர்பாக, அமைச்சர்களுக்கும் தலைமை வழக்குரைஞருக்கும் உள்ள உரிமைகள். 68

மாநில சட்டமன்றப் பதவியாளர்கள்

178. சட்டமன்றப் பேரவைத்தலைவரும் துணைத்தலைவரும். 68

179. பேரவைத்தலைவர், துணைத்தலைவர் ஆகியோர் பதவியைவிட்டகலுதலும் பதவிவிலகுதலும் பதவியிலிருந்து அகற்றப்படுதலும். 68

180. பேரவைத்தலைவரின் பதவிக்குற்ற கடமைகளைப் புரிந்துவரவோ, தலைவராகச் செயலுறவோ துணைத்தலைவருக்கு அல்லது பிற உறுப்பினருக்கு உள்ள அதிகாரம். 68

181. பேரவைத்தலைவரை அல்லது துணைத்தலைவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது அவர் தலைமை வகித்தல் ஆகாது. 69

182. சட்டமன்ற மேலவைத் தலைவரும் துணைத்தலைவரும். 69

183. சட்டமன்ற மேலவைத்தலைவர், துணைத்தலைவர் ஆகியோர் பதவியை விட்டகலுதலும் பதவி விலகுதலும் பதவியிலிருந்து அகற்றப்படுதலும். 69

184. மேலவைத்தலைவரின் பதவிக்குற்ற கடமைகளைப் புரிந்துவரவோ தலைவராகச் செயலுறவோ துணைத்தலைவருக்கு அல்லது பிற உறுப்பினருக்கு உள்ள அதிகாரம். 69

185. மேலவைத்தலைவரை அல்லது துணைத்தலைவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது அவர் தலைமை வகித்தல் ஆகாது. 70

186. பேரவைத்தலைவர், துணைத்தலைவர், மேலவைத் தலைவர், துணைத்தலைவர் ஆகியோரின் வரையூதியங்களும் படித்தொகைகளும். 70

187. மாநிலச் சட்டமன்றத்தின் செயலகம். 70

அலுவல் நடத்துமுறை

188. உறுப்பினர்களுக்குற்ற ஆணைமொழி அல்லது உறுதிமொழி. 70

189. சட்டமன்ற அவைகளில் வாக்களித்தல், காலியிடங்கள் இருந்தபோதிலும் செயலுறுவதற்கு அவைளுக்குள்ள அதிகாரம் மற்றும் குறைவெண். 71

உறுப்பு		பக்கம்
	உறுப்பினர்களின் தகுதிக்கேடுகள்	
190.	பதவியிடங்களை விட்டகலுதல்.	71
191.	உறுப்பினர் பதவித் தகுதிகேடுகள்.	72
192.	உறுப்பினர்களின் தகுதிக்கேடுகள் பற்றிய பிரச்சினைகளின்மீது முடிவு.	72
193.	188ஆம் உறுப்பின்படி ஆணைமொழி அல்லது உறுதிமொழி ஏற்பதற்கு முன்போ தகுதியற்றவராக அல்லது தகுதிக்கேடுற்றவராக இருக்கும்போதோ அவையில்அமர்ந்தாலும் வாக்களித்தாலும் அதற்குற்ற தண்டம்.	73
	மாநிலச் சட்டமன்றங்களுக்கும் அவற்றின் உறுப்பினர்களுக்கும் உள்ள அதிகாரங்கள், மதிப்புரிமைகள் மற்றும் காப்புரிமைகள்	
194.	சட்டமன்ற அவைகளுக்கும் அவற்றின் உறுப்பினர்களுக்கும் குழுக்களுக்கும் உள்ள அதிகாரங்கள், மதிப்புரிமைகள் முதலியன.	73
195.	உறுப்பினர்களின் வரையூதியங்களும் படித்தொகைகளும்.	73
	சட்டமியற்றுவதற்கான நெறிமுறை	
196.	சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்தலும் நிறைவேற்றுதலும் பற்றிய வகையங்கள்.	74
197.	பணச் சட்டமுன்வடிவுகள் அல்லாத பிற சட்டமுன்வடிவுகள் குறித்துச் சட்டமன்ற மேலவையின் அதிகாரங்கள்மீது வரையறை.	74
198.	பணச் சட்டமுன்வடிவுகள் பொறுத்த தனியுறு நெறிமுறை.	75
199.	"பணச் சட்டமுன்வடிவுகள்" என்பதன் பொருள்வரையறை.	75
200.	சட்டமுன்வடிவுகளுக்கு ஏற்பிசைவு.	76
201.	ஒர்வுக்கென நிறுத்திவைக்கப்படும் சட்டமுன்வடிவுகள்.	76
	நிதிபற்றிய பொருட்பாடுகளுக்குற்ற நெறிமுறை	
202.	ஆண்டு நிதிநிலை அறிக்கை.	77
203.	மதிப்பீடுகள் பற்றிய சட்டமன்ற நெறிமுறை.	78
204.	நிதிஒதுக்களிப்புச் சட்டமுன்வடிவுகள்.	78
205.	துணை, கூடுதல் அல்லது மிகை மானியங்கள்.	78
206.	முன்னளிப்பு மானியம், முன்பற்றுத்தொகை மானியம் குறித்த தனிமானியம் இவற்றின் மீதான வாக்களிப்பு.	79
207.	நிதிச் சட்டமுன்வடிவுகள் பற்றிய தனியுறு வகையங்கள்.	79
	பொதுவியலான நெறிமுறை	
208.	நெறிமுறை விதிகள்.	80
209.	மாநிலச் சட்டமன்றத்தில் நிதி அலுவல் பற்றிய நெறிமுறையைச் சட்டத்தினால் ஒழுங்குறுத்துதல்.	80
210.	சட்டமன்றத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி.	80
211.	சட்டமன்றத்தில் விவாதத்தின்மீது வரையறை.	81
212.	சட்டமன்ற நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றங்கள் விசாரித்தல் ஆகாது.	81
	அத்தியாயம் IV-ஆளுநருக்குள்ள சட்டமியற்றும் அதிகாரம்	
213.	சட்டமன்றத்தின் கூட்டத்தொடர், இறுதிசெய்யப்பட்டுள்ள காலத்தின்போது அவசரச்சட்டங்களைச் சாற்றம்செய்வதற்கு ஆளுநருக்குள்ள அதிகாரம்.	81

உறுப்பு		பக்கம்
	அத்தியாயம் V—மாநிலங்களிலுள்ள உயர் நீதிமன்றங்கள்	
214.	மாநிலங்களுக்கான உயர் நீதிமன்றங்கள்.	82
215.	உயர் நீதிமன்றங்கள் நிலையாவண நீதிமன்றங்களாக இருக்கும்.	82
216.	உயர் நீதிமன்றங்களின் அமைப்பு.	82
217.	உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் அமர்த்துகை மற்றும் அப்பதவிக்கான வரைமுறைகள்.	82
218.	உச்ச நீதிமன்றம் தொடர்பான குறித்தசில வகையங்கள் உயர் நீதிமன்றங்களுக்குப் பொருந்துறுதல்.	84
219.	உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்குற்ற ஆணைமொழி அல்லது உறுதிமொழி.	84
220.	நிலையமர் நீதிபதியாக இருந்தவர் வழக்குரைஞராகத் தொழிலாற்றுவதன்மீது வரையறை.	84
221.	நீதிபதிகளின் வரையூதியங்கள் முதலியன.	84
222.	நீதிபதி ஒருவரை ஓர் உயர் நீதிமன்றத்திலிருந்து மற்றொன்றிற்கு மாற்றுதல்.	84
223.	செயலமர் தலைமை நீதிபதியை அமர்த்துதல்.	85
224.	கூடுதல் மற்றும் செயலமர் நீதிபதிகளை அமர்த்துதல்.	85
224அ.	உயர் நீதிமன்றங்களின் அமர்வுகளில், ஓய்வுபெற்ற நீதிபதிகளை அமர்த்துதல்.	85
225.	நிலவுறும் உயர் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு.	85
226.	குறித்தசில நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்க உயர் நீதிமன்றங்களுக்குள்ள அதிகாரம்.	86
226அ.	[நீக்கறவு செய்யப்பட்டது]	87
227.	அனைத்து நீதிமன்றங்களையும் கண்காணிப்பதற்கு உயர் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.	87
228.	குறித்தசில வழக்குகளை உயர் நீதிமன்றத்திற்கு மாற்றுதல்.	87
228அ.	[நீக்கறவு செய்யப்பட்டது].	88
229.	உயர் நீதிமன்றங்களின் அலுவலர்களும் பணியாளர்களும் செலவுகளும்.	88
230.	உயர் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்கு அளாவச் செய்தல்.	88
231.	இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்குப் பொதுவானதோர் உயர் நீதிமன்றத்தினை நிறுவுதல்.	88
232.	[விட்டுவிடப்பட்டது].	89
	அத்தியாயம் VI—கீழமை நீதிமன்றங்கள்	
233.	மாவட்ட நீதிபதிகளை அமர்த்துதல்.	89
233அ.	குறித்தசில மாவட்ட நீதிபதிகளின் அமர்த்துகை, அவர்கள் வழங்கிய தீர்ப்புரைகள் முதலியவற்றைச் செல்லத்தக்கன ஆக்குதல்.	89
234.	நீதித் துறைப் பணியத்திற்கு மாவட்ட நீதிபதிகள் அல்லாத பிறரை எடுத்தல்.	90
235.	கீழமை நீதிமன்றங்கள் மீதான கட்டாள்கை.	90
236.	பொருள்கோள்.	90
237.	இந்த அத்தியாயத்தின் வகையங்கள், குறித்தசில வகுப்பு அல்லது வகுப்புகளைச் சேர்ந்த குற்றவியல் நடுவர்களுக்குப் பொருந்துறுதல்.	90

பக்கம்

உறுப்பு

பகுதி VII

முதலாம் இணைப்புப்பட்டியலின் ஆ பகுதியிலுள்ள மாநிலங்கள்

238. [நீக்கறவு செய்யப்பட்டது]. 91

பகுதி VIII

ஒன்றியத்து ஆட்சி நிலவரைகள்

239. ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளின் நிருவாகம். 91

239அ. குறித்தசில ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்கென சட்டமன்றங்களை அல்லது அமைச்சரவையை அல்லது இரண்டையும் உருவாக்குதல். 91

239அஅ. தில்லியைப் பொறுத்து சிறப்பு ஏற்பாடுகள். 94

239அஆ. அரசமைப்பின் இயங்கும் முறை செயலற்றுப் போகும் நேர்வில் ஏற்பாடு. 94

239ஆ சட்டமன்றக் கூட்டத்தொடர் இறுதி செய்யப்பட்டுள்ள காலத்தின்போது அவசரச் சட்டங்களைச் சாற்றம் செய்வதற்கு ஆளுகையருக்குள்ள அதிகாரம். 95

240. குறித்தசில ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்காக ஒழுங்குறுத்து நெறிமுறைகளை வகுப்பதற்குக் குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரம். 95

241. ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்கான உயர் நீதிமன்றங்கள். 96

242. [நீக்கறவு செய்யப்பட்டது].

பகுதி IX

ஊராட்சிகள்

243. பொருள் வரையறைகள். 97

243அ. கிராமசபை. 97

243ஆ. ஊராட்சிகளை அமைத்தல். 97

243 இ. ஊராட்சிகளின் கட்டமைப்பு. 98

243 ஈ. பதவியிடங்களை ஒதுக்கீடு செய்தல். 99

243 உ. ஊராட்சிகள் முதலியவற்றின் காலஅளவு. 100

244 ஊ. உறுப்பினர் பதவிக்கான தகுதிக்கேடுகள். 100

243எ. ஊராட்சிகளின் அதிகாரங்கள், அதிகார அடைவுகள், பொறுப்புகள் ஆகியன. 101

243ஏ. வரிகளை விதிப்பதற்கு ஊராட்சிகளுக்குள்ள அதிகாரம் மற்றும் அதன் நிதியங்கள். 101

243 ஐ. நிதிநிலையை மறுஆய்வு செய்ய நிதி ஆணையத்தை அமைத்தல். 102

243ஒ. ஊராட்சிகளின் கணக்குகளைத் தணிக்கை செய்தல். 102

243ஓ. ஊராட்சிகளுக்குத் தேர்தல்கள். 102

243ஔ. ஒன்றியத்து ஆட்சி நிலவரைகளுக்குப் பொருந்துதல். 102

243க. இந்தப் பகுதி குறித்தசில வரையிடங்களுக்குப் பொருந்துறாது. 103

243ங. நிலவுறும் சட்டங்களும் ஊராட்சிகளும் தொடர்ந்திருந்து வருதல். 103

243ச. தேர்தல் தொடர்பான பொருட்பாடுகளில் நீதிமன்றம் குறுக்கிடுவதற்குத் தடை.

பக்கம்

உறுப்பு

பகுதி–IX அ

நகராட்சிகள்

243ஞ. பொருள்வரையறைகள். 104

243ட. நகராட்சிகளை அமைத்தல். 104

243ண. நகராட்சிகளின் கட்டமைப்பு. 105

243த. நகராட்சித் தொகுதிக் குழுக்கள் முதலியவற்றை அமைத்தல் மற்றும் அவற்றின் கட்டமைப்பு. 105

243ந. பதவியிடங்களை ஒதுக்கீடு செய்தல். 106

243ப. நகராட்சிகளின் காலஅளவு முதலியன. 106

243ம உறுப்பினர் பதவிக்கான தகுதிக்கேடுகள். 107

243ய. நகராட்சிகளின் அதிகாரங்கள், அதிகாரஅடைவு மற்றும் பொறுப்புகள் முதலியன. 108

243ர வரிகள் விதிப்பதற்கு நகராட்சிகளுக்குள்ள அதிகாரம் மற்றும் அதன் நிதியங்கள். 108

243ல நிதி ஆணையம். 109

243வ நகராட்சிகளின் கணக்குகளைத் தணிக்கை செய்தல். 109

243வஅ. நகராட்சிகளுக்குத் தேர்தல்கள். 109

243வஆ. ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்குப் பொருந்துதல். 109

243வஇ. இந்தப் பகுதி குறித்த சில வரையிடங்களுக்குப் பொருந்தாது. 110

243வஈ. மாவட்ட திட்டக் குழு. 110

243வஉ. பெருநகர் திட்டத்திற்கான குழு. 111

243வஊ. நிலவுறும் சட்டங்களும் நகராட்சிகளும் தொடர்ந்திருத்தல். 112

243வஎ. தேர்தல் பற்றிய பொருட்பாடுகளில் நீதிமன்றங்கள் தலையிடுவதற்குத் தடை. 112

பகுதி X

பட்டியல் வரையிடங்களும் பழங்குடியினர் வரையிடங்களும்

244 பட்டியல் வரையிடங்கள், பழங்குடியினர் வரையிடங்கள் ஆகியவற்றின் நிருவாகம். 112

244அ. அசாமிலுள்ள குறித்தசில பழங்குடியினர் வரையிடங்களை உள்ளடக்கிய தன்னாட்சிக் குறுநிலத்தை அமைத்தலும் அவ்விடங்களுக்கென உள்ளாட்சி சட்டமன்றத்தை அல்லது அமைச்சரவையை அல்லது இரண்டையும் உருவாக்குதலும். 112

பகுதி XI

ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் உள்ள தொடர்புநிலைகள்

அத்தியாயம் I–சட்டமியற்றுத் தொடர்புநிலைகள்

சட்டமியற்று அதிகாரப் பகிர்வு

245. நாடாளுமன்றத்தாலும் மாநிலங்களின் சட்டமன்றங்களாலும் இயற்றப்படும் சட்டங்களின் அளாவுகை. 113

246. நாடாளுமன்றத்தாலும் மாநிலங்களின் சட்டமன்றங்களாலும் இயற்றப்படும் சட்டங்களின் உறுபொருள். 114

247. குறித்தசில கூடுதல் நீதிமன்றங்களை நிறுவ வகைசெய்வதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம். 114

248. சட்டமியற்றுவதற்கான எஞ்சு அதிகாரங்கள். 114

உறுப்பு		பக்கம்
249.	நாட்டின் நலன் கருதி மாநிலத்துப் பட்டியலிலுள்ள பொருட்பாடு எதனைப் பொறுத்தும் சட்டமியற்ற நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம்.	114
250.	நெருக்கடிநிலைச் சாற்றாணை செயற்பாட்டில் இருக்குங்கால், மாநிலத்துப் பட்டியலிலுள்ள எந்தப் பொருட்பாட்டினைப் பொறுத்தும் சட்டமியற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம்.	115
251.	நாடாளுமன்றத்தால் 249, 250 ஆகிய உறுப்புகளின்படி இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் மாநிலச் சட்டமன்றங்களால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் இடையே முரண்பாடு.	115
252.	இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்காக அவற்றின் இசைவுடன் சட்டமியற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரமும், அத்தகைய சட்டத்தைப் பிற மாநிலம் எதுவும் ஏற்றுமேற்கொள்ளுதலும்.	116
253.	பன்னாட்டு உடன்பாடுகளைச் செல்திறப்படுத்துவதற்காகச் சட்டமியற்றுதல்.	116
254.	நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் மாநிலங்களின் சட்டமன்றங்களால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் இடையே முரண்பாடு.	116
255.	பரிந்துரைகள், முன்ஒப்பளிப்புகள் ஆகியவை பற்றிய வேண்டுறுத்தங்களை நெறிமுறை சார்ந்த பொருட்பாடுகளாக மட்டுமே கொள்ளுதல் வேண்டும்.	117
	அத்தியாயம் II	
	நிருவாகத் தொடர்பு நிலைகள்	
	பொதுவியல்	
256.	மாநிலங்களின் மற்றும் ஒன்றியத்தின் கடமைப்பாடு.	117
257.	குறித்தசில நேர்வுகளில் மாநிலங்கள்மீது ஒன்றியத்திற்குள்ள கட்டாள்கை.	117
257அ.	[நீக்கறவு செய்யப்பட்டது]	118
258.	குறித்தசில நேர்வுகளில் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் முதலியவற்றை வழங்குவதற்கு ஒன்றியத்திற்குள்ள அதிகாரம்.	118
258அ.	ஒன்றியத்திடம் செயற்பணிகளை ஒப்படைப்பதற்கு மாநிலங்களுக்குள்ள அதிகாரம்.	118
259.	[நீக்கறவு செய்யப்பட்டது]	118
260.	இந்தியாவிற்கு வெளியிலுள்ள நிலவரைகள் தொடர்பாக ஒன்றியத்திற்குள்ள அதிகாரம்.	118
261.	அரசின் செயற்பாடுகள், பதிவணங்கள் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகள்.	119
	நீர் தொடர்பான பூசல்கள்	
262.	மாநிலங்களிடையேயான ஆறுகளின் அல்லது ஆற்றுப்பள்ளத்தாக்குகளின் நீர் தொடர்பான பூசல்களுக்கு நீதிமுறைத் தீர்வு.	119
	மாநிலங்கள் இயைந்து இயங்குதல்	
263.	மாநிலங்களிடையமை மன்றம் தொடர்பான ஏற்பாடுகள்.	119
	பகுதி XII	
	நிதி, சொத்து, ஒப்பந்தங்கள் மற்றும் உரிமை வழக்குகள்	
	அத்தியாயம் I–நிதி	
	பொதுவியல்	
264.	பொருள்கோள்.	120
265.	சட்டத்தினால் பெறும் அதிகாரத்தின்படி அல்லாமல் வரிகளை விதித்தல் ஆகாது.	120
266.	இந்தியாவின் மற்றும் மாநிலங்களின் திரள் நிதியங்களும் அரசுப் பொதுக் கணக்குகளும்.	120
267.	எதிரதாக்காப்பு நிதியம் .	120

உறுப்பு		பக்கம்
	ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே வருவாய்களைப் பகிர்ந்தளித்தல்	
268.	ஒன்றியத்தால் விதிக்கப்பட்டு, ஆனால் மாநிலங்கள் ஈட்டிப் பயன்படுத்திக் கொள்ளும் தீர்வைகள்.	121
268அ.	ஒன்றியத்தால் விதிக்கப்பட்டு ஆனால் ஒன்றியமும் மாநிலங்களும் ஈட்டிப் பயன்படுத்திக்கொள்ளும் சேவை வரி.	121
269.	ஒன்றியத்தால் விதித்து ஈட்டப்பட்டு, ஆனால் மாநிலங்களுக்குக் குறித்தொதுக்கப்படும் வரிகள்.	121
270.	ஒன்றியத்தால் விதிக்கப்பட்டு, ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்படும் வரிகள்.	122
271.	ஒன்றியத்தின் நோக்கங்களுக்காகக் குறித்தசில தீர்வைகளும், வரிகள் ஆகியவற்றின் மீதான மேல்வரி.	123
272.	[நீக்கறவு செய்யப்பட்டது].	123
273.	சணல், சணற்பொருள்கள் ஆகியவற்றின் மீதான ஏற்றுமதித் தீர்வைக்குப் பதிலாக மானியங்கள்.	123
274.	மாநிலங்கள் அக்கறை கொண்டுள்ள வரி விதிப்பைப் பாதிக்கும் சட்டமுன்வடிவுகளுக்குக் குடியரசுத்தலைவரின் முன் பரிந்துரை வேண்டுறுவதாகும்.	123
275.	குறித்தசில மாநிலங்களுக்கு ஒன்றியத்திலிருந்து மானியங்கள்.	124
276.	விழைதொழில்கள், வணிகங்கள், கொள்பணிகள், வேலையமர்த்தங்கள் ஆகியவற்றின் மீதான வரிகள்.	125
277.	காப்புரைகள்.	125
278.	[நீக்கறவு செய்யப்பட்டது].	125
279.	"நிகரத் தொகை" முதலியவற்றைக் கணக்கிடுதல்.	125
280.	நிதி ஆணையம்.	126
281.	நிதி ஆணையத்தின் பரிந்துரைகள்.	126
	நிதிபற்றிய பல்திற வகையங்கள்	
282.	ஒன்றியம் அல்லது ஒரு மாநிலம் அதன் வருவாய்களிலிருந்து செய்வதாகும் செலவுகள்.	127
283.	திரள் நிதியங்கள், எதிரதாக்காப்பு நிதியங்கள், அரசுப் பொதுக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் பணத்தொகைகள் ஆகியவற்றைக் கைப்பொறுப்பில் வைத்திருத்தல் முதலியன.	127
284.	அரசுப் பணியாளர்களாலும் நீதிமன்றங்களாலும் பெற்றுக்கொள்ளப்படும் வழக்காளிகளின் வைப்பீடுகள், பிற பணத்தொகைகள் ஆகியவற்றைக் கைப்பொறுப்பில் வைத்திருத்தல் .	127
285.	மாநில வரி விதிப்பிலிருந்து ஒன்றியத்து சொத்திற்கு விலக்களிப்பு.	128
286.	சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினைமீது வரிவிதிப்பது குறித்த வரையறைகள்.	128
287.	மின்விசை மீதான வரிகளிலிருந்து விலக்களிப்பு.	128
288.	குறித்தசில நேர்வுகளில் நீர் அல்லது மின்விசைக்கு மாநிலங்களின் வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பு.	129
289.	மாநிலம் ஒன்றன் சொத்திற்கும் வருமானத்திற்கும், ஒன்றியத்து வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பு.	129

உறுப்பு		பக்கம்
290.	குறித்த சில செலவுகள், ஒய்வூதியங்கள் ஆகியவை பொறுத்த நேரமைவு.	130
290அ.	குறித்தசில தேவசுவம் நிதியங்களுக்கு ஆண்டுதோறும் பணம் செலுத்துதல்.	130
291.	[நீக்கறவு செய்யப்பட்டது].	130
	அத்தியாயம் II	
	கடன்பெறுதல்	
292.	இந்திய அரசாங்கம் கடன்பெறுதல்.	130
293.	மாநிலங்கள் கடன்பெறுதல்.	131
	அத்தியாயம் III	
	சொத்து, ஒப்பந்தங்கள், உரிமைகள், பொறுப்புடைவுகள், கடமைப்பாடுகள் மற்றும் உரிமை வழக்குகள்	
294.	குறித்தசில நேர்வுகளில் சொத்து, சொத்திருப்புகள், உரிமைகள், பொறுப்படைவுகள், கடமைப்பாடுகள் ஆகியவற்றிற்கு வாரிசுரிமை.	131
295.	பிற நேர்வுகளில் சொத்து, சொத்திருப்புகள், உரிமைகள், பொறுப்படைவுகள், கடமைப்பாடுகள் ஆகியவற்றிற்கு வாரிசுரிமை.	132
296	வாரிசு இல்லாமை அல்லது உரிமைகோருநர் இல்லாமை அல்லது உரிமைக்குற்றவர் இல்லாமை காரணமாக சேர்ந்தடையும் சொத்து.	132
297.	ஆட்சிநிலவரை சார்ந்த கடலினுள் அல்லது கண்டத் திட்டினுள் இருக்கும் பெறுமதியான பொருள்களும் தனிப்பட்டதான பொருளியல் மண்டலங்களின் வளஆதாரங்களும் ஒன்றியத்திடம் உற்றமைதல்.	133
298.	வணிகம் முதலியவற்றை நடத்தி வருவதற்கான அதிகாரம்.	133
299.	ஒப்பந்தங்கள்.	134
300.	உரிமை வழக்குகளும் நடவடிக்கைகளும்.	134
	அத்தியாயம் IV	
	சொத்து பொறுத்த உரிமை	
300அ.	சட்டம் அளிக்கும் அதிகாரத்தின்படி அல்லாமல் எவரிடமிருந்தும் சொத்து பறிக்கப்படுதல் ஆகாது.	134
	பகுதி XIII	
	இந்திய ஆட்சிநிலவரைக்குள், வணிகம், வாணிபம் மற்றும் தொடர்புறவுகள்	
301.	வணிகம், வாணிபம், தொடர்புறவுகள் ஆகியவற்றிற்குத் தடையின்மை.	135
302.	வணிகம், வாணிபம், தொடர்புறவுகள் ஆகியவற்றின்மீது கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு நாடாளுமன்றத்துக்குள்ள அதிகாரம்.	135
303.	வணிகம், வாணிபம் தொடர்பாக ஒன்றியம், மாநிலங்கள் ஆகியவற்றிற்குள்ள சட்டமியற்றும் அதிகாரங்கள்மீது கட்டுப்பாடுகள்.	135
304.	மாநிலங்களிடையே வணிகம், வாணிபம், தொடர்புறவுகள் ஆகியவற்றின்மீது கட்டுப்பாடுகள்.	136
305.	நிலவுறும் சட்டங்களுக்கும் மாநிலத்தின் ஒரு தனியுரிமைகளுக்கு வகைசெய்யும் சட்டங்களுக்குமான காப்புரை.	136
306.	[நீக்கறவு செய்யப்பட்டது].	136
307.	301 முதல் 304 வரையிலுள்ள உறுப்புகளின் நோக்கங்களை நிறைவேற்று வதற்காக அதிகாரஅமைப்பை ஏற்படுத்துதல்.	136

உறுப்பு

பக்கம்

பகுதி XIV

ஒன்றியம், மாநிலங்கள் ஆகியவற்றின் கீழுள்ள பணியங்கள்

அத்தியாம் I

பணியங்கள்

308. பொருள்கோள். 137

309. ஒன்றியத்திற்கு அல்லது ஒரு மாநிலத்திற்குப் பணிபுரிவதற்காக ஆளெடுத்தலும் பணிவரைக்கட்டுகளும். 137

310. ஒன்றியத்திற்கு அல்லது ஒரு மாநிலத்திற்குப் பணிபுரிபவர்களின் பதவியுரிமைக் காலம். 137

311. ஒன்றியத்தின் அல்லது ஒரு மாநிலத்தின்கீழ் குடியியல் சார்ந்த வேலைக்கு அமர்த்தப்பெற்றுள்ளவர்களை பணிநீக்கமோ பணியறவோ பணியிறக்கமோ செய்தல். 138

312. அனைத்திந்தியப் பணியங்கள். 138

312அ. குறித்தசில பணியங்களிலுள்ள அலுவலர்களின் பணிவரைக்கட்டுகளை மாற்றுவதற்கு அல்லது முறித்தறவு செய்வதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம். 139

313. மாறும் இடைக்காலத்திற்கான வகையங்கள். 140

314. [நீக்கறவு செய்யப்பட்டது]. 140

அத்தியாயம் II

அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள்

315. ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள். 140

316. உறுப்பினர்களை அமர்த்துதலும் அவர்களின் பதவிக்காலமும். 141

317. ஓர் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர் ஒருவரைப் பணியறவு செய்தலும் தற்காலிகமாக நீக்குதலும். 142

318. ஆணையத்தின் உறுப்பினர்கள், பணியாளர் தொகுதியினர் ஆகியோருடைய பணிவரைக்கட்டுகளைக் குறித்து ஒழுங்குறுத்தும்விதிகளை வகுப்பதற்குள்ள அதிகாரம். 142

319. ஆணையத்தின் உறுப்பினர்கள் அத்தகைய உறுப்பினர்களாக இருப்பது அற்றுப்போன பின்பு பிற பதவிகள் வகிப்பது குறித்த தடை. 143

320. அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் செயற்பணிகள். 143

321. அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் செயற்பணிகளை விரிவாக்குவதற்கான அதிகாரம். 145

322. அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் செலவுகள். 145

323. அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் அறிக்கைகள். 145

பகுதி XIVஅ

தீர்ப்பாயங்கள்

323அ. நிருவாகப்பணித் தீர்ப்பாயங்கள். 146

323ஆ. பிற பொருட்பாடுகளுக்கான தீர்ப்பாயங்கள். 146

உறுப்பு பக்கம்

பகுதி XV

தேர்தல்கள்

324. தேர்தல்களைக் கண்காணிப்பதும் நெறிப்படுத்துவதும் கட்டாள்கைபுரிவதும் தேர்தல் ஆணையத்திடம் உற்றமைந்திருக்கும். 149

325. சமயம், இனம், சாதி அல்லது பாலினம் காரணமாக, வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கோ தனியுறு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவேண்டுமென கோருவதற்கோ எவரும் தகுமையற்றவர் ஆகார். 150

326. மக்களவைக்கும், மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளுக்குமான தேர்தல்கள் வயதுவந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் இருக்கும். 150

327. சட்டமன்றங்களுக்கான தேர்தல்கள் பொறுத்து வகைசெய்வதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம். 150

328. ஒரு மாநிலத்தின் சட்டமன்றத்திற்கான தேர்தல்கள் பொறுத்து வகைசெய்வதற்கு அச்சட்டமன்றத்திற்குள்ள அதிகாரம். 150

329. தேர்தல் பற்றிய பொருட்பாடுகளில் நீதிமன்றங்கள் தலையிடுவதற்குத் தடை. 151

329அ. [நீக்கறவு செய்யப்பட்டது]. 151

பகுதி XVI

குறித்தசில வகுப்பினர் தொடர்பான தனியுறு வகையங்கள்

330. பட்டியலில் கண்ட சாதியினருக்கும் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கும் மக்களவையில் பதவியிடங்களை ஒதுக்கீடுசெய்தல். 151

331. மக்களவையில் ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தினருக்குச் சார்பாற்றம். 152

332. பட்டியலில் கண்ட சாதியினருக்கும், பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கும் மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளில் பதவியிடங்களை ஒதுக்கீடுசெய்தல். 152

333. மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளின் ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தினருக்குச் சார்பாற்றம். 153

334. பதவியிடங்களை ஒதுக்கீடுசெய்தலும் தனியுறு சார்பாற்றம் அளித்தலும் அறுபது ஆண்டுகளுக்குப் பின்பு அற்றுப்போதல். 154

335. பணியங்களுக்கும் பணியடைகளுக்கும், பட்டியலில் கண்ட சாதியினர், பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஆகியோரின் கோருரிமைகள். 154

336. குறித்தசில பணியங்களில் ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தினருக்கான தனியுறு வகையம். 154

337. ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தின் நலனுக்காகக் கல்வி மானியங்கள் பொறுத்த தனியுறு வகையம். 155

338. பட்டியலில் கண்ட சாதியினருக்கான தேசிய ஆணையம். 155

338அ. பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கான தேசிய ஆணையம். 157

339. பட்டியல் வரையிடங்களின் நிருவாகம், பட்டியலில் கண்ட பழங்குடியினரின் நல்வாழ்வு ஆகியவற்றின் மீது ஒன்றியத்திற்குள்ள கட்டாள்கை. 158

340. பிற்பட்ட வகுப்பினரின் நிலைமைகளை ஆய்ந்து காண்பதற்கு ஆணையம் ஒன்றை அமர்த்துதல். 159

341. பட்டியலில் கண்ட சாதிகள். 159

342. பட்டியலில் கண்ட பழங்குடிகள். 159

உறுப்பு பக்கம்

பகுதி XVII

அரசு அலுவல் மொழி

அத்தியாயம் I

ஒன்றியத்தின் மொழி

343. ஒன்றியத்து அரசு அலுவல் மொழி. 160

344. அரசு அலுவல் மொழிக்கான ஆணையமும், நாடாளுமன்றக் குழுவும். 160

அத்தியாயம் II

மண்டல மொழிகள்

345. மாநிலத்து அரசு அலுவல் மொழி அல்லது மொழிகள். 161

346. ஒரு மாநிலத்திற்கும் மற்றொன்றிற்கும் இடையே அல்லது ஒரு மாநிலத்திற்கும் ஒன்றியத்திற்கும் இடையே செய்தித் தொடர்புக்கான அரசு அலுவல் மொழி. 161

347. ஒரு மாநில மக்கள் தொகையில் ஒரு பகுதியினர் பேசும் மொழி பொறுத்த தனியுறு வகையம். 161

அத்தியாயம் III

உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் முதலியவற்றின் மொழி

348. உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் ஆகியவற்றிலும் சட்டங்கள், சட்டமுன்வடிவுகள் முதலியவற்றிற்கும் பயன்படுத்தவேண்டிய மொழி. 162

349. மொழி தொடர்பாகக் குறித்தசில சட்டங்களை இயற்றுவதற்கான தனியுறு நெறிமுறை. 163

அத்தியாயம் IV

தனியுறு நெறியுரைகள்

350. குறைகளைத் தீர்ப்பதற்கான உரையீடுகளில் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி. 163

350அ. தொடக்கநிலையில் தாய்மொழியில் கல்வி கற்பிப்பதற்கான வசதிகள். 163

350ஆ. மொழிச் சிறுபான்மையினருக்கான தனி அலுவலர். 163

351. இந்தி மொழி வளர்ச்சிக்கான நெறியுரை. 163

பகுதி XVIII

நெருக்கடிநிலை பற்றிய வகையங்கள்

352. நெருக்கடிநிலைச் சாற்றாணை. 164

353. நெருக்கடிநிலைச் சாற்றாணையின் விளைவு. 165

354. நெருக்கடிநிலைச் சாற்றாணை ஒன்று செயற்பாட்டில் இருக்குங்கால், வருவாய்களைப் பகிர்ந்தளித்தல் தொடர்பான வகையங்கள் பொருந்துறுதல். 166

355. அயல்நாட்டு ஆக்கிரமிப்பிலிருந்தும் உள்நாட்டுக் குழப்பத்திலிருந்தும் மாநிலங்களைப் பாதுகாப்பதற்கு ஒன்றியத்திற்குள்ள கடமை. 166

356. மாநிலங்களில் அரசமைப்பின் இயங்குமுறை செயலற்றுப் போகும் நேர்வில், அதற்கான ஏற்பாடுகள். 166

357. 356ஆம் உறுப்பின்படி பிறப்பிக்கப்பட்ட சாற்றாணையின் வழி சட்டமியற்றும் அதிகாரங்களைச் செலுத்துதல். 168

358. நெருக்கடி நிலைகளின்போது 19ஆம் உறுப்பின் வகையங்களைத் தற்காலிகமாக நிறுத்திவைத்தல். 169

359. நெருக்கடி நிலைகளின்போது, IIIஆம் பகுதியினால் வழங்கப்படும் உரிமைகள் செயலுறுத்தப்படுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல். 169

359அ. [நீக்கறவு செய்யப்பட்டது]. 170

360. நிதி நிலை நெருக்கடி பற்றிய வகையங்கள். 171

உறுப்பு — பக்கம்

பகுதி XIX

பல்வகை

361. குடியரசுத்தலைவர், ஆளுநர்கள், இராஜப்பிரமுகர்கள் ஆகியோருக்குக் காப்பளிப்பு. 172

361அ. நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை வெளியிடுவதற்குக் காப்பளிப்பு. 172

361ஆ. ஊதியம் வழங்கத்தக்க அரசியல் பணியிடையில் அமர்த்துவதற்கான தகுதிக்கேடு. 173

362. [நீக்கறவு செய்யப்பட்டது]. 173

363. குறித்தசில உடன்படிக்கைகள், உடன்பாடுகள் முதலியவற்றிலிருந்து எழும் பூசல்களில் நீதிமன்றங்களின் தலையீட்டிற்குத் தடையுறுத்தம். 173

363அ. இந்தியக் குறுநில அரசர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த ஏற்பளிப்பு அற்றுப்போதல், மற்றும் மன்னர் மானியங்கள் ஒழிக்கப்படுதல். 174

364. பெருந்துறைமுகங்கள், வானூர்தி நிலையங்கள் ஆகியவை குறித்த தனியுறு வகையங்கள். 174

365. ஒன்றியத்தின் பணிப்புரைகளுக்கு இணங்கி நடக்கவோ அவற்றைச் செல்திறப்படுத்தவோ தவறுமிடத்து ஏற்படும் விளைவு. 175

366. பொருள்வரையறைகள். 175

367. பொருள்கோள். 178

பகுதி XX

அரசமைப்பின் திருத்தம்

368. அரசமைப்பினைத் திருத்துவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரமும், அதற்கான நெறிமுறையும். 179

பகுதி XXI

தற்காலிகமான, மாறும் இடைக்காலத்திற்கான மற்றும் தனியுறு வகையங்கள்

369. மாநிலப் பட்டியலிலுள்ள குறித்தசில பொருட்பாடுகளைப் பொறுத்து, அவை ஒருங்கியல் பட்டியலிலுள்ள பொருட்பாடுகளாக இருந்தாற்போன்றே சட்டங்கள் இயற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள தற்காலிக அதிகாரம். 180

370. ஜம்மு–காஷ்மீர் மாநிலம் பொறுத்த தற்காலிக வகையங்கள். 180

371. மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களைப் பொறுத்த தனியுறு வகையங்கள். 181

371அ. நாகாலாந்து மாநிலம் பொறுத்த தனியுறு வகையம். 182

371ஆ. அசாம் மாநிலம் பொறுத்த தனியுறு வகையம். 184

371இ. மணிப்பூர் மாநிலம் பொறுத்த தனியுறு வகையம். 185

371ஈ. ஆந்திரப் பிரதேச மாநிலம் பொறுத்த தனியுறு வகையங்கள். 185

371உ. ஆந்திரப் பிரசேதத்தில் மையப் பல்கலைக்கழகத்தை நிறுவுதல். 188

371ஊ. சிக்கிம் மாநிலம் பொறுத்த தனியுறு வகையங்கள். 188

371எ. மிசோரம் மாநிலம் பொறுத்த தனியுறு வகையம். 190

371ஏ. அருணாசலப் பிரதேச மாநிலம் பொறுத்த தனியுறு வகையம். 191

371ஐ. கோவா மாநிலம் பொறுத்த தனியுறு வகையம். 191

372. நிலவுறும் சட்டங்கள் தொடர்ந்து செல்லாற்றலில் இருத்தல் மற்றும் அவற்றின் தழுவமைவு. 191

உறுப்பு		பக்கம்
372அ.	சட்டங்களைத் தழுவமைவு செய்வதற்குக் குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரம்.	192
373.	தடுப்புக் காவலில் உள்ளவர்களைப் பொறுத்து, குறித்தசில நேர்வுகளில் ஆணை பிறப்பிப்பதற்குக் குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரம்.	193
374.	கூட்டாட்சிய நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் கூட்டாட்சிய நீதிமன்றத்தில் அல்லது மன்றத்தமர் மாட்சிமைதங்கிய மன்னர் முன்பு முடிவுறாநிலையிலுள்ள நடவடிக்கைகள் பற்றிய வகையங்கள்.	193
375.	நீதிமன்றங்களும் அதிகாரஅமைப்புகளும் அலுவலர்களும் இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு தொடர்ந்து செயற்பணியாற்றுதல்.	194
376.	உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் பற்றிய வகையங்கள்.	194
377.	இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையர் பற்றிய வகையங்கள்.	194
378.	அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் பற்றிய வகையங்கள்.	195
378அ.	ஆந்திரப் பிரதேசச் சட்டமன்றப் பேரவையின் காலஅளவு பற்றிய தனியுறு வகையம்.	195
379–391	[நீக்கறவு செய்யப்பட்டது.]	195
392.	இடர்பாடுகளை அகற்றுவதற்குக் குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரம்.	195

பகுதி XXII

குறுந்தலைப்பு, தொடக்கம், அதிகாரஉறுதி பெற்ற இந்திமொழி வாசகம் மற்றும் நீக்கறவுகள்

393.	குறுந்தலைப்பு.	196
394.	தொடக்கம்.	196
394அ.	அதிகாரஉறுதி பெற்ற இந்திமொழி வாசகம்.	196
395.	நீக்கறவுகள்.	196

இணைப்புப்பட்டியல்கள்

பக்கம்

முதலாம் இணைப்புப்பட்டியல்—

I. மாநிலங்கள். 197

II. ஒன்றியத்து ஆட்சிநிலவரைகள். 201

இரண்டாம் இணைப்புப்பட்டியல்—

பகுதி அ—குடியரசுத்தலைவர் மற்றும் மாநிலங்களின் ஆளுநர்கள் குறித்த வகையங்கள். 202

பகுதி ஆ—[நீக்கறவு செய்யப்பட்டது]

பகுதி இ—மக்களவைத் தலைவர், துணைத் தலைவர், மாநிலங்களவைத் தலைவர், துணைத்தலைவர், ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர், சட்டமன்ற மேலவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் குறித்த வகையங்கள். 202

பகுதி ஈ—உச்ச நீதிமன்றத்தின் மற்றும் உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் குறித்த வகையங்கள். 203

பகுதி உ—இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையர் குறித்த வகையங்கள். 205

மூன்றாம் இணைப்புப்பட்டியல்—ஆணைமொழிகளின் அல்லது உறுதிமொழிகளின் சொன்முறைகள் 206

நான்காம் இணைப்புப்பட்டியல்—மாநிலங்களவையில் பதவியிடங்களைப் பகிர்ந்தொதுக்குதல் 209

ஐந்தாம் இணைப்புப்பட்டியல்—பட்டியல் வரையிடங்களுக்கும் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்குமான நிருவாகம் மற்றும் கட்டாள்கை குறித்த வகையங்கள். 210

பகுதி அ—பொதுவியல் 210

பகுதி ஆ—பட்டியல் வரையிடங்களுக்கும் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்குமான நிருவாகம் மற்றும் கட்டாள்கை 210

பகுதி இ—பட்டியல் வரையிடங்கள் 212

பகுதி ஈ—இணைப்புப்பட்டியலின் திருத்தம் 212

ஆறாம் இணைப்புப்பட்டியல்—அசாம், மேகாலயா, திரிபுரா, மிசோரம் ஆகிய மாநிலங்களில் உள்ள பழங்குடியினர் வரையிடங்களின் நிருவாகம் குறித்த வகையங்கள் 213

ஏழாம் இணைப்புப்பட்டியல்—

பட்டியல் I ஒன்றியத்துப் பட்டியல் 238

பட்டியல் II மாநிலத்துப் பட்டியல் 243

பட்டியல் III ஒருங்கியல் பட்டியல் 247

எட்டாம் இணைப்புப்பட்டியல்–மொழிகள் 250

ஒன்பதாம் இணைப்புப்பட்டியல்—குறித்தசில சட்டங்களையும் ஒழுங்குறுத்தும் விதிகளையும் செல்லுந்தன்மை உடையனவாக்குதல் 251

பத்தாம் இணைப்புப்பட்டியல்–கட்சி மாறுதல் காரணமாக விளையும் தகுதிக்கேடு குறித்த வகையங்கள் 266

பதினொன்றாம் இணைப்புப்பட்டியல் 270

பன்னிரண்டாம் இணைப்புப்பட்டியல் 271

இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை **இறையாண்மையும்** **சமநலச்சமுதாயமும்** **சமயச்சார்பின்மையும்** **மக்களாட்சிமுறையும்** அமைந்ததொரு **குடியரசாக** **நிறுவவும்,**

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் **நீதி,**
எண்ணம், அதன் வெளியீடு, **கோட்பாடு,**
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை,**

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை**
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்,

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால்,** இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே **வழங்கிக்கொள்கிறோம்.**

பகுதி I

ஒன்றியமும் அதன் ஆட்சிநிலவரையும்

1. ஒன்றியத்தின் பெயரும் ஆட்சி நிலவரையும் :

(1) இந்தியா எனும் பாரதம், மாநிலங்களைக் கொண்டதோர் ஒன்றியமாக இருக்கும்.

(2) மாநிலங்களும் அவற்றின் ஆட்சிநிலவரைகளும் முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு இருக்கும்.

(3) இந்தியாவின் ஆட்சிநிலவரை—

(அ) மாநிலங்களின் ஆட்சிநிலவரைகளையும்,

(ஆ) முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளையும்,

(இ) அடையப்பெறும் பிற ஆட்சிநிலவரைகளையும்

உள்ளடக்குவது ஆகும்.

2. புதிய மாநிலங்களை ஏற்றிணைத்தல் அல்லது நிறுவுதல் :

நாடாளுமன்றம், தான் தக்கதெனக் கருதுகிற வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு இணங்க, சட்டத்தினால், புதிய மாநிலங்களை ஒன்றியத்துள் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிறுவலாம்.

[1][2அ. * * * *]

3. புதிய மாநிலங்களை உருவாக்குதலும் நிலவுறும் மாநிலங்களின் பரப்பிடங்களை, எல்லைகளை அல்லது பெயர்களை மாற்றம்செய்தலும் :

நாடாளுமன்றம், சட்டத்தினால்—

(அ) எந்தவொரு மாநிலத்திலிருந்தும் ஆட்சிநிலவரையைப் பிரித்தோ இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களை அல்லது மாநிலங்களின் பகுதிகளை ஒன்றிணைத்தோ மாநிலம் ஒன்றன் பகுதியுடன் ஆட்சிநிலவரை எதனையும் ஒன்றிணைத்தோ புதிய மாநிலம் ஒன்றை உருவாக்கலாம்;

(ஆ) எந்தவொரு மாநிலத்தின் பரப்பிடத்தையும் விரிவாக்கலாம்;

(இ) எந்தவொரு மாநிலத்தின் பரப்பிடத்தையும் குறைக்கலாம்;

(ஈ) எந்தவொரு மாநிலத்தின் எல்லைகளையும் மாற்றலாம்;

(உ) எந்தவொரு மாநிலத்தின் பெயரையும் மாற்றலாம் :

வரம்புரையாக: இதன்பொருட்டான சட்டமுன்வடிவு எதனையும், குடியரசுத்தலைவரின் பரிந்துரை மீதல்லாமலும், மேலும், அச்சட்டமுன்வடிவில் அடங்கிய செயற்குறிப்பு மாநிலங்களில் ஒன்றன் பரப்பிடத்தையோ எல்லைகளையோ பெயரையோ பாதிக்குமிடத்து, அச்சட்டமுன்வடிவு, குடியரசுத் தலைவரால் அந்த மாநிலச் சட்டமன்றத்திற்கு, அச்சட்டமுன்வடிவு மீதான அதன் கருத்தினை, அவர் குறித்துரைக்கும் காலஅளவிற்குள்ளாகவோ அவர் அனுமதிக்கும் கூடுதலான காலஅளவிற்குள்ளாகவோ தெரிவிப்பதற்கெனக் குறித்தனுப்பப்பட்டிருந்து, அவ்வாறு அதில் குறித்துரைக்கப்பட்ட அல்லது கூடுதலாக அனுமதிக்கப்பட்ட காலஅளவு கழிவுற்றிருந்தால் அன்றியும், நாடாளுமன்ற ஈரவைகள் எதிலும் அறிமுகப்படுத்துதல் ஆகாது.

விளக்கம் I.—இந்த உறுப்பின் (அ) முதல் (உ) வரையுள்ள கூறுகளில், "மாநிலம்" என்பது, ஒன்றியத்து ஆட்சிநிலவரையையும் உள்ளடக்கும்; ஆனால், வரம்புரையில் "மாநிலம்" என்பது, ஒன்றியத்து ஆட்சிநிலவரையை உள்ளடக்குவதில்லை.

---

[1] 1975 ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்து ஆறாம் திருத்தம்) சட்டத்தின் 5ஆம் பிரிவினால் நீக்கறவு செய்யப்பட்டது. (26–4–1975 செல்திறம் பெறுமாறு)

விளக்கம் II.—(அ) கூறின்வழி, நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரமானது, மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஒன்றன் பகுதியை வேறொரு மாநிலத்துடனோ ஒன்றியத்து ஆட்சிநிலவரையுடனோ ஒன்றிணைத்து ஒரு புதிய மாநிலத்தை அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரையை உருவாக்குவதற்கான அதிகாரத்தையும் உள்ளடக்கும்.

4. 2, 3 ஆகிய உறுப்புகளின்படி இயற்றப்படும் சட்டங்கள், முதலாம், நான்காம் இணைப்புப் பட்டியல்களைத் திருத்துவதற்காகவும் துணைவுறு, சார்வுறு, விளைவுறு பொருட்பாடுகளுக்காகவும் வகைசெய்தல் :

(1) 2ஆம் உறுப்பிலோ 3ஆம் உறுப்பிலோ சுட்டப்பட்டுள்ள சட்டம் எதுவும், அந்தச் சட்டத்தின் வகையங்களைச் செல்திறப்படுத்துவதற்குத் தேவையானவாறு முதலாம் இணைப்புப்பட்டியலையும் நான்காம் இணைப்புப்பட்டியலையும் திருத்துவதற்கான வகையங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; அது (நாடாளுமன்றத்திலும் அத்தகைய சட்டத்தினால் பாதிக்கப்படும் மாநிலத்தின் சட்டமன்றத்திலும் அல்லது மாநிலங்களின் சட்டமன்றங்களிலும் சார்பாற்றம் குறித்த வகையங்கள் உள்ளடங்கலாக) நாடாளுமன்றம் தேவையெனக் கருதும் துணைவுறு, சார்வுறு, விளைவுறு வகையங்களைக் கொண்டதாகவும் இருக்கலாம்.

(2) மேற்சொன்ன சட்டம் எதுவும், 368ஆம் உறுப்பைப் பொறுத்தவரை, இந்த அரசமைப்பின் திருந்தமாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

பகுதி II

குடிமை

5. அரசமைப்பின் தொடக்க நிலையில் குடிமை :

இந்த அரசமைப்பின் தொடக்கநிலையில், இந்திய ஆட்சிநிலவரையில் தம் நிலைவாழ்விடத்தைக் கொண்டிருப்பதுடன்—

(அ) தாம் இந்திய ஆட்சிநிலவரையில் பிறந்தவராகவும், அல்லது

(ஆ) இந்திய ஆட்சிநிலவரையில் பிறந்தவரை, தம் பெற்றோரில் ஒருவராகக் கொண்டவராகவும், அல்லது

(இ) அந்தத் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் இந்திய ஆட்சி நிலவரையில் தாம் வழக்கமாகக் குடியிருந்து வருபவராகவும் உள்ள ஒவ்வொருவரும்

இந்தியாவின் குடிமகன் ஆவார்.

6. பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்துள்ள குறித்தசிலரின் குடிமை உரிமைகள்.

5ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், பாகிஸ்தானில் இப்போது உள்ளடங்கியுள்ள ஆட்சிநிலவரையிலிருந்து இந்தியஆட்சிநிலவரைக்குக் குடிபெயர்ந்துள்ள ஒருவர்–

(அ) தாமோ தம் பெற்றோரில் ஒருவரோ தம் பாட்டன் பாட்டியரில் ஒருவரோ (முதற்கண் இயற்றப்பட்டவாறான) 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தில் வரையறைசெய்யப்பட்ட இந்தியாவில் பிறந்தவர் என்பதுடன்,

(ஆ) (i) அத்தகையவர், 1948 ஜூலை பத்தொன்பதாம் நாளுக்கு முன்பு அவ்வாறு குடிபெயர்ந்துள்ள நேர்வில், அவர் தாம் குடிபெயர்ந்த தேதியிலிருந்து இந்திய ஆட்சிநிலவரையில் வழக்கமாக குடியிருந்துவருபவராகவும் இருப்பின், அல்லது

(ii) அத்தகையவர், 1948 ஜூலை பத்தொன்பதாம் நாளன்றோ அதற்குப் பின்போ அவ்வாறு குடிபெயர்ந்துள்ள நேர்வில், இந்தியாவின் குடிமகனாகத் தம்மைப் பதிவுசெய்து கொள்வதற்கென, இந்தியத் தன்னாட்சிய அரசாங்கத்தினால் அதன்பொருட்டு அமர்த்தப்பெற்ற ஓர் அலுவலரிடம், அவ்வரசாங்கத்தினால் வகுத்துரைக்கப்பட்ட வடிவத்திலும் வயணத்திலும், இந்த அரசமைப்பின் தொடக்க நிலைக்கு முன்பு தம்மால் செய்துகொள்ளப்பட்ட ஒரு விண்ணப்பத்தின்மீது அத்தகைய அலுவலரால் அவ்வாறு பதிவுசெய்யப்பெற்றுள்ளவராகவும் இருப்பின்,

அவர், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையில் இந்தியாவின் குடிமகன் எனக் கொள்ளப்பெறுவார் :

வரம்புரையாக: ஒருவர், தாம் விண்ணப்பித்த தேதியை ஒட்டி முன்பு குறைந்தது ஆறு மாதங்களேனும் இந்திய ஆட்சிநிலவரையில் குடியிருந்தவராக இருந்தாலன்றி, அவரை அவ்வாறு பதிவுசெய்தல் ஆகாது.

7. பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்துள்ள குறித்தசிலரின் குடிமைஉரிமைகள் :

5, 6 ஆகிய உறுப்புகளில் எது எவ்வாறிருப்பினும், இந்திய ஆட்சிநிலவரையிலிருந்து, பாகிஸ்தானில் இப்போது உள்ளடங்கியுள்ள ஆட்சிநிலவரைக்கு, 1947 மார்ச்சு முதலாம் நாளுக்குப் பின்பு குடிபெயர்ந்துள்ள ஒருவரை இந்தியாவின் குடிமகன் எனக் கொள்ளுதல் ஆகாது :

வரம்புரையாக: பாகிஸ்தானில் இப்போது உள்ளடங்கியுள்ள ஆட்சிநிலவரைக்கு அவ்வாறு குடிபெயர்ந்த பின்பு, சட்டம் ஒன்றின் அதிகாரத்தாலோ அதன் வழியாலோ மறுகுடியமர்வுக்காக அல்லது நிலையாகத் திரும்புவதற்காக வழங்கப்பட்ட ஓர் இசைவுச்சீட்டின்படி இந்திய ஆட்சிநிலவரைக்குத் திரும்பி வந்திருக்கின்ற எவருக்கும், இந்த உறுப்பிலுள்ள எதுவும் பொருந்துறுதல் ஆகாது; அத்தகைய ஒவ்வொருவரும், 6ஆம் உறுப்பின் (ஆ) கூறினைப் பொறுத்தவரை, 1948 ஜூலை பத்தொன்பதாம் நாளுக்குப் பின்பு இந்திய ஆட்சிநிலவரைக்குக் குடிபெயர்ந்திருப்பதாகக் கொள்ளப்பெறுவார்.

8. இந்தியாவுக்கு வெளியே குடியிருந்துவரும் குறித்தசில இந்திய மரபினரின் குடிமை உரிமைகள் :

5 ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், தாமோ தம் பெற்றோரில் ஒருவரோ தம் பாட்டன் பாட்டியரில் ஒருவரோ (முதற்கண் இயற்றப்பட்டவாறான), 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தில் வரையறைசெய்யப்பட்ட இந்தியாவில் பிறந்திருந்து, அவ்வாறு வரையறைசெய்யப்பட்ட இந்தியாவுக்கு வெளியேயுள்ள நாடு எதிலும் வழக்கமாகக் குடியிருந்துவருகின்ற எவரும், இந்தியாவின் குடிமகன் எனப் பதிவுசெய்வதற்காகத் தாம் அப்போதைக்குக் குடியிருந்துவரும் நாட்டிலுள்ள இந்தியாவின் அரசுத் தூதுவரிடம் அல்லது குடி வணிகநலத் தூதுவரிடம், இந்தியத் தன்னாட்சிய அரசாங்கத்தினாலோ இந்திய அரசாங்கத்தினாலோ வகுத்துரைக்கப்பட்ட வடிவத்திலும் வயணத்திலும், இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்போ பின்போ தம்மால் செய்து கொள்ளப்பட்ட ஒரு விண்ணப்பத்தின் மீது, அத்தகைய அரசுத் தூதுவரால் அல்லது குடி வணிகநலத் தூதுவரால் பதிவுசெய்யப்பெற்றவராக இருப்பின், அவர் இந்தியாவின் குடிமகன் எனக் கொள்ளப்பெறுவார்.

9. ஓர்அயல்நாட்டு அரசின் குடிமையினைத் தம்விருப்பாகப் பெற்றுள்ளவர்கள் குடிமக்கள் ஆவதில்லை :

எவரும், ஓர் அயல்நாட்டு அரசின் குடிமையினைத் தம்விருப்பாகப் பெற்றிருப்பாராயின், அவர் 5ஆம் உறுப்பின் பயன்திறன்வழி இந்தியாவின் குடிமகன் ஆவதில்லை; 6ஆம் உறுப்பின் அல்லது 8ஆம் உறுப்பின் பயன்திறன் வழியும் அவர் இந்தியாவின் குடிமகன் எனக் கொள்ளப்பெறுவதில்லை.

10. குடிமை உரிமைகள் தொடர்ந்திருத்தல் :

இந்தப் பகுதியின் மேலேகண்ட வகையங்களில் எதன்படியும் இந்தியாவின் குடிமகனாக இருக்கின்ற அல்லது இருப்பதாகக் கொள்ளப்பெறுகின்ற ஒவ்வொருவரும், நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, தொடர்ந்து அத்தகைய குடிமகனாக இருந்துவருவார்.

11. நாடாளுமன்றம் சட்டத்தினால் குடிமை உரிமையை ஒழுங்குறுத்துதல் :

இந்தப் பகுதியின் மேலேகண்ட வகையங்களிலுள்ள எதுவும், குடிமை பெறுதல், குடிமை அறுதல் பொறுத்தும் குடிமை தொடர்பான பிற அனைத்துப் பொருட்பாடுகள் பொறுத்தும் வகையம் எதுவும் செய்வதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரத்தைத் திறக்குறைவு செய்வதில்லை.

பகுதி III

அடிப்படை உரிமைகள்

பொதுவியல்

12. பொருள்வரையறை :

இந்தப் பகுதியில், தறுவாயின் தேவை வேறானாலன்றி, "அரசு" என்பது, இந்தியாவின் அரசாங்கத்தையும் நாடாளுமன்றத்தையும், மாநிலங்கள் ஒவ்வொன்றின் அரசாங்கத்தையும் சட்டமன்றத்தையும், இந்திய ஆட்சிநிலவரைக்குள்ளோ இந்திய அரசாங்கத்தின் கட்டாள்கையிலோ இருக்கும் உள்ளாட்சி அல்லது பிறவகை அதிகாரஅமைப்புகள் அனைத்தையும் உள்ளடக்கும்.

13. அடிப்படை உரிமைகளுக்கு முரணான அல்லது அவற்றைத் திறக்குறைவு செய்யும் சட்டங்கள் :

(1) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு இந்திய ஆட்சிநிலவரையில் செல்லாற்றலிலுள்ள சட்டங்கள் அனைத்தும், இந்தப் பகுதியின் வகையங்களுக்கு முரணாக இருக்கும் அளவிற்கு இல்லாநிலையன ஆகும்.

(2) இந்தப் பகுதியில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பறிக்கும் அல்லது ஒடுக்கும் சட்டம் எதனையும் அரசு இயற்றுதல் ஆகாது; மேலும், இந்தக் கூறினை மீறும் வகையில் இயற்றப்படும் சட்டம் எதுவும், அவ்வாறு மீறும் அளவிற்கு இல்லாநிலையது ஆகும்.

(3) இந்த உறுப்பில், தறுவாயின் தேவை வேறானலன்றி—

(அ) "சட்டம்" என்பது, இந்திய ஆட்சிநிலவரையில் சட்டச் செல்லாற்றல் கொண்ட அவசரச் சட்டம், ஆணை, துணை விதி, விதி, ஒழுங்குறுத்தும்விதி, அறிவிக்கை, வழக்கம், வழக்காறு இவற்றை உள்ளடக்கும்;

(ஆ) "செல்லாற்றலிலுள்ள சட்டங்கள்" என்பது, இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு, இந்திய ஆட்சிநிலவரையில் இருந்த ஒரு சட்டமன்றத்தினாலோ தகுதிறமுள்ள பிறவகை அதிகாரஅமைப்பினாலோ நிறைவேற்றப்பட்டு அல்லது இயற்றப்பட்டு, முன்னரே நீக்கறவு செய்யப்படாத சட்டங்களை, அத்தகைய சட்டம் எதுவும் அல்லது அதன் பகுதி எதுவும் அப்போது முற்றிலுமாகவோ குறிப்பிட்ட பரப்பிடங்களிலோ செயற்பாட்டில் இல்லாதிருப்பினும், உள்ளடக்கும்.

(4) இந்த உறுப்பிலுள்ள எதுவும், இந்த அரசமைப்பின் 368ஆம் உறுப்பின்படி செய்யப்படும் திருத்தம் எதற்கும் பொருந்துறுவதில்லை.

சமன்மைக்கான உரிமை

14. சட்டத்தின் முன்னார்ச் சமன்மை :

அரசு, இந்திய ஆட்சிநிலவரைக்குள் சட்டத்தின் முன்னார்ச் சமன்மையையும் சட்டங்கள் அளிக்கும் பாதுகாப்பில் சமன்மையையும் எவர் ஒருவருக்கும் மறுத்தல் ஆகாது.

15. சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் காரணமாக வேற்றுமை காட்டுதலுக்குத் தடை :

(1) அரசு, குடிமகன் எவர்மட்டும், சமயம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் இவற்றை மட்டுமே அல்லது இவற்றுள் ஏதொன்றையும் மட்டுமே காரணமாகக் கொண்டு வேற்றுமை காட்டுதல் ஆகாது.

(2) குடிமகன் எவரையும்—

(அ) கடைகள், பொது உண்டிச்சாலைகள், உணவு விடுதிகள், பொதுக் கேளிக்கையிடங்கள் ஆகியவற்றிற்குச் சென்று வருவதையோ,

(ஆ) அரசு நிதியங்களை முழுவதுமாகவோ பகுதியாகவோ கொண்டு பேணப்படும் அல்லது பொதுமக்களின் பயன்பாட்டுக்கு உரித்தாக்கப்படும் கிணறுகள், குளங்கள், நீராடுதுறைகள், சாலைகள், பொதுமக்கள் சாருமிடங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதையோ

பொறுத்து, சமயம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் இவற்றை மட்டுமே அல்லது இவற்றுள் ஏதொன்றையும் மட்டுமே காரணமாகக் கொண்டு, தகவுக்கேடு, கடப்பாடு, வரைத்தடை அல்லது நிபந்தனை எதற்கும் உட்படுத்துதல் ஆகாது.

(3) இந்த உறுப்பிலுள்ள எதுவும், மகளிர்க்காகவும் சிறார்க்காகவும் தனி ஏற்பாடு எதனையும் அரசு செய்வதற்குத் தடையுறு ஆவதில்லை.

(4) இந்த உறுப்பிலோ 29ஆம் உறுப்பின் (2) ஆம் கூறிலோ உள்ள எதுவும், குடிமக்களில் சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மேம்பாட்டிற்காகவோ பட்டியலில் கண்ட சாதியினர், பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஆகியோருக்காகவோ தனி ஏற்பாடு எதனையும் அரசு செய்வதற்குத் தடையுறு ஆவதில்லை.

[1][(5) இந்த உறுப்பிலோ அல்லது 19 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின் (எ) உட்கூறிலோ உள்ள எதுவும், குடிமக்களில் சமுதாய நிலையிலும் கல்வி நிலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் எவரின் மேம்பாட்டிற்காகவோ அல்லது பட்டியலில் கண்ட சாதியினர் அல்லது பட்டியலில் கண்ட பழங்குடியினருக்காகவோ, 30 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறில் சுட்டப்பட்ட சிறுபான்மையினர் கல்வி நிலையங்கள் அல்லாத பிற அரசு உதவிபெறும் அல்லது உதவிபெறாத தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ளடங்கலான கல்வி நிறுவனங்களில், அவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு, தனி ஏற்பாடு எதுவும் எந்த அளவுக்குத் தொடர்புடையதாயிருக்கிறதோ அந்த அளவுக்கு, அத்தகைய தனி ஏற்பாடு எதனையும், அரசு சட்டத்தின் வாயிலாகச் செய்வதற்குத் தடையுறு ஆவதில்லை.]

16. பொது வேலையமர்த்தங்கள் தொடர்பாகச் சமன்மையான வாய்ப்புநலம் :

(1) குடிமக்கள் அனைவருக்கும், அரசின்கீழுள்ள வேலையமர்த்தம் அல்லது பதவியமர்த்தம் தொடர்பாகச் சமன்மையான வாய்ப்புநலம் இருத்தல் வேண்டும்.

---

[1] 2005ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று மூன்றாம் திருத்தம்) சட்டத்தினால் புகுத்தப்பட்டது. (20–1–2006 முதல் செல்திறன் பெறுமாறு)

(2) குடிமகன் எவரையும், சமயம், இனம், சாதி, பாலினம், குடிவழி, பிறப்பிடம், உறைவிடம் இவற்றை மட்டுமே அல்லது இவற்றுள் ஏதொன்றையும் மட்டுமே காரணமாகக்கொண்டு, அரசின் கீழுள்ள வேலையமர்த்தம் அல்லது பதவி எதனையும் பொறுத்துத் தகுமை அற்றவராகவோ வேற்றுமை காட்டுதலுக்கு உற்றவராகவோ ஆக்குதல் ஆகாது.

(3) இந்த உறுப்பிலுள்ள எதுவும், ஒரு மாநில அல்லது ஒன்றியத்திலுள்ள ஆட்சிநிலவரை அரசாங்கத்தின் அல்லது அதிலுள்ள உள்ளாட்சி அல்லது பிறவகை அதிகாரஅமைப்பு எதன்கீழும், ஒரு வகையினை அல்லது வகைகளைச் சார்ந்த வேலையமர்த்தம் அல்லது பதவியமர்த்தம் பொறுத்து, அத்தகைய வேலையமர்த்தத்திற்கு அல்லது பதவியமர்த்தத்திற்கு முன்னரே அந்த மாநிலத்திற்குள்ளோ ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்குள்ளோ உறைவிடம் இருக்கவேண்டிய தேவைப்பாட்டினை வகுத்துரைக்கும் சட்டம் எதனையும் நாடாளுமன்றம் இயற்றுவதற்குத் தடையுறு ஆவதில்லை.

(4) இந்த உறுப்பிலுள்ள எதுவும், அரசின் கீழுள்ள பணியங்களில் போதிய அளவிற்கு இடம்பெறவில்லை என அரசு கருதும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் எதனையும் சேர்ந்த குடிமக்களின் நலச்சார்பாகப் பதவியமர்த்தங்களை அல்லது பணியடைகளை ஒதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடு எதனையும் அரசு செய்வதற்குத் தடையுறு ஆவதில்லை.

[1][(4அ) இந்த உறுப்பிலுள்ள எதுவும், அரசின் கீழுள்ள பணியங்களில் போதிய அளவு சார்பாற்றம் செய்யப்படாது, அரசின் கருத்தில் பட்டியலில் கண்ட சாதியினரின் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினரின் நலச்சார்பாக உள்ள அரசின் கீழுள்ள பணியடைகளின் வகை எதற்கும் அல்லது வகைகள் எவற்றிற்கும், [2][முந்துறு விளைவுடையதாய் பணி முதுநிலையின் அடிப்படையில் பணிஉயர்வு குறித்த பொருட்பாடுகளில்] ஒதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடு எதனையும் அரசு செய்வதற்குத் தடையுறு ஆவதில்லை.]

[3][(4ஆ) இந்த உறுப்பிலுள்ள எதுவும், (4)ஆம் கூறின் அல்லது (4அ) கூறின்படி செய்யப்பட்ட ஒதுக்கீட்டிற்கான ஏற்பாடு எதற்கும் இணங்க, அந்த ஆண்டில் நிரப்பப்படுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட அந்த ஆண்டிற்கான நிரப்பப்படாத காலியிடங்கள் எவற்றையும் பின்வரும் ஆண்டு எதிலும் அல்லது ஆண்டுகள் எவற்றிலும் நிரப்புவதற்கான தனிப்பட்ட வகையைச் சார்ந்த காலியிடங்களாக அரசு கருதுவதற்கு தடையுறு ஆவதில்லை மற்றும் அத்தகைய காலியிடங்கள், அந்த ஆண்டிலுள்ள காலியிடங்களின் மொத்த எண்ணிக்கையில், ஐம்பது விழுக்காடு ஒதுக்கீடு என்ற உச்சவரம்பை நிர்ணயிப்பதற்காக அவை நிரப்பப்படவேண்டிய ஆண்டிலுள்ள காலியிடங்களுடன் சேர்ந்த காலியிடங்களாகக் கருதப்படுதல் ஆகாது].

(5) இந்த உறுப்பிலுள்ள எதுவும், சமயம் அல்லது சமயக்கிளை சார்ந்த நிறுவனம் ஒன்றன் அலுவற்பாடுகள் தொடர்பாக ஒரு பதவி வகிப்பவரோ அல்லது ஆட்சிக்குழும உறுப்பினர் எவருமோ, ஒரு குறிப்பிட்ட சமயத்தை ஓம்புகிறவராகவோ ஒரு குறிப்பிட்ட சமயக்கிளையைச் சேர்ந்தவராகவோ இருத்தல்வேண்டும் என வகைசெய்கிற சட்டம் எதுவும் செயற்படுவதைப் பாதிப்பதில்லை.

17. தீண்டாமை ஒழிப்பு :

"தீண்டாமை" ஒழிக்கப்படுகிறது; எவ்வகையிலும் தீண்டாமையைக் கடைபிடிப்பது கடிந்து தடை செய்யப்படுகிறது. "தீண்டாமை" காரணமாக எழும் தகவுக்கேடு எதனையும் செயலுறுத்துவது சட்டப்படி தண்டனையுறு குற்றச்செயல் ஆகும்.

18. விருதுப்பட்டங்கள் ஒழிப்பு :

(1) படைத் துறையின் அல்லது கல்வித் துறையின் சிறப்புச்சீர்மை அல்லாத பிற விருதுப்பட்டம் எதனையும் அரசு வழங்குதல் ஆகாது.

(2) இந்தியாவின் குடிமகன் எவரும், அயல்நாட்டு அரசு எதனிடமிருந்தும் விருதுப்பட்டம் எதனையும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது.

---

[1] 1995ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து ஏழாம் திருத்தம்)ச் சட்டத்தினால் மாற்றாக அமைக்கப்பட்டது.
[2] 2001ஆம் ஆண்டு அரசமைப்புச் (எண்பத்தைந்தாம் திருத்தம்) சட்டத்தினால் மாற்றாக அமைக்கப்பட்டது.
[3] 2000ஆம் ஆண்டு அரசமைப்புச் (எண்பத்து ஒன்றாம் திருத்தம்) சட்டத்தினால் புகுத்தப்பட்டது.

(3) இந்தியாவின் குடிமகன் அல்லாத எவரும், அரசின்கீழ் ஊதியத்திற்குரிய அல்லது நம்பிக்கைக்குரிய பதவி ஒன்றை வகிக்குங்கால், குடியரசுத்தலைவரின் இசைவின்றி, அயல்நாட்டு அரசு எதனிடமிருந்தும் விருதுப்பட்டம் எதனையும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது.

(4) அரசின்கீழ் ஊதியத்திற்குரிய அல்லது நம்பிக்கைக்குரிய பதவி ஒன்றை வகிக்கின்ற எவரும், குடியரசுத்தலைவரின் இசைவின்றி, அயல்நாட்டு அரசு எதனிடமிருந்தும் பரிசு, பதவியூதியம் எதனையும் அல்லது அவ்வரசு எதன்கீழும் எவ்வகைப் பதவியையும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது.

சுதந்திரத்திற்கான உரிமை

19. பேச்சுச் சுதந்திரம் முதலியன பற்றிய குறித்தசில உரிமைகளுக்குப் பாதுகாப்பு :

(1) குடிமக்கள் அனைவரும்—

(அ) பேச்சு, சிந்தனை வெளிப்படுத்துகை ஆகியவற்றிற்கான சுதந்திரத்திற்கும்,

(ஆ) அமைதியாக, ஆயுதங்களின்றிக் கூடுவதற்கும்,

(இ) சங்கங்கள் அல்லது கூட்டமைவுகள் அமைப்பதற்கும்,

(ஈ) இந்திய ஆட்சிநிலவரை எங்கணும் தடையின்றிச் சென்று வருவதற்கும்,

(உ) இந்திய ஆட்சிநிலவரையின் எப்பகுதியிலும் குடியிருப்பதற்கும் நிலையாகக் குடியமர்வதற்கும்,

(ஊ) (விட்டுவிடப்பட்டது)

(எ) விழைதொழில் எதனையும் புரிந்து வருவதற்கும் அல்லது வாழ்தொழில், வணிகத்தொழில் அல்லது ஆகுதொழில் எதனையும் நடத்தி வருவதற்கும்

உரிமை உடையோர் ஆவர்.

(2) (1)ஆம் கூறின் (அ) உட்கூறிலுள்ள எதுவும், அந்த உட்கூறினால் வழங்கப்படும் உரிமையினைத் துய்த்தல் பொறுத்து, இந்திய நாட்டின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு, அரசின் பாதுகாப்பு, அயல்நாட்டு அரசுகளுடன் நட்புறவு, பொது ஒழுங்கமைதி, நயப்பண்பு, ஒழுக்கநெறி இவற்றின் நலங்கருதியோ, நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு அல்லது ஒரு குற்றச்செயலுக்கான தூண்டுதல் தொடர்பாகவோ தகுமான வரைத்தடைகளை விதிக்கின்ற அளவிற்கு, நிலவுறும் சட்டம் ஒன்றன் செயற்பாட்டினைப் பாதிப்பதுமில்லை; அத்தகைய சட்டம் எதனையும் அரசு இயற்றுவதற்குத் தடையூறு ஆவதுமில்லை.

(3) மேற்சொன்ன கூறின் (ஆ) உட்கூறிலுள்ள எதுவும், அந்த உட்கூறினால் வழங்கப்படும் உரிமையினைத் துய்த்தல் பொறுத்து, இந்திய நாட்டின் இறையாண்மை, ஒருமைப்பாடு, பொது ஒழுங்கமைதி இவற்றின் நலங்கருதி, தகுமான வரைத்தடைகளை விதிக்கின்ற அளவிற்கு, நிலவுறும் சட்டம் ஒன்றன் செயற்பாட்டினைப் பாதிப்பதுமில்லை; அவ்வாறு விதிக்கின்ற சட்டம் எதனையும் அரசு இயற்றுவதற்குத் தடையூறு ஆவதுமில்லை.

(4) மேற்சொன்ன கூறின் (இ) உட்கூறிலுள்ள எதுவும், அந்த உட்கூறினால் வழங்கப்படும் உரிமையினைத் துய்த்தல் பொறுத்து, இந்திய நாட்டின் இறையாண்மை, ஒருமைப்பாடு, பொது ஒழுங்கமைதி இவற்றின் நலங்கருதி, தகுமான வரைத்தடைகளை விதிக்கின்ற அளவிற்கு, நிலவுறும் சட்டம் ஒன்றன் செயற்பாட்டினைப் பாதிப்பதுமில்லை; அவ்வாறு விதிக்கின்ற சட்டம் எதனையும் அரசு இயற்றுவதற்குத் தடையூறு ஆவதுமில்லை.

(5) மேற்சொன்ன கூறின் (ஈ), (உ) ஆகிய உட்கூறுகளிலுள்ள எதுவும், அந்த உட்கூறுகளினால் வழங்கப்படும் உரிமைகளில் எதனையும் துய்த்தல் பொறுத்து, பொதுமக்களின் நலங்கருதியோ பட்டியலில் கண்ட பழங்குடியினரின் நலங்களைப் பாதுகாப்பதற்காகவோ தகுமான வரைத்தடைகளை விதிக்கின்ற அளவிற்கு, நிலவுறும் சட்டம் ஒன்றன் செயற்பாட்டினைப் பாதிப்பதுமில்லை; அவ்வாறு விதிக்கின்ற சட்டம் எதனையும் அரசு இயற்றுவதற்குத் தடையூறு ஆவதுமில்லை.

(6) மேற்சொன்ன கூறின் (எ) உட்கூறிலுள்ள எதுவும், அந்த உட்கூறினால் வழங்கப்படும் உரிமையினைத் துய்த்தல் பொறுத்து, பொது மக்களின் நலங்கருதி தகுமான வரைத்தடைகளை விதிக்கின்ற அளவிற்கு, நிலவுறும் சட்டம் ஒன்றன் செயற்பாட்டினைப் பாதிப்பதுமில்லை; அத்தகைய சட்டம் எதனையும் அரசு இயற்றுவதற்குத் தடையூறு ஆவதுமில்லை; மேலும், குறிப்பாக, மேற்சொன்ன உட்கூறிலுள்ள எதுவும்—

(i) விழைதொழில் எதனையும் புரிந்துவருவதற்கு அல்லது வாழ்தொழில், வணிகத்தொழில் அல்லது ஆகுதொழில் எதனையும் நடத்தி வருவதற்குத் தேவையான விழைதொழில் சார்ந்த அல்லது தொழில்நுட்பம் சார்ந்த தகுதிப்பாடுகள், அல்லது

(ii) வணிகத்தொழில், ஆகுதொழில், விசைத்தொழில் அல்லது பணியம் எதுவும், குடிமக்களை முழுவதுமாகவோ பகுதியாகவோ விலக்கியாயினும் அல்லது பிறவாறாயினும், அரசினாலோ அரசுக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டாள்கையிலுள்ள ஒரு கூட்டு குழுமத்தாலோ நடத்தப்பட்டு வருதல்.

இவை தொடர்புடைய அளவிற்கு, நிலவுறும் சட்டம் ஒன்றன் செயற்பாட்டினைப் பாதிப்பதுமில்லை; அது பொறுத்த சட்டம் எதனையும் அரசு இயற்றுவதற்குத் தடையூறு ஆவதுமில்லை.

20. குற்றச்செயல்களுக்கான குற்றத்தீர்ப்பு பொறுத்த பாதுகாப்பு :

(1) ஒருவர் மீது குற்றமெனச் சார்த்தப்பட்ட செயல் எதுவும், அது இழைக்கப்பட்ட காலத்தில் செல்லாற்றலிலிருந்த சட்டம் ஒன்றை மீறியதாகயிருந்தாலன்றி, அவரைக் குற்றத்தீர்ப்புக்கு உள்ளாக்குதல் ஆகாது; அத்துடன், அக்குற்றச்செயல் இழைக்கப்பட்ட காலத்தில் செல்லாற்றலிலிருந்த சட்டத்தின்படி விதித்திருக்கக்கூடிய தண்டனையைவிட அதிகமான தண்டனைக்கு அவரை உட்படுத்தலும் ஆகாது.

(2) ஒருவர், ஒரே குற்றச்செயலுக்காக ஒரு முறைக்கு மேல் வழக்குத் தொடரப்படுதலும் தண்டிக்கப்படுதலும் ஆகாது.

(3) குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரைத் தமக்கெதிர் சான்றளிப்பவராக இருக்குமாறு கட்டாயப்படுத்துதல் ஆகாது.

21. உயிருக்கும் உடல்சார் உரிமைக்கும் பாதுகாப்பு :

ஒருவரது உயிரோ உடல்சார் உரிமையோ, சட்டம் விதித்தமைத்துள்ள நெறிமுறைப்படி அன்றி, பறிக்கப்படுதல் ஆகாது.

[1][21அ. கல்வி கற்பதற்கான உரிமை:

ஆறு முதல் பதினான்கு வயதுள்ள சிறார்கள் அனைவருக்கும் அரசு, சட்டத்தின் வாயிலாகத் தீர்மானிக்கும் முறையில் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்க அரசு ஏற்பாடு செய்தல்வேண்டும்.]

22. குறித்தசில நேர்வுகளில் கைது செய்தல், காவலில் வைத்தல் இவற்றிலிருந்து பாதுகாப்பு :

(1) கைது செய்யப்பட்டுள்ள எவரும், அவ்வாறு கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள் கூடியவிரைவில் அவருக்குத் தெரிவிக்கப் பெறாமல் காவலில் தடுத்துவைக்கப்படுதல் ஆகாது; மேலும், அவருக்கு, தாம் விரும்பிய வழக்குரைஞரைக் கலந்தாய்வு செய்வதற்கும் அவர் வழியாக எதிர்வாதம் செய்வதற்குமான உரிமை மறுக்கப்படுதலும் ஆகாது.

(2) கைது செய்யப்பட்டுக் காவலில் தடுத்து வைக்கப்பட்ட ஒவ்வொருவரும், அவர் கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து மிகவும் அருகிலுள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தைச் சென்றடைவதற்குத் தேவையான காலம் நீங்கலாக, அவ்வாறு கைது செய்யப்பட்டதிலிருந்து இருபத்து நான்கு மணி நேரக் கால அளவிற்குள் அக்குற்றவியல் நடுவரிடம் முன்னிலைப்படுத்தப்படுதல் வேண்டும், மேலும், அவர், ஒரு குற்றவியல் நடுவரின் ஆணையின்றி மேற்சொன்ன கால அளவினைக் கடந்து காவலில் வைக்கப்படுதலும் ஆகாது.

---

[1] 2002ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து ஆறாம் திருத்த)ச் சட்டத்தினால் புகுத்தப்பட்டது.

(3) (1), (2) ஆகிய கூறுகளிலுள்ள எதுவும்—

(அ) அப்போதைக்குப் பகைநாட்டு அயலவராக இருக்கும் எவருக்கும், அல்லது

(ஆ) தடுப்புக் காவலுக்கு வகைசெய்யும் சட்டம் எதன்படியும் கைது செய்யப்பட்ட அல்லது காவலில் வைக்கப்பட்ட எவருக்கும்

பொருந்துறுவதில்லை.

(4) தடுப்புக் காவலுக்கு வகைசெய்யும் சட்டம் எதுவும், மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலஅளவிற்கு ஒருவரைக் காவலில் வைப்பதற்கு அதிகாரம் அளித்தல் ஆகாது; அவ்வாறு செய்வதாயின்—

(அ) உயர் நீதிமன்ற நீதிபதிகளாக இருப்பவர்களையோ இருந்தவர்களையோ அவ்வாறு அமர்த்தப்பெறுவதற்குத் தகுதியுடையவர்களையோ கொண்ட ஓர் அறிவுரைக் குழுமம், மேற்சொன்ன மூன்று மாதக் காலஅளவு கழிவுறுவதன் முன்பு, அவ்வாறு காவலில் வைப்பதற்குப் போதிய காரணம் இருக்கிறது என்று தான் கருதுவதாக அறிக்கை அளித்திருக்க வேண்டும்:

வரம்புரையாக: இந்த உட்கூறிலுள்ள எதுவும், (7)ஆம் கூறின் (ஆ) உட்கூறின்படி நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் எதிலும் வகுத்துரைக்கப்படும் மேல்வரைக் காலஅளவு கடந்த பின்னரும் ஒருவரைக் காவலில் வைத்திருக்க அதிகாரம் அளித்தல் ஆகாது; அல்லது

(ஆ) (7)ஆம் கூறின் (அ), (ஆ) ஆகிய உட்கூறுகளின்படி நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் ஒன்றன் வகையங்களுக்கு இணங்க அத்தகையவர் காவலில் வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

(5) தடுப்புக் காவலுக்கு வகைசெய்யும் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையைப் பின்பற்றி ஒருவர் காவலில் வைக்கப்பட்டிருக்கும் போது, அந்த ஆணையைப் பிறப்பித்த அதிகாரஅமைப்பு, அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டதற்கான காரணங்களைக் கூடிய விரைவில் அவருக்குத் தெரிவித்தல் வேண்டும்; மேலும், அந்த ஆணையின்மீது உரையீடு செய்வதற்கு முந்துறு வாய்ப்பினை அவருக்கு அளித்தல் வேண்டும்.

(6) (5)ஆம் கூறிலுள்ள எதுவும், அந்தக் கூறில் சுட்டப்படும் ஆணை ஒன்றைப் பிறப்பிக்கும் அதிகாரஅமைப்பினை, பொதுநலனுக்கு எதிரானவை என அது கருதும் பொருண்மைகளை வெளிப்படுத்துமாறு வேண்டுறுத்துவதில்லை.

(7) நாடாளுமன்றம், சட்டத்தினால்—

(அ) தடுப்புக் காவலுக்கு வகைசெய்யும் சட்டம் ஒன்றன்படி, (4) ஆம் கூறின் (அ) உட்கூறின் வகையங்களுக்கு இணங்க அறிவுரைக் குழுமத்தின் கருத்துரையைப் பெறாமலேயே மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலஅளவிற்கு ஒருவர் காவலில் வைக்கப்படலாகும் சூழ்நிலைகள் எவை என்பதையும் மற்றும் அதற்கான நேர்வுகளின் வகை அல்லது வகைகள் எவை என்பதையும்,

(ஆ) தடுப்புக் காவலுக்கு வகைசெய்யும் சட்டம் ஒன்றன்படி எவ்வகையான அல்லது வகைகளான நேர்வுகளிலும் ஒருவர் காவலில் வைக்கப்படலாகும் மேல்வரைக் காலஅளவு என்ன என்பதையும், மற்றும்

(இ) (4)ஆம் கூறின் (அ) உட்கூறின்படியான ஒரு விசாரணையில் அறிவுரைக் குழுமம் பின்பற்ற வேண்டிய நெறிமுறை என்ன என்பதையும்

வகுத்துரைக்கலாம்.

சுரண்டலைத் தடுப்பதற்கான உரிமை

23. மனிதரை வணிகப் பொருளாக்குதல், வலுக்கட்டாயமாக வேலை சுமத்துதல் ஆகியவற்றிற்குத் தடை :

(1) மனிதரை வணிகப் பொருளாக்குதலும், "பேகார்" வழக்கமும், அது போன்ற வலுக்கட்டாயமாக வேலை சுமத்தும் பிற வழக்கங்களும் தடைசெய்யப்படுகின்றன; மேலும், இந்த வகையத்தின் மீறுகை எதுவும், சட்டப்படி தண்டனையுறு குற்றச்செயல் ஆகும்.

(2) இந்த உறுப்பிலுள்ள எதுவும், பொது நோக்கங்களுக்காக அரசு கட்டாயப் பணியைச் சுமத்துவதற்குத் தடையுறு ஆவதில்லை. மேலும், அரசு அத்தகைய பணியைச் சுமத்துகையில் சமயம், இனம், சாதி, வகுப்பு இவற்றை மட்டுமே அல்லது இவற்றில் ஏதொன்றையும் மட்டுமே காரணமாகக்கொண்டு எவ்வாறான வேற்றுமையும் காட்டுதல் ஆகாது.

24. தொழிற்சாலைகள் முதலியவற்றில் சிறார்களை வேலையமர்த்தம் செய்தலுக்குத் தடை :

பதினான்கு வயதுக்குக் குறைந்த சிறார் எவரையும், தொழிற்சாலை அல்லது சுரங்கம் எதிலும் வேலையில் அமர்த்துதல் ஆகாது; மேலும் பிற இடர்மிகு வேலையமர்த்தம் எதிலும் ஈடுபடுத்துதலும் ஆகாது.

சமயச் சுதந்திரத்திற்கான உரிமை

25. மனச்சான்று வழி ஒழுகுவதற்கான சுதந்திரமும், சுதந்திரமாகச் சமயநெறி ஓம்புதலும் ஒழுகுதலும் ஓதிப் பரப்புதலும் :

(1) பொது ஒழுங்கமைதி, ஒழுக்கநெறி, நல்வாழ்வு ஆகியவற்றிற்கும் இந்தப் பகுதியின் பிற வகையங்களுக்கும் உட்பட்டு, அனைவரும், மனச்சான்றுவழி ஒழுகுவதற்கான சுதந்திரத்திற்கும் சுதந்திரமாகச் சமயநெறி ஓம்புதல், ஒழுகுதல், ஓதிப்பரப்புதல் ஆகியவற்றிற்கான உரிமைக்கும் சரிசமமாக உரிமைகொண்டவர் ஆவர்.

(2) இந்த உறுப்பிலுள்ள எதுவும்–

(அ) சமயநெறி ஒழுகலாற்றுடன் இணைந்திருக்கும் பொருளியல், நிதியியல், அரசியல் நடவடிக்கை அல்லது சமயச் சார்பற்ற பிற நடவடிக்கை எதனையும் ஒழுங்குறுத்துவதான அல்லது கட்டுப்படுத்துவதான,

(ஆ) சமுதாய நலப்பாடு மற்றும் சீர்த்திருத்தத்திற்கு அல்லது பொதுமத்தன்மை வாய்ந்த இந்து சமய நிறுவனங்களை இந்துக்களின் அனைத்து வகுப்பினருக்கும் பிரிவினருக்கும் திறந்துவிடுதலுக்கு வகைசெய்வதான

நிலவறும் சட்டம் ஒன்றன் செயற்பாட்டைப் பாதிப்பதுமில்லை; அத்தகைய சட்டத்தை அரசு இயற்றுவதற்குத் தடையுறு ஆவதுமில்லை.

விளக்கம் I.—கிர்பான்கள் தரிப்பதும் தாங்கிச் செல்வதும் சீக்கிய சமயத்தை ஓம்புவதில் உள்ளடங்கியனவாகக் கொள்ளப்படும்.

விளக்கம் II.—(2)ஆம் கூறின் (ஆ) உட்கூறில் இந்துக்கள் என்ற சுட்டுகை, சீக்கிய, சமண அல்லது பௌத்த சமயத்தை ஓம்புகிறவர்களைச் சுட்டுவதையும் உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படும்; மேலும், இந்து சமய நிறுவனங்கள் என்ற சுட்டுகையும் அவ்வாறாகவே பொருள்கொள்ளப்படும்.

26. சமயம் சார்ந்த காரியங்களை நிருவகிப்பதற்கான சுதந்திரம் :

பொது ஒழுங்கமைதி, ஒழுக்கநெறி, நலவாழ்வு ஆகியவற்றிற்கு உட்பட்டு, ஒவ்வொரு சமயக் கிளையும் அல்லது அதன் பிரிவு எதுவும்—

(அ) சமய நோக்கங்களுக்காகவும் அற நோக்கங்களுக்காகவும் நிறுவனங்களை நிறுவுவதற்கும் பேணிவருவதற்கும்,

(ஆ) சமயம் சார்ந்தவற்றில் தனக்குரிய காரியங்களை நிருவகிப்பதற்கும்,

(இ) அசைவியல் சொத்தினையும் நிலையியல் சொத்தினையும் சொந்தமாக வைத்திருப்பதற்கும் ஈட்டுவதற்கும்,

(ஈ) அத்தகைய சொத்தினைச் சட்டத்திற்கிணங்கிய வகையில் ஆண்டு வருவதற்கும் உரிமை உடையது ஆகும்.

27. குறிப்பிட்ட சமயம் எதனையும் வளர்ப்பதற்கான வரிகள் செலுத்துவது குறித்த சுதந்திரம் :

குறிப்பிட்ட சமயம் அல்லது சமயக் கிளை ஒன்றை வளர்ப்பதற்கோ பேணி வருவதற்கோ ஆகும் செலவுகளைச் செய்வதற்கெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ள தொகைகளை ஈட்டுவதற்கான வரிகள் எவற்றையும் செலுத்துமாறு எவரையும் கட்டாயப்படுத்துதல் ஆகாது.

28. குறித்தசில கல்வி நிறுவனங்களில் சமயப் போதனை பயில வருவது அல்லது சமய வழிபாட்டுக்கு வருகை தருவது குறித்த சுதந்திரம் :

(1) முழுவதுமாகவே அரசு நிதியங்களைக்கொண்டு பேணிவரப்படும் கல்வி நிறுவனம் எதிலும் சமயப் போதனை எதனையும் செய்தல் ஆகாது.

(2) (1)ஆம் கூறிலுள்ள எதுவும், கல்வி நிறுவனம் ஒன்று அரசினால் நிருவகிக்கப்பட்டு வருவதாயினும்கூட, அதில் சமயப் போதனை செய்யப்பட வேண்டும் என்று வேண்டுறுத்துகின்ற நிலைக்கட்டளை அல்லது பொறுப்புக்கட்டளை ஒன்றன்படி அது நிறுவப்பட்டதாயிருப்பின், அத்தகைய நிறுவனத்திற்குப் பொருந்துறுதல் ஆகாது.

(3) அரசினால் ஏற்பளிக்கப்பட்டிருக்கிற அல்லது அரசு நிதியங்களிலிருந்து உதவி பெறுகிற கல்வி நிறுவனம் ஒன்றில் பயிலவரும் எவரும், அத்தகைய நிறுவனத்தில் புகட்டப்படும் சமயப் போதனை எதிலும் கலந்துகொள்ள வேண்டுமென்றும், அத்தகைய நிறுவனத்தில் அல்லது அதனுடன் இணைந்த வளாகம் ஒன்றில் நடத்தப்படும் சமய வழிபாடு எதற்கும் வருகைதரவேண்டுமென்றும், அவரோ, அவர் இளவராக இருப்பின், அவருடைய காப்பாளரோ அதற்கு இசைவு அளித்திருந்தாலன்றி, அவரை வேண்டுறுத்துதல் ஆகாது.

பண்பாடு, கல்வி பற்றிய உரிமைகள்

29. சிறுபான்மையினர் நலன்களுக்குப் பாதுகாப்பு :

(1) இந்திய ஆட்சிநிலவரையில் அல்லது அதன் பகுதி எதிலும் குடியிருந்துவரும் குடிமக்களில் எப்பிரிவினரும், தமக்கெனத் தனிவேறான மொழி, எழுத்துவடிவம் அல்லது பண்பாடு உடையவராயிருப்பின், அவற்றைப் பேணிக்காக்கும் உரிமை உடையவர் ஆவார்.

(2) குடிமகன் எவரையும், சமயம், இனம், சாதி, மொழி இவற்றை மட்டுமே அல்லது இவற்றுள் ஏதொன்றையும் மட்டுமே காரணமாகக்கொண்டு, அரசினால் பேணிவரப்படும் அல்லது அரசு நிதியங்களிலிருந்து உதவி பெறும் கல்வி நிறுவனம் எதிலும் சேர்ப்பதற்கு மறுத்தல் ஆகாது.

30. கல்வி நிறுவனங்களை நிறுவவும் நிருவகிக்கவும் சிறுபான்மையினருக்குள்ள உரிமை :

(1) சமயம் அல்லது மொழி எதன் அடிப்படையிலும் சிறுபான்மையினராக உள்ள அனைவரும் தங்கள் விருப்பப்படி கல்வி நிறுவனங்களை நிறுவவும் நிருவகிக்கவும் உரிமை உடையவர் ஆவர்.

(1அ). (1)ஆம் கூறில் சுட்டப்பட்டுள்ள சிறுபான்மையினரால் நிறுவப்பட்டு நிருவகிக்கப்பெற்றுவரும் ஒரு கல்வி நிறுவனத்தின் சொத்து எதனையும் கட்டாயமாகக் கையகப்படுத்துவதற்கு வகைசெய்கிற சட்டம் ஒன்றை இயற்றுகையில், அச்சொத்தினைக் கையகப்படுத்துவதற்காக அச்சட்டத்தினால் நிருணயிக்கப்படும் அல்லது அதன்கீழ் தீர்மானிக்கப்படும் தொகையானது, அந்தக் கூறின்படி உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமையினை அருக்கம் செய்வதாகவோ நீக்கறவு செய்வதாகவோ இல்லாதவாறு அரசு உறுதியுறப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

(2) கல்வி நிறுவனங்களுக்கு உதவி வழங்குகையில், கல்வி நிறுவனம் ஒன்று, சமயம் அல்லது மொழி எதன் அடிப்படையிலும் சிறுபான்மையினராக உள்ளவர்களின் மேலாண்மையில் இருக்கிறதென்னும் காரணத்தைக்கொண்டு அதற்கு எதிராக அரசு வேற்றுமைகாட்டுதல் ஆகாது,

[1][31. * * *]

குறித்தசில சட்டங்களுக்குக் காப்புரை

31அ. உரிமைநிலச்சொத்துக்கள் முதலியனவற்றைக் கையகப்படுத்துவதற்கு வகைசெய்யும் சட்டங்களுக்குக் காப்புரை :

(1). 13ஆம் உறுப்பில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்—

(அ) உரிமைநிலச்சொத்து எதனையும் அல்லது அதிலுள்ள உரிமைகள் எவற்றையும் அரசு கையகப்படுத்துவதற்கு அல்லது அத்தகைய உரிமைகள் எவற்றையும் ஒழித்துவிடுவதற்கு அல்லது மாற்றமைவு செய்வதற்கு, அல்லது

(ஆ) பொதுநலங்கருதியோ சொத்திற்கு முறையான நிருவாகம் அமையச் செய்யவோ வரம்புக்குட்பட்ட ஒரு காலஅளவிற்கு, சொத்து ஒன்றன் நிருவாகத்தை அரசு மேற்கொள்ளுவதற்கு, அல்லது

(இ) இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட கூட்டுருமங்களை பொது நலங்கருதியோ அக்கூட்டுருமங்களில் ஏதொன்றின் முறையான மேலாண்மை அமையச் செய்யவோ ஒருங்கிணைப்பதற்கு, அல்லது

(ஈ) கூட்டுருமங்களின் மேலாண்மை முகவர்கள், செயலாளர்கள் மற்றும் பொருளாளர்கள், மேலாண்மை இயக்குநர்கள், இயக்குநர்கள் அல்லது மேலாளர்களின் உரிமைகள் எவற்றையும் அல்லது அவற்றில் பங்குடையவர்களின் வாக்குரிமைகள் எவற்றையும் ஒழித்துவிடுவதற்கு அல்லது மாற்றமைவு செய்வதற்கு, அல்லது

(உ) கனிமம் அல்லது கனிம எண்ணெய் எதனையும் தேடுவதற்கான அல்லது தோண்டியெடுப்பதற்கான உடன்பாட்டின், குத்தகையின் அல்லது உரிமத்தின் காரணமாகச் சேர்ந்தடையும் உரிமைகள் எவற்றையும் ஒழித்துவிடுவதற்கு அல்லது மாற்றமைவு செய்வதற்கு அல்லது அத்தகைய உடன்பாடு, குத்தகை அல்லது உரிமம் எதனையும் முதிர்வுக்காலத்திற்கு முன்னரே முடிவுறுத்துவதற்கு அல்லது அறவுசெய்வதற்கு

[1] 1978 ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து நான்காம் திருத்தம்) சட்டத்தின் 6ஆம் பிரிவினால் (20–6–1979 முதல் செல்திறம் பெறுமாறு) நீக்கறவு செய்யப்பட்டது.

வகைசெய்யும் சட்டம் எதுவும், 14ஆம் உறுப்பினால் அல்லது 19ஆம் உறுப்பினால் வழங்கப்படும் உரிமைகளில் எதனுடனும் முரண்படுகிறது அல்லது அத்தகைய உரிமைகளில் எதனையும் பறிக்கிறது அல்லது ஒடுக்குகிறது என்னும் காரணத்தால் இல்லாநிலையதாகக் கொள்ளப்படுதல் ஆகாது:

வரம்புரையாக: அத்தகைய சட்டம் ஒரு மாநிலச் சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட ஒரு சட்டமாக இருக்குமிடத்து, அது குடியரசுத்தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்து, அவருடைய ஏற்பிசைவையும் பெற்றிருந்தாலன்றி, இந்த உறுப்பின் வகையங்கள் அச்சட்டத்திற்குப் பொருந்துறுவதில்லை :

மேலும் வரம்புரையாக: சட்டம் எதுவும் உரிமைநிலச்சொத்து ஒன்றை அரசு கையகப்படுத்துவதற்கு வகைசெய்யுமிடத்து, அந்தச் சொத்தில் அடங்கியுள்ள நிலம் எதுவும் ஒருவரின் நேரடிச் சாகுபடியில் இருக்குமாயின், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் ஒன்றன்படி அவருக்குப் பொருந்துறும் உச்சவரம்புக்குள் வருகிற நிலத்தின் பகுதி எதனையும் அல்லது அதன் மேலமைந்திருக்கும் அல்லது அதனைச் சேர்ந்திருக்கும் கட்டடம் அல்லது கட்டுமானம் எதனையும் அரசு கையகப்படுத்துகையில், அத்தகைய நிலத்தை, கட்டடத்தை அல்லது கட்டுமானத்தைக் கையகப்படுத்துவதன் தொடர்பான அச்சட்டம் அதன் நிலவா மதிப்புக்குக் குறைவுபடாததொரு விழுக்காட்டில் சரியீடு கொடுப்பதற்கு வகை செய்தாலன்றி, அவ்வாறு கையகப்படுத்தல் சட்டமுறையானது ஆகாது.

(2) இந்த உறுப்பில்—

(அ) வட்டாரப் பகுதி எதன் தொடர்பாகவும் "உரிமைநிலச்சொத்து" என்னும் சொற்றொடர், அந்தப் பகுதியில் செல்லாற்றலிலுள்ள நிலப்பிடிமானமுறை பற்றிய நிலவறும் சட்டத்தில் அந்தச் சொற்றொடர் அல்லது வட்டார வழக்கில் அதற்கு நிகராகவுள்ள சொற்றொடர் கொண்டுள்ள அதே பொருளை உடையது ஆகும்; மேலும், அத்தொடர்—

(i) ஜாகீர், இனாம் அல்லது முவாஃபி அல்லது அது போன்ற பிற மானியம் எதனையும், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களிலுள்ள ஜன்மம் உரிமை எதனையும்,

(ii) ரயத்துவாரி முறை ஏற்பாட்டிற்கு உட்பட்டுள்ள நிலம் எதனையும்,

(iii) தரிசு நிலம், காட்டுநிலம், மேய்ச்சல் நிலம் அல்லது நிலம் பயிரிடுபவர்கள், வேளாண் தொழிலாளர்கள், ஊர்க் கைவினைஞர்கள் ஆகியோருடைய கையுடைமையிலுள்ள கட்டட மற்றும் பிற கட்டுமான மனையிடங்கள் உள்ளடங்கலாக, வேளாண்மை பொருட்டோ அதன் துணை நோக்கங்களுக்காகவோ வைத்துவரப்பட்டுள்ள அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிலம் எதனையும்

உள்ளடக்கும்.

(ஆ) உரிமை நிலச்சொத்து ஒன்றன் தொடர்பாக "உரிமைகள்" என்னும் சொல், ஓர் உரிமையாளர், சார் உரிமையாளர், கீழ் உரிமையாளர், நிலப்பிடிமானக்காரர், குடியானவர், கீழ்க் குடியானவர் அல்லது பிற இடையுரிமையாளர் இவர்களிடம் உற்றமையும் உரிமைகள் எவற்றையும் மற்றும் நிலவருவாய் பொறுத்த உரிமைகள் அல்லது தனிச்சலுகைகள் எவற்றையும் உள்ளடக்குவதாகும்.

31ஆ. குறித்தசில சட்டங்களையும் ஒழுங்குறுத்தும் விதிகளையும் செல்லுந்தன்மை உடையனவாக்குதல் :

31அ உறுப்பில் அடங்கியுள்ள வகையங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, ஒன்பதாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள், ஒழுங்குறுத்தும்விதிகள் இவற்றில் எதுவும் அல்லது இவற்றின் வகையங்களில் எதுவும், அத்தகைய சட்டம், ஒழுங்குறுத்தும்விதி அல்லது வகையம், இந்தப் பகுதியின் வகையங்கள் எவற்றிற்கும் முரணாக இருக்கிறது என்றோ அந்த வகையங்கள் வழங்கும் உரிமைகளில் எதனையும் பறிக்கிறது அல்லது ஒடுக்குகிறது *என்றோ காரணங்காட்டி, அது இல்லாநிலையதாகிவிடுவதாக அல்லது* எப்போதேனும் இல்லாநிலையதாகிவிட்டதாகக் கொள்ளப்படுதல் ஆகாது; மேலும், நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் ஒன்றன் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதுவும் இதற்கு மாறாக இருந்தபோதிலும், மேற்சொன்ன சட்டங்கள், ஒழுங்குறுத்தும்விதிகள் ஒவ்வொன்றும், அதனை நீக்கறவு செய்வதற்கு அல்லது அதில் திருத்தம் செய்வதற்குத் தகுதிறமுள்ள சட்டமன்றம் ஒன்றன் அதிகாரத்திற்கு உட்பட்டு, தொடர்ந்து செல்லாற்றலில் இருந்துவரும்.

31இ. குறித்தசில நெறிப்படுத்தும் கோட்பாடுகளைச் செல்திறப்படுத்தும் சட்டங்களுக்குக் காப்புரை :

13ஆம் உறுப்பில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், IVஆம் பகுதியில் விதிக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் எய்துறச்செய்யும் அரசின் கொள்கையைச் செல்திறப்படுத்துகிற சட்டம் எதுவும், அது 14ஆம் உறுப்பினால் அல்லது 19ஆம் உறுப்பினால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளில் எதற்கும் முரணாக இருக்கிறது அல்லது அந்த உரிமையைப் பறிக்கிறது அல்லது ஒடுக்குகிறது என்னும் காரணங்காட்டி இல்லாநிலையதாகிவிடுவதாகக் கொள்ளப்படுதல் ஆகாது; மேலும், அத்தகைய கொள்கையினைச் செல்திறப்படுத்துவதற்காகவே அச்சட்டம் உள்ளது என்னும் ஒரு விளம்புகையைக் கொண்ட சட்டம் எதுவும், அது அத்தகைய கொள்கையைச் செல்திறப்படுத்தவில்லை என்னும் காரணங்காட்டி நீதிமன்றம் எதிலும் எதிர்த்து வாதிடப்படுதல் ஆகாது:

வரம்புரையாக: அத்தகைய சட்டம் ஒரு மாநிலச் சட்டமன்றத்தினால் இயற்றப்படுமிடத்து, அது குடியரசுத்தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்து, அவருடைய ஏற்பிசைவையும் பெற்றிருந்தாலன்றி, இந்த உறுப்பின் வகையங்கள் அச்சட்டத்திற்குப் பொருந்துறுவதில்லை.

[1][31ஈ * * *]

அரசமைப்புத் தீர்வழிகளுக்கான உரிமை

32. இந்தப் பகுதியினால் வழங்கப்படும் உரிமைகளைச் செயலுறுத்துவதற்கான தீர்வழிகள் :

(1) இந்தப் பகுதியினால் வழங்கப்படும் உரிமைகளைச் செயலுறுத்துவதற்காக, உரிய நடவடிக்கைகள் மூலம் உச்ச நீதிமன்றத்தை அணுகிக்கோரும் உரிமைக்கு உத்தரவாதமளிக்கப்படுகிறது.

(2) இந்தப் பகுதியினால் வழங்கப்படும் உரிமைகளில் எதனையும் செயலுறுத்துவதற்காக, பணிப்புரைகள் அல்லது ஆணைகள் அல்லது ஆட்கொணர்விப்பு, செயலுறுத்து, தடையுறுத்து, தகுதிவினவு, நெறிமுறைக்கேட்பு ஆகியவற்றின் தன்மை கொண்ட நீதிப்பேராணைகளில் பொருத்தமான நீதிப் பேராணைகள் இவற்றைப் பிறப்பிப்பதற்கு உச்ச நீதிமன்றம் அதிகாரம் உடையது ஆகும்.

(3). (1), (2) ஆகிய கூறுகள் உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கும் அதிகாரங்களுக்குக் குந்தகமின்றி, (2)ஆம் கூறின்படி உச்ச நீதிமன்றம் செலுத்துவதாகும் அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும், பிற நீதிமன்றம் எதுவும் அதற்குரிய அதிகாரவரம்பு எல்லைக்களுக்குள் செலுத்திவருவதற்கு நாடாளுமன்றம் சட்டத்தினால் அதிகாரம் அளிக்கலாம்.

---

[1] 1977ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து மூன்றாம் திருத்தம்)ச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் (13-4-1978 முதல் செல்திறம் பெறுமாறு நீக்கறவு செய்யப்பட்டது.)

(4) இந்த உறுப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள உரிமை, இந்த அரசமைப்பினால் பிறவாறு வகைசெய்யப்பட்டுள்ளபடி அல்லாமல், இடைநிறுத்தி வைக்கப்படுதல் ஆகாது.

[2][32அ. * * *]

33. இந்தப் பகுதியினால் வழங்கப்படும் உரிமைகளைப் படையினர் முதலானோருக்குப் பொருந்துறச் செய்கையில் அவற்றை மாற்றமைவு செய்ய நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம் :

இந்தப் பகுதியினால் வழங்கப்படும் உரிமைகளில் எதனையும்—

(அ) ஆயுதப் படையினருக்கு, அல்லது

(ஆ) பொது ஒழுங்கமைதியைப் பேணும் பொறுப்புடைய படையினருக்கு, அல்லது

(இ) வேவுச்செய்தியைத் திரட்டுவதற்காக அல்லது திரட்டுவதைத் தடுப்பதற்காக அரசினால் நிறுவப்பட்ட துறையகம் அல்லது பிற அமைப்பு ஒன்றில் வேலையமர்த்தம் செய்யப்பட்டுள்ளவர்களுக்கு, அல்லது

(ஈ). (அ) முதல் (இ) வரையிலான கூறுகளில் சுட்டப்பட்டுள்ள ஆயுதப்படை, துறையகம் அல்லது அமைப்பு ஒன்றிற்காக ஏற்படுத்தப்பட்ட தொலைச்செய்தித் தொடர்பு நிறுவனத்தில் வேலையமர்த்தம் செய்யப்பட்டுள்ளவர்களுக்கு அல்லது அதனுடன் தொடர்புடையவர்களுக்கு

பொருந்துறச் செய்வதில், அவர்களுடைய கடமைகள் முறையாக ஆற்றப்படுவதையும், அவர்களிடையே ஒழுங்குக்கட்டுப்பாடு பேணிவரப்படுவதையும் உறுதிப்படுத்தும் வகையில் எந்த அளவுக்கு அருக்கம் செய்யவேண்டும் அல்லது நீக்கறவு செய்யவேண்டும் என்பதை நாடாளுமன்றம் சட்டத்தினால் தீர்மானிக்கலாம்.

34. வரையிடம் ஒன்றின் படைத்துறையாட்சி செல்லாற்றலில் இருக்குங்கால், இந்தப் பகுதி வழங்கும் உரிமைகள்மீதான வரைத்தடை.

இந்தப் பகுதியின் மேலே கண்ட வகையங்களில் எது எவ்வாறிருப்பினும், நாடாளுமன்றம் சட்டத்தினால், ஒன்றியத்தின் அல்லது ஒரு மாநிலத்தின் பணியிலுள்ள எவருக்கும் அல்லது பிறர் எவருக்கும், இந்திய ஆட்சிநிலவரைக்குள் படைத்துறையாட்சி செல்லாற்றலில் இருந்துவந்த வரையிடம் எதிலும் ஒழுங்கமைதியைப் பேணுதல் அல்லது அதை மீண்டும் நிலைநாட்டுதல் தொடர்பாக அவரால் செய்யப்பட்ட எந்தச் செயலையும் பொறுத்துக் காப்பளிக்கலாம் அல்லது அத்தகைய வரையிடத்தில் படைத்துறையாட்சியின்கீழ் அளிக்கப்பட்ட தீர்ப்புத்தண்டனை, விதிக்கப்பட்ட தண்டம், ஆணையிடப்பட்ட பறிமுதல் அல்லது செய்யப்பட்ட பிற செயல் எதனையும் செல்லுந்தன்மை உடையதாக்கலாம்.

35. இந்தப் பகுதியின் வகையங்களுக்குச் செல்திறம் அளிப்பதற்காகச் சட்டமியற்றுதல் :

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்—

(அ). (i) 16 ஆம் உறுப்பின் (3) ஆம் கூறு, 32 ஆம் உறுப்பின் (3) ஆம் கூறு, 33 ஆம் உறுப்பு, 34 ஆம் உறுப்பு ஆகியவற்றின்படி நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தினால் வகைசெய்யப்படும் பொருட்பாடுகளில் எதனைப் பொறுத்தும்,

(ii) இந்தப் பகுதியின்படி குற்றச்செயல்கள் என விளம்பப்பட்டிருக்கிற செயல்களுக்குத் தண்டனையை வகுத்துரைப்பதற்காகவும் சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே உள்ளது, மாநிலச் சட்டமன்றத்திற்கு இல்லை;

---

[2] 1977ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து மூன்றாம் திருத்தச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் (13-4-1978 முதல் செல்திறம் பெறுமாறு) நீக்கறவு செய்யப்பட்டது.

மேலும், நாடாளுமன்றம், இந்தஅரசமைப்பின் தொடக்கநிலைக்குப் பின்பு, கூடியவிரைவில், (i) ஆம் உட்கூறில் சுட்டப்பட்டுள்ள செயல்களுக்குத் தண்டனையை வகுத்துரைப்பதற்காகச் சட்டங்களை இயற்றுதல் வேண்டும்;

(ஆ) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, இந்திய ஆட்சிநிலவரையில் செல்லாற்றலிலுள்ள, (அ) கூறின் (i) ஆம் உட்கூறில் சுட்டப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்ததான அல்லது அதேகூறின் (ii) ஆம் உட்கூறில் சுட்டப்பட்டுள்ள செயல் எதற்கும் தண்டனை விதிப்பதற்கு வகைசெய்வதான சட்டம் எதுவும், நாடாளுமன்றத்தினால் மாற்றமோ நீக்கறவோ திருத்தமோ செய்யப்படும் வரையில், அதைப் பொறுத்து 372 ஆம் உறுப்பின்படி கூறப்படும் வரையுரைகளுக்கும் அதில் செய்யப்படும் தழுவமைவுகள், மாற்றமைவுகள் எவற்றுக்கும் உட்பட்டு, தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வரும்.

விளக்கம்.—இந்த உறுப்பில், "செல்லாற்றலிலுள்ள சட்டம்" என்னும் சொற்றொடர், 372 ஆம் உறுப்பில் கூறப்பட்டுள்ள அதே பொருளை உடையதாகும்.

பகுதி IV

அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள்

36. பொருள்வரையறை:

இந்தப் பகுதியில், தறுவாயின் தேவை வேறானாலன்றி, "அரசு" என்பது, III ஆம் பகுதியில் கூறப்பட்டுள்ள அதே பொருளை உடையதாகும்.

37. இந்தப் பகுதியில் அடங்கியுள்ள கோட்பாடுகளைப் பயன்படுத்துதல்:

இந்தப் பகுதியில் அடங்கியுள்ள வகையங்கள் நீதிமன்றம் எதனாலும் செயலுறுத்தப்படுவன அல்ல; ஆயினும், இதில் விதிக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் நாட்டின் ஆட்சிநெறிக்கு அடிப்படையாக அமையும்; மேலும், சட்டங்கள் இயற்றுகையில் இந்தக் கோட்பாடுகளைப் பயன்படுத்துவது அரசின் கடமை ஆகும்.

38. மக்கள் நலப்பாட்டை வளர்க்கும் வகையில், சமுதாய முறையமைவினை எய்திடுமாறு அரசு செய்தல் வேண்டும்:

(1) அரசு, தேசியவாழ்வின் அமைவனங்கள் அனைத்திலும் சமுதாய, பொருளியல், அரசியல் நீதி நிறைந்து நிலவுவதான ஒரு சமுதாய முறையமைவினைப் பயனுற எய்திப் பாதுகாத்து, மக்களின் நலப்பாட்டை வளர்த்திட அரிதின் முயலுதல் வேண்டும்.

(2) அரசு, தனிமனிதர்களுக்கு இடையே மட்டுமன்றி வெவ்வேறு பகுதிகளில் வாழ்கின்ற அல்லது வெவ்வேறு வாழ்க்கைத் தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள் பிரிவினருக்கிடையே, குறிப்பாக, வருமானத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை இயன்ற அளவு குறைப்பதற்கு அரிதின் முயல்வதோடு, அவர்களிடையே சமுதாயப்படிநிலை, வளவசதிகள், வாய்ப்பு நலன்கள் ஆகியவற்றிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதற்கும் முனைந்து முயலுதல் வேண்டும்.

39. அரசு பின்பற்ற வேண்டிய குறித்தசில கொள்கைக் கோட்பாடுகள் :

குறிப்பாக, பின்வருவனவற்றை எய்திடுமாறு அரசு தன் கொள்கையை நெறிப்படுத்துதல் வேண்டும்—

(அ) குடிமக்கள், ஆண்களும் பெண்களும் சரிநிகராக, வாழ்க்கைக்குப் போதுமான வழிவகைக்கு உரிமை உடையவராதல்;

(ஆ) பொதுமக்கள் நலன்களுக்கு நனிசிறக்க உதவும் வகையில், சமுதாயத்தின் பொருள்வளங்கள் மீதான சொத்துரிமையினையும் கட்டாள்கையினையும் பகிர்ந்தளித்தல்;

(இ) பொருளியல் முறைமையின் செயற்பாட்டினால், செல்வவளமும் உற்பத்திச் சாதனங்களும், பொது நலனுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் ஒரு சிலரிடம் குவிந்துவிடாது இருத்தல்;

(ஈ) ஆண், பெண் இருபாலாரும் ஒத்த வேலைக்கு ஒத்த சம்பளம் பெறுதல்;

(உ) ஆண், பெண் உழைப்பாளர்களின் உடல்நலம், உடல்வலிவு, சிறார்களின் இளம்பருவம் இவற்றை நெறிதவறிப் பயன்படுத்தாமை; மேலும், பொருளியல் தேவையுறுத்தம் காரணமாகக் குடிமக்கள் தங்கள் வயதுக்கோ உடல் வலிவுக்கோ பொருந்தாத பிழைப்புப்பாடுகளில் ஈடுபடுமாறு இறுக்கப்படாமை;

(ஊ) நலஞ்சார் முறையிலும் சுதந்திரமும் கண்ணியமும் நிலவும் சூழ்நிலைகளிலும் வளர்ச்சியுறுவதற்கான வாய்ப்புநலன்களும் வளவசதிகளும் சிறார்கள் பெறுமாறு செய்தல்; மேலும், பிறர் நலனுக்காகக் குழந்தைப் பருவத்தினரும் இளமைப் பருவத்தினரும் கருவிகளாக்கப்படுவதினின்றும், ஒழுக்கமும் உயிர்வாழ் வசதியும் அற்றுப்போகுமாறு கைவிடப்படுவதினின்றும் பாதுகாத்தல்.

39அ. சமநீதியும் இலவசச் சட்ட உதவியும் :

சமவாய்ப்பின் அடிப்படையில் நீதி ஓங்குமாறு சட்டமுறையமைவு செயற்படுவதை அரசு உறுதிசெய்தல் வேண்டும்; மேலும், குறிப்பாக, குடிமகன் எவரும் நீதியைப் பெறுவதில் பொருளியல் அல்லது பிற ஏலாமைகள் காரணமாக அவருக்கு வாய்ப்பு நலன்கள் மறுக்கப்படாமலிருப்பதை உறுதிசெய்யும் வகையில் அரசு, தகுந்த சட்டமியற்றல் அல்லது செயல்திட்டங்கள் வழியாகவோ பிற வழியாகவோ இலவசச் சட்ட உதவி அளித்தல் வேண்டும்.

40. ஊராட்சி மன்றங்களை அமைத்தல் :

அரசு, ஊராட்சி மன்றங்களை அமைப்பதற்கும், தன்னாட்சி அமைப்புக் கூறுகளாக அவை இயங்குவதற்குத் தேவைப்படும் அதிகாரங்களையும் அதிகாரஅடைவையும் அவற்றுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

41. வேலை, கல்வி, குறித்தசில நேர்வுகளில் பொதுநல உதவி ஆகியவற்றைப் பெறுவதற்கான உரிமை :

அரசு, தன் பொருளியல் திறனுக்கும் வளர்ச்சிக்கும் அடங்கியவாறு, வேலைபெறுதல், கல்வி பெறுதல், மேலும், வேலையின்மை, முதுமை, பிணி, உடல் ஊனம் ஆகிய நேர்வுகளிலும், பிற தகாத வறுமைநேர்வுகளிலும் பொதுநல உதவி பெறுதல் இவற்றுக்கான உரிமையினை எய்திடுவதற்குப் பயனுறு ஏற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும்.

42. இசைவானதும் இதமானதுமான வேலைச் சூழல்களுக்கும், பேறுகால உதவிக்கும் ஏற்பாடு செய்தல் :

அரசு, இசைவானதும் இதமானதுமான வேலைச் சூழல்களை எய்திடவும் பேறுகால உதவி கிடைக்கவும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

43. தொழிலாளர்களுக்கு வாழ்வுக்கேற்ற கூலி முதலியன :

வேளாண்மை, விசைத்தொழில் அல்லது பிறவகைத் தொழிலாளர் அனைவரையும், வேலை, வாழ்வுக்கேற்ற கூலி, சீர்மையான வாழ்க்கைத்தரத்தையும் ஒய்வுநேரத்தை நிறைவுற நுகர்தலையும் உறுதியாக அளிக்கும் வேலைச்சூழல்கள், சமுதாய, பண்பாட்டு வாய்ப்பு நலன்கள் ஆகியவற்றை எய்திடச் செய்வதற்கு, தகுந்த சட்டமியற்றல் அல்லது பொருளியல் அமைப்பு வழியாகவோ, பிற வழியாகவோ அரசு முனைந்து முயலுதல் வேண்டும், குறிப்பாக, அரசு, ஊரகப் பகுதிகளில் தனிமனித அல்லது கூட்டுறவு அடிப்படையில் குடிசைத்தொழில்களை வளர்ப்பதற்கு முனைந்து முயலுதல்வேண்டும்.

43அ. விசைத்தொழில்களின் மேலாண்மையில் தொழிலாளர்கள் பங்கேற்றல் :

விசைத்தொழில் எதிலும் ஈடுபட்டுள்ள ஏற்பமைவுகள், நிறுவனங்கள், பிற அமைப்புகள் இவற்றின் மேலாண்மையில் தொழிலாளர்கள் பங்கேற்பதை எய்திடச் செய்வதற்கு தகுந்த சட்டமியற்றல் வழியாகவோ பிற வழியாகவோ அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்வேண்டும்.

44. குடிமக்களுக்கு ஒரே சீரான உரிமையியல் தொகுப்புச்சட்டம் :

குடிமக்கள் அனைவரும், இந்திய ஆட்சிநிலவரை எங்கணும், ஒரே சீரான உரிமையியல் தொகுப்புச்சட்டத்தினை எய்திடச் செய்வதற்கு அரசு முனைந்து முயலுதல் வேண்டும்.

[1][45. ஆறு வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு குழந்தைப்பருவ நிலையில் கவனிப்பும் கல்வியும் அளிக்க ஏற்பாடு செய்தல் :

சிறார்கள் அனைவருக்கும், அவர்களுக்கு ஆறு வயது முடியும்வரை, குழந்தைப்பருவ நிலையில் கவனிப்பும், கல்வியும் அளிக்க ஏற்பாடு செய்வதற்கு அரசு முனைந்து முயலுதல் வேண்டும்.]

46. பட்டியலில் கண்ட சாதியினர், பட்டியலில் கண்ட பழங்குடியினர், பிற நலிந்த பிரிவினர் ஆகியோரின் கல்வி, பொருளியல் நலன்களை வளர்த்தல் :

மக்களில் நலிந்த பிரிவினர், குறிப்பாக, பட்டியலில் கண்ட சாதியினர், பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஆகியோரின் கல்வி, பொருளியல் நலன்களை அரசு தனிப் பொறுப்புணர்வுடன் வளர்த்தல் வேண்டும். மேலும், சமுதாய அநீதியிலிருந்தும் அனைத்து வகைப்பட்ட சுரண்டல்களிலிருந்தும் அவர்களைப் பாதுகாத்தலும் வேண்டும்.

47. உணவுச்சத்தின் தரநிலை, வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை உயர்த்தவும் மக்களின் உடல்நலத்தை மேம்படுத்தவும் அரசிற்குற்ற கடமை :

மக்களின் உணவுச்சத்தின் தரநிலை, வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை உயர்த்துவதும், மக்களின் உடல்நலத்தை மேம்படுத்துவதும் தன்னுடைய தலையாய கடமைகளுள் அமைவன என்பதை அரசு கருத்திற்கொள்ளுதல் வேண்டும்; மேலும், குறிப்பாக, போதைதரும் குடிவகைகளையும் உடல்நலனுக்கு ஊறுவிளைவிக்கும் மருந்துப்பொருள்களையும் மருந்தாக அன்றி, உட்கொள்வதைத் தடை செய்வதற்கு அரசு முனைந்து முயலுதல் வேண்டும்.

48. வேளாண்மை, கால்நடை பேணுகை ஆகியவற்றின் அமைப்பு :

வேளாண்மை, கால்நடை பேணுகை ஆகியவற்றைத் தற்கால அறிவியல் முறைகளில் அமைப்பதற்கு அரசு முனைந்து முயலுதல் வேண்டும்; மேலும், குறிப்பாக, பசுக்கள், கன்றுகள், பிற கறவை மற்றும் இழுவைக் கால்நடை இனங்களைப் பேணிக்காப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அவற்றை வன்கொலை செய்வதைத் தடைசெய்வதற்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுதல் வேண்டும்.

---

[1] 2002 ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து ஆறாம் திருத்தம்)ச் சட்டத்தால் மாற்றாக அமைக்கப்பட்டது.

48அ. சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும் காடுகள், காடுவாழ் உயிரினங்கள் ஆகியவற்றைப் பேணிக் காத்தலும்.

அரசு, சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கும், நாட்டின் காடுகளையும் காடுவாழ் உயிரினங்களையும் காப்பணைவு செய்துவருவதற்கும் முனைந்து முயலுதல் வேண்டும்.

49. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச்சின்னங்கள், இடங்கள், பொருள்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல் :

தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததென நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தாலோ அதன் வழியாலோ விளம்பப்படும் கலை அல்லது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நினைவுச் சின்னம், இடம் அல்லது பொருள் எதனையும் கவர்ந்து செல்லல், உருக்குலைத்தல், அழித்தல், அகற்றுதல், அயலடைவு செய்தல், அல்லது ஏற்றுமதி செய்தல் இவற்றிலிருந்து பாதுகாப்பது அரசின் கடமைப்பாடாக இருத்தல் வேண்டும்.

50. ஆட்சித்துறையினின்றும் நீதித்துறையைப் பிரித்தல் :

அரசின் பொதுப் பணியங்களில் ஆட்சித்துறையினின்றும் நீதித் துறையினைத் தனியாகப் பிரிப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

51. பன்னாடுகளிடையே அமைதியையும் காப்புணர்வையும் வளர்த்தல் :

அரசு—

(அ) பன்னாடுகளிடையே அமைதியையும் காப்புணர்வையும் வளர்ப்பதற்கும்;

(ஆ) நாடுகளிடையே நேர்மையும் நன்மதிப்புணர்வும் தோய்ந்த உறவுகளைப் பேணுவதற்கும்;

(இ) ஒழுங்கமைவுள்ள மக்களினங்கள் தமக்குள் எழும் தொடர்புகளில் பன்னாட்டுச் சட்டத்தையும் உடன்படிக்கைக் கடமைப்பாடுகளையும் மதித்து நடப்பதைப் பேணி வளர்ப்பதற்கும்;

(ஈ) பன்னாடுகளிடையே எழும் பூசல்களுக்குப் பொதுவரின் தீர்ப்புவழி தீர்வு காண்பதை ஊக்குவிப்பதற்கும்

முனைந்து முயலுதல் வேண்டும்;

பகுதி IV-அ

அடிப்படைக் கடமைகள்

51அ. அடிப்படைக் கடமைகள் :

பின்வருவன இந்தியாவின் குடிமக்கள் ஒவ்வொருவரின் கடமைகள் ஆகும்—

(அ) அரசமைப்பு ஆவணத்திற்கு இணங்கி இயங்குதல்; மேலும், அதன் குறிக்கோள்கள், உறுப்பமைவுகள், நாட்டுக்கொடி, நாட்டுப்பண் இவற்றை மதித்து நடத்தல்;

(ஆ) நமது நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கு உணர்வூட்டிய உயர் குறிக்கோள்களைப் பேணிப் பின்பற்றுதல்;

(இ) இந்திய நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை ஓங்கச்செய்து ஓம்பிக்காத்தல்;

(ஈ) வேண்டுங்கால், நாட்டினைக் காத்தல்; மற்றும் நாட்டுப்பணி ஆற்றுதல்;

(உ) சமயம், மொழி மற்றும் வட்டார அல்லது வகுப்பு வேறுபாடுகளைக் கடந்து, இந்திய மக்கள் அனைவரிடையேயும் நல்லிணக்கத்தையும் பொது உடன்பிறப்புணர்வையும் பேணிவளர்த்தல்; மகளிர்தம் மாண்பிற்கு இழுக்காகும் பழக்கங்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலப்புருவான பண்பாட்டின் வளமார்ந்த மரபுச் செல்வத்தை மதித்துப் பாதுகாத்தல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் இவை உள்ளிட்ட இயற்கைச் சூழலை அழியாது காத்து வளர்த்தல்; உயிரினங்கள்பால் இரக்கங்காட்டுதல்;

(ஏ) அறிவியலார்ந்த உளப்பாங்கு, மனிதநேயம், ஆய்ந்து தெளிந்து சீர்திருத்தும் ஆர்வம் ஆகியவற்றை வளர்த்தல்;

(ஐ) பொதுச் சொத்தினைக் காப்பணைவுசெய்தல்; மேலும், வன்முறையினை முற்றாக ஒழித்தல்;

(ஒ) சலியாத முயற்சியிலும் சாதனையிலும் உயர்மிகு நிலைகளை நாடு இடையறாது மேன்மேலும் எய்தும் வகையில், தனிமனித மற்றும் கூட்டுச் செயலாண்மைத் துறைகள் அனைத்திலும் உயர்திறம் நோக்கி ஓயாது முயலுதல்;

[1][(ஓ) பெற்றோராக அல்லது காப்பாளராக இருக்கிற நிலையில், ஆறு முதல் பதினான்கு வயது வரையுள்ள தனது குழந்தைக்கு அல்லது நேர்விற்கேற்ப காப்பிலுள்ளவருக்குக் கல்விக்கான வாய்ப்புகளுக்கு ஏற்பாடு செய்தல்.]

பகுதி V

ஒன்றியம்

அத்தியாயம் I—ஆட்சித்துறை

குடியரசுத்தலைவரும் துணைத்தலைவரும்

52. இந்தியக் குடியரசுத்தலைவர்:

இந்தியக் குடியரசுத்தலைவர் என்று ஒருவர் இருப்பார்.

53. ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரம்:

(1) ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரம் குடியரசுத்தலைவரிடம் உற்றமைந்திருக்கும்; மேலும், அதை அவர் நேரடியாகவோ தமக்குக் கீழமைந்துள்ள பதவியாளர்கள் வழியாகவோ இந்த அரசமைப்புக்கு இணங்கச் செலுத்திவருவார்.

(2) மேலேகண்ட வகையத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, ஒன்றியத்துப் பாதுகாப்புப் படைகளின்மீதான உயர்தனி ஆணையதிகாரம் குடியரசுத்தலைவரிடம் உற்றமைந்திருக்கும்; மேலும், அதைச் செலுத்துவது சட்டத்தினால் ஒழுங்குறுத்தப்படும்.

(3) இந்த உறுப்பிலுள்ள எதுவும்—

(அ) நிலவுறும் சட்டம் ஒன்றினால் மாநிலம் ஒன்றன் அரசாங்கத்திற்கோ பிறவகை அதிகாரஅமைப்பிற்கோ வழங்கப்பட்ட பதவிப்பணிகள் எவற்றையும் குடியரசுத்தலைவருக்கு மாற்றுவதாகக் கொள்ளப்படுதல் ஆகாது; அல்லது

(ஆ) நாடாளுமன்றம் சட்டத்தினால், குடியரசுத்தலைவர் அல்லாத பிறவகை அதிகாரஅமைப்புகளுக்குப் பதவிப்பணிகளை வழங்குவதற்குத் தடையுறு ஆவதில்லை.

---

[1] 2002ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து ஆறாம் திருத்தச்) சட்டத்தால் புகுத்தப்பட்டது.

54. குடியரசுத்தலைவரைத் தேர்ந்தெடுத்தல்:

குடியரசுத்தலைவர்—

(அ) நாடாளுமன்ற ஈரவைகளிலுமுள்ள தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களையும்,

(ஆ) மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களையும்

கொண்ட வாக்காளர் குழாத்தின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் பெறுவார்.

[1][விளக்கம்.—இந்த உறுப்பிலும் 55ஆம் உறுப்பிலும் "மாநிலம்" என்பது, தில்லி தேசியத்தலைநகர் ஆட்சிநிலவரையையும் பாண்டிச்சேரி ஒன்றியத்து ஆட்சி நிலவரையையும் உள்ளடக்கும்.]

55. குடியரசுத்தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை:

(1) குடியரசுத்தலைவர் தேர்தலில் பல்வேறு மாநிலங்களுக்குள்ள சார்பாற்றத்தின் விகிதப்பாடு இயலுமளவு ஒருபடித்தாக இருத்தல் வேண்டும்.

(2) மாநிலங்களுக்கு இடையே அத்தகைய ஒருபடித்தான நிலை, அத்துடன் மாநிலங்கள் அனைத்திற்கும் ஒன்றியத்திற்கும் இடையே சரிசமநிலை என்ற இவற்றை எய்திடும் பொருட்டு, நாடாளுமன்றத்திற்கும் மாநிலம் ஒவ்வொன்றின் சட்டமன்றப் பேரவைக்கும் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர் ஒவ்வொருவரும், அத்தேர்தலில் எத்தனை வாக்குகள் அளிப்பதற்கு உரிமை கொண்டவர் என்பதைப் பின்வரும் முறையில் தீர்மானித்தல் வேண்டும்:—

(அ) ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும், அந்த மாநிலத்தின் மக்கள் தொகையை அச்சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுத்திட வரும் ஈவுஎண்ணில் எத்தனை ஆயிரங்கள் உள்ளனவோ அத்தனை வாக்குகள் உண்டு;

(ஆ) மேற்சொன்ன அத்தனை ஆயிரங்கள் போக, எஞ்சிய எண்ணிக்கை ஐந்நூற்றுக்குக் குறையாமல் இருக்குமாயின், அப்போது (அ) உட்கூறில் சுட்டப்பட்டுள்ள உறுப்பினர் ஒவ்வொருவருக்குமுள்ள வாக்கு எண்ணிக்கையுடன் மேலும் ஒரெண்ணைச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்;

(இ) நாடாளுமன்ற ஈரவைகள் ஒவ்வொன்றுக்கும் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும், (அ), (ஆ) ஆகிய உட்கூறுகளின்படி மாநிலச் சட்டமன்றப் பேரவைகளின் உறுப்பினர்களுக்குக் குறித்தளிக்கப்பட்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கையை, நாடாளுமன்ற அவைகள் இரண்டிற்கும் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுத்து, அதில் அரைக்கு மேற்பட்ட பின்னங்களை ஒன்று எனக் கொண்டும், பிற பின்னங்களைத் தள்ளியும் கணக்கிட்டால் எத்தனை வாக்குகள் வருமோ அத்தனை வாக்குகள் உண்டு.

(3) குடியரசுத்தலைவரின் தேர்தல், ஒற்றை மாற்று வாக்கு வழியிலான வீதச்சார்பாற்ற முறைக்கிணங்க நடத்தப்படுதல் வேண்டும்; மேலும், அத்தகைய தேர்தலில் வாக்களித்தல், மறைவான வாக்களிப்பு என்ற முறையில் இருத்தல் வேண்டும்.

விளக்கம்.—இந்த உறுப்பில் "மக்கள்தொகை" என்னும் சொல், தொகைவிவரங்கள் கண்டறிந்து வெளியிடப்பட்டுள்ள கடைசிமுறை மக்கள் கணக்கெடுப்பின்படியாகும் மக்கள்தொகை என்று பொருள்படும்:

---

[1] 1992ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபதாம் திருத்தச்) சட்டத்தின் 2ஆம் பிரிவினால் (1–6–1995 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

வரம்புரையாக: இந்த விளக்கத்தில், தொகை விவரங்கள் வெளியிடப்பட்டுள்ள கடைசிமுறை மக்கள்கணக்கெடுப்பு என்பது, [1][2026]ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதலாவதாக எடுக்கப்படும் மக்கள் கணக்கெடுப்பின்படியாகும் தொகை விவரங்கள் வெளியிடப்படும் வரையில், 1971ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பைச் சுட்டுவதாகவே பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

56. குடியரசுத்தலைவரின் பதவிக்காலம் :

(1) குடியரசுத்தலைவர், தாம் பதவி ஏற்கும் தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்குப் பதவி வகிப்பார் :

வரம்புரையாக:

(அ) குடியரசுத்தலைவர், தம் கையொப்பமிட்டு குடியரசுத் துணைத்தலைவருக்கு எழுத்துவழித் தெரிவித்துத் தம் பதவியைவிட்டு விலகிக் கொள்ளலாம்;

(ஆ) இந்த அரசமைப்பை மீறிய நடத்தைக்காக, 61ஆம் உறுப்பில் வகைசெய்யப்பட்டுள்ள முறைப்படி குடியரசுத்தலைவர், அவையில் பழிசாட்டப்பட்டுப் பதவியிலிருந்து அகற்றப்படலாம்;

(இ) குடியரசுத்தலைவர், தம் பதவிக்காலம் கழிவுற்றாலுங்கூட, அவருக்கு அடுத்துவருபவர் பதவி ஏற்கும்வரையில் தொடர்ந்து பதவி வகித்துவருவார்.

(2). (1) ஆம் கூறின் வரம்புரையின் (அ) கூறின்படி, தமக்குத் தெரிவிக்கப்பட்ட பதவிவிலகலைக் குறித்து, குடியரசுத்துணைத்தலைவர், மக்களவைத் தலைவருக்கு உடனடியாகச் செய்தியனுப்புதல் வேண்டும்.

57. மீண்டும் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்கான தகுமை :

குடியரசுத்தலைவராகப் பதவி வகிக்கும் அல்லது வகித்திருந்த ஒருவர், இந்த அரசமைப்பின் பிற வகையங்களுக்கு உட்பட்டு, மீண்டும் அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்குத் தகுமையுடையவர் ஆவார்.

58. குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்கான தகுதிப்பாடுகள் :

(1) ஒருவர்—

(அ) இந்தியாவின் குடிமகனாகவும்,

(ஆ) முப்பத்தைந்து வயது முடிந்தவராகவும்,

(இ) மக்களவையின் ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெறுவதற்கான தகுதிப்பாடுடையவராகவும்

இருந்தாலன்றி, அவர் குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெறுவதற்கான தகுமையுடையவர் ஆகார்.

(2) ஒருவர், இந்திய அரசாங்கத்தின் அல்லது மாநில அரசாங்கம் ஒன்றன் கீழோ அவற்றில் ஒன்றன் கட்டாள்கைக்கு உட்பட்டிருக்கிற உள்ளாட்சி அல்லது பிறவகை அதிகார அமைப்பின்கீழோ ஊதியப்பதவி எதனையும் வகிப்பாராயின், அவர் குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்கான தகுமையுடையவர் ஆகார்.

விளக்கம்.—இந்த உறுப்பினைப் பொறுத்தவரை, ஒருவர் ஒன்றியத்தின் குடியரசுத்தலைவராகவோ துணைத்தலைவராகவோ மாநிலம் ஒன்றன் ஆளுநராகவோ ஒன்றியத்தின் அல்லது மாநிலம் ஒன்றன் அமைச்சராகவோ இருக்கிறார் என்னும் காரணத்தினால் மட்டுமே, அவர் ஊதியப்பதவி ஒன்றை வகிப்பவராகக் கொள்ளப்பெறுதல் ஆகாது.

---

[1] 2001 ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து நான்காம் திருத்தம்)ச் சட்டத்தால் (21–2–2002 முதல் செல்திறம் பெறுமாறு) மாற்றாக அமைக்கப்பட்டது.

59. குடியரசுத்தலைவரின் பதவிக்கான வரைமுறைகள் :

(1) குடியரசுத்தலைவர் நாடாளுமன்ற ஈரவைகளில் எதிலுமோ மாநிலம் ஒன்றன் சட்டமன்ற அவை ஒன்றிலோ உறுப்பினராக இருத்தல் ஆகாது; மேலும், நாடாளுமன்ற ஈரவைகளில் ஒன்றன் அல்லது மாநிலச் சட்டமன்ற அவை ஒன்றன் உறுப்பினராகவுள்ள ஒருவர் குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெறுவாராயின், அவர் குடியரசுத்தலைவராகப் பதவி ஏற்கும் தேதியன்று அந்த அவையிலுள்ள தம் பதவியிடத்தை விட்டகன்றவராகக் கொள்ளப்பெறுவார்.

(2) குடியரசுத்தலைவர் பிற ஊதியப்பதவி எதனையும் வகித்தல் ஆகாது.

(3) குடியரசுத்தலைவர், தம் பதவிக்குரிய உறைவிடங்களில் வாடகை ஏதுமின்றி உறைவதற்கு உரிமைகொண்டவர் ஆவார்; நாடாளுமன்றம் சட்டத்தினால் தீர்மானிக்கும் பதவியூதியங்கள், படித்தொகைகள், மதிப்புரிமைகள் ஆகியவற்றிற்கும் அவர் உரிமைகொண்டவர் ஆவார்; அவ்வாறு அதன் பொருட்டு வகைசெய்யப்படும் வரையிலும், இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதவியூதியங்கள், படித்தொகைகள், மதிப்புரிமைகள் ஆகியவற்றிற்கு அவர் உரிமைகொண்டவர் ஆவார்.

4) குடியரசுத்தலைவருக்குற்ற பதவியூதியங்களையும் படித்தொகைகளையும், அவருடைய பதவிக்காலத்தின்போது குறைத்துவிடுதல் ஆகாது.

60. குடியரசுத்தலைவருக்குற்ற ஆணைமொழி அல்லது உறுதிமொழி :

குடியரசுத்தலைவர் ஒவ்வொருவரும், குடியரசுத்தலைவராகச் செயலுறும் அல்லது குடியரசுத்தலைவருக்குற்ற பதவிப்பணிகளை ஆற்றிவரும் ஒவ்வொருவரும், தாம் பதவி ஏற்பதற்கு முன்பு, இந்தியத் தலைமை நீதிபதியின் முன்னிலையில் அல்லது அவர் இல்லாதபோது, அங்கிருக்கும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளில் மிக்க முதுநிலையரான ஒருவரின் முன்னிலையில், ஓர் ஆணை மொழியை அல்லது உறுதிமொழியைப் பின்வரும் சொன்முறையில் உள்ளபடி ஏற்றுக் கையொப்பமிடுதல் வேண்டும்; அதாவது—

"அ,ஆ, ஆகிய நான், உண்மையான பற்றுடன் இந்தியக் குடியரசுத்தலைவரின் பதவிப்பொறுப்பை நிறைவேற்றி வருவதோடு (அல்லது இந்தியக் குடியரசுத்தலைவருக்குற்ற பதவிப்பணிகளை ஆற்றிவருவதோடு) அரசமைப்பு முறையினையும் சட்ட நெறியினையும் என் முழுத்திறன்கொண்டு புரந்தும் பேணியும் புறங்காத்தும் நிற்பேன் என்றும், இந்திய மக்களின் நற்பணிக்கும் நல்வாழ்வுக்கும் முற்றுமாக என்னை நான் ஆட்படுத்திக்கொள்வேன் என்றும் கடவுளை முன்னிறுத்தி ஆணை மொழிகின்றேன்,"
உள்ளார்ந்து உறுதி மொழிகின்றேன்."

61. குடியரசுத்தலைவர் மீது அவையில் பழி சாட்டுவதற்கான நெறிமுறை:

(1) இந்த அரசமைப்பை மீறிய நடத்தைக்காக குடியரசுத்தலைவர் மீது அவையில் பழிசாட்டப்படுவதாயின், அதற்கான குற்றச்சார்த்து, நாடாளுமன்றத்தின் ஈரவைகளில் ஒன்றினால் கொணரப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய குற்றச்சார்த்து கொணரப்படவேண்டுமெனில்—

(அ) அக்குற்றச்சார்த்தினைக் கொணரவிருக்கும் செயற்குறிப்பு, ஒரு தீர்மானத்தின் வடிவில் இருத்தல் வேண்டும்; அந்த அவையின் மொத்த உறுப்பினர்களில் நான்கிலொரு பங்கிற்குக் குறையாதோர் அத்தீர்மானத்தை முன்மொழியவிருப்பதாகவுள்ள தங்கள் கருத்தினைத் தெரிவித்து, கையொப்பமிட்டு எழுத்துவழிப் பதினான்கு நாட்களுக்குக் குறையாமல் முன்னறிவிப்பு கொடுத்ததற்குப் பின்னர், அத்தீர்மானம் முன்மொழியப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்,

(ஆ) அத்தீர்மானம் அந்த அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட்டிருத்தலும் வேண்டும்.

(3) நாடாளுமன்ற ஈரவைகளில் ஒன்றினால் ஒரு குற்றச்சார்த்து அவ்வாறு கொணரப்பட்டிருக்குமாயின், மறு அவை அந்தக் குற்றச்சார்த்தினை ஆய்வு செய்தலோ செய்வித்தலோ வேண்டும்; மேலும், அத்தகைய ஆய்வின்போது, குடியரசுத்தலைவர் தாமே நேரில் வருவதற்கும் சார்பாற்றுநரை வைத்துக்கொள்வதற்கும் உரிமையுடையவர் ஆவார்.

(4) அந்த ஆய்வின் விளைவாக, குடியரசுத்தலைவர்மீது கொணரப்பட்ட அக்குற்றச்சார்த்து மெய்ப்பிக்கப்பட்டுள்ளது என விளம்பும் தீர்மானம் ஒன்றை, அக்குற்றச்சார்த்தினை ஆய்வு செய்த அல்லது செய்வித்த அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையினர் நிறைவேற்றினால், அத்தீர்மானம் அவ்வாறு நிறைவேற்றப்படும் தேதியிலிருந்து குடியரசுத்தலைவரை அவர்தம் பதவியிலிருந்து அகற்றிய செல்திறம் உடையது ஆகும்.

62. குடியரசுத்தலைவரின் பதவி காலியிடமாகும் போது அதை நிரப்புவதற்காகத் தேர்தல் நடத்த வேண்டிய காலமும் இடைநேர்வான காலியிடத்தை நிரப்புவதற்காகத் தேர்ந்தெடுக்கப் பெறுபவரின் பதவிக்காலமும் :

(1) குடியரசுத்தலைவரின் பதவிக்காலம் கழிவுறுவதால் ஏற்படும் காலியிடத்தை நிரப்புவதற்கான தேர்தலை, அந்தக் காலம் கழிவுறுவதற்கு முன்பே நடத்தி முடித்தல் வேண்டும்.

(2) குடியரசுத்தலைவரின் இறப்பு, பதவிவிலகல் அல்லது பதவியகற்றுகை காரணத்தினாலோ பிறவாறாகவோ அவருடைய பதவி காலியிடமாகுமானால், அதை நிரப்புவதற்கான தேர்தல், அது காலியான தேதிக்குப் பின்பு, இயன்ற அளவு விரைவிலும், எந்நேர்விலும் அந்தத் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிற்படாமலும் நடத்தப்படுதல் வேண்டும்; மேலும், அந்தக் காலியிடத்தை நிரப்புவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பெறுபவர், 56ஆம் உறுப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, அவர் பதவி ஏற்கும் தேதியிலிருந்து முழுப் பதவிக்காலமாகிய ஐந்தாண்டுகள் பதவி வகிப்பதற்கு உரிமைகொண்டவர் ஆவார்.

63. இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் :

இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் என்று ஒருவர் இருப்பார்.

64. குடியரசுத் துணைத்தலைவர் மாநிலங்களவைக்குப் பதவிவழித் தலைவராக இருப்பார் :

குடியரசுத் துணைத்தலைவர் மாநிலங்களவைக்குப் பதவிவழித் தலைவராக இருப்பார்; அவர் பிற ஊதியப்பதவி எதனையும் வகித்தல் ஆகாது :

வரம்புரையாக: குடியரசுத் துணைத்தலைவர் 65 ஆம் உறுப்பின்படி குடியரசுத்தலைவராகச் செயலுறும்போதும், குடியரசுத்தலைவரின் பதவிப் பணிகளை ஆற்றிவரும்போதும் மாநிலங்களவையின் தலைவர் பதவிக்குற்ற கடமைகளைப் புரிதல் ஆகாது; மேலும், 97 ஆம் உறுப்பின்படி மாநிலங்களவையின் தலைவருக்கு வழங்கத்தக்க வரையூதியம் அல்லது படித்தொகை எதற்கும் அவர் உரிமை கொண்டவர் ஆகார்.

65. குடியரசுத்தலைவரின் பதவி இடைநேர்வாகக் காலியிடமாகும்போது அல்லது அவர் இல்லாதபோது குடியரசுத் துணைத்தலைவர், குடியரசுத்தலைவராகச் செயலுறுவார் அல்லது அவருடைய பதவிப் பணிகளை ஆற்றி வருவார் :

(1) குடியரசுத்தலைவரின் இறப்பு, பதவிவிலகல் அல்லது பதவியகற்றுகை காரணத்தினாலோ பிறவாறாகவோ அவருடைய பதவி காலியிடமாகுமானால், இந்த அத்தியாயத்தின் வகையங்களுக்கு இணங்க, அத்தகைய காலியிடத்தை நிரப்புவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பெறும் ஒரு புதிய குடியரசுத்தலைவர் தம் பதவியை ஏற்கும் தேதி வரையிலும், குடியரசுத் துணைத்தலைவர், குடியரசுத்தலைவராகச் செயலுறுவார்.

(2) குடியரசுத்தலைவர், தம் இருத்தலின்மை, நோய் அல்லது பிற காரணம் எதனாலும் தம் பதவிப்பணிகளை ஆற்ற இயலாதபோது, அவர் தம் கடமைகளை மீண்டும் மேற்கொள்ளும் தேதி வரையிலும், அவருடைய பதவிப்பணிகளைக் குடியரசுத் துணைத்தலைவர் ஆற்றி வருவார்.

(3) அவ்வாறு குடியரசுத்தலைவராகச் செயலுறும்போதும், குடியரசுத்தலைவருடைய பதவிப்பணிகளை ஆற்றிவரும்போதும், அக்காலஅளவைப் பொறுத்தும், குடியரசுத்தலைவருக்குள்ள அனைத்து அதிகாரங்களையும் காப்புரிமைகளையும் குடியரசுத் துணைத்தலைவர் உடையவர் ஆவார்; மேலும், நாடாளுமன்றம் சட்டத்தினால் தீர்மானிக்கும் பதவியூதியங்கள்; படித்தொகைகள், மதிப்புரிமைகள் ஆகியவற்றிற்கு உரிமைகொண்டவர் ஆவார்; அவ்வாறு அதன்பொருட்டு வகைசெய்யப்படும் வரையிலும், இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதவியூதியங்கள், படித்தொகைகள், மதிப்புரிமைகள் ஆகியவற்றிற்கு அவர் உரிமைகொண்டவர் ஆவார்.

66. குடியரசுத் துணைத்தலைவரைத் தேர்ந்தெடுத்தல் :

(1) குடியரசுத் துணைத்தலைவர், நாடாளுமன்ற ஈரவைகளிலுமுள்ள உறுப்பினர்களைக் கொண்ட வாக்காளர் குழாத்தின் உறுப்பினர்களால் ஒற்றை மாற்று வாக்கு வழியிலான வீதச்சார்பாற்ற முறைக்கிணங்க தேர்ந்தெடுக்கப் பெறுவார்; மேலும், அத்தகைய தேர்தலில் வாக்களித்தல், மறைவான வாக்களிப்பு என்ற முறையில் இருத்தல் வேண்டும்.

(2) குடியரசுத் துணைத்தலைவர் நாடாளுமன்ற ஈரவைகளில் எதிலுமோ மாநிலம் ஒன்றின் சட்டமன்ற அவை ஒன்றிலோ உறுப்பினராக இருத்தல் ஆகாது; மேலும், நாடாளுமன்ற ஈரவைகளில் ஒன்றன் அல்லது மாநிலச் சட்டமன்ற அவை ஒன்றன் உறுப்பினராகவுள்ள ஒருவர் குடியரசுத் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெறுவாராயின், அவர் குடியரசுத் துணைத்தலைவராகப் பதவி ஏற்கும் தேதியன்று அந்த அவையிலுள்ள தம் பதவியிடத்தை விட்டகன்றவராகக் கொள்ளப்பெறுவார்.

(3) ஒருவர்—

(அ) இந்தியாவின் குடிமகனாகவும்,

(ஆ) முப்பத்தைந்து வயது முடிந்தவராகவும்,

(இ) மாநிலங்களவையின் ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்கான தகுதிப்பாடுடையவராகவும்

இருந்தாலன்றி, அவர் குடியரசுத் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்கான தகுமையுடையவர் ஆகார்.

(4) ஒருவர், இந்திய அரசாங்கத்தின் அல்லது மாநில அரசாங்கம் ஒன்றின் கீழோ அவற்றில் ஒன்றின் கட்டாள்கைக்கு உட்பட்டிருக்கிற உள்ளாட்சி அல்லது பிறவகை அதிகாரஅமைப்பின் கீழோ ஊதியப்பதவி எதனையும் வகிப்பாராயின், அவர் குடியரசுத் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்கான தகுமையுடையவர் ஆகார்.

விளக்கம்.—இந்த உறுப்பினைப் பொறுத்தவரை, ஒருவர் ஒன்றியத்தின் குடியரசுத்தலைவராகவோ துணைத்தலைவராகவோ மாநிலம் ஒன்றின் ஆளுநராகவோ ஒன்றியத்தின் அல்லது மாநிலம் ஒன்றின் அமைச்சராகவோ இருக்கிறார் என்னும் காரணத்தினால் மட்டுமே அவர் ஊதியப்பதவி ஒன்றை வகிப்பவராகக் கொள்ளப்பெறுதல் ஆகாது.

67. குடியரசுத் துணைத்தலைவரின் பதவிக்காலம் :

குடியரசுத் துணைத்தலைவர், தாம் பதவி ஏற்கும் தேதியிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்குப் பதவி வகிப்பார்:

வரம்புரையாக:

(அ) குடியரசுத் துணைத்தலைவர், தம் கையொப்பமிட்டு குடியரசுத்தலைவருக்கு எழுத்துவழித் தெரிவித்துத் தம் பதவியைவிட்டு விலகிக்கொள்ளலாம்;

(ஆ) குடியரசுத்துணைத்தலைவர், மாநிலங்களவையின் அப்போதைய அனைத்து உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட்டு. மக்களவையாலும் ஏற்றுக்கொள்ளப்படும் தீர்மானம் ஒன்றினால் அவருடைய பதவியிலிருந்து அகற்றப்படலாம்; ஆனால் இந்தக் கூறினைப் பொறுத்தவரை அத்தகைய தீர்மானம் எதுவும், அதை முன்மொழியவிருக்கும் கருத்தினைத் தெரிவித்துப் பதினான்கு நாட்களுக்குக் குறையாமல் முன்னறிவிப்பு கொடுத்திருந்தாலன்றி, முன்மொழியப்படுதல் ஆகாது;

(இ) குடியரசுத் துணைத்தலைவர், தம் பதவிக்காலம் கழிவுற்றாலுங்கூட, அவருக்கு அடுத்துவருபவர் பதவி ஏற்கும் வரையிலும் தொடர்ந்து பதவி வகித்துவருவார்.

68. குடியரசுத் துணைத்தலைவரின் பதவி காலியிடமாகும்போது அதை நிரப்புவதற்காகத் தேர்தல் நடத்த வேண்டிய காலமும் இடைநேர்வான காலியிடத்தை நிரப்புவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பெறுபவரின் பதவிக்காலமும்:

(1) குடியரசுத் துணைத்தலைவரின் பதவிக் காலம் கழிவுறுவதால் ஏற்படும் காலியிடத்தை நிரப்புவதற்கான தேர்தலை, அந்தக் காலம் கழிவுறுவதற்கு முன்பே நடத்தி முடித்தல் வேண்டும்.

(2) குடியரசுத் துணைத்தலைவரின் இறப்பு, பதவிவிலகல் அல்லது பதவியகற்றுகை காரணத்தினாலோ பிறவாறாகவோ அவருடைய பதவி காலியிடமாகுமானால், அதை நிரப்புவதற்கான தேர்தல், அது காலியான பின்பு இயன்ற அளவு விரைவில் நடத்தப்படுதல் வேண்டும்; மேலும், அந்தக் காலியிடத்தை நிரப்புவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பெறுபவர், 67 ஆம் உறுப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, அவர் பதவி ஏற்கும் தேதியிலிருந்து முழுப் பதவிக்காலமாகிய ஐந்தாண்டுகள் பதவி வகிப்பதற்கு உரிமை கொண்டவர் ஆவார்.

69. குடியரசுத் துணைத்தலைவருக்குற்ற ஆணைமொழி அல்லது உறுதிமொழி :

குடியரசுத் துணைத்தலைவர் ஒவ்வொருவரும், தாம் பதவி ஏற்பதற்கு முன்பு, குடியரசுத்தலைவரின் அல்லது அவரால் அதன்பொருட்டு அமர்த்தப்பெறும் ஒருவரின் முன்னிலையில் ஓர் ஆணைமொழியை அல்லது உறுதிமொழியைப் பின்வரும் சொன்முறையில் உள்ளபடி ஏற்றுக் கையொப்பமிடுதல் வேண்டும்; அதாவது—

"அ, ஆ, ஆகிய நான், சட்டமுறையில் அமைவுறு இந்திய அரசமைப்பின்பால் உண்மையான நம்பிக்கையும் பற்றும் பூண்டிருப்பேன் என்றும், நான் ஏற்கவுள்ள கடமையினை அகத்தூய்மையோடு ஆற்றுவேன் என்றும் கடவுளை முன்னிறுத்தி ஆணைமொழிகின்றேன்" / உள்ளார்ந்து உறுதிமொழிகின்றேன்."

70. பிற எதிருறு நிகழ்வுகளில் குடியரசுத்தலைவரின் பதவிப்பணிகளை ஆற்றி வருதல் :

இந்த அத்தியாயத்தில் வகைசெய்யப்பட்டிராத எதிருறு நிகழ்வு எதிலும் குடியரசுத்தலைவரின் பதவிப்பணிகளை ஆற்றிவருவதற்கு நாடாளுமன்றம் தான் தக்கதெனக் கருதுகிற ஏற்பாட்டினைச் செய்யலாம்.

71. குடியரசுத்தலைவரை அல்லது குடியரசுத் துணைத்தலைவரைத் தேர்ந்தெடுத்தல் பற்றிய அல்லது அதன் தொடர்பான பொருட்பாடுகள் :

(1) குடியரசுத்தலைவரை அல்லது குடியரசுத் துணைத்தலைவரைத் தேர்ந்தெடுத்தல் பற்றியோ அதன் தொடர்பாகவோ எழும் அனைத்து ஐயப்பாடுகளையும் எதிர்வழக்குகளையும், உச்ச நீதிமன்றம் விசாரித்து முடிவு செய்யும்; அதன் முடிவே அறுதியானது ஆகும்.

(2) குடியரசுத்தலைவராகவோ குடியரசுத் துணைத்தலைவராகவோ ஒருவரைத் தேர்ந்தெடுத்தது இல்லாநிலையது ஆகும் என உச்ச நீதிமன்றம் விளம்புமாயின், உச்ச நீதிமன்றம் அவ்வாறு முடிபு கூறிய தேதியன்றோ அதற்கு முன்போ, குடியரசுத்தலைவரின் அல்லது குடியரசுத் துணைத் தலைவரின் பதவிக்குற்ற அதிகாரங்களைச் செலுத்தும் வகையிலும் கடமைகளைப் புரியும் வகையிலும் அவர் செய்த செயல்கள், அந்த விளம்புகையினால் செல்லாதவை ஆவதில்லை.

(3) இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, குடியரசுத்தலைவரையோ குடியரசுத் துணைத்தலைவரையோ தேர்ந்தெடுத்தல் பற்றிய அல்லது அதன் தொடர்பான பொருட்பாடு எதனையும், நாடாளுமன்றம் சட்டத்தினால் ஒழுங்குறுத்தலாம்.

(4) குடியரசுத்தலைவராகவோ குடியரசுத் துணைத்தலைவராகவோ ஒருவர் தேர்ந்தெடுக்கப்பெற்றதை, அவரைத் தேர்ந்தெடுத்த வாக்காளர் குழாத்து உறுப்பினர்களிடையே ஏதோ ஒரு காரணத்தால் காலியிடம் எதுவும் இருந்தது என்பதை ஆதாரமாகக் கொண்டு எதிர்த்து வாதிடுதல் ஆகாது.

72. குறித்தசில நேர்வுகளில் குற்றமன்னிப்புகள் முதலியன அளிப்பதற்கும் மற்றும் தீர்ப்புத்தண்டனைகளைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கு, இறுத்தல்செய்வதற்கு அல்லது மாற்றிக்குறைப்பதற்கும் குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரம் :

(1) (அ) படைத்துறையாட்சி நீதிமன்றத்தால் தண்டனை அல்லது தீர்ப்புத்தண்டனை விதிக்கப்படுகிற அனைத்து நேர்வுகளிலும்—

(ஆ) ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரம் அளாவும் ஒரு பொருட்பாடு பற்றிய சட்டத்திற்கு எதிரான ஒரு குற்றச்செயலுக்காகத் தண்டனை அல்லது தீர்ப்புத்தண்டனை விதிக்கப்படுகிற அனைத்து நேர்வுகளிலும்,

(இ) தீர்ப்புத்தண்டனை, மரணதண்டனையாகவுள்ள அனைத்து நேர்வுகளிலும்

ஒரு குற்றச்செயலுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவரின் தண்டனை பொறுத்து குற்றமன்னிப்புகள் அளிக்கவும், தண்டனையை நிறுத்திவைக்கவும் அதை நிறைவேற்றுவதைத் தள்ளிவைக்கவும் அல்லது எஞ்சிய தண்டனையை இறுத்தல்செய்யும் அல்லது தீர்ப்புத்தண்டனையைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க, இறுத்தல்செய்ய அல்லது மாற்றிக்குறைக்கவும் குடியரசுத்தலைவர் அதிகாரம் உடையவர் ஆவார்.

(2). (1)ஆம் கூறின் (அ) உட்கூறிலுள்ள எதுவும், படைத்துறையாட்சி நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட ஒரு தீர்ப்புத்தண்டனையைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கோ இறுத்தல்செய்வதற்கோ மாற்றிக் குறைப்பதற்கோ ஒன்றியத்தின் ஆயுதப்படைகளின் அலுவலர் எவருக்கும் சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பாதிப்பதில்லை.

(3). (1)ஆம் கூறின் (இ) உட்கூறிலுள்ள எதுவும், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் ஒரு மரணதண்டனையைத் தற்காலிகமாக நிறுத்திவைக்க, இறுத்தல்செய்ய அல்லது மாற்றிக்குறைக்க மாநில ஆளுநர் ஒருவர் செலுத்தத்தக்க அதிகாரத்தைப் பாதிப்பதில்லை.

73. ஒன்றியத்து ஆட்சி அதிகாரத்தின் அளாவுகை:

(1) இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு—

(அ) சட்டங்களை இயற்றுவதற்கு நாடாளுமன்றம் அதிகாரம் கொண்டுள்ள பொருட்பாடுகளையும்,

(ஆ) உடன்படிக்கை அல்லது உடன்பாடு ஒன்றன் காரணமாக இந்திய அரசாங்கம் செலுத்துவதாகும் உரிமைகள், பெற்ற அதிகாரம், உற்ற அதிகாரம் ஆகியவற்றைச் செலுத்துவதையும் ஒன்றியத்து ஆட்சி அதிகாரம் அளாவி நிற்கும்;

வரம்புரையாக: (அ) உட்கூறில் சுட்டப்பட்ட ஆட்சி அதிகாரமானது, இந்த அரசமைப்பிலோ நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் ஒன்றிலோ தெரிநிலையாக வகைசெய்யப்பட்டிருந்தால் அன்றி, சட்டங்கள் இயற்றுவதற்கு ஒரு மாநிலச் சட்டமன்றமும் அதிகாரம் கொண்டுள்ள பொருட்பாடுகளைப் பொறுத்து, அந்த மாநிலத்தில் அளாவி நிற்றல் ஆகாது.

(2) இந்த உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், நாடாளுமன்றத்தால் பிறவாறு வகை செய்யப்படும் வரையில் ஒரு மாநிலமும் அந்த மாநிலத்தின் அலுவலர் எவரும் அல்லது அதிகார அமைப்பு எதுவும் அந்த மாநிலத்திற்காகச் சட்டங்கள் இயற்ற நாடாளுமன்றம் அதிகாரம் கொண்டுள்ள பொருட்பாடுகளைப் பொறுத்து இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு செலுத்தக்கூடியதாக இருந்த ஆட்சி அதிகாரத்தையோ பதவிப்பணிகளையோ அந்த மாநிலம் அல்லது அதன் அலுவலர் அல்லது அதிகார அமைப்பு தொடர்ந்து செலுத்தி வரலாம்.

அமைச்சரவை

74. குடியரசுத்தலைவருக்கு அமைச்சரவை உறுதுணையாக இருத்தலும் தேர்வுரை வழங்குதலும் :

(1) குடியரசுத்தலைவருக்கு உறுதுணையாக இருப்பதற்கும் தேர்வுரை வழங்குவதற்கும் தலைமை அமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை ஒன்று இருத்தல் வேண்டும்; குடியரசுத்தலைவர் தம் பதவிப்பணிகளை ஆற்றுகையில் அத்தகைய தேர்வுரைக்கு இணங்கச் செயலுறுதல் வேண்டும் :

வரம்புரையாக: குடியரசுத்தலைவர் அத்தகைய தேர்வுரையைப் பொதுவாக அல்லது பிறவாறு மறுபடியும் ஓர்வுசெய்யுமாறு அமைச்சரவையை வேண்டுறுத்தலாம்; அத்தகைய மறுஓர்வுக்குப் பின்பு வழங்கப்படும் தேர்வுரைக்கு இணங்கக் குடியரசுத்தலைவர் செயலுறுதல் வேண்டும்.

(2) குடியரசுத்தலைவருக்கு அமைச்சர்கள் தேர்வுரை எதுவும் வழங்கினார்களா, அவ்வாறாயின் அது யாது என்பது பற்றி நீதிமன்றம் எதிலும் விசாரிக்கப்படுதல் ஆகாது.

75. அமைச்சர்களைப் பற்றிய பிற வகையங்கள்:

(1) தலைமை அமைச்சர், குடியரசுத்தலைவரால் பதவியில் அமர்த்தப்பெறுவார்; பிற அமைச்சர்கள், தலைமை அமைச்சரின் தேர்வுரையின்படி குடியரசுத்தலைவரால் பதவியில் அமர்த்தப்பெறுவர்.

[1][(1அ) அமைச்சரவையில் தலைமை அமைச்சர் உள்ளடங்கலான அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை, மக்களவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் பதினைந்து விழுக்காட்டிற்கு மேற்படுதல் ஆகாது.

(1ஆ) பத்தாம் இணைப்புப்பட்டியலின் 2ஆம் பத்தியின்படி நாடாளுமன்ற அவையின் ஓர் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதிக்கேடுற்றவராக இருக்கிற அரசியல் கட்சி எதனையும் சார்ந்த அந்த அவை ஏதொன்றின் உறுப்பினர் ஒருவர் அவர் அவ்வாறு தகுதிக்கேடுற்ற தேதியிலிருந்து தொடங்கி, அத்தகைய உறுப்பினராக அவரது பதவிக் காலஅளவு முடிவடைகிற தேதி வரையுள்ள காலஅளவு வரையில் அல்லது அந்தக் காலஅளவு முடிவடைவதற்கு முன்பு நாடாளுமன்ற அவைகளில் ஏதாவது ஒன்றின் தேர்தல் எதிலும் அவர் போட்டியிடுகிறவிடத்து, அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக விளம்பப்படுகிற தேதி வரையில், இவற்றில் எது முந்தியதோ அதுவரையில், (1)ஆம் கூறின்படி அமைச்சராக அமர்த்தப்படுவதற்கும் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.]

(2) அமைச்சர்கள், குடியரசுத்தலைவர் விழையுமளவும் பதவி வகிப்பர்.

(3) அமைச்சரவை, மக்களவைக்குக் கூட்டுப் பொறுப்புடையதாக இருக்கும்.

(4) அமைச்சர் ஒருவர் தம் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு, குடியரசுத்தலைவர், அவரைப் பதவியும் மறைகாப்பும் பற்றிய ஆணைமொழிகளை மூன்றாம் இணைப்புப்பட்டியலில் அதற்கென உள்ள சொன்முறைகளுக்கு இணங்க ஏற்கச்செய்தல் வேண்டும்.

---

[1] 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஒன்றாம் திருத்தம்)ச் சட்டத்தின் 2ஆம் பிரிவால் (1-1-2004 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

(5) அமைச்சர் ஒருவர், நாடாளுமன்ற ஈரவைகளில் எதிலும் தொடர்ச்சியான ஏதேனுமோர் ஆறுமாதக் காலஅளவிற்கு உறுப்பினராக இல்லாவிடில், அந்தக் காலஅளவு கழிவுற்றதும் தம் அமைச்சர் பதவியை இழந்தவர் ஆவார்.

(6) அமைச்சர்களின் வரையூதியங்களும் படித்தொகைகளும் நாடாளுமன்றம் அவ்வப்போது சட்டத்தினால் தீர்மானிக்கிறவாறு இருக்கும்; நாடாளுமன்றம் அவ்வாறு தீர்மானிக்கிற வரையில், அவை இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு இருந்துவரும்.

இந்தியாவின் தலைமை வழக்கறிஞர்

76. இந்தியாவின் தலைமை வழக்கறிஞர்:

(1) குடியரசுத்தலைவர், உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக அமர்த்தப் பெறுவதற்குத் தகுதிப்பாடுடைய ஒருவரை இந்தியாவின் தலைமை வழக்கறிஞராக அமர்த்துவார்.

(2) குடியரசுத்தலைவரால், அவ்வப்போது குறித்தனுப்பப்படும் சட்டப்பொருட்பாடுகளைப் பொறுத்து இந்திய அரசாங்கத்திற்கு ஆய்வுரை அளிப்பதும், அவரால் தமக்குக் குறித்தளிக்கப்படும் சட்டப்பாங்குடைய பிற கடமைகளைப் புரிவதும், இந்த அரசமைப்பினாலோ அதன் வழியாலோ அல்லது நிகழுறுகாலத்தில் செல்லாற்றலிலுள்ள பிற சட்டத்தாலோ அதன் வழியாலோ தமக்கு வழங்கப்படும் பதவிப்பணிகளை ஆற்றுவதும் தலைமை வழக்கறிஞரின் கடமை ஆகும்.

(3) தலைமை வழக்கறிஞர், தம் கடமைகளைப் புரிகையில், இந்திய ஆட்சிநிலவரையிலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் வாதிடும் உரிமை உடையவர் ஆவார்.

(4) தலைமை வழக்கறிஞர், குடியரசுத்தலைவர் விழையுமளவும் பதவி வகிப்பார்; குடியரசுத்தலைவர் தீர்மானிக்கும் பணியூதியத்தைப் பெறுவார்.

அரசாங்க அலுவல் நடத்துமுறை

77. இந்திய அரசாங்கத்தின் அலுவல் நடத்துமுறை:

(1) இந்திய அரசாங்கத்தின் ஆட்சித்துறை நடவடிக்கைகள் அனைத்தும், குடியரசுத்தலைவரின் பதவிப்பெயரால் எடுக்கப்படுவதாக இயம்பப்பெறுதல் வேண்டும்.

(2) குடியரசுத்தலைவரின் பதவிப்பெயரால் பிறப்பிக்கப்படும் ஆணைகளும் ஆக்கப்படும் முறையாவணங்களும், குடியரசுத்தலைவர் வகுக்கும் விதிகளில் குறித்துரைக்கப்படும் முறையில் உறுதிச்சான்றிடப்படுதல் வேண்டும்; அவ்வாறு உறுதிச்சான்றிடப்பட்ட ஆணை அல்லது முறையாவணம் குடியரசுத்தலைவரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது ஆக்கப்பட்ட முறையாவணம் அன்று என்னும் காரணங்காட்டி, அதன் செல்லுந்தன்மையை எதிர்த்து வாதிடுதல் ஆகாது.

(3) குடியரசுத்தலைவர், இந்திய அரசாங்கத்தின் அலுவல்கள் மேலும் இசைவுற நடைபெறுவதற்காகவும், அந்த அலுவல்களை அமைச்சர்களிடையே பகிர்ந்தொதுக்குவதற்காகவும் விதிகளை வகுப்பார்.

78. குடியரசுத்தலைவருக்குத் தகவல் தருவது முதலியவை பொறுத்து தலைமை அமைச்சருக்குள்ள கடமைகள்:

பின்வருவன தலைமை அமைச்சரின் கடமைகள் ஆகும்—

(அ) ஒன்றியத்து அலுவல் நடவடிக்கைகளை நிருவகித்தல் தொடர்பாக அமைச்சரவையின் முடிபுகள் மற்றும் சட்டமியற்றுவதற்கான செயற் குறிப்புகள் அனைத்தையும் குடியரசுத்தலைவருக்குத் தெரிவித்தல்;

(ஆ) ஒன்றியத்து அலுவல் நடவடிக்கைகளை நிருவகித்தல் மற்றும் சட்டமியற்றுவதற்கான செயற்குறிப்புகள் தொடர்பாக குடியரசுத்தலைவர் கேட்டனுப்பும் தகவலைத் தருதல்; மற்றும்

(இ) ஓர் அமைச்சரால் முடிபு எடுக்கப்பட்டு, ஆனால் அமைச்சரவையால் ஒர்வுசெய்யப்பட்டிராத பொருட்பாடு எதனையும், ஓர்வுக்காக அமைச்சரவையின் முன்வைக்குமாறு குடியரசுத்தலைவர் வேண்டுறுத்துவாராயின், அவ்வாறு செய்தல்.

அத்தியாயம் II—நாடாளுமன்றம்

பொதுவியல்

79. நாடாளுமன்றத்தின் அமைப்பு :

ஒன்றியத்திற்கென நாடாளுமன்றம் ஒன்று இருக்கும்; அது, குடியரசுத்தலைவரையும் மாநிலங்களவை, மக்களவை எனப்படும் இரண்டு அவைகளையும் கொண்டதாக இருக்கும்.

80. மாநிலங்களவையின் கட்டமைப்பு :

(1) மாநிலங்களவை—

(அ). (3) ஆம் கூறின் வகையங்களுக்கு இணங்க, குடியரசுத்தலைவரால் நியமனம் செய்யப்பெறும் உறுப்பினர்கள் பன்னிருவரையும்,

(ஆ) மாநிலங்கள், ஒன்றியத்து ஆட்சிநிலவரைகள் இவற்றின் சார்பாற்றுநர்களாக இருநூற்று முப்பத்தெட்டுக்கு மேற்படாதவர்களையும்

கொண்டதாக இருக்கும்.

(2) மாநிலங்கள், ஒன்றியத்து ஆட்சிநிலவரைகள் இவற்றின் சார்பாற்றுநர்களால் மாநிலங்களவையில் நிரப்பப்பட வேண்டிய பதவியிடங்களைப் பகிர்ந்தொதுக்குதல், நான்காம் இணைப்புப்பட்டியலில் இதற்கென வகை செய்யப்பட்டுள்ளவாறு இருக்கும்.

(3).(1) ஆம் கூறின் (அ) உட்கூறின்படி குடியரசுத்தலைவரால் நியமனம்செய்யப்பெறும் உறுப்பினர்கள், பின்வருவன போன்ற பொருட்பாடுகளைப் பொறுத்துச் சிறந்த தனியறிவோ செயலுறுபட்றிவோ உடையவர்களாக இருத்தல் வேண்டும்:—

இலக்கியம், அறிவியல், கலை மற்றும் சமுதாயப் பணி.

(4) மாநிலங்களவையிலுள்ள ஒவ்வொரு மாநிலத்தின் சார்பாற்றுநர்களும், அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையின் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களால் ஒற்றைமாற்று வாக்குவழியிலான வீதச்சார்பாற்ற முறைக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பெறுவர்.

(5) மாநிலங்களவையிலுள்ள ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளின் சார்பாற்றுநர்கள், நாடாளுமன்றம் சட்டத்தினால் வகுத்துரைக்கும் முறையில் தெரிந்தெடுக்கப்பெறுவர்.

81. மக்களவையின் கட்டமைப்பு:

(1). 331 ஆம் உறுப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, மக்களவை—

(அ) மாநிலங்களிலுள்ள நிலவரைத்தேர்தல் தொகுதிகளிலிருந்து நேரடித் தேர்தல் வாயிலாகத் தெரிந்தெடுக்கப்பெறும் ஐந்நூற்று முப்பதுக்கு மேற்படாத உறுப்பினர்களையும்,

(ஆ) ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளின் சார்பாற்றத்திற்காக நாடாளுமன்றம், சட்டத்தின் வழி, வகைசெய்யும் முறையில் தெரிந்தெடுக்கப்பெறும் இருபதுக்கு மேற்படாத உறுப்பினர்களையும்

கொண்டதாக இருக்கும்.

(2). (1) ஆம் கூறின் (அ) உட்கூறினைப் பொறுத்தவரை—

(அ) ஒவ்வொரு மாநிலத்திற்கும் மக்களவையில் பகிர்ந்தொதுக்கப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கைக்கும் அந்தந்த மாநிலத்தின் மக்கள்தொகைக்கும் உள்ள விகிதம், இயலுமளவு, மாநிலங்கள் அனைத்திற்கும் ஒருபடித்தாய் இருக்கும் வண்ணம், மாநிலம் ஒவ்வொன்றுக்கும் மக்களவையில் பதவியிடங்கள் பகிர்ந்தொதுக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) மாநிலத்தின் தேர்தல்தொகுதி ஒவ்வொன்றின் மக்கள்தொகைக்கும், அதற்குப் பகிர்ந்தொதுக்கப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம், இயலுமளவு, மாநிலம் எங்கணும் ஒருபடித்தாய் இருக்கும் வண்ணம், மாநிலம் ஒவ்வொன்றும் நிலவரைத்தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்படுதல் வேண்டும் :

வரம்புரையாக: மக்களவையில் எந்த மாநிலத்திற்கும், பதவியிடங்களைப் பகிர்ந்தொதுக்குதல் பொருட்டு அந்த மாநிலத்தின் மக்கள் தொகை அறுபது இலட்சத்துக்கு மேற்படாதிருக்கும் வரையில், இந்தக் கூறின் (அ) உட்கூறின் வகையங்கள் பொருந்துறுதல் ஆகாது.

(3) இந்த உறுப்பில், "மக்கள்தொகை" என்னும் சொல், தொகை விவரங்கள் கண்டறிந்து வெளியிடப்பட்டுள்ள கடைசிமுறை மக்கள் கணக்கெடுப்பின்படியாகும் மக்கள்தொகை என்று பொருள்படும்:

வரம்புரையாக: இந்தக் கூறில், தொகை விவரங்கள் வெளியிடப்பட்டுள்ள கடைசிமுறை மக்கள் கணக்கெடுப்பு என்பது [1][2026] ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதலாவதாக எடுக்கப்படும் மக்கள் கணக்கெடுப்பின்படியாகும் தொகைவிவரங்கள், வெளியிடப்படும் வரையில்,—

[1][(i) (2) ஆம் கூறின் (அ) உட்கூறின் நோக்கங்களுக்காகவும், அந்தக் கூறின் வரம்புரையின் நோக்கத்திற்காகவும், 1971ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பைச் சுட்டுவதாகப் பொருள்கொள்ளப்படும், மற்றும்

(ii) (2) ஆம் கூறின் (ஆ) உட்கூறின் நோக்கங்களுக்காக [2][2001] ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பைச் சுட்டுவதாகப் பொருள்கொள்ளப்படும்.]

82. ஒவ்வொரு முறையும் மக்கள் கணக்கெடுப்பிற்குப் பின்பு மறுநேரமைவு செய்தல் :

ஒவ்வொரு முறையும் மக்கள் கணக்கெடுப்பு முடிவடைவதன் மேல், மக்களவையில், மாநிலங்களுக்குப் பதவியிடங்களைப் பகிர்ந்தொதுக்குதலும், மாநிலம் ஒவ்வொன்றையும் நிலவரைத் தேர்தல் தொகுதிகளாகப் பிரித்தலும் நாடாளுமன்றம் சட்டத்தினால் தீர்மானிக்கும்அதிகாரஅமைப்பாலும் முறையிலும் மறுநேரமைவு செய்யப்படுதல்வேண்டும்.

வரம்புரையாக: அத்தகைய மறுநேரமைவு, அப்போது நிலவுறும் மக்களவை கலைக்கப்படும் வரையில், மக்களவையிலுள்ள சார்பாற்றத்தைப் பாதிக்காது :

---

[1] 2001ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து நான்காம் திருத்தச்) சட்டத்தால் (21–2–2002 முதல் செல்திறம் பெறுமாறு மாற்றாக அமைக்கப்பட்டது.

[2] 2003ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து ஏழாம் திருத்தச்) சட்டத்தால் (22–6–2003 முதல் செல்திறம் பெறுமாறு மாற்றாக அமைக்கப்பட்டது.

மேலும் வரம்புரையாக : அத்தகைய மறுநேரமைவு, குடியரசுத்தலைவர் ஆணையின்வழி, குறித்துரைக்கும் தேதியிலிருந்து செல்திறம் பெறும், அத்தகைய மறுநேரமைவு செல்திறம் பெறும் வரையில், அந்த அவைக்கான தேர்தல் எதுவும், அத்தகைய மறுநேரமைவுக்கு முன்பு நிலவிய நிலவரைத் தேர்தல் தொகுதிகளின் அடிப்படையில் நடத்தப்படலாம்.

இன்னும் வரம்புரையாக: [1][2026] ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதலாவதாக எடுக்கப்படும் மக்கள் கணக்கெடுப்பின்படியாகும்.

மக்கள் தொகை விவரங்கள் வெளியிடப்படும் வரையில்—

[1][(i) 1971ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி மறுநேரமைவு செய்யப்பட்டவாறு, மாநிலங்களுக்கு மக்களவையில் பதவியிடங்கள் பகிர்ந்தொதுக்குவதையும்,

(ii) [2][2001] ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி மறுநேரமைவு செய்யப்படலாகிறவாறு, மாநிலம் ஒவ்வொன்றையும் நிலவரைத்தேர்தல் தொகுதிகளாகப் பிரிப்பதையும்

இந்த உறுப்பின்படி மறுநேரமைவு செய்யவேண்டிய தேவையில்லை.]

83. நாடாளுமன்ற அவைகளின் காலவரை :

(1) மாநிலங்களவை கலைப்புக்கு உள்ளாவதில்லை; ஆனால், நாடாளுமன்றம் சட்டத்தினால் இதன்பொருட்டு வகுக்கும் வகையங்களுக்கு இணங்க ஒவ்வோர் இரண்டாம் ஆண்டும் கழிவுறுவதன் மேல், கூடியவிரைவில், அந்த அவையின் உறுப்பினர்களில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் விலகிவிடுதல் வேண்டும்.

(2) மக்களவை, அது முன்னதாகவே கலைக்கப்பட்டாலன்றி, அதன் முதல்கூட்டத்திற்காகக் குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகள் தொடர்ந்து இருக்கும்; அதற்குமேல் நீடித்தல் ஆகாது. மேற்சொன்ன ஐந்தாண்டுக் காலஅளவு கழிவுறுங்கால், அந்த அவை கலைக்கப்பட்டதாக ஆகிவிடும்:

வரம்புரையாக: நெருக்கடிநிலைச் சாற்றாணை ஒன்று செயற்பாட்டில் இருக்குங்கால், மேற்சொன்ன காலஅளவை, ஒரு தடவையில் ஓர் ஆண்டுக்கு மேற்படாமலும், எந்நேர்விலும், அந்தச் சாற்றாணை செயற்பாடு அற்றுப்போன பின்பு ஆறுமாதக் காலஅளவிற்கு மேற்படாமலும், நாடாளுமன்றம் சட்டத்தினால் நீட்டிக்கலாம்.

84. நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கான தகுதிப்பாடு :

ஒருவர்—

(அ) இந்தியாவின் குடிமகனாக இருக்கிறார் என்பதுடன், தேர்தல் ஆணையத்தால் அதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பெற்றுள்ள ஒருவர் முன்னிலையில், மூன்றாம் இணைப்புப்பட்டியலில் உள்ள சொன்முறைக்கிணங்க ஓர் ஆணைமொழியை அல்லது உறுதிமொழியை ஏற்றுக் கையொப்பமிட்டவராகவும்,

(ஆ) மாநிலங்களவையிலுள்ள பதவியிடமாக இருப்பின் முப்பது வயதிற்குக் குறையாதவராகவும், மக்களவையிலுள்ள பதவியிடமாக இருப்பின் இருபத்தைந்து வயதிற்குக் குறையாதவராகவும்,

(இ) நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்தாலோ அதன் வழியாலோ அதன்பொருட்டு வகுத்துரைக்கப்படும் பிற தகுதிப்பாடுகளை உடையவராகவும்

இருந்தாலன்றி, அவர் நாடாளுமன்றப் பதவியிடம் ஒன்றில் அமர்வதற்கெனத் தெரிந்தெடுக்கப் பெறுவதற்குத் தகுதிப்பாடு உடையவர் ஆகார்.

---

[1] 2001 ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து நான்காம் திருத்தச்) சட்டத்தால் 21–2–2002 முதல் செல்திறம் பெறுமாறு மாற்றாக அமைக்கப்பட்டது.

[2] 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து ஏழாம் திருத்தச்) சட்டத்தால் 22–6–2003 முதல் செல்திறம் பெறுமாறு மாற்றாக அமைக்கப்பட்டது.

85. நாடாளுமன்றக் கூட்டத்தொடர்கள், அக்கூட்டத்தொடர்களை இறுதி செய்தல் மற்றும் கலைத்தல் :

(1) குடியரசுத்தலைவர், தாம் தக்கதெனக் கருதும் காலத்திலும் இடத்திலும் கூடுமாறு அவ்வப்போது நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றுக்கும் அழைப்பாணை விடுப்பார்; ஆனால், ஒரு கூட்டத் தொடரின் கடைசி அமர்வுக்கும், அடுத்த கூட்டத்தொடரின் முதல் அமர்வுக்கெனக் குறிப்பிடப்படும் தேதிக்கும் இடையேயுள்ள காலஅளவு ஆறு மாதங்களுக்குக் குறைவாகவே இருத்தல் வேண்டும்.

(2) குடியரசுத்தலைவர், அவ்வப்போது—

(அ) ஈரவைகளின் அல்லது ஈரவைகளில் ஒன்றின் கூட்டத்தொடரினை இறுதிசெய்யலாம்;

(ஆ) மக்களவையைக் கலைத்துவிடலாம்.

86. நாடாளுமன்ற அவைகளில் உரையாற்றவும் அவற்றிற்குச் செய்தியுரை அனுப்பவும் குடியரசுத்தலைவருக்குள்ள உரிமை :

(1) குடியரசுத்தலைவர் நாடாளுமன்ற ஈரவைகளில் ஒன்றில் அல்லது ஈரவைகளின் ஒருங்கமர் கூட்டத்தில் உரையாற்றலாம்; மேலும், அதற்காக உறுப்பினர்களின் வருகையை வேண்டுறுத்தலாம்.

(2) குடியரசுத்தலைவர், நாடாளுமன்றத்தில் அப்போது ஓர்விலுள்ள ஒரு சட்டமுன்வடிவைப் பொறுத்தோ பிற எதனையும் பொறுத்தோ நாடாளுமன்றத்தின் ஈரவைகளில் எதற்கும் செய்தியுரை அனுப்பலாம்; அவ்வாறான செய்தியுரையினைப் பெற்றுள்ள அவை, அச்செய்தியுரையில் ஓர்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென வேண்டுறுத்தப்பட்ட பொருட்பாட்டை ஒல்லும் விரைவுடன் ஓர்வுசெய்தல் வேண்டும்.

87. குடியரசுத்தலைவரின் சிறப்புரை :

(1) மக்களவைக்கான பொதுத்தேர்தல் ஒவ்வொன்றுக்கும் பின்பு நடைபெறும் முதல் கூட்டத்தொடரின் தொடக்கத்திலும், ஒவ்வோர் ஆண்டின் முதல் கூட்டத்தொடரின் தொடக்கத்திலும், நாடாளுமன்ற ஈரவைகளின் ஒருங்கமர் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் உரையாற்றி, அதனைக் கூட்டியதற்கான காரணங்களையும் நாடாளுமன்றத்திற்குத் தெரிவிப்பார்.

(2) அவ்வுரையில் சுட்டப்பட்ட பொருட்பாடுகளைப் பற்றி விவாதம் செய்வதற்கு நேரம் ஒதுக்குவதற்காக, ஈரவைகளின் நெறிமுறையை ஒழுங்குறுத்தும்விதிகளின் வழி வகைசெய்யப்படுதல் வேண்டும்.

88. நாடாளுமன்ற அவைகள் தொடர்பாக அமைச்சர்களுக்கும் தலைமை வழக்கறிஞருக்கும் உள்ள உரிமைகள் :

அமைச்சர் ஒவ்வொருவரும், இந்தியத் தலைமை வழக்கறிஞரும், ஈரவைகளில் எதிலும் அல்லது அவைகளின் கூட்டு அமர்வு எதிலும் அல்லது தாம் உறுப்பினராகக் குறிக்கப்பெறும் நாடாளுமன்றக் குழு எதிலும் உரையாற்றவும் பிறவகையில் அதன் நடவடிக்கைகளில் பங்குகொள்ளவும் உரிமை உடையவர் ஆவார்; ஆனால், இந்த உறுப்பின் பயன்திறனை வைத்து அவர் வாக்களிக்கும் உரிமை கொண்டவர் ஆகார்.

நாடாளுமன்றப் பதவியாளர்கள்

89. மாநிலங்களவைத் தலைவரும், துணைத் தலைவரும் :

(1) இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் தம் பதவிவழியில் மாநிலங்களவைத் தலைவராக இருப்பார்.

(2) மாநிலங்களவை, அந்த அவையின் உறுப்பினர் ஒருவரை அதன் துணைத்தலைவராகக் கூடிய விரைவில் தெரிந்தெடுத்தல் வேண்டும்; மேலும், துணைத்தலைவர் பதவி காலியாகுந்தொறும் மற்றோர் உறுப்பினரை அதன் துணைத்தலைவராக அந்த அவை தெரிந்தெடுத்தல் வேண்டும்.

90. மாநிலங்களவைத் துணைத் தலைவர் பதவியை விட்டகலுதலும் பதவி விலகுதலும் பதவியிலிருந்து அகற்றப்படுதலும் :

மாநிலங்களவைத் துணைத் தலைவராகப் பதவி வகிக்கும் ஓர் உறுப்பினர்—

(அ) மாநிலங்களவையின் உறுப்பினராக இருப்பது அற்றுப் போய்விடின் அவர் தம் பதவியை விட்டகலுதல் வேண்டும்;

(ஆ) மாநிலங்களவைத் தலைவருக்குத் தம் கையொப்பமிட்டு எழுத்து வழித் தெரிவித்து, தம் பதவியை விட்டு விலகிக்கொள்ளலாம்; மற்றும்

(இ) மாநிலங்களவையின் அப்போதைய அனைத்து உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் அந்த அவையில் நிறைவேற்றும் தீர்மானம் ஒன்றினால் அவருடைய பதவியிலிருந்து அகற்றப்படலாம் :

வரம்புரையாக: (இ) கூறினைப் பொறுத்த தீர்மானம் எதுவும் அத்தீர்மானத்தை முன்மொழியவிருக்கும் கருத்தினைத் தெரிவித்துப் பதினான்கு நாட்களுக்குக் குறையாமல் முன்னறிவிப்புக் கொடுத்திருந்தாலன்றி, முன்மொழியப்படுதல் ஆகாது.

91. மாநிலங்களவைத் தலைவரின் பதவிக்குற்ற கடமைகளைப் புரிந்துவரவோ தலைவராகச் செயலுறவோ துணைத் தலைவருக்கு அல்லது பிற உறுப்பினருக்கு உள்ள அதிகாரம் :

(1) மாநிலங்களவைத் தலைவரின் பதவி காலியாக இருக்குங்கால் அல்லது குடியரசுத் துணைத் தலைவர் குடியரசுத்தலைவராகச் செயலுறும் காலத்தில் அல்லது குடியரசுத்தலைவரின் பதவிப்பணிகளை ஆற்றிவரும் காலத்தில், மாநிலங்களவைத் தலைவரின் பதவிக்குற்ற கடமைகளை, அவைத் துணைத் தலைவரும், அவைத் துணைத் தலைவர் பதவியும் காலியாக இருப்பின், குடியரசுத்தலைவர் அதன்பொருட்டு அமர்த்தும் மாநிலங்களவையின் உறுப்பினர் எவரும் புரிந்துவருதல் வேண்டும்.

(2) மாநிலங்களவையின் அமர்வு எதிலும் அவைத்தலைவர் இல்லாதபோது துணைத்தலைவரும், அவரும் இல்லாதிருப்பின், அவையின் நெறிமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்பெறும் உறுப்பினர் எவரும், அத்தகையவரும் இல்லாதிருப்பின், அவையினால் தீர்மானிக்கப்பெறும் பிற உறுப்பினர் எவரும் அவைத் தலைவராகச் செயலுறுதல்வேண்டும்.

92. மாநிலங்களவைத் தலைவரை அல்லது துணைத் தலைவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது அவர் தலைமை வகித்தல் ஆகாது :

(1) மாநிலங்களவையின் அமர்வு எதிலும், குடியரசுத் துணைத் தலைவரை, அவருடைய பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின் மீது ஓர்வு நிகழும்போது அவைத் தலைவரும் அல்லது துணைத் தலைவரை அவருடைய பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது துணைத் தலைவரும், அவர் அந்த அவையில் இருந்தபோதிலும், தலைமை வகித்தல் ஆகாது; மேலும், அத்தகைய ஒவ்வோர் அமர்வுக்கும், 91ஆம் உறுப்பின் (2)ஆம் கூறின் வகையங்கள், அவைத்தலைவர் அல்லது, நேர்வுக்கேற்ப, துணைத்தலைவர் இல்லாதிருக்கிற ஓர் அமர்வுக்குப் பொருந்துறுவனபோன்றே பொருந்துறுவன ஆகும்.

(2) மாநிலங்களவையில் குடியரசுத் துணைத் தலைவரை அவருடைய பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது, அவைத் தலைவர் அந்த அவையில் உரையாற்றுவதற்கும், பிற வகையில் அதன் நடவடிக்கைகளில் பங்குகொள்வதற்கும் உரிமை உடையவர் ஆவார்; மேலும், 100 ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், அவர் அத்தகைய தீர்மானத்தின் மீதும் அது தொடர்பான நடவடிக்கைகளில் எழும் பிற எந்தப் பொருட்பாட்டின் மீதும் எவ்வகையிலும் வாக்களிப்பதற்கு உரிமைகொண்டவர் ஆகார்.

93. மக்களவைத் தலைவரும் துணைத் தலைவரும் :

மக்களவை, அந்த அவையின் உறுப்பினர்கள் இருவரை முறையே அதன் தலைவராகவும் துணைத் தலைவராகவும், கூடியவிரைவில், தெரிந்தெடுத்தல் வேண்டும்; மேலும், அவைத் தலைவர் அல்லது துணைத் தலைவர் பதவி காலியாகுந்தொறும், மற்றோர் உறுப்பினரை, அதன் தலைவராக அல்லது, நேர்வுக்கேற்ப, துணைத் தலைவராக அந்த அவை தெரிந்தெடுத்தல் வேண்டும்.

94. மக்களவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் பதவியை விட்டகலுதலும் பதவி விலகுதலும் பதவியிலிருந்து அகற்றப்படுதலும் :

மக்களவைத் தலைவராகவோ துணைத் தலைவராகவோ பதவி வகிக்கும் ஓர் உறுப்பினர்—

(அ) மக்களவையின் உறுப்பினராக இருப்பது அற்றுப்போய்விடின், அவர் தம் பதவியை விட்டகலுதல் வேண்டும்;

(ஆ) அந்த உறுப்பினர் அவைத் தலைவராக இருப்பின், துணைத் தலைவருக்கும், அந்த உறுப்பினர் துணைத் தலைவராக இருப்பின், அவைத் தலைவருக்கும், எச்சமயத்திலும், தம் கையொப்பமிட்டு எழுத்துவழித் தெரிவித்து, தம் பதவியை விட்டு விலகிக் கொள்ளலாம்; மற்றும்

(இ) மக்களவையின் அப்போதைய அனைத்து உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் அந்த அவையில் நிறைவேற்றும் தீர்மானம் ஒன்றினால் அவருடைய பதவியிலிருந்து அகற்றப்படலாம்:

வரம்புரையாக: (இ) கூறினைப் பொறுத்த தீர்மானம் எதுவும், அத்தீர்மானத்தை முன்மொழியவிருக்கும் கருத்தினைத் தெரிவித்துப் பதினான்கு நாட்களுக்குக் குறையாமல் முன்னறிவிப்புக் கொடுத்திருந்தாலன்றி, முன்மொழியப்படுதல் ஆகாது:

மேலும் வரம்புரையாக: மக்களவை கலைக்கப்படுந்தோறும், அவ்வாறு கலைக்கப்பட்டதன் பின்பு, அடுத்து மக்களவையின் முதல் கூட்டம் தொடங்குவதை ஒட்டிமுன்பு வரையில், அவைத் தலைவர் தம் பதவியை விட்டகல வேண்டியதில்லை.

95. மக்களவைத் தலைவரின் பதவிக்குற்ற கடமைகளைப் புரிந்துவரவோ தலைவராகச் செயலுறவோ துணைத் தலைவருக்கு அல்லது பிற உறுப்பினருக்கு உள்ள அதிகாரம் :

(1) மக்களவைத் தலைவரின் பதவி காலியாக இருக்குங்கால், அப்பதவிக்குற்ற கடமைகளை, அவைத் துணைத் தலைவரும், அவைத் துணைத் தலைவர் பதவியும் காலியாக இருப்பின், குடியரசுத்தலைவர் அதன்பொருட்டு அமர்த்தும் மக்களவையின் உறுப்பினர் எவரும் புரிந்து வருதல்வேண்டும்.

(2) மக்களவையின் அமர்வு எதிலும், அவைத் தலைவர் இல்லாதபோது துணைத் தலைவரும், அவரும் இல்லாதிருப்பின், அவையின் நெறிமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்பெறும் உறுப்பினர் எவரும், அத்தகையவரும் இல்லாதிருப்பின், அந்த அவையினால் தீர்மானிக்கப்பெறும் பிற உறுப்பினர் எவரும் அவையின் தலைவராகச் செயலுறுதல் வேண்டும்.

96. மக்களவைத் தலைவரை அல்லது துணைத் தலைவரை பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது அவர் தலைமை வகித்தல் ஆகாது :

(1) மக்களவையில் அமர்வு எதிலும், அவைத் தலைவரை அவருடைய பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது, அவைத்தலைவரும் அல்லது துணைத் தலைவரை அவருடைய பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது துணைத் தலைவரும், அவர் அந்த அவையில் இருந்தபோதிலும், தலைமை வகித்தல் ஆகாது; மேலும், அத்தகைய ஒவ்வோர் அமர்வுக்கும், 95 ஆம் உறுப்பின் (2)ஆம் கூறின் வகையங்கள், அவைத் தலைவர் அல்லது, நேர்வுக்கேற்ப, துணைத் தலைவர் இல்லாதிருக்கிற ஓர் அமர்வுக்குப் பொருந்துறுவனபோன்றே பொருந்துறுவன ஆகும்.

(2) மக்களவையில், அவைத் தலைவரை அவருடைய பதவியிலிருந்து அகற்றுவதற்கான ஒரு தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது, அவைத் தலைவர் அந்த அவையில் உரையாற்றுவதற்கும், பிறவகையில் அதன் நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்கும் உரிமை உடையவர் ஆவார்; மேலும், 100ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், அவர் அத்தகைய தீர்மானத்தின் மீதும், அது தொடர்பான நடவடிக்கைகளில் எழும் பிற எந்தப் பொருட்பாட்டின்மீதும் முதற்கண் மட்டுமே வாக்களிப்பதற்கு உரிமைகொண்டவர் ஆவாரேயன்றி, வாக்குகள் சமன்மையாக அமையும் நேர்வில், வாக்களிப்பதற்கு உரிமை கொண்டவர் ஆகார்.

97. மாநிலங்களவைத் தலைவர், துணைத் தலைவர், மக்களவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோரின் வரையூதியங்களும், படித்தொகைகளும் :

மாநிலங்களவைத் தலைவர், துணைத் தலைவர், மக்களவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோருக்கு முறையே நாடாளுமன்றம் சட்டத்தினால் நிருணயிக்கும் வரையூதியங்களும் படித்தொகைகளும் வழங்கப்படும்; அவ்வாறு அதன்பொருட்டு வகைசெய்யப்படும் வரையில், இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையூதியங்களும் படித்தொகைகளும் வழங்கப்பட்டு வரும்.

98. நாடாளுமன்றத்தின் செயலகம் :

(1) நாடாளுமன்றத்தின் அவை ஒவ்வொன்றும் தனித்தனியே செயலகப் பணியாளர் தொகுதி ஒன்றைக் கொண்டிருக்கும்:

வரம்புரையாக: இந்தக் கூறிலுள்ள எதுவும், நாடாளுமன்றத்தின் ஈரவைகளுக்கும் பொதுவான பதவிகள் உருவாக்கப்படுவதைத் தடையூறு செய்வதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

(2) நாடாளுமன்ற ஈரவைகளில் எதனின் செயலகப் பணியாளர் தொகுதிக்கும் ஆளெடுப்பதையும், அதற்கு அமர்த்தப்பெறுபவர்களின் பணி வரைக்கட்டுகளையும் நாடாளுமன்றம் சட்டத்தினால் ஒழுங்குறுத்தலாம்.

(3) (2)ஆம் கூறின்படி நாடாளுமன்றம் வகைசெய்கிற வரையில், குடியரசுத்தலைவர், மக்களவைத் தலைவருடன் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலங்களவைத் தலைவருடன் கலந்தாய்வுசெய்த பின்பு, மக்களவையின் அல்லது மாநிலங்களவையின் செயலகப் பணியாளர் தொகுதிக்கு ஆளெடுப்பதையும் அதற்கு அமர்த்தப்பெறுபவர்களின் பணிவரைக்கட்டுகளையும் ஒழுங்குறுத்தும் விதிகளை வகுக்கலாம்; மற்றும் அவ்வாறு வகுக்கப்படும் விதிகள், மேற்சொன்ன கூறின்படி இயற்றப்படும் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டுச் செல்திறம் உடையன ஆகும்.

அலுவல் நடத்துமுறை

99. உறுப்பினர்களுக்குற்ற ஆணைமொழி அல்லது உறுதிமொழி :

நாடாளுமன்ற ஈரவைகளின் உறுப்பினர் ஒவ்வொருவரும், தம் பதவியினை ஏற்று அமரும் முன்பு, குடியரசுத்தலைவரின் அல்லது அதன்பொருட்டு அவரால் அமர்த்தப்பெற்ற ஒருவரின் முன்னிலையில் மூன்றாம் இணைப்புப் பட்டியலில் அதற்கென உள்ள சொன்முறையில் ஓர் ஆணைமொழியை அல்லது உறுதிமொழியை ஏற்றுக் கையொப்பமிடுதல் வேண்டும்.

100. நாடாளுமன்ற அவைகளில் வாக்களித்தல், காலியிடங்கள் இருந்தபோதிலும் செயலுறுவதற்கு அவைகளுக்குள்ள அதிகாரம் மற்றும் குறைவெண் :

(1) இந்த அரசமைப்பில் பிறவாறு வகைசெய்யப்பட்டிருப்பது நீங்கலாக, ஈரவைகளில் ஒன்றன் அமர்விலோ அவைகளின் கூட்டமர்விலோ எழும் வினாக்கள் அனைத்தும், மக்களவைத் தலைவரையும், மாநிலங்களவைத் தலைவராகவோ, மக்களவைத் தலைவராகவோ செயலுறுகின்றவரையும் தவிர்த்து, வந்திருந்து வாக்களிக்கும் ஏனைய உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

மாநிலங்களவைத் தலைவரோ, மக்களவைத் தலைவரோ, அல்லது அத்தகையவராகச் செயலுறுகின்றவரோ முதற்கண் வாக்களித்தல் ஆகாது; ஆனால், வாக்குகள் சமன்மையாக அமையும் நேர்வில், அவருக்கு அறுதிசெய் வாக்கு ஒன்று உண்டு; அதனை அவர் அளித்தலும் வேண்டும்.

(2) நாடாளுமன்ற ஈரவைகள் ஒவ்வொன்றிலும் உறுப்பினர் பதவியில் காலியிடம் எதுவும் இருந்தபோதிலும், அந்த அவை செயலுறுவதற்கு அதிகாரம் உடையது ஆகும்; மேலும், நாடாளுமன்ற நடவடிக்கைகளின்போது அவையில் அமர்ந்திருக்கவோ வாக்களிக்கவோ பிறவாறாகப் பங்குகொள்ளவோ உரிமை கொண்டிராத எவரும் அவ்வாறு செய்தார் எனத் தெரியவந்தபோதிலும் அந்நடவடிக்கைகள் செல்லுந்தன்மையுடையன ஆகும்.

(3) நாடாளுமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்கிறவரையில், நாடாளுமன்ற ஈரவைகளில் எதனின் கூட்டமும் அமைவுறுவதற்கான குறைவெண், அந்த அவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பத்தில் ஒரு பங்காக இருத்தல் வேண்டும்.

(4) ஓர் அவையின் கூட்டம் நடைபெறும்போது எச்சமயத்திலேனும் குறைவெண் இல்லாதிருப்பின், அந்த அவையை ஒத்திவைப்பதோ குறைவெண் அமைகிற வரையில் அந்தக் கூட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதோ மாநிலங்களவைத் தலைவரின் அல்லது மக்களவைத் தலைவரின் அல்லது அத்தகையவராகச் செயலுகின்றவரின் கடமை ஆகும்.

உறுப்பினர்களின் தகுதிக்கேடுகள்

101. பதவியிடங்களை விட்டகலுதல் :

(1) எவர் ஒருவரும் நாடாளுமன்ற ஈரவைகளிலும் உறுப்பினராக இருத்தல் ஆகாது; ஒருவர் ஈரவைகளுக்கும் உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பெற்றிருப்பாராயின், அவர், அவ்விரு அவைகளில் ஏதாவது ஒன்றில் தம் பதவியிடத்தை விட்டகலுவதற்கு நாடாளுமன்றம் சட்டத்தினால் வகைசெய்தல் வேண்டும்.

(2) எவர் ஒருவரும், நாடாளுமன்றம், ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் ஓர் அவை ஆகிய இரண்டிலும் உறுப்பினராக இருத்தல் ஆகாது; நாடாளுமன்றம், ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் ஓர் அவை ஆகிய இரண்டிற்கும் ஒருவர் தெரிந்தெடுக்கப்பெற்றிருப்பாராயின், அப்போது, குடியரசுத்தலைவரால் வகுக்கப்படும் விதிகளில் குறித்துரைக்கப்படும் காலஅளவு கழிவுறுவதற்கு முன்னரே, அவர் மாநிலச் சட்டமன்றத்திலுள்ள தம் பதவியிடத்தை விட்டு விலகியிருந்தாலன்றி, நாடாளுமன்றத்திலுள்ள அவருடைய பதவியிடம் அக்காலஅளவு கழிவுற்றதும் காலியாகிவிடும்.

(3) நாடாளுமன்ற ஈரவைகளில் ஒன்றின் உறுப்பினர் ஒருவர்—

(அ) 102 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறில் அல்லது (2) ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட தகுதிக்கேடுகளில் எதற்கேனும் உள்ளாகிவிடுவாராயின், அல்லது

(ஆ) மாநிலங்களவைத் தலைவருக்கோ, நேர்வுக்கேற்ப, மக்களவைத் தலைவருக்கோ தம் கையொப்பமிட்டு எழுத்துவழிப் பதவி விலகுவதாகத் தெரிவித்து அவ்வாறு அவர் பதவி விலகுதல் மாநிலங்களவைத் தலைவராலோ, நேர்வுக்கேற்ப, மக்களவைத் தலைவராலோ ஏற்றுக்கொள்ளப்படுமாயின்,

அதன்மேல் அவருடைய பதவியிடம் காலியானதாகிவிடும்:

வம்புரையாக: (ஆ) உட்கூறில் சுட்டப்பட்ட பதவிவிலகலைப் பொறுத்தவரை, மாநிலங்களவைத் தலைவரோ, நேர்வுக்கேற்ப, மக்களவைத் தலைவரோ தாம் பெற்ற தகவலிருந்தும் பிறவற்றைக் கொண்டும் தாம் தக்கதெனக் கருதும் விசாரணைக்குப் பின்பு, அந்தப் பதவிவிலகல் அவரால் தம்விருப்பாகச் செய்யப்பட்டதன்று அல்லது உண்மையானதன்று எனத் தெளிவுறக்காண்பாராயின், அந்தப் பதவிவிலகலை அவர் ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது.

(4) நாடாளுமன்ற ஈரவைகளில் ஒன்றின் உறுப்பினர் அந்த அவையின் அனுமதியின்றி அதன் அனைத்துக் கூட்டங்களுக்கும் அறுபது நாள் காலஅளவிற்கு வாராதிருப்பாராயின், அவருடைய பதவியிடம் காலியாகிவிட்டதென அந்த அவை விளம்பலாம்:

வரம்புரையாக: அந்த அறுபது நாள் காலஅளவைக் கணக்கிடுகையில், அந்த அவையின் கூட்டத்தொடர் இறுதிசெய்யப்பட்டிருந்த காலஅளவு அல்லது தொடர்ச்சியாக நான்கு நாட்களுக்குமேல் அந்த அவை ஒத்திவைக்கப்பட்டிருந்த காலஅளவு எதனையும் கணக்கில் எடுத்துக்கொள்ளுதல் ஆகாது.

102. உறுப்பினர்பதவித் தகுதிக்கேடுகள் :

(1) ஒருவர்—

(அ) எந்த ஊதியப் பதவியை வகிப்பவர் உறுப்பினராயிருப்பதற்குத் தகுதிக்கேடு உறுவதில்லை என்று நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்புகிறதோ அந்தப்பதவி அல்லாத பிற ஊதியப் பதவி எதனையும் இந்திய அரசாங்கத்தின்கீழோ மாநிலம் ஒன்றன் அரசாங்கத்தின் கீழோ வகிப்பாராயின்,

(ஆ) பித்துப்பிடித்தவராக இருந்து, அத்தகையவரெனத் தகுதிறமுள்ள நீதிமன்றம் ஒன்றினால் விளம்பப்பெற்றிருப்பாராயின்,

(இ) விடுவிப்புப் பெறாத நொடிப்புநிலையராக இருப்பாராயின்,

(ஈ) இந்தியாவின் குடிமகனாக இல்லாதிருப்பாராயின் அல்லது ஓர் அயல்நாட்டின் குடிமையினைத் தம்விருப்பாகப் பெற்றிருப்பாராயின் அல்லது எவ்வகையிலேனும் ஓர் அயல்நாட்டிடம் பற்றுறவோ சார்புறவோ தமக்கு உள்ளதென ஒப்பியவராய் இருப்பாராயின்,

(உ) நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தாலோ அதன் வழியாலோ உறுப்பினராக இருப்பதற்குத் தகுதிக்கேடுற்றவராக இருப்பாராயின்

அவர், நாடாளுமன்ற ஈரவைகளில் எதிலும் உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப் பெறுவதற்கும், உறுப்பினராக இருந்துவருவதற்கும் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

விளக்கம்.—இந்தக் கூறினைப் பொறுத்தவரை, ஒருவர் ஒன்றியத்தின் அல்லது மாநிலம் ஒன்றின் அமைச்சராயிருக்கும் காரணத்தினால் மட்டுமே அவர் இந்திய அரசாங்கத்தின்கீழோ அத்தகைய மாநில அரசாங்கத்தின்கீழோ ஊதியப்பதவி ஒன்றை வகிப்பவராகக் கொள்ளப்பெறுதல் ஆகாது.

(2) ஒருவர் பத்தாம் இணைப்புப்பட்டியலின்படி தகுதிக்கேடுற்றவராயிருப்பின், அவர், நாடாளுமன்ற ஈரவைகளில் எதிலும் உறுப்பினராக இருந்துவருவதற்குத் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

103. உறுப்பினர்களின் தகுதிக்கேடுகள் பற்றிய பிரச்சினைகளின்மீது முடிபு :

(1) நாடாளுமன்ற ஈரவைகளில் ஒன்றன் உறுப்பினர் ஒருவர், 102ஆம் உறுப்பின் (1)ஆம் கூறில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிக்கேடுகளில் எதற்கேனும் உள்ளாகிவிட்டாரா என்பது பற்றிய பிரச்சினை எதுவும் எழுமாயின், அப்பிரச்சினை குடியரசுத்தலைவரின் முடிபுக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும்; அவருடைய முடிபே அறுதியானது ஆகும்.

(2) அத்தகைய பிரச்சினை எதன்மீதும் முடிபு ஒன்றை வழங்குவதற்கு முன்பு, குடியரசுத்தலைவர், தேர்தல் ஆணையத்தின் கருத்துரையைப் பெற்று, அந்தக் கருத்துரையின்படியே செயலுறுவார்.

104. 99ஆம் உறுப்பின்படி ஆணைமொழி அல்லது உறுதிமொழி ஏற்பதற்கு முன்போ தகுதியற்றவராக அல்லது தகுதிக்கேடுற்றவராக இருக்கும்போதோ அவையில் அமர்ந்தாலும் வாக்களித்தாலும் அதற்குற்ற தண்டம் :

ஒருவர், 99ஆம் உறுப்பின் வேண்டுறுத்தங்களுக்கேற்ப நடப்பதற்கு முன்பு அல்லது நாடாளுமன்ற அவை ஒன்றின் உறுப்பினர் பதவிக்குத் தாம் தகுதியற்றவராகவோ தகுதிக்கேடுற்றவராகவோ நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் ஒன்றன் வகையங்களால் தாம் தடைசெய்யப்பட்டிருப்பதாகவோ இருப்பதை அறிந்திருந்தும், அவர் நாடாளுமன்ற அவை ஒன்றின் உறுப்பினராக அமர்வாராயின் அல்லது வாக்களிப்பாராயின், அவர் அவ்வாறு அமரும் அல்லது வாக்களிக்கும் நாள் ஒவ்வொன்றையும் பொறுத்து, ஐந்நூறு ரூபாய் தண்டத்திற்கு உள்ளாவார்; அது ஒன்றியத்திற்குரிய கடன் என வசூல் செய்யப்படும்.

நாடாளுமன்றத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் உள்ள அதிகாரங்கள், மதிப்புரிமைகள் மற்றும் காப்புரிமைகள்

105. நாடாளுமன்ற அவைகளுக்கும் அவற்றின் உறுப்பினர்களுக்கும் குழுக்களுக்கும் உள்ள அதிகாரங்கள், மதிப்புரிமைகள் முதலியன :

(1) இந்த அரசமைப்பின் வகையங்களுக்கும், நாடாளுமன்ற நெறிமுறையினை ஒழுங்குறுத்துகின்ற விதிகள், நிலையாணைகள் ஆகியவற்றிற்கும் உட்பட்டு, நாடாளுமன்றத்தில் பேச்சுச் சுதந்திரம் இருத்தல் வேண்டும்.

(2) நாடாளுமன்ற உறுப்பினர் எவரும், நாடாளுமன்றத்தில் அல்லது அதன் குழு எதிலும் அவர் கூறிய எதனைப் பொறுத்தும் அல்லது அளித்த வாக்கு எதனைப் பொறுத்தும் நீதிமன்ற நடவடிக்கை எதற்கும் உள்ளாக மாட்டார்; அவ்வாறே எவரும் நாடாளுமன்ற ஈரவைகளில் ஒன்றால் அல்லது அதன் அதிகாரத்தின்கீழ் அறிக்கை, வரையேடு, வாக்களிப்புகள் அல்லது நடவடிக்கைகள் பற்றிச் செய்யப்படும் வெளியீடு பொறுத்தும் அத்தகைய நடவடிக்கைக்கு உள்ளாகமாட்டார்.

(3) பிற வகைகளில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் அவையின் உறுப்பினர்களுக்கும் குழுக்களுக்கும் உள்ள அதிகாரங்கள், மதிப்புரிமைகள், காப்புரிமைகள் ஆகியவை, நாடாளுமன்றம் சட்டத்தினால் அவ்வப்போது வரையறை செய்கின்றவாறு இருக்கும்; அத்துடன், அவ்வாறு வரையறை செய்யப்படும் வரையில், 1978 ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து நான்காம் திருத்தம்) சட்டத்தின் 15 ஆம் பிரிவு செல்லாற்றல் பெறுவதற்கு ஒட்டிமுன்பு, அந்த அவைக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் குழுக்களுக்கும் இருந்தவாறே இருக்கும்.

(4). (1), (2), (3) ஆகிய கூறுகளின் வகையங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பொருந்துறுவன போன்றே, நாடாளுமன்ற அவை ஒன்றில் அல்லது அதன் குழு ஒன்றில் பேசுவதற்கு மற்றும் பிறவாறு அதன் நடவடிக்கைகளில் இந்த அரசமைப்பின்படி பங்குகொள்வதற்கு உரிமையுடையவர்களுக்கும் பொருந்துறுவன ஆகும்.

106. உறுப்பினர்களின் வரையூதியங்களும் படித்தொகைகளும் :

நாடாளுமன்ற ஈரவைகளின் உறுப்பினர்களும், நாடாளுமன்றம் அவ்வப்போது சட்டத்தினால் நீர்மானிக்கும் வரையூதியங்களையும் படித்தொகைகளையும் பெறுவதற்கு உரிமை கொண்டவர்கள் ஆவர்; அதன்பொருட்டு அவ்வாறு வகைசெய்யப்படும் வரையில், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, இந்தியத் தன்னாட்சிய அரசமைப்புப் பேரவை உறுப்பினர்களுக்குப் பொருந்துறுவனவாக இருந்த அதே வீதங்களிலும் அதே வரைக்கட்டுகளின்படியும் படித்தொகைகள் பெறுவதற்கு அவர்கள் உரிமை கொண்டவர்கள் ஆவர்.

சட்டமியற்றுவதற்கான நெறிமுறை

107. சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்தலும் நிறைவேற்றுதலும் பற்றிய வகையங்கள் :

(1) பணச் சட்டமுன்வடிவுகள், பிற நிதிச் சட்டமுன்வடிவுகள் இவற்றைப் பொறுத்த, 109, 117 ஆகிய உறுப்புகளின் வகையங்களுக்கு உட்பட்டு, சட்டமுன்வடிவு எதுவும், நாடாளுமன்ற ஈரவைகளில் எதிலும் முதலில் கொண்டு வரப்படலாம்.

(2) 108, 109 ஆகிய உறுப்புகளின் வகையங்களுக்கு உட்பட்டு, திருத்தம் ஏதும் இல்லாமல் அல்லது நாடாளுமன்ற ஈரவைகளும் ஏற்றுக்கொண்ட திருத்தங்களை மட்டும் கொண்டு, ஒரு சட்டமுன்வடிவை ஈரவைகளும் ஏற்றுக்கொண்டிருந்தாலன்றி, அது ஈரவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

(3) நாடாளுமன்றத்தின் ஓர்விலுள்ள ஒரு சட்டமுன்வடிவு, அதன் அவைகளின் கூட்டத்தொடர் இறுதிசெய்யப்படுவதன் காரணத்தால் அற்றுப்போவதில்லை.

(4) மக்களவையால் நிறைவேற்றப்படாதநிலையில் மாநிலங்களவையின் ஓர்விலுள்ள ஒரு சட்டமுன்வடிவு, மக்களவை கலைக்கப்படுமாயினும் அற்றுப்போவதில்லை.

(5) மக்களவையின் ஓர்விலுள்ள அல்லது மக்களவையால் நிறைவேற்றப்பட்டிருந்து, மாநிலங்களவையின் ஓர்விலுள்ள ஒரு சட்டமுன்வடிவு, மக்களவை கலைக்கப்படுவதன்மேல், 108 ஆம் உறுப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, அற்றுப்போகும்.

108. குறித்தசில நேர்வுகளில் ஈரவைகளின் கூட்டமர்வு :

(1) ஒரு சட்டமுன்வடிவு ஓர் அவையால் நிறைவேற்றப்பட்டிருந்து, மறுஅவைக்கு அனுப்பப்பட்ட பின்பு—

(அ) அச்சட்டமுன்வடிவு, அந்த மறுஅவையால் மறுக்கப்படுமாயின், அல்லது

(ஆ) அச்சட்டமுன்வடிவிற்கான திருத்தங்கள் குறித்த அந்த அவைகள் இறுதியாக வேறுபடுமாயின், அல்லது

(இ) அந்த மறுஅவை அச்சட்டமுன்வடிவைப் பெற்ற தேதியிலிருந்து, அச்சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படாமலேயே ஆறு மாதங்களுக்குமேல் கழிந்திருக்குமாயின்

மக்களவை கலைக்கப்பட்டதன் காரணமாக அச்சட்டமுன்வடிவு அற்றுப்போனாலன்றி, குடியரசுத்தலைவர், அச்சட்டமுன்வடிவைப் பற்றிக் கலந்தாராய்ந்து வாக்களிக்கும் பொருட்டு அந்த அவைகளை ஒரு கூட்டமர்வாகக் கூடுமாறு தாம் அழைக்கக் கருதியுள்ளதை, அந்த அவைகள் அமர்விலிருப்பின், செய்தியுரை வாயிலாகவோ அமர்வில் இல்லாதிருப்பின் பொது அறிவிக்கை வாயிலாகவோ அந்த அவைகளுக்கு அறிவிக்கலாம்:

வரம்புரையாக: இந்தக் கூறிலுள்ள எதுவும், பணச் சட்டமுன்வடிவுக்குப் பொருந்துறுவதில்லை.

(2). (1) ஆம் கூறில் சுட்டப்பட்ட ஆறு மாதக் காலஅளவைக் கணக்கிடுகையில், அந்தக் கூறின் (இ) உட்கூறில் சுட்டப்பட்ட அந்த அவையின் கூட்டத்தொடர் இறுதிசெய்யப்பட்ட காலஅளவையும் தொடர்ச்சியாக நான்கு நாட்களுக்குமேல் ஒத்திவைக்கப்பட்டிருந்த காலஅளவையும் கணக்கில் எடுத்துக்கொள்ளுதல் ஆகாது.

(3) குடியரசுத்தலைவர், ஈரவைகளையும் கூட்டமர்வாகக் கூடுமாறு தாம் அழைக்கக் கருதியுள்ளதை (1) ஆம் கூறின்படி அறிவித்திருக்குமிடத்து, ஈரவைகளில் எதுவும், அச்சட்டமுன்வடிவின் மீதான நடவடிக்கையை மேற்கொண்டு தொடர்தல் ஆகாது; மேலும், குடியரசுத்தலைவர், தம் அறிவிக்கைத் தேதிக்குப் பின்பு, எச்சமயத்திலும் அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்ட காரணத்திற்காகக் கூட்டமர்வாகக் கூடுமாறு அந்த அவைகளுக்கு அழைப்பாணை விடுக்கலாம்; அவர் அவ்வாறு செய்வாராயின், அந்த அவைகள் அதற்கிணங்க கூடுதல் வேண்டும்.

(4) ஈரவைகளின் கூட்டமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்கள், எவையேனுமிருப்பின், அவற்றுடன் சேர்த்து அச்சட்டமுன்வடிவு, ஈரவைகளின் மொத்த உறுப்பினர்களில் வந்திருந்து வாக்களிப்பவர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரால் அக்கூட்டமர்வில் நிறைவேற்றப்படுமாயின், அது, இந்த அரசமைப்பைப் பொறுத்தவரை, ஈரவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்:

வரம்புரையாக: கூட்டமர்வு ஒன்றில்—

(அ) அச்சட்டமுன்வடிவு ஓர் அவையினால் நிறைவேற்றப்பட்டிருந்து, மறுஅவையினால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்படாமலும் அது முதலில் கொண்டுவரப்பட்ட அவைக்குத் திருப்பியனுப்பப் படாமலும் இருக்குமாயின், அச்சட்டமுன்வடிவை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட காலத்தாழ்வு காரணமாகத் தேவைப்படும் திருத்தங்கள் (எவையேனுமிருப்பின் அவை) அல்லாத பிற திருத்தம் எதுவும், அச்சட்டமுன்வடிவுக்குக் கொணரப்படுதல் ஆகாது;

(ஆ) அச்சட்டமுன்வடிவு அவ்வாறு நிறைவேற்றப்பட்டுத் திருப்பியனுப்பப்பட்டிருக்குமாயின், மேற்சொன்ன அத்திருத்தங்களும் ஈரவைகளும் ஏற்றுக்கொள்ளாத பொருட்பாடுகள் பொறுத்த பிற திருத்தங்களும் மட்டுமே அச்சட்டமுன்வடிவுக்குக் கொணரப்படுதல் வேண்டும்:

மேலும், இந்தக் கூறின்படி அனுமதிக்கத்தக்க திருத்தங்கள் எவை என்பதைப் பொறுத்து, தலைமைவகிப்பவரின் முடிபே அறுதியானது ஆகும்.

(5) கூட்டமர்வாகக் கூடுமாறு தாம் அழைக்கக் கருதியுள்ளதைக் குறித்துக் குடியரசுத்தலைவர் அறிவிக்கை விடுத்த பின்னர், மக்களவையைக் கலைக்க நேர்ந்தாலும்; இந்த உறுப்பின்படி கூட்டமர்வாகக் கூடி அதில் அச்சட்டமுன்வடிவை நிறைவேற்றலாம்.

109. பணச் சட்டமுன்வடிவுகள் பொறுத்த தனியுறு நெறிமுறை :

(1) பணச் சட்டமுன்வடிவு எதனையும் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்துதல் ஆகாது.

(2) பணச் சட்டமுன்வடிவு எதுவும், மக்களவையினால் நிறைவேற்றப்பட்ட பின்பு மாநிலங்களவைக்கு அதன் பரிந்துரைகளுக்காக அனுப்பப்படுதல் வேண்டும்; மாநிலங்களவை, அச்சட்டமுன்வடிவைப் பெற்ற தேதியிலிருந்து, பதினான்கு நாள் காலஅளவிற்குள் அச்சட்டமுன்வடிவை மக்களவைக்குத் தன் பரிந்துரைகளுடன் திருப்பியனுப்புதல் வேண்டும்; அதன்மேல், மக்களவை, மாநிலங்களவையினால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது ஏற்கமறுக்கலாம்.

(3) மாநிலங்களவையின் பரிந்துரைகளில் எதனையும் மக்களவை ஏற்றுக்கொள்ளுமாயின், மாநிலங்களவையினால் பரிந்துரை செய்யப்பட்டு மக்களவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்களுடன் அந்தப் பணச் சட்டமுன்வடிவு ஈரவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்.

(4) மாநிலங்களவையின் பரிந்துரைகளில் எதனையும் மக்களவை ஏற்றுக்கொள்ளாவிடின், அந்தப் பணச் சட்டமுன்வடிவு, மாநிலங்களவை பரிந்துரை செய்த திருத்தங்களில் எதுவுமின்றி, மக்களவையால் நிறைவேற்றப்பட்ட வடிவத்திலேயே ஈரவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்.

(5) மக்களவையால் நிறைவேற்றப்பட்டு, மாநிலங்களவைக்கு அதன் பரிந்துரைகளுக்காக அனுப்பப்பட்ட ஒரு பணச் சட்டமுன்வடிவு, மேற்சொன்ன பதினான்கு நாள் காலஅளவிற்குள் மக்களவைக்குத் திருப்பி அனுப்பப்படாவிடின், அந்தக் காலஅளவு கழிவுற்றதும், அச்சட்டமுன்வடிவு, மக்களவையால் நிறைவேற்றப்பட்ட வடிவத்திலேயே ஈரவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்.

110. "பணச் சட்டமுன்வடிவுகள்" என்பதன் பொருள்வரையறை :

(1) இந்த அத்தியாயத்தைப் பொறுத்தவரை, ஒரு சட்டமுன்வடிவு, பின்வரும் பொருட்பாடுகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் பற்றிய வகையங்களை மட்டுமே கொண்டிருப்பதாயின், அது ஒரு பணச் சட்டமுன்வடிவு எனக் கொள்ளப்படும்:—

(அ) வரி எதனையும் விதித்தல், நீக்குதல், குறைத்தல், மாற்றுதல் அல்லது ஒழுங்குறுத்துதல்;

(ஆ) இந்திய அரசாங்கத்தால் பணம் கடன் வாங்கப்படுவதை அல்லது பொறுப்புறுதி எதுவும் அளிக்கப்படுவதை ஒழுங்குறுத்துதல் அல்லது இந்திய அரசாங்கம் பொறுப்பேற்றுள்ள அல்லது பொறுப்பேற்கவுள்ள நிதிபற்றிய கடமைப்பாடுகள் எவற்றையும் பொறுத்த சட்டத்தைத் திருத்தம் செய்தல்;

(இ) இந்தியத் திரள்நிதியத்தை அல்லது எதிரதாக்காப்பு நிதியத்தைக் கையடைவுகொள்ளல், அத்தகைய நிதியம் எதிலும் பணம் செலுத்துதல் அல்லது அதிலிருந்து பணம் எடுத்தல்;

(ஈ) இந்தியத் திரள்நிதியத்தினின்றும் பணம் ஒதுக்கீடு செய்தல்;

(உ) செலவினம் எதனையும் இந்தியத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட செலவினம் என விளம்புதல் அல்லது அத்தகைய செலவினத் தொகை எதனையும் கூடுதலாக்குதல்;

(ஊ) இந்தியத் திரள்நிதியத்தின் அல்லது இந்திய அரசுப் பொதுக்கணக்கின் பொருட்டு பணம் பெறுதல் அல்லது அத்தகைய பணத்தைக் கையடைவுகொள்ளல் அல்லது வழங்குதல் அல்லது ஒன்றியத்தின் அல்லது ஒரு மாநிலத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்தல்; அல்லது

(எ) (அ) முதல் (ஊ) வரையுள்ள உட்கூறுகளில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளில் எதனையும் சார்ந்த ஒரு பொருட்பாடு.

(2) ஒரு சட்டமுன்வடிவு அபராதங்களை அல்லது பிற பணத்தண்டங்களை விதிப்பதற்கு அல்லது உரிமங்களுக்கான கட்டணங்களையோ செய்யப்பட்ட பணிகளுக்கான கட்டணங்களையோ கோருவதற்கும் செலுத்துவதற்கும் அது வகைசெய்கிறது என்ற காரணத்தால் மட்டுமோ, உள்ளாட்சி அதிகாரஅமைப்பு அல்லது குழுமம் ஒன்று, உள்ளாட்சி நோக்கங்களுக்காக வரி எதனையும் விதிப்பதற்கு, நீக்குவதற்கு, குறைப்பதற்கு, மாற்றுவதற்கு அல்லது ஒழுங்குறுத்துவதற்கு அது வகைசெய்கிறது என்ற காரணத்தாலோ அதை ஒரு பணச் சட்டமுன்வடிவு எனக் கொள்ளுதல் ஆகாது.

(3) ஒரு சட்டமுன்வடிவு, பணச் சட்டமுன்வடிவா இல்லையா என்னும் பிரச்சினை ஒன்று எழுமாயின், அதன்மேல் மக்களவைத் தலைவர் அளிக்கும் முடிபே அறுதியானது ஆகும்.

(4) ஒவ்வொரு பணச் சட்டமுன்வடிவும் 109ஆம் உறுப்பின்படி மாநிலங்களவைக்கு அனுப்பப்படும்போதும், 111ஆம் உறுப்பின்படி ஏற்பிசைவுக்காகக் குடியரசுத்தலைவரிடம் முன்னிடப்படும்போதும், அது ஒரு பணச்சட்டமுன்வடிவு என மக்களவைத் தலைவர் கையொப்பமிட்ட ஓர் உறுதிச்சான்று மேற்குறிப்பாக அதன்மீது எழுதப்படுதல் வேண்டும்.

111. சட்டமுன்வடிவுகளுக்கு ஏற்பிசைவு :

ஒரு சட்டமுன்வடிவு நாடாளுமன்ற அவைகளால் நிறைவேற்றப்பட்டதன்மேல், அது குடியரசுத்தலைவரிடம் முன்னிடப்படுதல் வேண்டும்; குடியரசுத்தலைவர், தாம் அச்சட்டமுன்வடிவுக்கு ஏற்பிசைவு அளிப்பதாகவோ அதற்கு ஏற்பிசைவு அளிக்க மறுப்பதாகவோ விளம்புவார்:

வரம்புரையாக: குடியரசுத்தலைவர், தம்மிடம் ஏற்பிசைவுக்காக ஒரு சட்டமுன்வடிவு முன்னிடப்பட்ட பின்பு, இயன்றளவு விரைவில், அது ஒரு பணச் சட்டமுன்வடிவாக இல்லாதிருப்பின், அச்சட்டமுன்வடிவையோ அதில் குறித்துரைக்கப்பட்ட வகையங்கள் எவற்றையுமோ அந்த அவைகள் மறுஆய்வு செய்யுமாறும், குறிப்பாக, தாம் பரிந்துரைக்கும் திருத்தங்கள் எவற்றையும் அறிமுகப்படுத்துவது விரும்பத்தக்கதா என்பதைப் பற்றிக் கருதுமாறும் கேட்டுக்கொள்கின்ற செய்தியுரையுடன் அச்சட்டமுன்வடிவை அவற்றுக்குத் திருப்பியனுப்பலாம்; அவ்வாறு ஒரு சட்டமுன்வடிவு திருப்பியனுப்பப்பட்டிருக்கும்போது, அந்த அவைகள் அதன்படியே அச்சட்டமுன்வடிவை மறுஆய்வு செய்தல் வேண்டும்; மேலும், அந்த அவைகளால் அச்சட்டமுன்வடிவு திருத்தத்துடனோ திருத்தமின்றியோ மீண்டும் நிறைவேற்றப்பட்டுக் குடியரசுத் தலைவரிடம் ஏற்பிசைவுக்காக முன்னிடப்படுமாயின், குடியரசுத்தலைவர் அதற்கு ஏற்பிசைவளிக்க மறுத்தல் ஆகாது.

நிதிபற்றிய பொருட்பாடுகளுக்குற்ற நெறிமுறை

112. ஆண்டு நிதிநிலை அறிக்கை :

(1) குடியரசுத்தலைவர், ஒவ்வொரு நிதியாண்டைப் பொறுத்தும், அந்த ஆண்டிற்கான இந்திய அரசாங்க வரவு–செலவினங்கள் மதிப்பீட்டு விவர அறிக்கை ஒன்றை நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் முன்பும் வைக்குமாறு செய்தல் வேண்டும்; அது இந்தப் பகுதியில் "ஆண்டு நிதிநிலை அறிக்கை" எனக் குறிப்பிடப்படும்.

(2) ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அடங்கியுள்ள செலவின மதிப்பீடுகளில்—

(அ) இந்த அரசமைப்பில், இந்தியத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட செலவினம் என விவரிக்கப்பட்டுள்ள செலவினத்திற்குத் தேவைப்படும் பணத்தொகைகளைத் தனியாகவும்,

(ஆ) இந்தியத் திரள்நிதியத்திலிருந்து செலவுசெய்யக் கருதியுள்ள பிற செலவினத்திற்குத் தேவைப்படும் பணத்தொகைகளைத் தனியாகவும்

காட்டுதல் வேண்டும்; அத்துடன், வருவாய்க் கணக்குவகைச் செலவினத்தைப் பிறவகைச் செலவினத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுதலும் வேண்டும்.

(3) பின்வரும் செலவினங்கள் இந்தியத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட செலவினங்களாக இருத்தல் வேண்டும்—

(அ) குடியரசுத்தலைவரின் பதவியூதியங்கள், படித்தொகைகள் மற்றும் அவருடைய பதவி தொடர்பான பிற செலவினங்கள்;

(ஆ) மாநிலங்களவைத் தலைவர், துணைத்தலைவர் மற்றும் மக்களவைத் தலைவர், துணைத்தலைவர் ஆகியோரின் வரையூதியங்களும் படித்தொகைகளும்;

(இ) வட்டி, கடனடைப்பு நிதியச் செலவீடுகள், மீட்புச் செலவீடுகள் உள்ளடங்கலாக இந்திய அரசாங்கத்தின்மீது பொறுப்படைவுள்ள உறுகடன் செலவீடுகள் மற்றும் பெறுகடன் எழுப்புதல், உறுகடன் அடைத்தல், மீட்டல் ஆகியவை தொடர்பான செலவினங்கள்;

(ஈ) (i) உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கும் அவர்கள் தொடர்பாகவும் வழங்கத்தக்க வரையூதியங்கள், படித்தொகைகள் மற்றும் ஓய்வூதியங்கள்;

(ii) கூட்டாட்சிய நீதிமன்ற நீதிபதிகளுக்கும் அவர்கள் தொடர்பாகவும் வழங்கத்தக்க ஓய்வூதியங்கள்;

(iii) இந்திய ஆட்சிநிலவரைக்குள் அடங்கிய ஒரு வரையிடத்தைப் பொறுத்து அதிகாரத்தைச் செலுத்துகிற அல்லது இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு எச்சமயத்திலேனும் இந்தியத் தன்னாட்சியத்தின் ஆளுநர் மாகாணம் ஒன்றில் உள்ளடங்கியிருந்த ஒரு வரையிடத்தைப் பொறுத்து அதிகாரம் செலுத்திவந்த ஓர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கும், அவர்கள் தொடர்பாகவும் வழங்கத்தக்க ஓய்வூதியங்கள்;

(உ) இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையருக்கும், அவர் தொடர்பாகவும் வழங்கத்தக்க வரையூதியம், படித்தொகைகள் மற்றும் ஓய்வூதியம்;

(ஊ) நீதிமன்றம் அல்லது பொதுவர் தீர்ப்பாயம் ஒன்றன் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது தீர்வம் எதன்படியும் செலுத்தித் தீர்ப்பதற்குத் தேவைப்படும் பணத்தொகைகள்;

(எ) இவ்வாறு சார்த்தப்படவேண்டுமென இந்த அரசமைப்போ சட்டத்தினால் நாடாளுமன்றமோ விளம்புகிற பிற செலவினங்கள்.

113. மதிப்பீடுகள் பற்றிய நாடாளுமன்ற நெறிமுறை :

(1) இந்தியத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட செலவினங்கள் தொடர்பான மதிப்பீடுகளை நாடாளுமன்றத்தின் வாக்களிப்பிற்கு வைத்திடுதல் ஆகாது; ஆனால், நாடாளுமன்ற ஈரவைகளில் எதிலும், அந்த மதிப்பீடுகளில் எதனையும் பற்றி விவாதிப்பதை இந்தக் கூறிலுள்ள எதுவும் தடையூறு செய்வதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

(2) மேற்சொன்னவற்றில் பிற செலவினங்கள் தொடர்பான மதிப்பீடுகளை, மானியக்கோரிக்கைகளாக மக்களவையின் முன் வைத்தல் வேண்டும்; மற்றும் கோரிக்கை எதற்கும் ஏற்பிசைவு அளிக்கவோ ஏற்பிசைவு அளிக்க மறுக்கவோ அக்கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தொகையைக் குறைத்து ஏற்பிசைவு அளிக்கவோ மக்களவை அதிகாரம் உடையது ஆகும்.

(3) மானியம் எதுவும், குடியரசுத்தலைவரின் பரிந்துரையின் மீதல்லாமல், கோரப்படுதல் ஆகாது.

114. நிதிஒதுக்களிப்புச் சட்டமுன்வடிவுகள் :

(1) மக்களவை 113 ஆம் உறுப்பின்படி மானியங்களை வழங்கியபின்பு, கூடியவிரைவில்—

(அ) மக்களவையால் அவ்வாறு வழங்கப்பட்ட மானியங்களுக்கும்,

(ஆ) நாடாளுமன்றத்தில் முன்னரே வைக்கப்பட்ட விவர அறிக்கையில் கண்ட தொகைக்கு எவ்வகையிலும் மேற்படாமல் இந்தியத் திரள் நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட செலவினங்களுக்கும்

தேவைப்படும் பணம் அனைத்தையும் இந்தியத் திரள்நிதியத்தினின்றும் ஒதுக்களிப்பதற்கு வகைசெய்யும் சட்டமுன்வடிவு ஒன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய சட்டமுன்வடிவு எதற்கும், அவ்வாறு வழங்கப்பட்ட மானியம் ஒன்றன் தொகையில் மாறுதலையோ அத்தொகை எதற்கெனக் கோரப்பட்டதோ அதில் மாற்றத்தையோ இந்தியத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட செலவினத் தொகையில் மாறுதலையோ விளைவிப்பதான திருத்தம் எதுவும், நாடாளுமன்ற ஈரவைகளில் எதிலும் முன்மொழியப்படுதல் ஆகாது; அத்தகைய திருத்தம் எதுவும், இந்தக் கூறின்படி ஏற்றுக்கொள்ளத்தகாததா என்பது பற்றி அவையில் தலைமை வகிப்பவரின் முடிபே அறுதியானது ஆகும்.

(3) 115, 116 ஆகிய உறுப்புகளின் வகையங்களுக்கு உட்பட்டு, இந்த உறுப்பின் வகையங்களுக்கு இணங்க நிறைவேற்றப்பட்ட சட்டத்தினால் செய்யப்பட்ட நிதி ஒதுக்களிப்பின்படியல்லாமல், இந்தியத் திரள்நிதியத்திலிருந்து பணம் எதுவும் எடுக்கப்படுதல் ஆகாது.

115. துணை, கூடுதல் அல்லது மிகை மானியங்கள் :

(1) குடியரசுத்தலைவர்—

(அ) நடப்பு நிதியாண்டில் ஒரு குறிப்பிட்ட பணிக்கெனச் செலவிடுவதற்கு 114 ஆம் உறுப்பின் வகையங்களுக்கு இணங்க இயற்றப்பட்ட சட்டம் ஒன்றினால் அதிகார அளிப்புப்பெற்ற பணத்தொகை, அந்த ஆண்டிற்குரிய பணிக்குப் போதுமானதன்று எனக் காணப்படுமாயின் அல்லது நடப்பு நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கருதப்படாத புதியதொரு பணியினைப் பொறுத்து குறைநிறைவு செய்வதான அல்லது கூடுதலான செலவினத் தேவை ஒன்று அந்த ஆண்டில் எழுமாயின், அல்லது

(ஆ) ஒரு நிதியாண்டில் பணி ஒன்றிற்கு வழங்கப்பட்ட தொகைக்கு மிகையாகப் பணம் எதுவும் அந்த ஆண்டின்போது அந்தப் பணிக்குச் செலவழிக்கப்பட்டிருக்குமாயின்,

அச்செலவினங்களின் மதிப்பீட்டுத் தொகையைக் காட்டும் பிறிதொரு விவர அறிக்கையை நாடாளுமன்ற ஈரவைகளின் முன்பும் வைக்கும்படி செய்யவோ அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய மிகைத்தொகைக்கான ஒரு கோரிக்கையை மக்களவையில் முன்னிடும்படி செய்யவோ வேண்டும்.

(2) ஆண்டு நிதிநிலை அறிக்கை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்கள், ஒரு மானியத்திற்கான கோரிக்கை, மற்றும் அந்தச் செலவினங்கள் அல்லது மானியத்திற்காக இந்தியத் திரள்நிதியத்தினின்றும் பணத்தை ஒதுக்களிப்பதற்கு அதிகாரம் வழங்கி இயற்றப்படவேண்டிய சட்டம் இவற்றைப் பொறுத்து 112, 113, 114 ஆகிய உறுப்புகளின் வகையங்கள் எவ்வாறு செல்திறம் கொண்டனவோ, அவ்வாறே இதில் கூறப்பட்டுள்ள அறிக்கை, செலவினங்கள், கோரிக்கை, மற்றும் அச்செலவினங்கள் அல்லது அக்கோரிக்கை மற்றிய மானியத்திற்காக இந்தியத் திரள்நிதியத்தினின்றும் பணத்தை ஒதுக்களிப்பதற்கு அதிகாரம் வழங்கி இயற்றப்படவேண்டிய சட்டம் இவற்றைப் பொறுத்தும் செல்திறம் கொண்டன ஆகும்.

116. முன்னளிப்பு மானியம், முன்பற்றுத் தொகை மானியம், குறித்ததனி மானியம் இவற்றின் மீதான வாக்களிப்பு :

(1) இந்த அத்தியாயத்தின் மேலேகண்ட வகையங்களில் எது எவ்வாறிருப்பினும், மக்களவை—

(அ) மானியத்தின்மீது வாக்களிப்பதற்கு 113 ஆம் உறுப்பில் வகுத்துரைக்கப்பட்டுள்ள நெறிமுறை முடிவடையாமலும், மதிப்பீட்டுச் செலவினங்களுக்காக 114 ஆம் உறுப்பின் வகையங்களின்படி சட்டம் நிறைவேற்றப்படாமலும் உள்ள நிலையில், நிதியாண்டின் ஒரு பகுதிக்குரிய அச்செலவினத்திற்கான மானியத்தை முன்னதாக அளிப்பதற்கும்,

(ஆ) பணியின் அளப்பருந்தன்மை அல்லது திட்டவட்டமற்ற தன்மை காரணமாக ஒரு கோரிக்கையைப்பற்றி ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வழக்கமாகக் கொடுக்கப்படும் விவரங்களுடன் கூற இயலாதபோது, எதிர்பார்க்க முடியாத அக்கோரிக்கைக்காக இந்தியாவின் வருவாய் ஆதாரங்களின்மீது மானியம் அளிப்பதற்கும்,

(இ) ஒரு நிதியாண்டின் நடப்புப் பணியின் ஒரு பகுதியாக அமையாத குறித்ததனி மானியம் ஒன்றை அளிப்பதற்கும்,

அதிகாரம் உடையது ஆகும்; மேலும், மேற்சொன்ன மானியங்கள் பொருட்டு இந்தியத் திரள்நிதியத்திலிருந்து பணம் எடுப்பதற்கும் சட்டத்தினால் அதிகாரமளிக்க நாடாளுமன்றம் அதிகாரம் உடையது ஆகும்.

(2) ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினத்திற்கான மானியத்தை அளித்தல், அச்செலவினத்திற்காக இந்தியத் திரள்நிதியத்திலிருந்து பண ஒதுக்களிப்பிற்கு அதிகாரம் வழங்கி இயற்றப்படவேண்டிய சட்டம் இவற்றைப் பொறுத்து 113, 114 ஆகிய உறுப்புகளின் வகையங்கள் எவ்வாறு செல்திறம் கொண்டனவோ, அவ்வாறே (1) ஆம் கூறின்படி மானியம் எதனையும் அளித்தல், அக்கூறின்படி இயற்றப்படவேண்டிய சட்டம் இவற்றைப் பொறுத்தும் செல்திறம் கொண்டன ஆகும்.

117. நிதிச் சட்டமுன்வடிவுகள் பற்றிய தனியுறு வகையங்கள் :

(1) 110 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின் (அ) முதல் (ஊ) வரையுள்ள உள்கூறுகளில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளில் எதற்கும் வகைசெய்யும் சட்டமுன்வடிவு அல்லது திருத்தம் எதனையும், குடியரசுத்தலைவரின் பரிந்துரையின் மீதல்லாமல், அறிமுகப்படுத்துதலோ கொண்டுவருதலோ ஆகாது; அவ்வாறு வகைசெய்யும் சட்டமுன்வடிவு எதனையும் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்துதலும் ஆகாது:

வரம்புரையாக : வரி எதனையும் குறைப்பதற்காக அல்லது நீக்குவதற்காக வகைசெய்யும் ஒரு திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு இந்தக் கூறின்படியான பரிந்துரை எதுவும் வேண்டுவதில்லை.

(2) சட்டமுன்வடிவு அல்லது திருத்தம் எதுவும், அபராதங்கள் அல்லது பிற பணத் தண்டங்கள் விதிப்பதற்கு அல்லது உரிமங்களுக்கான கட்டணங்களையோ செய்யப்பட்ட பணிகளுக்கான கட்டணங்களையோ கோருவதற்கும் செலுத்துவதற்கும் அது வகைசெய்கிறது என்ற காரணத்தால் மட்டுமோ உள்ளாட்சி அதிகாரஅமைப்பு அல்லது குழுமம் ஒன்று உள்ளாட்சி நோக்கங்களுக்காக வரி எதனையும் விதிப்பதற்கு, நீக்குவதற்கு, குறைப்பதற்கு, மாற்றுவதற்கு அல்லது ஒழுங்குறுத்துவதற்கு அது வகை செய்கிறது என்ற காரணத்தாலோ, மேலே கூறப்பட்ட பொருட்பாடுகளில் எதற்கும் வகைசெய்வதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

(3) ஒரு சட்டமுன்வடிவு, சட்டமாக இயற்றப்பட்டுச் செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டால் இந்தியத் திரள்நிதியத்திலிருந்து செலவு செய்ய வேண்டிய நிலையை அது ஏற்படுத்துமாயின், அதனை ஓர்வு செய்யுமாறு நாடாளுமன்ற ஈரவைகளில் ஒவ்வொன்றுக்கும் குடியரசுத் தலைவர் பரிந்துரை செய்திருந்தாலன்றி, அந்த அவை அதனை நிறைவேற்றுதல் ஆகாது.

பொதுவியலான நெறிமுறை

118. நெறிமுறை விதிகள் :

(1) நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றும், இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, அதற்குரிய நெறிமுறையையும் அலுவல் நடத்துமுறையையும் ஒழுங்குறுத்துவதற்கான விதிகளை வகுத்துக் கொள்ளலாம்.

(2) (1) ஆம் கூறின்படி விதிகளை வகுத்துக்கொள்ளும் வரையில் இந்தியத் தன்னாட்சியத்தின் சட்டமன்றத்தைப் பொறுத்து, இந்த அரசமைப்பின் தொடக்க நிலையை ஒட்டிமுன்பு செல்லாற்றலிலிருந்து நெறிமுறை விதிகளும், நிலையாணைகளும், நாடாளுமன்றத்தைப் பொறுத்து மாநிலங்களவைத் தலைவர் அல்லது, நேர்வுக்கேற்ப, மக்களவைத் தலைவர் அவற்றில் செய்யும் மாற்றமைவுகளுக்கும் தழுவமைவுகளுக்கும் உட்பட்டு, செல்திறம் உடையன ஆகும்.

(3) குடியரசுத் தலைவர், மாநிலங்களவைத் தலைவருடனும் மக்களவைத் தலைவருடனும் கலந்தாய்வு செய்தபின்பு, ஈரவைகளின் கூட்டு அமர்வுகளையும், அவற்றுக்கிடையேயான செய்தித்தொடர்புகளையும் பற்றிய நெறிமுறை விதிகளை வகுக்கலாம்.

(4) ஈரவைகளின் கூட்டமர்வில், மக்களவைத் தலைவர் அல்லது அவர் இல்லாதபோது, (3) ஆம் கூறின்படி வகுக்கப்பட்ட நெறிமுறை விதிகளால் தீர்மானிக்கப்பெறும் ஒருவர் தலைமை வகிப்பார்.

119. நாடாளுமன்றத்தில் நிதி அலுவல்கள் பற்றிய நெறி முறையைச் சட்டத்தினால் ஒழுங்குறுத்துதல் :

நாடாளுமன்றத்தில், நிதி அலுவல்களை உரிய காலத்தில் முடிக்கும் பொருட்டு, நிதிபற்றிய பொருட்பாடு எதன் தொடர்பாகவும் அல்லது இந்தியத் திரள்நிதியத்தினின்றும் பண ஒதுக்களிப்பிற்கான சட்டமுன்வடிவு எதன் தொடர்பாகவும் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் நெறிமுறையையும் அலுவல் நடத்துமுறையையும் சட்டத்தினால் ஒழுங்குறுத்தலாம்; அவ்வாறு இயற்றப்பட்ட சட்டத்தின் வகையம் எதற்கும் 118 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின் படி நாடாளுமன்றம் அவை ஒன்றினால் வகுக்கப்பட்ட விதி எதுவும் அல்லது அந்த உறுப்பின் (2) ஆம் கூறின்படி நாடாளுமன்றம் தொடர்பாகச் செல்திறம் உடைய விதி அல்லது நிலையாணை எதுவும் முரணாக இருப்பின் அவ்வாறு முரணாக இருக்கும் அளவிற்கு, அந்த வகையமே மேலோங்கி நிற்கும்.

120. நாடாளுமன்றத்தில் பயன்படுத்தப்படவேண்டிய மொழி :

(1) XVII ஆம் பகுதியில் எது எவ்வாறிருப்பினும், நாடாளுமன்ற அலுவல்கள், 348 ஆம் உறுப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, இந்தியில் அல்லது ஆங்கிலத்தில் நடத்தப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக : இந்தியில் அல்லது ஆங்கிலத்தில் தம் கருத்தைத் தக்கவாறு எடுத்தியம்ப இயலாத உறுப்பினர் எவரையும், அவருடைய தாய் மொழியிலேயே அவையில் உரையாற்றுவதற்கு, மாநிலங்களைத் தலைவர் அல்லது மக்களவைத்தலைவர் அல்லது அத்தகையவராகச் செயலுறுகின்றவர் அனுமதிக்கலாம்.

(2) நாடாளுமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்தாலன்றி, இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலிருந்து பதினைந்து ஆண்டுக் காலஅளவு கழிவுறுவதன்பின்பு, இந்த உறுப்பிலிருந்து, "அல்லது ஆங்கிலத்தில்" என்னும் சொற்கள் நீக்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே இந்த உறுப்பு செல்திறம் உடையது ஆகும்.

121. நாடாளுமன்றத்தில் விவாதத்தின்மீது வரையறை :

உச்சநீதிமன்றத்தின் அல்லது ஓர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர், தம் கடமைகளை ஆற்றுகையில் அவர் நடந்துகொண்ட விதம் குறித்து விவாதம் எதுவும், அந்த நீதிபதியைப் பதவிநீக்கம் செய்வதற்காக, இதன்பின்பு வகைசெய்துள்ளவாறு, குடியரசுத்தலைவரிடம் வேண்டுதலுரை முன்னிடுவதற்கான தீர்மானத்தின் மீதல்லாமல், நாடாளுமன்றத்தில் நடைபெறுதல் ஆகாது.

122. நாடாளுமன்ற நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றங்கள் விசாரித்தல் ஆகாது :

(1) நெறிமுறையைப் பின்பற்றுவதில் முறைகேடு இருப்பதாகக் காரணம் காட்டி நாடாளுமன்றம் நடவடிக்கைகள் எவற்றின் செல்லுந்தன்மையையும் எதிர்த்து வாதிடுதல் ஆகாது.

(2) நாடாளுமன்றப் பதவியாளர் அல்லது உறுப்பினர் ஒருவர், நாடாளுமன்ற நெறிமுறையையோ அலுவல் நடத்துமுறையையோ ஒழுங்குறுத்துவதற்காக அல்லது ஒழுங்கமைதியை நிலைநாட்டுவதற்காக, இந்த அரசமைப்பினாலோ அதன் வழியாலோ அவருக்கு உற்றமைந்துள்ள அதிகாரங்களைச் செலுத்துவது பொறுத்து நீதிமன்றம் எதனின் அதிகாரவரம்பிற்கும் உட்பட்டவர் ஆகார்.

அத்தியாயம் III

குடியரசுத்தலைவருக்குள்ள சட்டமியற்றும் அதிகாரங்கள்.

123. நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடர் இறுதி செய்யப்பட்டுள்ள காலத்தின்போது அவசரச்சட்டங்களைச் சாற்றம் செய்வதற்குக் குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரம்:

(1) நாடாளுமன்ற ஈரவைகளின் கூட்டத் தொடர்களும் தொடர்நிலையிலுள்ள காலம் தவிர, வேறு எச்சமயத்திலும், குடியரசுத்தலைவர், தாம் அவசரமாக நடவடிக்கை எடுக்கவேண்டியதை அவசியமாக்கும் சூழ்நிலைகள் உள்ளன என்று தெளிவுறக் காண்பாராயின், அச்சூழ்நிலைகளுக்கேற்பத் தேவையென்று தாம் கருதும் அவசரச்சட்டங்களைச் சாற்றம் செய்யலாம்.

(2) இந்த உறுப்பின்படி சாற்றம் செய்யப்பட்ட ஓர் அவசரச் சட்டம், நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்திற்குள்ள அதே செல்லாற்றலும் செல்திறமும் உடையது ஆகும்:

ஆனால், அத்தகைய அவசரச் சட்டம் ஒவ்வொன்றும்—

(அ) நாடாளுமன்ற ஈரவைகளின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும், நாடாளுமன்றம் மீண்டும் கூடியதிலிருந்து ஆறு வாரங்கள் கழிவுற்றவுடன் அல்லது அக்கால அளவு கழிவுறுவதற்கு முன்பே அதற்கு ஒப்பேற்பு அளிக்க மறுக்கும் தீர்மானங்களை ஈரவைகளும் நிறைவேற்றுமாயின், அவற்றில் இரண்டாம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன், செயற்பாடு அற்றுப்போகும்; மேலும்,

(ஆ) குடியரசுத் தலைவரால் எச்சமயத்திலும் விலக்கிக் கொள்ளப்படலாம்.

விளக்கம்—நாடாளுமன்ற அவைகள் வெவ்வேறு தேதிகளில் மீண்டும் கூடுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டிருக்குமிடத்து, இந்தக் கூறினைப் பொறுத்தவரை, அந்த ஆறு வாரக் காலஅளவு அத்தேதிகளில் பிந்திய தேதியிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

(3) இந்த அரசமைப்பின்படி நாடாளுமன்றம் சட்டமாக இயற்றத் தகுதிறமில்லாத வகையம் எதனையும் இந்த உறுப்பின்படியான ஓர் அவசரச் சட்டம் கொண்டிருப்பின், அந்த அளவிற்கு அது இல்லாநிலையது ஆகும்.

அத்தியாயம் IV

ஒன்றியத்து நீதித்துறை

124. உச்ச நீதிமன்றத்தை நிறுவுதலும் அதன் அமைப்பும்:

(1) இந்திய உச்ச நீதிமன்றம் என ஒன்று இருக்கும்: இந்தியத் தலைமை நீதிபதியையும், நாடாளுமன்றம் சட்டத்தினால் அதிக அளவு எண்ணிக்கையை வகுத்துரைக்கும் வரையில், *ஏழுவருக்கு மேற்படாத பிற நீதிபதிகளையும், அது கொண்டதாக இருக்கும்.

(2) உச்ச நீதிமன்ற நீதிபதி ஒவ்வொருவரையும், உச்ச நீதிமன்றத்திலும் மாநிலங்களிலுள்ள உயர் நீதிமன்றங்களிலுமுள்ள நீதிபதிகளில் எவரொருவரைக் கலந்தாய்வு செய்வது அவசியமெனக் குடியரசுத்தலைவர் கருதுகின்றாரோ அந்நீதிபதிகளுடன் கலந்தாய்வு செய்த பின்பு, தம் கையொப்பமும் முத்திரையும் கொண்ட அதிகார ஆணையினால் குடியரசுத்தலைவர் அமர்த்துவார்; மற்றும், அவர் அறுபத்தைந்து வயது நிறைவேய்தும் வரையில் பதவி வகிப்பார்.

வரம்பரையாக: தலைமை நீதிபதி அல்லாத பிற நீதிபதியின் அமர்த்துகையைப் பொறுத்தவரை, இந்தியத் தலைமை நீதிபதியுடன் தவறாது கலந்தாய்வு செய்யப்படுதல் வேண்டும்:

---

*இப்போது இருபத்து ஐந்து 22/1986 சட்டத்தைப் பார்க்கவும்

மேலும் வரம்புரையாக:

(அ) நீதிபதி ஒருவர் குடியரசுத்தலைவருக்குத் தம் கையொப்பமிட்டு எழுத்துவழித் தெரிவித்துத் தம் பதவியை விட்டு விலகிக்கொள்ளலாம்;

(ஆ) நீதிபதி ஒருவர், (4) ஆம் கூறில் வகைசெய்யப்பட்டுள்ள வழி முறையின்படி அவருடைய பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(2அ) உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவரின் வயது என்ன என்பது, நாடாளுமன்றம் சட்டத்தினால் வகைசெய்யும் அதிகார அமைப்பினாலும், வகை செய்யும் வழிமுறையிலும் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒருவர், இந்தியாவின் குடிமகனாக இருப்பதுடன்—

(அ) ஓர் உயர் நீதிமன்றத்திலோ, தொடர்ந்து இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்டஅத்தகைய நீதிமன்றங்களிலோ குறைந்தது ஐந்தாண்டுகள் நீதிபதியாக இருந்துள்ளவராக; அல்லது

(ஆ) ஓர் உயர் நீதிமன்றத்திலோ, தொடர்ந்து இரண்டு அல்லது அவற்றிற்குமேற்பட்ட அத்தகைய நீதிமன்றங்களிலோ குறைந்தது பத்தாண்டுகள் வழக்குரைஞராக இருந்துள்ளவராக, அல்லது

(இ) குடியரசுத்தலைவரின் கருத்தின்படி தனிச்சிறப்பு வாய்ந்த சட்டவியலறிஞராக

இருந்தாலன்றி, உச்சநீதிமன்ற நீதிபதியாக அமர்த்தப்பெறுவதற்குத் தகுதிப்பாடு உடையவர் ஆகார்.

விளக்கம் I.—இந்தக் கூறில், "உயர்நீதிமன்றம்" என்பது, இந்திய ஆட்சிநிலவரையில் எப்குதியிலேனும் அதிகாரம் செலுத்திவருகிற அல்லது இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு எச்சமயத்திலேனும் அதிகாரம் செலுத்திவந்த ஓர் உயர் நீதிமன்றம் எனப் பொருள்படும்.

விளக்கம் II.—இந்தக் கூறினைப் பொறுத்தவரை, ஒருவர் வழக்குரைஞராக இருந்துள்ள காலஅளவைக் கணக்கிடுகையில், அவர் வழக்குரைஞரான பின்பு மாவட்ட நீதிபதி பதவிக்குக் கீழ்ப்படாத நீதித்துறைப் பதவியை வகித்து வந்திருக்கிற காலஅளவையும் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

(4) உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர், அவருடைய நெறிதிறம்பிய நடத்தை அல்லது திறமையின்மை மெய்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற காரணத்தால் பதவியிலிருந்து அகற்றப்பட வேண்டுமென நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் அந்த அவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையும், மேலும் அந்த அவை உறுப்பினர்களில் வந்திருந்து வாக்களிப்வர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையும் கொண்ட உறுப்பினர்களால் ஆதரிக்கப்பட்ட ஒரு வேண்டுதலுரை அதே கூட்டத் தொடரில் குடியரசுத்தலைவரிடம் முன்னிடப்பட்டு அதன்மேல் குடியரசுத்தலைவரால் பிறப்பிக்கப்படும் ஆணையினால் அல்லாமல், அவருடைய பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது.

(5). (4) ஆம் கூறின்படி வேண்டுதலுரை ஒன்றை முன்னிடுவதற்கும் நீதிபதி ஒருவரின் நெறிதிறம்பிய நடத்தை அல்லது திறமையின்மையைக் குறித்துப் புலனாய்வு செய்வதற்கும் அதனை மெய்ப்பிப்பதற்குமான நெறிமுறையை நாடாளுமன்றம் சட்டத்தினால் ஒழுங்குறுத்தலாம்.

(6) உச்சநீதிமன்ற நீதிபதியாக அமர்த்தப்பெறும் ஒவ்வொருவரும், அவர்தம் பதவியை ஏற்பதற்கு முன்பு, குடியரசுத்தலைவர் அல்லது அவரால் அதன்பொருட்டு அமர்த்தப்பெறும் ஒருவரின் முன்னிலையில், மூன்றாம் இணைப்புப்பட்டியலில் அதற்கென உள்ள சொன்முறையில் ஓர் ஆணை மொழியை அல்லது உறுதிமொழியை ஏற்றுக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(7) உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பதவி வகித்த எவரும், இந்திய ஆட்சி நிலவரைக்குள் உள்ள நீதிமன்றம் எதிலும் அல்லது அதிகாரஅமைப்பு எதன் முன்பும் வழக்குரைஞராக வாதிடுதலோ செயலுறுதலோ ஆகாது.

125. நீதிபதிகளின் வரையூதியங்கள் முதலியன:

(1) உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு நாடாளுமன்றம் சட்டத்தினால் தீர்மானிக்கும் வரையூதியங்கள் வழங்கப்படும்; அவ்வாறு அதன்பொருட்டு வகைசெய்யப்படும் வரையிலும், இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையூதியங்கள் வழங்கப்பட்டு வரும்.

(2) நீதிபதி ஒவ்வொருவரும், நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தாலோ அதன் வழியாலோ தீர்மானிக்கப்படும் மதிப்புரிமைகள், படித்தொகைகள், வாராமை விடுப்பும் ஓய்வூதியமும் பொறுத்த உரிமைகள் ஆகியவற்றிற்கு உரிமைகொண்டவர் ஆவார்; அவ்வாறு தீர்மானிக்கப்படும் வரையிலும், இரண்டாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மதிப்புரிமைகள், படித்தொகைகள் உரிமைகள் ஆகியவற்றிற்கு அவர் உரிமைகொண்டவராய் இருப்பார்:

வரம்புரையாக : நீதிபதி ஒருவரின் மதிப்புரிமைகளோ படித்தொகைகளோ, வாராமை விடுப்பு அல்லது ஓய்வூதியம் பொறுத்த அவருடைய உரிமைகளோ அவர் அமர்த்தப்பெற்ற பின்பு அவருக்குப் பாதகமான வகையில் மாறுதல் செய்யப்படுதல் ஆகாது.

126. செயலமர் தலைமை நீதிபதியை அமர்த்துதல் :

இந்தியத் தலைமை நீதிபதிப் பதவி காலியாக இருக்கும்போதும், தலைமை நீதிபதி தம் இருத்தலின்மை அல்லது பிறவாறான காரணத்தால் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிய இயலாதிருக்கும்போதும் குடியரசுத்தலைவர் அதன் பொருட்டு அமர்த்தும் அந்நீதிமன்றத்துப் பிற நீதிபதிகளில் ஒருவர் அப்பதவிக்குரிய கடமைகளைப் புரிந்துவருவார்.

127. குறித்தபணி நீதிபதிகளை அமர்த்துதல் :

(1) உச்ச நீதிமன்றத்தின் அமர்வு ஒன்றை நடத்தவோ தொடர்ந்து நடத்திவரவோ தேவைப்படும் நீதிபதிகளின் குறைவெண் எச்சமயத்திலேனும் இல்லாமற்போகுமேயானால், இந்தியத் தலைமை நீதிபதி, குடியரசுத்தலைவரின் முன்னிசைவுடன், தொடர்புடைய உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்த பின்னர், உச்ச நீதிமன்ற நீதிபதியாக அமர்த்தப்பெறுவதற்கு உரிய தகுதிப்பாடுள்ள அந்த உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரைத் தாம் பெயர் குறித்து அவரைத் தேவைப்படும் காலஅளவுக்கு, குறித்தபணி நீதிபதியாக உச்ச நீதிமன்ற அமர்வுகளில் பணியாற்றுமாறு எழுத்துவழிக் கேட்டுக்கொள்ளலாம்.

(2) அவ்வாறு பெயர் குறிக்கப்பட்ட நீதிபதி, தமது பணி தேவைப்படும் போதும் தேவைப்படும் காலஅளவிற்கும் உச்ச நீதிமன்ற அமர்வுகளில் பணியாற்றுதல் அவருடைய பதவிக்குரிய பிற கடமைகளில் முந்துறு கடமை ஆகும்; அவ்வாறு பணியாற்றுகையில் உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவருக்குற்ற அதிகாரவரம்பு, அதிகாரங்கள், மதிப்புரிமைகள் அனைத்தையும் அவர் உடையவராகி உச்ச நீதிமன்ற நீதிபதியின் கடமைகளை ஆற்றிவருவார்.

128. ஓய்வுபெற்ற நீதிபதிகள் உச்ச நீதிமன்றங்களின் அமர்வுகளில் பணியாற்றுதல் :

இந்த அத்தியாயத்தில் எது எவ்வாறிருப்பினும், இந்தியத் தலைமை நீதிபதி, எச்சமயத்திலும், குடியரசுத்தலைவரின் முன்னிசைவுடன் உச்ச நீதிமன்றத்தில் அல்லது கூட்டாட்சிய நீதிமன்றத்தில் நீதிபதி பதவி வகித்த ஒருவரையோ, ஓர் உயர் நீதிமன்ற நீதிபதி பதவி வகித்து, உச்ச நீதிமன்ற நீதிபதியாக அமர்த்தப்பெறுவதற்கு உரிய தகுதிப்பாடுள்ள ஒருவரையோ உச்ச நீதிமன்ற நீதிபதியாக அமர்ந்து செயலுறும்படிக் கேட்டுக்கொள்ளலாம்: அவ்வாறு கேட்டுக்கொள்ளப்பெற்ற ஒவ்வொருவரும் அதன்படி அமர்ந்து செயலுறுங்கால், குடியரசுத்தலைவர் ஆணையினால் தீர்மானிக்கும் படித்தொகைகளுக்கு உரிமை கொண்டிருப்பதோடு, அந்நீதிமன்ற நீதிபதிக்குற்ற அதிகாரவரம்பு, அதிகாரங்கள், மதிப்புரிமைகள் அனைத்தையும் உடையவர் ஆவார்: ஆனால், மற்றப்படி அவர் அந்நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியாகக் கொள்ளப்பெறுவதில்லை:

வரம்புரையாக: மேலே கூறப்பட்ட எவரும், அந்நீதிமன்றத்தின் நீதிபதியாக அமர்ந்து செயலுறுவதற்கு இசைவளித்திருந்தாலன்றி, அவரை அவ்வாறு செயலுறும்படி இந்த உறுப்பிலுள்ள எதுவும் வேண்டுறுத்துவதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

129. உச்ச நீதிமன்றம் ஒரு நிலையாவண நீதிமன்றமாக இருக்கும் :

உச்ச நீதிமன்றம் ஒரு நிலையாவண நீதிமன்றமாக இருக்கும்; மேலும், தன்னை அவமதித்ததற்காகத் தண்டிக்கும் அதிகாரம் உள்ளடங்கலாக அத்தகு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் அது உடையதாக இருக்கும்.

130. உச்ச நீதிமன்றத்தின் அமர்கை இடம் :

உச்ச நீதிமன்றம் தில்லியிலோ குடியரசுத்தலைவரின் ஒப்பேற்புடன் இந்தியத் தலைமை நீதிபதி அவ்வப்போது குறித்திடும் பிற இடத்திலோ இடங்களிலோ அமரும்.

131. உச்ச நீதிமன்றத்தின் முதலேற்பு அதிகாரவரம்பு :

இந்த அரசமைப்பின் வகையங்களுக்குட்பட்டு —

(அ) இந்திய அரசாங்கத்திற்கும், ஒரு மாநிலம் அல்லது பல மாநிலங்களுக்கும் இடையே, அல்லது

(ஆ) ஒரு புறம், இந்திய அரசாங்கமும் ஏதேனும் மாநிலம் அல்லது மாநிலங்களும் மறுபுறம், பிறிதொரு மாநிலம் அல்லது மாநிலங்கள் இவற்றிற்கிடையே, அல்லது

(இ) இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையே

எழும் வழக்கு ஒன்றில் சட்டமுறையான ஓர் உரிமை உளதா என்பதையும், அதன் அளவு என்ன என்பதையும் பற்றிய (சட்ட விளக்கம் பற்றியதாகவோ பொருண்மை பற்றியதாகவோ உள்ள) பிரச்சினை எதுவும் அடங்கியிருக்குமாயின், அத்தகைய வழக்கு எதிலும், மற்ற நீதிமன்றங்கள் நீங்கலாக, உச்சநீதிமன்றமே முதலேற்பு அதிகாரவரம்பு உடையது ஆகும் :

வரம்புரையாக: மேற்சொன்ன அதிகாரவரம்பில், இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு செய்துகொள்ளப்பட்டிருந்தது அல்லது முறையாக ஆக்கப்பட்டிருந்து அத்தொடக்கநிலைக்குப் பின்பும் தொடர்ந்து செயற்பாட்டில் இருந்து வருகிற அல்லது மேற்சொன்ன அதிகாரவரம்பு அளாவுதலாகாது என வகை செய்கிற உடன்படிக்கை, உடன்பாடு, முத்திரைஒப்பந்தம், உறுதிவாக்கேற்பு, சொன்னது, அதுபோன்ற பிற முறையாவணம் ஆகியவற்றிலிருந்து எழும் வழக்கு எதுவும் உள்ளடங்குவதில்லை.

[1][131.அ * * * *]

132. குறித்தசில வழக்குகளில் உயர் நீதிமன்றங்களிலிருந்து எழும் மேன்முறையீடுகளில் உச்ச நீதிமன்றத்திற்குள்ள மேன்முறையீட்டு அதிகாரவரம்பு :

(1) இந்திய ஆட்சிநிலவரையிலுள்ள ஓர் உயர் நீதிமன்றத்தின் உரிமையியல், குற்றவியல் அல்லது பிற நடவடிக்கையில் எழும் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது இறுதியாணை எதுவும், அவ்வழக்கில் இந்த அரசமைப்பின் பொருள்கோள் குறித்துச் செறிவான சட்டப்பிரச்சினை ஒன்று உள்ளது என அந்த உயர்நீதிமன்றம் 134அ உறுப்பின்படி உறுதிச்சான்றளிக்குமாயின், உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்து கொள்வதற்கு உற்றது ஆகும்.

[2][(2) * * * *]

(3) அத்தகைய உறுதிச்சான்று ஒன்று அளிக்கப்படுமிடத்து, அவ்வழக்கின் தரப்பினர் எவரும், மேற்சொன்ன பிரச்சினை எதுவும் தவறாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தின்மீது, உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்து கொள்ளலாம்.

விளக்கம்.—இந்த உறுப்பினைப் பொறுத்தவரை, ஒரு வழக்கில் எழுவினா ஒன்றின் மீதான ஆணை மேன்முறையீட்டாளருக்குச் சாதகமாக வழங்கப்பட்டிருந்து, அது அவ்வழக்கை இறுதியாகத் தீர்ப்பதற்குப் போதியதாக இருப்பின், அத்தகைய ஆணையும் "இறுதியாணை" என்னும் சொல்லில் அடங்கும்.

---

[1] 1997 ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து மூன்றாம் திருத்தச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் (13-4-1978 முதல் செல்திறம் பெறுமாறு) நீக்கறவு செய்யப்பட்டது.

[2] 1978 ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து நான்காம் திருத்தச்) சட்டத்தின் 17 ஆம் பிரிவினால் (1-8-1979 முதல் செல்திறம் பெறுமாறு) நீக்கறவு செய்யப்பட்டது.

133. உரிமையியல் பொருட்பாடுகள் குறித்து உயர் நீதிமன்றங்களிலிருந்து எழும் மேன்முறையீடுகளில் உச்ச நீதிமன்றத்திற்குள்ள மேன்முறையீட்டு அதிகார வரம்பு:

(1) உரிமையியல் நடவடிக்கை ஒன்றில் இந்திய ஆட்சிநிலவரையிலுள்ள ஓர் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது இறுதியாணை எதுவும்—

(அ) அந்த வழக்கில் பொது முக்கியத்துவம் வாய்ந்த செறிவான சட்டப்பிரச்சினை ஒன்று உள்ளது என்றும்,

(ஆ) அந்தப் பிரச்சினையை உச்ச நீதிமன்றம் தீர்வு செய்வது தேவையாகிறது என உயர்நீதிமன்றம் கருதுகிறது என்றும்

அந்த உயர் நீதிமன்றம், 134அ உறுப்பின்படி உறுதிச்சான்றளிக்குமாயின், உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்து கொள்வதற்கு உற்றது ஆகும்.

(2) 132ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், (1) ஆம் கூறின்படி உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்துகொள்ளும் தரப்பினர் எவரும், இந்த அரசமைப்பின் பொருள்கோள் குறித்துச் செறிவான சட்டப்பிரச்சினை ஒன்று தவறாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்று அந்த மேன்முறையீட்டிற்கான காரணங்களில் ஒன்றாக வலியுறுத்தலாம்.

(3) இந்த உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், நாடாளுமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்தாலன்றி, ஓர் உயர் நீதிமன்றத்தின் தனித்த ஒரு நீதிபதியின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது இறுதியாணை எதுவும் உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்துகொள்வதற்கு உற்றது ஆகாது.

134. குற்றவியல் பொருட்பாடுகள் குறித்து உச்ச நீதிமன்றத்திற்குள்ள மேன் முறையீட்டு அதிகாரவரம்பு:

(1) குற்றவியல் நடவடிக்கை ஒன்றில் இந்திய ஆட்சிநிலவரையிலுள்ள ஓர் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரை, இறுதியாணை அல்லது தீர்ப்புத் தண்டனை எதுவும், அந்த உயர் நீதிமன்றம்—

(அ) குற்றஞ்சார்த்தப்பெற்ற ஒருவரைக் குற்றத்தினின்றும் விடுதலை செய்யும் ஆணைமீதான மேன்முறையீட்டில் அதை மாற்றியமைத்து அவருக்கு மரண தண்டனை விதித்திருக்குமாயின், அல்லது

(ஆ) தன் அதிகாரத்தின் கீழமைந்த நீதிமன்றம் எதிலிருந்தும் வழக்கு ஒன்றை விசாரணைக்காகத் தன்முன் எடுத்துக்கொண்டு குற்றஞ்சார்த்தப் பெற்றவரை அந்த விசாரணையில், குற்றவாளி என்று தீர்ப்பளித்து, அவருக்கு மரண தண்டனை விதித்திருக்குமாயின், அல்லது

(இ) ஒரு வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யப்படத்தக்கது என 134அ உறுப்பின்படி உறுதியுரையளிக்குமாயின்

உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்து கொள்வதற்கு உற்றது ஆகும் :

வரம்புரையாக: (இ) உட்கூறின்படியான மேன்முறையீடு, 145 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்படி அதன்பொருட்டுச் செய்யப்படும் வகையங்களுக்கும் உயர் நீதிமன்றம் வகுத்திடும் அல்லது வேண்டுறுத்தும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டதாயிருக்கும்.

(2) குற்றவியல் நடவடிக்கை ஒன்றில் இந்திய ஆட்சிநிலவரையிலுள்ள ஓர் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரை, இறுதியாணை அல்லது தீர்ப்புத்தண்டனை எதிலிருந்தும் எழும் மேன்முறையீடுகளை ஏற்பதற்கும் விசாரணை செய்வதற்கும் நாடாளுமன்றம் சட்டத்தினால், அத்தகைய சட்டத்தில் குறித்துரைக்கப்படும் வரைக்கட்டுகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்ட கூடுதல் அதிகாரங்களை உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கலாம்.

134அ. உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்துகொள்வதற்கான உறுதியுரை :

132ஆம் உறுப்பின் (1) ஆம் கூறில் அல்லது 133 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறில் அல்லது 134ஆம் உறுப்பின் (1) ஆம் கூறில் சுட்டப்பட்ட தீர்ப்புரை, தீர்ப்பாணை, இறுதியாணை அல்லது தீர்ப்புத் தண்டனை எதனையும் வழங்கும் அல்லது பிறப்பிக்கும் உயர் நீதிமன்றம், அவ்வாறு வழங்கிய அல்லது பிறப்பித்த பின்பு, கூடியவிரைவில், அவ்வழக்கினைப் பொறுத்து, 132 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறில் அல்லது 133 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறில் அல்லது 134 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின் (இ) உட்கூறில் சுட்டப்பட்ட தன்மையுடைய உறுதியுரை ஒன்றை அளிக்கலாமா என்ற பிரச்சினையைப் பற்றி —

(அ) தானே முனைந்து முடிவு செய்வது பொருத்தமெனக் கொள்ளுமாயின், தானே முடிவு செய்யலாம்; மற்றும்

(ஆ) அத்தகைய தீர்ப்புரை, தீர்ப்பாணை, இறுதியாணை அல்லது தீர்ப்புத் தண்டனை வழங்கப்பட்டதும் அல்லது பிறப்பிக்கப்பட்டதும் உடனடியாக, குறையுற்ற தரப்பினரால் அல்லது அவர் சார்பில் வாய்மொழியாக விண்ணப்பம் ஒன்று செய்துகொள்ளப்படுமாயின், அதன்மீது முடிவு செய்தல் வேண்டும்.

135. நிலவுறும் சட்டத்தின்படி கூட்டாட்சிய நீதிமன்றத்திற்குள்ள அதிகாரவரம்பும் அதிகாரங்களும் உச்ச நீதிமன்றத்தாலும் செலுத்தத்தகுவன ஆகும் :

133ஆம் உறுப்பின் அல்லது 134 ஆம் உறுப்பின் வகையங்கள் பொருந்துறாத பொருட்பாடு எதனையும் பொறுத்த அதிகாரவரம்பும் அதிகாரங்களும், நிலவுறும் சட்டம் ஒன்றன்படி இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு கூட்டாட்சிய நீதிமன்றத்தால் செலுத்தத்தகுவனவாக இருந்திருப்பின், நாடாளுமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்கிறவரையில், அந்தப் பொருட்பாடு தொடர்பான அதிகாரவரம்பு, அதிகாரங்கள் ஆகியவற்றையும் உச்ச நீதிமன்றம் உடையது ஆகும்.

136. உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்துகொள்வதற்கு அதன் தனியுறு அனுமதி :

(1) இந்த அத்தியாயத்தில் எது எவ்வாறிருப்பினும், உச்ச நீதிமன்றம், தனது உளத்தேர்வின்படி, இந்திய ஆட்சிநிலவரையிலுள்ள ஒரு நீதிமன்றத்தால் அல்லது தீர்ப்பாயத்தால் வழக்கு அல்லது பொருட்பாடு எதிலும் வழங்கப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை, தீர்ப்பாணை, அறுதித்தீர்வு, தீர்ப்புத் தண்டனை அல்லது ஆணை எதிலிருந்தும் மேன்முறையீடு செய்துகொள்வதற்குத் தனியுறு அனுமதி அளிக்கலாம்.

(2). (1)ஆம் கூறிலுள்ள எதுவும், ஆயுதப்படைகள் தொடர்பான சட்டம் ஒன்றினாலோ அதன் வழியாலோ அமைக்கப்பட்ட நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் ஒன்றினால் பிறப்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட தீர்ப்புரை, அறுதித்தீர்வு, தீர்ப்புத் தண்டனை அல்லது ஆணை எதற்கும் பொருந்துறுவதில்லை.

137. உச்ச நீதிமன்றம் தன் தீர்ப்புரைகளை அல்லது ஆணைகளை மறு ஆய்வு செய்தல் :

உச்ச நீதிமன்றம், தான் பகர்ந்த தீர்ப்புரை அல்லது பிறப்பித்த ஆணை எதனையும் தானே மறு ஆய்வு செய்வதற்கு நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்தின் வகையங்களுக்கும் 145 ஆம் உறுப்பின்படி வகுக்கப்படும் விதிகளுக்கும் உட்பட்டு, அதிகாரம் உடையது ஆகும்.

138. உச்ச நீதிமன்ற அதிகாரவரம்பை விரிவாக்குதல் :

(1) உச்ச நீதிமன்றம், ஒன்றியத்துப் பட்டியலிலுள்ள பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்து நாடாளுமன்றம் சட்டத்தினால் வழங்கும் கூடுதல் அதிகாரவரம்பையும் அதிகாரங்களையும் உடையது ஆகும்.

(2) எந்தப் பொருட்பாடு பொறுத்தேனும் இந்திய அரசாங்கமும் ஒரு மாநில அரசாங்கமும் செய்துகொள்ளும் தனியுறு உடன்பாட்டின் வழியாக உச்ச நீதிமன்றத்திற்குக் கூடுதல் அதிகாரவரம்பையும் அதிகாரங்களையும் வழங்கி, உச்ச நீதிமன்றம் அவற்றைச் செலுத்துவதற்கு நாடாளுமன்றம் சட்டத்தினால் வகைசெய்யுமாயின், உச்ச நீதிமன்றம், அத்தகைய கூடுதல் அதிகாரவரம்பையும் அதிகாரங்களையும் உடையது ஆகும்.

139. குறித்தசில நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரங்களை உச்ச நீதிமன்றத்திற்கு வழங்குதல் :

32 ஆம் உறுப்பின் (2) ஆம் கூறில் குறிப்பிடப்பட்டவை அல்லாத பிற எந்த நோக்கங்களுக்காகவும் பணிப்புரைகளை, ஆணைகளை அல்லது ஆட்கொணர்விப்பு, செயலுறுத்து, தடையுறுத்து, தகுதிவினவு, நெறிமுறைக்கேட்பு ஆகியவற்றின் தன்மைகொண்ட நீதிப்பேராணைகளை அல்லது அவற்றில் எதனையும் பிறப்பிக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றம் சட்டத்தினால் உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கலாம்.

139அ. குறித்தசில வழக்குகளை மாற்றுகை செய்தல் :

(1) ஒரே மாதிரியான அல்லது உட்பொருளில் ஒரே மாதிரியான சட்டப் பிரச்சினைகள் அடங்கிய வழக்குகள், உச்ச நீதிமன்றம், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்கள் இவற்றின் முன்போ, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களின் முன்போ முடிவுறாநிலையிலிருக்குங்கால், உச்ச நீதிமன்றம், தானே முனைந்தோ இந்தியத் தலைமை வழக்கறிஞரால் அல்லது அத்தகைய வழக்கு ஒன்றின் தரப்பினர் ஒருவரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீதோ, அத்தகைய பிரச்சினைகள் பொது முக்கியத்துவம் வாய்ந்த செறிவான பிரச்சினைகளாக இருக்கின்றன எனத் தெளிவுறக்காணுமாயின், அந்த உயர் நீதிமன்றத்தின் அல்லது உயர் நீதிமன்றங்களின் முன்பு முடிவுறாநிலையிலுள்ள வழக்கு அல்லது வழக்குகளை உச்ச நீதிமன்றம் தன்முன்னர் எடுத்துக் கொண்டு அந்த வழக்குகள் அனைத்தையும் தானே முடிவு செய்யலாம் :

வரம்புரையாக: உச்ச நீதிமன்றம் மேற்சொன்ன சட்டப் பிரச்சினைகளை அறுதியாகத் தீர்வு செய்தபின்பு, தன்முன்னர் எடுத்துக்கொண்ட வழக்கினை, அத்தகைய பிரச்சினைகளின்மீது தான் அளித்த தீர்ப்புரையின் படியுடன், அந்த வழக்கு எந்த உயர் நீதிமன்றத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டதோ அந்த உயர் நீதிமன்றத்திற்கு அதைத் திருப்பியனுப்பும்; அதனைப் பெற்றுக்கொண்டதன்மேல் அந்த உயர் நீதிமன்றம் அத்தகைய தீர்ப்புரைக்கிணங்க அந்த வழக்கினை முடிவு செய்ய முற்படுதல் வேண்டும்.

(2) ஓர் உயர் நீதிமன்றத்தின் முன்பு முடிவுறாநிலையிலுள்ள வழக்கு, மேன்முறையீடு அல்லது பிற நடவடிக்கை எதனையும், பிறிதோர் உயர் நீதிமன்றத்திற்கு மாற்றுகை செய்வது நீதிவழுவா நெறிமுறைக்கு உகந்ததாக இருக்கும் என உச்ச நீதிமன்றம் கருதுமாயின், அது அவ்வாறே மாற்றலாம்.

140. உச்ச நீதிமன்றத்தின் சார்பியல்வான அதிகாரங்கள் :

இந்த அரசமைப்பினாலோ அதன் வழியாலோ வழங்கப்பட்ட அதிகாரத்தை மேலும் திறம்படச் செலுத்த உச்ச நீதிமன்றத்தை இயல்விப்பதற்குத் தேவையாக அல்லது ஏற்புடையவையாக உள்ளவையும், இந்த அரசமைப்பின் வகையங்களில் எதற்கும் முரணாக இல்லாதவையுமான துணைவுறு அதிகாரங்களை அந்நீதிமன்றத்திற்கு வழங்குவதற்கு நாடாளுமன்றம் சட்டத்தினால் வகை செய்யலாம்.

141. உச்ச நீதிமன்றத்தால் விளம்பப்படும் சட்ட நெறி, நீதி மன்றங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் :

உச்ச நீதிமன்றத்தால் விளம்பப்படும் சட்டநெறி, இந்திய ஆட்சிநிலவரைக்குள் உள்ள நீதிமன்றங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தும்.

142. உச்ச நீதிமன்றத் தீர்ப்பாணைகள், ஆணைகள் இவற்றைச் செயலுறுத்துதலும், வெளிக்கொணர்தல் முதலியவை குறித்த ஆணைகளும் :

(1) உச்ச நீதிமன்றம் தனது அதிகாரத்தைச் செலுத்துகையில், தன்முன் முடிவுறாநிலையிலுள்ள வழக்கு அல்லது பொருட்பாடு எதிலும் நிறைவுறு நீதி நிலையுறச்செய்வதற்குத் தேவையாகும் தீர்ப்பாணையை வழங்கலாம் அல்லது எதனையும் பிறப்பிக்கலாம்; அவ்வாறு வழங்கப்பட்ட தீர்ப்பாணை அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும், நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தாலோ அதன் வழியாலோ வகுத்துரைக்கப்படும் முறையிலும், அவ்வாறு நாடாளுமன்றம் வகைசெய்யும் வரையில், குடியரசுத்தலைவர் ஆணையின்வழி வகுத்துரைக்கும் முறையிலும், இந்திய ஆட்சிநிலவரை எங்கணும் செயலுறுத்தத் தகுவது ஆகும்.

(2) நாடாளுமன்றத்தால் இதன்பொருட்டு இயற்றப்படும் சட்டம் ஒன்றன் வகையங்களுக்கு உட்பட்டு, உச்ச நீதிமன்றம், இந்திய ஆட்சிநிலவரை முழுவதிலும், எவரையும் தன்முன் வரவழைப்பதற்காக, ஆவணங்கள் எவற்றையும் வெளிக்கொணர்வதற்காக அல்லது முன்னிலைப்படுத்துவதற்காக அல்லது தன்னை அவமதித்த குற்றம் பற்றி விசாரிக்கவோ அது குறித்துத் தண்டனை விதிக்கவோ ஆணை எதனையும் பிறப்பிப்பதற்கான அதிகாரங்கள் அனைத்தையும் உடையது ஆகும்.

143. உச்ச நீதிமன்றத்துடன் கலந்தாய்வு செய்வதற்குக் குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரம் :

(1) சட்டவிளக்கம் அல்லது பொருண்மை பற்றி எழுந்துள்ள அல்லது எழக்கூடிய ஒரு பிரச்சினையின் தன்மை அல்லது பொது முக்கியத்துவம் காரணமாக அதன்மீது உச்ச நீதிமன்றத்தின் கருத்துரையைப் பெறுவது உகந்தது என்று குடியரசுத்தலைவருக்கு எச்சமயத்திலேனும் தோன்றுமாயின், அப்பொழுது, அவர் அப்பிரச்சினையை ஓர்வு செய்யுமாறு அந்நீதிமன்றத்திற்குக் குறித்தனுப்பலாம்; அதன்மீது அந்நீதிமன்றம் தான் தக்கதெனக் கருதும் விசாரணைக்குப் பின்பு, தன் கருத்துரையைக் குடியரசுத்தலைவருக்குத் தெரிவிக்கும்.

(2). 131 ஆம் உறுப்பின் வரம்புரையில் எது எவ்வாறிருப்பினும், குடியரசுத்தலைவர், அந்த வரம்புரையில் குறிப்பிடப்பட்ட வகை சார்ந்த ஒரு வழக்கை உச்ச நீதிமன்றத்தின் கருத்துரையைப் பெறுவதற்காக அதற்குக் குறித்தனுப்பலாம்; அதன்மீது உச்ச நீதிமன்றம் தான் தக்கதெனக் கருதும் விசாரணைக்குப் பின்பு, தன் கருத்துரையைக் குடியரசுத்தலைவருக்குத் தெரிவிக்கும்.

144. ஆட்சிமுறை மற்றும் நீதிமுறை அதிகாரஅமைப்புகள் உச்ச நீதிமன்றத்திற்கு உதவும் வகையில் செயலுறும் :

இந்திய ஆட்சிநிலவரையிலுள்ள ஆட்சிமுறை மற்றும் நீதிமுறை அதிகாரஅமைப்புகள் அனைத்தும், உச்ச நீதிமன்றத்திற்கு உதவும் வகையில் செயலுறவேண்டும்.

[144அ * * * *]

145. நீதிமன்ற விதிகள் முதலியன :

(1) நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, உச்ச நீதிமன்றம், குடியரசுத்தலைவரின் ஒப்பேற்புடன், பின்கண்டவை உள்ளடங்கலாக, அந்நீதிமன்றத்தின் நடைமுறையையும் நெறிமுறையையும் பொதுவாறாக ஒழுங்குறுத்துவதற்கான விதிகளை அவ்வப்போது வகுத்திடலாம்—

(அ) அந்நீதிமன்றத்தில் வழக்குரைத்தொழில் புரிபவர்கள் குறித்த விதிகள்;

(ஆ) மேல்முறையீடுகளை விசாரிப்பதற்கான நெறிமுறை, மற்றும் எந்தக் கால அளவிற்குள் மேன்முறையீடுகளை அந்நீதிமன்றத்தில் முன்னிட வேண்டும் என்பது உள்ளடங்கலாக, மேன்முறையீடு தொடர்பான பிற பொருட்பாடுகள் ஆகியவை குறித்த விதிகள்;

1977ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து மூன்றாம் திருத்தம்)ச் சட்டத்தின் 5ஆம் பிரிவினால் (13–4–1978 முதல் செல்திறம் பெறுமாறு நீக்கறவு செய்யப்பட்டது.

(இ) III ஆம் பகுதியின்படி வழங்கப்பட்ட உரிமைகளில் எதனையும் அந்நீதிமன்றம் செயலுறுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்த விதிகள்;

(ஈ) 139அ உறுப்பின்படி அந்நீதிமன்றத்தின் முன்புள்ள நடவடிக்கைகள் குறித்த விதிகள்;

(உ) 134ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின் (இ) உட்கூறின்படி மேன்முறையீடுகளை ஏற்று எடுப்பது குறித்த விதிகள்;

(ஊ) அந்நீதிமன்றத்தால் பகரப்பட்ட தீர்ப்புரையோ பிறப்பிக்கப்பட்ட ஆணையோ எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு மறுஆய்வு செய்யப்படலாம் என்பது குறித்த விதிகள்; மேலும் அத்தகைய மறுஆய்வு செய்வதற்கு எந்தக் காலஅளவிற்குள் அந்நீதிமன்றத்திற்கு விண்ணப்பங்கள் முன்னிடப்பட வேண்டும் என்பது உள்ளடங்கலாக, அத்தகைய மறுஆய்வு செய்தற்குரிய நெறிமுறை குறித்த விதிகள்;

(எ) அந்நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும், அவற்றைச் சார்ந்தவற்றிற்குமான செலவடைகள், அவற்றைப் பொறுத்து விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள் ஆகியவை குறித்த விதிகள்;

(ஏ) பிணையத்தில் விடுவிப்பது குறித்த விதிகள்;

(ஐ) நடவடிக்கைகளை நிறுத்திவைப்பது குறித்த விதிகள்;

(ஒ) அற்பமானது அல்லது அலைக்கழிப்பதாகவுள்ளது அல்லது காலங்கடத்துவதற்கென்றே கொணரப்பட்டுள்ளது என்று அந்நீதிமன்றத்திற்குத் தோன்றும் மேன்முறையீடு எதனையும் குறுகு முறையில் அறுதித்தீர்வு செய்வதற்கு வகைசெய்யும் விதிகள்;

(ஓ) 317 உறுப்பின் (1) ஆம் கூறில் சுட்டப்பட்டுள்ள விசாரணைகளுக்கான நெறிமுறை குறித்த விதிகள்.

(2). (3)ஆம் கூறின் வகையங்களுக்கு உட்பட்டு, எந்த வகையான விசாரணைக்காகவும் அமரவேண்டிய நீதிபதிகளின் எண்ணிக்கை குறைந்தது எத்தனை இருக்கவேண்டும் என்பதை இந்த உறுப்பின்படி வகுக்கப்பட்ட விதிகள் நிருணயிக்கலாம்; தனித்தமர் நீதிபதிகளுக்கும் நீதியர் ஆயங்களுக்கும் உள்ள அதிகாரங்களுக்கு இவ்விதிகள் வகைசெய்யலாம்.

(3) இந்த அரசமைப்பின் பொருள்கோள் குறித்த செறிவான சட்டப்பிரச்சினை ஒன்று அடங்கியுள்ள வழக்கு எதனையும் தீர்வு செய்வதற்கோ 143ஆம் உறுப்பின்படி குறித்தனுப்பப்படும் எதனையும் விசாரிப்பதற்கோ அமரவேண்டிய நீதிபதிகளின் எண்ணிக்கை குறைந்தது ஐந்தாக இருத்தல் வேண்டும்:

வரம்புரையாக: 132ஆம் உறுப்பு நீங்கலாக, இந்த அத்தியாயத்தின் பிற வகையங்களில் ஒன்றன்படி மேன்முறையீட்டை விசாரிக்கும் நீதிமன்றம் ஐவருக்குக் குறைவான நீதிபதிகளைக் கொண்டிருந்து, அந்த மேன்முறையீட்டை விசாரிக்கையில் இந்த அரசமைப்பின் பொருள்கோள் குறித்த செறிவான சட்டப்பிரச்சனை அந்த மேன்முறையீட்டில் அடங்கியுள்ளது என்றும், அதைத் தீர்மானிப்பது அந்த மேன்முறையீட்டை முடிவு செய்வதற்குத் தேவையாகவுள்ளது என்றும் தெளிவுறக்காணுமிடத்து, அந்நீதிமன்றம், அந்த பிரச்சினை அடங்கியுள்ள வழக்கு ஒன்றைத் தீர்வுசெய்வதற்காக இந்தக் கூறில் வேண்டுறுத்தப்பட்டுள்ளவாறு அமைக்கப்படும் ஒரு நீதிமன்றத்திற்கு, அதன் கருத்துரையைக் கோரி, அப்பிரச்சினையைக் குறித்தனுப்புதல் வேண்டும்; அக்கருத்துரையைப் பெற்றதன்மேல், அத்தகைய கருத்துரைக்கிணங்க, அந்த மேன்முறையீட்டை முடிவு செய்தல் வேண்டும்.

(4) உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்புரை எதுவும் நீதிமன்றப் பொதுவில் அல்லாமல் வழங்கப்படுதல் ஆகாது; அவ்வாறே, நீதிமன்றப் பொதுவில் வழங்கப்பட்ட கருத்துரையின்படி அல்லாமல், 143ஆம் உறுப்பின்படி அறிக்கை எதுவும் அளிக்கப்படுதல் ஆகாது.

(5) தீர்ப்புரை எதுவும் மற்றும் அத்தகைய கருத்துரை எதுவும் அவ்வழக்கின் விசாரனையின்போது அமர்ந்திருந்த நீதிபதிகளில் பெரும்பான்மையோருடைய ஒருங்கிசைவுடன் அல்லாமல், உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்படுதல் ஆகாது; ஆனால், ஒருங்கிசைவளிக்காத நீதிபதி ஒருவர் தமது மாறுபட்ட தீர்ப்புரையையோ கருத்துரையையோ வழங்குவதை இந்த கூறிலுள்ள எதுவும் தடையூறு செய்வதாகக் கொள்ளுதல் ஆகாது.

146. உச்ச நீதிமன்றத்தின் அலுவலர்களும் பணியாளர்களும் செலவுகளும் :

(1) உச்ச நீதிமன்றத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோர் இந்தியத் தலைமை நீதிபதியாலோ அவரால் பணிக்கப்பெறும் அந்நீதிமன்றத்தின் வேறொரு நீதிபதியாலோ அலுவலராலோ அமர்த்தப்பெறுவர்:

வரம்புரையாக: குடியரசுத்தலைவர், தாம் வகுக்கும் விதியின் வாயிலாக, அவ்விதியில் குறித்துரைக்கப்படும் நேர்வுகளில், ஏற்கெனவே அந்நீதிமன்றத்தைச் சேர்ந்தவர் அல்லாத எவரும், ஒன்றியத்து அரசுப் பணியாளர் தேர்வாணையத்தைக் கலந்தாய்வு செய்தபின்பல்லாமல், அந்நீதிமன்றம் தொடர்பான பதவி எதற்கும் அமர்த்தப்பெறுதல் ஆகாது என வேண்டுறுத்தலாம்.

(2) நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டம் ஒன்றன் வகையங்களுக்கு உட்பட்டு, உச்ச நீதிமன்ற அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரின் பணிவரைக்கட்டுகள், இந்திய தலைமை நீதிபதியாலோ அவரால் அதற்கென விதிகள் வகுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அந்நீதிமன்றத்தின் வேறு நீதிபதி அல்லது அலுவலர் ஒருவராலோ வகுக்கப்படும் விதிகள் வகுத்துரைக்கின்றவாறு இருக்கும்:

வரம்புரையாக: இந்தக் கூறின்படி வகுக்கப்படும் விதிகளில் வரையூதியங்கள், படித்தொகைகள், விடுப்பு அல்லது ஓய்வூதியங்கள் பற்றிய விதிகளுக்குக் குடியரசுத்தலைவரின் ஒப்பேற்பு வேண்டுவது ஆகும்.

(3) உச்ச நீதிமன்றத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கும் அவர்கள் பொறுத்தும் வழங்கத்தக்க வரையூதியங்கள், படித்தொகைகள், ஓய்வூதியங்கள் அனைத்தும் உள்ளிட்ட அதன் நிருவாக செலவுகள், இந்தியத்திரள்நிதியத்தின்மீது சார்த்தப்படும்; மேலும் அந்நீதிமன்றம் பெறும் கட்டணங்களும் பிற பணத்தொகைகளும் அந்நிதியத்தை சேர்வன ஆகும்.

147. பொருள்கோள் :

இந்த அத்தியாயத்திலும் VI ஆம் பகுதியின் V ஆம் அத்தியாத்திலும் இந்த அரசமைப்பின் பொருள்கோள் குறித்த செறிவான சட்டப்பிரச்சினை என்று சுட்டப்படுபவை, 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் (அந்தச் சட்டத்தைத் திருத்தம் செய்யும் அல்லது அதற்குத் துணையாக அமையும் சட்டம் எதுவும் உள்ளடங்கலாக), ஆட்சியவையின் ஆணை அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது 1946 ஆம் ஆண்டு இந்திய விடுதலைச் சட்டம் அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஆகியவற்றின் பொருள்கோள் குறித்த செறிவான சட்டப் பிரச்சினைகளையும் உள்ளடக்குவனவாகப் பொருள் கொள்ளப்படும்.

அத்தியாயம் V

இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர்

148. இந்தியக் கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையர் :

(1) இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர் என்று ஒருவர் இருப்பார்; குடியரசுத்தலைவர் தம் கையொப்பமும் முத்திரையும் கொண்ட அதிகார ஆணையின்வழி அவரை அமர்த்துவார்; மேலும், உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரை அகற்றுவதுபோல் அதே முறையிலும் அதே காரணங்களின் மீதும் மட்டுமே அவர் பதவியிலிருந்து அகற்றப்பெறுவார்.

(2) இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையராக அமர்த்தப்பெறும் ஒவ்வொருவரும் தாம் பதவி ஏற்பதற்கு முன்பு, குடியரசுத்தலைவரின் அல்லது அதன்பொருட்டு அவரால் அமர்த்தப்பெறும் ஒருவரின் முன்னிலையில், மூன்றாம் இணைப்புப்பட்டியலில் அதற்கென உள்ள சொன்முறையில், ஓர் ஆணைமொழியை அல்லது உறுதிமொழியை ஏற்றுக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(3) கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரின் வரையூதியமும் பிற பணிவரைக்கட்டுகளும் நாடாளுமன்றம் சட்டத்தினால் தீர்மானிக்கிறவாறு இருக்கும்; அவ்வாறு தீர்மானிக்கப்படுகிற வரையில் அவை இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு இருந்துவரும்:

வரம்புரையாக: கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரின் வரையூதியமோ வாராமை விடுப்பு, ஓய்வூதியம் அல்லது ஓய்வுபெறும் வயது பொறுத்த அவரது உரிமைகளோ அவர் அமர்த்தப்பெற்றதன் பின்பு அவருக்குப் பாதகமான வகையில் மாற்றப்படுதல் ஆகாது.

(4) கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர், தாம் பதவி வகிப்பது அற்றுப்போனபின்பு, இந்திய அரசாங்கத்தின்கீழோ மாநிலம் ஒன்றின் அரசாங்கத்தின்கீழோ மேற்கொண்டும் பதவி வகிக்கத் தகுமையுடையவர் ஆகார்.

(5) இந்த அரசமைப்பு, நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டம் ஆகியவற்றின் வகையங்களுக்கு உட்பட்டு, இந்தியத் தணிக்கைக் கணக்குத் துறையில் பணிபுரிபவர்களின் பணிவரைக்கட்டுகளும் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையரின் நிருவாக அதிகாரங்களும் அவரைக் கலந்தாய்வு செய்த பின்பு குடியரசுத்தலைவரால் வகுக்கப்படும் விதிகளின்வழி வகுத்துரைக்கப்படுகிறவாறு இருக்கும்.

(6) கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரின் அலுவலகத்தில் பணி புரிபவர்களுக்கோ அவர்கள் பொறுத்தோ வழங்கத்தக்க வரையூதியங்கள், படித்தொகைகள், ஓய்வூதியங்கள் அனைத்தும் உள்ளடங்கலான அந்த அலுவலகத்து நிருவாகச் செலவுகள் இந்தியத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்படும்.

149. கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையரின் கடமைகளும் அதிகாரங்களும் :

ஒன்றியம், மாநிலங்கள், பிற அதிகார அமைப்பு அல்லது குழுமம் ஆகியவற்றின் கணக்குகள் தொடர்பாக, நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தாலோ அதன் வழியாலோ வகுத்துரைக்கப்படும் கடமைகளைக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர் புரிவார், அதிகாரங்களைச் செலுத்துவார்; அதன் பொருட்டு, அவ்வாறு வகைசெய்யப்படும் வரையில், இந்தியத் தன்னாட்சியம், மாகாணங்கள் ஆகியவற்றின் கணக்குகள் தொடர்பாக, இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, இந்தியத் தலைமைத் தணிக்கையருக்கு முறையே ஒன்றியம், மாநிலங்கள் ஆகியவற்றின் கணக்குகள் தொடர்பாக வழங்கப்பட்டதான அல்லது அவரால் செலுத்தத்தகுமான கடமைகளைப் புரிந்தும், அதிகாரங்களைச் செலுத்தியும் வருவார்.

150. ஒன்றியம், மாநிலங்கள் ஆகியவற்றின் கணக்குகளின் அமைவுமுறை :

ஒன்றியம், மாநிலங்கள் ஆகியவற்றின் கணக்குகள் இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரின் தேர்வுரை மீது, குடியரசுத்தலைவர் வகுத்துரைக்கும் அமைவுமுறையில் வைத்துவரப்படுதல் வேண்டும்.

151. தணிக்கை அறிக்கைகள் :

(1) ஒன்றியத்தின் கணக்குகளைப் பொறுத்த இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரின் அறிக்கைகள், குடியரசுத்தலைவருக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்; அவற்றை அவர் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கும்படி செய்வார்.

(2) ஒரு மாநிலத்தின் கணக்குகளைப் பொறுத்த, இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரின் அறிக்கைகள், அந்த மாநிலத்தின் ஆளுநருக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்; அவற்றை அவர் அந்த மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்கும்படி செய்வார்.

பகுதி VI

மாநிலங்கள்

அத்தியாயம் I—பொதுவியல்

152. பொருள்வரையறை :

இந்தப் பகுதியில் தறுவாயின் தேவை வேறானாலன்றி, "மாநிலம்" என்னும் சொல், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை உள்ளடக்குவதில்லை.

அத்தியாயம் II

ஆட்சித் துறை

ஆளுநர்

153. மாநிலங்களின் ஆளுநர்கள் :

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஆளுநர் என்று ஒருவர் இருப்பார்:

வரம்புரையாக: ஒருவரையே இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஆளுநராக அமர்த்துவதற்கு இந்த உறுப்பில் உள்ள எதுவும் தடையூறு ஆவதில்லை.

154. மாநிலத்தின் ஆட்சி அதிகாரம் :

(1) மாநிலத்தின் ஆட்சி அதிகாரம் ஆளுநரிடம் உற்றமைந்திருக்கும்; மேலும், அதை அவர் நேரடியாகவோ தமக்கு கீழமைந்துள்ள பதவியாளர்கள் வழியாகவோ இந்த அரசமைப்புக்கு இணங்கச் செலுத்தி வருவார்.

(2) இந்த உறுப்பிலுள்ள எதுவும்–

(அ) நிலவுறும் சட்டம் ஒன்றினால் பிறவகை அதிகாரஅமைப்பு எதற்கும் வழங்கப்பட்ட பதவிப்பணிகள் எவற்றையும் ஆளுநருக்கு மாற்றுவதாகக் கொள்ளப்படுதல் ஆகாது; அல்லது

(ஆ) நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றம் சட்டத்தினால் ஆளுநரின் கீழமைந்துள்ள அதிகாரஅமைப்பு எதற்கும் பதவிப்பணிகளை வழங்குவதற்குத் தடையூறு ஆவதில்லை.

155. ஆளுநரை அமர்த்துதல் :

ஒரு மாநிலத்தின் ஆளுநர், குடியரசுத்தலைவரால் அவருடைய கையொப்பமும் முத்திரையும் கொண்ட அதிகார ஆணையின்வழி அமர்த்தப்பெறுவார்.

156. ஆளுநரின் பதவிக்காலம் :

(1) ஆளுநர், குடியரசுத்தலைவர் விழையுமளவும் பதவி வகிப்பர்.

(2) ஆளுநர், தம் கையொப்பமிட்டுக் குடியரசுத்தலைவருக்கு எழுத்து வழித் தெரிவித்துத் தம் பதவியை விட்டுவிலகிக்கொள்ளலாம்.

(3) இந்த உறுப்பின் மேலேகண்ட வகையங்களுக்கு உட்பட்டு, ஆளுநர் ஒருவர், தாம் பதவி ஏற்கும் தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்குப் பதவி வகிப்பார் :

வரம்புரையாக: ஆளுநர் ஒருவர் தம் பதவிக்காலம் கழிவுற்றாலுங்கூட, அவருக்கு அடுத்து வருபவர் பதவி ஏற்கும் வரையிலும் தொடர்ந்து பதவி வகித்து வருவார்.

157. ஆளுநராக அமர்த்தப் பெறுவதற்கான தகுதிப்பாடுகள் :

ஒருவர், இந்தியாவின் குடிமகனாகவும், முப்பத்தைந்து வயது முடிந்தவராகவும் இருந்தாலன்றி, அவர் ஆளுநராக அமர்த்தப்பெறுவதற்கான தகுமையுடையவர் ஆகார்.

158. ஆளுநரின் பதவிக்கான வரைமுறைகள் :

(1) ஆளுநர், நாடாளுமன்ற ஈரவைகளில் எதிலுமோ முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மாநிலம் ஒன்றன் சட்டமன்ற அவை ஒன்றிலோ உறுப்பினராக இருத்தல் ஆகாது; மேலும், நாடாளுமன்ற ஈரவைகளில் ஒன்றன் அல்லது ஒரு மாநிலச் சட்டமன்ற அவை ஒன்றன் உறுப்பினராகவுள்ள ஒருவர் ஆளுநராக அமர்த்தப்பெறுவாராயின், அவர் ஆளுநராகப் பதவி ஏற்கும் தேதியன்று அந்த அவையிலுள்ள தம் பதவியிடத்தை விட்டகன்றவராகக் கொள்ளப்பெறுவார்.

(2) ஆளுநர், பிற ஊதியப்பதவி எதனையும் வகித்தல் ஆகாது.

(3) ஆளுநர், தம் பதவிக்குரிய உறைவிடங்களில் வாடகை ஏதுமின்றி உறைவதற்கு உரிமைகொண்டவர் ஆவார்; நாடாளுமன்றம் சட்டத்தினால் தீர்மானிக்கும் பதவியூதியங்கள், படித்தொகைகள், மதிப்புரிமைகள் ஆகியவற்றிற்கும் அவர் உரிமைகொண்டவர் ஆவார்; அவ்வாறு அதன்பொருட்டு வகைசெய்யப்படும் வரையிலும், இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதவியூதியங்கள், படித்தொகைகள், மதிப்புரிமைகள் ஆகியவற்றிற்கு அவர் உரிமைகொண்டவர் ஆவார்.

(3அ) ஒருவரே இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராக அமர்த்தப்பெறுமிடத்து, ஆளுநருக்கு வழங்கத்தகுமான பதவியூதியங்களையும் படித்தொகைகளையும், குடியரசுத்தலைவரால் ஆணையின் வழித் தீர்மானிக்கப்படும் வீதத்திற்கேற்ப, அந்தந்த மாநிலங்கள் பகிர்ந்தளித்தல் வேண்டும்.

(4) ஆளுநருக்குற்ற பதவியூதியங்களையும் படித்தொகைகளையும் அவருடைய பதவிக்காலத்தின் போது குறைத்துவிடுதல் ஆகாது.

159. ஆளுநருக்குற்ற ஆணைமொழி அல்லது உறுதிமொழி :

ஆளுநர் ஒவ்வொருவரும், ஆளுநரின் பதவிப்பணிகளை ஆற்றிவரும் ஒவ்வொருவரும், தம் பதவி ஏற்பதற்கு முன்பு, அந்த மாநிலம் தொடர்பாக அதிகாரம் செலுத்தும் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியின் முன்னிலையில் அல்லது அவர் இல்லாதபோது, ஆங்கிருக்கும் உயர் நீதிமன்ற நீதிபதிகளில் மிக்க முதுநிலையராக உள்ள ஒருவரின் முன்னிலையில், ஓர் ஆணைமொழியை அல்லது உறுதிமொழியைப் பின்வரும் சொன்முறையில் உள்ளபடி ஏற்றுக் கையொப்பமிடுதல் வேண்டும்: அதாவது–

"அ.ஆ. ஆகிய நான் உண்மையான பற்றுடன்..... (மாநிலத்தின் பெயர்) ஆளுநர் பதவிப் பொறுப்பை நிறைவேற்றி வருவதோடு (அல்லது ஆளுநருக்குள்ள பதவிப்பணிகளை ஆற்றிவருவதோடு) அரசமைப்பு முறையினையும் சட்டநெறியினையும் என் முழுத்திறன்கொண்டு புரந்தும் பேணியும் புறங்காத்தும் நிற்பேன் என்றும் ..... (மாநிலத்தின் பெயர்) மக்கள் நற்பணிக்கும் நல்வாழ்வுக்கும் முற்றுமாக என்னை நான் ஆட்படுத்திக் கொள்வேன் என்றும் கடவுளை முன்னிறுத்தி ஆணைமொழிகின்றேன்" உள்ளார்ந்து உறுதிமொழிகின்றேன்."

160. குறித்தசில எதிருறு நிகழ்வுகளில் ஆளுநரின் பதவிப் பணிகளை ஆற்றிவருதல் :

இந்த அத்தியாயத்தில் வகைசெய்யப்பட்டிராத எதிருறு நிகழ்வு எதிலும், மாநில ஆளுநரின் பதவிப்பணிகளை ஆற்றிவருவதற்கு, குடியரசுத்தலைவர் தாம் தக்கதெனக் கருதும் ஏற்பாட்டினைச் செய்யலாம்.

161. குறித்தசில நேர்வுகளில் குற்றமன்னிப்புகள் முதலியன அளிப்பதற்கும் மற்றும் தீர்ப்புத்தண்டனைகளைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கு, இறுத்தல் செய்வதற்கு அல்லது மாற்றிக்குறைப்பதற்கும் ஆளுநருக்குள்ள அதிகாரம் :

ஒரு மாநில ஆளுநர், மாநிலத்தின் ஆட்சி அதிகாரம் அளாவும் பொருட்பாடு குறித்த சட்டத்திற்கு எதிரான ஒரு குற்றசெயலுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பெற்ற ஒருவரின் தண்டனையைப் பொறுத்துக் குற்றமன்னிப்புகள் அளிக்கவும் தண்டனையை நிறுத்திவைக்கவும் அதை நிறைவேற்றுவதைத் தள்ளிவைக்கவும் அல்லது எஞ்சிய தண்டனையை இறுத்தல்செய்யவும் அல்லது தீர்ப்புத்தண்டனையைத் தற்காலிகமாக நிறுத்திவைக்க, இறுத்தல்செய்ய அல்லது மாற்றிக்குறைக்கவும் அதிகாரம் உடையவர் ஆவார்.

162. மாநில ஆட்சி அதிகாரத்தின் அளாவுகை :

இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, சட்டங்களை இயற்றுவதற்கு ஒரு மாநிலச் சட்டமன்றம் அதிகாரம் கொண்டுள்ள பொருட்பாடுகளை மாநில ஆட்சி அதிகாரம் அளாவி நிற்கும்:

வரம்புரையாக: ஒரு மாநிலச் சட்டமன்றமும் நாடாளுமன்றமும் சட்டங்களை இயற்ற அதிகாரம் கொண்டுள்ள பொருட்பாடு எதனையும் பற்றிய மாநிலத்தின் ஆட்சி அதிகாரம், இந்த அரசமைப்பினாலோ நாடாளுமன்றம் இயற்றிய சட்டம் ஒன்றினாலோ ஒன்றியத்துக்கு அல்லது அதன் அதிகாரஅமைப்புகளுக்கெனக் குறித்து வழங்கப்பட்ட ஆட்சி அதிகாரத்துக்கு உப்பட்டதாகவும் அதன் வரம்பிற்குள் அடங்கியதாகவும் இருக்கும்.

அமைச்சரவை

163. ஆளுநருக்கு அமைச்சரவை உறுதுணையாக இருத்தலும் தேர்வுரை வழங்குதலும் :

(1) ஆளுநர், இந்த அரசமைப்பினாலோ அதன் வழியாலோ தம் உளத்தேர்வின்படி செயலாற்றவேண்டிய பதவிப்பணிகளை அல்லது அவற்றுள் எதனையும் தவிர, பிற பதவிப்பணிகளை ஆற்றுகையில், அவருக்கு உறுதுணையாக இருப்பதற்கும் தேர்வுரை வழங்குவதற்கும் முதலமைச்சரைத்தலைவராக கொண்ட அமைச்சரவை ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) ஒரு பொருட்பாடு இந்த - அரசமைப்பினாலோ அதன் வழியாலோ ஆளுநர் தம் உளத்தேர்வின்படி செயலாற்றவேண்டிய ஒரு பொருட்பாடா இல்லையா என்பதைப் பொறுத்துப் பிரச்சினை எதுவும் எழுமாயின், ஆளுநர் தம் உளத்தேர்வின்படி செய்யும் முடிபே அறுதியானது ஆகும்; ஆளுநர், தம் உளத்தேர்வின்படி செயற்பட்டிருக்க வேண்டும் அல்லது கூடாது என்பதைக் காரணமாக காட்டி, அவர் செய்த எதனின் செல்லுந்தன்மையையும் எதிர்த்து வாதிடுதல் ஆகாது.

(3) ஆளுநருக்கு அமைச்சர்கள் தேர்வுரை எதுவும் வழங்கினார்களா, அவ்வாறாயின் அது யாது என்பது பற்றி நீதிமன்றம் எதிலும் விசாரிக்கப்படுதல் ஆகாது.

164. அமைச்சர்களைப் பற்றிய பிற வகையங்கள் :

(1) முதலமைச்சர், ஆளுநரால் பதவியில் அமர்த்தப் பெறுவார்; பிற அமைச்சர்கள், முதலமைச்சரின் தேர்வுரையின்படி ஆளுநரால் பதவியில் அமர்த்தப்பெறுவர்; அமைச்சர்கள், ஆளுநர் விழையுமளவும் பதவி வகிப்பர்:

வரம்புரையாக: [1][சட்டிஸ்கர், ஜார்கண்ட்] மத்தியபிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் பழங்குடியினர் நல்வாழ்வைத் தம் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர் ஒருவர் இருத்தல் வேண்டும்; அத்துடன், பட்டியலில் கண்ட சாதியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நல்வாழ்வை அல்லது வேறு பணி எதனையுங்கூட அவர் தம் பொறுப்பில் கொண்டிருக்கலாம்.

[2][(1-அ) ஒரு மாநில அமைச்சரவையில், முதலமைச்சர் உள்ளடங்கலாக, அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கையானது, அந்த மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் பதினைந்து விழுக்காட்டிற்கு மேற்படுதல் ஆகாது:

வரம்புரையாக: ஒரு மாநிலத்தில் முதலமைச்சர் உள்ளடங்கலாக, அமைச்சர்களின் எண்ணிக்கையானது, பன்னிரண்டிற்குக் குறைவாக இருத்தல் ஆகாது.

மேலும் வரம்புரையாக: 2003ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஒன்றாம் திருத்தம்) சட்டத் தொடக்கத்தில் மாநிலம் எதிலுமுள்ள அமைச்சரவையில், முதலமைச்சர் உள்ளடங்கலாக, அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கையானது, மேற்சொன்ன பதினைந்து விழுக்காட்டிற்கு அல்லது, நேர்வுக்கேற்ப, முதல் வரம்புரையில் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேற்படுகிறவிடத்து, அந்த மாநிலத்தில் அமைச்சர்களின் மொத்த எண்ணிகையானது, குடியரசுத்தலைவர், பொது அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள், இந்தக் கூறின் வகையங்களுக்கிணங்கியதாகச் செய்யப்படுதல் வேண்டும்.

(1-ஆ) ஒரு மாநிலச் சட்டமன்றப்பேரவையின் அல்லது பத்தாம் இணைப்புப்பட்டியலின்(2)ஆம் பத்தியின்படி சட்டமன்றப்பேரவையின் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதிக்கேடுற்று, அரசியல் கட்சி எதனையும் சார்ந்திருந்து சட்டமன்ற மேலவையைக்கொண்டிருக்கிற மாநில சட்டமன்றத்தின் ஏதாவது ஓர் அவையின் உறுப்பினர் ஒருவர், அவர் தகுதிக்கேடுற்ற தேதியிலிருந்து தொடங்கி, அத்தகைய உறுப்பினராக அவரது பதவிக் காலஅளவு முடிவுடையும் தேதி, அல்லது அந்தக் காலஅளவு முடிவடைவதற்கு முன்பு, அவர் ஒரு மாநிலச் சட்டமன்றப்பேரவையின் அல்லது நேர்வுக்கேற்ப, சட்டமன்ற மேலவையைக் கொண்டிருக்கிற ஒரு மாநிலச் சட்டமன்ற ஈரவைகளில் ஒன்றின் தேர்தல் எதிலும் போட்டியிடுகிறவிடத்து, அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக விளம்பப்பட்ட தேதி, இவற்றில் எது முந்தையதோ அதுவரையுள்ள காலஅளவின்போது (1)ஆம் கூறின்படி ஓர் அமைச்சராக அமர்த்தப்படுவதற்குத் தகுதிக்கேடுற்றவராதலும் வேண்டும்.]

(2) அமைச்சரவை, மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குக் கூட்டுப்பொறுப்புடையதாக இருக்கும்.

(3) அமைச்சர் ஒருவர் தம் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு, ஆளுநர் அவரைப் பதவியும் மறைகாப்பும் பற்றிய ஆணைமொழிகளை, மூன்றாம் இணைப்புப்பட்டியலில் அதற்கென உள்ள சொன்முறைகளுக்கு இணங்க ஏற்கச் செய்தல் வேண்டும்.

(4) அமைச்சர் ஒருவர் மாநிலச் சட்டமன்றத்தில் தொடர்ச்சியாக ஏதேனும் ஓர் ஆறு மாதக் காலஅளவிற்கு ஓர் உறுப்பினராக இல்லாவிடில், அந்தக் காலஅளவு கழிவுற்றதும் தம் அமைச்சர் பதவியை இழந்தவர் ஆவார்.

(5) அமைச்சர்களின் வரையூதியங்களும் படித்தொகைகளும், மாநிலச் சட்டமன்றம் அவ்வப்போது சட்டத்தினால் தீர்மானிக்கிறவாறு இருக்கும்; மாநிலச் சட்டமன்றம் அவ்வாறு தீர்மானிக்கிற வரையில், அவை இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு இருந்துவரும்.

---

1. 2006ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று நான்காம் திருத்தம்)ச் சட்டத்தின் 2ஆம் பிரிவால் (12-6-2006 முதல் செல்திறம் பெறுமாறு) 2ஆம் பிரிவினால் மாற்றாக அமைக்கப்பட்டது.
2. 2003ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஒன்றாம் திருத்தம்)ச் சட்டத்தின் 3ஆம் பிரிவால் (1-1-2004 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

மாநிலத்தின் தலைமை வழக்குரைஞர்

165. மாநிலத்தின் தலைமை வழக்குரைஞர் :

(1) ஒவ்வொரு மாநிலத்தின் ஆளுநரும், உயர் நீதிமன்றம் ஒன்றன் நீதிபதியாக அமர்த்தபெறுவதற்குத் தகுதிப்பாடுடைய ஒருவரை அந்த மாநிலத்தின் தலைமை வழக்குரைஞராக அமர்த்துவார்.

(2) ஆளுநரால் அவ்வப்போது குறித்தனுப்பப்படும் சட்டப்பொருட்பாடுகளைப் பொறுத்து மாநில அரசாங்கத்திற்கு ஆய்வுரை அளிப்பதும் அவரால் தமக்குக் குறித்தளிக்கப்படும் சட்டப்பாங்குடைய பிற கடமைகளைப் புரிவதும் இந்த அரசமைப்பினாலோ அதன் வழியாலோ அல்லது நிகழுறு காலத்தில் செல்லாற்றலிலுள்ள பிற சட்டத்தாலோ அதன் வழியாலோ தமக்கு வழங்கப்படும் பதவிப்பணிகளை ஆற்றுவதும் மாநிலத் தலைமை வழக்குரைஞரின் கடமை ஆகும்.

(3) தலைமை வழக்குரைஞர், ஆளுநர் விழையுமளவும் பதவி வகிப்பார்; ஆளுநர் தீர்மானிக்கும் பணியூதியத்தைப் பெறுவார்.

அரசாங்க அலுவல் நடத்துமுறை

166. மாநில அரசாங்கத்தின் அலுவல் நடத்துமுறை :

(1) மாநில அரசாங்கத்தின் ஆட்சிதுறை நடவடிக்கைகள் அனைத்தும், ஆளுநரின் பதவிப்பெயரால் எடுக்கப்படுவதாக இயம்பப்பெறுதல் வேண்டும்.

(2) ஆளுநரின் பதவிப்பெயரால் பிறப்பிக்கப்படும் ஆணைகளும் ஆக்கப்படும் முறையாவணங்களும், ஆளுநர் வகுக்கும் விதிகளில் குறித்துரைக்கப்படும் முறையில் உறுதிச்சான்றிடப்படுதல் வேண்டும்; அவ்வாறு உறுதிச்சான்றிடப்பட்ட ஆணை அல்லது முறையாவணம் ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது ஆக்கப்பட்ட முறையாவணம் அன்று என்னும் காரணம் காட்டி, அதன் செல்லுந்தன்மையை எதிர்த்து வாதிடுதல் ஆகாது.

(3) ஆளுநர், மாநில அரசாங்கத்தின் அலுவல்கள் மேலும் இசைவுற நடைபெறுவதற்காகவும் இந்த அரசமைப்பினாலோ அதன் வழியாலோ ஆளுநர் தம் உளத்தேர்வின்படி செயலாற்ற வேண்டிய அலுவலாக இல்லாத பிற அலுவல்களை அமைச்சர்களிடையே பகிர்ந்தொதுக்குவதற்காகவும் விதிகளை வகுப்பார்.

167. ஆளுநருக்குத் தகவல் தருவது முதலியவை பொறுத்து முதலமைச்சருக்குள்ள கடமைகள் :

பின்வருவன ஒவ்வொரு மாநில முதலமைச்சரின் கடமை ஆகும்–

(அ) மாநிலத்து அலுவல் நடவடிக்கைகளை நிருவகித்தல் தொடர்பாக அமைச்சரவையின் முடிபுகள் மற்றும் சட்டமியற்றுவதற்கான செயற்குறிப்புகள் அனைத்தையும் மாநில ஆளுநருக்குத் தெரிவித்தல்;

(ஆ) மாநிலத்து அலுவல் நடவடிக்கைகளை நிருவகித்தல் மற்றும் சட்டமியற்றுவதற்கான செயற்குறிப்புகள் தொடர்பாக ஆளுநர் கேட்டனுப்பும் தகவலைத் தருதல்; மற்றும்

(இ) ஓர் அமைச்சரால் முடிபு எடுக்கப்பட்டு, ஆனால் அமைச்சரவையால் ஓர்வு செய்யப்பட்டிராத பொருட்பாடு எதனையும் ஓர்வுக்காக அமைச்சரவையின் முன்வைக்குமாறு ஆளுநர் வேண்டுறுத்துவாராயின், அவ்வாறு செய்தல்.

அத்தியாயம் III

மாநிலச் சட்டமன்றம்

பொதுவியல்

168. மாநிலச் சட்டமன்றங்களின் அமைப்பு :

(1) ஒவ்வொரு மாநிலத்திற்குமென சட்டமன்றம் ஒன்று இருக்கும்; அது ஆளுநரையும்—

(அ) பீகார், மகாராஷ்டிரம், கர்நாடகம், உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இரண்டு அவைகளையும்,

(ஆ) பிற மாநிலங்களில் ஓர் அவையினையும் கொண்டதாக இருக்கும்.

(2) ஒரு மாநிலச் சட்டமன்றத்தில் இரண்டு அவைகள் இருக்குமிடத்து, ஒன்று சட்டமன்ற மேலவை என்றும், மற்றொன்று சட்டமன்றப் பேரவை என்றும் வழங்கப்பெறும்; ஓரவை மட்டுமே இருக்குமிடத்து, அது சட்டமன்றப் பேரவை என்று வழங்கப்பெறும்.

169. மாநிலங்களில் சட்டமன்ற மேலவைகளை ஒழித்தல் அல்லது உருவாக்குதல் :

(1). 168 ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலத்தில், அந்தச் சட்டமன்ற மேலவையை ஒழிப்பதற்கோ அத்தகைய சட்டமன்ற மேலவை இல்லாத ஒரு மாநிலத்தில் மேலவையை உருவாக்குவதற்கோ அந்த மாநிலத்தின் சட்டமன்றப் பேரவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையும், மேலும், பேரவை உறுப்பினர்களில் வந்திருந்து வாக்களிப்பவர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையும் கொண்ட உறுப்பினர்களால் தீர்மானம் ஒன்று அந்தப் பேரவையில் நிறைவேற்றப்படுமாயின், அவ்வாறு ஒழிப்பதற்கு அல்லது உருவாக்குவதற்கு நாடாளுமன்றம் சட்டத்தினால் வகைசெய்யலாம்.

(2). (1) ஆம் உறுப்பில் சுட்டப்பட்ட சட்டம் எதுவும், அச்சட்டத்தின் வகையங்களைச் செல்திறப்படுத்துவதற்குத் தேவையானவாறு, இந்த அரசமைப்பினைத் திருத்துவதற்கான வகையங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; மேலும் நாடாளுமன்றம் தேவையெனக் கொள்ளும் துணைவுறு, சார்வுறு மற்றும் விளைவுறு வகையங்களைக் கொண்டதாகவும் இருக்கலாம்.

(3) மேற்சொன்ன சட்டம் எதுவும், 368 ஆம் உறுப்பைப் பொறுத்தவரை, இந்த அரசமைப்பின் திருத்தமெனக் கொள்ளப்படுதல் ஆகாது.

170. சட்டமன்றப் பேரவைகளின் கட்டமைப்பு :

(1). 333 ஆம் உறுப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, மாநிலம் ஒவ்வொன்றின் சட்டமன்றப் பேரவையும், அந்த மாநிலத்தின் நிலவரைத் தேர்தல் தொகுதிகளிலிருந்து நேரடித் தேர்தல் வாயிலாகத் தெரிந்தெடுக்கப்பெறும் ஐந்நூற்றுக்கு மேற்படாத, ஆனால் அறுபதுக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்.

(2). (1) ஆம் கூறினைப் பொறுத்தவரை, மாநிலத்தின் தேர்தல் தொகுதி ஒவ்வொன்றின் மக்கள் தொகைக்கும் அதற்குப் பகிர்ந்தொதுக்கப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம், இயலுமளவு, மாநிலம் எங்கணும் ஒருபடித்தாய் இருக்கும் வண்ணம், மாநிலம் ஒவ்வொன்றும் நிலவரைத் தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்படுதல் வேண்டும்.

விளக்கம்.—இந்தக் கூறில், 'மக்கள் தொகை" என்னும் சொல், தொகை விவரங்கள் கண்டறிந்து வெளிடப்பட்டுள்ள கடைசிமுறை மக்கள் கணக்கெடுப்பின்படியாகும் மக்கள்தொகை என்று பொருள்படும்.

வரம்புரையாக: இந்த விளக்கத்தில் தொகை விவரங்கள் வெளியிடப்பட்டுள்ள கடைசிமுறை மக்கள் கணக்கெடுப்பு என்பது, [1][2026]ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதலாவதாக எடுக்கப்படும் மக்கள் கணக்கெடுப்பின்படியாகும் தொகை விவரங்கள் வெளியிடப்படும் வரையில் [2][2001]ஆம் மக்கள் கணக்கெடுப்பைச் சுட்டுவதாகவே பொருள்கொள்ளப்படுதல்வேண்டும்.

(3) ஒவ்வொரு முறையும் மக்கள் கணக்கெடுப்பு முடிவடைவதன்மேல் மாநிலம் ஒவ்வொன்றின் சட்டமன்றப் பேரவையிலுமுள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையும் மாநிலம் ஒவ்வொன்றையும் நிலவரைத் தேர்தல் தொகுதிகளாகப் பிரித்தலும், நாடாளுமன்றம் சட்டத்தினால் தீர்மானிக்கும் அதிகாரஅமைப்பாலும் முறையிலும் மறுநேரமைவு செய்யப்படுதல்வேண்டும்:

வரம்புரையாக: அத்தகைய மறுநேரமைவு, அப்போது நிலவுறும் சட்டமன்றப் பேரவை கலைக்கப்படும் வரையில், அந்தப் பேரவையிலுள்ள சார்பாற்றத்தைப் பாதிக்காது:

மேலும் வரம்புரையாக: அத்தகைய மறுநேரமைவு, குடியரசுத்தலைவர் ஆணையின்வழி, குறித்துரைக்கும் தேதியிலிருந்து செல்திறம் பெறும்; அத்தகைய மறுநேரமைவு செல்திறம் பெறும்வரையில், அந்தச் சட்டமன்றப் பேரவைக்கான தேர்தல் எதுவும், அத்தகைய மறுநேரமைவுக்கு முன்பு நிலவிய நிலவரைத் தேர்தல் தொகுதிகளின் அடிப்படையில் நடத்தப்பெறலாம்:

இன்னும் வரம்புரையாக: [1][2026]ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதலாவதாக எடுக்கப்படும் மக்கள் கணக்கெடுப்பின்படியாகும் தொகை விவரங்கள் வெளியிடப்படும் வரையில்—

[3][(i) 1971ஆம் ஆண்டு மக்கள்கணக்கெடுப்பின் அடிப்படையில் மறுநேரமைவு செய்யப்பட்டவாறு, மாநிலம் ஒவ்வொன்றின் சட்டமன்றப் பேரவையிலுள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையையும்;

(ii) [2][2001] ஆம் ஆண்டு மக்கள்கணக்கெடுப்பின் அடிப்படையில் மறுநேரமைவு செய்யப்பட்டவாறு, அந்த மாநிலத்தை நிலவரைத் தேர்தல் தொகுதிகளாகப் பிரிப்பதையும்,

இந்தக்கூறின்படி மறுநேரமைவு செய்யவேண்டியத் தேவையில்லை.]

171. **சட்டமன்ற மேலவைகளின் கட்டமைப்பு :**

(1) சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலத்தில் அம்மேலவையிலுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை, அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையிலுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேற்படுதல் ஆகாது:

வரம்புரையாக: ஒரு மாநில சட்டமன்ற மேலவையிலுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை, எந்நேர்விலும், நாற்பதுக்குக் குறைவாக இருத்தல் ஆகாது.

(2) நாடாளுமன்றம், சட்டத்தினால் பிறவாறு வகைசெய்கிற வரையில், ஒரு மாநிலச் சட்டமன்ற மேலவையின் கட்டமைப்பு (3)ஆம் கூறில் வகை செய்யப்பட்டுள்ளவாறு இருக்கும்.

---

[1] 2001ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து நான்காம் திருத்தம்)ச் சட்டத்தின் 5ஆம் பிரிவால் "2000" என்பதற்கு மாற்றாக (21-2-2002 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

[2] 2001ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து நான்காம் திருத்தம்)ச் சட்டத்தின் 5ஆம் பிரிவால் "1971" என்பதற்கு மாற்றாக (21-2-2002 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டு, மீண்டும் 2003ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து ஏழாம் திருத்தம்)ச் சட்டத்தின் 5ஆம் பிரிவால் "1991" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

[3] 2001ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து நான்காம் திருத்தம்)ச் சட்டத்தின் 5ஆம் பிரிவால் குறிப்பிட்ட சில சொற்களுக்கு மாற்றாக (21-2-2002 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(3) ஒரு மாநிலச் சட்டமன்ற மேலவையிலுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில்—

(அ) கூடுமான வரையில் மூன்றில் ஒரு பகுதியினர், நகராட்சிகள், மாவட்டக் கழகங்கள், நாடாளுமன்றம் சட்டத்தினால் குறித்துரைக்கும் அந்த மாநிலத்திலுள்ள பிற உள்ளாட்சி அதிகாரஅமைப்புகள் ஆகியவற்றின் உறுப்பினர்களைக் கொண்ட வாக்காளர்தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்பெறுதல் வேண்டும்;

(ஆ) கூடுமானவரையில், பன்னிரண்டில் ஒரு பகுதியினர், இந்திய ஆட்சிநிலவரையிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாகப் பட்டம் பெற்றவர்களாகவும் அல்லது அத்தகைய பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம்பெற்ற ஒருவரின் தகுதிப்பாடுகளுக்கு நிகரானவை என நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தாலோ அதன் வழியாலோ வகுத்துரைக்கப்படும் தகுதிப்பாடுகளைக் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் உடையவர்களாகவும் அந்த மாநிலத்தில் வாழ்கின்றவர்களைக் கொண்ட வாக்காளர் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்பெறுதல் வேண்டும்;

(இ) கூடுமானவரையில், பன்னிரண்டில் ஒரு பகுதியினர், நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்தாலோ அதன் வழியாலோ வகுத்துரைக்கப்படும் உயர்நிலைப் பள்ளித் தரத்திற்குக் குறையாத அளவில் அமைந்த மாநிலத்திலுள்ள கல்வி நிறுவனங்களில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் ஆசிரியராக இருந்தவர்களைக் கொண்ட வாக்காளர் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்பெறுதல் வேண்டும்;

(ஈ) கூடுமானவரையில், மூன்றில் ஒரு பகுதியினர், மாநிலச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் அந்தப் பேரவையின் உறுப்பினர்களாக இல்லாதவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறுதல் வேண்டும்;

(உ) எஞ்சியோர், (5) ஆம் கூறின் வகையங்களுக்கு இணங்க ஆளுநரால் நியமனம்செய்யப்பெறுதல் வேண்டும்.

(4). (3)ஆம் கூறின் (அ), (ஆ), (இ) ஆகிய உட்கூறுகளின்படி தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்கள், நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்தாலோ அதன் வழியாலோ வகுத்துரைக்கப்படும் நிலவரைத் தேர்தல் தொகுதிகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பெறுதல் வேண்டும்; மேலும், மேற்சொன்ன உட்கூறுகளின்படியும், மேற்சொன்ன கூறின் (ஈ) உட்கூறின்படியும் நடைபெறும் தேர்தல்கள், ஒற்றைமாற்றுவாக்கு வழியிலான வீதச்சார்பாற்றமுறைக்கிணங்க நடத்தப்பெறுதல் வேண்டும்.

(5). (3) ஆம் கூறின் (உ) உட்கூறின்படி ஆளுநரால் நியமனம் செய்யப்பெறும் உறுப்பினர்கள் பின்வருவன போன்ற பொருட்பாடுகளைப் பொறுத்துச் சிறந்த தனியறிவோ, செயலுறு பட்டறிவோ உடையவர்களாக இருத்தல் வேண்டும்:—

இலக்கியம், அறிவியல், கலை, கூட்டுறவு இயக்கம் மற்றும் சமுதாயப்பணி.

172. மாநிலச் சட்டமன்றங்களின் காலவரை:

(1) ஒவ்வொரு மாநிலத்தின் சட்டமன்றப் பேரவையும், அது முன்னதாகவே கலைக்கப்பட்டாலன்றி, அதன் முதல் கூட்டத்திற்காகக் குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகள் தொடர்ந்து இருக்கும்; அதற்குமேல் நீடித்தலாகாது; மேற்சொன்ன ஐந்தாண்டுக் காலஅளவு கழிவுறுங்கால் அந்த அவை கலைக்கப்பட்டதாக ஆகிவிடும்:

வரம்புரையாக: நெருக்கடிநிலைச் சாற்றாணை ஒன்று செயற்பாட்டில் இருக்குங்கால், மேற்சொன்ன காலஅளவை, ஒரு தடவையில் ஓர் ஆண்டுக்கு மேற்படாமலும், எந்நேர்விலும், அந்தச் சாற்றாணை செயற்பாடு அற்றுப்போன பின்பு ஆறு மாதக் காலஅளவிற்கு மேற்படாமலும் நாடாளுமன்றம் சட்டத்தினால் நீட்டிக்கலாம்.

(2) ஒரு மாநிலத்தின் சட்டமன்ற மேலவை கலைப்புக்கு உள்ளாவதில்லை; ஆனால், நாடாளுமன்றம் சட்டத்தினால் இதன்பொருட்டு வகுக்கும் வகையங்களுக்கு இணங்க, ஒவ்வோர் இரண்டாம் ஆண்டும் கழிவுறுவதன்மேல், கூடியவிரைவில், அந்த அவையின் உறுப்பினர்களில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் விலகிவிடுதல் வேண்டும்.

173. மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கான தகுதிப்பாடு :

ஒருவர்—

(அ) இந்தியாவின் குடிமகனாக இருக்கிறார் என்பதுடன், தேர்தல் ஆணையத்தால் அதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பெற்றுள்ள ஒருவர் முன்னிலையில், மூன்றாம் இணைப்புப்பட்டியலில் உள்ள சொன்முறைகளுக்கிணங்க ஓர் ஆணைமொழியை அல்லது உறுதிமொழியை ஏற்றுக் கையொப்பமிட்டவராகவும்,

(ஆ) சட்டமன்றப் பேரவையிலுள்ள பதவியிடமாக இருப்பின், இருபத்தைந்து வயதுக்குக் குறையாதவராகவும், சட்டமன்ற மேலவையிலுள்ள பதவியிடமாக இருப்பின், முப்பது வயதுக்குக் குறையாதவராகவும்,

(இ) நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்தாலோ அதன் வழியாலோ அதன்பொருட்டு வகுத்துரைக்கப்படும் பிற தகுதிப்பாடுகளை உடையவராகவும்

இருந்தாலன்றி, அவர் ஒரு மாநிலச் சட்டமன்றப் பதவியிடம் ஒன்றில் அமர்வதற்கெனத் தெரிந்தெடுக்கப்பெறுவதற்குத் தகுதிப்பாடு உடையவர் ஆகார்.

174. மாநிலச் சட்டமன்றக் கூட்டத்தொடர்கள் அக்கூட்டத்தொடர்களை இறுதி செய்தல் மற்றும் கலைத்தல் :

(1) ஆளுநர் தாம் தக்கதெனக் கருதும் காலத்திலும் இடத்திலும் கூடுமாறு அவ்வப்போது மாநிலச் சட்டமன்ற அவைக்கு அல்லது அவை ஒவ்வொன்றுக்கும் அழைப்பாணை விடுப்பார்; ஆனால், ஒரு கூட்டத்தொடரின் கடைசி அமர்வுக்கும், அடுத்த கூட்டத்தொடரின் முதல் அமர்வுக்கெனக் குறிப்பிடப்படும் தேதிக்கும் இடையேயுள்ள காலஅளவு ஆறு மாதங்களுக்குக் குறைவாகவே இருத்தல் வேண்டும்.

(2) ஆளுநர், அவ்வப்போது—

(அ) அவையின் அல்லது ஈரவைகளில் ஒன்றின் கூட்டத் தொடரினை இறுதிசெய்யலாம்;

(ஆ) சட்டமன்றப் பேரவையைக் கலைத்துவிடலாம்.

175. சட்டமன்ற அவையில் அல்லது அவைகளில் உரையாற்றவும் அவற்றிற்குச் செய்தியுரை அனுப்பவும் ஆளுநருக்குள்ள உரிமை :

(1) ஆளுநர், சட்டமன்றப் பேரவையில் அல்லது சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலத்தில், அந்த மாநிலச் சட்டமன்ற ஈரவைகளில் ஒன்றில் அல்லது ஈரவைகளின் ஒருங்கமர் கூட்டத்தில் உரையாற்றலாம்; மேலும், அதற்காக உறுப்பினர்களின் வருகையை வேண்டுறுத்தலாம்.

(2) ஆளுநர், சட்டமன்றத்தில் அப்போது ஓர்விலுள்ள ஒரு சட்டமுன்வடிவைப் பொறுத்தோ பிற எதனையும் பொறுத்தோ மாநிலச் சட்டமன்றத்தின் அவைக்கு அல்லது அவைகளுக்குச் செய்தியுரை அனுப்பலாம்; அவ்வாறான செய்தியுரையினைப் பெற்றுள்ள அவை, அச்செய்தியுரையில் ஓர்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென வேண்டுறுத்தப்பட்ட பொருட்பாட்டை, ஒல்லும் விரைவுடன், ஓர்வுசெய்தல் வேண்டும்.

176. ஆளுநரின் சிறப்புரை :

(1) சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் ஒவ்வொன்றுக்கும் பின்பு நடைபெறும் முதல் கூட்டத்தொடரின் தொடக்கத்திலும், ஒவ்வோர் ஆண்டின் முதல் கூட்டத்தொடரின் தொடக்கத்திலும், சட்டமன்றப் பேரவையில் அல்லது சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலத்தில், ஈரவைகளின் ஒருங்கமர் கூட்டத்தில் ஆளுநர் உரையாற்றி அதனைக் கூட்டியதற்கான காரணங்களையும் சட்டமன்றத்திற்குத் தெரிவிப்பார்.

(2) அவ்வுரையில் சுட்டப்பட்ட பொருட்பாடுகளைப் பற்றி விவாதம் செய்வதற்கு நேரம் ஒதுக்குவதற்காக, அவையின் அல்லது ஈரவைகளில் ஒவ்வொன்றின் நெறிமுறையை ஒழுங்குறுத்தும்விதிகளின்வழி வகைசெய்தல் வேண்டும்.

177. சட்டமன்ற அவைகள் தொடர்பாக, அமைச்சர்களுக்கும் தலைமை வழக்குரைஞருக்கும் உள்ள உரிமைகள்:

மாநிலத்து அமைச்சர் ஒவ்வொருவரும், அந்த மாநிலத் தலைமை வழக்குரைஞரும், அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையில் அல்லது சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலத்தில், ஈரவைகளிலும் உரையாற்றவும் பிற வகையில் அதன் நடவடிக்கைகளில் பங்குகொள்ளவும் தாம் உறுப்பினராகப் பெயர் குறிக்கப்பெறும் சட்டமன்றக் குழு எதிலும் உரையாற்றவும் பிறவகையில் அதன் நடவடிக்கைகளில் பங்குகொள்ளவும் உரிமை உடையவர் ஆவார்; ஆனால், இந்த உறுப்பின் பயன்திறனை வைத்து அவர் வாக்களிக்கும் உரிமை கொண்டவர் ஆகார்.

மாநிலச் சட்டமன்றப் பதவியாளர்கள்

178. சட்டமன்றப் பேரவைத்தலைவரும் துணைத்தலைவரும்:

மாநிலச் சட்டமன்றப் பேரவை ஒவ்வொன்றும், அந்த அவையின் உறுப்பினர்கள் இருவரை முறையே அதன் தலைவராகவும் துணைத்தலைவராகவும், கூடிய விரைவில் தெரிந்தெடுத்தல் வேண்டும்; மேலும், பேரவைத் தலைவர் அல்லது துணைத்தலைவர் பதவி காலியாகுந்தோறும் மற்றோர் உறுப்பினரைப் பேரவைத்தலைவராக அல்லது, நேர்வுக்கேற்ப, துணைத் தலைவராக அந்த அவை தெரிந்தெடுத்தல் வேண்டும்.

179. பேரவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் பதவியை விட்டகலுதலும் பதவி விலகுதலும் பதவியிலிருந்து அகற்றப்படுதலும்:

பேரவைத் தலைவராகவோ துணைத் தலைவராகவோ பதவி வகிக்கும் ஓர் உறுப்பினர்—

(அ) பேரவையின் உறுப்பினராக இருப்பது அற்றுப்போய்விடின், அவர் தம் பதவியை விட்டகலுதல் வேண்டும்;

(ஆ) அந்த உறுப்பினர் பேரவைத்தலைவராக இருப்பின், துணைத் தலைவருக்கும், அந்த உறுப்பினர் துணைத்தலைவராக இருப்பின், பேரவைத் தலைவருக்கும், எச்சமயத்திலும், தம் கையொப்பமிட்டு எழுத்துவழித் தெரிவித்து, தம் பதவியை விட்டுவிலகிக் கொள்ளலாம்; மற்றும்

(இ) பேரவையின் அப்போதைய அனைத்து உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் அந்த அவையில் நிறைவேற்றும் தீர்மானம் ஒன்றினால் அவருடைய பதவியிலிருந்து அகற்றப்படலாம்:

வரம்புரையாக: (இ) கூறினைப் பொறுத்த தீர்மானம் எதுவும், அத்தீர்மானத்தை முன்மொழியவிருக்கும் கருத்தினைத் தெரிவித்துப் பதினான்கு நாட்களுக்குக் குறையாமல் முன்னறிவிப்புக் கொடுத்திருந்தாலன்றி, முன்மொழியப்படுதல் ஆகாது:

மேலும் வரம்புரையாக: பேரவை கலைக்கப்படுந்தொறும், அவ்வாறு கலைக்கப்பட்டதன் பின்பு, அடுத்த பேரவையின் முதல் கூட்டம் தொடங்குவதை ஒட்டிமுன்பு வரையில், பேரவைத்தலைவர் தம் பதவியை விட்டகல வேண்டியதில்லை.

180. பேரவைத்தலைவரின் பதவிக்குற்ற கடமைகளைப் புரிந்துவரவோ தலைவராகச் செயலுறவோ துணைத்தலைவருக்கு அல்லது பிறஉறுப்பினருக்கு உள்ள அதிகாரம்:

(1) பேரவைத்தலைவரின் பதவி காலியாக இருக்குங்கால், அப்பதவிக்குற்றகடமைகளைப் பேரவைத் துணைத்தலைவரும், துணைத்தலைவர் பதவியும் காலியாக இருப்பின், ஆளுநர் அதன்பொருட்டு அமர்த்தும் பேரவையின் உறுப்பினர் எவரும் புரிந்துவருதல் வேண்டும்.

(2) பேரவையின் அமர்வு எதிலும், பேரவைத்தலைவர் அவையில் இல்லாதபோது துணைத்தலைவரும், அவரும் இல்லாதிருப்பின், பேரவையின் நெறிமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்பெறும் உறுப்பினர் எவரும், அத்தகையவரும் இல்லாதிருப்பின், அந்தப் பேரவையினால் தீர்மானிக்கப்பெறும் பிற உறுப்பினர் எவரும் பேரவைத் தலைவராகச் செயலுறுதல் வேண்டும்.

181. பேரவைத்தலைவரை அல்லது துணைத்தலைவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின் மீது ஓர்வு நிகழும் போது அவர் தலைமை வகித்தல் ஆகாது :

(1) சட்டமன்றப் பேரவையின் அமர்வு எதிலும், பேரவைத்தலைவரை அவருடைய பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும் போது பேரவைத்தலைவரும் அல்லது துணைத்தலைவரை அவருடைய பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது துணைத்தலைவரும், அவர் அந்த அவையில் இருந்தபோதிலும், தலைமை வகித்தல் ஆகாது; மேலும், அத்தகைய ஒவ்வோர் அமர்வுக்கும், 180ஆம் உறுப்பின் (2)ஆம் கூறின் வகையங்கள், பேரவைத்தலைவர் அல்லது, நேர்வுக்கேற்ப, துணைத்தலைவர் இல்லாதிருக்கிற ஓர் அமர்வுக்குப் பொருந்துறுவன போன்றே பொருந்துறுவன ஆகும்.

(2) சட்டமன்றப் பேரவையில், பேரவைத்தலைவரை அவருடைய பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது, பேரவைத்தலைவர் அந்த அவையில் உரையாற்றுவதற்கும் பிற வகையில் அதன் நடவடிக்கைகளில் பங்குகொள்வதற்கும் உரிமை உடையவர் ஆவார்; மேலும், 189 ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், அவர் அத்தகைய தீர்மானத்தின்மீதும், அது தொடர்பான நடவடிக்கைகளில் எழும் பிற எந்தப் பொருட்பாட்டின்மீதும் முதற்கண் மட்டுமே வாக்களிப்பதற்கு உரிமை கொண்டவர் ஆவாரேயன்றி, வாக்குகள் சமன்மையாக அமையும் நேர்வில், வாக்களிப்பதற்கு உரிமைகொண்டவர் ஆகார்.

182. சட்டமன்ற மேலவைத்தலைவரும் துணைத்தலைவரும் :

சட்டமன்ற மேலவை உள்ள மாநிலம் ஒவ்வொன்றின் மேலவையும், அந்த அவையின் உறுப்பினர்கள் இருவரை முறையே அதன் தலைவராகவும் துணைத்தலைவராகவும், கூடிய விரைவில், தெரிந்தெடுத்தல் வேண்டும்; மேலும், மேலவைத்தலைவர் அல்லது துணைத்தலைவர் பதவி காலியாகுந்தொறும், மற்றோர் உறுப்பினரை, அதன் தலைவராக அல்லது, நேர்வுக்கேற்ப, துணைத் தலைவராக அந்த மேலவை தெரிந்தெடுத்தல் வேண்டும்.

183. சட்டமன்ற மேலவைத்தலைவர், துணைத்தலைவர் ஆகியோர் பதவியை விட்டகலுதலும் பதவி விலகுதலும் பதவியிலிருந்து அகற்றப்படுதலும் :

ஒரு சட்டமன்ற மேலவைத் தலைவராகவோ துணைத்தலைவராகவோ பதவி வகிக்கும் ஓர் உறுப்பினர்—

(அ) மேலவையின் உறுப்பினராக இருப்பது அற்றுப்போய்விடின், அவர் தம் பதவியை விட்டகலுதல் வேண்டும்:

(ஆ) அத்தகைய உறுப்பினர் மேலவைத்தலைவராக இருப்பின், துணைத் தலைவருக்கும் அத்தகைய உறுப்பினர் துணைத்தலைவராக இருப்பின், மேலவைத் தலைவருக்கும், எச்சமயத்திலும், தம் கையொப்பமிட்டு எழுத்துவழித் தெரிவித்து, தம் பதவியை விட்டு விலகிக்கொள்ளலாம்; மற்றும்

(இ) மேலவையின் அப்போதைய அனைத்து உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் அந்த அவையில் நிறைவேற்றும் தீர்மானம் ஒன்றினால் அவருடைய பதவியிலிருந்து அகற்றப்படலாம்:

வரம்புரையாக: (இ) கூறினைப் பொறுத்த தீர்மானம் எதுவும், அத்தீர்மானத்தை முன்மொழியவிருக்கும் கருத்தினைத் தெரிவித்துப் பதினான்கு நாட்களுக்குக் குறையாமல் முன்னறிவிப்புக் கொடுத்திருந்தாலன்றி, முன்மொழியப்படுதல் ஆகாது.

184. மேலவைத்தலைவரின் பதவிக்குற்ற கடமைகளைப் புரிந்துவரவோ தலைவராகச் செயலுறவோ துணைத்தலைவருக்கு அல்லது பிற உறுப்பினருக்கு உள்ள அதிகாரம் :

(1) மேலவைத்தலைவரின் பதவி காலியாக இருக்குங்கால், அப்பதவிக்குற்ற கடமைகளை மேலவைத் துணைத்தலைவரும், துணைத்தலைவர் பதவியும் காலியாக இருப்பின், ஆளுநர் அதன்பொருட்டு அமர்த்தும் மேலவையின் உறுப்பினர் எவரும் புரிந்துவருதல் வேண்டும்.

(2) மேலவையின் அமர்வு எதிலும் மேலவைத்தலைவர் அவையில் இல்லாதபோது துணைத்தலைவரும், அவரும் இல்லாதிருப்பின், மேலவையின் நெறிமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்பெறும் உறுப்பினர் எவரும், அத்தகையவரும் இல்லாதிருப்பின், மேலவையினால் தீர்மானிக்கப்பெறும் பிற உறுப்பினர் எவரும், மேலவைத்தலைவராகச் செயலுறுதல் வேண்டும்.

185. மேலவைத்தலைவரை அல்லது துணைத்தலைவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது அவர் தலைமை வகித்தல் ஆகாது :

(1) சட்டமன்ற மேலவையின் அமர்வு எதிலும், மேலவைத்தலைவரை அவருடைய பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும் போது மேலவைத்தலைவரும் அல்லது துணைத்தலைவரை அவருடைய பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது துணைத்தலைவரும், அவர் அந்த அவையில் இருந்தபோதிலும், தலைமை வகித்தல் ஆகாது; மேலும், அத்தகைய ஒவ்வோர் அமர்வுக்கும், 184-ஆம் உறுப்பின் (2)-ஆம் கூறின் வகையங்கள், மேலவைத்தலைவர் அல்லது நேர்வுக்கேற்ப, துணைத்தலைவர் இல்லாதிருக்கிற ஓர் அமர்வுக்குப் பொருந்துறுவன போன்றே, பொருந்துறுவன ஆகும்.

(2) சட்டமன்ற மேலவையில் மேலவைத் தலைவரை அவருடைய பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தின்மீது ஓர்வு நிகழும்போது மேலவைத்தலைவர் அந்த அவையில் உரையாற்றுவதற்கும், பிறவகையில் அதன் நடவடிக்கைகளில் பங்குகொள்வதற்கும் உரிமை உடையவர் ஆவார்; மேலும், 189-ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், அவர் அத்தகைய தீர்மானத்தின்மீதும், அது தொடர்பான நடவடிக்கைகளில் எழும் பிற எந்தப் பொருட்பாட்டின்மீதும் முதற்கண் மட்டுமே வாக்களிப்பதற்கு உரிமை கொண்டவர் ஆவாரேயன்றி, வாக்குகள் சமன்மையாக அமையும் நேர்வில், வாக்களிப்பதற்கு உரிமை கொண்டவர் ஆகார்.

186. பேரவைத் தலைவர், துணைத்தலைவர், மேலவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோரின் வரையூதியங்களும் படித்தொகைகளும்:

சட்டமன்றப் பேரவைத் தலைவர், துணைத்தலைவர், சட்டமன்ற மேலவைத் தலைவர், துணைத்தலைவர் ஆகியோருக்கு முறையே மாநிலச் சட்டமன்றம் சட்டத்தினால் நிருணயிக்கும் வரையூதியங்களும் படித்தொகைகளும் வழங்கப்படும்; அவ்வாறு அதன்பொருட்டு வகைசெய்யப்படும் வரையில், இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையூதியங்களும் படித்தொகைகளும் வழங்கப்பட்டு வரும்.

187. மாநிலச் சட்டமன்றத்தின் செயலகம்:

(1) ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் அவை அல்லது அவை ஒவ்வொன்றும் தனித்தனியே செயலகப் பணியாளர் தொகுதி ஒன்றைக் கொண்டிருக்கும்:

வரம்புரையாக: இந்தக் கூறிலுள்ள எதுவும், சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரை, அத்தகைய சட்டமன்றத்தின் ஈரவைகளுக்கும் பொதுவான பதவிகள் உருவாக்கப்படுவதைத் தடையுறு செய்வதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

(2) மாநிலச் சட்டமன்றத்தின் அவையின் அல்லது அவைகளின் செயலகப் பணியாளர் தொகுதிக்கு ஆளெடுப்பதையும் அதற்கு அமர்த்தப்பெறுபவர்களின் பணிவரைக்கட்டுகளையும் அந்த மாநிலச் சட்டமன்றம் சட்டத்தினால் ஒழுங்குறுத்தலாம்.

(3). (2) ஆம் கூறின்படி மாநிலச் சட்டமன்றம் வகைசெய்கிற வரையில், ஆளுநர், சட்டமன்றப் பேரவைத்தலைவருடன் அல்லது, நேர்வுக்கேற்ப, சட்டமன்ற மேலவைத்தலைவருடன் கலந்தாய்வு செய்தபின்பு, சட்டமன்றப் பேரவையின் அல்லது சட்டமன்ற மேலவையின் செயலகப் பணியாளர் தொகுதிக்கு ஆளெடுப்பதையும் அதற்கு அமர்த்தப்பெறுபவர்களின் பணிவரைக்கட்டுகளையும் ஒழுங்குறுத்தும்விதிகளை வகுக்கலாம்; மற்றும், அவ்வாறு வகுக்கப்படும் விதிகள் மேற்சொன்ன கூறின்படி இயற்றப்படும் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு செல்திறம் உடையன ஆகும்.

அலுவல் நடத்துமுறை

188. உறுப்பினர்களுக்குற்ற ஆணைமொழி அல்லது உறுதிமொழி :

ஒரு மாநில சட்டமன்றப் பேரவையின் அல்லது சட்டமன்ற மேலவையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், தம் பதவியினை ஏற்று அமரும் முன்பு, ஆளுநரின் அல்லது அதன்பொருட்டு அவரால் அமர்த்தப்பெறும் ஒருவரின் முன்னிலையில், மூன்றாம் இணைப்புப்பட்டியலில் அதற்கென உள்ள சொன்முறையில் ஓர் ஆணைமொழியை அல்லது உறுதிமொழியை ஏற்றுக் கையொப்பமிடுதல் வேண்டும்.

189. சட்டமன்ற அவைகளில் வாக்களித்தல், காலியிடங்கள் இருந்தபோதிலும் செயலுறுவதற்கு அவைகளுக்குள்ள அதிகாரம் மற்றும் குறைவெண் :

(1) இந்த அரசமைப்பில் பிறவாறு வகைசெய்யப்பட்டிருப்பது நீங்கலாக, ஒரு மாநிலச் சட்டமன்ற அவை ஒன்றன் அமர்வில் எழும் வினாக்கள் அனைத்தும், பேரவைத்தலைவர் அல்லது மேலவைத்தலைவர் அல்லது அத்தகையவராகச் செயலுறுகின்றவரைத் தவிர்த்து, வந்திருந்து வாக்களிக்கும் ஏனைய உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

பேரவைத்தலைவரோ மேலவைத்தலைவரோ அல்லது அத்தகையவராகச் செயலுறுகின்றவரோ முதற்கண் வாக்களித்தல் ஆகாது; ஆனால், வாக்குகள் சமன்மையாக அமையும் நேர்வில், அவருக்கு அறுதிசெய் வாக்கு ஒன்று உண்டு; அதனை அவர் அளித்தலும் வேண்டும்.

(2) ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் ஓர் அவையின் உறுப்பினர் பதவியில் காலியிடம் எதுவும் இருந்தபோதிலும், அந்த அவை செயலுறுவதற்கு அதிகாரம் உடையது ஆகும்; மேலும், சட்டமன்ற நடவடிக்கைகளின்போது அவையில் அமர்ந்திருக்கவோ வாக்களிக்கவோ பிறவாறாகப் பங்குகொள்ளவோ உரிமை கொண்டிராத எவரும் அவ்வாறு செய்தார் எனப் பின்பு தெரிய வந்தபோதிலும், அந்நடவடிக்கைகள் செல்லுந்தன்மையுடையன ஆகும்.

(3) ஒரு மாநிலச் சட்டமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்கிற வரையில், அந்த மாநிலச் சட்டமன்ற அவையின் கூட்டம் அமைவுறுவதற்கான குறைவெண், பத்து அல்லது அந்த அவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பத்தில் ஒரு பங்கு, இவற்றுள் எது மிகுதியோ அந்த எண்ணாக இருத்தல் வேண்டும்.

(4) ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையின் அல்லது சட்டமன்ற மேலவையின் கூட்டம் நடைபெறும்போது எச்சமயத்திலேனும், குறைவெண் இல்லாதிருப்பின், அந்த அவையை ஒத்திவைப்பதோ, குறைவெண் அமைவுறுகிற வரையில் அந்தக் கூட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதோ பேரவைத்தலைவரின் அல்லது மேலவைத்தலைவரின் அல்லது அத்தகையவராகச் செயலுறுகின்றவரின் கடமை ஆகும்.

உறுப்பினர்களின் தகுதிக்கேடுகள்

190. பதவியிடங்களை விட்டகலுதல்:

(1) எவர் ஒருவரும் ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் ஈரவைகளிலும் உறுப்பினராக இருத்தல் ஆகாது; ஒருவர் ஈரவைகளுக்கும் உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப் பெற்றிருப்பாராயின், அவர் அவ்விரு அவைகளில் ஏதாவது ஒன்றில் தம் பதவியிடத்தை விட்டகலுவதற்கு மாநிலச் சட்டமன்றம் சட்டத்தினால் வகைசெய்தல் வேண்டும்.

(2) எவர் ஒருவரும், முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களின் சட்டமன்றங்களில் உறுப்பினராக இருத்தல் ஆகாது; இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கு ஒருவர் தெரிந்தெடுக்கப்பெற்றிருப்பாராயின், அப்போது, குடியரசுத்தலைவரால் வகுக்கப்படும் விதிகளில் குறித்துரைக்கப்படும் காலஅளவு கழிவுறுவதற்கு முன்னரே, அவர் அந்த மாநிலங்களில் ஒன்று தவிர, பிற மாநிலச் சட்டமன்றங்கள் அனைத்திலுமுள்ள தம் பதவியிடங்களை விட்டு விலகியிருந்தாலன்றி, அத்தகைய மாநிலங்கள் அனைத்தின் சட்டமன்றங்களிலுள்ள அவருடைய பதவியிடங்கள் அக்காலஅளவு கழிவுற்றதும் காலியாகிவிடும்.

(3) ஒரு மாநிலச் சட்டமன்ற அவை ஒன்றன் உறுப்பினர் ஒருவர்—

(அ) 191 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறில் அல்லது (2)ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட தகுதிக்கேடுகளில் எதற்கேனும் உள்ளாகிவிடுவாராயின், அல்லது

(ஆ) பேரவைத்தலைவருக்கோ, நேர்வுக்கேற்ப, மேலவைத்தலைவருக்கோ தம் கையொப்பமிட்டு எழுத்துவழி, பதவிவிலகுவதாகத் தெரிவித்து, அவ்வாறு அவர் பதவிவிலகுதல் பேரவைத்தலைவராலோ, நேர்வுக்கேற்ப, மேலவைத்தலைவராலோ ஏற்றுக் கொள்ளப்படுமாயின்

அதன்மேல் அவருடைய பதவியிடம் காலியாகிவிடும்:

வரம்புரையாக: (ஆ) உட்கூறில் சுட்டப்பட்ட பதவிவிலகலைப் பொறுத்தவரை, பேரவைத்தலைவரோ, நேர்வுக்கேற்ப, மேலவைத் தலைவரோ தாம் பெற்ற தகவலிலிருந்தும் பிறவற்றைக்கொண்டும் தாம் தக்கதெனக் கருதும் விசாரணைக்குப் பின்பு அந்தப் பதவிவிலகல் அவரால் தம் விருப்பாகச் செய்யப்பட்டதன்று அல்லது உண்மையானதன்று எனத்தெளிவுறக் காண்பாராயின், அந்தப் பதவிவிலகலை அவர் ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது.

(4) ஒரு மாநிலச் சட்டமன்ற அவை ஒன்றன் உறுப்பினர் எவரும், அந்த அவையின் அனுமதியின்றி, அதன் அனைத்துக் கூட்டங்களுக்கும் அறுபது நாள் காலஅளவிற்கு வராதிருப்பாராயின், அவருடைய பதவியிடம் காலியாகிவிட்டதென அந்த அவை விளம்பலாம்:

வரம்புரையாக: அந்த அறுபது நாள் காலஅளவைக் கணக்கிடுகையில், அந்த அவையின் கூட்டத்தொடர் இறுதி செய்யப்பட்டிருந்த காலஅளவு அல்லது தொடர்ச்சியாக நான்கு நாட்களுக்குமேல் அந்த அவை ஒத்திவைக்கப்பட்டிருந்த காலஅளவு எதனையும் கணக்கில் எடுத்துக்கொள்ளுதல் ஆகாது.

191. உறுப்பினர் பதவித் தகுதிக்கேடுகள் :

(1) ஒருவர்—

(அ) எந்த ஊதியப் பதவியை வகிப்பவர் உறுப்பினராயிருப்பதற்குத் தகுதிக்கேடு உறுவதில்லை என்று மாநிலச் சட்டமன்றம் சட்டத்தினால் விளம்புகிறதோ அந்தப் பதவி அல்லாத பிற ஊதியப்பதவி எதனையும் இந்திய அரசாங்கத்தின் கீழோ முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மாநிலம் ஒன்றன் அரசாங்கத்தின் கீழோ வகிப்பாராயின்,

(ஆ) பித்துப்பிடித்தவராக இருந்து, அத்தகையவரெனத் தகுதிறமுள்ள நீதிமன்றம் ஒன்றினால் விளம்பப்பட்டிருப்பாராயின்,

(இ) விடுவிப்புப் பெறாத நொடிப்புநிலையராக இருப்பாராயின்,

(ஈ) இந்தியாவின் குடிமகனாக இல்லாதிருப்பாராயின், அல்லது ஓர் அயல் நாட்டின் குடிமையினைத் தம் விருப்பாகப் பெற்றிருப்பாராயின் அல்லது எவ்வகையிலேனும் ஓர் அயல்நாட்டிடம் பற்றுறவோ சார்புறவோ தமக்கு உள்ளதென ஒப்பியவராக இருப்பாராயின்,

(உ) நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தாலோ அதன் வழியாலோ உறுப்பினராக இருப்பதற்குத் தகுதிக்கேடுற்றவராக இருப்பாராயின்

அவர் ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையின் அல்லது சட்டமன்ற மேலவையின் உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பெறுவதற்கும் உறுப்பினராக இருந்துவருவதற்கும் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

விளக்கம்.—இந்தக் கூறினைப் பொறுத்தவரை, ஒருவர் ஒன்றியத்தின் அல்லது முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மாநிலம் ஒன்றின் அமைச்சராயிருக்கும் காரணத்தினால் மட்டுமே, அவர் இந்திய அரசாங்கத்தின்கீழோ அத்தகைய மாநில அரசாங்கத்தின்கீழோ ஊதியப்பதவி ஒன்றை வகிப்பவராகக் கொள்ளப்பெறுதல் ஆகாது.

(2) ஒருவர் பத்தாம் இணைப்புப்பட்டியலின்படி தகுதிக்கேடுற்றவராயிருப்பின், அவர், ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையின் அல்லது சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக இருந்து வருவதற்குத் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

192. உறுப்பினர்களின் தகுதிக்கேடுகள் பற்றிய பிரச்சினைகளின்மீது முடிபு :

(1) ஒரு மாநிலச் சட்டமன்ற அவை ஒன்றின் உறுப்பினர் ஒருவர், 191ஆம் உறுப்பின் (1)ஆம் கூறில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிக்கேடுகளில் எதற்கேனும் உள்ளாகிவிட்டாரா என்பது பற்றிய பிரச்சினை எதுவும் எழுமாயின், அப்பிரச்சினை ஆளுநரின் முடிபுக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும்; அவருடைய முடிபே அறுதியானது ஆகும்.

(2) அத்தகைய பிரச்சினை எதன்மீதும் முடிபு ஒன்றை வழங்குவதற்கு முன்பு, ஆளுநர், தேர்தல் ஆணையத்தின் கருத்துரையைப்பெற்று, அந்தக் கருத்துரையின்படியே செயலுறுவார்.

193. 188ஆம் உறுப்பின்படி ஆணைமொழி அல்லது உறுதிமொழி ஏற்பதற்குமுன்போ தகுதியற்றவராக அல்லது தகுதிக்கேடுற்றவராக இருக்கும்போதோ அவையில் அமர்ந்தாலும் வாக்களித்தாலும் அதற்குற்ற தண்டம்:

ஒருவர், 188ஆம் உறுப்பின் வேண்டுறுத்தங்களுக்கேற்ப நடப்பதற்கு முன்பு அல்லது ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையின் அல்லது சட்டமன்ற மேலவையின் உறுப்பினர் பதவிக்குத் தாம் தகுதியற்றவராகவோ தகுதிக்கேடுற்றவராகவோ நாடாளுமன்றத்தால் அல்லது மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் ஒன்றன் வகையங்களால் தாம் தடைசெய்யப் பட்டிருப்பதாகவோ இருப்பதை அறிந்திருந்தும், அவர் அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையில் அல்லது சட்டமன்ற மேலவையில் உறுப்பினராக அமர்வாராயின் அல்லது வாக்களிப்பாராயின், அவர் அவ்வாறு அமரும் அல்லது வாக்களிக்கும் நாள் ஒவ்வொன்றையும் பொறுத்து, ஐந்நூறு ரூபாய் தண்டத்திற்கு உள்ளாவார்; அது மாநிலத்திற்குரிய கடன் என வசூல் செய்யப்படும்.

மாநிலச் சட்டமன்றங்களுக்கும் அவற்றின் உறுப்பினர்களுக்கும் உள்ள அதிகாரங்கள், மதிப்புரிமைகள் மற்றும் காப்புரிமைகள்

194. சட்டமன்ற அவைகளுக்கும் அவற்றின் உறுப்பினர்களுக்கும் குழுக்களுக்கும் உள்ள அதிகாரங்கள், மதிப்புரிமைகள் முதலியன :

(1) இந்த அரசமைப்பின் வகையங்களுக்கும் சட்டமன்ற நெறிமுறையினை ஒழுங்குறுத்துகின்ற விதிகள், நிலையாணைகள் ஆகியவற்றிற்கும் உட்பட்டு, ஒவ்வொரு மாநிலச் சட்டமன்றத்திலும் பேச்சுச் சுதந்திரம் இருத்தல் வேண்டும்.

(2) ஒரு மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் எவரும், சட்டமன்றத்தில் அல்லது அதன் குழு எதிலும் அவர் கூறிய எதனைப் பொறுத்தும் அல்லது அளித்த வாக்கு எதனைப் பொறுத்தும் நீதிமன்ற நடவடிக்கை எதற்கும் உள்ளாகமாட்டார்; அவ்வாறே, எவரும் அத்தகைய சட்டமன்ற அவை ஒன்றால் அல்லது அதன் அதிகாரத்தின்கீழ் அறிக்கை, வரையேடு, வாக்களிப்புகள் அல்லது நடவடிக்கைகள் பற்றிச் செய்யப்படும் வெளியீடு பொறுத்தும் அத்தகைய நடவடிக்கைக்கு உள்ளாகமாட்டார்.

(3) பிறவகைகளில், ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் ஓர் அவைக்கும், அத்தகைய சட்டமன்றத்தின் ஓர் அவையின் உறுப்பினர்களுக்கும் குழுக்களுக்கும் உள்ள அதிகாரங்கள், மதிப்புரிமைகள், காப்புரிமைகள் ஆகியவை, சட்டமன்றம் சட்டத்தினால் அவ்வப்போது வரையறை செய்கின்றவாறு இருக்கும்; அத்துடன், அவ்வாறு வரையறை செய்யப்படும்வரையில், 1978ஆம் ஆண்டு அரசமைப்பு (நூற்பத்து நான்காம் திருத்தம்) சட்டத்தின் 26ஆம் பிரிவு செல்லாற்றல் பெறுவதற்கு ஒட்டிமுன்பு அந்த அவைக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் குழுக்களுக்கும் இருந்தவாறே இருக்கும்.

(4) (1), (2), (3) ஆகிய கூறுகளின் வகையங்கள் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பொருந்துறுவனபோன்றே, அச்சட்டமன்றத்தின் அவை ஒன்றில் அல்லது அதன் குழு ஒன்றில் பேசுவதற்கு மற்றும் பிறவாறு அதன் நடவடிக்கைகளில் பங்குகொள்வதற்கு இந்த அரசமைப்பின்படி உரிமை உடையவர்களுக்கும் பொருந்துறுவன ஆகும்.

195. உறுப்பினர்களின் வரையூதியங்களும் படித்தொகைகளும்:

ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை ஆகியவற்றின் உறுப்பினர்கள், அந்த மாநிலச் சட்டமன்றம் அவ்வப்போது சட்டத்தினால் தீர்மானிக்கும் வரையூதியங்களையும் படித்தொகைகளையும் பெறுவதற்கு உரிமை கொண்டவர்கள் ஆவர்; அதன்பொருட்டு அவ்வாறு வகைசெய்யப்படும் வரையில், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, நேரிணையான மாகாணத்தின் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்குப் பொருந்துறுவனவாக இருந்த அதே வீதங்களிலும் அதே வரைக்கட்டுகளின்படியும், வரையூதியங்களும் படித்தொகைகளும் பெறுவதற்கு அவர்கள் உரிமைகொண்டவர்கள் ஆவர்.

சட்டமியற்றுவதற்கான நெறிமுறை

196. சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்தலும் நிறைவேற்றுதலும் பற்றிய வகையங்கள் :

(1) பணச் சட்டமுன்வடிவுகள், பிற நிதிச் சட்டமுன்வடிவுகள் இவற்றைப் பொறுத்த 198, 207 ஆகிய உறுப்புகளின் வகையங்களுக்கு உட்பட்டு, சட்டமுன்வடிவு எதுவும், சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலத்தின் சட்டமன்ற ஈரவைகளில் எதிலும் முதலில் கொண்டுவரப்படலாம்.

(2). 197, 198 ஆகிய உறுப்புகளின் வகையங்களுக்கு உட்பட்டு, சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலத்தின் சட்டமன்ற ஈரவைகளிலும் திருத்தம் ஏதும் இல்லாமல் அல்லது அந்த ஈரவைகளும் ஏற்றுக்கொண்ட திருத்தங்களை மட்டும் கொண்டு, ஒரு சட்டமுன்வடிவை ஈரவைகளும் ஏற்றுக் கொண்டிருந்தாலன்றி, அது அந்த ஈரவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

(3) ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் ஓர்விலுள்ள ஒரு சட்டமுன்வடிவு, அச்சட்டமன்ற அவையின் அல்லது அவைகளின் கூட்டத்தொடர் இறுதிசெய்யப்படுவதன் காரணத்தால் அற்றுப் போவதில்லை.

(4) சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்படாத நிலையில், சட்டமன்ற மேலவையின் ஓர்விலுள்ள ஒரு சட்டமுன்வடிவு, பேரவை கலைக்கப்படுமாயினும் அற்றுப்போவதில்லை.

(5) ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையில் ஓர்விலுள்ள அல்லது சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றபட்டிருந்து சட்டமன்ற மேலவையின் ஓர்விலுள்ள ஒரு சட்டமுன்வடிவு, அப்பேரவை கலைக்கப்படுவதன்மேல் அற்றுப்போகும்.

197. பணச் சட்டமுன்வடிவுகள் அல்லாத பிற சட்டமுன்வடிவுகள் குறித்துச் சட்டமன்ற மேலவையின் அதிகாரங்கள்மீது வரையறை:

(1) ஒரு சட்டமுன்வடிவு, சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டிருந்து அச்சட்டமன்ற மேலவைக்கு அனுப்பப்பட்ட பின்பு—

(அ) அச்சட்டமுன்வடிவு அந்த மேலவையால் மறுக்கப்படுமாயின், அல்லது

(ஆ) அந்த மேலவையின்முன் அச்சட்டமுன்வடிவு வைக்கப்பட்ட தேதியிலிருந்து, அச்சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படாமலேயே மூன்று மாதங்களுக்குமேல் கழிந்திருக்குமாயின், அல்லது

(இ) சட்டமன்றப் பேரவையால் ஏற்றுக்கொள்ளப்படாத திருத்தங்களுடன் அச்சட்டமுன்வடிவு அந்த மேலவையால் நிறைவேற்றப்படுமாயின்,

அந்தச் சட்டமன்றப் பேரவை, அதன் நெறிமுறையை ஒழுங்குறுத்தும்விதிகளுக்கு உட்பட்டு, அதே கூட்டத்தொடரில் அல்லது பிந்திய கூட்டத்தொடர் எதிலும், சட்டமன்ற மேலவை செய்துள்ள, குறிப்புரை செய்துள்ள அல்லது ஏற்றுக்கொண்டுள்ள திருத்தங்கள், எவையேனுமிருப்பின், அத்திருத்தங்களுடனோ அத்திருத்தங்களின்றியோ அச்சட்டமுன்வடிவை மீண்டும் நிறைவேற்றி, அவ்வாறு நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவை சட்டமன்ற மேலவைக்கு அனுப்பலாம்.

(2) அவ்வாறு ஒரு சட்டமுன்வடிவு, சட்டமன்றப் பேரவையால் இரண்டாம் முறையாக நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவைக்கு அனுப்பப்பட்ட பின்பு–

(அ) அச்சட்டமுன்வடிவு அந்த மேலவையால் மறுக்கப்படுமாயின், அல்லது

(ஆ) அந்த மேலவையில் அச்சட்டமுன்வடிவு வைக்கப்பெற்ற தேதியிலிருந்து, அச்சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படாமலேயே ஒரு மாதத்திற்கு மேல் கழிந்திருக்குமாயின், அல்லது

(இ) சட்டமன்றப் பேரவையால் ஏற்றுக்கொள்ளப்படாத திருத்தங்களுடன் அச்சட்டமுன்வடிவு அந்த மேலவையால் நிறைவேற்றப்படுமாயின்

அச்சட்டமுன்வடிவு, சட்டமன்ற மேலவை செய்துள்ள அல்லது குறிப்புரை செய்துள்ள திருத்தங்களில் சட்டமன்றப் பேரவை ஏற்றுக்கொள்ளும் திருத்தங்கள், எவையேனுமிருப்பின், அவற்றுடன், இரண்டாம் முறையாகச் சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட வடிவத்தில் மாநிலச் சட்டமன்ற அவைகளால் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்.

(3) இந்த உறுப்பிலுள்ள எதுவும் பணச் சட்டமுன்வடிவுக்குப் பொருந்துறுவதில்லை.

198. பணச் சட்டமுன்வடிவுகள் பொறுத்த தனியுறு நெறிமுறை :

(1) பணச் சட்டமுன்வடிவு எதனையும் சட்டமன்ற மேலவையில் அறிமுகப்படுத்துதல் ஆகாது.

(2) பணச் சட்டமுன்வடிவு எதுவும் சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட பின்பு, சட்டமன்ற மேலவைக்கு அதன் பரிந்துரைகளுக்காக அனுப்பப்படுதல் வேண்டும்; சட்டமன்ற மேலவை, அந்தச் சட்டமுன்வடிவைப் பெற்ற தேதியிலிருந்து பதினான்கு நாள் காலஅளவிற்குள் அந்தச் சட்டமுன்வடிவைச் சட்டமன்றப் பேரவைக்குத் தன் பரிந்துரைகளுடன் திருப்பியனுப்புதல் வேண்டும்; அதன்மேல், சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவையினால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது ஏற்கமறுக்கலாம்.

(3) சட்டமன்ற மேலவையின் பரிந்துரைகளில் எதனையும் சட்டமன்றப் பேரவை ஏற்றுக்கொள்ளுமாயின், சட்டமன்ற மேலவையினால் பரிந்துரை செய்யப்பட்டுச் சட்டமன்றப் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்களுடன் அந்தப் பணச் சட்டமுன்வடிவு ஈரவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்.

(4) சட்டமன்ற மேலவையின் பரிந்துரைகளில் எதனையும் சட்டமன்றப் பேரவை ஏற்றுக்கொள்ளாவிடின், அந்தப் பணச் சட்டமுன்வடிவு சட்டமன்ற மேலவை பரிந்துரை செய்த திருத்தங்களில் எதுவுமின்றி, சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட வடிவத்திலேயே ஈரவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்.

(5) சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவைக்கு அதன் பரிந்துரைகளுக்காக அனுப்பப்பட்ட ஒரு பணச்சட்டமுன்வடிவு, மேற்சொன்ன பதினான்கு நாள் காலஅளவிற்குள் சட்டமன்றப் பேரவைக்குத் திருப்பியனுப்பப்படாவிடின், அந்தக் காலஅளவு கழிவுற்றதும் அச்சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட வடிவத்திலேயே ஈரவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்.

199. "பணச் சட்டமுன்வடிவுகள்" என்பதன் பொருள்வரையறை :

(1) இந்த அத்தியாயத்தைப் பொறுத்தவரை, ஒரு சட்டமுன்வடிவு பின்வரும் பொருட்பாடுகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் பற்றிய வகையங்களை மட்டுமே கொண்டிருப்பதாயின், அது ஒரு பணச் சட்டமுன்வடிவு எனக் கொள்ளப்படும்:—

(அ) வரி எதனையும் விதித்தல், நீக்குதல், குறைத்தல், மாற்றுதல் அல்லது ஒழுங்குறுத்தல்;

(ஆ) மாநில அரசால் பணம் கடன் வாங்கப்படுவதை அல்லது பொறுப்புறுதி எதுவும் அளிக்கப்படுவதை ஒழுங்குறுத்துதல் அல்லது மாநில அரசு பொறுப்பேற்றுள்ள அல்லது பொறுப்பேற்கவுள்ள நிதி பற்றிய கடமைப்பாடுகள் எவற்றையும் பொறுத்த சட்டத்தை திருத்தம் செய்தல்;

(இ) மாநிலத் திரள்நிதியத்தை அல்லது எதிரதாக்காப்பு நிதியத்தைக் கையடைவு கொள்ளல், அத்தகைய நிதியம் எதிலும் பணம் செலுத்துதல் அல்லது அதிலிருந்து பணம் எடுத்தல்;

(ஈ) மாநிலத் திரள்நிதியத்தினின்றும் பணம் ஒதுக்கீடு செய்தல்;

(உ) செலவினம் எதனையும் மாநிலத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட செலவினம் என விளம்புதல் அல்லது அத்தகைய செலவினத்தொகை எதனையும் கூடுதலாக்குதல்;

(ஊ) மாநிலத் திரள்நிதியத்தின் அல்லது மாநில அரசுப் பொதுக்கணக்கின் பொருட்டுப் பணம் பெறுதல் அல்லது அத்தகைய பணத்தைக் கையடவு கொள்ளல் அல்லது வழங்குதல்; அல்லது

(எ) (அ) முதல் (ஊ) வரையுள்ள உட்கூறுகளில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளில் எதனையும் சார்ந்த பொருட்பாடு.

(2) ஒரு சட்டமுன்வடிவு, அபராதங்களை அல்லது பிற தண்டங்களை விதிப்பதற்கு அல்லது உரிமங்களுக்கான கட்டணங்களையோ செய்யப்பட்ட பணிகளுக்கான கட்டணங்களையோ கோருவதற்கும் செலுத்துவதற்கும் அது வகைசெய்கிறது என்ற காரணத்தால் மட்டுமோ, உள்ளாட்சி அதிகாரஅமைப்பு அல்லது குழுமம் ஒன்று உள்ளாட்சி நோக்கங்களுக்காக வரி எதனையும் விதிப்பதற்கு, நீக்குவதற்கு, குறைப்பதற்கு, மாற்றுவதற்கு அல்லது ஒழுங்குறுத்துவதற்கு அது வகைசெய்கிறது என்ற காரணத்தாலோ அதை ஒரு பணச்சட்டமுன்வடிவு எனக் கொள்ளுதல் ஆகாது.

(3) சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலச் சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் ஒரு சட்டமுன்வடிவு, பணச் சட்டமுன்வடிவா இல்லையா என்னும் பிரச்சினை ஒன்று எழுமாயின், அதன்மேல் சட்டமன்றப் பேரவைத் தலைவர் அளிக்கும் முடிபே அறுதியானது ஆகும்.

(4) ஒவ்வொரு பணச் சட்டமுன்வடிவும் 198 ஆம் உறுப்பின்படி சட்டமன்ற மேலவைக்கு அனுப்பப்படும்போதும், 200ஆம் உறுப்பின்படி ஏற்பிசைவுக்காக ஆளுநரிடம் முன்னிடப்படும்போதும், அது ஒரு பணச் சட்டமுன்வடிவு எனச் சட்டமன்றப் பேரவைத்தலைவர் கையொப்பமிட்ட உறுதியுரை ஒன்று மேற்குறிப்பாக அதன்மீது எழுதப்படுதல் வேண்டும்.

200. சட்டமுன்வடிவுகளுக்கு ஏற்பிசைவு :

ஒரு சட்டமுன்வடிவு, ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றப்பட்டதன்மேல் அல்லது சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலத்தில் அந்த மாநிலச் சட்டமன்ற ஈரவைகளினாலும் நிறைவேற்றப்பட்டதன்மேல், அது ஆளுநரிடம் முன்னிடப்படுதல் வேண்டும்; ஆளுநர், தாம் அச்சட்டமுன்வடிவுக்கு ஏற்பிசைவு அளிப்பதாகவோ அதற்கு ஏற்பிசைவு அளிக்க மறுப்பதாகவோ அச்சட்டமுன்வடிவைக் குடியரசுத்தலைவரின் ஓர்வுக்காக நிறுத்திவைப்பதாகவோ விளம்புவார்:

வரம்புரையாக: ஆளுநர், தம்மிடம் ஏற்பிசைவுக்காக ஒரு சட்டமுன்வடிவு முன்னிடப்பட்ட பின்பு, இயன்றளவு விரைவில், அது ஒரு பணச்சட்டமுன்வடிவாக இல்லாதிருப்பின், அச்சட்டமுன்வடிவையோ அதில் குறித்துரைக்கப்பட்ட வகையங்கள் எவற்றையுமோ அந்த அவை அல்லது அவைகள் மறுஆய்வு செய்யுமாறும், குறிப்பாக, தாம் பரிந்துரைக்கும் திருத்தங்கள் எவற்றையும் அறிமுகப்படுத்துவது விரும்பத்தகுந்ததா என்பதைப்பற்றிக் கருதுமாறும் கேட்டுக்கொள்கின்ற செய்தியுரையுடன் அச்சட்டமுன்வடிவை அந்த அவைக்கு அல்லது அவைகளுக்குத் திருப்பியனுப்பலாம்; அவ்வாறு ஒரு சட்டமுன்வடிவு திருப்பியனுப்பப்பட்டிருக்கும்போது, அந்த அவை அல்லது அவைகள் அதன்படியே அச்சட்டமுன்வடிவை மறுஆய்வு செய்தல் வேண்டும்; மேலும், அந்த அவையினால் அல்லது அவைகளினால் அச்சட்டமுன்வடிவு திருத்தத்துடனோ திருத்தமின்றியோ மீண்டும் நிறைவேற்றப்பட்டு ஆளுநரிடம் ஏற்பிசைவுக்காக முன்னிடப்படுமாயின், ஆளுநர் அதற்கு ஏற்பிசைவளிக்க மறுத்தல் ஆகாது:

மேலும் வரம்புரையாக: சட்டமுன்வடிவு எதுவும் சட்டமாகிவிட்டால், உயர் நீதிமன்றத்திற்கு அமைந்திருக்க வேண்டும் என்று இந்த அரசமைப்பில் வரைந்தமைக்கப்பட்ட தகுநிலைக்குக் கேடுவிளைவிக்கும் வகையில் அந்த நீதிமன்றத்தின் அதிகாரங்களை அது திறக்குறைவு செய்யும் என ஆளுநர் கருதுவாராயின், அச்சட்டமுன்வடிவு எதற்கும் ஆளுநர் ஏற்பிசைவு அளித்தல்ஆகாது; அதனைக் குடியரசுத்தலைவரின் ஓர்வுக்காக நிறுத்திவைத்தல் வேண்டும்.

201. ஓர்வுக்கென நிறுத்திவைக்கப்படும் சட்டமுன்வடிவுகள்:

ஒரு சட்டமுன்வடிவு குடியரசுத்தலைவரின் ஓர்வுக்கென ஆளுநர் ஒருவரால் நிறுத்திவைக்கப்படும்போது, குடியரசுத்தலைவர், தாம் அச்சட்டமுன்வடிவுக்கு ஏற்பிசைவு அளிப்பதாகவோ அதற்கு ஏற்பிசைவு அளிக்க மறுப்பதாகவோ விளம்புதல் வேண்டும்:

வரம்புரையாக: அச்சட்டமுன்வடிவு ஒரு பணச் சட்டமுன்வடிவாக இல்லாதிருப்பின், குடியரசுத்தலைவர், 200 ஆம் உறுப்பின் முதல் வரம்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தியுரையுடன் அச்சட்டமுன்வடிவை மாநிலச் சட்டமன்றத்தின் அவைக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, அவைகளுக்குத் திருப்பியனுப்பும்படி ஆளுநருக்குப் பணிப்புரை பிறப்பிக்கலாம்; அவ்வாறு ஒரு சட்டமுன்வடிவு திருப்பியனுப்பப்பட்டிருக்கும்போது, அந்த அவை அல்லது அவைகள், அத்தகைய செய்தியுரையைப் பெற்ற தேதியிலிருந்து ஆறுமாதக் காலஅளவிற்குள், அதற்கிணங்க அச்சட்டமுன்வடிவை மறுஆய்வு செய்தல் வேண்டும்; மேலும், அந்த அவையினால் அல்லது அவைகளினால் அச்சட்டமுன்வடிவு திருத்தத்துடனோ திருத்தமின்றியோ மீண்டும் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத்தலைவரின் ஓர்வுக்கென மறுபடியும் முன்னிடப்படுதல் வேண்டும்.

நிதி பற்றிய பொருட்பாடுகளுக்குற்ற நெறிமுறை

202. ஆண்டு நிதிநிலை அறிக்கை :

(1) ஆளுநர், ஒவ்வொரு நிதியாண்டைப் பொறுத்தும், அந்த ஆண்டிற்கான மாநில வரவு செலவினங்கள் மதிப்பீட்டு விவர அறிக்கை ஒன்றை மாநிலச் சட்டமன்ற அவையின் அல்லது அவைகளின் முன்பு வைக்குமாறு செய்தல் வேண்டும்; அது இந்தப் பகுதியில் "ஆண்டு நிதிநிலை அறிக்கை" எனக் குறிப்பிடப்படும்.

(2) ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அடங்கியுள்ள செலவின மதிப்பீடுகளில்—

(அ) இந்த அரசமைப்பில் மாநிலத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட செலவினம் என விவரிக்கப்பட்டுள்ள செலவினத்திற்குத் தேவைப்படும் பணத்தொகைகளைத் தனியாகவும்,

(ஆ) மாநிலத் திரள்நிதியத்திலிருந்து செலவுசெய்யக் கருதியுள்ள பிற செலவினத்திற்குத் தேவைப்படும் பணத்தொகைகளைத் தனியாகவும்

காட்டுதல் வேண்டும்; அத்துடன், வருவாய்க் கணக்குவகைச் செலவினத்தைப் பிறவகைச் செலவினத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுதலும் வேண்டும்.

(3) பின்வரும் செலவினங்கள் மாநிலத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட செலவினங்களாக இருத்தல் வேண்டும்–

(அ) ஆளுநரின் பதவியூதியங்கள், படித்தொகைகள் மற்றும் அவருடைய பதவி தொடர்பான பிற செலவினங்கள்;

(ஆ) சட்டமன்றப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலத்தைப் பொறுத்தவரை, சட்டமன்ற மேலவைத்தலைவர், துணைத் தலைவர் ஆகியோரின் வரையூதியங்களும் படித்தொகைகளும்;

(இ) வட்டி, கடனடைப்பு நிதியச் செலவீடுகள், மீட்புச் செலவீடுகள் உள்ளடங்கலாக மாநிலத்தின்மீது பொறுப்படைவுள்ள உறுகடன் செலவீடுகள் மற்றும் பெறுகடன் எழுப்புதல், உறுகடன் அடைத்தல், மீட்டல் ஆகியவை தொடர்பான செலவினங்கள்;

(ஈ) உயர் நீதிமன்ற நீதிபதிகளின் வரையூதியங்கள், படித்தொகைகள் பொறுத்த செலவினங்கள்;

(உ) நீதிமன்றம் அல்லது பொதுவர் தீர்ப்பாயம் ஒன்றன் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது தீர்வம் எதன்படியும் செலுத்தித் தீர்ப்பதற்குத் தேவைப்படும் பணத்தொகைகள்;

(ஊ) இவ்வாறு சார்த்தப்பட வேண்டுமென இந்த அரசமைப்போ சட்டத்தினால் மாநிலச் சட்டமன்றமோ விளம்புகிற பிற செலவினங்கள்.

203. மதிப்பீடுகள் பற்றிய சட்டமன்ற நெறிமுறை :

(1) மாநிலத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட செலவினங்கள் தொடர்பான மதிப்பீடுகளைச் சட்டமன்றப்பேரவையின் வாக்களிப்பிற்கு வைத்திடுதல் ஆகாது; ஆனால், சட்டமன்றத்தில் அந்த மதிப்பீடுகளில் எதனையும் பற்றி விவாதிப்பதை இந்தக் கூறிலுள்ள எதுவும் தடையுறு செய்வதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

(2) மேற்சொன்னவற்றில் பிற செலவினங்கள் தொடர்பான மதிப்பீடுகளை மானியக் கோரிக்கைகளாகச் சட்டமன்றத்தில் முன்வைத்தல் வேண்டும்; மற்றும், கோரிக்கை எதற்கும் ஏற்பிசைவு அளிக்கவோ ஏற்பிசைவளிக்க மறுக்கவோ அக்கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தொகையைக் குறைத்து ஏற்பிசைவு அளிக்கவோ சட்டமன்றம் அதிகாரம் உடையது ஆகும்.

(3) மானியம் எதுவும், ஆளுநரின் பரிந்துரையின் மீதல்லாமல், கோரப்படுதல் ஆகாது.

204. நிதிஒதுக்களிப்புச் சட்டமுன்வடிவுகள் :

(1) பேரவை, 203 ஆம் உறுப்பின்படி மானியங்களை வழங்கிய பின்பு, கூடிய விரைவில்—

(அ) பேரவையால் அவ்வாறு வழங்கப்பட்ட மானியங்களுக்கும்,

(ஆ) அவையில் அல்லது அவைகளில் முன்னரே வைக்கப்பட்ட விவர அறிக்கையில் கண்ட தொகைக்கு எவ்வகையிலும் மேற்படாமல் மாநிலத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட செலவினங்களுக்கும்

தேவைப்படும் பணம் அனைத்தையும் மாநிலத் திரள்நிதியத்தினின்றும் ஒதுக்களிப்பதற்கு வகைசெய்யும் சட்டமுன்வடிவு ஒன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய சட்டமுன்வடிவு எதற்கும், மேற்கண்டவாறு வழங்கப்பட்ட மானியம் ஒன்றன் தொகையில் மாறுதலையோ அத்தொகை எதற்கெனக் கோரப்பட்டதோ அதில் மாற்றத்தையோ மாநிலத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட செலவினத்தொகையில் மாறுதலையோ விளைவிப்பதான திருத்தம் எதுவும் மாநிலச் சட்டமன்ற அவையில் அல்லது ஈரவைகளில் எதிலும் முன்மொழியப் படுதல் ஆகாது; அத்தகைய திருத்தம் எதுவும் இந்தக் கூறின்படி ஏற்றுக்கொள்ளத்தகாததா என்பது பற்றி அவையில் தலைமை வகிப்பவரின் முடிபே அறுதியானது ஆகும்.

(3). 205, 206 ஆகிய உறுப்புகளின் வகையங்களுக்கு உட்பட்டு, இந்த உறுப்பின் வகையங்களுக்கு இணங்க நிறைவேற்றப்பட்ட சட்டத்தினால் செய்யப்பட்ட நிதி ஒதுக்களிப்பின்படியல்லாமல், மாநிலத் திரள்நிதியத்திலிருந்து பணம் எதுவும் எடுக்கப்படுதல் ஆகாது.

205. துணை, கூடுதல் அல்லது மிகை மானியங்கள் :

(1) ஆளுநர்—

(அ) நடப்பு நிதியாண்டில் ஒரு குறிப்பிட்ட பணிக்கெனச் செலவிடுவதற்கு 204 ஆம் உறுப்பின் வகையங்களுக்கு இணங்க இயற்றப்பட்ட சட்டம் ஒன்றினால் அதிகாரஅளிப்புப் பெற்ற பணத்தொகை, அந்த ஆண்டிற்குரிய பணிக்குப் போதுமானதன்று எனக் காணப்படுமாயின் அல்லது நடப்பு நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கருதப்படாத புதியதொரு பணியினைப் பொறுத்து குறைநிறைவு செய்வதான அல்லது கூடுதலான செலவினத் தேவை ஒன்று அந்த ஆண்டில் எழுமாயின், அல்லது

(ஆ) ஒரு நிதியாண்டில் பணி ஒன்றிற்கு வழங்கப்பட்ட தொகைக்கு மிகையாகப் பணம் எதுவும் அந்த ஆண்டின்போது அந்தப் பணிக்குச் செலவிடப்பட்டிருக்குமாயின்,

அச்செலவினங்களின் மதிப்பீட்டுத் தொகையைக் காட்டும் பிறிதொரு விவர அறிக்கையை மாநிலச் சட்டமன்ற அவையின் அல்லது அவைகளின் முன்பு வைக்கும்படிச் செய்யவோ அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய மிகைத் தொகைக்கான ஒரு கோரிக்கையை அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையில் முன்னிடும்படிச் செய்யவோ வேண்டும்.

(2) ஆண்டு நிதிநிலை அறிக்கை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்கள், ஒரு மானியத்திற்கான கோரிக்கை மற்றும் அந்தச் செலவினங்கள் அல்லது மானியத்திற்காக மாநிலத் திரள்நிதியத்தினின்றும் பண ஒதுக்களிப்பிற்கு அதிகாரம் வழங்கி இயற்றப்பட வேண்டிய சட்டம் இவற்றைப் பொறுத்து 202, 203, 204 ஆகிய உறுப்புகளின் வகையங்கள் எவ்வாறு செல்திறம் கொண்டனவோ, அவ்வாறே, இதில் கூறப்பட்டுள்ள அறிக்கை, செலவினங்கள், கோரிக்கை மற்றும் அச்செலவினங்கள் அல்லது அக்கோரிக்கை பற்றிய மானியத்திற்காக மாநிலத் திரள்நிதியத்தினின்றும் பண ஒதுக்களிப்பிற்கு அதிகாரம் வழங்கி இயற்றப்பட வேண்டிய சட்டம் இவற்றைப் பொறுத்தும் செல்திறம் கொண்டன ஆகும்.

206. முன்னளிப்பு மானியம், முன்பற்றுத்தொகை மானியம், குறித்ததனி மானியம் இவற்றின் மீதான வாக்களிப்பு :

(1) இந்த அத்தியாயத்தின் மேலேகண்ட வகையங்களில் எது எவ்வாறிருப்பினும், ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவை—

(அ) மானியத்தின்மீது வாக்களிப்பதற்கு 203ஆம் உறுப்பில் வகுத்துரைக்கப்பட்டுள்ள நெறிமுறை முடிவடையாமலும், மதிப்பீட்டுச் செலவினங்களுக்காக 204ஆம் உறுப்பின் வகையங்களின்படி சட்டம் நிறைவேற்றப்படாமலும் உள்ள நிலையில், நிதியாண்டின் ஒரு பகுதிக்குரிய அச்செலவினத்திற்கான மானியத்தை முன்னதாக அளிப்பதற்கும்,

(ஆ) பணியின் அளப்பருந்தன்மை அல்லது திட்டவட்டமற்ற தன்மை காரணமாக ஒரு கோரிக்கையைப்பற்றி ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வழக்கமாகக் கொடுக்கப்படும் விவரங்களுடன் கூற இயலாதபோது, எதிர்பார்க்க முடியாத அக்கோரிக்கைக்காக மாநிலத்தின் வருவாய் ஆதாரங்களின் மீது மானியம் அளிப்பதற்கும்,

(இ) ஒரு நிதியாண்டின் நடப்புப் பணியின் ஒரு பகுதியாக அமையாத குறித்ததனி மானியம் ஒன்றை அளிப்பதற்கும்

அதிகாரம் உடையது ஆகும்: மேலும், மேற்சொன்ன மானியங்கள் பொருட்டு மாநிலத் திரள்நிதியத்திலிருந்து பணம் எடுப்பதற்கும் சட்டத்தினால் அதிகாரமளிக்க மாநிலச் சட்டமன்றம் அதிகாரம் உடையது ஆகும்.

(2) ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினத்திற்கான மானியத்தை அளித்தல், அச்செலவினத்திற்காக் மாநிலத் திரள்நிதியத்திலிருந்து பண ஒதுக்களிப்பதற்கு அதிகாரம் வழங்கி இயற்றப்படவேண்டிய சட்டம் இவற்றைப் பொறுத்து 203, 204 ஆகிய உறுப்புகளின் வகையங்கள் எவ்வாறு செல்திறம் கொண்டனவோ, அவ்வாறே, (1) ஆம் கூறின்படி மானியம் அளித்தல், அக்கூறின்படி இயற்றப்படவேண்டிய சட்டம் இவற்றைப் பொறுத்தும் செல்திறம் கொண்டன ஆகும்.

207. நிதிச் சட்டமுன்வடிவுகள் பற்றிய தனியுறு வகையங்கள்:

(1). 199 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின் (அ) முதல் (ஊ) வரையுள்ள உட்கூறுகளில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளில் எதற்கும் வகைசெய்யும் சட்டமுன்வடிவு அல்லது திருத்தம் எதனையும், ஆளுநரின் பரிந்துரையின் மீதல்லாமல், அறிமுகப்படுத்துதலோ கொண்டுவருதலோ ஆகாது; அவ்வாறு வகைசெய்யும் சட்டமுன்வடிவு எதனையும் ஒரு சட்டமன்ற மேலவையில் அறிமுகப்படுத்துதலும் ஆகாது:

வரம்புரையாக: வரி எதனையும் குறைப்பதற்காக அல்லது நீக்குவதற்காக வகைசெய்யும் ஒரு திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு இந்தக் கூறின்படியான பரிந்துரை எதுவும் வேண்டுவதில்லை.

(2) சட்டமுன்வடிவு அல்லது திருத்தம் எதுவும், அபராதங்களை அல்லது பிற பணத் தண்டங்களை விதிப்பதற்கு அல்லது உரிமங்களுக்கான கட்டணங்களையோ செய்யப்பட்ட பணிகளுக்கான கட்டணங்களையோ கோருவதற்கு அல்லது செலுத்துவதற்கு அது வகைசெய்கிறது என்ற காரணத்தால் மட்டுமோ உள்ளாட்சி அதிகாரஅமைப்பு அல்லது குழுமம் ஒன்று உள்ளாட்சி நோக்கங்களுக்காக வரி எதனையும் விதிப்பதற்கு, நீக்குவதற்கு, குறைப்பதற்கு, மாற்றுவதற்கு அல்லது ஒழுங்குறுத்துவதற்கு அது வகைசெய்கிறது என்ற காரணத்தாலோ மேலே கூறப்பட்ட பொருட்பாடுகளில் எதற்கும் வகைசெய்வதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

(3) ஒரு சட்டமுன்வடிவு, சட்டமாக இயற்றப்பட்டுச் செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டால் ஒரு மாநிலத் திரள்நிதியத்திலிருந்து செலவு செய்யவேண்டிய நிலையை அது ஏற்படுத்துமாயின், அதனை ஓர்வு செய்யுமாறு மாநிலச் சட்டமன்றத்தின் அவை எதற்கும் ஆளுநர் பரிந்துரை செய்திருந்தாலன்றி அந்த அவை அதனை நிறைவேற்றுதல் ஆகாது.

பொதுவியலான நெறிமுறை

208. நெறிமுறை விதிகள்:

(1) மாநிலச் சட்டமன்றத்தின் அவை எதுவும், இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, அதற்குரிய நெறிமுறையையும் அலுவல் நடத்துமுறையையும் ஒழுங்குறுத்துவதற்கான விதிகளை வகுத்துக்கொள்ளலாம்.

(2). (1) ஆம் கூறின்படி விதிகளை வகுத்துக்கொள்ளும் வரையில், ஒரு மாநிலத்திற்கு நேரிணையான மாகாணத்தின் சட்டமன்றத்தைப் பொறுத்து, இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு செல்லாற்றலிலிருந்த நெறிமுறை விதிகளும் நிலையாணைகளும், ஒரு மாநிலச் சட்டமன்றத்தைப் பொறுத்துச் சட்டமன்றப் பேரவைத் தலைவர் அல்லது, நேர்வுக்கேற்ப, சட்டமன்ற மேலவைத் தலைவர் அவற்றில் செய்யும் மாற்றமைவுகளுக்கும் தழுவமைவுகளுக்கும் உட்பட்டு, செல்திறம் உடையன ஆகும்.

(3) சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலத்தில், ஆளுநர், சட்டமன்றப் பேரவைத் தலைவருடனும் சட்டமன்ற மேலவைத்தலைவருடனும் கலந்தாய்வு செய்த பின்பு, ஈரவைகளுக்குமிடையேயான செய்தித்தொடர்புகள் பற்றிய நெறிமுறை விதிகளை வகுக்கலாம்.

209. மாநிலச் சட்டமன்றத்தில் நிதி அலுவல் பற்றிய நெறிமுறையைச் சட்டத்தினால் ஒழுங்குறுத்துதல் :

ஒரு மாநிலச் சட்டமன்றம், நிதி அலுவல்களை உரிய காலத்தில் முடிக்கும் பொருட்டு, நிதி பற்றிய பொருட்பாடு எதன் தொடர்பாகவும் அல்லது மாநிலத் திரள்நிதியத்தினின்றும் பண ஒதுக்களிப்பிற்கான சட்டமுன்வடிவு எதன் தொடர்பாகவும், மாநிலச் சட்டமன்ற அவையின் அல்லது அவைகளின் நெறிமுறையையும் அலுவல் நடத்துமுறையையும் சட்டத்தினால் ஒழுங்குறுத்தலாம்; அவ்வாறு இயற்றப்பட்ட சட்டத்தின் வகையம் எதற்கும், 208 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்படி மாநிலச் சட்டமன்ற அவையினால் அல்லது ஈரவைகளில் ஒன்றினால் வகுக்கப்பட்ட விதி எதுவும் அல்லது அந்த உறுப்பின் (2) ஆம் கூறின்படி மாநிலச் சட்டமன்றம் தொடர்பாகச் செல்திறம் உடைய விதி அல்லது நிலையாணை எதுவும் முரணாக இருப்பின், அவ்வாறு முரணாக இருக்கும் அளவிற்கு, அந்த வகையமே மேலோங்கி நிற்கும்.

210. சட்டமன்றத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி :

(1) XVII ஆம் பகுதியில் எது எவ்வாறிருப்பினும், 348ஆம் உறுப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, ஒரு மாநிலச் சட்டமன்ற அலுவல்கள், அந்த மாநிலத்தின் அரசு அலுவல் மொழியிலோ மொழிகளிலோ அல்லது இந்தியிலோ ஆங்கிலத்திலோ நடத்தப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: மேற்சொன்ன மொழிகள் எதிலும் தம் கருத்தை தக்கவாறு எடுத்தியம்ப இயலாத உறுப்பினர் எவரையும், அவருடைய தாய்மொழியிலேயே அவையில் உரையாற்றுவதற்கு, சட்டமன்றப் பேரவைத் தலைவர் அல்லது சட்டமன்ற மேலவைத் தலைவர் அல்லது அத்தகையவராகச் செயலுறுகின்றவர் அனுமதிக்கலாம்.

(2) மாநிலச் சட்டமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்தாலன்றி, இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலிருந்து பதினைந்து ஆண்டுக்காலஅளவு கழிவுறுவதன் பின்பு, இந்த உறுப்பிலிருந்து "அல்லது ஆங்கிலத்தில்" என்னும் சொற்கள் நீக்கப்பட்டிருந்தால் எப்படியோ, அப்படியே இந்த உறுப்பு செல்திறம் உடையது ஆகும்:

வரம்புரையாக: இமாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மேகாலாயா, திரிபுரா ஆகிய மாநிலங்களின் சட்டமன்றங்களைப் பொறுத்து, இந்தக் கூறில், "பதினைந்து ஆண்டு" என்னும் சொற்களுக்கு மாற்றாக, "இருபத்தைந்து ஆண்டு" என்னும் சொற்கள் அமைக்கப்பட்டிருந்தால் எப்படியோ, அப்படியே இந்தக் கூறு செல்திறம் உடையது ஆகும்:

மேலும் வரம்புரையாக: அருணாசலப் பிரதேசம், கோவா, மிசோரம் ஆகிய மாநிலங்களின் சட்டமன்றங்களைப் பொறுத்து, இந்தக் கூறில், "பதினைந்து ஆண்டு" என்னும் சொற்களுக்கு மாற்றாக "நாற்பது ஆண்டு" என்னும் சொற்கள் அமைக்கப்பட்டிருந்தால் எப்படியோ, அப்படியே இந்தக் கூறு செல்திறம் உடையது ஆகும்.

211. சட்டமன்றத்தில் விவாதத்தின்மீது வரையறை :

உச்ச நீதிமன்றத்தின் அல்லது ஓர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர், தம் கடமைகளை ஆற்றுகையில் அவர் நடந்துகொண்ட விதம் குறித்து விவாதம் எதுவும் மாநிலச் சட்டமன்றத்தில் நடைபெறுதல் ஆகாது.

212. சட்டமன்ற நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றங்கள் விசாரித்தல் ஆகாது :

(1) நெறிமுறையைப் பின்பற்றுவதில் முறைகேடு இருப்பதாகக் காரணம் காட்டி, மாநிலச் சட்டமன்றம் ஒன்றன் நடவடிக்கைகள் எவற்றின் செல்லுந்தன்மையையும் எதிர்த்து வாதிடுதல் ஆகாது.

(2) ஒரு மாநிலச் சட்டமன்றப் பதவியாளர் அல்லது உறுப்பினர் ஒருவர், அச்சட்டமன்ற நெறிமுறையையோ அலுவல் நடத்துமுறையையோ ஒழுங்குறுத்துவதற்காக அல்லது ஒழுங்கமைதியை நிலைநாட்டுவதற்காக, இந்த அரசமைப்பினாலோ அதன் வழியாலோ அவருக்கு உற்றமைந்துள்ள அதிகாரங்களைச் செலுத்துவது பொறுத்து, நீதிமன்றம் எதனின் அதிகாரவரம்பிற்கும் உட்பட்டவர் ஆகார்.

அத்தியாயம் IV

ஆளுநருக்குள்ள சட்டமியற்றும் அதிகாரம்

213. சட்டமன்றத்தின் கூட்டத்தொடர் இறுதி செய்யப்பட்டுள்ள காலத்தின்போது அவசரச்சட்டங்களைச் சாற்றம்செய்வதற்கு ஆளுநருக்குள்ள அதிகாரம் :

(1) ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் தொடர்நிலையிலுள்ள காலம் தவிர அல்லது ஒரு மாநிலத்தில் மேலவை உள்ளவிடத்து சட்டமன்ற ஈரவைகளின் கூட்டத்தொடர்களும் தொடர்நிலையிலுள்ள காலம் தவிர வேறு எச்சமயத்திலேனும் ஆளுநர், தாம் அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டியதை அவசியமாக்கும் சூழ்நிலைகள் உள்ளன என்று தெளிவுறக்காண்பாராயின், அச்சூழ்நிலைகளுக்கேற்பத் தேவையென்று தாம் கருதும் அவசரச்சட்டங்களைச் சாற்றம் செய்யலாம்:

வரம்புரையாக: அத்தகைய அவசரச்சட்டம் எதனையும்—

(அ) ஒரு சட்டமுன்வடிவு அதே வகையங்களைக் கொண்டிருந்தால் அதனைச் சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்துவதற்குக் குடியரசுத்தலைவரின் முன் ஒப்பளிப்பு இந்த அரசமைப்பின்படி வேண்டுவதாக இருந்திருக்கும் எனில்; அல்லது

(ஆ) ஒரு சட்டமுன்வடிவு அதே வகையங்களைக் கொண்டிருந்தால் அதனைக் குடியரசுத்தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கிவைப்பது அவசியம் என அவர் கருதியிருப்பார் எனில்; அல்லது

(இ) மாநிலச் சட்டமன்றம் இயற்றிய சட்டம் ஒன்று அதே வகையங்களைக் கொண்டிருந்தால் குடியரசுத்தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கிவைத்து அது குடியரசுத்தலைவரின் ஏற்பிசைவையும் பெற்றிருந்தாலன்றி, இந்த அரசமைப்பின்படி செல்லுந்தன்மையற்றதாகிவிடும் எனில்

குடியரசுத்தலைவரின் நெறிவுறுத்தங்கள் இன்றி, ஆளுநர் சாற்றம்செய்தல் ஆகாது.

(2) இந்த உறுப்பின்படி சாற்றம்செய்யப்பட்ட ஓர் அவசரச் சட்டம், மாநிலச் சட்டமன்றம் இயற்றி ஆளுநரால் ஏற்பிசைவளிக்கப்பட்ட சட்டம் ஒன்றிற்குள்ள அதே செல்லாற்றலும் செல்திறமும் உடையது ஆகும்; ஆனால், அத்தகைய அவசரச் சட்டம் ஒவ்வொன்றும்—

(அ) மாநிலச் சட்டமன்றப் பேரவையின் முன்பு அல்லது சட்டமன்ற மேலவை உள்ள மாநிலத்தில், ஈரவைகளின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும், சட்டமன்றம் மீண்டும் கூடியதிலிருந்து ஆறு வாரங்கள் கழிவுற்றவுடன் அல்லது அக்காலஅளவு கழிவுறுவதற்கு முன்பே அதற்கு ஒப்பேற்பு அளிக்க மறுக்கும் ஒரு தீர்மானத்தைச் சட்டமன்றப் பேரவை நிறைவேற்றி, அதனைச் சட்டமன்ற மேலவை, ஏதேனுமிருப்பின், அதுவும் ஏற்றுக்கொண்டிருக்குமாயின், அத்தீர்மானம், அவ்வாறு நிறைவேற்றப்பட்டதன் மேல் அல்லது அத்தீர்மானத்தை மேலவை ஏற்றுக்கொண்டதன்மேல், செயற்பாடு அற்றுப்போகும்; மேலும்,

(ஆ) ஆளுநரால், எச்சமயத்திலும், விலக்கிக்கொள்ளப்படலாம்.

விளக்கம்.—சட்டமன்ற மேலவை உள்ள ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் அவைகள் வெவ்வேறு தேதிகளில் மீண்டும் கூடுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டிருக்குமிடத்து, இந்தக் கூறினைப் பொறுத்தவரை, அந்த ஆறு வாரக் காலஅளவு அத்தேதிகளில் பிந்திய தேதியிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

(3) மாநிலச் சட்டமன்றம் இயற்றி ஆளுநரால் ஏற்பிசைவளிக்கப்பட்ட சட்டம் ஒன்றில் இடம்பெற்றிருந்தாலும் எத்தகைய வகையம் செல்லுந்தன்மையற்றுப்போகுமோ அத்தகைய வகையம் எதனையும், இந்த உறுப்பின்படியான ஓர் அவசரச்சட்டம் கொண்டிருப்பின், அந்த அளவிற்கு அது இல்லாநிலையது ஆகும்:

வரம்புரையாக: ஒருங்கியல் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள ஒரு பொருட்பாடு குறித்த நாடாளுமன்றச் சட்டத்திற்கோ நிலவுறும் சட்டம் ஒன்றிற்கோ முரண்படும் மாநிலச் சட்டமன்றச் சட்டத்தின் செல்திறம் பற்றிய இந்த அரசமைப்பின் வகையங்களைப் பொறுத்தவரை, குடியரசுத்தலைவரின் நெறிவுறுத்தங்களை ஒட்டி இந்த உறுப்பின்படி சாற்றம்செய்யப்பட்ட அவசரச் சட்டம் எதுவும், குடியரசுத்தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டு அவரால் ஏற்பிசைவளிக்கப்பட்ட மாநிலச் சட்டமன்றத்தின் ஒரு சட்டமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் V

மாநிலங்களிலுள்ள உயர் நீதிமன்றங்கள்

214. மாநிலங்களுக்கான உயர் நீதிமன்றங்கள்:

மாநிலம் ஒவ்வொன்றுக்கும் ஓர் உயர் நீதிமன்றம் இருக்கும்.

215. உயர் நீதிமன்றங்கள் நிலையாவண நீதிமன்றங்களாக இருக்கும் :

உயர் நீதிமன்றம் ஒவ்வொன்றும் ஒரு நிலையாவண நீதிமன்றமாக இருக்கும்; மேலும், தன்னை அவமதித்ததற்காகத் தண்டிக்கும் அதிகாரம் உள்ளடங்கலாக, அத்தகு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் அது உடையதாக இருக்கும்.

216. உயர் நீதிமன்றங்களின் அமைப்பு :

உயர் நீதிமன்றம் ஒவ்வொன்றும், தலைமை நீதிபதி ஒருவரையும், குடியரசுத்தலைவர் தேவையெனக் கருதி அவ்வப்போது அமர்த்தும் பிற நீதிபதிகளையும் கொண்டதாக இருக்கும்.

217. உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் அமர்த்துகை மற்றும் அப்பதவிக்கான வரைமுறைகள் :

(1) உயர் நீதிமன்ற நீதிபதி ஒவ்வொருவரையும், குடியரசுத்தலைவர், இந்தியத் தலைமை நீதிபதியையும் மாநில ஆளுநரையும் கலந்தாய்வு செய்த பின்பும், தலைமை நீதிபதி அல்லாத பிற நீதிபதி ஒருவரின் அமர்த்துகையைப் பொறுத்தவரை, கூடுதலாக அந்த உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியையும் கலந்தாய்வு செய்த பின்பும் தம் கையொப்பமும் முத்திரையும் கொண்ட அதிகார ஆணையின்வழி அமர்த்துவார்; மற்றும், அவர் ஒரு கூடுதல் அல்லது செயலுறு நீதிபதியாக இருப்பின், 224 ஆம் உறுப்பில் வகைசெய்யப்பட்டுள்ளவாறும், பிற நேர்வு எதிலும், அவர் அறுபத்திரண்டு வயது நிறைவெய்தும் வரையிலும் பதவி வகிப்பார்:

வரம்புரையாக:

(அ) நீதிபதி ஒருவர், குடியரசுத்தலைவருக்குத் தம் கையொப்பமிட்டு எழுத்துவழித் தெரிவித்துத் தம் பதவியை விட்டு விலகிக் கொள்ளலாம்;

(ஆ) நீதிபதி ஒருவர், உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு 124 ஆம் உறுப்பின் (4) ஆம் கூறில் வகைசெய்யப்பட்டுள்ள வழிமுறையின்படி, பதவியிலிருந்து குடியரசுத்தலைவரால் அகற்றப்படலாம்;

(இ) நீதிபதி ஒருவர் உச்ச நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியாகக் குடியரசுத்தலைவரால் அமர்த்தப்பெறுவதன் மேல் அல்லது இந்திய ஆட்சிநிலவரைக்குள் உள்ள வேறு உயர் நீதிமன்றம் எதற்கும் குடியரசுத்தலைவரால் அவர் மாற்றல் செய்யப்பெறுவதன் மேல், அவருடைய பதவி காலியாகிவிடும்.

(2) ஒருவர், இந்தியாவின் குடிமகனாக இருப்பதுடன்—

(அ) இந்திய ஆட்சிநிலவரையில் குறைந்தது பத்தாண்டுகள் நீதித்துறைப் பதவியை வகித்துள்ளவராக, அல்லது

(ஆ) ஓர் உயர் நீதிமன்றத்திலோ, தொடர்ந்து இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அத்தகைய நீதிமன்றங்களிலோ குறைந்தது பத்தாண்டுகள் வழக்குரைஞராக இருந்துள்ளவராக

இருந்தாலன்றி, உயர் நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியாக அமர்த்தப்பெறுவதற்குத் தகுதிப்பாடு உடையவர் ஆகார்.

விளக்கம்—இந்தக் கூறினைப் பொறுத்தவரை—

(அ) ஒருவர் இந்திய ஆட்சிநிலவரையில் நீதித்துறைப் பதவியை வகித்துள்ள காலஅளவைக் கணக்கிடுகையில், அவர் நீதித்துறைப் பதவி எதனையும் வகித்திருந்த பின்பு, உயர் நீதிமன்ற வழக்குரைஞராக அவர் இருந்துவந்துள்ள அல்லது ஒரு தீர்ப்பாயத்தின் உறுப்பினர் பதவியை அல்லது ஒன்றியத்தின்கீழ் அல்லது ஒரு மாநிலத்தின்கீழ் சட்டத்தில் சிறப்பறிவு தேவைப்படுகிற பதவியிடம் ஒன்றை வகித்து வந்திருக்கிற காலஅளவையும் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்:

(அஅ) ஒருவர், உயர் நீதிமன்ற வழக்குரைஞராக இருந்துள்ள காலஅளவைக் கணக்கிடுகையில், அவர் வழக்குரைஞரான பின்பு, ஒரு நீதித்துறைப் பதவியை அல்லது ஒரு தீர்ப்பாயத்தின் உறுப்பினர் பதவியை அல்லது ஒன்றியத்தின்கீழ் அல்லது ஒரு மாநிலத்தின்கீழ் சட்டத்தில் சிறப்பறிவு தேவைப்படுகிற பதவியிடம் ஒன்றை வகித்து வந்திருக்கிற காலஅளவையும் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) ஒருவர், இந்திய ஆட்சிநிலவரையில் நீதித்துறைப் பதவியை வகித்துள்ள அல்லது உயர் நீதிமன்ற வழக்குரைஞராக இருந்துள்ள காலஅளவைக் கணக்கிடுகையில், இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு 1936 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டிருந்த இந்தியாவிற்குள் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 ஆம் நாளுக்கு முன்பு அடங்கியிருந்த பரப்பிடம் எதிலும் அவர் நீதித்துறைப் பதவி வகித்துள்ள அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய பரப்பிடம் எதிலும் உள்ள உயர் நீதிமன்றம் எதிலும் ஒரு வழக்குரைஞராக இருந்துள்ள காலஅளவையும் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

(3) உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் வயது என்ன என்பது குறித்துப் பிரச்சினை எதுவும் எழுமாயின், அந்தப் பிரச்சினை இந்தியத் தலைமை நீதிபதியைக் கலந்தாய்வு செய்தபின்பு, குடியரசுத்தலைவரால் முடிபு செய்யப்படுதல் வேண்டும்; மேலும், குடியரசுத்தலைவரின் முடிபே அறுதியானது ஆகும்.

218. உச்ச நீதிமன்றம் தொடர்பான குறித்த சில வகையங்கள் உயர் நீதிமன்றங்களுக்குப் பொருந்துறுதல் :

124 ஆம் உறுப்பின் (4), (5) ஆகிய கூறுகளின் வகையங்கள், உச்ச நீதிமன்றம் தொடர்பாகப் பொருந்துறுவன போன்றே, அவற்றிலுள்ள உச்ச நீதிமன்றம் என்னும் சுட்டுகைகளுக்கு மாற்றாக உயர் நீதிமன்றம் என்னும் சுட்டுகைகளைக் கொண்டு உயர் நீதிமன்றம் தொடர்பாகவும் பொருந்துறுவன ஆகும்.

219. உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்குற்ற ஆணைமொழி அல்லது உறுதி மொழி :

உயர் நீதிமன்ற நீதிபதியாக அமர்த்தப்பெறும் ஒவ்வொருவரும், அவர் தம் பதவியை ஏற்பதற்கு முன்பு, மாநில ஆளுநரின் அல்லது அதன்பொருட்டு அவரால் அமர்த்தப்பெறும் ஒருவரின் முன்னிலையில், மூன்றாம் இணைப்புப் பட்டியலில் அதற்கென உள்ள சொன்முறையில் ஓர் ஆணைமொழியை அல்லது உறுதிமொழியை ஏற்றுக் கையொப்பமிடுதல் வேண்டும்.

220. நிலையமர் நீதிபதியாக இருந்தவர் வழக்குரைஞராகத் தொழிலாற்றுவதன்மீது வரையறை :

இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்குப் பின்பு, ஓர் உயர் நீதிமன்றத்தில் நிலையமர் நீதியதியாகப் பதவி வகித்த எவரும், உச்ச நீதிமன்றத்திலும் பிற உயர் நீதிமன்றங்களிலும் தவிர, இந்தியாவிலுள்ள வேறு நீதிமன்றம் எதிலும் அல்லது அதிகாரஅமைப்பு எதன் முன்பும் வழக்குரைஞராக வாதிடுதலோ செயலுறுதலோ ஆகாது.

விளக்கம்.— இந்த உறுப்பில், "உயர் நீதிமன்றம்" என்னும் சொற்றொடர் 1956 ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்பு இருந்துவந்த, முதலாம் இணைப்புப்பட்டியலின் "ஆ" பகுதியில் குறித்துரைக்கப்பட்ட ஒரு மாநிலத்திற்கான உயர் நீதிமன்றத்தை உள்ளடக்குவதில்லை.

221. நீதிபதிகளின் வரையூதியங்கள் முதலியன :

(1) உயர் நீதிமன்றம் ஒவ்வொன்றின் நீதிபதிகளுக்கும் நாடாளுமன்றம் சட்டத்தினால் தீர்மானிக்கும் வரையூதியங்கள் வழங்கப்படும்; அவ்வாறு அதன்பொருட்டு வகைசெய்யப்படும் வரையிலும், இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையூதியங்கள் வழங்கப்பட்டு வரும்.

(2) நீதிபதி ஒவ்வொருவரும், நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தாலோ அதன் வழியாலோ தீர்மானிக்கப்படும் படித்தொகைகள், வாராமை விடுப்பும் ஓய்வூதியமும் பொறுத்த உரிமைகள் ஆகியவற்றிற்கு உரிமை கொண்டவர் ஆவார்; அவ்வாறு தீர்மானிக்கப்படும் வரையிலும், இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள படித்தொகைகள், உரிமைகள் ஆகியவற்றிற்கு அவர் உரிமைகொண்டவராய் இருப்பார்:

வரம்புரையாக: நீதிபதி ஒருவரின் படித்தொகைகளோ வாராமை விடுப்பு அல்லது ஓய்வூதியம் பொறுத்த அவருடைய உரிமைகளோ அவர் அமர்த்தப்பெற்ற பின்பு அவருக்குப் பாதகமான வகையில் மாறுதல் செய்யப்படுதல் ஆகாது.

222. நீதிபதி ஒருவரை ஓர் உயர் நீதிமன்றத்திலிருந்து மற்றொன்றிற்கு மாற்றுதல் :

(1) குடியரசுத்தலைவர், இந்தியத் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்த பின்பு, ஓர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரைப் பிற உயர் நீதிமன்றம் எதற்கும் மாற்றலாம்.

(2) அவ்வாறு மாற்றப்பெற்றுள்ள அல்லது மாற்றப்பெறும் நீதிபதி ஒருவர், 1963ஆம் ஆண்டு அரசமைப்பு (பதினைந்தாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு பிற உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பணிபுரிகிற காலத்தில் தமது வரையூதியத்துடன் சேர்த்து, நாடாளுமன்றம் சட்டத்தினால் தீர்மானிக்கும் சரியீட்டுப் படித்தொகைக்கும் அவ்வாறு தீர்மானிக்கப்படும் வரையில், குடியரசுத்தலைவர் ஆணையின்வழி குறித்திடும் சரியீட்டுப் படித்தொகைக்கும் உரிமைகொண்டவர் ஆவார்.

223. செயலமர் தலைமை நீதிபதியை அமர்த்துதல்:

ஓர் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிப் பதவி காலியாக இருக்கும் போது, அல்லது அத்தகைய தலைமை நீதிபதி எவரும் தம் இருத்தலின்மை அல்லது பிறவாறான காரணத்தால் தமது பதவிக்குரிய கடமைகளை புரிய இயலாதிருக்கும்போது, குடியரசுத்தலைவர் அதன்பொருட்டு அமர்த்தும் அந்நீதிமன்றத்துப் பிற நீதிபதிகளில் ஒருவர் அப்பதவிக்குரிய கடமைகளை புரிந்து வருவார்.

224. கூடுதல் மற்றும் செயலமர் நீதிபதிகளை அமர்த்துதல்:

(1) ஓர் உயர் நீதிமன்றத்தின் அலுவல் அப்போதைக்கு அதிகரித்துள்ளதன் காரணமாக அல்லது அங்குள்ள வேலை நிலுவைகள் காரணமாக, அந்த நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கையை அதுபோது உயர்த்த வேண்டுமெனக் குடியரசுத்தலைவருக்குத் தோன்றுமாயின், குடியரசுத்தலைவர், உரிய தகுதிப்பாடுள்ளவர்களை ஈராண்டுக்கு மேற்படாமல், தாம் குறித்துரைக்கும் கால அளவுக்கு அந்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதிகளாக அமர்த்தலாம்.

(2) ஓர் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியல்லாத பிற நீதிபதி எவரும் தம் இருத்தலின்மை காரணமாக அல்லது பிற காரணம் எதனாலும் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிய இயலாதிருக்கும்போது அல்லது தலைமை நீதிபதியாக அப்போதைக்குச் செயலுறுவதற்கு அமர்த்தப்பெறுகிறபோது, குடியரசுத்தலைவர், உரிய தகுதிப்பாடுள்ள ஒருவரை, அந்த நீதிமன்றத்தின் நிலையமர் நீதிபதி தமது கடமைகளை மீண்டும் தொடங்குகிற வரையிலும், அந்நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியாகச் செயலுறுவதற்கு அமர்த்தலாம்.

(3) ஓர் உயர் நீதிமன்றத்தின் கூடுதல் அல்லது செயலமர் நீதிபதியாக அமர்த்தப்பெறும் எவரும், அறுபத்திரண்டு வயது நிறைவெய்திய பின்பு பதவி வகித்தல் ஆகாது.

224அ. உயர் நீதிமன்றங்களின் அமர்வுகளில், ஓய்வு பெற்ற நீதிபதிகளை அமர்த்துதல்:

இந்த அத்தியாயத்தில் எது எவ்வாறிருப்பினும், ஒரு மாநில உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, எச்சமயத்திலும், குடியரசுத்தலைவரின் முன்னிசைவுடன், அந்த நீதிமன்றத்தில் அல்லது பிற உயர் நீதிமன்றம் எதிலும் நீதிபதி பதவி வகித்த ஒருவரை அந்த மாநிலத்து உயர் நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியாக அமர்ந்து செயலுறும்படி கேட்டுக்கொள்ளலாம்; அவ்வாறு கேட்டுக்கொள்ளப்பெற்ற ஒவ்வொருவரும், அதன்படி அமர்ந்து செயலுறுங்கால், குடியரசுத்தலைவர் ஆணையின்வழி தீர்மானிக்கும் படித்தொகைகளுக்கு உரிமை கொண்டிருப்பதோடு, அந்த உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவருக்குற்ற அதிகாரவரம்பு, அதிகாரங்கள், மதிப்புரிமைகள் ஆகிய அனைத்தையும் உடையவர் ஆவார்; ஆனால், மற்றபடி அவர் அந்நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியாகக் கொள்ளப்பெறுவதில்லை :

வரம்புரையாக: மேலே கூறப்பட்ட எவரும், அந்நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியாக அமர்ந்து செயலுறுவதற்கு இசைவளித்திருந்தாலன்றி, அவரை அவ்வாறு செயலுறும்படி இந்த உறுப்பிலுள்ள எதுவும் வேண்டுறுத்துவதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

225. நிலவுறும் உயர் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு :

இந்த அரசமைப்பின் வகையங்களுக்கும் இந்த அரசமைப்பினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் பயன்திறன்வழி உரிய சட்டமன்றம் இயற்றிய சட்டம் ஒன்றன் வகையங்களுக்கும் உட்பட்டு, நிலவுறும் உயர் நீதிமன்றம் ஒன்றனுக்குற்ற அதிகாரவரம்பும், அதில் முறையாற்றப்படும் சட்டநெறியும், அந்நீதிமன்றத்தின் விதிகளை வகுப்பதற்கும், அந்நீதிமன்றத்தின் அமர்வுகள், அதன் உறுப்பினர்கள் தனியாக அல்லது ஆயமாக அமர்தல் ஆகியவற்றை ஒழுங்குறுத்துவதற்குமான அதிகாரம் எதுவும் உள்ளடங்கலாக, அந்நீதிமன்றத்தில் நீதி நிருவாகம் தொடர்பாக அதன் நீதிபதிகளுக்கு உள்ளதான அதிகாரங்களும், இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு ஒட்டிமுன்பு இருந்தவாறே இருந்துவரும்:

வரம்புரையாக: வருவாய் பற்றிய அல்லது அதனை ஈட்டுவதற்கென இடப்பட்ட ஆணை அல்லது செய்யப்பட்ட செயல் பற்றிய பொருட்பாடு எதனையும் பொறுத்து, உயர் நீதிமன்றங்களில் எதுவும் முதலேற்பு அதிகாரம் செலுத்துவதற்கு இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு இருந்துவந்த வரையறை எதுவும், அத்தகைய அதிகாரத்தைச் செலுத்துவதற்கு இனிமேற்கொண்டு பொருந்துறுவதில்லை.

226. குறித்தசில நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்க உயர் நீதிமன்றங்களுக்குள்ள அதிகாரம் :

(1) 32 ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், III ஆம் பகுதியினால் வழங்கப்பெறும் உரிமைகளில் எதனையும் செயலுறுத்துவதற்காகவும், பிற நோக்கம் எதற்காகவும், உயர் நீதிமன்றம் ஒவ்வொன்றும், தான் அதிகாரம் செலுத்துகிற ஆட்சிநிலவரைகள் எங்கணும் உள்ள எவருக்கும், அல்லது உரிய நேர்வுகளில் அந்த ஆட்சிநிலவரைகளுக்குள் உள்ள அரசாங்கம் எதுவும் உள்ளடங்கலாக அதிகாரஅமைப்பு எதற்கும், பணிப்புரைகளை, ஆணைகளை அல்லது ஆட்கொணர்விப்பு, செயலுறுத்து, தடையுறுத்து, தகுதிவினவு, நெறிமுறைக்கேட்பு ஆகியவற்றின் தன்மை கொண்ட நீதிப்பேராணைகளை அல்லது அவற்றில் எதனையும் பிறப்பிப்பதற்கு அதிகாரம் உடையது ஆகும்.

(2) அரசாங்கம் அல்லது அதிகாரஅமைப்பு எதற்கும் அல்லது எவர் ஒருவருக்கும் பணிப்புரைகள், ஆணைகள், அல்லது நீதிப்பேராணைகள் பிறப்பிப்பதற்கு (1) ஆம் கூறினால் வழங்கப்பட்ட அதிகாரத்தை, அதைச் செலுத்துவதற்கான வழக்குமூலம் முழுமையாகவோ பகுதியாகவோ எழுந்துள்ள நிலவரைகளில் அதிகாரம் செலுத்துகிற எந்த உயர் நீதிமன்றமும், அந்நிலவரைகளில் அத்தகைய அரசாங்கத்தின் அல்லது அதிகாரஅமைப்பின் அமர்கையிடம் அல்லது அத்தகையவரின் உறைவிடம் இல்லாதிருப்பினும், செலுத்தலாம்.

(3). (1) ஆம் கூறின்படியான ஒரு மனுவின் மீது அல்லது அது தொடர்பான நடவடிக்கை எதிலும், உறுத்துக்கட்டளை அல்லது நிறுத்திவைப்பு ஆணை வாயிலாகவோ வேறெந்த முறையிலோ தரப்பினர் எவருக்கும் எதிராக, இடைக்கால ஆணை ஒன்று—

(அ) அந்தத் தரப்பினருக்கு அந்த மனுவின் படிகளையும் அத்தகைய இடைக்கால ஆணை கோரும் வாதத்திற்கு ஆதரவாகவுள்ள ஆவணங்கள் அனைத்தின் படிகளையும் அளிக்காமலும்,

(ஆ) விசாரிக்கப்படும் வாய்ப்பினை அந்தத் தரப்பினருக்கு வழங்காமலும்

பிறப்பிக்கப்பட்டிருந்து, அதன்மேல் அந்த ஆணையை நீக்கம் செய்வதற்கு உயர் நீதிமன்றத்திடம் அந்தத் தரப்பினர் ஒரு விண்ணப்பம் செய்து, அந்த ஆணை யாருக்குச் சாதகமாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அந்தத் தரப்பினருக்கு அல்லது அந்தத் தரப்பினரின் வழக்குரைஞருக்கு அத்தகைய விண்ணப்பத்தின் ஒரு படியினையும் அளித்திருப்பாராயின், உயர் நீதிமன்றம் அந்த விண்ணப்பத்தினைப் பெற்ற தேதி அல்லது அத்தகைய விண்ணப்பத்தின் ஒரு படி அளிக்கப்பட்ட தேதி, இதில் எது பிந்தியதோ, அத்தேதியிலிருந்து இரண்டு வாரக் காலஅளவு முடிவடைவதற்கு முன்பு அல்லது அந்த காலஅளவின் கடைசி நாளன்று உயர் நீதிமன்றம் மூடப்பட்டிருக்குமாயின், உயர் நீதிமன்றம் அடுத்துத் திறக்கப்படுகிற நாள் முடிவடைவதற்கு முன்பு, அந்த விண்ணப்பத்தினை அந்நீதிமன்றம் தீர்வுசெய்தல் வேண்டும்; அந்த விண்ணப்பம் அவ்வாறு தீர்வு செய்யப்படவில்லையானால், அந்த இடைக்கால ஆணையானது, அந்தக் காலஅளவு கழிவுற்றதும் அல்லது, நேர்வுக்கேற்ப, மேற்சொன்ன அடுத்த நாள் முடிவுற்றதும், நீக்கமுற்றதாக ஆகிவிடும்.

(4) இந்த உறுப்பினால் ஓர் உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பெறும் அதிகாரம், 32 ஆம் உறுப்பின் (2) ஆம் கூறின்படி உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கப்பெற்றுள்ள அதிகாரத்தைத் திறக்குறைவு செய்வதில்லை.

[1][226அ. * * * *]

227. அனைத்து நீதிமன்றங்களையும் கண்காணிப்பதற்கு உயர் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம் :

(1) உயர் நீதிமன்றம் ஒவ்வொன்றும், தான் அதிகாரம் செலுத்தி வருகிற ஆட்சி நிலவரைகள் எங்கணும் உள்ள நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் அனைத்தின்மீதும் கண்காணிப்பு அதிகாரம் உடையது ஆகும்.

(2) மேலே கண்ட வகையத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி உயர் நீதிமன்றம்—

(அ) அத்தகைய நீதிமன்றங்களிலிருந்து விவர அறிக்கைகளைக் கேட்டுப் பெறலாம்;

(ஆ) அத்தகைய நீதிமன்றங்களின் நடைமுறையினையும் நடவடிக்கைகளையும் ஒழுங்குறுத்துவதற்காகப் பொதுவியலான விதிகளை வகுத்தளிப்பதுடன், முறையமை படிவங்களையும் வகுத்தமைக்கலாம்; மற்றும்

(இ) அத்தகைய நீதிமன்றங்களின் அலுவலர்கள் வைத்துவர வேண்டிய புத்தகங்கள், பதிவுக்குறிப்புகள், கணக்குகள் ஆகியவற்றுக்கான முறையமை படிவங்களை வகுத்தமைக்கலாம்.

(3) உயர் நீதிமன்றம், அத்தகைய நீதிமன்றங்களின் கட்டளைக்காப்புநருக்கும், எழுத்தர்கள், அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும், அங்குத் தொழிலாற்றுகிற வழக்காற்றுநர்கள், வழக்குரைஞர்கள், வாதுரைஞர்கள் ஆகியோருக்கும் வழங்கப்படவேண்டிய கட்டணவீத அட்டவணைகளையும் திட்டப்படுத்தலாம்:

வரம்புரையாக: (2) ஆம் கூறின்படி அல்லது (3) ஆம் கூறின்படி வகுக்கப்பட்ட விதிகள், வகுத்தமைக்கப்பட்ட முறையமை படிவங்கள், அல்லது திட்டப்படுத்தப்பட்ட அட்டவணைகள் எவையும், நிகழுறுகாலத்தில் செல்லாற்றலிலுள்ள சட்டத்தின் வகையங்களுக்கு முரணாக இருத்தல் ஆகாது; அவற்றுக்கு ஆளுநரின் முன் ஒப்பேற்பும் வேண்டுறுவதாகும்.

(4) இந்த உறுப்பிலுள்ள எதுவும், ஆயுதப்படைகள் தொடர்பான சட்டத்தாலோ அதன் வழியாலோ அமைக்கப்படும் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் எதன்மீதும் கண்காணிப்பு அதிகாரங்களை ஓர் உயர் நீதிமன்றத்திற்கு வழங்குவதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

228. குறித்தசில வழக்குகளை உயர் நீதிமன்றத்திற்கு மாற்றுதல் :

உயர் நீதிமன்றம், தனக்குக் கீழமைந்துள்ள ஒரு நீதிமன்றத்தில் முடிவுறாநிலையிலுள்ள ஒரு வழக்கில், இந்த அரசமைப்பின் பொருள்கோள் குறித்துச் செறிவான சட்டப்பிரச்சினை ஒன்று உள்ளது என்றும், அதனைத் தீர்வுசெய்தல் அந்த வழக்கினை முடிவு செய்வதற்கு அவசியமாகிறது என்றும் தெளிவுறக்காணுமாயின், தான் அந்த வழக்கினை எடுத்துக்கொண்டு,—

(அ) அந்த வழக்கினையே முடிவு செய்து விடலாம்; அல்லது

(ஆ) மேற்சொன்ன சட்டப்பிரச்சினையைத் தீர்வுசெய்து, அந்த வழக்கு எந்த நீதிமன்றத்திடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டதோ அந்த நீதிமன்றத்திற்கு, அத்தகைய பிரச்சினைமீதான தனது தீர்ப்புரையின் ஒருபடியுடன் சேர்த்து, அவ்வழக்கைத் திருப்பியனுப்பலாம்; மேற்சொன்ன நீதிமன்றம் அதனைப் பெற்றுக் கொண்டதன்மேல், அத்தகைய தீர்ப்புரைக்கு இணங்க அந்த வழக்கினை முடிவு செய்வதற்கு முற்படுதல் வேண்டும்.

---

[1] 1977 ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து மூன்றாம் திருத்தம்)ச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால் 13–4–1978 முதல் செல்நிறம் பெறுமாறு நீக்கறவு செய்யப்பட்டது.]

[1][228அ. * * * *]

229. உயர் நீதிமன்றங்களின் அலுவலர்களும் பணியாளர்களும் செலவுகளும் :

(1) உயர் நீதிமன்றத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோர் அந்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாலோ, அவரால் பணிக்கப்பெறும் அந்நீதிமன்றத்தின் வேறொரு நீதிபதியாலோ அலுவலராலோ அமர்த்தப்பெறுவர்:

வரம்புரையாக: மாநில ஆளுநர், தாம் வகுக்கும் விதியின் வாயிலாக, அவ்விதியில் குறித்துரைக்கப்படும் நேர்வுகளில், ஏற்கெனவே அந்நீதிமன்றத்தைச் சேர்ந்தவர் அல்லாத எவரும் மாநிலத்து அரசுப் பணியாளர் தேர்வாணையத்தைக் கலந்தாய்வு செய்தபின்பல்லாமல், அந்நீதிமன்றம் தொடர்பான பதவி எதற்கும் அமர்த்தப்பெறுதல் ஆகாது என வேண்டுறுத்தலாம்.

(2) மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டம் ஒன்றன் வகையங்களுக்கு உட்பட்டு, உயர் நீதிமன்றத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரின் பணிவரைக்கட்டுகள், உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாலோ அவரால் அதற்கென விதிகள் வகுப்பதற்கு அதிகாரமளிக்கப்பெற்றுள்ள அந்நீதிமன்றத்தின் வேறு நீதிபதி அல்லது அலுவலர் ஒருவராலோ வகுக்கப்படும் விதிகள் வகுத்துரைக்கின்றவாறு இருக்கும் :

வரம்புரையாக: இந்தக் கூறின்படி வகுக்கப்படும் விதிகளில், வரையூதியங்கள், படித்தொகைகள், விடுப்பு அல்லது ஓய்வூதியங்கள் பற்றிய விதிகளுக்கு மாநில ஆளுநரின் ஒப்பேற்பு வேண்டுறுவதாகும்.

(3) ஓர் உயர் நீதிமன்றத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கும் அவர்கள் பொறுத்தும் வழங்கத்தக்க வரையூதியங்கள், படித்தொகைகள், ஓய்வூதியங்கள் அனைத்தும் உள்ளிட்ட அதன் நிருவாகச் செலவுகள், மாநிலத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்படும்; மேலும், அந்நீதிமன்றம் பெறும் கட்டணங்களும் பிற பணத்தொகைகளும் அந்நிதியத்தைச் சேர்வன ஆகும்.

230. உயர் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்கு அளாவச்செய்தல் :

(1) நாடாளுமன்றம், சட்டத்தினால், ஓர் உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை, ஒன்றியத்து ஆட்சிநிலவரை எதற்கும் அளாவச் செய்யலாம் அல்லது ஓர் உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை ஒன்றியத்து ஆட்சிநிலவரை எதிலிருந்தும் நீக்கிவிடலாம்.

(2) ஓர் ஒன்றியத்து ஆட்சிநிலவரை தொடர்பாக ஒரு மாநிலத்தின் உயர் நீதிமன்றம் அதிகாரம் செலுத்தி வருகிறவிடத்து—

(அ) இந்த அரசமைப்பிலுள்ள எதுவும், அந்த அதிகாரவரம்பைக் கூட்டவோ குறுக்கவோ ஒழிக்கவோ அந்த மாநிலச் சட்டமன்றத்திற்கு அதிகாரமளிப்பதாகப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது; மற்றும்

(ஆ). 227 ஆம் உறுப்பில் ஆளுநர் என்று சுட்டப்பட்டிருப்பது, அந்த ஆட்சி நிலவரையிலுள்ள கீழமை நீதிமன்றங்களுக்கான விதிகள், முறையமைபடிவங்கள், அட்டவணைகள் இவற்றின் தொடர்பாக குடியரசுத்தலைவர் என்று சுட்டுவதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

231. இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்குப் பொதுவானதோர் உயர் நீதிமன்றத்தினை நிறுவுதல்:

(1) இந்த அத்தியாயத்தின் முந்தைய வகையங்களில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், நாடாளுமன்றம், சட்டத்தினால் இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்காக அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கும் ஒன்றியத்து ஆட்சி நிலவரை ஒன்றிற்குமாக, பொதுவானதோர் உயர் நீதிமன்றத்தினை நிறுவலாம்.

---

[1] 1977 ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து மூன்றாம் திருத்தம்)ச் சட்டத்தின் 10 ஆம் பிரிவினால் (13–4–1978 முதல் செல்திறம் பெறுமாறு) நீக்கறவு செய்யப்பட்டது.

(2) அத்தகைய உயர் நீதிமன்றம் எதன் தொடர்பாகவும்—

(அ). 217 ஆம் உறுப்பில் மாநில ஆளுநர் என்று சுட்டப்பட்டிருப்பது அந்த உயர் நீதிமன்றம் அதிகாரம் செலுத்துகிற மாநிலங்கள் அனைத்தின் ஆளுநர்களையும் சுட்டுவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ). 227 ஆம் உறுப்பில் ஆளுநர் என்று சுட்டப்பட்டிருப்பது, கீழமை நீதிமன்றங்களுக்கான விதிகள், முறையமை படிவங்கள், அட்டவணைகள் இவற்றின் தொடர்பாக அந்தக் கீழமை நீதிமன்றங்கள் அமைந்துள்ள மாநில ஆளுநரைச் சுட்டுவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும்

(இ). 219, 229 ஆகிய உறுப்புகளில் மாநிலம் என்று சுட்டப்பட்டிருப்பது, உயர் நீதிமன்றத்தின் தலைமை அமர்கையிடத்தைக் கொண்டுள்ள மாநிலத்தைச் சுட்டுவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: அத்தகைய தலைமை அமர்கையிடம் ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஒன்றில் இருக்குமாயின், 219, 229 ஆகிய உறுப்புகளில் ஆளுநர், அரசுப் பணியாளர் தேர்வாணையம், சட்டமன்றம், மாநிலத் திரள்நிதியம் என்று சுட்டப்பட்டிருப்பவை முறையே, குடியரசுத்தலைவர், ஒன்றியத்து அரசுப்பணியாளர் தேர்வாணையம், நாடாளுமன்றம், இந்தியத் திரள்நிதியம் என்று சுட்டுவனவாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

[1][232. * * * *]

அத்தியாயம் VI

கீழமை நீதிமன்றங்கள்

233. மாவட்ட நீதிபதிகளை அமர்த்துதல்:

(1) மாநிலம் எதிலும் மாவட்ட நீதிபதிகளை அமர்த்துதல், அவர்களுக்குப் பணியிடங்களைக் குறித்தல், பதவிஉயர்வு அளித்தல் ஆகியவை அந்த மாநிலம் தொடர்பாக அதிகாரம் செலுத்திவருகிற உயர் நீதிமன்றத்தைக் கலந்தாய்ந்து அந்த மாநில ஆளுநரால் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஒன்றியத்தின் அல்லது மாநிலத்தின் பணியில் ஏற்கெனவே இல்லாத எவரும், அவர் ஏழாண்டுகளுக்குக் குறையாமல் ஒரு வழக்குரைஞராக அல்லது வாதுரைஞராக இருந்திருந்து, அவரை ஒரு மாவட்ட நீதிபதியாக அமர்த்துவதற்கு உயர் நீதிமன்றம் பரிந்துரைத்திருந்தால் மட்டுமே, அவர் அவ்வாறு ஒரு மாவட்ட நீதிபதியாக அமர்த்தப்பெறுவதற்குத் தகுதியுடையவர் ஆவார்.

233அ. குறித்தசில மாவட்ட நீதிபதிகளின் அமர்த்துகை, அவர்கள் வழங்கிய தீர்ப்புரைகள் முதலியவற்றைச் செல்லத்தக்கன ஆக்குதல்:

நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதுவும் எவ்வாறிருப்பினும்—

(அ). 233ஆம் உறுப்பின் அல்லது 235ஆம் உறுப்பின் வகையங்களுக்கு இணங்கியவாறு அல்லாமல், பிறவாறு 1966ஆம் ஆண்டு அரசமைப்பு (இருபதாம்திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்பு எச்சமயத்திலேனும்:—

(i) ஒரு மாநில நீதித் துறைப் பணியத்தில் ஏற்கெனவே உள்ள ஒருவரை அல்லது ஏழாண்டுகளுக்குக் குறையாமல் ஒரு வழக்குரைஞராக அல்லது ஒரு வாதுரைஞராக இருந்துள்ள ஒருவரை அந்த மாநிலத்தின் ஒரு மாவட்ட நீதிபதியாக அமர்த்திய செயல் எதுவும்,

(ii) அத்தகைய எவருக்கும் ஒரு மாவட்ட நீதிபதியாகப் பணியிடம் குறித்தல், பதவி உயர்வு அளித்தல் அல்லது மாற்றல் செய்தல் எதுவும்

அத்தகைய அமர்த்துகை, பணியிடம் குறித்தல், பதவிஉயர்வு அல்லது மாற்றல், மேற்சொன்ன வகையங்களுக்கு இணங்கியவாறு செய்யப்படவில்லை என்ற காரணத்தால் மட்டுமே, அது சட்ட முரணானது அல்லது இல்லா நிலையது என்றோ அல்லது சட்டமுரணானதாக அல்லது இல்லாநிலையதாக எப்போதேனும் இருந்தது என்றோ கொள்ளப்படுதல் ஆகாது;

---

[1] 1956 ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்)ச் சட்டத்தின் 16 ஆம் பிரிவினால் விட்டுவிடப்பட்டது.]

(ஆ). 233ஆம் உறுப்பின் அல்லது 235ஆம் உறுப்பின் வகையங்களுக்கு இணங்கியவாறு அல்லாமல், பிறவாறு மாநிலம் எதிலும் ஒரு மாவட்ட நீதிபதியாக அமர்த்தப்பெற்ற, பணியிடம் குறிக்கப்பெற்ற, பதவிஉயர்த்தப்பெற்ற, அல்லது மாற்றப்பெற்ற ஒருவரால் அல்லது அவர் முன்னிலையில் 1966ஆம் ஆண்டு அரசமைப்பு (இருபதாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்பு, செலுத்தப்பட்ட அதிகாரம், வழங்கப்பட்ட தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது தீர்ப்புத்தண்டனை எதுவும், அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை மற்றும் செய்யப்பட்ட பிறசெயல் அல்லது எடுக்கப்பட்ட பிற நடவடிக்கை எதுவும், அவருடைய அமர்த்துகை, பணியிடம் குறித்தல், பணியிட நியமனம், பதவிஉயர்வு, அல்லது மாற்றல் மேற்சொன்ன வகையங்களுக்கு இணங்கியவாறு செய்யப்படவில்லை என்ற காரணத்தால் மட்டுமே, அது சட்டமுரணானது அல்லது செல்லாநிலையது என்றோ அல்லது சட்டமுரணானதாக அல்லது செல்லாநிலையதாக எப்போதேனும் இருந்தது என்றோ கொள்ளப்படுதல் ஆகாது.

234. நீதித் துறைப் பணியத்திற்கு மாவட்ட நீதிபதிகள் அல்லாத பிறரை எடுத்தல்:

மாநிலம் ஒன்றில் நீதித் துறைப் பணியத்திற்கு மாவட்ட நீதிபதிகள் அல்லாத பிறர், அந்த மாநில ஆளுநரால், அந்த மாநிலத்து அரசுப் பணியாளர் தேர்வாணையத்தையும் அத்தகைய மாநிலம் தொடர்பாக அதிகாரம் செலுத்துகிற உயர் நீதிமன்றத்தையும் கலந்தாய்வு செய்த பின்பு அவரால் அதன்பொருட்டு வகுக்கப்படும் விதிகளுக்கு இணங்க அமர்த்தப்பெறுவர்.

235. கீழமை நீதிமன்றங்கள் மீதான கட்டாள்கை:

ஒரு மாநிலத்தின் நீதித் துறைப் பணியத்தைச் சேர்ந்த மாவட்ட நீதிபதிப் பதவிக்குக் குறைவான பதவி எதனையும் வகித்து வருகிறவர்களின் பணியிடம் குறித்தல், பதவிஉயர்வு அளித்தல், அவர்களுக்கு விடுப்பு வழங்குதல் உள்ளடங்கலாக, மாவட்ட நீதிமன்றங்கள், அவற்றிற்குக் கீழமைந்த நீதிமன்றங்கள் இவற்றின் மீதான கட்டாள்கை உயர் நீதிமன்றத்திடம் உற்றமைந்திருக்கும்; ஆனால், இந்த உறுப்பிலுள்ள எதுவும், அத்தகையவர் எவரிடமிருந்தும், அவருடைய பணிவரைக்கட்டுகளை ஒழுங்குறுத்துகிற சட்டத்தின்படி அவருக்குற்ற மேன்முறையீட்டு உரிமை எதனையும் பறிப்பதாகவோ அத்தகைய சட்டத்தின்படி வகுத்துரைக்கப்பட்டுள்ள அவருடைய பணிவரைக்கட்டுகளுக்கு இணங்கியவாறு அல்லாமல் பிறவாறு அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரமளிப்பதாகவோ பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

236. பொருள்கோள்:

இந்த அத்தியாயத்தில்—

(அ) "மாவட்ட நீதிபதி" என்னும் சொற்றொடர், மாநகர் உரிமையியல் நீதிமன்றம் ஒன்றன் நீதிபதி, கூடுதல் மாவட்ட நீதிபதி, இணை மாவட்ட நீதிபதி, உதவி மாவட்ட நீதிபதி, சிறுவழக்கு நீதிமன்றம் ஒன்றன் தலைமை நீதிபதி, மாகாணத் தலைநகர்த் தலைமைக் குற்றவியல் நடுவர், கூடுதல் மாகாணத் தலைநகர்த் தலைமைக் குற்றவியல் நடுவர், அமர்வு நீதிபதி, கூடுதல் அமர்வு நீதிபதி, உதவி அமர்வு நீதிபதி ஆகியோரை உள்ளடக்கும்;

(ஆ) 'நீதித் துறைப் பணியம்" என்னும் சொற்றொடர், மாவட்ட நீதிபதிப் பதவியிலும் மாவட்ட நீதிபதிப் பதவிக்குக் குறைவாக பிற உரிமையியல் நீதித் துறைப் பதவிகளிலும் அமர்த்தப்பெறுபவர்களை மட்டுமே கொண்ட ஒரு பணியம் என்று பொருள்படும்.

237. இந்த அத்தியாயத்தின் வகையங்கள் குறித்தசில வகுப்பு அல்லது வகுப்புகளைச் சேர்ந்த குற்றவியல் நடுவர்களுக்குப் பொருந்துறுதல்:

ஆளுநர், பொது அறிவிக்கை வாயிலாக இந்த அத்தியாயத்தின் மேலே கண்ட வகையங்களும் அவற்றின்படி வகுக்கப்பட்ட விதிகளும், மாநில நீதித் துறைப் பணியத்திற்கு அமர்த்தப்பெறுபவர்கள் தொடர்பாகப் பொருந்துறுவன போன்றே, அவை இதற்கெனக் குறித்திடும் தேதியிலிருந்து அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் விதிவிலக்குகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு, அந்த மாநிலத்திலுள்ள எந்தவொரு வகுப்பையும் அல்லது வகுப்புகளையும் சேர்ந்த குற்றவியல் நடுவர்களுக்கும் பொருந்துறும் எனப் பணிக்கலாம்.

பகுதி VII

முதலாம் இணைப்புப்பட்டியலின் ஆ பகுதியில் உள்ள மாநிலங்கள்

[1][238. * * * *]

பகுதி VIII

ஒன்றியத்து ஆட்சிநிலவரைகள்

239. ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளின் நிருவாகம் :

(1) நாடாளுமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்தால் அல்லாமல், ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஒவ்வொன்றையும், குடியரசுத்தலைவர் தாம் குறித்துரைக்கும் பதவிப்பெயருடன் அமர்த்தும் ஆளுகையர் ஒருவர் மூலமாகத் தாம் தக்கதெனக் கருதுகிறவாறு நிருவாகம் செய்வார்.

(2) IV ஆம் பகுதியில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், குடியரசுத்தலைவர், ஒரு மாநிலத்தின் ஆளுநரை அந்த மாநிலத்தை ஒட்டியுள்ள ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஒன்றின் ஆளுகையராக அமர்த்தலாம்; அவ்வாறு ஆளுநர் ஒருவர் அமர்த்தப்பெறுமிடத்து, அவர் தமது அமைச்சரவையைச் சாராது தனித்து அத்தகைய ஆளுகையராகத் தமது பதவிப்பணிகளை ஆற்றுவார்.

239அ. குறித்தசில ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்கென சட்டமன்றங்களை அல்லது அமைச்சரவையை அல்லது இரண்டையும் உருவாக்குதல் :

(1) நாடாளுமன்றம் சட்டத்தினால் பாண்டிச்சேரி எனும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்காக அந்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்படும் அமைப்பாக்கம், அதிகாரங்கள், பதவிப்பணிகள் ஆகியவற்றுடன்—

(அ) அந்த ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்கான சட்டமன்றமாக இயங்குவதற்கு, தேர்ந்தெடுக்கப்பட்டதாக அல்லது ஒரு பகுதி நியமனம் செய்யப்பட்டதாகவும், ஒரு பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் உள்ள ஒரு குழுமத்தை, அல்லது

(ஆ) ஓர் அமைச்சரவையை

அல்லது இரண்டையும் உருவாக்கலாம்.

(2). (1) ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட சட்டம் ஒன்றில், இந்த அரசமைப்பைத் திருத்துகிற அல்லது திருத்தும் விளைவை ஏற்படுத்துகிற வகையம் எதுவும் அதில் அடங்கியிருந்தபோதிலும், அந்தச் சட்டம் 368ஆம் உறுப்பைப் பொறுத்தவரை, இந்த அரசமைப்பின் திருத்தம் எனக் கொள்ளப்படுதல் ஆகாது.

[2][239அஅ. தில்லியை பொறுத்த சிறப்பு ஏற்பாடுகள் :

(1). 1991 ஆம் ஆண்டு அரசமைப்பு (அறுபத்து ஒன்பதாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத்தேதியிலிருந்து தில்லி எனும் ஒன்றியத்து ஆட்சிநிலவரையானது, தில்லி தேசிய தலைநகர ஆட்சிநிலவரை என வழங்கப்பெறும் (இதன் பின்பு இந்தப் பகுதியில் தேசிய தலைநகர ஆட்சிநிலவரை என்று குறிப்பிடப்படும்) மற்றும் 239 ஆம் உறுப்பின்படி அமர்த்தப்பெறும் அதன் ஆளுகையர், துணை நிலை ஆளுநர் எனும் பதவிப்பெயரில் குறிப்பிடப்படுவார்.

---

1. 1956 ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் 29ஆம் பிரிவினாலும் இணைப்புப் பட்டியலினாலும் நீக்கறவு செய்யப்பட்டது.
2. 1991 ஆம் ஆண்டு அரசமைப்பு (அறுபத்து ஒன்பதாம் திருத்தம்) சட்டத்தின் 2ஆம் பிரிவினால் (1–2–1992 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

(2) (அ) தேசிய தலைநகர ஆட்சிநிலவரைக்காக சட்டமன்றப் பேரவை ஒன்று இருத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய பேரவையிலுள்ள பதவியிடங்கள், தேசிய தலைநகர ஆட்சிநிலவரைத் தேர்தல் தொகுதிகளிலிருந்து நேரடித் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களால் நிரப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) சட்டமன்றப் பேரவையிலுள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கை, பட்டியலில் கண்ட சாதியினருக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கை, தேசிய தலைநகர ஆட்சிநிலவரையை ஆட்சிநிலவரைத் தேர்தல் தொகுதிகளாகப் பிரித்தல் (அத்தகைய பிரித்தலுக்கான அடிப்படை உள்ளடங்கும்) மற்றும் சட்டமன்றப் பேரவை செயற்படுவது தொடர்பான அனைத்து பிற பொருட்பாடுகள் ஆகியவை நாடாளுமன்றத்தினால் சட்டத்தின் வழி ஒழுங்குறுத்தப்படுதல் வேண்டும்.

(இ) 324 முதல் 327 வரையிலான மற்றும் 329 ஆம் உறுப்புகளின் வகையங்கள், அவை, முறையே ஒரு மாநிலம், ஒரு மாநில சட்டமன்றப்பேரவை மற்றும் அதன் உறுப்பினர்கள் தொடர்பாகப் பொருந்துவது போன்றே, தேசிய தலைநகர ஆட்சிநிலவரை, தேசிய தலைநகர ஆட்சிநிலவரை சட்டமன்றப் பேரவை மற்றும் அதன் உறுப்பினர்கள் தொடர்பாகப் பொருந்தும்; மற்றும் 326 ஆம் மற்றும் 329 ஆம் உறுப்புகளில் "உரிய சட்டமன்றம்" என்பதற்கான சுட்டுகை எதுவும் நாடாளுமன்றத்துக்கான சுட்டுகை ஒன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) (அ) இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, சட்டமன்றப்பேரவை, தேசிய தலைநகர ஆட்சிநிலவரை முழுவதுக்கும் அல்லது அதன்பகுதி எதற்கும், மாநிலப் பட்டியலில் அல்லது ஒருங்கியல் பட்டியலில் எண்ணிடப்பட்ட பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்தவரையில், அத்தகைய பொருட்பாடு எதுவும், மாநிலப்பட்டியலின் 1, 2 மற்றும் 18 ஆம் பதிவுகளும், அந்தப் பட்டியலின் 64, 65 மற்றும் 66ஆம் பதிவுகள், மேற்சொன்ன 1, 2 மற்றும் 18 ஆம் பதிவுகள் பொறுத்த பொருட்பாடுகள் தவிர அவை தொடர்புள்ளதாக இருக்கும் அளவுக்கு அவையும், ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்கு அத்தகைய பொருட்பாடுகள் பொருந்தும் அளவுக்கு, சட்டங்கள் இயற்றுவதற்கு அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) (அ) உட்கூறிலுள்ள எதுவும் ஒன்றியத்து ஆட்சி நிலவரை ஒன்றுக்கு அல்லது அதன் பகுதி எதற்குமான பொருட்பாடு எதனையும் பொறுத்து, சட்டங்கள் இயற்றுவதற்கு இந்த அரசமைப்பின்படி நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரங்களைத் திறக்குறைவு செய்வதில்லை.

(இ) எந்தப் பொருட்பாட்டினையும் பொறுத்து, சட்டமன்றப் பேரவையினால் இயற்றப்பட்ட சட்டத்தின் வகையம் எதுவும், அந்தப் பொருட்பாட்டினைப் பொறுத்து, அச் சட்டமன்றப் பேரவையினால் இயற்றப்பட்ட சட்டத்திற்கு முன்போ பின்போ நிறைவேற்றப்பட்டிருந்தாலும், நாடாளுமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டம் ஒன்றின் அல்லது சட்டமன்றப் பேரவையினால் இயற்றப்பட்ட ஒரு சட்டமாக அல்லாத பிற முந்தைய சட்டம் ஒன்றின் வகையம் எதற்கும் முரண்படுமாயின், அப்போது, அவ்விரு நேர்வுகளில் எதிலும், நாடாளுமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டம், அல்லது நேர்வுக்கேற்ப, அத்தகைய முந்தைய சட்டம், மேலோங்கி நிற்கும் மற்றும் சட்டமன்றப் பேரவையினால் இயற்றப்பட்ட சட்டமானது, அம்முரண்பாடு உள்ள அளவுக்கு இல்லாநிலையது ஆகும்:

வரம்புரையாக: சட்டமன்றப் பேரவையினால் இயற்றப்பட்ட அத்தகைய சட்டம் எதுவும், குடியரசுத்தலைவரின் ஓர்வுக்காக வைக்கப்பட்டிருந்து, அவருடைய ஏற்பிசைவினைப் பெற்றிருக்குமாயின், அத்தகைய சட்டம், தேசிய தலைநகர ஆட்சி நிலவரையில் மேலோங்கி நிற்கும்:

மேலும் வரம்புரையாக: இந்தக் கூறிலுள்ள எதுவும், சட்டமன்றப் பேரவையினால் அவ்வாறு இயற்றப்பட்ட சட்டத்துடன் சேர்க்கின்ற, அதனைத் திருத்துகின்ற, மாற்றுகின்ற அல்லது நீக்கறவு செய்கின்ற சட்டம் ஒன்று உள்ளடங்கலாக, அதே பொருட்பாடு பொறுத்த சட்டம் எதனையும் எச்சமயத்திலும் நாடாளுமன்றம் இயற்றுவதற்குத் தடையூறு ஆவதில்லை.

(4) துணைநிலை ஆளுநர், சட்டம் எதனாலுமோ அதன் வழியாகவோ, தம் உளத்தேர்வுப்படி செயலுற வேண்டுறுத்தப்பட்டுள்ள அளவுக்குத் தவிர, எந்தப் பொருட்பாடுகள் பொறுத்து, சட்டமன்றப் பேரவை சட்டங்கள் இயற்றுவதற்கு அதிகாரம் கொண்டிருக்கிறதோ, அந்த பொருட்பாடுகள் தொடர்பாக அவர் தம் பதவிப்பணிகளை ஆற்றுகையில், அவருக்கு உறுதுணையாக இருப்பதற்கும், தேர்வுரை வழங்குவதற்கும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் பத்து சதவீதத்திற்கு மேற்படாமல், முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை ஒன்று இருத்தல் வேண்டும்:

வரம்புரையாக: எந்தப் பொருட்பாட்டிலேனும் துணைநிலை ஆளுநருக்கும், அவரது அமைச்சர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு இருக்கும் நேர்வில், துணைநிலை ஆளுநர், அதனை முடிபுசெய்வதற்காக குடியரசுத்தலைவருக்குச் சாட்டியனுப்பி, அதன்பேரில் குடியரசுத் தலைவரால் கொடுக்கப்பட்ட முடிபுக்கு இணங்க, செயலுறுதல் வேண்டும். மற்றும் அத்தகைய முடிவு எடுக்கப்படும் வரையில், தம் கருத்துப்படி உடனடியாக நடவடிக்கை எடுப்பதைத் தேவையானதாக ஆக்குகிற அளவுக்கு, பொருட்பாடு அவசரமானதாக இருக்கிற நேர்வில், தாம் தேவையானதெனக் கொள்கிறவாறு, அந்தப் பொருட்பாட்டில் அத்தகைய நடவடிக்கையினை எடுப்பது அல்லது அதில் அத்தகைய பணிப்புரையினைக் கொடுப்பது துணைநிலை ஆளுநருக்கு தகுதிறமுடையதாகும்.

(5) முதலமைச்சர், குடியரசுத்தலைவரால் பதவியில் அமர்த்தப்பெறுவார். மற்றும் பிற அமைச்சர்கள், முதலமைச்சரின் தேர்வுரையின்படி குடியரசுத்தலைவரால் பதவியில் அமர்த்தப்பெறுவர், மற்றும் அமைச்சர்கள், குடியரசுத்தலைவர் விழையுமளவும் பதவி வகிப்பர்.

(6) அமைச்சரவை, சட்டமன்றப் பேரவைக்கு கூட்டுப் பொறுப்புடையதாக இருக்கும்.

[1][(7) (அ)] நாடாளுமன்றம், சட்டத்தின் வாயிலாக, மேலே கண்ட கூறுகளில் அடங்கியுள்ள வகையங்களுக்குச் செல்திறம் கொடுப்பதற்கான அல்லது அதற்குத் துணையாக அமையும் மற்றும் அதற்கு சார்வுறுவான அல்லது விளைவுறுவான பொருட்பாடுகள் அனைத்திற்கும், வகையங்கள் செய்யலாம்.

[2][(ஆ). (அ) கூறில் குறிப்பிடப்பட்ட சட்டம் ஒன்றில், இந்த அரசமைப்பைத் திருத்துகிற அல்லது திருத்தும் விளைவை ஏற்படுத்துகிற வகையம் எதுவும் அடங்கியிருந்த போதிலும், அந்தச் சட்டம், 368 ஆம் உறுப்பைப் பொறுத்தவரை, இந்த அரசமைப்பின் திருத்தம் எனக் கொள்ளப்படுதல் ஆகாது.]

(8) 239ஆ எனும் உறுப்பின் வகையங்கள், கூடியவரை, அவை முறையே, பாண்டிச்சேரி ஒன்றியத்து ஆட்சிநிலவரை, ஆளுகையர் மற்றும் சட்டமன்றம் தொடர்பாகப் பொருந்துறுவது போன்றே, தேசிய தலைநகர ஆட்சிநிலவரை, துணைநிலை ஆளுநர் மற்றும் சட்டமன்றப் பேரவை தொடர்பாகப் பொருந்துறும், மற்றும் அந்த உறுப்பில், "239 அ எனும் உறுப்பின் (1) ஆம் கூறு"க்கான சுட்டுகை எதுவும், இந்த உறுப்பின் அல்லது, நேர்வுக்கேற்ப 239 அஆ எனும் உறுப்புக்கான ஒரு சுட்டுகையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.]

---

1. 1992 ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபதாம் திருத்தம்) சட்டத்தின் 3ஆம் பிரிவினால் 21–12–1991 முதல் செல்திறம் பெறுமாறு "(7)" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.
2. 1992 ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபதாம் திருத்தம்) சட்டத்தின் 3ஆம் பிரிவினால் (21–12–1991 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

239அஆ. அரசமைப்பின் இயங்குமுறை செயலற்றுப்போகும் நேர்வில் ஏற்பாடுகள் :

குடியரசுத்தலைவர், துணைநிலை ஆளுநரிடமிருந்து அறிக்கை ஒன்றைப் பெறுவதன் பேரில் அல்லது பிறவாறு—

(அ) 239அஅ எனும் உறுப்பின் அல்லது அந்த உறுப்பினைப் பின்பற்றி இயற்றப்பட்ட சட்டம் எதனின் வகையங்களுக்கும் இணங்க, தேசிய தலைநகர ஆட்சி நிலவரையின் நிருவாகத்தை நடத்திச் செல்ல இயலாத ஒரு நிலைமை எழுந்துள்ளதென, அல்லது

(ஆ) தேசிய தலைநகர ஆட்சிநிலவரையினை முறையாக நிருவாகம் செய்வதற்கு அவ்வாறு செய்வது தேவையென அல்லது உகந்ததென

தெளிவுறக்காண்பாராயின், குடியரசுத்தலைவர், ஆணையின் வழி, 239 அஅ எனும் உறுப்பின் வகையம் எதனின் அல்லது அந்த உறுப்பினைப் பின்பற்றி இயற்றப்பட்ட சட்டம் எதனின் வகையங்கள் அனைத்தின் அல்லது அவற்றில் எதனின் செயற்பாட்டினையும், அந்தச்சட்டத்தில் குறித்துரைக்கப்படும் காலஅளவுக்கும், வரைக்கட்டுகளுக்கு உட்பட்டும், தற்காலிகமாக நிறுத்திவைத்து, தேசிய தலைநகர ஆட்சிநிலவரையினை 239 ஆம் உறுப்பின் மற்றும் 239 அஅ உறுப்பின் வகையங்களுக்கு இணங்க, நிருவாகம் செய்வதற்குத் தேவையென அல்லது தமக்கு உகந்ததெனத் தோன்றும் சார்வுறு மற்றும் விளைவுறு ஏற்பாடுகளைச் செய்யலாம்.]

239ஆ. சட்டமன்றக் கூட்டத்தொடர் இறுதிசெய்யப்பட்டுள்ள காலத்தின்போது அவசரச் சட்டங்களைச் சாற்றம் செய்வதற்கு ஆளுகையருக்குள்ள அதிகாரம் :

(1) பாண்டிச்சேரி எனும் ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் சட்டமன்றக் கூட்டத்தொடர் தொடர்நிலையிலுள்ள காலம் தவிர, வேறு எச்சமயத்திலேனும், அதன் ஆளுகையர் தாம் அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டியதை அவசியமாக்கும் சூழ்நிலைகள் உள்ளன என்று தெளிவுறக்காண்பாராயின், அச்சூழ்நிலைகளுக்கேற்பத் தேவை என்று தாம் கருதும் அவசரச்சட்டங்களைச் சாற்றம் செய்யலாம்:

வரம்புரையாக: அத்தகைய அவசரச் சட்டம் எதனையும் இதற்கெனக் குடியரசுத்தலைவரிடம் இருந்து நெறியுறுத்தங்களைப் பெற்ற பின்பு அல்லாமல் அந்த ஆளுகையர் சாற்றம் செய்தல் ஆகாது:

மேலும் வரம்புரையாக: மேற்சொன்ன சட்டமன்றம் கலைக்கப்பட்டிருக்கும் போதும், 239அ உறுப்பின் (1)ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட சட்டம் எதன்படியும் எடுக்கப்பட்ட நடவடிக்கை காரணமாக அது இயங்குவது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கும்போதும், ஆளுகையர், அவ்வாறு கலைக்கப்பட்டிருக்கும் அல்லது அது இயங்குவது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் காலஅளவின்போது அவசரச்சட்டம் எதனையும் சாற்றம் செய்தல் ஆகாது.

(2) குடியரசுத்தலைவரின் நெறியுறுத்தங்களைத் தொடர்ந்து இந்த உறுப்பின்படி சாற்றம் செய்யப்படும் ஓர் அவசரச்சட்டம், 239அ உறுப்பின் (1) ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட சட்டம் ஒன்றில் அடங்கியுள்ள வகையங்களுக்கு இணங்க, ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் சட்டமன்றத்தால் உரியவாறு இயற்றப்பட்டுள்ள ஒரு சட்டமாகக் கொள்ளப்படும் ஆனால், அத்தகைய அவசரச் சட்டம் ஒவ்வொன்றும்,—

(அ) ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அந்தச் சட்டமன்றம் மீண்டும் கூடியதிலிருந்து ஆறு வாரங்கள் கழிவுற்றவுடன் அல்லது அந்தக் காலஅளவு கழிவுறுவதற்கு முன்பே அதற்கு ஒப்பேற்பு அளிக்க மறுக்கும் ஒரு தீர்மானத்தை அச்சட்டமன்றம் நிறைவேற்றுமாயின், அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் செயற்பாடு அற்றுப் போகும்; மேலும்

(ஆ) இதற்கெனக் குடியரசுத்தலைவரிடமிருந்து நெறியுறுத்தங்களைப் பெற்ற பின்பு, ஆளுகையரால், எச்சமயத்திலும் விலக்கிக் கொள்ளப்படலாம்.

(3). 239அ உறுப்பின் (1) ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட சட்டம் ஒன்றில் அடங்கியுள்ள வகையங்களுக்கு இணங்க ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தில் இடம் பெற்றிருந்தாலும் எத்தகைய வகையம் செல்லுந்தன்மையற்றுப்போகுமோ அத்தகைய வகையம் எதனையும், இந்த உறுப்பின்படி சாற்றம் செய்யப்படும் ஓர் அவசரச்சட்டம் கொண்டிருப்பின், அந்த வகையத்தின் அளவிற்கு அது இல்லாநிலையது ஆகும்.

240. குறித்தசில ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்காக ஒழுங்குறுத்து நெறிமுறைகளை வகுப்பதற்கு குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரம் :

(1) குடியரசுத்தலைவர்—

(அ) அந்தமான்–நிக்கோபார்த் தீவுகள்;

(ஆ) இலட்சத்தீவு;

(இ) தாத்ரா–நாகர்ஹவேலி;

(ஈ) தாமண் மற்றும் டையூ;

(உ) பாண்டிச்சேரி,

ஆகிய ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளின் அமைதி, முன்னேற்றம், நல்லாட்சி ஆகியவற்றுக்கான ஒழுங்குறுத்தும் விதிகளை வகுக்கலாம்:

வரம்புரையாக: பாண்டிச்சேரி எனும் ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் சட்டமன்றமாக இயங்குவதற்கு 239அ உறுப்பின்படி குழுமம் எதுவும் உருவாக்கப்பட்டிருப்பின், அந்தச் சட்டமன்றத்தின் முதல் கூட்டத்திற்கெனக் குறிப்பிடப்படும் தேதிக்குப் பின்னர் குடியரசுத்தலைவர், அந்த ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் அமைதி, முன்னேற்றம், நல்லாட்சி ஆகியவற்றுக்கான ஒழுங்குறுத்தும்விதி எதனையும் வகுத்தல் ஆகாது:

மேலும் வரம்புரையாக: பாண்டிச்சேரி எனும் ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் சட்டமன்றமாக இயங்கிவந்த குழுமம் கலைக்கப்பட்டிருக்கும்போதும், அந்தக் குழுமம் அத்தகைய சட்டமன்றமாக இயங்குவது 239அ உறுப்பின் (1) ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட சட்டம் எதன்படியும் எடுக்கப்பட்ட நடவடிக்கை காரணமாகத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்போதும், குடியரசுத்தலைவர், அவ்வாறு கலைக்கப்பட்டிருக்கும் அல்லது அது இயங்குவது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் காலஅளவின்போது, அந்த ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் அமைதி, முன்னேற்றம், நல்லாட்சி ஆகியவற்றுக்கான ஒழுங்குறுத்தும்விதிகளை வகுக்கலாம்.

(2) அவ்வாறு வகுக்கப்பட்ட ஒழுங்குறுத்தும்விதி எதுவும், அப்போதைக்கு அந்த ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்குப் பொருந்துறும் நாடாளுமன்றச் சட்டம் அல்லது பிற சட்டம் எதனையும் நீக்கறவு செய்யலாம் அல்லது திருத்தம் செய்யலாம்; மேலும், அதைக் குடியரசுத்தலைவர் சாற்றம் செய்யும்போது அந்த ஆட்சிநிலவரைக்குப் பொருந்துறும் ஒரு நாடாளுமன்றச் சட்டத்தைப்போன்று, அதே செல்லாற்றலும் செல்திறமும் அது உடையது ஆகும்.

241. ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்கான உயர் நீதிமன்றங்கள் :

(1) நாடாளுமன்றம், சட்டத்தினால் ஓர் ஒன்றியத்து ஆட்சிநிலைவரைக்கென உயர் நீதிமன்றம் ஒன்றை அமைக்கலாம்; அல்லது அத்தகைய ஆட்சிநிலவரையிலுள்ள நீதிமன்றம் எதனையும், இந்த அரசமைப்பின் அனைத்து நோக்கங்களுக்காக அல்லது அவற்றில் எந்த ஒரு நோக்கத்திற்காகவும் ஓர் உயர்நீதிமன்றமாகும் என விளம்பலாம்.

(2) VI ஆம் பகுதியின் Vஆம் அத்தியாயத்தின் வகையங்கள் 214ஆம் உறுப்பில் குறிப்பிடப்பட்ட ஓர் உயர் நீதிமன்றத்திற்குப் பொருந்துறுவன போன்றே, (1) ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட ஒவ்வோர் உயர்நீதிமன்றத்திற்கும், நாடாளுமன்றம் சட்டத்தினால் வகைசெய்யும் மாற்றமைவுகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் உட்பட்டு, பொருந்துறும்.

(3) இந்த அரசமைப்பின் வகையங்களுக்கும், இந்த அரசமைப்பினாலோ அதன் வழியாலோ உரிய சட்டமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு அச்சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின் வகையங்களுக்கும் உட்பட்டு, ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஒன்றன் தொடர்பாக, 1956ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு அதிகாரம் செலுத்திவந்த உயர் நீதிமன்றம் ஒவ்வொன்றும், அத்தகைய தொடக்கநிலைக்குப் பின்பும் அந்த ஆட்சிநிலவரை தொடர்பாக அத்தகைய அதிகாரத்தைத் தொடர்ந்து செலுத்திவரும்.

(4) இந்த உறுப்பிலுள்ள எதுவும், ஒரு மாநில உயர் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரவரம்பை ஒன்றியத்து ஆட்சிநிலவரை அல்லது அதன் பகுதி எதற்கும் நீட்டிக்கச் செய்வதற்கோ, அதனின்றும் அதை நீக்குவதற்கோ, நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரத்தைத் திறக்குறைவு செய்வதில்லை.

[1][242. * * * * * *]

---

[1] 1956 ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்)ச் சட்டத்தின் 29ஆம் பிரிவினாலும் இணைப்புப் பட்டியலினாலும் நீக்கறவு செய்யப்பட்டது.

[1]பகுதி IX

ஊராட்சிகள்

243. பொருள்வரையறைகள்:

இந்தப் பகுதியில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) "மாவட்டம்", என்பது, ஒரு மாநிலத்திலுள்ள மாவட்டம் என்று பொருள்படும்;

(ஆ) "கிராமசபை" என்பது, ஒரு கிராமத்தைப் பொறுத்தநிலையில், ஊராட்சி பரப்பிடத்திற்குள் அடங்கியுள்ள கிராமம் தொடர்பாக வாக்காளர் பட்டியல்களில் பதிவு செய்யப்பட்ட நபர்களைக் கொண்டதாக உள்ள குழுமம் என்று பொருள்படும்;

(இ) "இடைப்பட்டநிலை" என்பது, இந்தப் பகுதியின் நோக்கங்களுக்காக, பொது அறிவிக்கை வாயிலாக, இடைப்பட்ட நிலை என மாநில ஆளுநரால் குறித்துரைக்கப்படும் கிராம மற்றும் மாவட்ட நிலைகளுக்கு இடைப்பட்ட நிலை என்று பொருள்படும்;

(ஈ) "ஊராட்சி" என்பது, ஊரகப் பரப்பிடங்களுக்காக, 243ஆ உறுப்பின்படி அமைக்கப்பட்ட தன்னாட்சி நிறுவனம் ஒன்று (அவை எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும்) என்று பொருள்படும்;

(உ) "ஊராட்சிப் பரப்பிடம்" என்பது, ஓர் ஊராட்சியின் ஆட்சி நிலவரைப் பரப்பிடம் என்று பொருள்படும்;

(ஊ) "மக்கள் தொகை" என்பது, தொகை விவரங்கள் கண்டறிந்து வெளியிடப்பட்டுள்ள கடைசிமுறை மக்கள் கணக்கெடுப்பின்படியாகும் மக்கள்தொகை என்று பொருள்படும்;

(எ) "கிராமம்" என்பது, இந்தப் பகுதியின் நோக்கங்களுக்காக, ஆளுநரால் பொது அறிவிக்கை வாயிலாக கிராமம் என குறித்துரைக்கப்படும் கிராமம் என்று பொருள்படும்; மற்றும் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட கிராமங்களின் தொகுப்பை உள்ளடக்கும்.

243அ. கிராம சபை:

ஒரு கிராம சபை, ஒரு மாநிலச் சட்டமன்றம் கிராம நிலையில் சட்டத்தினால் வகை செய்யும் அதிகாரங்களைச் செலுத்தலாம் மற்றும் செயற்பணிகளைப் புரியலாம்.

243ஆ. ஊராட்சிகளை அமைத்தல்:

(1) ஒவ்வொரு மாநிலத்திலும், கிராம நிலையிலும், இடைப்பட்ட மற்றும் மாவட்ட நிலைகளிலும், இந்தப் பகுதியின் வகையங்களுக்கிணங்க ஊராட்சிகள் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2). (1) ஆம் கூறில் எது எவ்வாறிருப்பினும், இடைப்பட்ட நிலையிலுள்ள ஊராட்சிகள், இருபது இலட்சத்திற்கு மேற்படாத மக்கள் தொகையைக் கொண்டிருக்கிற ஒரு மாநிலத்தில் அமைக்கப்படுதல் ஆகாது.

243இ. ஊராட்சிகளின் கட்டமைப்பு:

(1) இந்தப் பகுதியின் வகையங்களுக்கு உட்பட்டு, ஒரு மாநிலச் சட்டமன்றம், சட்டத்தினால், ஊராட்சிகளின் கட்டமைப்பு குறித்த வகையங்களைச் செய்யலாம்:

வரம்புரையாக: எந்த நிலையிலும், ஊராட்சியின் ஆட்சி நிலவரைப் பரப்பிடத்திலுள்ள மக்கள் தொகைக்கும், அந்த ஊராட்சியில் தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டிய பதவியிடங்களின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள வீதமானது, கூடுமானவரையில், மாநிலம் எங்கணும் ஒருபடித்தாய் இருத்தல் வேண்டும்.

---

[1] 1992 ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து மூன்றாம் திருத்தம்) சட்டத்தின் 2ஆம் பிரிவினால் (1–6–1993 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

(2) ஊராட்சியிலுள்ள அனைத்துப் பதவியிடங்களும், ஊராட்சிப் பரப்பிடங்களிலுள்ள ஆட்சி நிலவரைத் தேர்தல் தொகுதிகளிலிருந்து நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களால் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் இந்த நோக்கத்திற்காக, ஒவ்வோர் ஊராட்சிப் பரப்பிடமும், ஒவ்வொரு தேர்தல் தொகுதியின் மக்கள் தொகைக்கும் அதற்கு ஒதுக்கப்பட்ட பதவியிடங்களின் எண்ணிக்கைக்கும் இடையேயுள்ள வீதமானது, கூடுமானவரையில், ஊராட்சிப் பரப்பிடம் எங்கணும் ஒருபடித்தாய் இருத்தல் வேண்டும் என்ற முறையில் ஆட்சி நிலவரைத் தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒரு மாநிலச் சட்டமன்றம், சட்டத்தினால்,—

(அ) கிராம நிலையில் உள்ள ஊராட்சிகளின் இடைப்பட்ட நிலையிலுள்ள ஊராட்சிகளின் அல்லது இடைப்பட்ட நிலைகளில் ஊராட்சிகள் இல்லாத மாநிலத்தில், மாவட்ட நிலைகளிலுள்ள ஊராட்சிகளின் தலைமையர்களும்;

(ஆ) இடைப்பட்ட நிலைகளிலுள்ள ஊராட்சிகளின், மாவட்ட நிலையிலுள்ள ஊராட்சிகளின் தலைமையர்களும்;

(இ) ஓர் ஊராட்சியில், கிராம நிலையில் அல்லாத பிற நிலையில், ஊராட்சிப் பரப்பிடத்தை முழுவதுமாக அல்லது பகுதியாக உள்ளடக்கியிருக்கிற தேர்தல் தொகுதிகளைச் சார்பாற்றம் செய்கிற மக்களவையின் உறுப்பினர்களும் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களும்

(ஈ) (i) இடைப்பட்ட நிலையிலுள்ள ஊராட்சிப் பரப்பிடத்திற்குள் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டிருக்கிறவிடத்து, இடைப்பட்ட நிலையிலுள்ள ஊராட்சியில்;

(ii) மாவட்ட நிலையிலுள்ள ஊராட்சிப் பகுதிக்குள் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டிருக்கிறவிடத்து, மாவட்ட நிலையில் உள்ள ஊராட்சியில் மாநிலங்களவை உறுப்பினர்களும், மாநிலச் சட்டமேலவை உறுப்பினர்களும் சார்பாற்றம் செய்வதற்கு வகை செய்யலாம்.

(4) ஊராட்சிப் பரப்பிடத்திலுள்ள ஆட்சிநிலவரைத் தேர்தல் தொகுதியிலிருந்து நேரடித் தேர்தல் வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பினும் இல்லாவிடினும், ஊராட்சித் தலைமையரும், ஊராட்சியின் பிற உறுப்பினர்களும், ஊராட்சிகளின் கூட்டங்களில் வாக்களிக்க உரிமை உடையவர் ஆவர்.

(5) (அ) கிராமநிலையில் உள்ள ஊராட்சியின் தலைமையர், ஒரு மாநிலச் சட்டமன்றம், சட்டத்தினால் வகை செய்யலாகும் முறையில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) இடைப்பட்ட நிலையிலுள்ள அல்லது மாவட்ட நிலையிலுள்ள ஊராட்சியின் தலைமையர், அதன் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும், அவர்களுக்கிடையேயிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

243.ஈ. பதவியிடங்களை ஒதுக்கீடு செய்தல்—

(1) ஒவ்வோர் ஊராட்சியிலும்,—

(அ) பட்டியலில் கண்ட சாதியினருக்காகவும்,

(ஆ) பட்டியலில் கண்ட பழங்குடியினருக்காகவும்

பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கைக்கும், அந்த ஊராட்சியில் நேரடித் தேர்தல் வாயிலாக நிரப்பப்பட வேண்டிய பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கைக்கும், இடையிலான வீத அளவானது, கூடுமானவரையில், அந்த ஊராட்சிப் பரப்பிடங்களில் உள்ள பட்டியலில் கண்ட சாதியினரின் அல்லது அந்த ஊராட்சிப் பரப்பிடங்களில் உள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினரின் மக்கள் தொகைக்கும் அந்தப் பரப்பிடத்திலுள்ள மொத்த மக்கட்தொகைக்கும் இடையிலான அதே வீதத்தில் இருத்தல் வேண்டும், மற்றும் அத்தகைய பதவியிடங்கள் ஊராட்சியில் வெவ்வேறு தேர்தல் தொகுதிகளுக்காக சுழற்சி முறையில் பகிர்ந்தொதுக்கப்படலாம்.

(2). (1) ஆம் கூறின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாமல், பட்டியலில் கண்ட சாதிகளைச் சேர்ந்த, அல்லது, நேர்வுக்கேற்ப, பட்டியலில் கண்ட பழங்குடிகளைச் சேர்ந்த பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் ஊராட்சியிலும் நேரடித் தேர்தல் வாயிலாக நிரப்பப்பட வேண்டிய பதவியிடங்களின் (பட்டியலில் கண்ட சாதிகளையும் பட்டியலில் கண்ட பழங்குடிகளையும் சேர்ந்த பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட பதவியிடங்களின் எண்ணிக்கை உள்ளடங்கலாக) மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாமல் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், மற்றும் அத்தகைய பதவியிடங்கள், ஊராட்சியில் வெவ்வேறுபட்ட தேர்தல் தொகுதிகளுக்காக சுழற்சி முறையில் பகிர்ந்தொதுக்கப்படலாம்.

(4) கிராம நிலையில் அல்லது பிற நிலை எதிலும் ஊராட்சிகளின் தலைமையர் பதவி, மாநிலச் சட்டமன்றம் சட்டத்தினால் வகை செய்யலாகும் முறையில், பட்டியலில் கண்ட சாதியினருக்காகவும், பட்டியலில் கண்ட பழங்குடியினருக்காகவும், பெண்களுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: மாநிலம் எதிலும், ஒவ்வொரு நிலையிலும், ஊராட்சிகளில், பட்டியலில் கண்ட சாதியினருக்காகவும், பட்டியலில் கண்ட பழங்குடியினருக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தலைமையர் பதவிகளின் எண்ணிக்கைக்கும், ஒவ்வொரு நிலையிலும், ஊராட்சிகளிலுள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கைக்கும் இடையிலான வீத அளவானது, மாநிலத்திலுள்ள பட்டியலில் கண்ட சாதியினரின் அல்லது மாநிலத்திலுள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினரின் மக்கள் தொகைக்கும் அந்த மாநிலத்தின் மொத்த மக்கட் தொகைக்கும் இடையிலான அதே விகிதத்தில் இருத்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக: ஒவ்வொரு நிலையிலும், ஊராட்சிகளிலுள்ள தலைமையர் பதவிகளின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாமல், பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்:

இன்னும் வரம்புரையாக: இந்தக் கூறின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு நிலையிலும் வெவ்வேறுபட்ட ஊராட்சிகளுக்கு சுழற்சி முறையில் பகிர்ந்தொதுக்கப்படுதல் வேண்டும்.

(5). (1) ஆம் மற்றும் (2) ஆம் கூறுகளின்படி பதவியிடங்களை ஒதுக்கீடு செய்தல் மற்றும் (4) ஆம் கூறின்படி (பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டவைகள் அல்லாத பிற) தலைமையர் பதவிகளை ஒதுக்கீடு செய்தல், 334 ஆம் உறுப்பில் குறித்துரைக்கப்பட்ட கால அளவு கழிவுறுவதன்பேரில், செல்திறம் அற்றுப் போகும்.

(6) இந்தப் பகுதியில் உள்ள எதுவும், குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சார்பாக எந்த நிலையிலுமான ஊராட்சி எதிலும் உள்ள பதவியிடங்களை அல்லது ஊராட்சிகளில் தலைமையர் பதவிகளை ஒதுக்கீடு செய்வதற்காக மாநிலச் சட்டமன்றம் வகை எதனையும் செய்வதற்குத் தடையுறு ஆவதில்லை.

243உ. ஊராட்சிகள் முதலியவற்றின் காலஅளவு:

(1) ஒவ்வொரு ஊராட்சியும், அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள சட்டம் எதன்படியும் முன்னதாகவே கலைக்கப்பட்டாலன்றி, அதன் முதல் கூட்டத்திற்காகக் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகளுக்குத் தொடர்ந்திருந்து வரும், மற்றும் அதற்கு மேலும் இருத்தல் ஆகாது;

(2) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதனின் திருத்தம் எதுவும் அந்தத் திருத்தத்திற்கு ஒட்டி முன்பு செயற்பட்டு வந்த ஊராட்சியை (1) ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்ட அதன் கால அளவு கழிவுறும் வரை எந்த நிலையிலும் கலைக்கும் விளைவுடையது ஆகாது.

(3) ஊராட்சியை அமைப்பதற்கான தேர்தல்,—

(அ) (1) ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்ட அதன் கால அளவு கழிவுறுவதற்கு முன்பு;

(ஆ) அது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத கால அளவு கழிவுறுவதற்கு முன்பு

நடத்தி முடிக்கப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: கலைக்கப்பட்ட ஊராட்சி தொடர்ந்திருக்கக்கூடிய கால அளவில் எஞ்சிய கால அளவானது, ஆறு மாதங்களுக்குக் குறைவாக இருக்கிறவிடத்து, அந்தக் கால அளவிற்கு ஊராட்சியை அமைப்பதற்கு இந்தக் கூறின்படி தேர்தல் எதனையும் நடத்துவது தேவையானது ஆகாது.

(4) ஊராட்சியின் கால அளவு கழிவுறுவதற்கு முன்பு, அது கலைக்கப்படுவதன் பேரில் அமைக்கப்பட்ட ஊராட்சி, அந்த ஊராட்சி அவ்வாறு கலைக்கப்படாதிருப்பின், (1) ஆம் கூறின்படி அந்த ஊராட்சி தொடர்ந்திருக்கக்கூடிய எஞ்சிய காலஅளவிற்கு மட்டுமே தொடர்ந்திருத்தல் வேண்டும்.

243ஊ. உறுப்பினர் பதவிக்கான தகுதிக்கேடுகள் :

(1) ஒருவர்—

(அ) தொடர்புடைய மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களின் நோக்கங்களுக்காக, அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள சட்டம் எதனாலுமோ அதன் வழியாலோ தகுதிக்கேடுற்றவராயிருப்பின், அவர் ஊராட்சி உறுப்பினராக தெரிந்தெடுக்கப் பெறுவதற்கும், உறுப்பினராக இருந்துவருவதற்கும் தகுதிக் கேடுற்றவர் ஆவார்:

வரம்புரையாக: ஒருவர், இருபத்தோரு வயது நிறைவெய்தியவராக இருப்பாராயின், அவர் இருபத்தைந்து வயதுக்குக் குறைந்தவராக உள்ளார் என்ற காரணத்தின் பேரில் தகுதிக் கேடுற்றவர் ஆகார்;

(ஆ) மாநிலச் சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டத்தாலோ அதன் வழியாலோ தகுதிக்கேடுற்றவராயிருப்பின் அவர் ஊராட்சி உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பெறுவதற்கும் இருந்து வருவதற்கும் தகுதிக் கேடுற்றவர் ஆவார்;

(2) ஊராட்சியின் உறுப்பினர் ஒருவர், (1) ஆம் கூறில் சொல்லப்பட்டுள்ள தகுதிக் கேடுகளில் எதற்கேனும் உள்ளாகியிருக்கிறாரா என்பது பற்றிய பிரச்சினை எதுவும் எழுமாயின், அப்பிரச்சினை, மாநிலச் சட்டமன்றம், சட்டத்தினால் வகை செய்யலாகும் அதிகாரஅமைப்பின் முடிபிற்கு அத்தகைய முறையிலும் குறித்தனுப்பப்படுதல் வேண்டும்.

243எ. ஊராட்சிகளின் அதிகாரங்கள், அதிகாரஅடைவுகள், பொறுப்புகள் ஆகியன :

அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, ஒரு மாநிலச் சட்டமன்றம், சட்டத்தின் வாயிலாக ஊராட்சிகள் தன்னாட்சி நிறுவனங்களாகச் செயற்படுவதற்கு அவற்றை இயல்விக்கத் தேவையாகலாகும் அதிகாரங்களையும், அதிகாரஅடைவுகளையும் அவற்றிற்கு அளிக்கலாம் மற்றும்—

(அ) பொருளாதார மேம்பாடு மற்றும் சமுதாய நீதிக்கான திட்டங்களைத் தயாரிப்பது;

(ஆ) பதினொன்றாம் இணைப்புப்பட்டியலில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்பாடுகள் தொடர்பானவை உள்ளடங்கலாக, அவற்றிற்கு ஒப்படைக்கப்படலாகும் பொருளாதார மேம்பாடு மற்றும் சமுதாய நீதிக்கான திட்டங்களைச் செயற்படுத்துவது

பொறுத்து அத்தகைய சட்டம், அதில் குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, உரிய நிலையில் ஊராட்சிகளுக்கு அதிகாரங்களும், பொறுப்புகளும் அளிக்கப்படுவதற்கான குறித்த சில வகையங்களைக் கொண்டதாயிருக்கலாம்.

(3) ஊராட்சியை அமைப்பதற்கான தேர்தல்,—

(அ) (1) ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்ட அதன் கால அளவு கழிவுறுவதற்கு முன்பு;

(ஆ) அது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத கால அளவு கழிவுறுவதற்கு முன்பு

நடத்தி முடிக்கப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: கலைக்கப்பட்ட ஊராட்சி தொடர்ந்திருக்கக்கூடிய கால அளவில் எஞ்சிய கால அளவானது, ஆறு மாதங்களுக்குக் குறைவாக இருக்கிறவிடத்து, அந்தக் கால அளவிற்கு ஊராட்சியை அமைப்பதற்கு இந்தக் கூறின்படி தேர்தல் எதனையும் நடத்துவது தேவையானது ஆகாது.

(4) ஊராட்சியின் கால அளவு கழிவுறுவதற்கு முன்பு, அது கலைக்கப்படுவதன் பேரில் அமைக்கப்பட்ட ஊராட்சி, அந்த ஊராட்சி அவ்வாறு கலைக்கப்படாதிருப்பின், (1) ஆம் கூறின்படி அந்த ஊராட்சி தொடர்ந்திருக்கக்கூடிய எஞ்சிய காலஅளவிற்கு மட்டுமே தொடர்ந்திருத்தல் வேண்டும்.

243ஊ. உறுப்பினர் பதவிக்கான தகுதிக்கேடுகள் :

(1) ஒருவர்—

(அ) தொடர்புடைய மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களின் நோக்கங்களுக்காக, அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள சட்டம் எதனாலுமோ அதன் வழியாலோ தகுதிக்கேடுற்றவராயிருப்பின், அவர் ஊராட்சி உறுப்பினராக தெரிந்தெடுக்கப் பெறுவதற்கும், உறுப்பினராக இருந்துவருவதற்கும் தகுதிக் கேடுற்றவர் ஆவார்:

வரம்புரையாக: ஒருவர், இருபத்தோரு வயது நிறைவெய்தியவராக இருப்பாராயின், அவர் இருபத்தைந்து வயதுக்குக் குறைந்தவராக உள்ளார் என்ற காரணத்தின் பேரில் தகுதிக் கேடுற்றவர் ஆகார்;

(ஆ) மாநிலச் சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டத்தாலோ அதன் வழியாலோ தகுதிக்கேடுற்றவராயிருப்பின் அவர் ஊராட்சி உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பெறுவதற்கும் இருந்து வருவதற்கும் தகுதிக் கேடுற்றவர் ஆவார்;

(2) ஊராட்சியின் உறுப்பினர் ஒருவர், (1) ஆம் கூறில் சொல்லப்பட்டுள்ள தகுதிக் கேடுகளில் எதற்கேனும் உள்ளாகியிருக்கிறாரா என்பது பற்றிய பிரச்சினை எதுவும் எழுமாயின், அப்பிரச்சினை, மாநிலச் சட்டமன்றம், சட்டத்தினால் வகை செய்யலாகும் அதிகாரஅமைப்பின் முடிபிற்கு அத்தகைய முறையிலும் குறித்தனுப்பப்படுதல் வேண்டும்.

243எ. ஊராட்சிகளின் அதிகாரங்கள், அதிகாரஅடைவுகள், பொறுப்புகள் ஆகியன :

அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, ஒரு மாநிலச் சட்டமன்றம், சட்டத்தின் வாயிலாக ஊராட்சிகள் தன்னாட்சி நிறுவனங்களாகச் செயற்படுவதற்கு அவற்றை இயல்விக்கத் தேவையாகலாகும் அதிகாரங்களையும், அதிகாரஅடைவுகளையும் அவற்றிற்கு அளிக்கலாம் மற்றும்—

(அ) பொருளாதார மேம்பாடு மற்றும் சமுதாய நீதிக்கான திட்டங்களைத் தயாரிப்பது;

(ஆ) பதினொன்றாம் இணைப்புப்பட்டியலில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்பாடுகள் தொடர்பானவை உள்ளடங்கலாக, அவற்றிற்கு ஒப்படைக்கப்படலாகும் பொருளாதார மேம்பாடு மற்றும் சமுதாய நீதிக்கான திட்டங்களைச் செயற்படுத்துவது

பொறுத்து, அத்தகைய சட்டம், அதில் குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, உரிய நிலையில் ஊராட்சிகளுக்கு அதிகாரங்களும், பொறுப்புகளும் அளிக்கப்படுவதற்கான குறித்த சில வகையங்களைக் கொண்டதாயிருக்கலாம்.

243ஏ. வரிகளை விதிப்பதற்கு ஊராட்சிகளுக்குள்ள அதிகாரம் மற்றும் அதன் நிதியங்கள் :

ஒரு மாநிலச் சட்டமன்றம், சட்டத்தினால், அந்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்படலாகும்.—

(அ) அத்தகைய நெறிமுறைக்கிணங்கவும், வரம்புகளுக்குட்பட்டும் வரிகள், தீர்வைகள், சுங்கவரிகள், கட்டணங்கள் ஆகியவற்றை விதிப்பதற்கும், வசூலிப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் ஊராட்சிக்கு அதிகாரமளிக்கலாம்;

(ஆ) அத்தகைய நோக்கங்களுக்காகவும், வரைக்கட்டுகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டும் மாநில அரசால் விதித்து வசூலிக்கப்படும் வரிகள், தீர்வைகள், சுங்கவரிகள், கட்டணங்கள் ஆகியவற்றை ஊராட்சிக்குக் குறித்தளிக்கலாம்;

(இ) மாநிலத்தின் திரள்நிதியத்திலிருந்து ஊராட்சிகளுக்கு உதவி மானியங்கள் வழங்குவதற்கு வகை செய்யலாம்; மற்றும்

(ஈ) முறையே ஊராட்சிகளால் அல்லது அதன் சார்பாக, பெறப்பட்ட பணங்கள் அனைத்தையும் வரவு வைப்பதற்காகவும், அதிலிருந்து பணங்களைத் திரும்பப் பெறுவதற்காகவும் நிதியங்களை அமைப்பதற்கு வகை செய்யலாம்.

243ஐ. நிதிநிலையை மறுஆய்வு செய்ய நிதி ஆணையத்தை அமைத்தல் :

(1) ஒரு மாநில ஆளுநர், 1992 ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து மூன்றாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்க நிலையிலிருந்து ஓராண்டிற்குள் கூடிய விரைவிலும், அதற்குப் பின்பு ஒவ்வோர் ஐந்தாவது ஆண்டு முடிவிலும், ஊராட்சிகளின் நிதி நிலையை மறு ஆய்வு செய்வதற்கும்,—

(அ) (i) இந்தப் பகுதியின்படி மாநிலத்திற்கும் ஊராட்சிகளுக்கும் இடையே பிரித்தளிக்கப்படலாகிறதும் மாநிலத்தால் விதிக்கத்தக்கதுமான வரி, தீர்வைகளின், சுங்க வரி மற்றும் கட்டணங்களின் நிகரத்தொகையை மாநிலத்திற்கும் ஊராட்சிகளுக்கும் இடையே பகிர்ந்தளிப்பதையும், அந்தத் தொகைகளில் அவற்றிற்குரிய பங்குகளை அனைத்து நிலைகளிலும் ஊராட்சிகளிடையே பகிர்ந்தொதுக்குவதையும்;

(ii) ஊராட்சிகளுக்குக் குறித்தளிக்கப்படலாகும் அல்லது அதனால் பயன்படுத்தப்படலாகும் வரிகள், தீர்வைகள், சுங்க வரிகள், கட்டணங்கள் ஆகியவற்றைத் தீர்மானிப்பதையும்;

(iii) மாநிலத் திரள் நிதியத்திலிருந்து ஊராட்சிகளுக்கான உதவி மானியங்களையும்

உட்படுத்துகிற நெறிகள்;

(ஆ) ஊராட்சிகளின் நிதிநிலையை மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் நடவடிக்கைகள்;

(இ) ஊராட்சிகளின் சீரான நிதிநலன் கருதி ஆளுநரால் நிதி ஆணையத்திற்குக் குறித்தனுப்பப்படும் பிற பொருட்பாடு எதுவும்

குறித்து ஆளுநருக்குப் பரிந்துரைகள் செய்வதற்கும் நிதி ஆணையம் ஒன்றை அமைத்தல் வேண்டும்.

(2) ஒரு மாநிலச் சட்டமன்றம், ஆணையத்தின் கட்டமைப்பு, அதன் உறுப்பினர்களாக அமர்த்தப்படுவதற்குத் தேவைப்படும் தகுதிப்பாடுகள், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய முறை ஆகியவற்றிற்குச் சட்டத்தின் வழி வகை செய்யலாம்.

(3) ஆணையம், தன் நடைமுறைகளைத் தீர்மானித்தல் வேண்டும், மற்றும் தன் அலுவற்பணிகளை ஆற்றுகையில் மாநிலச் சட்டமன்றம், சட்டத்தினால் அதற்கு வழங்கலாகும் அதிகாரங்களை உடையது ஆகும்.

(4) ஆளுநர், இந்த உறுப்பின்படி ஆணையத்தால் செய்யப்படும் ஒவ்வொரு பரிந்துரையும், அதன்மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்த விளக்க விவரக்குறிப்புடன் சேர்த்து மாநிலச் சட்டமன்றத்தின் முன் வைக்கப்படுமாறு செய்தல் வேண்டும்.

243ஒ. ஊராட்சிகளின் கணக்குகளைத் தணிக்கை செய்தல் :

மாநிலச் சட்டமன்றம், சட்டத்தின் வயிலாக, ஊராட்சிகளால் கணக்குகள் வைத்து வரப்படுவதையும், அந்தக் கணக்குகள் தணிக்கை செய்யப்படுவதையும் பொறுத்த வகையங்களைச் செய்யலாம்.

243ஓ. ஊராட்சிகளுக்குத் தேர்தல்கள் :

(1) ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் அனைத்திற்காகவும் வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதற்கான மற்றும் அத்தேர்தல்களை நடத்துவதற்கான கண்காணிப்பு, நெறிப்படுத்துகை, கட்டாள்கை ஆகியவை, ஆளுநரால் அமர்த்தப்பெறும் மாநிலத் தேர்தல் ஆணையரைக் கொண்டிருக்கிற மாநிலத் தேர்தல் ஆணையத்திடம் உற்றமைந்திருக்கும்.

(2) மாநிலச் சட்டமன்றத்தால் வகுக்கப்படும் சட்டம் எதனின் வகையங்களுக்கும் உட்பட்டு, மாநிலத் தேர்தல் ஆணையரின் பணிவரைக்கட்டுகளும் பதவியுரிமைக் காலமும், ஆளுநர் வகுக்கும் விதியின் வழித்தீர்மானிக்கிறவாறு இருக்கும்:

வரம்புரையாக: உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரை அகற்றுவது போன்ற அதே முறையிலும் அதே காரணங்களின்பேரிலும் அன்றி, மாநிலத் தேர்தல் ஆணையரை அவருடைய பதவியிலிருந்து அகற்றுதல் ஆகாது; மேலும், மாநிலத் தேர்தல் ஆணையரின் பணிவரைக்கட்டுகள், அவர் அமர்த்தப் பெற்ற பின்பு அவருக்குப் பாதகமான வகையில் மாற்றப்படுதல் ஆகாது.

(3) (1) ஆம் கூறின்படி மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு அளிக்கப்பட்டுள்ள செயற்பணிகளை ஆற்றுவதற்குத் தேவைப்படும் பணியாளர் தொகுதியை, மாநிலத் தேர்தல் ஆணையம் அவ்வாறு கோருகிற போது, மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு மாநில ஆளுநர் கிடைக்குமாறு செய்வார்.

(4) இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு மாநிலச் சட்ட மன்றம், சட்டத்தின் வயிலாக ஊராட்சிகளின் தேர்தல்கள் பொறுத்த, அல்லது அவை தொடர்பான, பொருட்பாடுகள் அனைத்தும் பொறுத்து வகை செய்யலாம்.

243ஔ. ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்குப் பொருந்துதல் :

இந்தப் பகுதியின் வகையங்கள், ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்குப் பொருந்தும் மற்றும் ஓர் ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்குப் பொருந்தச்செய்கையில் ஒரு மாநில ஆளுநர் குறித்த சுட்டுகைகள், 239ஆம் உறுப்பின்படி அமர்த்தப்பட்ட ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் ஆளுகையர் குறித்த சுட்டுகை போன்றும், ஒரு மாநிலச் சட்டமன்றம் அல்லது சட்டமன்றப் பேரவை குறித்த சுட்டுகைகள், சட்டமன்றப் பேரவையைக் கொண்டிருக்கிற ஒன்றியத்து ஆட்சிநிலவரையைப் பொறுத்தவரை, அந்தச் சட்டமன்றப் பேரவை குறித்த சுட்டுகை போன்றும் செல்திறம் உடையதாகும்;

வரம்புரையாக: குடியரசுத் தலைவர், பொது அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் அவர் குறித்துரைக்கலாகும் விலக்குகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு, ஒன்றியத்து ஆட்சிநிலவரை எதற்கும் அல்லது அதன் பகுதிக்கு இந்தப் பகுதியின் வகையங்கள் பொருந்துதல் வேண்டும் என்று பணிக்கலாம்.

243க. இந்தப் பகுதி குறித்தசில வரையிடங்களுக்குப் பொருந்துறாது.

(1) இந்தப் பகுதியிலுள்ள எதுவும், 244ஆம் உறுப்பின் (1)ஆம் கூறில் சுட்டப்பட்ட பட்டியல் வரையிடங்களுக்கும், (2) ஆம் கூறில் சுட்டப்பட்ட பழங்குடியினர் வரையிடங்களுக்கும் பொருந்துறாது.

(2) இந்தப் பிரிவிலுள்ள எதுவும்—

(அ) நாகலாந்து, மேகாலயா, மிசோராம் ஆகிய மாநிலங்களுக்கு,

(ஆ) அப்போதைக்குச் செல்லாற்றலிலிருக்கிற சட்டம் எதன்படியும் மாவட்ட மன்றங்களைக் கொண்டிருக்கிற மணிப்பூர் மாநிலத்தில் உள்ள குன்றுப் பரப்பிடங்களுக்கு,

பொருந்தாது.

(3) இந்தப் பகுதியிலுள்ள எதுவும்—

(அ) மாவட்ட நிலையிலான ஊராட்சிகள் தொடர்பாக, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும், டார்ஜிலிங் கோர்கா குன்று மன்றம் இருந்து வருகிற மேற்கு வங்க மாநிலத்திலுள்ள டார்ஜிலிங் மாவட்ட குன்றுப் பகுதிகளுக்குப் பொருந்தாது.

(ஆ) அந்தச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட டார்ஜிலிங் கோர்கா குன்று மன்றத்தின் செயற்பணிகளையும் அதிகாரங்களையும் பாதிப்பதாகப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

[1][3(அ) பட்டியலில் கண்ட பழங்குடியினருக்காக பதவியிடங்களை ஒதுக்குவது தொடர்பாக 243(ஈ) உறுப்பிலுள்ள எதுவும், அருணாச்சலப் பிரதேச மாநிலத்திற்குப் பொருந்துவதில்லை.]

(4) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்,—

(அ) (2) ஆம் கூறின் (அ) உட்கூறில் சுட்டப்பட்ட மாநிலச் சட்டமன்றம், அந்த அவையின் மொத்த உறுப்பினரில் பெரும் பான்மையோராலும், அந்த அவையில் வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையோராலும் அந்த மாநிலத்தின் சட்டமன்றப் பேரவை அந்தப்படிக்கு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்குமாயின், (1)ஆம் கூறில் சுட்டப்பட்ட வரையிடங்கள் நீங்கலாக, அந்த மாநிலத்திற்கு இந்தப் பகுதியைச் சட்டத்தின் வழி நீட்டிக்கலாம்;

(ஆ) நாடாளுமன்றம் சட்டத்தின் வழி, அந்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்படும் விலக்குகளுக்கும், மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு, (1) ஆம் கூறில் சுட்டப்பட்ட பட்டியல் வரையிடங்களுக்கும் பழங்குடியினர் வரையிடங்களுக்கும் இந்தப் பகுதியின் வகையங்களை நீட்டிக்கலாம், மற்றும் அத்தகைய சட்டம் எதுவும், 368 ஆம் உறுப்பின் நோக்கங்களுக்காக, அரசமைப்பின் திருத்தமாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

243ங. நிலவுறும் சட்டங்களும், ஊராட்சிகளும் தொடர்ந்திருந்து வருதல் :

இந்தப் பகுதியில் உள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தப் பகுதியின் வகையங்களுக்கு முரணாக உள்ள 1992 ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து இரண்டாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்க நிலைக்கு ஒட்டி முன்பு, மாநிலத்தில் செல்லாற்றலிருந்த ஊராட்சிகள் தொடர்பான சட்டம் எதனின் வகையம் எதுவும், தகுதிறமுள்ள சட்டமன்றத்தினால் அல்லது பிற தகுதிறமுள்ள அதிகார அமைப்பால் திருத்தமோ அல்லது நீக்கறவோ செய்யப்படும்வரை அல்லது அத்தகைய தொடக்க நிலையிலிருந்து ஓராண்டு கழிவுறும்வரை, இவற்றில் எது முந்தியதோ அதுவரை செல்லாற்றலில் தொடர்ந்திருந்து வருதல் வேண்டும்:

வரம்புரையாக: அத்தகைய தொடக்க நிலையை ஒட்டி முன்பு இருந்து வரும் ஊராட்சிகள் அனைத்தும், அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையால் அல்லது சட்டமன்ற மேலவையை உடைய மாநிலம் ஒன்றைப் பொறுத்தவரை, அந்த மாநிலத்தின் சட்டமன்ற ஈரவைகளில் ஒவ்வொன்றாலும் அந்தப்படிக்குப் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் உடனடியாகக் கலைக்கப்பட்டாலன்றி, அவற்றின் காலஅளவு கழிவுறும் வரை தொடர்ந்திருந்து வருதல் வேண்டும்.

243ச. தேர்தல் தொடர்பான பொருட்பாடுகளில் நீதிமன்றங்கள் குறுக்கிடுவதற்குத் தடை :

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்,—

(அ) தேர்தல் தொகுதிகளை வரையறை செய்தல் தொடர்பாக, அல்லது அத்தகைய தேர்தல் தொகுதிகளுக்கு பதவியிடங்களைக் குறித்தொதுக்குவது தொடர்பாக, 243 ஔ கூறின்படி இயற்றப்பட்ட அல்லது இயற்றப்பட வேண்டியதாகப் புலப்படுகிற சட்டம் எதனின் செல்லுந்தன்மையானது, நீதிமன்றம் எதிலும் மறுத்து வாதிடப்படுதல் ஆகாது

(ஆ) ஒரு மாநிலச் சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டம் எதனாலுமோ அல்லது அதன் வழியாகவோ வகை செய்யப்பட்டுள்ள அதிகார அமைப்பிற்கு மற்றும் அத்தகைய முறையில் முன்னிடப்பட்ட தேர்தல் மனுவின் மூலம் தவிர ஊராட்சி எதனின் தேர்தல் எதுவும் மறுத்து வாதிடப்படுதல் ஆகாது.

---

1. 2000 ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து மூன்றாம் திருத்தம்) சட்டத்தின் 2ஆம் பிரிவினால் (8–9–2000 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

[1]பகுதி IX அ

நகராட்சிகள்

243ஞ. பொருள்வரையறைகள்:

இந்தப் பகுதியில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) "குழு" என்பது 243த உறுப்பின்படி அமைக்கப்பட்ட குழு என்று பொருள்படும்;

(ஆ) "மாவட்டம்" என்பது, ஒரு மாநிலத்திலுள்ள மாவட்டம் என்று பொருள்படும்;

(இ) "பெருநகர் வரையிடம்" என்பது, பத்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டதாகவும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களையும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நகராட்சிகளை அல்லது ஊராட்சிகளை அல்லது அடுத்துள்ள பிற வரையிடங்களை அடக்கியதாகவும் இருந்து, இந்தப் பகுதியின் நோக்கங்களுக்காக "பெருநகர் வரையிடம்" என்று பொது அறிவிக்கை வாயிலாக ஆளுநரால் குறித்துரைக்கப்படும் ஒரு வரையிடம் என்று பொருள்படும்;

(ஈ) "நகராட்சி வரையிடம்" என்பது, ஆளுநரால் அறிவிக்கை செய்யப்பட்டவாறான ஒரு நகராட்சியின் ஆட்சி நிலவரைப் பகுதி என்று பொருள்படும்;

(உ) "நகராட்சி" என்பது, 243ட உறுப்பின்படி அமைக்கப்பட்ட தன்னாட்சி நிறுவனம் என்று பொருள்படும்;

(ஊ) "ஊராட்சி" என்பது 243ஆ உறுப்பின்படி அமைக்கப்பட்ட ஊராட்சி என்று பொருள்படும்;

(எ) "மக்கள் தொகை" என்பது, தொகை விவரங்கள் கண்டறிந்து வெளியிடப்பட்டுள்ள கடைசி முறை கணக்கெடுப்பின்படியாகும் மக்கள் தொகை என்று பொருள்படும்.

243ட. நகராட்சிகளை அமைத்தல் :

(1) ஒவ்வொரு மாநிலத்திலும், இந்தப் பகுதியின் வகையங்களுக்கிணங்க, பின்வருவன அமைக்கப்படுதல் வேண்டும்,—

(அ) (எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும்) மாறும் இடைக்காலப் பகுதிக்கான நாகர் ஊராட்சி அதாவது ஊரகப்பகுதியிலிருந்து நகரகப் பகுதியாக மாறுகிற இடைக் காலத்திலுள்ள பகுதி;

(ஆ) சிறிய நகரகப் பகுதிக்கான நகராட்சி மன்றம்; மற்றும்

(இ) பெரிய நகரகப் பகுதிக்கான மாநகராட்சி மன்றம்:

வரம்புரையாக: ஆளுநர், நகரகப் பகுதியின் அளவையும், அந்தப் பகுதியில் ஒரு தொழில் நிறுவனத்தால் அளிக்கப்பட்ட அல்லது அளிக்கக் கருதப்பட்ட நகராட்சிப் பணிகளையும், தான் பொருத்தமெனக் கருதும் பிற கூறுகளையும் கருத்திற்கொண்டு, பொது அறிவிக்கை வாயிலாக, தொழில் நகரியம் என்று குறித்துரைக்கும் நகராட்சி, அந்த நகரகப் பகுதியில் அல்லது அதன் ஒரு பகுதியில் இந்தக் கூறின்படி அமைக்கப்படுதல் ஆகாது.

(2) இந்தக் கூறில், மாறும் "இடைக்காலப்பகுதி" "சிறிய நகரகப் பகுதி", "பெரிய நகரகப் பகுதி" என்பன, ஆளுநர், அந்தப் பகுதியின் மக்கள் தொகை, அங்குள்ள மக்கள் தொகை நெருக்கம், உள்ளாட்சி நிருவாகத்திற்காக ஏற்படுத்தப்பட்ட வருவாய் வேளாண்மை சாராத நடவடிக்கைகளில் வேலையமர்த்த சதவீதம், பொருளாதார முக்கியத்துவம் அல்லது தான் பொருத்தமெனக் கருதும் பிற கூறுகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, இந்தப் பகுதியின் நோக்கங்களுக்காக பொது அறிகைகை வாயிலாகக் குறித்துரைக்கும் பகுதி என்று பொருள்படும்.

---

[1] 1992 ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து நான்காம் திருத்தம்) சட்டத்தின் 2ஆம் பிரிவினால் (1–6–1993 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

243ண. நகராட்சிகளின் கட்டமைப்பு :

(1). (2) ஆம் கூறில் வகை செய்யப்பட்டவாறு தவிர, நகராட்சியில் உள்ள பதவியிடங்கள் அனைத்தும், நகராட்சிப் பகுதியிலுள்ள ஆட்சி நிலவரைத் தேர்தல் தொகுதிகளிலிருந்து நேரடித் தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்படும் நபர்களால் நிரப்பப்படுதல் வேண்டும். மற்றும் இந்த நோக்கத்திற்காக நகராட்சிப் பகுதி ஒவ்வொன்றும், நகராட்சித் தொகுதி (Wards) என்றழைக்கப்படும் ஆட்சிநிலவரைத் தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒரு மாநிலச் சட்டமன்றம், சட்டத்தின் வழி,—

(அ) (i) நகராட்சி நிருவாகத்தில் சிறந்த தனியறிவு அல்லது பட்டறிவு பெற்றிருக்கிறவர்களுக்கு,

(ii) நகராட்சிப் பகுதி முழுவதையும் அல்லது அதில் ஒரு பகுதியை அடக்கியிருக்கிற தேர்தல் தொகுதிகளைச் சார்பாற்றம் செய்கிற மக்களவை உறுப்பினர்களுக்கும் மாநிலச் சட்டமன்றப்பேரவை உறுப்பினர்களுக்கும்,

(iii) நகராட்சிப் பகுதிக்குள் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்ட மாநிலங்களவை உறுப்பினர்களுக்கும் மாநிலச் சட்டமன்றமேலவை உறுப்பினர்களுக்கும்,

(iv) 243த உறுப்பின் (5)ஆம் கூறின்படி அமைக்கப்பட்ட குழுக்களின் தலைமையர்களுக்கு,

நகராட்சியில் சார்பாற்றம் செய்வதற்கு வகை செய்யலாம்:

வரம்புரையாக: (i)ஆம் பத்தியில் சுட்டப்பட்டவர்களுக்கு, நகராட்சிக் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமை இல்லை;

(ஆ) நகராட்சித் தலைமையர் தேர்தல் முறைக்கு வகை செய்யலாம்.

243த. நகராட்சித் தொகுதிக் குழுக்கள் முதலியவற்றை அமைத்தல் மற்றும் அவற்றின் கட்டமைப்பு :

(1) மூன்று இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டிருக்கிற நகராட்சியின் ஆட்சி நிலவரைப்பகுதிக்குள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நகராட்சித் தொகுதிகளைக் கொண்டிருக்கிற நகராட்சித் தொகுதிக் குழுக்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒரு மாநிலச் சட்டமன்றம், சட்டத்தின் வழி—

(அ) நகராட்சித் தொகுதிக் குழுவின் கட்டமைப்பு மற்றும் ஆட்சி நிலவரை வரையிடம்,

(ஆ) நகராட்சித் தொகுதிக் குழுவிலுள்ள பதவியிடங்கள் நிரப்பப்பட வேண்டிய முறை

குறித்து வகை செய்யலாம்.

(3) நகராட்சித் தொகுதிக்குழுவின் ஆட்சி நிலவரைப் பரப்பிடத்திற்குள் ஒரு நகராட்சித் தொகுதியைச் சார்பாற்றம் செய்கிற நகராட்சி உறுப்பினர் ஒருவர், அந்தக் குழுவின் உறுப்பினராக இருப்பார்.

(4) நகராட்சித் தொகுதிக் குழுவானது,—

(அ) ஒரு நகராட்சித் தொகுதியைக் கொண்டிருக்குமிடத்து, நகராட்சியில் அந்தத் தொகுதியைச் சார்பாற்றம் செய்கிற உறுப்பினர்; அல்லது

(ஆ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நகராட்சித் தொகுதிகளைக் கொண்டிருக்குமிடத்து, நகராட்சித் தொகுதிக்குழுவின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நகராட்சியில் அந்த நகராட்சித் தொகுதிகளைச் சார்பாற்றம் செய்கிற உறுப்பினர்களில் ஒருவர்

குழுவின் தலைமையராக இருப்பார்.

(5) நகராட்சித் தொகுதிக் குழுக்களுக்குக் கூடுதலாக குழுக்களை அமைப்பதற்கான ஏற்பாடு எதனையும் செய்வதிலிருந்து இந்த உறுப்பிலுள்ள எதுவும் மாநில சட்டமன்றத்திற்குத் தடையூறு செய்வதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

243(ந) பதவியிடங்களை ஒதுக்கீடு செய்தல்:

(1) ஒவ்வொரு நகராட்சியிலும், பட்டியலில் கண்ட சாதியினருக்காகவும் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்காகவும் பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கைக்கும், அந்த நகராட்சிப் பகுதியில் உள்ள பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் அந்த நகராட்சிப் பகுதியில் உள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினரின் மக்கள் தொகைக்கும் இடையிலான வீத அளவானது, கூடுமானவரையில், அந்த வரையிடத்தில் உள்ள மக்கள் தொகைக்கும் அந்த நகராட்சியில் நேரடித் தேர்தல் வாயிலாக நிரப்பப்பட வேண்டிய பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கைக்கும் இடையிலான அதே வீத அளவில் இருத்தல் வேண்டும், மற்றும் அத்தகைய பதவியிடங்கள் நகராட்சி ஒன்றில் உள்ள வெவ்வேறு தேர்தல் தொகுதிகளுக்காக சுழற்சி முறையில் பகிர்ந்தொதுக்கப்படலாம்.

(2). (1) ஆம் கூறின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட பதயிடங்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாமல் பட்டியலில் கண்ட சாதியிகளை அல்லது, நேர்வுக்கேற்ப பட்டியலில் கண்ட பழங்குடிகளைச் சார்ந்த பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு நகராட்சியிலும், நேரடித் தேர்தல் வாயிலாக நிரப்பப்பட வேண்டிய (பட்டியலில் கண்ட சாதிகளை மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடிகளைச் சார்ந்த பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களின் எண்ணிக்கை உள்ளடங்கலாக) பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாமல், பெண்களுக்காக ஒதுக்கப்படுதல் வேண்டும் மற்றும் அந்தப் பதவியிடங்கள், நகராட்சியிலுள்ள பல்வேறுபட்ட தொகுதிகளுக்கு சுழற்சி முறையில் குறித்தொதுக்கப்படலாம்.

(4) நகராட்சியிலுள்ள தலைமையர்களின் பதவியிடங்கள் பட்டியலில் கண்ட சாதியினருக்கும், பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கும், பெண்களுக்கும் இடையே மாநிலச் சட்டமன்றம், சட்டத்தின் வழி வகைசெய்யலாகும் முறையில் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

(5) (1) மற்றும் (2)ஆம் கூறுகளின்படியான பதவியிடங்களின் ஒதுக்கீடு செய்தல் மற்றும் (4) ஆம் கூறின்படி (பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டவை அல்லாத பிற) தலைமையர்களின் பதவிகளுக்கான ஒதுக்கீடு செய்தல், 334ஆம் உறுப்பில் குறித்துரைக்கப்பட்ட காலஅளவு கழிவுறுவதன் பேரில் செல்திறம் அற்றுப் போகும்.

(6) இந்தப் பகுதியிலுள்ள எதுவும், குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு சார்பாக நகராட்சி எதிலும் பதவியிடங்களை அல்லது நகராட்சிகளில் தலைமையர்களின் பதவிகளை ஒதுக்கீடு செய்வதற்காக மாநில சட்டமன்றம் வகை எதனையும் செய்வதற்குத் தடையூறு ஆவதில்லை.

243ப. நகராட்சிகளின் காலஅளவு முதலியன:

(1) ஒவ்வொரு நகராட்சியும், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதனின்படியும் முன்னதாகவே கலைக்கப்பட்டலான்றி, அதன் முதல் கூட்டத்திற்காகக் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகளுக்குத் தொடர்ந்திருந்துவரும் மற்றும் அதற்கு மேலும் இருத்தலாகாது.

வரம்புரையாக: கலைக்கப்படுவதற்கு முன்பு, ஒரு நகராட்சிக்குக் கேட்கப்படுவதற்கு ஒரு தகுமான வாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டும்.

(2) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் ஏதனின் திருத்தம் எதுவும், அந்தத் திருத்தத்திற்கு ஒட்டி முன்பு செயற்பட்டுவந்த நகராட்சியை (1) ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்ட கால அளவு கழிவுறும்வரை, எந்த நிலையிலும், கலைக்கும் விளைவுடையது ஆகாது

(3) ஒரு நகராட்சியை அமைப்பதற்கான தேர்தல்—

(அ) (1) ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்ட அதன் கால அளவு கழிவுறுவதற்கு முன்பு,

(ஆ) அது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதகால அளவு கழிவுறுவதற்கு முன்பு

நடத்தி முடிக்கப்படுத்தல் வேண்டும்:

வரம்புரையாக: கலைக்கப்பட்ட நகராட்சி தொடர்ந்திருக்கக்கூடிய காலஅளவில் எஞ்சிய கால அளவானது ஆறு மாதத்திற்குக் குறைவாக இருக்கிறவிடத்து, அந்தக் கால அளவிற்கு நகராட்சியை அமைப்பதற்கு இந்தக் கூறின்படி தேர்தல் எதனையும் நடத்துவது தேவையானது ஆகாது.

(4) நகராட்சி ஒன்று, அதன் காலஅளவு கழிவுறுவதற்கு முன்பு கலைக்கப்படுவதன் பேரில் அமைக்கப்பட்ட நகராட்சியானது, கலைக்கப்பட்ட நகராட்சி, அவ்வாறு கலைக்கப்படாதிருந்து, (1) ஆம் கூறின்படி தொடர்ந்திருந்திருக்கக்கூடிய எஞ்சிய காலஅளவிற்கு மட்டுமே தொடர்ந்திருத்தல் வேண்டும்.

243ம. உறுப்பினர் பதவிக்கான தகுதிக்கேடுகள் :

(1) ஒருவர்—

(அ) தொடர்புடைய மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களின் நோக்கங்களுக்காக, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டத்தாலோ அதன் வழியாலோ அவ்வாறு உறுப்பினராக தெரிந்தெடுக்கப்பெறுவதற்கும், இருந்து வருவதற்கும் தகுதிக்கேற்றவராக இருப்பின், ஒரு நகராட்சி உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப் பெறுவதற்கும், உறுப்பினராக இருந்து வருவதற்கும் தகுதிக் கேடுற்றவர் ஆவார்:

வரம்புரையாக: ஒருவர், இருபத்தொரு வயது நிறைவெய்தியிருப்பாராயின், இருபத்து ஐந்து வயதிற்குக் குறைந்தவராக உள்ளார் என்ற காரணத்தின் பேரில் தகுதிக்கேடுற்றவர் ஆகார்.

(ஆ) மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தாலோ அதன் வழியாலோ அவ்வாறு உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பெறுவதற்கும், இருந்து வருவதற்கும் தகுதிக்கேற்றவராகி இருப்பாராயின், ஒரு நகராட்சி உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப் பெறுவதற்கும் உறுப்பினராக இருந்து வருவதற்கும் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

(2) ஒரு நகராட்சியின் உறுப்பினர் ஒருவர், (1) ஆம் கூறில் சொல்லப்பட்டுள்ள தகுதிக்கேடுகளில் எதற்கேனும் உள்ளாகியிருக்கிறாரா என்பது பற்றிய பிரச்சினை எதுவும் எழுமாயின், அப்பிரச்சினை மாநிலச் சட்டமன்றம், சட்டத்தின் வாயிலாக வகை செய்யலாகும் அதிகாரஅமைப்பிற்கு அத்தகைய முறையில் அத்தகைய அதிகார அமைப்பின் முடிபுக்காகக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும்.

243ய. நகராட்சிகளின் அதிகாரங்கள், அதிகாரஅடைவு மற்றும் பொறுப்புகள் முதலியன :

இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, மாநிலச் சட்டமன்றம், சட்டத்தினால்—

(அ) நகராட்சிகள், தன்னாட்சி நிறுவனங்களாகச் செயற்படுவதற்கு அவற்றை இயல்விக்கத் தேவையாகலாகும் அதிகாரங்களையும், அதிகாரஅடைவையும் வழங்கலாம், மேலும் அந்தச் சட்டம், அதில் குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு,—

(i) பொருளாதார மேம்பாட்டிற்காகவும் சமூக நீதிக்காகவும் திட்டங்களைத் தயாரித்தல்,

(ii) பன்னிரண்டாம் இணைப்புப்பட்டியலில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்பாடுகள் தொடர்பானவை உள்ளடங்கலாக, அவற்றிடம் ஒப்படைக்கப்படலாகும் செயற்பணிகளைப் புரிதல் மற்றும் திட்டங்களைச் செயற்படுத்துதல், பொறுத்து,

நகராட்சிகளிடம் அதிகாரங்களும், பொறுப்புகளும் வந்தடைவதற்கான வகையங்களை உள்ளடக்கியதாயிருக்கலாம்.

(ஆ) பன்னிரண்டாம் இணைப்புப்பட்டியலில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்பாடுகள் தொடர்பானவை உள்ளடங்கலாக, அவற்றிற்கு அளிக்கப்படும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு அவற்றை இயல்விப்பதற்குத் தேவையாகலாகும் அதிகாரங்களையும் அதிகாரஅடைவையும் குழுக்களுக்கு வழங்கலாம்.

243ர. வரிகள் விதிப்பதற்கு நகராட்சிகளுக்குள்ள அதிகாரம் மற்றும் அதன் நிதியங்கள் :

ஒரு மாநிலச் சட்டமன்றம், சட்டத்தினால் குறித்துரைக்கப்படலாகும்,—

(அ) அத்தகைய நெறிமுறைக்கிணங்கவும், வரம்புகளுக்கு உட்பட்டும் வரிகள், தீர்வைகள், சுங்கவரிகள், கட்டணங்கள் ஆகியவற்றை விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் நகராட்சிக்கு அதிகாரமளிக்கலாம்:

(ஆ) அத்தகைய நோக்கங்களுக்காகவும், வரைக்கட்டுகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டும், மாநில அரசால் விதித்து, வசூலிக்கப்படும் வரிகள், தீர்வைகள், சுங்கவரிகள், கட்டணங்கள் ஆகியவற்றை சட்டத்தினால் நகராட்சிக்குக் குறித்தளிக்கலாம்;

(இ) மாநிலத்தின் திறள் நிதியத்திலிருந்து நகராட்சிகளுக்கு உதவி மானியங்களை வழங்குவதற்கு வகைசெய்யலாம்; மற்றும்

(ஈ) நகராட்சிகளினால் அல்லது அதன் சார்பாக, முறையே, பெறப்பட்ட பணங்கள் அனைத்தையும் வரவு வைப்பதற்காகவும் அதிலிருந்து பணங்களைத் திரும்பப் பெறுவதற்காகவும் நிதியங்களை அமைப்பதற்கும் வகை செய்யலாம்.

243ல. நிதி ஆணையம் :

(1) 243ஐ உறுப்பின் கீழ் அமைக்கப்பட்ட நிதி ஆணையம், நகராட்சிகளின் நிதி நிலையை மறு ஆய்வு செய்து, பின்வருவன குறித்து ஆளுநருக்குப் பரிந்துரைகள் செய்தல் வேண்டும்—

(அ) (i) இந்தப் பகுதியின்படி மாநிலத்திற்கும் நகராட்சிகளுக்கும் இடையே பிரிக்கப்படலாகிறதும், மாநிலத்தால் விதிக்கத்தக்கதுமான வரிகள், தீர்வைகள், சுங்க வரிகள், கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் நிகரத் தொகைகளை அவற்றுக்கிடையே பகிர்ந்தளித்தல் மற்றும், அத்தகைய தொகைகளில், முறையே, அவற்றிற்குரிய பங்குகளை அனைத்து நிலைகளிலுமுள்ள நகராட்சிகளுக்கிடையே பகிர்ந்தொதுக்குதல்,

(ii) நகராட்சிகளுக்குக் குறித்தளிக்கப்படலாகும் அல்லது நகராட்சிகளால் பயன்படுத்தப்படலாகும் வரிகள், தீர்வைகள், சுங்க வரிகள், கட்டணங்கள் ஆகியவற்றைத் தீர்மானித்தல்,

(iii) மாநிலத் திரள் நிதியத்திலிருந்து நகராட்சிகளுக்கு உதவி மானியங்களை அளித்தல்.

ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகள்;

(ஆ) நகராட்சிகளின் நிதி நிலையை மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் நடவடிக்கைகள்,

(இ) நகரட்சிகளின் சீரான நிதி நலன் கருதி ஆளுநரால், நிதி ஆணையத்திற்கு குறித்தனுப்பப்படும் பிற பொருட்பாடு எதுவும்.

(2) ஆளுநர், இந்த உறுப்பின்படி ஆணையத்தால் செய்யப்படும் பரிந்துரை ஒவ்வொன்றையும், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விளக்கக் குறிப்புரையுடன் சேர்த்து, மாநிலச் சட்டமன்றத்தின் முன் வைக்கப்படுமாறு செய்தல் வேண்டும்.

243வ. நகராட்சிகளின் கணக்குகளைத் தணிக்கை செய்தல் :

ஒரு மாநிலச் சட்டமன்றம், நகராட்சிகளால் கணக்குகள் வைத்துவரப்படுதல் மற்றும் அந்தக் கணக்குகள் தணிக்கை செய்யப்படுதல் பொறுத்த வகையங்களை சட்டத்தின் வாயிலாகச் செய்யலாம்.

243வஅ. நகராட்சிகளுக்குத் தேர்தல்கள் :

(1) நகராட்சிகளுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும், வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதற்கான மற்றும் அத்தேர்தல்களை நடத்துவதற்கான இவற்றைக் கண்காணிப்பது நெறிப்படுத்துகை, காட்டாள்கை ஆகியவை 243ஒ உறுப்பில் சுட்டப்படும் மாநிலத் தேர்தல் ஆணையத்திடம் உற்றமைந்திருக்கும்.

(2) இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, மாநிலச் சட்டமன்றம் சட்டத்தின் வாயிலாக, நகராட்சிகளுக்கான தேர்தல்கள் பொறுத்த அல்லது அவை தொடர்பான பொருட்பாடுகள் அனைத்தையும் பொறுத்து வகை செய்யலாம்.

243வஆ. ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்குப் பொருந்துதல் :

இந்தப் பகுதியின் வகையங்கள், ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்குப் பொருந்தும் மற்றும் ஓர் ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்குப் பொருந்தச் செய்கையில், ஒரு மாநில ஆளுநர் குறித்த சுட்டுகைகள், 239 ஆம் உறுப்பின்படி அமர்த்தப்பட்ட ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் ஆளுகையர் குறித்த சுட்டுகையாக இருந்தாற்போன்றும், ஒரு மாநிலச் சட்டமன்றம் அல்லது சட்டமன்றப்பேரவை குறித்த சுட்டுகைகள், சட்டமன்றப் பேரவையைக் கொண்டிருக்கிற ஒன்றியத்து ஆட்சிநிலவரையைப் பொறுத்தவரை, அந்தச் சட்டமன்றப் பேரவை குறித்த சுட்டுகையாக இருந்தாற்போன்றும், செல்திறம் உடையதாகும்:

வரம்புரையாக: குடியரசுத் தலைவர், பொது அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் அவர் குறித்துரைக்கலாகும் விலக்குகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு, ஒன்றியத்து ஆட்சிநிலவரை எதற்கும் அல்லது அதன்பகுதிக்கு, இந்தப் பகுதியின் வகையங்கள் பொருந்துதல் வேண்டும் என்று பணிக்கலாம்.

243வஇ. இந்தப் பகுதி குறித்தசில வரையிடங்களுக்குப் பொருந்தாது:

(1) இந்தப் பகுதியிலுள்ள எதுவும், 244 ஆம் உறுப்பின் (1)ஆம் கூறில் சுட்டப்பட்ட பட்டியல் வரையிடங்களுக்கும், (2)ஆம் கூறில் சுட்டப்பட்ட பழங்குடியினர் வரையிடங்களுக்கும் பொருந்தாது.

(2) இந்தப் பகுதியிலுள்ள எதுவும், மேற்கு வங்காள மாநிலத்தின் டார்ஜிலிங் மாவட்டத்தின் குன்று வரையிடங்களுக்காக, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டத்தின்படி அமைக்கப்பட்ட டார்ஜிலிங் கோர்கா குன்று மன்றத்தின் அலுவற்பணிகளையும், அதிகாரங்களையும் பாதிப்பதாகப் பொருள்கொள்ளப்படுதலாகாது.

(3) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், நாடாளுமன்றம், சட்டத்தினால், அந்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்படலாகும் விலக்குகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு, (1)ஆம் கூறில் சுட்டப்பட்ட பட்டியல் வரையிடங்களுக்கும், பழங்குடியினர் வரையிடங்களுக்கும், இந்தப் பகுதியின் வகையங்களை நீட்டிக்கலாம், மேலும் அந்தச் சட்டம் எதுவும், 368ஆம் உறுப்பின் நோக்கங்களுக்காக, இந்த அரசமைப்பின் ஒரு திருத்தமாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

243வஈ. மாவட்டத் திட்டக் குழு:

(1) ஒரு மாவட்டத்தில் ஊராட்சிகளாலும் நகராட்சிகளாலும் தயாரிக்கப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்து, அந்த மாவட்டம் முழுமைக்கும் மேம்பாட்டு வரைவுத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக, மாவட்ட அளவில் ஒரு மாவட்ட திட்டக் குழு, ஒவ்வொரு மாநிலத்திலும் அமைக்கப்பட்டு இருந்துவரும்.

(2) ஒரு மாநிலச் சட்டமன்றம், சட்டத்தினால் பின்வருவன குறித்து வகை செய்யலாம்.—

(அ) மாவட்டத் திட்டக் குழுக்களை அமைத்தல்;

(ஆ) அந்தக் குழுக்களில் பதவியிடங்கள் நிரப்பப்படவேண்டிய முறை:

வரம்புரையாக: அந்தக் குழுவின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் ஐந்தில் நான்குப் பங்கிற்குக் குறையாதவர்கள், மாவட்ட அளவில் ஊராட்சியின் மற்றும் மாவட்டத்தில் நகராட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும் அவர்களுக்கிடையேயிருந்தும், மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளிலுள்ள மக்கள் தொகைக்கும் நகரப் பகுதிகளிலுள்ள மக்கள் தொகைக்கும் இடையேயுள்ள விகிதப்படியான வீத அளவில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்;

(இ) அத்தகைய குழுக்களுக்குக் குறித்தளிக்கப்படலாகும் மாவட்டத் திட்டம் தொடர்பான செயற்பணிகள்;

(ஈ) அத்தகைய குழுக்களின் தலைமையர்கள் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய முறை.

(3) மாவட்டத் திட்டக்குழு ஒவ்வொன்றும், மேம்பாட்டு வரைவுத்திட்டத்தைத் தயாரிக்கையில்.—

(அ). (i) இடஞ்சார்ந்த திட்டம், நீரைப் பகிர்ந்து கொள்ளுதல், பிற இயற்பியல் மற்றும் இயற்கை வளஆதாரங்கள், கட்டமைப்பின் ஒருங்கிணைந்த மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளடங்கலாக, ஊராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் இடையே உள்ள பொது நலன் குறித்த பொருட்பாடுகள்,

(ii) நிதிசார்ந்ததான அல்லது பிறவாறாகக் கிடைக்கத்தக்க வளஆதாரங்களின் அளவு மற்றும் வகை,

ஆகியவற்றைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) ஆளுநர், ஆணை வாயிலாகக் குறித்துரைக்கலாகும் நிறுவனங்களையும் அமைவனங்களையும் கலந்தாய்வு செய்தல் வேண்டும்.

(4) மாவட்டத் திட்டக்குழு ஒவ்வொன்றின் தலைமையரும், அந்தக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டவாறான மேம்பாட்டுத் திட்டத்தை மாநில அரசுக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

243வஉ. பெருநகர் திட்டத்திற்கான குழு:

(1) பெருநகர்ப் பகுதி முழுமைக்கும் மேம்பாட்டு வரைவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு, பெருநகர்த் திட்டக்குழு ஒன்று, பெருநகர்ப் பகுதி ஒவ்வொன்றுக்கும் அமைக்கப்பட்டு இருந்துவரும்.

(2) மாநிலச் சட்டமன்றம், சட்டத்தின் வயிலாக பின்வருவன குறித்து வகை செய்யலாம்.—

(அ) பெருநகர்த் திட்டக் குழுக்களை அமைத்தல்;

(ஆ) அந்தக் குழுக்களில் பதவியிடங்கள் நிரப்பப்பட வேண்டிய முறை:

வரம்புரையாக: அந்தக் குழு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெருநகர்ப் பகுதியில் நகராட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும் அவர்களுக்கிடையேயிருந்தும், ஊராட்சிகளின் தலைமையர்களாலும் அவர்களுக்கிடையேயிருந்தும், அந்தப் பகுதியில் நகராட்சிகளின் மற்றும் ஊராட்சிகளின் மக்கள் தொகைக்கும் இடையே உள்ள விகிதப்படியான வீத அளவில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்;

(இ) அந்தக் குழுக்களுக்குக் குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றுவதற்காக, அந்தக் குழுக்களில், இந்திய அரசு மற்றும் மாநில அரசு மற்றும் தேவையென கருதலாகும், அமைவனங்கள் மற்றும் நிறுவனங்கள் சார்பாற்றம் செய்தல்;

(ஈ) அந்தக் குழுக்களுக்குக் குறித்தளிக்கப்படலாகும் பெருநகர்ப் பகுதிக்குத் திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் தொடர்பான செயற்பணிகள்;

(உ) அந்தக் குழுக்களின் தலைமையர்கள் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய முறை.

(3) பெருநகர்த் திட்டக் குழு ஒவ்வொன்றும், மேம்பாட்டு வரைவுத் திட்டத்தைத் தயாரிக்கையில்,—

(அ). (i) பெருநகர்ப் பகுதிகளிலுள்ள நகராட்சிகளாலும் ஊராட்சிகளாலும் தயாரிக்கப்பட்ட திட்டங்களையும்;

(ii) ஒருங்கிணைந்த அந்தப் பகுதியின் இடஞ்சார்ந்த திட்டம், நீரைப் பகிர்ந்து கொள்ளுதல், பிற இயற்பியல் மற்றும் இயற்கை வளஆதாரங்கள், கட்டமைப்பின் ஒருங்கிணைந்த மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளடங்கலாக, நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் இடையே உள்ள பொது நலன் குறித்த பொருட்பாடுகள்;

(iii) இந்திய அரசால் மற்றும் மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட ஒட்டுமொத்த நோக்கங்கள் மற்றும் முந்துரிமைகள்;

(iv) இந்திய அரசின் மற்றும் மாநில அரசின் முகவாண்மைகளால் பெருநகர்ப் பகுதியில் செய்யப்படக்கூடிய முதலீடுகளின் அளவு மற்றும் தன்மை, மற்றும் கிடைக்கத்தக்க நிதி சார்ந்ததான அல்லது பிறவாறான வளஆதாரங்கள் ஆகியவற்றைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) ஆளுநர், ஆணை வாயிலாகக் குறித்துரைக்கலாகும் நிறுவனங்கள் மற்றும் அமைவனங்களைக் கலந்தாய்வு செய்தல் வேண்டும்.

(4) பெருநகர்த் திட்டக் குழு ஒவ்வொன்றின் தலைமையரும், அந்தக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டவாறு, மாநில அரசிற்குத் திட்ட மேம்பாட்டினைப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

243வஊ. நிலவுறும் சட்டங்களும் நகராட்சிகளும் தொடர்ந்திருத்தல் :

இந்தப் பகுதியில் எது எவ்வாறிருப்பினும், இந்தப் பகுதியின் வகையங்களுக்கு முரணாக, 1992 ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து நான்காம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலைக்கு ஒட்டி முன்பு, ஒரு மாநிலத்தில் செல்லாற்றலிலிருந்த நகராட்சிகள் தொடர்பான சட்டம் எதனின் வகையம் எதுவும், தகுதிறமுள்ள சட்டமன்றத்தால் அல்லது பிற அதிகாரஅமைப்பால் திருத்தம் செய்யப்படும் அல்லது நீக்கறவு செய்யப்படும்வரை அல்லது அத்தகைய தொடக்கநிலையிலிருந்து ஓராண்டு கழிவுறும்வரை இவற்றில் எது முந்தியதோ, அதுவரை செல்லாற்றலில் தொடர்ந்து இருந்துவரும்:

வரம்புரையாக: அத்தகைய தொடக்கநிலைக்கு ஒட்டி முன்பு இருந்துவரும் நகராட்சிகள் அனைத்தும், அந்த மாநிலச் சட்டமன்றத்தினால், அல்லது சட்டமன்ற மேலவையைக் கொண்டிருக்கிற ஒரு மாநிலத்தைப் பொறுத்த நேர்வில், அந்த மாநிலச் சட்டமன்றத்தின் ஒவ்வொரு அவையாலும், அவற்றின் காலஅளவு கழிவுறும்வரை தொடர்ந்திருத்தல் வேண்டும் என்றபடிக்கு இயற்றப்பட்ட தீர்மானத்தினால் முன்னமே கலைக்கப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு தொடர்ந்திருத்தல் வேண்டும்.

243வஎ. தேர்தல் பற்றிய பொருட்பாடுகளில் நீதிமன்றங்கள் தலையிடுவதற்குத் தடை :

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்,—

(அ) தேர்தல் தொகுதிகளை வரையறுத்தல் அல்லது அத்தகைய தொகுதிகளுக்குப் பதவியிடங்களைப் பகிர்ந்தொதுக்குதல் தொடர்பாக, 243 வஊ உறுப்பின்படி இயற்றப்பட்டுள்ள அல்லது இயற்றப்படுவதற்கு கருதப்படுகிற சட்டம் ஒன்றின் செல்லுந்தன்மை நீதிமன்றம் எதிலும் எதிர்த்து வாதிடப்படுதல் ஆகாது.

(ஆ) நகராட்சி எதற்குமான தேர்தல் எதுவும், மாநிலச் சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டத்தாலோ அதன் வழியாலோ வகை செய்யப்பட்டுள்ளவாறு அத்தகைய அதிகாரஅமைப்பிற்கு, மற்றும் அத்தகைய முறையில் முன்னிடப்படும் ஒரு தேர்தல் மனு வாயிலாக அன்றி, எதிர்த்து வாதிடப்படுதல் ஆகாது.]

பகுதி X

பட்டியல் வரையிடங்களும் பழங்குடியினர் வரையிடங்களும்

244. பட்டியல் வரையிடங்கள், பழங்குடியினர் வரையிடங்கள் ஆகியவற்றின் நிருவாகம் :

(1) ஐந்தாம் இணைப்புப்பட்டியலின் வகையங்கள், அசாம், மேகாலயா, திரிபுரா, மிசோரம் ஆகிய மாநிலங்கள் அல்லாத பிற மாநிலங்களிலுள்ள பட்டியல் வரையிடங்களுக்கும் பட்டியல் பழங்குடியினருக்குமான நிருவாகத்திற்கும் காட்டாள்கைக்கும் பொருந்துறும்.

(2) ஆறாம் இணைப்புப்பட்டியலின் வகையங்கள், அசாம், மேகாலயா, திரிபுரா, மிசோரம் ஆகிய மாநிலங்களிலுள்ள பழங்குடியினர் வரையிடங்களுக்கான நிருவாகத்திற்குப் பொருந்துறும்.

244அ. அசாமிலுள்ள குறித்தசில பழங்குடியினர் வரையிடங்களை உள்ளடக்கிய தன்னாட்சிக் குறுநிலத்தை அமைத்தலும் அவ்விடங்களுக்கென உள்ளாட்சி சட்ட மன்றத்தை அல்லது அமைச்சரவையை அல்லது இரண்டையும் உருவாக்குதலும் :

(1) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், ஆறாம் இணைப்புப்பட்டியலின் 20ஆம் பத்திக்குப் பிற்சேர்க்கையாகவுள்ள அட்டவணையின் Iஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள பழங்குடியினர் வரையிடங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் (முழுமையாகவாயினும் பகுதியாகவாயினும்) உள்ளடக்கிய ஒரு தன்னாட்சிக் குறுநிலத்தை

அசாம் மாநிலத்திற்குள்ளேயே நாடாளுமன்றம், சட்டத்தினால் அமைக்கலாம்; மேலும், அந்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்படும் அமைப்பாக்கம், அதிகாரங்கள், பதவிப்பணிகள் ஆகியவற்றுடன்—

(அ) அந்தத் தன்னாட்சிக் குறுநிலத்திற்கான ஒரு சட்டமன்றமாக இயங்குவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அல்லது ஒரு பகுதி நியமனம் செய்யப்பட்டதாகவும் ஒரு பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் உள்ள ஒரு குழுமத்தை, அல்லது

(ஆ) ஓர் அமைச்சரவையை

அல்லது அவை இரண்டையும் உருவாக்கலாம்.

(2). (1) ஆம் கூறில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டம் எதுவும், குறிப்பாக—

(அ) அசாம் மாநிலச் சட்டமன்ற அதிகாரத்தை நீக்கியோ நீக்காமலோ தன்னாட்சிக் குறுநிலச் சட்டமன்றம், அந்தக் குறுநிலம் முழுமைக்கும் அல்லது அதன் பகுதி எதற்கும் பொருந்துறும் வகையில் சட்டம் இயற்றுவதற்கு உரிய பொருட்பாடுகள், மாநிலப் பட்டியலில் அல்லது ஒருங்கியல் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எவை எவை என்று குறித்துரைக்கலாம்;

(ஆ) அந்தத் தன்னாட்சிக் குறுநிலத்தின் ஆட்சி அதிகாரம் அளாவி நிற்க வேண்டிய பொருட்பாடுகள் எவை எவை என்று வரையறுக்கலாம்;

(இ) அசாம் மாநிலத்தால் விதிக்கப்படும் வரி மூலமாக ஈட்டப்படும் தொகையில் அந்தத் தன்னாட்சிக் குறுநிலத்திலிருந்து கிடைத்துள்ள பங்கு எவ்வளவோ அதனை அந்தத் தன்னாட்சிக் குறுநிலத்திற்கே குறித்தளித்தல் வேண்டும் என்று வகைசெய்யலாம்;

(ஈ) இந்த அரசமைப்பின் உறுப்பு எதிலும், ஒரு மாநிலம் என்று குறிப்பிடப்படுவது அந்தத் தன்னாட்சிக் குறுநிலத்தையும் உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளுதல் வேண்டும் என்று வகை செய்யலாம்; மேலும்

(உ) தேவையெனக் கருதப்படும் துணைவுறு, சார்வுறு மற்றும் விளைவுறு வகையங்களைச் செய்யலாம்.

(3). (2) ஆம் கூறின் (அ) உட்கூறில் அல்லது (ஆ) உட்கூறில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளில் எதற்கும் தொடர்புடைய திருத்தம் எதுவும் மேற்சொன்ன சட்டத்தில் செய்யப்படுமாயின், அந்தத் திருத்தம், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் வந்திருந்து வாக்களிக்கும் அதன் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினருக்குக் குறையாதவர்களால் நிறைவேற்றப்பட்டாலன்றி, செல்திறம் உடையது ஆகாது.

(4) இந்த உறுப்பில் குறிப்பிடப்பட்ட சட்டம் ஒன்றில், இந்த அரசமைப்பைத் திருத்துகிற அல்லது திருத்தும் விளைவை ஏற்படுத்துகிற வகையம் எதுவும் அடங்கியிருந்தபோதிலும், அந்தச் சட்டம் 368ஆம் உறுப்பைப் பொறுத்தவரை இந்த அரசமைப்பின் திருத்தம் எனக் கொள்ளப்படுதல் ஆகாது.

பகுதி XI

ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் உள்ள தொடர்புநிலைகள்

அத்தியாயம் I

சட்டமியற்றுத் தொடர்புநிலைகள்

சட்டமியற்று அதிகாரப் பகிர்வு

245. நாடாளுமன்றத்தாலும், மாநிலங்களின் சட்டமன்றங்களாலும் இயற்றப்படும் சட்டங்களின் அளாவுகை:

(1) இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, நாடாளுமன்றம், இந்திய ஆட்சி நிலவரை முழுவதற்கும் அல்லது அதன் பகுதி எதற்கும் சட்டங்கள் இயற்றலாம்; ஒரு மாநிலச் சட்டமன்றம், அந்த மாநிலம் முழுவதற்கும் அல்லது அதன் பகுதி எதற்கும் சட்டங்கள் இயற்றலாம்.

(2) நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டம் எதனையும், அது ஆட்சிநிலவரைக்குப் புறத்தேயும் செயற்பாடு உடையது என்னும் காரணத்தால், செல்லாநிலையது எனக் கொள்ளுதல் ஆகாது.

246. நாடாளுமன்றத்தாலும், மாநிலங்களின் சட்டமன்றங்களாலும் இயற்றப்படும் சட்டங்களின் உறுபொருள்:

(1). (2), (3) ஆகிய கூறுகளில் எது எவ்வாறிருப்பினும், ஏழாம் இணைப்புப்பட்டியலிலுள்ள (இந்த அரசமைப்பில் "ஒன்றியத்துப் பட்டியல்" எனக் குறிப்பிடப்படும்) I ஆம் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனைப் பொறுத்தும் சட்டங்கள் இயற்றுவதற்கு, நாடாளுமன்றமே தனிநிலை அதிகாரம் உடையது ஆகும்.

(2). (3) ஆம் கூறில் எது எவ்வாறிருப்பினும், ஏழாம் இணைப்புப்பட்டியலிலுள்ள (இந்த அரசமைப்பில் "ஒருங்கியல் பட்டியல்" எனக் குறிப்பிடப்படும்) IIIஆம் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனைப் பொறுத்தும் சட்டங்கள் இயற்றுவதற்கு நாடாளுமன்றமும், (1)ஆம் கூறுக்கு உட்பட்டு மாநிலம் ஒன்றன் சட்டமன்றமும், அதிகாரம் உடையன ஆகும்.

(3). (1), (2) ஆகிய கூறுகளுக்கு உட்பட்டு, ஏழாம் இணைப்புப்பட்டியலிலுள்ள (இந்த அரசமைப்பில் "மாநிலத்துப் பட்டியல்" எனக் குறிப்பிடப்படும்) IIஆம் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனைப் பொறுத்தும் மாநிலம் ஒன்றன் சட்டமன்றமே, அந்த மாநிலத்திற்கு அல்லது அதன் பகுதி எதற்கும் சட்டங்கள் இயற்றுவதற்குத் தனிநிலை அதிகாரம் உடையது ஆகும்.

(4) மாநிலம் எதிலும் உள்ளடங்கியிராத இந்திய ஆட்சிநிலவரையின் பகுதி எதற்கும், எந்தவொரு பொருட்பாட்டினைப் பொறுத்தும், அந்தப் பொருட்பாடு மாநிலத்துப் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ளதாக இருப்பதாயினும் கூட, சட்டங்கள் இயற்றுவதற்கு நாடாளுமன்றம் அதிகாரம் உடையது ஆகும்.

247. குறித்தசில கூடுதல் நீதிமன்றங்களை நிறுவ வகைசெய்வதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம் :

இந்த அத்தியாயத்தில் எது எவ்வாறிருப்பினும், ஒன்றியத்துப் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள ஒரு பொருட்பாடு பொறுத்து நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களை அல்லது நிலவுறும் சட்டங்களை மேலும் திறம்படச் செயற்படுத்துவதற்காகக் கூடுதல் நீதிமன்றங்களை நிறுவுவதற்கு நாடாளுமன்றம், சட்டத்தினால் வகைசெய்யலாம்.

248. சட்டமியற்றுவதற்கான எஞ்சு அதிகாரங்கள்:

(1) ஒருங்கியல் பட்டியலிலும், மாநிலத்துப் பட்டியலிலும் எண்ணிடப்பட்டிராத பொருட்பாடு எதனைப் பொறுத்தும் சட்டமியற்றுவதற்கு நாடாளுமன்றமே தனிநிலை அதிகாரம் உடையது ஆகும்.

(2) அத்தகைய அதிகாரத்தில், அந்த இரண்டு பட்டியல்களிலும் குறிப்பிடப்பட்டிராத வரி எதனையும் விதிக்கும் சட்டம் இயற்றுவதற்கான அதிகாரமும் அடங்கும்.

249. நாட்டின் நலன் கருதி மாநிலத்துப் பட்டியலிலுள்ள பொருட்பாடு எதனைப் பொறுத்தும் சட்டமியற்ற நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம் :

(1) இந்த அத்தியாயத்தின் மேலே கண்ட வகையங்களில் எது எவ்வாறிருப்பினும், மாநிலங்களவை, வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினருக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்படும் ஒரு தீர்மானத்தின் வாயிலாக, மாநிலத்துப் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனையும் குறித்துரைத்து, அதனைப் பொறுத்து நாடாளுமன்றம் சட்டமியற்ற வேண்டியது நாட்டின் நலனுக்கு அவசியமானது அல்லது உகந்தது என்று விளம்புமாயின், அந்தத் தீர்மானம் செல்லாற்றலில் இருந்து வருங்காலத்தில், அந்தப் பொருட்பாடு பொறுத்து இந்திய ஆட்சிநிலவரை முழுமைக்கும் அல்லது அதன் பகுதி எதற்கும் நாடாளுமன்றம் சட்டங்கள் இயற்றுவது சட்டமுறையானது ஆகும்.

(2). (1) ஆம் கூறின்படி நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானம், ஓராண்டிற்கு மேற்படாதவாறு அத்தீர்மானம் குறித்துரைக்கும் காலஅளவிற்குச் செல்லாற்றலில் இருந்துவரும்:

வரம்புரையாக: அத்தகைய தீர்மானம் தொடர்ந்து செல்லாற்றலில் இருந்துவருவதற்கு ஒப்பேற்பளிக்கும் தீர்மானம் ஒன்று (1) ஆம் கூறில் வகை செய்யப்பட்ட முறையில் நிறைவேற்றப்படுமாயின், அவ்வாறு நிறைவேற்றப்படுந்தோறும், முந்தைய தீர்மானம் இந்தக் கூறின்படி எந்தத் தேதியில் செல்லாற்றல் அற்றுப்போகுமோ அந்தத் தேதியிலிருந்து மேலும் ஓராண்டுக் காலஅளவிற்கு, தொடர்ந்து செல்லாற்றலில் இருந்துவரும்.

(3). (1) ஆம் கூறின்படி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாயிலாக மட்டுமே தகுதிறம் பெற்று, அதன்படி நாடாளுமன்றம் இயற்றும் எந்தச் சட்டமும், அத்தீர்மானம் செல்லாற்றல் அற்றுப்போய் ஆறுமாதக் காலஅளவு கழிவுற்றதன்மேல், நாடாளுமன்றம் தகுதிறம் பெற்றிராத அளவிற்குச் செல்திறம் அற்றதாகிவிடும்; ஆனால், அக்காலஅளவு கழிவுறுவதற்கு முன்பு செய்யப்பட்டவை அல்லது செய்யாதுவிடப்பட்டவை பாதிக்கப்படுவதில்லை.

250. நெருக்கடிநிலைச் சாற்றாணை செயற்பாட்டில் இருக்குங்கால், மாநிலத்துப் பட்டியலிலுள்ள எந்தப் பொருட்பாட்டினைப் பொறுத்தும் சட்டமியற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம்:

(1) இந்த அத்தியாயத்தில் எது எவ்வாறிருப்பினும், நெருக்கடிநிலைச் சாற்றாணை ஒன்று செயற்பாட்டில் இருக்குங்கால், மாநிலத்துப் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனைப் பொறுத்தும் இந்திய ஆட்சிநிலவரை முழுவதற்கும் அல்லது அதன் பகுதி எதற்கும் சட்டமியற்றுவதற்கு நாடாளுமன்றம் அதிகாரம் உடையது ஆகும்.

(2) நெருக்கடிநிலைச் சாற்றாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டதன் வாயிலாக மட்டுமே தகுதிறம் பெற்று அதன்படி நாடாளுமன்றம் இயற்றும் எந்தச் சட்டமும், அந்தச் சாற்றாணை செயற்பாடு அற்றுப்போய் ஆறு மாதக் காலஅளவு கழிவுறுவதன்மேல், நாடாளுமன்றம் தகுதிறம் பெற்றிராத அளவிற்குச் செல்திறம் அற்றதாகிவிடும்; ஆனால் அக்காலஅளவு கழிவுறுவதற்கு முன்பு செய்யப்பட்டவை அல்லது செய்யாதுவிடப்பட்டவை பாதிக்கப்படுவதில்லை.

251. நாடாளுமன்றத்தால் 249, 250 ஆகிய உறுப்புகளின்படி இயற்றப்பட்ட சட்டங்களுக்கும், மாநிலச் சட்டமன்றங்களால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் இடையே முரண்பாடு :

249, 250 ஆகிய உறுப்புகளில் உள்ள எதுவும், சட்டம் எதனையும் இயற்றுவதற்கு இந்த அரசமைப்பின்படி ஒரு மாநிலச் சட்டமன்றத்திற்குள்ள அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதில்லை; ஆனால், ஒரு மாநிலச் சட்டமன்றம் இயற்றிய சட்டம் ஒன்றின் வகையம் எதுவும், மேற்சொன்ன உறுப்புகளில் ஒன்றின்படியுள்ள அதிகாரத்தின்கீழ் நாடாளுமன்றம் இயற்றிய ஒரு சட்டத்தின் வகையம் எதற்கும் முரணாக இருக்குமாயின், நாடாளுமன்றம் இயற்றிய சட்டமே, அது மாநிலச் சட்டமன்றம் இயற்றிய சட்டத்திற்கு முன்போ பின்போ நிறைவேற்றப்பட்டிருந்தாலும், மேலோங்கி நிற்கும்; மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டம், எந்த அளவிற்கு முரணாகவுள்ளதோ அந்த அளவிற்கு, நாடாளுமன்றம் இயற்றிய சட்டம் தொடர்ந்து செல்திறம் பெற்றிருக்கின்ற காலம் வரையில் செயற்பாடு அற்றதாகிவிடும்.

252. இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்காக அவற்றின் இசைவுடன் சட்டமியற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரமும், அத்தகைய சட்டத்தைப் பிற மாநிலம் எதுவும் ஏற்றுமேற்கொள்ளுதலும்:

(1) 249, 250 ஆகிய உறுப்புகளில் வகைசெய்யப்பட்டுள்ள முறையில் தவிர, மாநிலங்களுக்காகச் சட்டமியற்றுவதற்கு, நாடாளுமன்றம் அதிகாரம் பெற்றிராத பொருட்பாடுகளில் எதனையும், தத்தம் மாநிலங்களில் நாடாளுமன்றம் சட்டத்தினால் ஒழுங்குறுத்துவது விரும்பத்தக்கதென இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களின் சட்டமன்றங்கள் கருதி, அதன்படி அந்த மாநிலங்களின் சட்டமன்ற அவைகள் அனைத்தும் தீர்மானங்களை நிறைவேற்றுமாயின் அதற்கிணங்க, அந்தப் பொருட்பாட்டை அவ்வாறு ஒழுங்குறுத்துவதற்கான சட்டம் ஒன்றை நாடாளுமன்றம் இயற்றுவது சட்டமுறையானது ஆகும்; அவ்வாறு இயற்றப்படும் சட்டம் எதுவும், அத்தகைய மாநிலங்களுக்குப் பொருந்துறுவதாகும்; மேலும், பின்னர் பிற மாநிலம் எதுவும், அந்த மாநிலச் சட்டமன்ற அவையினால் அல்லது இரண்டு அவைகள் இருக்குமிடத்து, அவ்விரண்டு அவைகளினாலும் நிறைவேற்றப்படும் தீர்மானத்தின்வழி அச்சட்டத்தை ஏற்று மேற்கொள்ளுமாயின், அச்சட்டம் அந்தப் பிற மாநிலத்திற்கும் பொருந்துறுவதாகும்.

(2) நாடாளுமன்றத்தால் அவ்வாறு நிறைவேற்றப்படும் சட்டம் எதுவும், அதே போன்ற முறையில் நிறைவேற்றப்படும் அல்லது ஏற்றுமேற்கொள்ளப்படும் நாடாளுமன்றச் சட்டம் ஒன்றினால் திருத்தப்படலாம் அல்லது நீக்கறவு செய்யப்படலாம்; ஆனால், அச்சட்டம் பொருந்துறும் மாநிலம் எதனையும் பொருத்தவரை, அந்த மாநிலத்தின் சட்டமன்றச் சட்டம் ஒன்றினால் அது திருத்தப்படுதலோ நீக்கறவு செய்யப்படுதலோ ஆகாது.

253. பன்னாட்டு உடன்பாடுகளைச் செல்திறப்படுத்துவதற்காகச் சட்டமியற்றுதல்:

இந்த அத்தியாயத்தின் மேலே கண்ட வகையங்களில் எது எவ்வாறிருப்பினும், பிற நாட்டுடன் அல்லது நாடுகளுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை, உடன்பாடு அல்லது இணங்காறு எதனையும் அல்லது பன்னாட்டு மாநாடு, கழகம் அல்லது பிற குழுமத்தில் எடுக்கப்படும் முடிவு எதனையும் செயற்படுத்துவதற்காக, இந்திய ஆட்சிநிலவரை முழுவதற்கும் அல்லது அதன் பகுதி எதற்கும் சட்டம் எதனையும் இயற்றுவதற்கு நாடாளுமன்றம் அதிகாரம் உடையது ஆகும்.

254. நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் மாநிலங்களின் சட்டமன்றங்களினால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் இடையே முரண்பாடு :

(1) மாநிலம் ஒன்றின் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின் வகையம் எதுவும், நாடாளுமன்றம் தனக்குள்ள தகுதிறனைக் கொண்டு இயற்றும் சட்டம் ஒன்றின் வகையம் எதற்கும் அல்லது ஒருங்கியல் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள பொருட்பாடுகளில் ஒன்றைப் பொறுத்து நிலவுறும் சட்டம் ஒன்றின் வகையம் எதற்கும் முரணாக இருக்குமாயின், நாடாளுமன்றம் இயற்றிய சட்டம், அந்த மாநிலச் சட்டமன்றம் இயற்றிய சட்டத்திற்கு முன்போ பின்போ நிறைவேற்றப்பட்டிருந்தாலும், அச்சட்டமே அல்லது, நேர்வுக்கேற்ப, நிலவுறும் சட்டமே (2)ஆம் கூறின் வகையங்களுக்கு உட்பட்டு, மேலோங்கி நிற்கும்; அந்த மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் அவ்வாறு முரணாக உள்ள அளவிற்கு, இல்லாநிலையது ஆகும்.

(2) ஒருங்கியல் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனைப் பொறுத்தும், ஒரு மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டம், அதே பொருட்பாட்டினைப் பொறுத்து நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு முந்தைய சட்டத்தின் அல்லது ஒரு நிலவுறும் சட்டத்தின் வகையங்களுக்கு முரணான வகையம் எதனையும் கொண்டிருக்குமிடத்து, மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட அத்தகைய சட்டம், ஏற்கெனவே குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக வைக்கப்பட்டிருந்து அவருடைய ஏற்பிசைவையும் பெற்றிருக்குமாயின், அதுவே அந்த மாநிலத்தில் மேலோங்கி நிற்கும்:

வரம்புரையாக: இந்தக் கூறிலுள்ள எதுவும், மாநிலச் சட்டமன்றத்தால் அவ்வாறு இயற்றப்பட்ட சட்டத்துடன் சேர்க்கின்ற, அதனைத் திருத்துகின்ற, மாற்றுகின்ற அல்லது நீக்கறவு செய்கின்ற சட்டம் ஒன்று உள்ளடங்கலாக, அதே பொருட்பாடு பொறுத்த சட்டம் எதனையும், எச்சமயத்திலும் நாடாளுமன்றம் இயற்றுவதற்குத் தடையுறு ஆவதில்லை.

255. பரிந்துரைகள் முன்ஒப்பளிப்புகள் ஆகியவை பற்றிய வேண்டுறுத்தங்களை நெறிமுறை சார்ந்த பொருட்பாடுகளாக மட்டுமே கொள்ளுதல் வேண்டும் :

நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றம் இயற்றிய சட்டம் மற்றும் அதன் வகையம் எதற்கும், இந்த அரசமைப்பில்—

(அ) ஆளுநரின் பரிந்துரை வேண்டுறுத்தப்பட்டவிடத்து, ஆளுநர் அல்லது குடியரசுத்தலைவர்,

(ஆ) இராஜப்பிரமுகரின் பரிந்துரை வேண்டுறுத்தப்பட்டவிடத்து, இராஜப் பிரமுகர் அல்லது குடியரசுத்தலைவர்,

(இ) குடியரசுத்தலைவரின் பரிந்துரை அல்லது முன்ஒப்பளிப்பு வேண்டுறுத்தப்பட்டவிடத்து, குடியரசுத்தலைவர்

ஏற்பிசைவு அளித்துவிட்டநிலையில், இந்த அரசமைப்பின்படி வேண்டுறுத்தப்படும் பரிந்துரை அல்லது முன்ஒப்பளிப்பு அளிக்கப்படவில்லை என்ற காரணத்தால் மட்டுமே அவை செல்லாநிலையென ஆவதில்லை.

அத்தியாயம் II

நிருவாகத் தொடர்புநிலைகள்

பொதுவியல்

256. மாநிலங்களின் மற்றும் ஒன்றியத்தின் கடமைப்பாடு:

மாநிலம் ஒவ்வொன்றின் ஆட்சி அதிகாரமும், நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் அந்த மாநிலத்திற்குப் பொருந்துறுகிற நிலவுறு சட்டங்களுக்கும் இணங்கி இயங்குவதை உறுதிசெய்யும் வகையில் செலுத்தப்படுதல் வேண்டும்; மேலும், மேற்சொன்ன நோக்கம் நிறைவேறுவதற்குத் தேவையென இந்திய அரசாங்கம் கருதும் பணிப்புரைகளை மாநிலம் எதற்கும் இடுவதும் ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரத்தில் அடங்கும்.

257. குறித்தசில நேர்வுகளில் மாநிலங்கள் மீது ஒன்றியத்திற்குள்ள கட்டாள்கை :

(1) மாநிலம் ஒவ்வொன்றின் ஆட்சி அதிகாரமும், ஒன்றியத்து ஆட்சி அதிகாரம் செலுத்தப்படுவதற்குத் தடங்கலோ குந்தகமோ இல்லாதவாறு செலுத்தப்படுதல் வேண்டும்; மேலும், மேற்சொன்ன நோக்கம் நிறைவேறுவதற்குத் தேவையென இந்திய அரசாங்கம் கருதும் பணிப்புரைகளை மாநிலம் எதற்கும் இடுவதும் ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரத்தில் அடங்கும்.

(2) தேசிய அல்லது படைத்துறை முக்கியத்துவம் வாய்ந்தவை எனப் பணிப்புரையில் விளம்பப்படும் செய்தித் தொடர்புச் சாதனங்களை அமைத்தல், அவற்றைப் பேணிவருதல் ஆகியவை குறித்த பணிப்புரைகளை மாநிலம் எதற்கும் இடுவது ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரத்தில் அடங்கும்:

வரம்புரையாக: இந்தக் கூறிலுள்ள எதுவும், நெடுஞ்சாலைகள் அல்லது நீர்வழிகள் எவற்றையும், தேசிய நெடுஞ்சாலைகள் அல்லது தேசிய நீர்வழிகள் என விளம்புவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரத்தையோ அவ்வாறு விளம்பப்பட்ட நெடுஞ்சாலைகள் அல்லது நீர்வழிகளைப் பொறுத்து ஒன்றியத்திற்குள்ள அதிகாரத்தையோ, கடற்படை, தரைப்படை, வான்படை ஆகியவற்றைப் பொறுத்த தனது செயற்பணிகளில் அடங்கும் செய்தித் தொடர்புச் சாதனங்களை அமைப்பதற்கும், அவற்றைப் பேணிவருவதற்கும் ஒன்றியத்திற்குள்ள அதிகாரத்தையோ கட்டுப்படுத்துவதாகக் கருதப்படுதல் ஆகாது.

(3) ஒரு மாநிலத்திலுள்ள இருப்புப்பாதைகளைப் பாதுகாப்பதற்கென எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அந்த மாநிலத்திற்குப் பணிப்புரைகள் இடுவதும் ஒன்றியத்து ஆட்சி அதிகாரத்தில் அடங்கும்.

(4) செய்தித் தொடர்புச் சாதனங்களை அமைத்தல் அல்லது அவற்றைப் பேனிவருதல் குறித்து (2) ஆம் கூறின்படியோ இருப்புப்பாதைகளைப் பாதுகாப்பதற்கென எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து (3)ஆம் கூறின்படியோ மாநிலம் எதற்கும் இடப்பட்ட பணிப்புரை எதனையும் நிறைவேற்றுகையில், அத்தகைய பணிப்புரை இடப்படாத நிலையில் அந்த மாநிலத்தின் வழக்கமான கடமைகளை ஆற்றுவதற்கு ஏற்படக்கூடிய செலவு எவ்வளவோ அதைவிடக் கூடுதல் செலவுகள் செய்யப்பட்டிருக்குமிடத்து அந்த மாநிலம் செய்யநேர்ந்த கூடுதல் செலவடைகள் பொறுத்து ஒப்பியவாறான தொகையையோ, அவ்வாறு ஒப்புதல் ஏற்படாதவிடத்து, இந்தியாவின் தலைமை நீதிபதியால் அமர்த்தப்பெறும் ஒரு பொதுவர் தீர்மானிக்கும் தொகையையோ அந்த மாநிலத்திற்கு இந்திய அரசாங்கம் வழங்குதல் வேண்டும்.

[1][257அ. * * * *]

258. குறித்தசில நேர்வுகளில் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் முதலியவற்றை வழங்குவதற்கு ஒன்றியத்திற்குள்ள அதிகாரம்:

(1) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், குடியரசுத்தலைவர், ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரத்தில் அடங்கிய பொருட்பாடு ஒன்றன் தொடர்பான செயற்பணிகளை, வரைக்கட்டுடனோ வரைக்கட்டின்றியோ, ஒரு மாநில அரசாங்கத்தின் இசைவுடன், அந்த அரசாங்கத்திடம் அல்லது அதன் அலுவலர்களிடம் ஒப்படைக்கலாம்.

(2) நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டு, மாநிலம் எதற்கும் பொருந்துறுகிற ஒரு சட்டம், அது அந்த மாநிலச் சட்டமன்றம் சட்டமியற்றுவதற்கு அதிகாரம் பெற்றிராத ஒரு பொருட்பாடு பற்றியதாக இருந்தபோதிலும், அந்த மாநிலத்திற்கு அல்லது அதன் அலுவலர்களுக்கும் அதிகாரஅமைப்புகளுக்கும், அதிகாரங்களை வழங்கி, கடமைகளை விதிக்கலாம் அல்லது அதிகாரங்களை வழங்குவதற்கும் கடமைகளை விதிப்பதற்கும் அதிகாரம் அளிக்கலாம்.

(3) இந்த உறுப்பின் பயன்திறன்வழி ஒரு மாநிலத்திற்கு அல்லது அதன் அலுவலர்களுக்கு அல்லது அதிகாரஅமைப்புகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்குமிடத்து அல்லது கடமைகள் விதிக்கப்பட்டிருக்குமிடத்து, அந்த அதிகாரங்களைச் செலுத்துவதையும் கடமைகளை ஆற்றுவதையும் பொறுத்து அந்த மாநிலம் செய்ய நேர்ந்த கூடுதல் நிருவாகச் செலவுகள் குறித்து, ஒப்பியவாறான தொகையையோ, அவ்வாறு ஒப்புதல் ஏற்படாதவிடத்து, இந்தியாவின் தலைமை நீதிபதியால் அமர்த்தப்பெறும் ஒரு பொதுவர் தீர்மானிக்கும் தொகையையோ அம்மாநிலத்திற்கு இந்திய அரசாங்கம் வழங்குதல் வேண்டும்.

258அ. ஒன்றியத்திடம் செயற்பணிகளை ஒப்படைப்பதற்கு மாநிலங்களுக்குள்ள அதிகாரம்:

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், மாநிலம் ஒன்றின் ஆளுநர் அந்த மாநிலத்தின் ஆட்சி ஆதிகாரத்தில் அடங்கிய பொருட்பாடு ஒன்றன் தொடர்பான செயற்பணிகளை இந்திய அரசாங்கத்தின் இசைவுடன் வரைக்கட்டுடனோ வரைக்கட்டின்றியோ, அந்த அரசாங்கத்திடம் அல்லது அதன் அலுவலர்களிடம் ஒப்படைக்கலாம்.

[2][259. * * * *]

260. இந்தியாவிற்கு வெளியிலுள்ள நிலவரைகள் தொடர்பாக ஒன்றியத்திற்குள்ள அதிகாரம்:

இந்திய அரசாங்கம், இந்திய ஆட்சிநிலவரையின் பகுதி அல்லாத நிலவரை ஒன்றன் அரசாங்கத்துடன் செய்து கொள்ளும் உடன்பாட்டின் வாயிலாக, அந்த நிலவரையின் அரசாங்கத்திடம் உற்றமைந்துள்ள ஆட்சித்துறை, சட்டமியற்று துறை அல்லது நீதித் துறை சார்ந்த செயற்பணிகள் எவற்றையும் மேற்கொள்ளலாம்; ஆனால், அத்தகைய உடன்பாடு ஒவ்வொன்றும், அயல்நாட்டில் அதிகாரம் செலுத்துவது தொடர்பாக நிகழுறு காலத்தில் செல்லாற்றலிலுள்ள சட்டத்திற்கு உட்பட்டதாகவும் அதன்வழி அமைவதாகவும் இருத்தல் வேண்டும்.

---

1. 1978ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து மூன்றாம் திருத்தம்) சட்டத்தின் 33ஆம் பிரிவினால் நீக்கறவு செய்யப்பட்டது.
2. 1956ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டம் (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் 29ஆம் பிரிவினாலும் இணைப்புப் பட்டியலினாலும் நீக்கறவு செய்யப்பட்டது.

261. அரசின் செயற்பாடுகள், பதிவணங்கள் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகள் :

(1) ஒன்றியத்து மற்றும் ஒவ்வொரு மாநிலத்து அரசின் செயற்பாடுகள், பதிவணங்கள், நீதித் துறை நடவடிக்கைகள் ஆகியவற்றின் மீது இந்திய ஆட்சிநிலவரை எங்கணும் முழுநிறை நம்பிக்கையும் நன்மதிப்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

(2). (1) ஆம் கூறில் சுட்டப்பட்ட செயற்பாடுகள், பதிவணங்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றை மெய்ப்பிக்க வேண்டியதும், அவற்றின் செல்திறனைத் தீர்மானிக்க வேண்டியதும் எந்த முறையில், எந்த நிலையில் இருத்தல் வேண்டும் என்பது நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தில் வகைசெய்யப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(3). இந்திய ஆட்சிநிலவரையின் பகுதி எதிலுமுள்ள உரிமையியல் நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட இறுதித் தீர்ப்புரைகள் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகள், அந்த ஆட்சிநிலவரை எங்கனும் சட்டத்திற்கிணங்க நிறைவேற்றப்படத்தகுவன ஆகும்.

நீர் தொடர்பான பூசல்கள்

262. மாநிலங்களிடையேயான ஆறுகளின் அல்லது ஆற்றுப்பள்ளதாக்குகளின் நீர் தொடர்பான பூசல்களுக்கு நீதிமுறைத் தீர்வு:

(1) மாநிலங்களிடையேயான ஆறு அல்லது ஆற்றுப்பள்ளத்தாக்கு ஒன்றின் அல்லது அதிலுள்ள நீரின் பயன்பாடு, பகிர்ந்தளிப்பு அல்லது அதன்மீது கட்டாள்கை பொறுத்த பூசல் அல்லது முறையீடு எதனையும் நீதிமுறையில் தீர்வு செய்வதற்கு நாடாளுமன்றம் சட்டத்தினால் வகை செய்யலாம்.

(2) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், (1)ஆம் கூறில் சுட்டப்பட்ட பூசல் அல்லது முறையீடு எதனையும் பொறுத்து, உச்ச நீதிமன்றமோ வேறெந்த நீதிமன்றமோ அதிகாரம் செலுத்துதல் ஆகாது என்று நாடாளுமன்றம் சட்டத்தினால் வகைசெய்யலாம்.

மாநிலங்கள் இயைந்து இயங்குதல்

263. மாநிலங்களிடையமை மன்றம் தொடர்பான ஏற்பாடுகள்:

குடியரசுத்தலைவர், பின்வரும் கடமைகள் சார்த்தப்பட்ட மன்றம் ஒன்றை நிறுவுவது பொதுநலன்களுக்கு உதவும் என்று கருதுங்கால், அவர் அத்தகையதொரு மன்றத்தை ஓர் ஆணை வாயிலாக நிறுவுவதும், அம்மன்றம் புரிய வேண்டிய கடமைகளின் தன்மை, அதன் அமைப்பு, நெறிமுறை இவற்றை வரையறுப்பதும் சட்டமுறையானது ஆகும்—

(அ) மாநிலங்களிடையே எழும் பூசல்களை விசாரணை செய்து, அவற்றின்மீது கருத்துரை வழங்குதல்;

(ஆ) மாநிலங்களில் சிலவோ அனைத்துமோ அல்லது ஒன்றியத்துடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களோ பொதுவான அக்கறை கொண்டுள்ள பொருள்களைக் குறித்து ஆய்வு செய்தல் மற்றும் ஆய்வுரையளித்தல்; அல்லது

(இ) அத்தகைய ஆய்வுப்பொருள் எதன்மீதும் பரிந்துரைகளை, குறிப்பாக அந்தப் பொருள் தொடர்பான கொள்கை, நடவடிக்கை ஆகியவற்றைச் சிறந்த முறையில் ஒருங்கிணைப்பதற்கான பரிந்துரைகளைச் செய்தல்.

பகுதி XII

நிதி, சொத்து, ஒப்பந்தங்கள் மற்றும் உரிமைவழக்குகள்

அத்தியாயம் I

நிதி

பொதுவியல்

264. பொருள்கோள் :

இந்தப் பகுதியில், "நிதி ஆணையம்" என்பது, 280ஆம் உறுப்பின்படி அமைக்கப்படும் ஒரு நிதி ஆணையம் என்று பொருள்படும்.

265. சட்டத்தினால் பெறும் அதிகாரத்தின்படி அல்லாமல், வரிகளை விதித்தல் ஆகாது:

வரி எதனையும் சட்டத்தினால் பெறும் அதிகாரத்தின்படி அல்லாமல், விதித்தலோ ஈட்டுதலோ ஆகாது.

266. இந்தியாவின் மற்றும் மாநிலங்களின் திறள் நிதியங்களும் அரசுப் பொதுக் கணக்குகளும்:

(1) 267ஆம் உறுப்பின் வகையங்களுக்கும், குறித்தசில வரிகள், தீர்வைகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் நிகரத் தொகையை, முழுமையாகவோ அதில் ஒரு பகுதியினையோ மாநிலங்களுக்குக் குறித்தொதுக்குவது பொறுத்த இந்த அத்தியாயத்தின் வகையங்களுக்கும் உட்பட்டு, இந்திய அரசாங்கம் பெறும் வருவாய்கள் அனைத்தும், கருவூலச் சீட்டுகளின் வெளியீடு, பெறுகடன்கள் அல்லது வழிவகை முன்பணத்தொகைகள் வாயிலாக அரசாங்கம் எழுப்பும் பெறுகடன்கள் அனைத்தும், மற்றும் பெறுகடன்கள் திருப்பிச்செலுத்தப்படும் வகையில் அந்த அரசாங்கம் பெறும் பணத்தொகைகள் அனைத்தும், "இந்தியாவின் திரள்நிதியம்" என்னும் பெயரால் ஒரு திரள்நிதியமாக அமைவுறும்; மேலும், மாநில அரசாங்கம் பெறும் வருவாய்கள் அனைத்தும், கருவூலச் சீட்டுகள் வெளியீடு, பெறுகடன்கள், வழிவகை முன்பணத்தொகைகள் வாயிலாக அந்த அரசாங்கம் எழுப்பும் பெறுகடன்கள் அனைத்தும் மற்றும் பெறுகடன்கள் திருப்பிச் செலுத்தப்படும் வகையில் அந்த அரசாங்கம் பெறும் பணத்தொகைகள் அனைத்தும், "மாநிலத் திரள்நிதியம்" என்னும் பெயரால் ஒரு திரள்நிதியமாக அமைவுறும்.

(2) இந்திய அரசாங்கத்தால் அல்லது அதன் சார்பாக, மாநில அரசாங்கத்தால் அல்லது அதன் சார்பாகப் பெறப்படும் பிற பொதுப் பணத்தொகைகள் அனைத்தும், இந்திய அரசுப் பொதுக்கணக்கில் அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த மாநில அரசுப் பொதுக்கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்திற்கிணங்கியவாறும், இந்த அரசமைப்பில் வகைசெய்யப்பட்டுள்ள நோக்கங்களுக்காகவும் வகைசெய்யப்பட்டுள்ள முறையிலும் அல்லாமல் இந்தியத் திரள்நிதியத்திலிருந்தோ ஒரு மாநிலத் திரள்நிதியத்திலிருந்தோ பணம் எதனையும் ஒதுக்களிப்புச் செய்தல் ஆகாது.

267. எதிரதாக்காப்பு நிதியம்:

(1) "இந்திய எதிரதாக்காப்புநிதியம்" என்னும் பெயரால், வசக்கட்டுப்பணம் போல்வதான ஓர் எதிரதாக்காப்பு நிதியத்தை நாடாளுமன்றம் சட்டத்தினால் நிறுவலாம்; அச்சட்டத்தினால் தீர்மானிக்கப்படும் தொகைகள் அவ்வப்போது அந்நிதியத்தில் செலுத்தப்படுதல் வேண்டும்; மேலும், எதிர்பாராச் செலவுகளுக்கு 115 ஆம் உறுப்பு அல்லது 116ஆம் உறுப்பின்படி நாடாளுமன்றம் சட்டத்தினால் அனுமதி அளிக்கும்வரை, அச்செலவுகளைச் செய்யும்பொருட்டு மேற்சொன்ன நிதியத்திலிருந்து முன்பணத்தொகைகளைக் குடியரசுத்தலைவர் வழங்க இயலும் வகையில் அந்த நிதியம் அவருடைய பொறுப்பில் வைக்கப்படும்.

(2) "மாநில எதிரதாக்காப்பு நிதியம்" என்னும் பெயரால், வசக்கட்டுப்பணம் போல்வதான ஓர் எதிரதாக்காப்பு நிதியத்தை மாநிலம் ஒன்றன் சட்டமன்றம் சட்டத்தினால் நிறுவலாம்; அச்சட்டத்தினால் தீர்மானிக்கப்படும் தொகைகள் அவ்வப்போது அந்நிதியத்தில் செலுத்தப்படுதல் வேண்டும்; மேலும், எதிர்பாராச் செலவுகளுக்கு 205ஆம் உறுப்பு அல்லது 206ஆம் உறுப்பின்படி அந்த மாநிலத்தின் சட்டமன்றம் அனுமதி அளிக்கும்வரை அச்செலவுகளைச் செய்யும் பொருட்டு மேற்சொன்ன நிதியத்திலிருந்து முன்பணத் தொகைகளை அந்த மாநில ஆளுநர் வழங்க இயலும் வகையில் அந்த நிதியம் அவருடைய பொறுப்பில் வைக்கப்படும்.

ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே வருவாய்களைப் பகிர்ந்தளித்தல்

268. ஒன்றியத்தால் விதிக்கப்பட்டு, ஆனால் மாநிலங்கள் ஈட்டிப் பயன்படுத்திக் கொள்ளும் தீர்வைகள் :

(1) ஒன்றியத்துப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள முத்திரைத் தீர்வைகளும், மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள்களின் மீதான ஆயத் தீர்வைகளும் இந்திய அரசாங்கத்தால் விதிக்கப்படும்; ஆனால்—

(அ) அத்தகைய தீர்வைகள் ஒன்றியத்து ஆட்சிநிலவரை எதற்குள்ளும் விதிக்கத்தக்கனவாக இருக்கும் நேர்வில், இந்திய அரசாங்கத்தாலும்,

(ஆ) பிற நேர்வுகளில், எந்த மாநிலங்களுக்குள் முறையே அத்தீர்வைகள் விதிக்கத்தக்கனவாக உள்ளனவோ அந்த மாநிலங்களாலும் ஈட்டப்படும்.

(2) மாநிலம் எதற்குள்ளும் விதிக்கத்தக்க அத்தகைய தீர்வையின் மூலம் ஒரு நிதியாண்டில் கிடைக்கும் தொகை, இந்தியத் திரள்நிதியத்தின் பகுதியாக ஆவதில்லை; மாறாக, அது அந்த மாநிலத்திற்கே குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

[1][**268அ. ஒன்றியத்தால் விதிக்கப்பட்டு ஆனால் ஒன்றியமும் மாநிலங்களும் ஈட்டிப் பயன்படுத்திக்கொள்ளும் சேவை வரி :**

(1) சேவை வரிகள், இந்திய அரசால் விதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய வரி (2)ஆம் கூறில் வகை செய்யப்பட்டுள்ள முறையில் இந்திய அரசாலும் மாநிலங்களாலும் ஈட்டப்பட்டு, பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய வரியின் மூலம் ஒரு நிதியாண்டில் கிடைக்கும் தொகை, நாடாளுமன்றம், சட்டத்தின் வாயிலாக வகுத்தமைகலாகும் ஈட்டுதல் மற்றும் பயன்படுத்துதலுக்கான நெறிமுறைகளுக்கிணங்க,

(அ) இந்திய அரசாலும் மாநிலங்களாலும் ஈட்டப்படுதல் வேண்டும்;

(ஆ) இந்திய அரசாலும் மாநிலங்களாலும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.]

269. ஒன்றியத்தால் விதித்து ஈட்டப்பட்டு, ஆனால் மாநிலங்களுக்குக் குறித்தொதுக்கப் படும் வரிகள் :

[2][(1) சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினையின் மீதான வரிகளும், சரக்குகளின் அனுப்புகை மீதான வரிகளும், இந்திய அரசால் விதித்து ஈட்டப்படுதல் வேண்டும் மற்றும் (2)ஆம் கூறில் வகை செய்யப்பட்டுள்ள முறையில், 1996 ஏப்ரல் 1ஆம் நாளன்று அல்லது அதற்குப் பின்பு, மாநிலங்களுக்குக் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும் மற்றும் குறித்தொதுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

---

1. 2003ஆம் ஆண்டு இந்திய அரசமைப்பு (எண்பத்து எட்டாம் திருத்தம்) சட்டத்தால் புகுத்தப்பட்டது.
2. 2000ஆம் ஆண்டு இந்திய அரசமைப்பு (எண்பதாம் திருத்தம்) சட்டத்தால் மாற்றாக அமைக்கப்பட்டது.

விளக்கம்.—இந்தக் கூறின் நோக்கங்களுக்காக,—

(அ) "சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினையின் மீதான வரிகள்" என்ற சொற்றொடர், செய்தித்தாள்கள் அல்லாத பிற சரக்குகளின் விற்பனையோ கொள்வினையோ மாநிலங்களிடையேயுள்ள வணிகத்தின் அல்லது வாணிபத்தின்போது நிகழுமிடத்து, அத்தகைய விற்பனை அல்லது கொள்வினை மீதான வரிகள் என்று பொருள்படும்;

(ஆ) "சரக்குகளின் அனுப்புகை மீதான வரிகள்" என்ற சொற்றொடர், சரக்குகளின் அனுப்புகை (அனுப்புகையானது அனுப்புபவருக்காயினும் பிறர் எவருக்காயினும்) மாநிலங்களிடையேயுள்ள வணிகத்தின் அல்லது வாணிபத்தின்போது நிகழுமிடத்து, அத்தகைய அனுப்புகையின் மீதான வரிகள் என்று பொருள்படும்.

(2) ஒரு நிதியாண்டில் அத்தகைய வரி எதிலிருந்தும் கிடைக்கும் நிகரத்தொகை, ஒன்றியத்து ஆட்சி நிலவரைகளிலிருந்து கிடைத்ததாகும் அளவு நீங்கலாக, எஞ்சிய அளவு, இந்தியத் திரள் நிதியத்தின் பகுதியாக அமைவதில்லை. மாறாக, அது அந்த ஆண்டில் அந்த வரி விதிக்கப்படுவதாகும் மாநிலங்களுக்கே குறித்தொதுக்கப்படுதல் வேண்டும், மேலும், அத்தொகை, நாடாளுமன்றம், சட்டத்தினால் வகுக்கும் பகிர்ந்தளிப்பு நெறிகளுக்கிணங்கிய வகையில் அந்த மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படும்.]

(3) மாநிலங்களிடையேயான வணிகத்தின் அல்லது வாணிபத்தின்போது சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினை அல்லது அனுப்புகை நிகழ்வது எப்போது என்பதைத் தீர்மானிப்பதற்கான நெறிகளை நாடாளுமன்றம் சட்டத்தினால் வகுக்கலாம்.

[1][270. ஒன்றியத்தால் விதிக்கப்பட்டு ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்படும் வரிகள் :

(1) முறையே [2][268, 268அ, 269 ஆகிய உறுப்புகளில்] சுட்டப்பட்ட தீர்வைகளும் வரிகளும் நீங்கலாக, ஒன்றியத்துப் பட்டியலில் சுட்டப்பட்ட அனைத்து வரிகளும் தீர்வைகளும், 271ஆம் உறுப்பில் சுட்டப்பட்ட வரிகள் மற்றும் தீர்வைகளின் பேரிலான மேல்வரியும், நாடாளுமன்றத்தால் செய்யப்பட்ட சட்டத்தின்படி குறித்தவகை நோக்கங்களுக்காக விதிக்கப்பட்ட மேல்வரி எதுவும், இந்திய அரசால் விதிக்கப்பட்டு ஈட்டப்படுதல் வேண்டும். மேலும், (2)ஆம் கூறில் வகை செய்யப்பட்ட முறையில் ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒரு நிதியாண்டில் அத்தகைய வரி அல்லது தீர்வையிலிருந்து கிடைக்கும் நிகரத்தொகையில் வகுத்துரைக்கப்படலாகும் விழுக்காடு, இந்தியத் திரள்நிதியத்தின் பகுதியாக அமைவதில்லை, மாறாக, அந்த ஆண்டில் அந்த வரி அல்லது தீர்வை விதிக்கப்படுவதாகும் மாநிலங்களுக்கே குறித்தொதுக்கப்பட்டு, வகுத்துரைக்கப்படலாகும் முறைப்படியும், வகுத்துரைக்கப்படலாகும் காலத்திலிருந்தும் (3)ஆம் கூறில் வகை செய்யப்பட்ட முறையில் மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படும்.]

(3) இந்த உறுப்பில் "வகுத்துரைக்கப்பட்ட" என்பது,—

(i) நிதி ஆணையம் ஒன்று அமைக்கப்படும் வரையில், குடியரசுத்தலைவரால் ஆணையின் வழி வகுத்துரைக்கப்பட்ட என்றும்,

(ii) நிதி ஆணையம் ஒன்று அமைக்கப்பட்ட பின்பு, நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை ஓர்வு செய்த பின்பு குடியரசுத்தலைவரால் ஆணையின் வழி வகுத்துரைக்கப்பட்ட என்றும்

பொருள்படும்.]

---

1. 2000ஆம் ஆண்டு இந்திய அரசமைப்பு (எண்பதாம் திருத்தம்) சட்டத்தால் மாற்றாக அமைக்கப்பட்டது (1-4-1996 முதல் செல்திறம் பெறுமாறு).
2. 2003ஆம் ஆண்டு இந்திய அரசமைப்பு (எண்பத்து எட்டாம் திருத்தம்) சட்டத்தின் மூலம் மாற்றாக அமைக்கப்பட்டது.

271. ஒன்றியத்தின் நோக்கங்களுக்காகக் குறித்தசில தீர்வைகள், வரிகள் ஆகியவற்றின் மீதான மேல்வரி :

269, 270 ஆகிய உறுப்புகளில் எது எவ்வாறிருப்பினும், நாடாளுமன்றம், எச்சமயத்திலும் அந்த உறுப்புகளில் சுட்டப்பட்டுள்ள தீர்வைகளில் அல்லது வரிகளில் எதனையும் ஒன்றியத்தின் நோக்கங்களுக்காக, மேல்வரி விதிப்பதன் வாயிலாக உயர்த்தலாம்; அத்தகைய மேல்வரியிலிருந்து கிடைக்கும் தொகை முழுவதும் இந்தியத் திரள்நிதியத்தின் பகுதியாக அமையும்.

[1][272. * * * *]

273. சணல், சணற்பொருள்கள் ஆகியவற்றின் மீதான ஏற்றுமதித் தீர்வைக்குப் பதிலாக மானியங்கள் :

(1) அசாம், பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுக்கு சணல், சணற்பொருள்கள் ஆகியவற்றின் மீதான ஏற்றுமதித் தீர்வை பொறுத்து ஒவ்வோர் ஆண்டிலும் கிடைக்கும் நிகரத்தொகையிலிருந்து பங்கு எதனையும் குறித்தொதுக்குவதற்குப் பதிலாக, ஒவ்வோர் ஆண்டிலும் அந்த மாநிலங்களின் வருவாய்களுக்கு உதவி மானியங்களாக வகுத்துரைக்கப்படும் தொகைகள் இந்தியத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்படும்.

(2) சணல் அல்லது சணற்பொருள்களின் மீதான ஏற்றுமதித் தீர்வையை இந்திய அரசாங்கம் தொடர்ந்து விதித்து வருகின்ற காலம் அல்லது இந்த அரசமைப்பின் தொடக்க நிலையிலிருந்து பத்தாண்டுகள் கழிவுறுகிற காலம், இவற்றில் எது முந்தியதோ அது வரையில், அவ்வாறு வகுத்துரைக்கப்படும் தொகைகள் தொடர்ந்து இந்தியத் திரள்நிதியத்தின் மீது சார்த்தப்பட்டுவரும்.

(3) இந்த உறுப்பில், "வகுத்துரைக்கப்படும்" என்னும் சொல், 270ஆம் உறுப்பில் கூறப்பட்டுள்ள அதே பொருளை உடையது ஆகும்.

274. மாநிலங்கள் அக்கறை கொண்டுள்ள வரி விதிப்பைப் பாதிக்கும் சட்டமுன் வடிவுகளுக்குக் குடியரசுத்தலைவரின் முன்பரிந்துரை வேண்டுறுவதாகும்:

(1) மாநிலங்கள் அக்கறை கொண்டுள்ள வரி அல்லது தீர்வை எதனையும் விதிக்கிற அல்லது மாறுதல் செய்கிற அல்லது இந்திய வருமான வரி தொடர்பான சட்டங்களுக்காகப் பொருள்வரையறுக்கப்பட்ட "வேளாண் வருமானம்" என்னும் சொல்லின் பொருளை மாறுதல்செய்கிற, அல்லது இந்த அத்தியாயத்தின் மேலேகண்ட வகையங்களில் எதன்படியும் பணத்தொகைகள் எந்த நெறிகளின்படி மாநிலங்களுக்குப் பகிந்தளிக்கத்தக்கனவோ அந்த நெறிகளைப் பாதிக்கின்ற, அல்லது இந்த அத்தியாயத்தின் மேலேகண்ட வகையங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்றியத்தின் நோக்கங்களுக்காக மேல்வரி எதனையும் விதிக்கின்ற சட்டமுன்வடிவு அல்லது திருத்தம் எதுவும், குடியரசுத்தலைவரின் பரிந்துரையின்மீது அல்லாமல், நாடாளுமன்ற அவைகளில் எதிலும் அறிமுகப்படுத்தப்படுதலோ கொண்டுவரப்படுதலோ ஆகாது.

(2) இந்த உறுப்பில், "மாநிலங்கள் அக்கறை கொண்டுள்ள வரி அல்லது தீர்வை" என்னும் சொற்றொடர்—

(அ) ஒரு வரி அல்லது தீர்வையிலிருந்து கிடைக்கும் நிகரத்தொகை முழுவதுமோ அதில் ஒரு பகுதியோ மாநிலம் ஒன்றுக்குக் குறித்தொதுக்கப்படுகின்றதெனில், அந்த வரி அல்லது தீர்வை, அல்லது

(ஆ) ஒரு வரி அல்லது தீர்வையிலிருந்து கிடைக்கும் நிகரத்தொகையைக் குறிக்கும் வகையில், மாநிலம் எதற்கும் இந்தியத் திரள் நிதியத்திலிருந்து நிகழுறும் காலத்தில் தொகைகள் வழங்கப்படுகின்றதெனில், அந்த வரி அல்லது தீர்வை,

என்று பொருள்படும்.

---

1. 2000ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பதாம் திருத்தம்) சட்டத்தினால் நீக்குறவு செய்யப்பட்டது.

275. குறித்தசில மாநிலங்களுக்கு ஒன்றியத்திலிருந்து மானியங்கள்:

(1) உதவி தேவையுள்ளவை என்று நாடாளுமன்றம் தீர்மானிக்கும் மாநிலங்களின் வருவாய்களுக்கு உதவி மானியங்களாக ஒவ்வோர் ஆண்டிலும் நாடாளுமன்றம் சட்டத்தினால் வகைசெய்யும் தொகைகள், இந்தியத் திரள் நிதியத்தின்மீது சார்த்தப்படும்; வெவ்வேறு மாநிலங்களுக்கு வெவ்வேறான தொகைகள் நிருணயிக்கப்படலாம்:

வரம்புரையாக: ஒரு மாநிலத்திலுள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினரின் நலப்பாட்டினை வளர்ப்பதற்காக, அல்லது அதிலுள்ள பட்டியல் பகுதிகளின் நிருவாகத் தரநிலையை அந்த மாநிலத்தின் பிற பகுதிகளின் நிருவாகத் தரநிலைக்கு உயர்த்துவதற்காக, இந்திய அரசாங்கத்தின் ஒப்பேற்புடன் அந்த மாநிலத்தால் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்கான வரவு–செலவுகளைச் செய்ய அந்த மாநிலத்தை இயல்விப்பதற்குத் தேவைப்படும் மூலதனத் தொகைகளும், தொடர் செலவடைத் தொகைகளும் அந்த மாநிலத்தின் வருவாய்களுக்கு உதவி மானியங்களாக இந்தியத் திரள் நிதியத்திலிருந்து வழங்கப்படும்:

மேலும் வரம்புரையாக: அசாம் மாநிலத்தின் வருவாய்களுக்கு உதவி மானியங்களாக—

(அ) ஆறாம் இணைப்புப்பட்டியலின் 20ஆம் பத்தியுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் I ஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள பழங்குடியினர் பகுதிகளின் நிருவாகத்தைப் பொறுத்தவரை, இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு ஒட்டி முந்திய இரண்டு ஆண்டுகளின்போது வருவாய்களுக்கு மேல் ஏற்பட்ட சராசரி செலவுக்கும்,

(ஆ) மேற்சொன்ன பகுதிகளின் நிருவாகத் தரநிலையை, அந்த மாநிலத்தின் பிற பகுதிகளின் நிருவாகத் தரநிலைக்கு உயர்த்துவதற்காக, இந்திய அரசாங்கத்தின் ஒப்பேற்புடன் அந்த மாநிலத்தால் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவடைகளுக்கும்

சமமாக மூலதனத்தொகையும் தொடர் செலவடைத் தொகையும் இந்தியத் திரள் நிதியத்திலிருந்து வழங்கப்படும்.

(1அ). 244அ உறுப்பின்படி தன்னாட்சி மாநிலம் உருவாக்கப்படுவதன் பேரிலும், அது முதற்கொண்டும்—

(i) (1) ஆம் கூறுக்கான இரண்டாம் வரம்புரையின் (அ) கூறில் சுட்டப்பட்டுள்ள பழங்குடியினர் பகுதிகள் அனைத்தும் அடங்கியதாக அத்தன்னாட்சி மாநிலம் இருக்குமாயின், அக்கூறின்படி வழங்கப்படுவதாகும் தொகைகள், அந்தத் தன்னாட்சி மாநிலத்திற்கு வழங்கப்படும்; அந்தத் தன்னாட்சி மாநிலம் அந்தப் பழங்குடியினர் பகுதிகளில் சிலவற்றை மட்டுமே கொண்டதாக இருக்குமாயின், குடியரசுத்தலைவர் ஆணையின் வழி குறித்துரைக்கிறவாறு, அசாம் மாநிலத்திற்கும் அத்தன்னாட்சி மாநிலத்திற்குமிடையே அத்தொகை பங்கீடு செய்யப்படுதல் வேண்டும்;

(ii) அந்தத் தன்னாட்சி மாநிலத்தின் நிருவாகத் தரநிலையை அசாம் மாநிலத்தின் பிற பகுதிகளின் நிருவாகத் தரநிலைக்கு உயர்த்துவதற்காக இந்திய அரசாங்கத்தின் ஒப்பேற்புடன் அந்தத் தன்னாட்சி மாநிலத்தால் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவடைத் தொகைகளுக்குச் சமமான மூலதனத் தொகையும் தொடர் செலவடைத் தொகையும் அந்தத் தன்னாட்சி மாநிலத்தின் வருவாய்களுக்கு உதவிமானியங்களாக இந்தியத் திரள்நிதியத்திலிருந்து வழங்கப்படும்.

(2). (1) ஆம் கூறின்படி நாடாளுமன்றத்தால் வகைசெய்யப்படும் வரையில், அந்தக் கூறின்படி நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் குடியரசுத்தலைவரால் ஆணையின்வழி செலுத்தப்படுவது ஆகும்; இந்தக் கூறின்படி குடியரசுத்தலைவரால் பிறப்பிக்கப்படும் ஆணை எதுவும், நாடாளுமன்றத்தால் அவ்வாறு செய்யப்பட்ட வகையம் எதற்கும் உட்பட்டுச் செல்திறம் உடையது ஆகும்:

வரம்புரையாக: நிதி ஆணையம் ஒன்று அமைக்கப்பட்ட பின்பு, அந்த ஆணையத்தின் பரிந்துரைகளை ஓர்வு செய்ததன்மேல் அல்லாமல், குடியரசுத்தலைவர் இந்தக் கூறின்படி ஆணை எதனையும் பிறப்பித்தல் ஆகாது.

276. விழைதொழில்கள், வணிகங்கள், கொள்பணிகள், வேலையமர்த்தங்கள் ஆகியவற்றின் மீதான வரிகள்:

(1) 246 ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், விழைதொழில்கள், வணிகங்கள், கொள்பணிகள் அல்லது வேலையமர்த்தங்கள் பொறுத்து, ஒரு மாநிலத்தின் அல்லது அதிலுள்ள ஒரு நகராட்சி, மாவட்ட வாரியம், உள்ளாட்சி வாரியம் அல்லது பிற உள்ளாட்சி அதிகாரஅமைப்பின் நலனுக்கான வரிகள் தொடர்பாக அந்த மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் எதுவும் அது வருமானத்தின்மீதான ஒரு வரியைப் பற்றியது என்ற காரணத்தால் செல்லாநிலையது ஆவதில்லை.

(2) அந்த மாநிலத்திற்கோ அந்த மாநிலத்திலுள்ள நகராட்சி, மாவட்ட வாரியம், உள்ளாட்சி வாரியம் அல்லது பிற உள்ளாட்சி அதிகாரஅமைப்பு எதற்குமோ, விழைதொழில்கள், வணிகங்கள், கொள்பணிகள், வேலையமர்த்தங்கள் ஆகியவற்றின்மீதான வரிகளாக ஒருவரைப் பொறுத்து செலுத்துவதாகும் மொத்தத் தொகை ஆண்டொன்றுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படுதல் ஆகாது.

(3) விழைதொழில்கள், வணிகங்கள், கொள்பணிகள், வேலையமர்த்தங்கள் ஆகியவற்றின்மீதான வரிகள் பொறுத்து, மேற்சொன்னவாறு சட்டங்களை இயற்றுவதற்கு ஒரு மாநிலச் சட்டமன்றத்திற்குள்ள அதிகாரமானது, விழைதொழில்கள், வணிகங்கள், கொள்பணிகள், வேலையமர்த்தங்கள் ஆகியற்றிலிருந்து வந்தடைகின்ற அல்லது கிடைக்கின்ற வருமானத்தின்மீதான வரிகள் பொறுத்துச் சட்டங்களை இயற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரத்தினை எவ்வகையிலும் வரம்பிடுவதாகப் பொருள்கொள்ளுதல் ஆகாது.

277. காப்புரைகள் :

இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, மாநிலம் ஒன்றன் அரசாங்கத்தினால் அல்லது நகராட்சி அல்லது பிற உள்ளாட்சி அதிகாரஅமைப்பு அல்லது குழுமம் எதனாலும் அந்த மாநிலம், நகராட்சி, மாவட்டம் அல்லது பிற வட்டாரப்பகுதி இவற்றின் பொருட்டு சட்டப்படி விதிக்கப்பட்டுவந்த வரிகள், தீர்வைகள், மேல்வரிகள், கட்டணங்கள் எவையும், ஒன்றியத்துப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருப்பினும், நாடாளுமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்யும் வரையில் தொடர்ந்து விதிக்கப்பட்டு, அதே நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம்.

[1][278. * * * *]

279. "நிகரத் தொகை" முதலியவற்றைக் கணக்கிடுதல் :

(1) இந்த அத்தியாயத்தின் மேலே கண்ட வகையங்களில், வரி அல்லது தீர்வை ஒன்றன் தொடர்பாக "நிகரத்தொகை" என்பது, அவ்வரி அல்லது தீர்வையிலிருந்து கிடைக்கும் தொகையிலிருந்து ஈட்டுவதற்காகும் செலவடை கழிக்கப்பட்டதன் பின்பு வரும் தொகை என்று பொருள்படும்; அந்த வகையங்களைப் பொறுத்தவரை, வரையிடம் ஒன்றன் அல்லது அதைச் சேர்வதான வரி அல்லது தீர்வை ஒன்றிலிருந்து அல்லது வரி அல்லது தீர்வை ஒன்றின் பகுதியிலிருந்து கிடைக்கும் நிகரத்தொகை எவ்வளவு என்பதை இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர் கண்டறிந்து உறுதிச்சான்றளிப்பார்: அவரது அந்த உறுதிச் சான்றே அறுதியானது ஆகும்.

---

[1] 1956ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் 29 ஆம் பிரிவினாலும் இணைப்புப்பட்டியலினாலும் நீக்கறவு செய்யப்பட்டது.]

2) மேலே கண்டவற்றிற்கும், இந்த அத்தியாத்தின் பிற வெளிப்படையான வகையம் எதற்கும் உட்பட்டு, நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டமோ குடியரசுத்தலைவரால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையோ இந்தப் பகுதியின்படி தீர்வை அல்லது வரி எதிலிருந்தும் கிடைக்கும் தொகை ஒரு மாநிலத்திற்குக் குறித்தொதுக்கப்படும் அல்லது குறித்தொதுக்கத்தக்கதாகும் நேர்வில், எந்த முறையில் அத்தொகை கணக்கிடப்படவேண்டும் என்பதற்கும், எந்தக் காலத்திலிருந்து அல்லது எந்தக் காலத்திலும் முறையிலும் அத்தொகைகள் வழங்கப்படவேண்டும் என்பதற்கும், ஒரு நிதியாண்டிற்கும் மற்றொன்றுக்கும் இடையே கணக்கில் நேரமைவு செய்வதற்கும் பிற சார்வுருவான அல்லது துணைமையான பொருட்பாடுகளுக்கும் வகைசெய்யலாம்.

280. நிதி ஆணையம் :

(1) குடியரசுத்தலைவர், ஆணையின்வழி, இந்த அரசமைப்பின் தொடக்க நிலையிலிருந்து இரண்டாண்டுகளுக்குள்ளும், அதற்குப் பின்பு ஒவ்வோர் ஐந்தாவது ஆண்டு முடிவிலும் அல்லது குடியரசுத்தலைவர் தேவையெனக் கருதும் அதற்கு முந்தியதொரு காலத்திலும், நிதி ஆணையம் ஒன்றை அமைப்பார்: அவ்வாணையம் குடியரசுத்தலைவரால் அமர்த்தப்பெறும் தலைவர் ஒருவரையும் பிற நான்கு உறுப்பினர்களையும் கொண்டிருக்கும்.

(2) நாடாளுமன்றம் சட்டத்தினால், அந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக அமர்த்தப்பெறுவதற்குத் தேவைப்படும் தகுதிப்பாடுகளையும் அவர்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டிய முறையையும் தீர்மானிக்கலாம்.

(3) பின்வருவன குறித்து குடியரசுத்தலைவருக்குப் பரிந்துரைகள் செய்வது இந்த ஆணையத்தின் கடமை ஆகும்:

(அ) இந்த அத்தியாயத்தின்படி ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே பிரிக்கப்படவேண்டிய அல்லது பிரிக்கப்படுவதாகும் வரிகளிலிருந்து கிடைக்கும் நிகரத்தொகைகளை அவற்றுக்கிடையே பகிர்ந்தளித்தல் மற்றும், அத்தகைய தொகைகளில் முறையே அவற்றிற்குரிய பங்குகளை அந்த மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தொதுக்குதல்;

(ஆ) இந்தியத் திரள் நிதியத்திலிருந்து மாநிலங்களின் வருவாய்களுக்காக உதவி மானியங்களை அளிப்பதில் பின்பற்றப்படவேண்டிய நெறிகள்;

[1][(ஆஆ) அந்த மாநிலத்தின் நிதி ஆணையத்தால் செய்யப்படும் பரிந்துரைகளின்பேரில், மாநிலத்திலுள்ள ஊராட்சிகளின் வருவாய் அதிகாரங்களுக்குத் துணையாக அமைவதற்கு ஒரு மாநிலத்தில் திரள்நிதியத்தை அதிகரிப்பதற்குத் தேவைப்படுகிற நடவடிக்கைகள்;]

[2][(இ) மாநில நிதி ஆணையத்தினால் செய்யப்பட்ட பரிந்துரைகளின்பேரில், மாநிலத்திலுள்ள நகராட்சிகளின் வருவாய் ஆதாரங்களுக்குத் துணையாக அமைவதற்கு மாநிலத் திரள் நிதியத்தை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள்;]

[3][(ஈ) சீரான நிதி நலம் கருதி குடியரசுத்தலைவர் இந்த ஆணையத்திற்குச் சுட்டியனுப்பும் பிற பொருட்பாடு எதுவும்.]

(4) அந்த ஆணையம் தனது நெறிமுறையைத் தானே தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும்; மேலும், தனது செயற்பணிகளைப் புரிந்துவருவதற்கு, நாடாளுமன்றம் சட்டத்தினால் அதற்கு வழங்கும் அதிகாரங்களையும் அது உடையது ஆகும்.

281. நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் :

குடியரசுத்தலைவர், இந்த அரசமைப்பின் வகையங்களின்படி இந்நிதி ஆணையம் செய்யும் பரிந்துரை ஒவ்வொன்றையும், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கக் குறிப்புரையுடன் சேர்த்து நாடாளுமன்றத்தின் ஒவ்வோர் அவை முன்பும் வைக்குமாறு செய்வார்.

---

1 1992ஆம் ஆண்டு அரசமைப்புச் (எழுபத்து மூன்றாம் திருத்தம்) சட்டத்தின் 3ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது. (24–4–1993 முதல் செல்திறம் பெறுமாறு.)

2 1992ஆம் ஆண்டு அரசமைப்புச் (எழுபத்து நான்காம் திருத்தம்) சட்டத்தின் 3ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது. (1–6–1993 முதல் செல்திறம் பெறுமாறு.)

3 1992ஆம் ஆண்டு அரசமைப்புச் (எழுபத்து நான்காம் திருத்தம்) சட்டத்தின் 3ஆம் பிரிவினால் மறுஎழுத்திடப்பட்டது. (1–6–1993 முதல் செல்திறம் பெறுமாறு.)

நிதி பற்றிய பல்திற வகையங்கள்

282. ஒன்றியம் அல்லது ஒரு மாநிலம் அதன் வருவாய்களிலிருந்து செய்வதாகும் செலவுகள் :

ஒன்றியம் அல்லது ஒரு மாநிலம், பொது நோக்கம் எதற்காகவும், அந்நோக்கம் நாடாளுமன்றம் அல்லது அந்த மாநிலச் சட்டமன்றச் சட்டங்கள் இயற்றுவதற்கு உரியதொன்றாக இல்லாதபோதிலும், மானியங்கள் எவற்றையும் வழங்கலாம்.

283. திரள் நிதியங்கள் எதிரதாக்காப்பு நிதியங்கள், அரசுப் பொதுக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் பணத்தொகைகள் ஆகியவற்றைக் கைப்பொறுப்பில் வைத்திருத்தல் முதலியன :

(1) இந்தியத் திரள்நிதியம், இந்திய எதிரதாக்காப்பு நிதியம் ஆகியவற்றைக் கைப்பொறுப்பில் வைத்திருப்பதும், அந்நிதியங்களில் பணத்தொகைகளைச் செலுத்துவதும், அவற்றிலிருந்து பணத்தொகைகளைத் திரும்ப எடுப்பதும், இந்திய அரசாங்கத்தால் அல்லது அதன் சார்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு அந்நிதியங்களில் வரவுவைக்கப்பட்டவை அல்லாத பிற பொதுப் பணத்தொகைகளைக் கைப்பொறுப்பில் வைத்திருப்பதும், அவற்றை இந்திய அரசுப் பொதுக் கணக்கில் செலுத்துவதும் இந்தக் கணக்கிலிருந்த பணத் தொகைகளைத் திரும்ப எடுப்பதும் மேற்சொன்ன பொருட்பாடுகளுக்குத் தொடர்பான அல்லது அவற்றிற்குத் துணைமையான பிற பொருட்பாடுகள் அனைத்தும் நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தினால் ஒழுங்குறுத்தப்படும்; அதன் பொருட்டு அவ்வாறு வகைசெய்யப்படும் வரை, குடியரசுத்தலைவர் செய்யும் விதிகளின் வழி அவை ஒழுங்குறுத்தப்படும்.

(2) ஒரு மாநிலத்தின் திரள்நிதியம், ஒரு மாநிலத்தின் எதிரதாக்காப்பு நிதியம் ஆகியவற்றைக் கைப்பொறுப்பில் வைத்திருப்பதும், அந்நிதியங்களில் பணத்தொகைகளைச் செலுத்துவதும், அவற்றிலிருந்து பணத்தொகைகளைத் திரும்ப எடுப்பதும், அந்த மாநில அரசாங்கத்தால் அல்லது அதன் சார்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு அந்நிதியங்களில் வரவுவைக்கப்பட்டவை அல்லாத பிற பொதுப் பணத்தொகைகளைக் கைப்பொறுப்பில் வைத்திருப்பதும், அவற்றை மாநில அரசுப் பொதுக் கணக்கில் செலுத்துவதும், அந்தக் கணக்கிலிருந்து பணத்தொகைகளைத் திரும்ப எடுப்பதும், மேற்சொன்ன பொருட்பாடுகளுக்குத் தொடர்பான அல்லது அவற்றிற்குத் துணைமையான பிற பொருட்பாடுகள் அனைத்தும் அந்த மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தினால் ஒழுங்குறுத்தப்படும்; அதன்பொருட்டு அவ்வாறு வகை செய்யப்படும் வரையில், அந்த மாநிலத்தின் ஆளுநர் செய்யும் விதிகளின்வழி அவை ஒழுங்குறுத்தப்படும்.

284. அரசுப் பணியாளர்களாலும் நீதிமன்றங்களாலும் பெற்றுக்கொள்ளப்படும் வழக்காளிகளின் வைப்பீடுகள் பிற பணத்தொகைகள் ஆகியவற்றைக் கைப்பொறுப்பில் வைத்திருத்தல் :

(அ) இந்திய அரசாங்கத்தால் அல்லது, நேர்வுக்கேற்ப, ஒரு மாநில அரசாங்கத்தால் திரட்டப்பட்ட அல்லது பெறப்பட்ட வருவாய்கள் அல்லது பொதுப் பணத்தொகைகள் அல்லாத வகையில் ஒன்றியத்தின் அல்லது ஒரு மாநிலத்தின் அலுவற்பாடுகள் தொடர்பாக வேலையில் அமர்த்தப்பெற்றுள்ள அலுவலர் எவராலும் அத்தகைய அலுவலர் என்ற முறையில் அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அவரிடம் வைப்பீடு செய்யப்பட்ட, அல்லது

(ஆ) வழக்கு, பொருட்பாடு அல்லது கணக்கு ஒன்றில் அல்லது நபர்களின் பேரில் வரவுவைக்கப்படுவதற்காக இந்திய ஆட்சிநிலவரைக்குள் உள்ள ஒரு நீதிமன்றத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அதனிடம் வைப்பீடுசெய்யப்பட்ட

பணத்தொகைகள் அனைத்தும், இந்திய அரசுப் பொதுக் கணக்கில் அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த மாநிலத்தின் அரசுப் பொதுக் கணக்கில் செலுத்தப்படுதல் வேண்டும்.

285. மாநில வரி விதிப்பிலிருந்து ஒன்றியத்து சொத்திற்கு விலக்களிப்பு :

(1) ஒன்றியத்தின் சொத்து எதுவும், நாடாளுமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்யும் அளவிற்கு அல்லாமல், மாநிலம் ஒன்றினால் அல்லது மாநிலம் ஒன்றிலுள்ள அதிகார அமைப்பினால் விதிக்கப்படும் வரிகள் அனைத்திலிருந்தும் விலக்களிக்கப்படுவதாகும்.

(2) நாடாளுமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்யும் வரையில், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு ஒரு மாநிலத்தில் வரிவிதிப்புக்கு உற்றதாக இருந்த அல்லது உற்றதாகக் கருதப்பட்ட ஒன்றியத்துச் சொத்து எதன்மீதும் அந்த மாநிலத்தில் வரி எதுவும் தொடர்ந்து விதிக்கப்பட்டு வரும் வரையில், அவ்வரியை அந்த மாநிலத்திலுள்ள அதிகார அமைப்பு எதுவும் விதிப்பதற்கு, (1) ஆம் கூறிலுள்ள எதுவும் தடையுறு ஆவதில்லை.

286. சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினை மீது வரி விதிப்பது குறித்த வரையறைகள் :

(1) மாநிலம் ஒன்றன் சட்டம் எதுவும், சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினை—

(அ) அந்த மாநிலத்திற்கு வெளியே, அல்லது

(ஆ) இந்திய ஆட்சிநிலவரைக்குள் அச்சரக்குகளை இறக்குமதி செய்கையில் அல்லது அதற்கு வெளியே அச்சரக்குகளை ஏற்றுமதி செய்கையில்

நிகழுமிடத்து, அத்தகைய விற்பனை அல்லது கொள்வினையின் மீது வரி எதனையும் விதித்தலோ விதிப்பதற்கு அதிகாரம் அளித்தலோ ஆகாது.

(2). (1) ஆம் கூறில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளில் எதன்படியும் சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினை எப்போது நிகழ்கிறது என்பதைத் தீர்மானிப்பதற்கான நெறிகளை நாடாளுமன்றம் சட்டத்தினால் வகுக்கலாம்.

3) மாநிலம் ஒன்றன் சட்டம் எதுவும்—

(அ) மாநிலங்களிடை நிகழும் வணிகத்தில் அல்லது வாணிபத்தில் தனி முக்கியத்துவம் வாய்ந்தவை என நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்பிய சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினை மீதான வரி ஒன்றை, அல்லது

(ஆ) 366ஆம் உறுப்பின் (29அ) கூறின் (ஆ) உட்கூறில், (இ) உட்கூறில் அல்லது (ஈ) உட்கூறில் சுட்டப்பட்டுள்ளவை போல்வதான சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினை மீதான வரி ஒன்றை

விதிக்கின்ற அல்லது விதிப்பதற்கு அதிகாரம் அளிக்கின்ற அளவிற்கு, அது, வரி விதிப்புமுறை, வரி வீதங்கள், பிற வரிச்சுமத்தங்கள் ஆகியவை குறித்து நாடாளுமன்றம் சட்டத்தினால் குறித்துரைக்கும் வரையறைகளுக்கும், வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டதாக இருக்கும்.

287. மின்விசை மீதான வரிகளிலிருந்து விலக்களிப்பு:

நாடாளுமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்யும் அளவிற்கு அல்லாமல், மாநிலம் ஒன்றன் சட்டம் எதுவும்—

(அ) இந்திய அரசாங்கத்தால் பயனுறுத்தப்படுகிற அல்லது இந்திய அரசாங்கத்தின் பயனுறுத்தத்திற்காக அந்த அரசாங்கத்திற்கு விற்கப்படுகிற, அல்லது

(ஆ) இருப்பூர்தியம் எதனையும் அமைப்பதில், பேணிவருவதில் அல்லது இயக்குவதில் இந்திய அரசாங்கத்தாலோ அந்த இருப்பூர்தியத்தை இயக்கிவருகிற ஓர் இருப்பூர்தி நிறுமத்தாலோ பயனுறுத்தப்படுகிற அல்லது இருப்பூர்தியம் எதனையும் அமைப்பதில் பேணிவருவதில் அல்லது இயக்குவதில் பயனுறுத்தப்படுவதற்காக அந்த

மின்விசையின் (அதை உற்பத்தி செய்தது அரசாங்கமாயினும் பிறராயினும்) பயனுறுத்தம் அல்லது

விற்பனையின்மீது வரி எதனையும் விதித்தலோ விதிப்பதற்கு அதிகாரம் அளித்தலோ ஆகாது; மேலும், மின்விசையின் விற்பனையின் மீது வரி எதனையும் விதிக்கின்ற அல்லது விதிப்பதற்கு அதிகாரம் அளிக்கின்ற அத்தகைய சட்டம் எதுவும், இந்திய அரசாங்கத்தினால் பயனுறுத்தப்படுவதற்காக அந்த அரசாங்கத்திற்கு அல்லது இருப்பூர்தியம் எதனையும் அமைப்பதில், பேணுவதில் அல்லது இயக்குவதில் பயனுறுத்தப்படுவதற்காக மேற்சொன்னவாறு அத்தகைய இருப்பூர்திய நிறுமத்திற்கு விற்பனை செய்யப்படும் மின்விசையின் விலை, மின்விசையைக் கணிசமான அளவிற்குப் பயனுறுத்தும் பிறருக்குத் குறிக்கப்படும் விலையைவிட அந்த வரித்தொகையின் அளவிற்குக் குறைந்ததாக இருக்கும்படி உறுதிசெய்தல்வேண்டும்.

288. குறித்தசில நேர்வுகளில் நீர் அல்லது மின்விசைக்கு மாநிலங்களின் வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பு :

(1) குடியரசுத்தலைவர் ஆணையின்வழி பிறவாறு வகைசெய்யும் அளவிற்கு அல்லாமல், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு செல்லாற்றலில் இருந்த மாநிலச் சட்டம் எதுவும், மாநிலங்களிடையே அமைந்த ஆறு அல்லது ஆற்றுப்பள்ளத்தாக்கு ஒன்றை ஒழுங்குறுத்துவதற்காகவோ மேம்படுத்துவற்காகவோ நிலவுறும் சட்டம் ஒன்றினால் அல்லது நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டம் ஒன்றினால் நிறுவப்படும் அதிகாரஅமைப்பு எதனாலும் சேமித்து வைக்கப்படுகிற, உற்பத்தி செய்யப்படுகிற. பயனுறுத்தப்படுகிற, வழங்கப்படுகிற அல்லது விற்கப்படுகிற நீர் அல்லது மின்விசை எதனையும் பொறுத்து வரி ஒன்றை விதித்தலோ விதிப்பதற்கு அதிகாரம் அளித்தலோ ஆகாது.

விளக்கம்.—இந்தக் கூறில், ''செல்லாற்றலில் இருந்த மாநிலச் சட்டம்'' என்னும் சொற்றொடர், இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்குமுன்பு நிறைவேற்றப்பட்டு அல்லது இயற்றப்பட்டு முன்னரே நீக்கறவு செய்யப்படாத ஒரு சட்டத்தை, அத்தகைய சட்டம் எதுவும் அல்லது அதன் பகுதிகள் எவையும் அப்போது முற்றிலுமோ குறிப்பிட்ட பரப்பிடங்களிலோ செயற்பாட்டில் இல்லாதிருப்பினும், உள்ளடக்கும்.

(2) மாநிலம் ஒன்றன் சட்டமன்றம் (1)ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட வரி எதனையும் சட்டத்தினால் விதிக்கலாம் அல்லது விதிப்பதற்கு அதிகாரம் அளிக்கலாம்; ஆனால், அத்தகைய சட்டம் எதுவும் குடியரசுத்தலைவரின் ஓர்விற்காக ஒதுக்கிவைக்கப்பட்டு, அவருடைய ஏற்பிசைவை அது பெற்றிருந்தாலன்றி, செல்திறம் உடையது ஆகாது; மேலும், அத்தகைய சட்டம் எதுவும், அதிகாரஅமைப்பு ஒன்றினால் அச்சட்டத்தின்படி வகுக்கப்படும் விதிகளின் அல்லது பிறப்பிக்கப்படும் ஆணைகளின்வழி அத்தகைய வரியின் வீதங்களையும் பிற வரிச் சுமத்தங்களையும் நிருணயிப்பதற்கு வகைசெய்யுமாயின், அத்தகைய விதியை வகுப்பதற்கு அல்லது ஆணையைப் பிறப்பிப்பதற்குக் குடியரசுத்தலைவரின் முன்னிசைவினைப்பெறுதல் வேண்டும் என அச்சட்டம் வகை செய்தல் வேண்டும்.

289. மாநிலம் ஒன்றன் சொத்திற்கும் வருமானத்திற்கும் ஒன்றியத்து வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பு:

(1) மாநிலம் ஒன்றன் சொத்தும் வருமானமும் ஒன்றியத்து வரி விதிப்பிலிருந்து விலக்களிப்புப் பெறுவன ஆகும்.

(2) மாநிலம் ஒன்றன் அரசாங்கத்தாலோ அதன் சார்பாகவோ நடத்தப்படும் எவ்வகையானதுமான வணிகம், வணிகத்தொழில் அல்லது அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் பொறுத்து அல்லது அத்தகைய வணிகம், வணிகத்தொழில் பொருட்டுப் பயன்படுத்தப்படுகிற அல்லது கையுடைமையிலிருக்கிற சொத்து எதனையும் பொறுத்து, அதன் தொடர்பாக வந்தடைகின்ற அல்லது அதிலிருந்து கிடைக்கின்ற வருமானம் எதனையும் பொறுத்து, நாடாளுமன்றம் சட்டத்தினால் வகைசெய்யும் அளவு, ஏதேனும் இருப்பின், அந்த அளவிற்கு வரி எதனையும் ஒன்றியம் விதிப்பதற்கோ விதிப்பதற்கு அதிகாரம் அளிப்பதற்கோ (1)ஆம் கூறிலுள்ள எதுவும் தடையூறு ஆவதில்லை.

(3) (2) ஆம் கூறிலுள்ள எதுவும், அரசாங்கத்தின் வழக்கமான செயற்பணிகளைச் சார்ந்தவை என நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்பும் வணிகம் அல்லது வணிகத்தொழில் எதற்குமோ எவ்வகையான வணிகம் அல்லது வணிகத்தொழில் எதற்குமோ பொருந்துறுவது இல்லை.

290. குறித்தசில செலவுகள், ஓய்வூதியங்கள் ஆகியவை பொறுத்த நேரமைவு:

இந்த அரசமைப்பின் வகையங்களின்படி நீதிமன்றம் அல்லது ஆணையம் ஒன்றின் செலவுகள் அல்லது இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு, முடியரசின் கீழ் இந்தியாவின் அல்லது அத்தகைய தொடக்கநிலைக்குப் பின்பு ஒன்றியம் அல்லது மாநிலம் ஒன்றன் அலுவற்பாடுகள் தொடர்பாகப் பணிபுரிந்திருக்கின்ற ஒருவருக்கு அல்லது அவர் பொருட்டு வழங்கப்படுவதான ஓய்வூதியம் இந்தியத் திரள் நிதியத்தின்மீதோ, மாநிலம் ஒன்றன் திரள்நிதியத்தின் மீதோ சார்த்தப்பட்டதாக இருக்குமிடத்து—

(அ) இந்தியத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட ஒரு செலவாக இருக்கும் நேர்வில், அந்நீதிமன்றமோ ஆணையமோ மாநிலம் ஒன்றன் தனிப்பட்ட தேவைகளில் எதனையும் நிறைவுறுத்துமாயின், அல்லது அந்த நபர் மாநிலம் ஒன்றன் அலுவற்பாடுகள் தொடர்பாக முழுமையாகவோ ஓரளவோ பணிபுரிந்திருப்பாராயின், அல்லது

(ஆ) மாநிலம் ஒன்றன் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்ட ஒரு செலவாக இருக்கும் நேர்வில், அந்நீதிமன்றமோ ஆணையமோ ஒன்றியத்தின் அல்லது பிறிதொரு மாநிலத்தின் தனிப்பட்ட தேவைகளில் எதனையும் நிறைவுறுத்துமாயின் அல்லது அந்த நபர் ஒன்றியத்தின் அல்லது பிறிதொரு மாநிலத்தின் அலுவற்பாடுகள் தொடர்பாக முழுமையாகவோ ஓரளவோ பணிபுரிந்திருப்பாராயின்

அச்செலவுகள் அல்லது ஓய்வூதியம் பொறுத்து ஒப்பியவாறான பங்களிப்புத் தொகை அல்லது ஒப்புதல் ஏற்படாதவிடத்து இந்தியாவின் தலைமை நீதிபதியால் அமர்த்தப்பெறும் பொதுவரால் தீர்மானிக்கப்படும் பங்களிப்புத் தொகை, அந்த மாநிலத்தின் திரள்நிதியத்தின்மீது அல்லது, நேர்வுக்கேற்ப, இந்தியத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்டு, அதிலிருந்து வழங்கப்படுதல் வேண்டும்.

290அ. குறித்தசில தேவசுவம் நிதியங்களுக்கு ஆண்டு தோறும் பணம் செலுத்துதல்:

ஒவ்வோர் ஆண்டும் நாற்பத்தாறு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் கேரள மாநிலத்தின் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்டு அதிலிருந்து திருவாங்கூர் தேவசுவம் நிதியத்திற்கு வழங்கப்படும்; மேலும், திருவாங்கூர்—கொச்சி மாநிலத்திலிருந்து 1956ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாளன்று தமிழ்நாடு மாநிலத்திற்கு மாற்றப்பட்ட நிலவரைகளில் உள்ள இந்துக் கோயில்கள் வழிபடுதலங்கள் ஆகியவற்றைப் பேணிவருவதற்காகப் பதின்மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் தமிழ்நாடு மாநிலத்தின் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்பட்டு அதிலிருந்து அந்த மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ள தேவசுவம் நிதியத்திற்கு ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படும்.

[1][291. * * * *]

அத்தியாயம் II

கடன்பெறுதல்

292. இந்திய அரசாங்கம் கடன்பெறுதல்:

ஒன்றியத்து ஆட்சிஅதிகாரமானது, நாடாளுமன்றம் சட்டத்தினால், அவ்வப்போது நிருணயிக்கும் வரம்புகள், எவையேனுமிருப்பின், அவற்றிற்குள்ளடங்கி, இந்தியத் திரள் நிதியத்தின் பிணையத்தின்பேரில் கடன் பெறுவதையும் அவ்வாறு நிருணயிக்கப்பட்ட வரம்புகள், எவையேனுமிருப்பின், அவற்றிற்குள்ளடங்கி, பொறுப்புறுதிகள் அளிப்பதையும் அளாவி நிற்கும்.

---

[1] 1971ஆம் ஆண்டு அரசமைப்பு (இருபத்தாறாம் திருத்தம்) சட்டத்தின் 2ஆம் பிரிவினால் நீக்கறவு செய்யப்பட்டது.

293. மாநிலங்கள் கடன்பெறுதல் :

(1) இந்த உறுப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, மாநிலம் ஒன்றன் ஆட்சி அதிகாரமானது, அந்த மாநிலச் சட்டமன்றம் சட்டத்தினால் அவ்வப்போது நிருணயிக்கும் வரம்புகள், எவையேனுமிருப்பின், அவற்றிற்குள்ளடங்கி, அந்த மாநிலத்திரள் நிதியத்தின் பிணையத்தின்பேரில் இந்திய நிலவரைக்குள் கடன்வாங்குவதையும், அவ்வாறு நிருணயிக்கப்பட்ட வரம்புகள் எவையேனுமிருப்பின், அவற்றிற்குள்ளடங்கி, பொறுப்புறுதிகள் அளிப்பதையும் அளாவி நிற்கும்.

(2) இந்திய அரசாங்கம், நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தாலோ அதன் வழியாலோ விதிக்கப்படும் வரைக்கட்டுகளுக்குட்பட்டு, மாநிலம் எதற்கும் பெறுகடன்கள் வழங்கலாம் அல்லது 292ஆம் உறுப்பின்படி நிருணயிக்கப்பட்ட வரம்புகள் எவற்றிற்கும் மேற்படாமல், மாநிலம் ஒன்றினால் எழுப்பப்படும் பெறு கடன்கள் பொறுத்து பொறுப்புறுதிகள் அளிக்கலாம்; அத்தகைய பெறுகடன்கள் வழங்குவதற்குத் தேவைப்படும் தொகைகள் இந்தியத் திரள்நிதியத்தின்மீது சார்த்தப்படும்.

(3) இந்திய அரசாங்கத்தால் அல்லது அதற்கு முன்பிருந்த அரசாங்கத்தால் மாநிலம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருக்கின்ற அல்லது இந்திய அரசாங்கத்தால் அல்லது அதற்கு முன்பிருந்த அரசாங்கத்தால் பொறுப்புறுதி அளிக்கப்பட்டிருக்கின்ற பெறுகடன் ஒன்றின் பகுதி எதுவும் இன்னும் கொடுபடாமல் இருக்குமாயின், அந்த மாநிலம், இந்திய அரசாங்கத்தின் இசைவில்லாமல், பெறுகடன் எதனையும் எழுப்புதல் ஆகாது.

(4). (3)ஆம் கூறின்படியான இசைவு, இந்திய அரசாங்கம் தக்கதெனக் கருதி விதிக்கும் வரைக்கட்டுகள், எவையேனுமிருப்பின், அவற்றிற்குட்பட்டு அளிக்கப்படலாம்.

அத்தியாயம் III

சொத்து, ஒப்பந்தங்கள், உரிமைகள், பொறுப்படைவுகள், கடமைப்பாடுகள் மற்றும் உரிமைவழக்குகள்

294. குறித்தசில நேர்வுகளில் சொத்து, சொத்திருப்புகள், உரிமைகள், பொறுப்படைவுகள், கடமைப்பாடுகள் ஆகியவற்றிற்கு வாரிசுரிமை :

இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு, பாகிஸ்தான் தன்னாட்சியத்தை அல்லது மேற்கு வங்காளம், கிழக்கு வங்காளம், மேற்குப் பஞ்சாப், கிழக்குப் பஞ்சாப் ஆகிய மாகாணங்களை உருவாக்கியதன் காரணமாகச் செய்யப்பட்ட அல்லது செய்யப்படவேண்டிய நேரமைவு எதற்கும் உட்பட்டு, இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலிருந்து—

(அ) அத்தகைய தொடக்கநிலையை ஒட்டிமுன்பு மாட்சிமை தங்கிய மன்னரிடம் இந்தியத் தன்னாட்சிய அரசாங்கத்திற்கென உற்றமைந்திருந்த சொத்து, சொத்திருப்புகள் ஆகிய அனைத்தும், அத்துடன் அத்தகைய தொடக்கநிலையை ஒட்டிமுன்பு மாட்சிமை தங்கிய மன்னரிடம் ஆளுநர் மாகாணம் ஒவ்வொன்றின் அரசாங்கத்திற்குமென உற்றமைந்திருந்த சொத்து, சொத்திருப்புகள் ஆகிய அனைத்தும், முறையே ஒன்றியத்திடமும் நேரிணையான மாநிலத்திடமும் உற்றமையும்; மேலும்,

(ஆ) இந்தியத் தன்னாட்சிய அரசாங்கம், ஆளுநர் மாகாணம் ஒவ்வொன்றின் அரசாங்கம் ஆகியவற்றின் அனைத்து உரிமைகளும் பொறுப்படைவுகளும் கடமைப்பாடுகளும், அவை ஒப்பந்தம் ஒன்றிலிருந்து எழுவனவாயினும் பிறவாறாயினும், முறையே இந்திய அரசாங்கம், நேரிணையான் மாநிலம் ஒவ்வொன்றின் அரசாங்கம் ஆகியவற்றின் உரிமைகளாகவும் பொறுப்படைவுகளாகவும் கடமைப்பாடுகளாகவும் இருக்கும்.

295. பிற நேர்வுகளில் சொத்து, சொத்திருப்புகள், உரிமைகள், பொறுப்படைவுகள், கடமைப்பாடுகள் ஆகியவற்றிற்கு வாரிசுரிமை:

(1) இந்திய அரசாங்கம், இந்தியக் குறுநிலம் ஒன்றன் அரசாங்கத்துடன் பின்வருவன குறித்துச் செய்துகொண்ட உடன்பாடு எதற்கும் உட்பட்டு, இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலிருந்து—

(அ) அத்தகைய தொடக்கநிலையை ஒட்டிமுன்பு முதலாம் இணைப்புப்பட்டியலின் ஆ பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு மாநிலத்திற்கு நேரிணையான இந்தியக் குறுநிலம் ஒன்றிடம் உற்றமைந்திருந்த சொத்து, சொத்திருப்புகள் ஆகிய அனைத்தும், அத்தகைய சொத்தும் சொத்திருப்புகளும், அத்தகைய தொடக்க நிலையை ஒட்டுமுன்பு எந்த நோக்கங்களுக்காக வைத்துவரப்பட்டனவோ அந்த நோக்கங்கள், அதன்பின்பு ஒன்றியத்துப் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனைப் பொறுத்தும் ஒன்றியத்து நோக்கங்களாக இருக்குமாயின், அவை ஒன்றியத்திடம் உற்றமையும்; மேலும்,

(ஆ) முதலாம் இணைப்புப்பட்டியலின் ஆ பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு மாநிலத்திற்கு நேரிணையான இந்தியக் குறுநிலம் ஒன்றன் அரசாங்கத்தின் அனைத்து உரிமைகளும் பொறுப்படைவுகளும் கடமைப்பாடுகளும் அவை ஒப்பந்தம் ஒன்றிலிருந்து எழுவனவாயினும் பிறவாறாயினும், எந்த நோக்கங்களுக்காக அத்தகைய தொடக்கநிலைக்கு முன்பு அத்தகைய உரிமைகள் ஈட்டப்பட்டனவோ அல்லது அத்தகைய பொறுப்படைவுகளும் கடமைப்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டனவோ அந்த நோக்கங்கள் அதன் பின்பு ஒன்றியத்துப் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனைப் பொறுத்தும் இந்திய அரசாங்கத்தின் நோக்கங்களாக இருக்குமாயின், அவை இந்திய அரசாங்கத்தின் உரிமைகளாகவும் பொறுப்படைவுகளாகவும் கடமைப்பாடுகளாகவும் இருக்கும்.

(2) மேலே கண்டவற்றிற்கு உட்பட்டு, இந்த அரசமைப்பின் தொடக்க நிலையிலிருந்து, (1) ஆம் கூறில் குறிப்பிடப்பட்டவை அல்லாத பிற சொத்து, சொத்திருப்புகள் ஆகிய அனைத்தையும் மற்றும் அனைத்து உரிமைகளும் பொறுப்படைவுகளும் கடமைப்பாடுகளும் ஒப்பந்தம் ஒன்றிலிருந்து எழுந்தவையாயினும் பிறவாறாயினும் அவை அனைத்தையும் பொறுத்து, முதலாம் இணைப்புப்பட்டியலில் ஆ பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள மாநிலம் ஒவ்வொன்றின் அரசாங்கமும் அதற்கு நேரிணையான இந்தியக் குறுநிலஅரசாங்கத்திற்குப் பின்னமைவுற்ற அரசாங்கமாக இருக்கும்.

296. வாரிசு இல்லாமை அல்லது உரிமைகோருநர் இல்லாமை அல்லது உரிமைக்குற்றவர் இல்லாமை காரணமாக சேர்ந்தடையும் சொத்து:

இதன்பின்பு வகைசெய்யப்பட்டுள்ளதற்கு உட்பட்டு, இந்திய ஆட்சிநிலவரையிலுள்ள சொத்து எதுவும், இந்த அரசமைப்பு செயற்பாட்டுக்கு வராதிருப்பின், வாரிசு இல்லாமை அல்லது உரிமை கோருநர் இல்லாமை அல்லது உரிமைக்குற்றவர் இல்லாமை காரணமாக மாட்சிமை தங்கிய மன்னரிடம் அல்லது நேர்வுக்கேற்ப, இந்தியக் குறுநிலம் ஒன்றன் அரசரிடம் சேர்ந்தடைந்திருக்குமாயின், அது மாநிலம் ஒன்றில் அமைந்துள்ள சொத்தாக இருப்பின், அத்தகைய மாநிலத்திடமும், பிற நேர்வு எதிலும் ஒன்றியத்திடமும் உற்றமையும்:

வரம்புரையாக: சொத்து எதுவும், மாட்சிமை தங்கிய மன்னரிடம் அல்லது இந்தியக் குறுநிலம் ஒன்றன் அரசரிடம் அவ்வாறு சேர்ந்தடைவதாகும் தேதியில் அது இந்திய அரசாங்கத்தின் அல்லது மாநிலம் ஒன்றின் அரசாங்கத்தின் உடைமையில் அல்லது கட்டாள்கையில் இருந்திருப்பின், அது, அப்போது பயன்படுத்தப்பட்டதற்கான அல்லது வைத்துவரப்பட்டதற்கான நோக்கங்கள் ஒன்றியத்தின் அல்லது ஒரு மாநிலத்தின் நோக்கங்களாக இருப்பின், அதற்கிணங்க ஒன்றியத்திடமோ அந்த மாநிலத்திடமோ உற்றமையும்.

விளக்கம்.—இந்த உறுப்பில் ''அரசர்கள்'', ''இந்தியக் குறுநிலம்'' என்னும் சொற்றொடர்கள், 363ஆம் உறுப்பிலுள்ள அதே பொருள்களை உடையனவாம்.

297. ஆட்சிநிலவரை சார்ந்த கடலினுள் அல்லது கண்டத்திட்டினுள் இருக்கும் பெறுமதியான பொருள்களும், தனிப்பட்டதான பொருளியல் மண்டலங்களின் வள ஆதாரங்களும் ஒன்றியத்திடம் உற்றமைதல் :

(1) இந்திய ஆட்சிநிலவரை சார்ந்த கடலினுள் அல்லது கண்டத்திட்டினுள் அல்லது தனிப்பட்டதான பொருளியல் மண்டலத்தினுள் அடங்கும் கடலடி நிலங்கள், கனிமங்கள், பெறுமதியான பிற பொருள்கள் ஆகிய அனைத்தும் ஒன்றியத்திடம் உற்றமைந்து, ஒன்றியத்தின் நோக்கங்களுக்காக வைத்தாளப்படும்.

(2) இந்தியாவின் தனிப்பட்டதான பொருளியல் மண்டலத்தின் பிற வளஆதாரங்கள் அனைத்தும், ஒன்றியத்திடம் உற்றமைந்து, ஒன்றியத்தின் நோக்கங்களுக்காக வைத்தாளப்படும்.

(3) இந்தியாவின் ஆட்சிநிலவரைச் சார்ந்த கடல், கண்டத்திட்டு, தனிப்பட்டதான பொருளியல் மண்டலம், பிற கடல்சார்ந்த மண்டலங்கள் ஆகியவற்றின் எல்லைகள், நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தாலோ அதன் வழியாலோ அவ்வப்போது குறித்துரைக்கப்படுகிறவாறு இருந்துவரும்.

298. வணிகம் முதலியவற்றை நடத்திவருவதற்கான அதிகாரம்:

ஒன்றியத்தின் மற்றும் ஒவ்வொரு மாநிலத்தின் ஆட்சி அதிகாரத்தில் வணிகம் அல்லது வணிகத்தொழில் எதனையும் நடத்துவதும் சொத்தினை ஈட்டுதல், வைத்தாளுதல், அயலடைவு செய்தல், எந்நோக்கத்திற்காகவும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளுதல் ஆகியவையும் அடங்கும்:

வரம்புரையாக:

(அ) மேற்சொன்ன ஒன்றியத்து ஆட்சிஅதிகாரமானது, அத்தகைய வணிகம் அல்லது வணிகத்தொழில் அல்லது அத்தகைய நோக்கம் எதுவும், நாடாளுமன்றம் சட்டங்கள் இயற்றுவதற்குரியதாக இல்லாதிருக்கும் அளவிற்கு, ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநிலத்தின் சட்டமியற்றும் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருக்கும்; மற்றும்

(ஆ) மேற்சொன்ன ஒவ்வொரு மாநிலத்தின் ஆட்சிஅதிகாரமும் அத்தகைய வணிகம் அல்லது வணிகத்தொழில் அல்லது அத்தகைய நோக்கம் எதுவும், மாநிலச் சட்டமன்றம் சட்டங்கள் இயற்றுவதற்குரியதாக இல்லாதிருக்கும் அளவிற்கு, நாடாளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருக்கும்.

299. ஒப்பந்தங்கள் :

(1) ஒன்றியத்தின் அல்லது மாநிலம் ஒன்றின் ஆட்சி அதிகாரத்தைச் செலுத்திச் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தங்கள் அனைத்தும், குடியரசுத் தலைவரால் அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த மாநிலத்தின் ஆளுநரால் செய்துகொள்ளப்பட்டனவாக இயம்பப்பெறும்; மேலும், அந்த அதிகாரத்தைச் செலுத்திச் செய்து கொள்ளப்படும் அத்தகைய அனைத்து ஒப்பந்தங்களும் அனைத்துச் சொத்துக் காப்பீடுகளும் குடியரசுத்தலைவர் அல்லது ஆளுநர் சார்பாக, அவர் பணிக்கும் அல்லது அதிகாரமளிக்கும் முறையிலும் அவர் பணிக்கும் அல்லது அதிகாரமளிக்கும் நபர்களாலும் எழுதிக்கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்த அரசமைப்பைப் பொறுத்து அல்லது இந்திய அரசாங்கம் தொடர்பாக இதற்குமுன்பு செல்லாற்றலில் இருந்துவந்த சட்டம் ஒன்றைப் பொறுத்து செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் அல்லது எழுதிக்கொடுக்கப்பட்ட காப்பீடு எதற்காகவும், குடியரசுத்தலைவரோ ஆளுநரோ தம் சொந்த முறையில் பொறுப்படைவுற்றவர் ஆகார்; மேலும், அவர்களில் எவர் சார்பாகவும் எனக் குறித்து அத்தகைய ஒப்பந்தம் அல்லது காப்பீடு எதனையும் செய்துகொள்கின்ற அல்லது எழுதிக்கொடுக்கின்ற எவரும்கூட, அதற்காகத் தம் சொந்தமுறையில் பொறுப்படைவுற்றவர் ஆகார்.

300. உரிமைவழக்குகளும், நடவடிக்கைகளும்:

(1) இந்திய ஒன்றியத்தின் பெயரால் இந்திய அரசாங்கம் வழக்கிடலாம் அல்லது வழக்கிடப்படலாம்; ஒரு மாநிலத்தின் பெயரால் அந்த மாநில அரசாங்கம் வழக்கிடலாம் அல்லது வழக்கிடப்படலாம்; மேலும், இந்த அரசமைப்பு இயற்றப்படாதிருப்பின், எந்நேர்வுகளில் இந்தியத் தன்னாட்சியமும் நேரிணையான மாகாணங்களும் அல்லது நேரிணையான இந்தியக் குறுநிலங்களும் தத்தம் அலுவற்பாடுகள் தொடர்பாக வழக்கிட்டிருக்கலாமோ வழக்கிடப்பட்டிருக்கலாமோ அத்தகைய நேர்வுகளில், இந்த அரசமைப்பினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் பயன்திறன் வழி இயற்றப்பட்ட நாடாளுமன்றச் சட்டத்தினால் அல்லது அத்தகைய மாநிலச் சட்டமன்றச் சட்டத்தினால் செய்யப்படும் வகையங்கள் எவற்றிற்கும் உட்பட்டு, இந்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் வழக்கிடலாம் அல்லது வழக்கிடப்படலாம்.

(2) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையின்போது—

(அ) இந்தியத் தன்னாட்சியத்தை ஒரு தரப்பினராகக் கொண்ட சட்ட நடவடிக்கைகள் எவையும் முடிவுறா நிலையில் இருக்குமாயின், அந்த நடவடிக்கைகளில் இந்தியத் தன்னாட்சியத்திற்குப் பதிலாக இந்திய ஒன்றியம் சேர்க்கப்பட்டதாகக் கொள்ளப்படும்; மேலும்,

(ஆ) ஒரு மாகாணத்தை அல்லது ஓர் இந்தியக் குறுநிலத்தை ஒரு தரப்பினராகக் கொண்ட சட்ட நடவடிக்கைகள் எவையும் முடிவுறாநிலையில் இருக்குமாயின், அந்த நடவடிக்கைகளில் அந்த மாகாணத்திற்கு அல்லது இந்தியக் குறுநிலத்திற்குப் பதிலாக நேரிணையான மாநிலம் சேர்க்கப்பட்டதாகக் கொள்ளப்படும்.

அத்தியாயம் IV

சொத்து பொறுத்த உரிமை

300அ. சட்டம் அளிக்கும் அதிகாரத்தின்படி அல்லாமல் எவரிடமிருந்தும் சொத்து பறிக்கப்படுதல் ஆகாது :

சட்டம் அளிக்கும் அதிகாரத்தின்படி அல்லாமல், எவரிடமிருந்தும் அவரது சொத்து பறிக்கப்படுதல் ஆகாது.

பகுதி XIII

இந்திய ஆட்சிநிலவரைக்குள் வணிகம், வாணிபம் மற்றும் தொடர்புறவுகள்

301. வணிகம், வாணிபம், தொடர்புறவுகள் ஆகியவற்றிற்குத் தடையின்மை :

இந்தப் பகுதியின் பிற வகையங்களுக்கு உட்பட்டு, இந்திய ஆட்சிநிலவரை எங்கணும் வணிகம், வாணிபம், தொடர்புறவுகள் ஆகியவை தடையின்றி நிகழ்வுறும்.

302. வணிகம், வாணிபம், தொடர்புறவுகள் ஆகியவற்றின் மீது கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம் :

ஒரு மாநிலத்திற்கும் மற்றொன்றிற்கும் இடையே அல்லது இந்திய ஆட்சிநிலவரைப்பகுதி எதற்குள்ளும் வணிகம், வாணிபம் அல்லது தொடர்புறவுகள் நிகழ்வுறுவதற்கான சுதந்திரத்தின்மீது, பொது நலனுக்காகத் தேவைப்படும் கட்டுப்பாடுகளை நாடாளுமன்றம் சட்டத்தினால் விதிக்கலாம்.

303. வணிகம், வாணிபம், தொடர்பாக ஒன்றியம், மாநிலங்கள் ஆகியவற்றிற்குள்ள சட்டமியற்றும் அதிகாரங்கள் மீது கட்டுப்பாடுகள் :

(1) 302ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், ஏழாம் இணைப்புப்பட்டியலிலுள்ள பட்டியல்களில் எதிலும் வணிகம் மற்றும் வாணிபம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காரணமாகக் கொண்டு ஒரு மாநிலத்திற்கு மற்றொன்றைவிட முன்னுரிமை எதனையும் அளிக்கிற அல்லது அளிப்பதற்கு அதிகாரம் வழங்குகிற அல்லது ஒரு மாநிலத்திற்கும் மற்றொன்றிற்கும் இடையே வேற்றுமை எதனையும் காட்டுகிற அல்லது காட்டுவதற்கு அதிகாரம் வழங்குகிற சட்டம் எதனையும் இயற்றுவதற்கு நாடாளுமன்றமோ மாநிலம் ஒன்றின் சட்டமன்றமோ அதிகாரம் உடையது ஆகாது.

(2) இந்திய ஆட்சிநிலவரைப் பகுதி எதிலும் சரக்குகளின் பற்றாக்குறையினால் எழுகின்ற ஒரு நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு முன்னுரிமை அளிப்பது அல்லது அளிப்பதற்கு அதிகாரம் வழங்குவது அல்லது வேற்றுமை எதனையும் காட்டுவது அல்லது காட்டுவதற்கு அதிகாரம் வழங்குவது அவசியமானது என்று சட்டம் எதுவும் விளம்புமாயின், அவ்வாறு செய்கிற அத்தகைய சட்டத்தை நாடாளுமன்றம் இயற்றுவதற்கு, (1)ஆம் கூறிலுள்ள எதுவும் தடையுறு ஆவதில்லை.

304. மாநிலங்களிடையே வணிகம், வாணிபம், தொடர்புறவுகள் ஆகியவற்றின் மீது கட்டுப்பாடுகள்:

301ஆம் உறுப்பில் அல்லது 303ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும் மாநிலம் ஒன்றின் சட்டமன்றம், சட்டத்தினால்—

(அ) பிற மாநிலங்களிலிருந்து அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சரக்குகளின்மீது, அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் சரக்குகளுக்கும் அவ்வாறு தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் சரக்குகளுக்கும் இடையே எவ்வகையிலும் வேற்றுமை காட்டாதவாறு, அந்த மாநிலத்தில் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் அதுபோன்ற சரக்குகள் மீது விதிக்கப்படும் வரி எதனையும் விதிக்கலாம்; மற்றும்

(ஆ) அந்த மாநிலத்துடன் அல்லது அந்த மாநிலத்திற்குள் நிகழ்வுறும் வணிகம், வாணிபம் அல்லது தொடர்புறவு ஆகியவற்றிற்கான சுதந்திரத்தின்மீது, பொதுநலன்கருதி வேண்டுறும் தகுமான கட்டுப்பாடுகளை விதிக்கலாம்:

வரம்புரையாக: (ஆ) கூறின் நோக்கங்களுக்காக சட்டமுன்வடிவு அல்லது திருத்தம் எதுவும், குடியரசுத்தலைவரின் முன்ஒப்பளிப்பின்றி, மாநிலம் ஒன்றின் சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படுதலோ கொண்டுவரப்படுதலோ ஆகாது.

305. நிலவுறும் சட்டங்களுக்கும் மாநிலத்தின் ஒரு தனியுரிமைகளுக்கு வகை செய்யும் சட்டங்களுக்கமான காப்புரை:

301, 303 ஆகிய உறுப்புகளில் உள்ள எதுவும், குடியரசுத்தலைவர் ஆணையின்வழி பிறவாறு பணிக்கும் அளவுக்கன்றி, நிலவுறும் சட்டம் ஒன்றின் வகையங்களைப் பாதித்தல் ஆகாது; மேலும், 301 ஆம் உறுப்பிலுள்ள எதுவும், 19ஆம் உறுப்பின் (6) ஆம் கூறின் (ii) ஆம் உட்கூறில் சுட்டப்பட்ட பொருட்பாடு எதற்கும் தொடர்புடையதாய் இருக்கிற அளவிற்கு, 1955ஆம் ஆண்டு அரசமைப்பு (நான்காம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்பு இயற்றப்பட்ட சட்டம் எதனின் செயற்பாட்டையும் பாதித்தலுமில்லை; அத்தகைய பொருட்பாடு தொடர்பாக நாடாளுமன்றம் அல்லது மாநிலம் ஒன்றின் சட்டமன்றம் சட்டம் எதனையும் இயற்றுவதற்குத் தடையுறு ஆவதுமில்லை.

[1][306. * * * *]

307. 301 முதல் 304 வரையிலுள்ள உறுப்புகளின் நோக்கங்களை நிறைவேற்று வதற்காக அதிகாரஅமைப்பை ஏற்படுத்துதல்:

301, 302, 303, 304 ஆகிய உறுப்புகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, நாடாளுமன்றம் சட்டத்தினால், தான் பொருத்தமெனக் கருதும் அதிகாரஅமைப்பை ஏற்படுத்தி, அவ்வாறு ஏற்படுத்திய அதிகாரஅமைப்பிற்குத் தான் தேவையெனக் கருதுகின்ற அதிகாரங்களையும் கடமைகளையும் வழங்கலாம்.

---

1. 1956ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் 29ஆம் பிரிவினாலும், இணைப்புப்பட்டியலினாலும் நீக்கறவு செய்யப்பட்டது.

பகுதி XIV

ஒன்றியம், மாநிலங்கள் ஆகியவற்றின் கீழுள்ள பணியங்கள்

அத்தியாயம் I

பணியங்கள்

308. பொருள்கோள் :

இந்தப் பகுதியில் தறுவாயின் தேவை வேறானாலன்றி, ''மாநிலம்'' என்னும் சொல், ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தை உள்ளடக்குவதில்லை.

309. ஒன்றியத்திற்கு அல்லது ஒரு மாநிலத்திற்குப் பணிபுரிவதற்காக ஆளெடுத்தலும் பணிவரைக்கட்டுகளும்:

இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு உரிய சட்டமன்றத்தின் சட்டங்கள், ஒன்றியத்தின் அல்லது மாநிலம் ஒன்றின் அலுவற்பாடுகள் தொடர்பான அரசுப் பணியங்களுக்கும் பணியடைகளுக்கும் ஆளெடுப்பதையும் அவற்றிற்கு அமர்த்தப்பெறுபவர்களின் பணி வரைக்கட்டுகளையும் ஒழுங்குறுத்தலாம்:

வரம்புரையாக: ஒன்றியத்து அலுவற்பாடுகள் தொடர்பான பணியங்கள், பணியடைகள் ஆகியவை பொறுத்து, குடியரசுத்தலைவர் அல்லது அவர் குறிப்பிடும் ஒருவர், மாநிலம் ஒன்றின் அலுவற்பாடுகள் தொடர்பான பணியங்கள், பணியடைகள் ஆகியவை பொறுத்து அந்த மாநிலத்தின் ஆளுநர் அல்லது அவர் குறிப்பிடும் ஒருவர், இந்த உறுப்பின்படி உரிய சட்டமன்றத்தின் சட்டத்தாலோ அதன் வழியாலோ அகற்கென வகைசெய்யப்படும் வரையில், அந்தப் பணியங்களுக்கும் பணியடைகளுக்கும் ஆளெடுப்பதையும் அவற்றிற்கு அமர்த்தப்பெறுபவர்களின் பணிவரைக்கட்டுகளையும் ஒழுங்குறுத்தும்விதிகளைச் செய்வதற்கு அதிகாரம் உடையவர் ஆவார்; மேலும், அவ்வாறு செய்யப்படும் விதிகள் எவையும், அத்தகைய சட்டம் ஒன்றின் வகையங்களுக்கு உட்பட்டுச் செல்திறம் உடையன ஆகும்.

310. ஒன்றியத்திற்கு அல்லது ஒரு மாநிலத்திற்குப் பணிபுரிபவர்களின் பதவியுரிமைக் காலம் :

(1) இந்த அரசமைப்பினால் தெரிநிலையாக வகைசெய்யப்பட்டுள்ளவாறு தவிர, பாதுகாப்புப் படைப் பணியம் ஒன்றிலோ ஒன்றியத்தின் குடியியல் பணியம் ஒன்றிலோ, அனைத்திந்தியப் பணியம் ஒன்றிலோ உறுப்பினராக இருக்கிற அல்லது பாதுகாப்புப்படை தொடர்பான பணியடை எதனையும் அல்லது ஒன்றியத்தின் கீழுள்ள குடியியல் பணியடை எதனையும் வகித்து வருகிற ஒவ்வொருவரும், குடியரசுத்தலைவர் விழையுமளவும் பதவி வகிப்பார்; மேலும், மாநிலம் ஒன்றின் குடியியல் பணியம் ஒன்றில் உறுப்பினராய் இருக்கிற அல்லது ஒரு மாநிலத்தின் கீழுள்ள குடியியல் பணியடை ஒன்றை வகித்து வருகிற ஒவ்வொருவரும், அந்த மாநிலத்தின் ஆளுநர் விழையுமளவும் பதவி வகிப்பார்.

(2) ஒன்றியத்தின் கீழுள்ள அல்லது ஒரு மாநிலத்தின் கீழுள்ள குடியியல் பணியடை ஒன்றை வகித்துவரும் ஒருவர், குடியரசுத்தலைவர் அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த மாநிலத்தின் ஆளுநர் விழையுமளவும் பதவி வகிப்பவராக இருந்தபோதிலும், சிறப்புத் தகுதிப்பாடுகள் கொண்ட ஒருவரின் பணியினைப் பெறுவது தேவையெனக் குடியரசுத்தலைவர் அல்லது, நேர்வுக்கேற்ப, ஆளுநர் கருதி, பாதுகாப்புப் படைப் பணியம் ஒன்றிலோ அனைத்திந்தியப் பணியம் ஒன்றிலோ ஒன்றியத்தின் அல்லது மாநிலம் ஒன்றின் குடியியல் பணியம் ஒன்றிலோ உறுப்பினராக இல்லாத ஒருவரை, ஓர் ஒப்பந்தத்தின்படி அத்தகைய பணியடையை வகிப்பதற்காக இந்த அரசமைப்பின்கீழ் அமர்த்துமிடத்து ஒத்துக்கொண்டுள்ள ஒரு காலஅளவு கழிவுறுவதற்கு முன்பே அப்பணியடை ஒழிக்கப்பட்டுவிடுகிறது அல்லது அவருடைய நெறிதவறிய நடத்தை எதற்கும் தொடர்பில்லாத காரணங்களுக்காக அப்பணியடையை விட்டகலும்படி அவர் வேண்டுறுத்தப்படுகிறார் எனில், அவருக்குச் சரியீடு கொடுப்பதற்கு அந்த ஒப்பந்தம் வகை செய்யலாம்.

311. ஒன்றியத்தின் அல்லது ஒரு மாநிலத்தின்கீழ் குடியியல் சார்ந்த வேலைக்கு அமர்த்தப்பெற்றுள்ளவர்களை பணிநீக்கமோ பணியறவோ பணியிறக்கமோ செய்தல் :

(1) ஒன்றியத்தின் குடியியல் பணியம் ஒன்றின் அல்லது அனைத்திந்தியப் பணியம் ஒன்றின் அல்லது ஒரு மாநிலக் குடியியல் பணியம் ஒன்றின் உறுப்பினராக இருக்கிற அல்லது ஒன்றியத்தின்கீழோ ஒரு மாநிலத்தின்கீழோ குடியியல் பணியடை ஒன்றை வகித்து வருகிற எவரும், அவரை அமர்த்திய அதிகாரஅமைப்பிற்குக் கீழமைந்துள்ள அதிகாரஅமைப்பினால் பணிநீக்கம் அல்லது பணியறவு செய்யப்படுதல் ஆகாது.

(2) மேற்கூறப்பட்ட எவரும், அவர்மீதான குற்றச்சார்த்துகளை அவருக்குத் தெரிவித்து, அந்தக் குற்றச்சார்த்துகளைப் பொறுத்து அவர் கூறுவதை, கேட்பதற்குத் தகுமான வாய்ப்பு நல்கி விசாரணை செய்த பின்பு தவிர, பணிநீக்கம் அல்லது பணியறவு அல்லது பணியிறக்கம் செய்யப்படுதல் ஆகாது:

வரம்புரையாக: அத்தகைய விசாரணைக்குப் பின்பு, தண்டனை எதுவும் விதிக்கக் கருதப்படுமிடத்து, அத்தகைய விசாரணையின்போது முன்னிடப்பட்ட சான்றின் அடிப்படையில் அத்தகைய தண்டனை விதிக்கப்படலாம்; மேலும், விதிக்கக் கருதியுள்ள தண்டனை குறித்துக் கூறிக்கொள்வதற்கு அவருக்கு வாய்ப்பு எதுவும் அளிக்கவேண்டிய தேவையில்லை:

மேலும் வரம்புரையாக: இந்தக் கூறு—

(அ) ஒருவரைக் குற்றச்சார்த்து ஒன்றின்மீது தண்டனைத்தீர்ப்புக்கு உள்ளாக்கிய அவருடைய நடத்தையின் அடிப்படையில் அவர் பணிநீக்கம் அல்லது பணியறவு அல்லது பணியிறக்கம் செய்யப்பட்டிருக்குமிடத்து; அல்லது

(ஆ) ஒருவரைப் பணிநீக்கம் அல்லது பணியறவு அல்லது பணியிறக்கம் செய்வதற்கு அதிகாரம் பெற்றுள்ள அதிகாரி, அத்தகைய விசாரணையை நடத்துவது, அவர் எழுதிப் பதிவுசெய்யவேண்டிய காரணம் எதனாலும் தகுமான அளவு நடைமுறையில் இயலாதது எனத் தெளிவுறக்காணுமிடத்து; அல்லது

(இ) அரசின் பாதுகாப்பு நலன்கருதி அத்தகைய விசாரணையை நடத்துவது உகந்ததன்று எனக் குடியரசுத்தலைவர் அல்லது, நேர்வுக்கேற்ப, ஆளுநர் தெளிவுறக் காணுமிடத்து

பொருந்துறுதல் ஆகாது.

(3) மேற்கூறப்பட்ட எவரையும் பொறுத்து (2) ஆம் கூறில் சுட்டப்பட்ட விசாரணையை நடத்துவது தகுமான அளவு நடைமுறையில் இயலுமா என்ற பிரச்சினை எழுமாயின், அதன்மீது அவரைப் பணிநீக்கம் அல்லது பணியறவு அல்லது பணியிறக்கம் செய்வதற்கு அதிகாரம் பெற்ற அதிகாரி செய்யும் முடிபே அறுதியானது ஆகும்.

312. அனைத்திந்தியப் பணியங்கள் :

(1) VI ஆம் பகுதியின் VI ஆம் அத்தியாயத்தில் அல்லது XI ஆம் பகுதியில் எது எவ்வாறிருப்பினும், ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் பொதுவான ஓர் அனைத்திந்திய நீதித்துறைப் பணியம் உள்ளடங்கலாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்திந்தியப் பணியங்களை உருவாக்குவது நாட்டின் நலனுக்குத் தேவையானது அல்லது உகந்தது என்று மாநிலங்களவை, வந்திருந்து வாக்களிக்கும் அதன் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட தீர்மானத்தின் வாயிலாக விளம்புமாயின், நாடாளுமன்றம் சட்டத்தினால் அவ்வாறே வகைசெய்யலாம்; மேலும், அது, இந்த அத்தியாயத்தின் பிற வகையங்களுக்கு உட்பட்டு, அத்தகைய பணியம் எதற்கும் ஆளெடுத்தல், அதற்கு அமர்த்தப்பெறுபவர்களின் பணிவரைக்கட்டுகள் ஆகியவற்றை ஒழுங்குறுத்தலாம்.

(2) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையில், இந்திய ஆட்சிப் பணியம் எனவும், இந்தியக் காவல்துறைப் பணியம் எனவும் வழங்கப்பட்டு வந்த பணியங்கள், இந்த உறுப்பின்படி நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட பணியங்களாகக் கொள்ளப்படும்.

(3). (1) ஆம் கூறில் சுட்டப்பட்ட அனைத்திந்திய நீதித்துறைப் பணியம் என்பது, 236 ஆம் உறுப்பில் பொருள்வரையறை செய்யப்பட்ட மாவட்ட நீதிபதியின் பதவிநிலைக்குக் குறைவான பணியடை எதனையும் உள்ளடக்காது.

(4) மேற்கூறப்பட்ட அனைத்திந்திய நீதித்துறைப் பணியத்தை உருவாக்குவதற்கு வகைசெய்யும் சட்டத்தில், அந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறம் அளிப்பதற்குத் தேவைப்படும் VI ஆம் பகுதியின் VI ஆம் அத்தியாயத்தைத் திருத்தம் செய்வதற்கான வகையங்கள் அடங்கியிருக்கலாம்; மேலும், அத்தகைய சட்டம் எதுவும், 368ஆம் உறுப்பினைப் பொறுத்தவரை, இந்த அரசமைப்பின் ஒரு திருத்தம் எனக் கொள்ளப்படுதல் ஆகாது.

312அ குறித்தசில பணியங்களிலுள்ள அலுவலர்களின் பணிவரைக்கட்டுகளை மாற்றுவதற்கு அல்லது முறித்தறவு செய்வதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம்:

(1) நாடாளுமன்றம் சட்டத்தினால்—

(அ) இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு, முடியரசின் இந்தியக் குடியியல் பணியம் ஒன்றிற்கு இந்தியாவிற்கான அமைச்சரால் அல்லது மன்றத்தமர் இந்தியாவிற்கான அமைச்சரால் அமர்த்தப்பெற்றிருந்து, 1972ஆம் ஆண்டு அரசமைப்பு (இருபத்தெட்டாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலையிலும் அதன் பின்பும், இந்திய அரசாங்கத்தின்கீழ் அல்லது மாநிலம் ஒன்றின்கீழ் பணியம் அல்லது பணியடை எதிலும் தொடர்ந்து பணிபுரிகின்றவர்களின் பணியூதியம், விடுப்பு, ஓய்வூதியம் ஆகியவை பொறுத்த பணிவரைக்கட்டுகளையும் ஒழுங்குநடவடிக்கைப் பொருட்பாடுகள் பொறுத்த உரிமைகளையும் பின்மேவுற அல்லது முன்மேவுறப் பொருந்துறுமாறு மாற்றலாம் அல்லது முறித்தறவு செய்யலாம்;

(ஆ) இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு, முடியரசின் இந்தியக் குடியியல் பணியம் ஒன்றிற்கு, இந்தியாவிற்கான அமைச்சரால் அல்லது மன்றத்தமர் இந்தியாவிற்கான அமைச்சரால் அமர்த்தப்பெற்றிருந்து, 1972ஆம் ஆண்டு அரசமைப்பு (இருபத்தெட்டாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்பு எப்போதேனும் பதவியிலிருந்து ஓய்வுபெற்றவர்களின் அல்லது பிறவாறு பணியத்திலிருந்து அகன்றவர்களின் ஓய்வூதியம் பொறுத்த பணிவரைக்கட்டுகளைப் பின்மேவுற அல்லது முன்மேவுறப் பொருந்துறுமாறு மாற்றலாம் அல்லது முறித்தறவு செய்யலாம் :

வரம்புரையாக: உச்ச நீதிமன்றத்தின் அல்லது உயர் நீதிமன்றம் ஒன்றின் தலைமை நீதிபதி அல்லது பிற நீதிபதி, இந்தியக் கணக்காயர்–தலைமைத் தணிக்கையர், ஒன்றியத்தின் அல்லது மாநிலம் ஒன்றின் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது பிற உறுப்பினர், அல்லது தலைமைத் தேர்தல் ஆணையர் பதவியை வகிக்கிற அல்லது வகித்திருக்கிற எவரையும் பொறுத்தவரை, அத்தகைய பணியடையில் அவர் அமர்த்தப்பெற்ற பின்பு அவருடைய பணிவரைக்கட்டுகளை இந்தியாவிற்கான அமைச்சரால் அல்லது மன்றத்தமர் இந்தியாவிற்கான அமைச்சரால் முடியரசின் இந்தியக் குடியியல் பணியம் ஒன்றிற்கு அமர்த்தப்பெற்றவராய் அவர் இருப்பதன் காரணமாக அப்பணிவரைக்கட்டுகள் அவருக்குப் பொருந்துறுவனவாக இருக்கும் அளவிற்குத் தவிர, அவருக்குப் பாதகமான வகையில் மாற்றுவதற்கு அல்லது முறித்தறவு செய்வதற்கு (அ) உட்கூறில் அல்லது (ஆ) உட்கூறில் உள்ள எதுவும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிப்பதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

(2) இந்த உறுப்பின்படி நாடாளுமன்றம் சட்டத்தினால் வகைசெய்துள்ள அளவிற்குத் தவிர (1)ஆம் கூறில் சுட்டப்பெற்றவர்களின் பணிவரைக்கட்டுகளை ஒழுங்குறுத்துவதற்கு இந்த அரசமைப்பின் பிற வகையம் எதன்படியும் சட்டமன்றத்திற்கு அல்லது பிற அதிகாரஅமைப்பு எதற்கும் உள்ள அதிகாரத்தை இந்த உறுப்பிலுள்ள எதுவும் பாதிப்பதில்லை.

(3). (அ). (1) ஆம் கூறில் சுட்டப்பெற்ற எவராலும் செய்துகொள்ளப்பட்ட அல்லது எழுதிக்கொடுக்கப்பட்ட இணக்கஒப்பந்தம், உடன்பாடு அல்லது அதுபோன்ற முறையாவணம் ஒன்றின் வகையம் எதிலிருந்தும் அல்லது அதன் மேற்குறிப்பு எதிலிருந்தும் எழுகிற அல்லது முடியரசின் இந்தியக் குடியியல் பணியம் ஒன்றில் அவர் அமர்த்தப்பெற்றது தொடர்பாகவோ இந்தியத் தன்னாட்சிய அரசாங்கத்தின்கீழ் அல்லது அதன் மாகாண அரசாங்கம் ஒன்றன்கீழ் பணியத்தில் அவர் தொடர்ந்து இருந்துவருவது தொடர்பாகவோ அத்தகையவருக்கு விடுக்கப்பட்ட மடல் எதிலிருந்தும் எழுகிற பூசல் ஒன்றையும்,

(ஆ) முதற்கண் இயற்றப்பட்டவாறான 314ஆம் உறுப்பின்படியான உரிமை, பொறுப்படைவு அல்லது கடமைப்பாடு எதனையும் குறித்த பூசல் ஒன்றையும்

பொறுத்து, உச்ச நீதிமன்றமும், பிற நீதிமன்றம் எதுவும் அதிகாரவரம்பு உடையன ஆகா.

(4) முதற்கண் இயற்றப்பட்டவாறான 314ஆம் உறுப்பில் அல்லது இந்த அரசமைப்பின் பிற வகையம் எதிலும் எது எவ்வாறிருப்பினும், இந்த உறுப்பின் வகையங்கள் செல்திறம் உடையன ஆகும்.

313. மாறும் இடைக்காலத்திற்கான வகையங்கள் :

இந்த அரசமைப்பின்படி இதன்பொருட்டுப் பிற வகையம் எதுவும் செய்யப்படும் வரையில், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு செல்லாற்றலில் இருந்து, இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்குப் பின்பும் ஓர் அனைத்திந்திய பணியமாகவோ ஒன்றியம் அல்லது மாநிலம் ஒன்றின் கீழுள்ள பணியமாகவோ பணியடையாகவோ தொடர்ந்து நீடிக்கின்ற அரசுப் பணியம் அல்லது பணியடை ஒன்றிற்குப் பொருந்துறும் சட்டங்கள் அனைத்தும், அவை இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு முரணாக இல்லாத அளவிற்குத் தொடர்ந்து செல்லாற்றலில் இருந்துவரும்.

[1][314. * * * *]

அத்தியாயம் – II

அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள்

315. ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள்:

(1) இந்த உறுப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, ஒன்றியத்திற்கென அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றும், ஒவ்வொரு மாநிலத்திற்கும் என அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றும் இருந்துவரும்.

(2) இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்கள் அந்த மாநிலங்களின் தொகுப்புக்கென ஒரே அரசுப் பணியாளர் தேர்வாணையம் இருந்துவர உடன்படலாம்; மேலும், அதற்கென, அந்த மாநிலங்கள் ஒவ்வொன்றின் சட்டமன்ற அவையினாலும் அல்லது ஈரவைகள் இருக்குமிடத்து, ஒவ்வோர் அவையினாலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படுமாயின், அந்த மாநிலங்களின் தேவைகளை நிறைவுறுத்தும் பொருட்டு (இந்த அத்தியாயத்தில் கூட்டு ஆணையம் என்று சுட்டப்படும்) மாநில அரசுப் பணியாளர் கூட்டுத் தேர்வாணையம் ஒன்றை அமைப்பதற்கு நாடாளுமன்றம், சட்டத்தினால் வகைசெய்யலாம்.

(3) மேற்கூறப்பட்ட சட்டம் எதுவும், அச்சட்டத்தின் நோக்கங்களைச் செல்திறப்படுத்துவதற்கு அவசியமான அல்லது உகந்ததான சார்வுறு மற்றும் விளைவுறு வகையங்களைக் கொண்டிருக்கலாம்.

---

[1] 1972ஆம் ஆண்டு அரசமைப்பு (இருபத்தெட்டாம் திருத்தம்) சட்டத்தின் 3ஆம் பிரிவினால் (29–8–1972 முதல் செல்திறம் பெறுமாறு) நீக்கறவு செய்யப்பட்டது.

(4) ஒன்றியத்திற்கான அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஒரு மாநிலத்தின் ஆளுநரால் அந்த மாநிலத்தின் தேவைகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் நிறைவுறுத்தும் பொருட்டுப் பணியாற்றக் கேட்டுகொள்ளப்படுமாயின், குடியரசுத்தலைவரின் ஒப்பேற்புடன் அவ்வாறு பணியாற்ற உடன்படலாம்.

(5) இந்த அரசமைப்பில் ஒன்றியத்திற்கான அரசுப் பணியாளர் தேர்வாணையம் அல்லது மாநிலம் ஒன்றின் அரசுப் பணியாளர் தேர்வாணையம் பற்றிய சுட்டுகைகள், தறுவாயின் தேவை வேறானாலன்றி, பிரச்சினையிலுள்ள குறிப்பிட்ட பொருட்பாடு பொறுத்து, ஒன்றியத்தின் அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த மாநிலத்தின் தேவைகளை நிறைவுறுத்தும் பொருட்டுப் பணிபுரியும் ஆணையத்தைக் குறிப்பிடும் சுட்டுகைகளாகப் பொருள்கொள்ளப்படும்.

316. உறுப்பினர்களை அமர்த்துதலும் அவர்களின் பதவிக்காலமும்:

(1) அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரும் பிற உறுப்பினர்களும், ஒன்றியத்து ஆணையத்தை அல்லது ஒரு கூட்டு ஆணையத்தைப் பொறுத்த வரை குடியரசுத் தலைவராலும், மாநிலம் ஒன்றின் ஆணையத்தைப் பொறுத்த வரை அந்த மாநிலத்தின் ஆளுநராலும் அமர்த்தப்பெறுவர்:

வரம்புரையாக: அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒவ்வொன்றின் உறுப்பினர்களில் கூடுமானவரையில் ஒரு பாதியினர், அவர்கள் முறையே அமர்த்தப்பெற்ற தேதிகளில் இந்திய அரசாங்கத்தின்கீழ் அல்லது மாநிலம் ஒன்றின் அரசாங்கத்தின்கீழ் குறைந்தது பத்தாண்டுகள் பதவி வகித்தவர்களாக இருத்தல் வேண்டும்; மேற்சொன்ன பத்தாண்டுக் காலஅளவைக் கணக்கிடுவதில், இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு, ஒருவர், முடியரசின்கீழ் இந்தியாவில் அல்லது இந்தியக் குறுநிலம் ஒன்றின் அரசாங்கத்தின்கீழ் பதவி வகித்த கால அளவையும் சேர்த்துத் கொள்ளுதல் வேண்டும்.

(1அ) ஆணையத்தின் தலைவர் பதவி காலியாகுமாயின் அல்லது இருத்தலின்மை காரணமாக அல்லது பிற காரணம் எதனாலும் அத்தலைவர் தம் பதவிக் கடமைகளைப் புரிய இயலாதிருப்பாராயின், காலியான அப்பதவிக்கு (1)ஆம் கூறின்படி அமர்த்தப்பெற்றவர், அப்பதவிக் கடமைகளை மேற்கொள்ளும் வரையில் அல்லது, நேர்வுக்கேற்ப, தலைவர் தம் பதவிக் கடமைகளை மீண்டும் மேற்கொள்ளும் வரையில், ஒன்றியத்து ஆணையத்தை அல்லது கூட்டு ஆணையம் ஒன்றைப் பொறுத்தவரை குடியரசுத்தலைவராலும் மாநில ஆணையம் ஒன்றைப் பொறுத்தவரை அந்த மாநிலத்தின் ஆளுநராலும் அதன்பொருட்டு அமர்த்தப்பெறும் அந்த ஆணையத்தின் பிற உறுப்பினர்களில் ஒருவர் அந்தக் கடமைகளைப் புரிந்து வருவார்.

(2) அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர் ஒருவர், தாம் பதவியை மேற்கொள்ளும் தேதியிலிருந்து ஆறு ஆண்டுக் காலத்திற்கு அல்லது ஒன்றியத்து ஆணையத்தைப் பொறுத்தவரை அறுபத்தைந்து வயதை எய்தும் வரையில், மாநில ஆணையம் ஒன்றை அல்லது கூட்டு ஆணையம் ஒன்றைப் பொறுத்தவரை அறுபத்திரண்டு வயதை எய்தும் வரையில், இவற்றில் எது முந்தியதோ அதுவரை, அப்பதவியை வகிப்பார்:

வரம்புரையாக:

(அ) அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர் ஒருவர், ஒன்றியத்து ஆணையத்தை அல்லது கூட்டு ஆணையத்தைப் பொறுத்தவரை குடியரசுத் தலைவருக்கும், மாநில ஆணையம் ஒன்றைப் பொறுத்தவரை அந்த மாநிலத்தின் ஆளுநருக்கும், தம் கையொப்பமிட்டு எழுத்துவழித் தெரிவித்துத் தம் பதவியை விட்டு விலகிக்கொள்ளலாம்;

(ஆ) அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர் ஒருவர், 317 ஆம் உறுப்பின் (1)ஆம் கூறில் அல்லது (3)ஆம் கூறில் வகை செய்யப்பட்டுள்ள முறையில் அவருடைய பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(3) அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினராகப் பதவி வகிக்கும் ஒருவர், தம் பதவிக்காலம் கழிவுறுவதன்மேல், அந்தப் பதவிக்கு மீண்டும் அமர்த்தப்பெறுவதற்குத் தகுமையற்றவர் ஆவார்.

317. ஓர் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர் ஒருவரைப் பணியறவு செய்தலும் தற்காலிகமாக நீக்குதலும் :

(1). (3) ஆம் கூறின் வகையங்களுக்கு உட்பட்டு, உச்ச நீதிமன்றம், தனக்குக் குடியரசுத் தலைவர் குறித்தனுப்புவதன்மீது 145ஆம் உறுப்பில் இதற்கென வகுக்கப்பட்ட நெறிமுறைக்கிணங்க விசாரணை நடத்தி, அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது பிற உறுப்பினர் ஒருவர் நெறிதிறம்பி நடந்துள்ளார் என்னும் காரணத்தின் அடிப்படையில் அவரைப் பணியறவு செய்யவேண்டும் என்று அறிக்கை அளிப்பதன்மேல் மட்டுமே, அத்தலைவர் அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய பிற உறுப்பினர், குடியரசுத் தலைவரின் ஆணையின்வழி பணியறவு செய்யப்பெறுவார்.

(2) ஆணையத்தின் தலைவரை அல்லது பிற உறுப்பினர் ஒருவரைப் பொறுத்து (1)ஆம் கூறின்படி உச்ச நீதிமன்றத்திற்கு குறித்தனுப்பப்பட்டிருந்து, அவ்வாறு குறித்தனுப்பப்பட்டதன்மீது உச்ச நீதிமன்றம் அளிக்கும் அறிக்கையைக் குடியரசுத்தலைவர் பெற்று, அதன்மீது ஆணை பிறப்பிக்கும் வரை, ஒன்றியத்தின் ஆணையத்தையோ ஒரு கூட்டு ஆணையத்தையோ சார்ந்தவராக அவர் இருப்பாராயின், குடியரசுத்தலைவரும் மாநில ஆணையம் ஒன்றைச் சார்ந்தவராக அவர் இருப்பாராயின் ஆளுநரும், அவரைப் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கிவைக்கலாம்.

(3). (1) ஆம் கூறில் எது எவ்வாறிருப்பினும், அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது பிற உறுப்பினர் ஒருவர்—

(அ) நொடித்துப்போனவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டிருப்பாராயின்; அல்லது

(ஆ) தம் பதவிக்காலத்தின்போது, தம் பதவிக்கடமைகளுக்குப் புறம்பாக ஊதியம் பெறும் வேலை எதிலும் ஈடுபடுவாராயின்; அல்லது;

(இ) குடியரசுத்தலைவரின் கருத்தின்படி, மனம் அல்லது உடல் தளர்ச்சி காரணமாகப் பதவியில் தொடர்ந்திருப்பதற்குத் தகுதியற்றவராக இருப்பாராயின், அத்தலைவரை அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய பிற உறுப்பினரைக் குடியரசுத்தலைவர் ஆணையின்வழி பணியறவு செய்யலாம்.

(4) அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது பிற உறுப்பினர் எவரும், கூட்டுருமமாகப் பதிவுசெய்யப்பட்ட நிறுமம் ஒன்றின் உறுப்பினர் என்ற வகையிலும், அந்த நிறுமத்தின் பிற உறுப்பினர்களோடு சேர்ந்து பொதுவான வகையிலும் அல்லாமல் பிற வகையில் இந்திய அரசாங்கத்தால் அல்லது மாநிலம் ஒன்றின் அரசாங்கத்தால் அல்லது அதன் சார்பில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அல்லது உடன்பாடு எதிலும் எவ்வகையிலேனும் தொடர்பு அல்லது நலப்பற்று கொண்டவராக இருந்தாலும் அல்லது ஆகிவிட்டாலும் அல்லது அதன் ஆதாயத்தில் அல்லது அதிலிருந்து விளையும் நன்மை அல்லது பதவியூதியம் எதிலும் எவ்வகையிலேனும் பங்கு பெறுபவராக இருந்தாலும் (1)ஆம் கூறின் நோக்கங்களைப் பொறுத்தவரை, அவர் நெறிதிறம்பிய நடத்தை என்னும் குற்றம் செய்ததாகக் கொள்ளப்பெறுவார்.

318. ஆணையத்தின் உறுப்பினர்கள், பணியாளர் தொகுதியினர் ஆகியோருடைய பணிவரைக்கட்டுகளைக் குறித்து ஒழுங்குறுத்தும்விதிகளை வகுப்பதற்குள்ள அதிகாரம் :

ஒன்றியத்து ஆணையத்தை அல்லது ஒரு கூட்டு ஆணையத்தைப் பொறுத்தவரை குடியரசுத்தலைவரும், மாநிலம் ஒன்றின் ஆணையத்தைப் பொறுத்தவரை அந்த மாநிலத்தின் ஆளுநரும், ஒழுங்குறுத்தும்விதிகளின்வழி—

(அ) அவ்வாணையத்து உறுப்பினர்களின் எண்ணிக்கையையும், அவர்களுடைய பணிவரைக்கட்டுகளையும் தீர்மானிக்கலாம்; மேலும்

(ஆ) அவ்வாணையத்துப் பணியாளர் தொகுதியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும், அவர்களுடைய பணிவரைக்கட்டுகளையும் பொறுத்து வகைசெய்யலாம்:

வரம்புரையாக: அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர் ஒருவரின் பணிவரைக்கட்டுகள் அவர் அமர்த்தப்பெற்ற பின்பு அவருக்குப் பாதகமான வகையில் மாற்றப்படுதல் ஆகாது.

319. ஆணையத்தின் உறுப்பினர்கள் அத்தகைய உறுப்பினர்களாக இருப்பது அற்றுப்போன பின்பு, பிற பதவிகள் வகிப்பது குறித்த தடை :

பதவி வகிப்பது அற்றுப்போன பின்பு—

(அ) ஒன்றியத்து அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், இந்திய அரசாங்கத்தின் கீழோ மாநிலம் ஒன்றின் அரசாங்கத்தின் கீழோ மேற்கொண்டு வேலையில் அமர்த்தப் பெறுவதற்குத் தகுமையற்றவர் ஆவார்;

(ஆ) மாநிலம் ஒன்றின் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், ஒன்றியத்தின் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராகவோ அதன் பிற உறுப்பினர் ஒருவராகவோ பிறிதொரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராகவோ அமர்த்தப் பெறுவதற்குத் தகுமையுடையவர் ஆவார்; ஆனால் அவர், இந்திய அரசாங்கத்தின் கீழோ மாநிலம் ஒன்றின் அரசாங்கத்தின் கீழோ பிற வேலை எதிலும் அமர்த்தப்பெறுவதற்குத் தகுமையுடையவர் ஆகார்.

(இ) ஒன்றியத்து அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரல்லாத பிற உறுப்பினர் ஒருவர், ஒன்றியத்து அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராகவோ மாநிலம் ஒன்றின் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராகவோ அமர்த்தப்பெறுவதற்குத் தகுமையுடையவர் ஆவார்; ஆனால், அவர், இந்திய அரசாங்கத்தின் கீழோ மாநில அரசாங்கம் ஒன்றின் கீழோ பிற வேலை எதிலும் அமர்த்தப் பெறுவதற்குத் தகுமையுடையவர் ஆகார்.

(ஈ) மாநிலம் ஒன்றின் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரல்லாத பிற உறுப்பினர் ஒருவர், ஒன்றியத்து அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராகவோ பிற உறுப்பினர் ஒருவராகவோ அந்த மாநிலத்தின் அல்லது பிறிதொரு மாநிலத்தின் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராகவோ அமர்த்தப்பெறுவதற்குத் தகுமையுடையவர் ஆவார்; ஆனால், அவர், இந்திய அரசாங்கத்தின் கீழோ மாநில அரசாங்கம் ஒன்றின் கீழோ பிறவேலை எதிலும் அமர்த்தப்பெறுவதற்குத் தகுமையுடையவர் ஆகார்.

320. அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் செயற்பணிகள் :

(1) ஒன்றியத்துப் பணியங்களிலும் மாநிலத்துப் பணியங்களிலும் அமர்த்தப் பெறுவதற்கான தேர்வுகளை நடத்துவது, முறையே, ஒன்றியம், மாநிலம் ஆகியவற்றின் அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் கடமை ஆகும்.

(2) சிறப்புத் தகுதிப்பாடுகள் கொண்டுள்ள வேட்புநர்கள் தேவைப்படும் பணியங்கள் எவற்றிற்கேனும் கூட்டாக ஆளெடுக்கும் திட்டங்களை உருவாக்குவதிலும் செயற்படுத்துவதிலும் உதவிபுரியுமாறு இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்கள் கேட்டுக்கொள்ளுமாயின், அவ்வாறே அவற்றிற்கு உதவிபுரிதலும் ஒன்றியத்து அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடமை ஆகும்.

(3) (அ) குடியியல் பணியங்கள் குடியியல் பணியடைகள் ஆகியவற்றிற்கு ஆளெடுக்கும் முறைகள் தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகள் பற்றியும்,

(ஆ) குடியியல் பணியங்கள், பணியடைகள் ஆகியவற்றில் அமர்த்துவதிலும் ஒரு பணியத்திலிருந்து மற்றொன்றுக்குப் பதவி உயர்வுகள், மாற்றங்கள் செய்வதிலும் பின்பற்றப்பட வேண்டிய நெறிகள் பற்றியும், அத்தகைய அமர்த்துகைகள், பதவி

(இ) இந்திய அரசாங்கத்தின்கீழ் அல்லது மாநில அரசாங்கம் ஒன்றின்கீழ் குடியியல் பணிபுரியும் ஒருவரைப் பாதிக்கும் ஒழுங்குக்கட்டுப்பாட்டுப் பொருட்பாடுகள் தொடர்பான பொது விண்ணப்பங்கள், மனுக்கள் உள்ளடங்கலாக, அத்தகைய பொருட்பாடுகள் அனைத்தைப் பற்றியும்,

(ஈ) இந்திய அரசாங்கத்தின்கீழ் அல்லது மாநில அரசாங்கம் ஒன்றின்கீழ் அல்லது முடியரசின்கீழ் இந்தியாவில் அல்லது இந்தியக் குறுநில அரசாங்கம் ஒன்றின்கீழ் குடியியல் பணிபுரிகின்ற அல்லது பணிபுரிந்திருக்கிற ஒருவர், தம் கடமையை நிறைவேற்றுகையில், செய்த அல்லது செய்ததாகக் கருதப்படும் செயல்கள் பொறுத்து அவர்மீது தொடரப்பட்ட சட்டநடவடிக்கைகளில் எதிர்வாதம் செய்தவகையில் தாம் செய்ய நேரிட்ட செலவடை எதனையும், இந்தியத் திரள் நிதியத்திலிருந்து அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் திரள் நிதியத்திலிருந்து வழங்கவேண்டுமென்று அவரால் அல்லது அவரைப் பொறுத்துச் செய்யப்படும் கோரிக்கை எதனைப் பற்றியும்,

(உ) இந்திய அரசாங்கத்தின்கீழ் அல்லது மாநிலம் ஒன்றின் அரசாங்கத்தின்கீழ் அல்லது முடியரசின்கீழ் இந்தியாவில் அல்லது இந்தியக் குறுநில அரசாங்கம் ஒன்றின்கீழ் குடியியல் பணிபுரிந்தபோது தமக்கு விளைந்த கேடுகள் பொறுத்து ஓய்வூதியம் அளிப்பதற்கான கோரிக்கை எதனைப் பற்றியும், அத்தகைய அளிப்பு எதனின் தொகை குறித்த பிரச்சனை எதனைப்பற்றியும்

ஒன்றியத்து அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை அல்லது, நேர்வுக்கேற்ப, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தைக் கலந்தாய்வு செய்தல் வேண்டும்: மேலும், தங்களுக்கு அவ்வாறு குறித்தனுப்பப்பட்ட பொருட்பாடு எதன் மீதும், குடியரசுத்தலைவர் அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த மாநிலத்தின் ஆளுநர் தங்களுக்குக் குறித்தனுப்பும் பிற பொருட்பாடு எதன்மீதும் தேர்வுரை வழங்குவது அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடமை ஆகும்:

வரம்புரையாக: அனைத்திந்தியப் பணியங்களைப் பொறுத்தும், ஒன்றியத்தின் அலுவற்பாடுகள் தொடர்பான பிற பணியங்கள், பணியடைகள் இவற்றைப் பொறுத்தும் குடியரசுத்தலைவரும், மாநிலம் ஒன்றின் அலுவற்பாடுகள் தொடர்பான பிற பணியங்கள், பணியடைகள் இவற்றைப் பொறுத்து ஆளுநரும் பொதுவியலான அல்லது குறிப்பிட்ட வகையான நேர்வில் அல்லது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் எந்தெந்தப் பொருட்பாடுகள் பற்றி அரசுப் பணியாளர் தேர்வாணையத்தைக் கலந்தாய்வு செய்யத் தேவையில்லை என்பதைக் குறித்துரைக்கும் ஒழுங்குறுத்தும்விதிகளை வகுக்கலாம்.

(4). 16ஆம் உறுப்பின் (4)ஆம் கூறில் வகைசெய்யப்பட்டுள்ளதை எந்த முறையில் நிறைவேற்றலாம் என்பதைப் பொறுத்தும், 335ஆம் உறுப்பின் வகையங்களுக்கு எந்த முறையில் செல்திறமளிக்கலாம் என்பதைப் பொறுத்தும், அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றைக் கலந்தாய்வு செய்தல் வேண்டும் என (3)ஆம் கூறிலுள்ள எதுவும் வேண்டுறுத்துதல் ஆகாது.

(5) குடியரசுத்தலைவரால் அல்லது மாநிலம் ஒன்றின் ஆளுநரால் (3)ஆம் கூறுக்கான வரம்புரையின்படி செய்யப்பட்ட ஒழுங்குறுத்தும் விதிகள் அனைத்தும், அவை செய்யப்பட்ட பின்பு பதினான்கு நாட்களுக்குக் குறையாமல், கூடுமான விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலச் சட்டமன்ற அவையின் அல்லது ஒவ்வோர் அவையின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும், அந்த ஒழுங்குறுத்தும் விதிகள், அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடரின்போது நாடாளுமன்றத்தின் ஈரவைகளும் அல்லது அந்த மாநிலச் சட்டமன்றத்தின் அவை அல்லது ஈரவைகளும் நீக்கறவு அல்லது திருத்தம் வாயிலாகச் செய்யும் மாற்றமைவுகளுக்கு உட்பட்டவையாக இருக்கும்.

321. அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் செயற்பணிகளை விரிவாக்குவதற்கான அதிகாரம் :

நாடாளுமன்றத்தால் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலம் ஒன்றின் சட்ட மன்றத்தால் இயற்றப்படும் ஒரு சட்டம், ஒன்றியத்தின் அல்லது மாநிலம் ஒன்றின் பணியங்களைப் பொறுத்தும், உள்ளாட்சி அதிகாரஅமைப்பு அல்லது சட்டத்தினால் அமைக்கப்பட்ட கூட்டுருமக்குழுமம் ஒன்றின் அல்லது அரசு நிறுவனம் ஒன்றின் பணியங்களைப் பொறுத்துங்கூட, ஒன்றியத்து அரசுப் பணியாளர் தேர்வாணையம் அல்லது மாநிலத்து அரசுப் பணியாளர் தேர்வாணையம் கூடுதலாகச் செயற்பணிகளை ஆற்றுவதற்கு வகைசெய்யலாம்.

322. அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் செலவுகள் :

ஒன்றியத்து அல்லது மாநிலம் ஒன்றின் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர்களுக்கு அல்லது பணியாளர் தொகுதிக்கு அல்லது அவர்கள் தொடர்பாக வழங்கப்படும் வரையூதியங்கள், படித்தொகைகள், ஓய்வூதியங்கள் உள்ளடங்கலான, அவ்வாணையத்தின் செலவுகள், இந்தியத் திரள் நிதியத்தின் மீது அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த மாநிலத் திரள் நிதியத்தின்மீது சார்த்தப்படும்.

323. அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் அறிக்கைகள்:

(1) ஒன்றியத்து ஆணையம் செய்த பணியைப்பற்றிய ஓர் அறிக்கையை ஆண்டுதோறும் குடியரசுத்தலைவரிடம் முன்னிடுவது அந்த ஆணையத்தின் கடமை ஆகும்; மேலும், அந்த அறிக்கையைப் பெற்றதன்மேல், குடியரசுத்தலைவர், அதன் ஒரு படியினை, ஆணையத்தின் தேர்வுரை ஏற்றுக்கொள்ளப்படாத நேர்வுகள், எவையேனுமிருப்பின், அந்நேர்வுகளில், அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படாததற்கான காரணங்களை விளக்கும் விவரக்குறிப்புடன் சேர்த்து, நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கும்படி செய்வார்.

(2) மாநிலம் ஒன்றின் ஆணையம் செய்த பணியைப் பற்றிய ஓர் அறிக்கையை ஆண்டுதோறும் அந்த மாநிலத்தின் ஆளுநரிடம் முன்னிடுவது அந்த ஆணையத்தின் கடமை ஆகும்; மேலும், ஒரு கூட்டு ஆணையம் எந்த மாநிலங்களின் தேவைகளை நிறைவுறுத்தும் பொருட்டுப் பணிபுரிகிறதோ அந்த மாநிலங்கள் ஒவ்வொன்றின் ஆளுநரிடமும், அந்த மாநிலம் தொடர்பாக அந்த ஆணையம் செய்த பணியைப் பற்றிய ஓர் அறிக்கையை ஆண்டுதோறும் முன்னிடுவது அந்த ஆணையத்தின் கடமை ஆகும்; அந்நேர்வுகளில் எதிலும், ஆளுநர், அந்த அறிக்கையைப் பெற்றதன் பின்பு, அதன் ஒரு படியினை, ஆணையத்தின் தேர்வுரை ஏற்றுக்கொள்ளப்படாத நேர்வுகள், எவையேனுமிருப்பின், அந்நேர்வுகளில், அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படாததற்கான காரணங்களை விளக்கும் விவரக்குறிப்புடன் சேர்த்து, அந்த மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்கும்படி செய்வார்.

பகுதி XIV அ

தீர்ப்பாயங்கள்

323அ. நிருவாகப்பணித் தீர்ப்பாயங்கள் :

(1) ஒன்றியத்தின் அல்லது மாநிலம் ஒன்றின் அலுவற்பாடுகளுடனோ இந்திய ஆட்சிநிலவரைக்குள் உள்ள அல்லது இந்திய அரசாங்கத்தின் கட்டாள்கையிலுள்ள உள்ளாட்சி அல்லது பிற அதிகாரஅமைப்பு ஒன்றின் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அதன் கட்டாள்கையிலுள்ள கூட்டுருமம் ஒன்றின் அலுவற்பாடுகளுடனோ தொடர்புடைய அரசுப் பணியங்களுக்கும் பணியடைகளுக்கும் ஆளெடுத்தல், அவற்றிற்கு அமர்த்தப் பெற்றவர்களின் பணிவரைக்கட்டுகள் பொறுத்த பூசல்கள், முறையீடுகள் ஆகியவற்றை நிருவாகப்பணித் தீர்ப்பாயங்கள் நீதிமுறையில் தீர்ப்பதற்கு அல்லது விசாரணை செய்வதற்கு நாடாளுமன்றம் சட்டத்தினால் வகைசெய்யலாம்.

(2). (1) ஆம் கூறின்படி இயற்றப்படும் ஒரு சட்டம்–

(அ) ஒன்றியத்திற்கென ஒரு நிருவாகப்பணித் தீர்ப்பாயத்தையும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் எனவும் அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு எனவும் தனித்தனி நிருவாகப்பணித் தீர்ப்பாயத்தையும் நிறுவுவதற்கு வகைசெய்யலாம்;

(ஆ) மேற்சொன்ன தீர்ப்பாயங்கள் ஒவ்வொன்றும் செலுத்துவதாகும் அதிகாரவரம்பு (அவமதிப்புக்காகத் தண்டிக்கும் அதிகாரம் உள்ளடங்கலான) அதிகாரங்கள், அதிகாரஅடைவு ஆகியவற்றைக் குறித்துரைக்கலாம்;

(இ) மேற்சொன்ன தீர்ப்பாயங்கள் பின்பற்றவேண்டிய (காலவரம்பு, சான்று விதிகள் ஆகியவை பற்றிய வகையங்கள் உள்ளடங்கலான) நெறிமுறைக்கு வகைசெய்யலாம்;

(ஈ) 136ஆம் உறுப்பின்படி உச்ச நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம் நீங்கலாக, (1) ஆம் கூறில் சுட்டப்பட்ட பூசல்கள் அல்லது முறையீடுகள் பொறுத்துப் பிற நீதிமன்றங்கள் அனைத்திற்கும் உள்ள அதிகாரத்தை விலக்கிவிடலாம்.

(உ) அத்தகைய நிருவாகப்பணித் தீர்ப்பாயம் நிறுவப்படுவதை ஒட்டிமுன்பு ஒரு நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு எதிலும் முடிவுறாநிலையிலுள்ள வழக்குகள் எவற்றையும் அவற்றில் அடங்கும் உரிமைவழக்குகளுக்கோ நடவடிக்கைகளுக்கோ ஆதாரமான வழக்குமூலங்கள் மேற்சொன்ன தீர்ப்பாயம் நிறுவப்பட்டதன் பின்பு எழுந்திருந்திருக்குமாயின், எந்தத் தீர்ப்பாயத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டனவாக இருந்திருக்குமோ அந்தத் தீர்ப்பாயத்திற்கு மாற்றுவதற்கு வகைசெய்யலாம்;

(ஊ) 371ஈ உறுப்பின் (3) ஆம் கூறின்படி குடியரசுத்தலைவர் பிறப்பிக்கும் ஆணை எதனையும் நீக்கறவு அல்லது திருத்தம் செய்யலாம்;

(எ) அத்தகைய தீர்ப்பாயங்கள் திறம்படச் செயற்படுவதற்காகவும், அவற்றால் வழக்குகள் விரைவாகத் தீர்க்கப்படுவதற்காகவும், அவற்றின் ஆணைகளைச் செயலுறுத்துவதற்காகவும் தேவையென நாடாளுமன்றம் கருதும் (கட்டணங்கள் பற்றிய வகையங்கள் உள்ளடங்கலான) துணைவுறு, சார்வுறு மற்றும் விளைவுறு வகையங்களைக் கொண்டிருக்கலாம்.

(3) இந்த அரசமைப்பின் பிற வகையம் எதிலும் அல்லது நிகழுறு காலத்தில் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் எது எவ்வாறிருப்பினும், இந்த உறுப்பின் வகையங்களே செல்திறம் உடையன ஆகும்.

323ஆ. பிற பொருட்பாடுகளுக்கான தீர்ப்பாயங்கள் :

(1) உரிய சட்டமன்றம், (2) ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்டவையாகவும் தான் சட்டங்களியற்றுவதற்கு அதிகாரம் கொண்டுள்ளவையாகவும் உள்ள பொருட்பாடுகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் பொறுத்து எழும் பூசல்கள், முறையீடுகள் அல்லது குற்றச்செயல்கள் எவற்றையும், தீர்ப்பாயங்களால் நீதிமுறையில் தீர்ப்பதற்கு அல்லது விசாரணை செய்வதற்குச் சட்டத்தினால் வகைசெய்யலாம்:

(2). (1) ஆம் கூறில் சுட்டப்பட்டுள்ள பொருட்பாடுகள் பின்வருவனவாகும்:–

(அ) வரி எதனையும் விதித்தல், கணித்தல், ஈட்டுதல் மற்றும் செயலுறுத்துதல்:

(ஆ) அயல்நாட்டுச் செலாவணி, சுங்க எல்லைகளிடையே இறக்குமதியும் ஏற்றுமதியும்;

(இ) தொழில்துறை மற்றும் தொழிலாளர் பூசல்கள்;

(ஈ) 31அ உறுப்பில் பொருள்வரையறை செய்யப்பட்ட உரிமை நிலச்சொத்து எதனையும் அல்லது அதிலுள்ள உரிமைகள் எவற்றையும், அரசு கையகப்படுத்துதல் வாயிலாகவோ அத்தகைய உரிமைகள் எவற்றையும், அழித்தல் அல்லது மாற்றமைவு செய்தல் வாயிலாகவோ, வேளாண் நிலத்திற்கு உச்சவரம்பு விதிப்பதன் வாயிலாக அல்லது பிற வழி எதனாலும் செய்யப்படும் நிலச்சீர்திருத்தங்கள்;

(உ) நகரகச் சொத்தின்மீது உச்சவரம்பு விதித்தல்;

(ஊ) 329, 329அ உறுப்புகளில் சுட்டப்பட்டுள்ள பொருட்பாடுகள் நீங்கலாக நாடாளுமன்ற ஈரவைகளில் எதற்கும் அல்லது மாநிலம் ஒன்றின் சட்டமன்ற அவைக்கு அல்லது ஈரவைகளில் எதற்கும் நடத்தப்படும் தேர்தல்கள்;

(எ) (உண்தகு எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய்கள் உள்ளடங்கலான) உணவுப் பண்டங்களின் மற்றும் இந்த உறுப்பினைப் பொறுத்தவரை, இன்றியமையாச் சரக்குகள் எனப் பொது அறிவிக்கை வாயிலாகக் குடியரசுத்தலைவர் விளம்பும் பிற சரக்குகளின் உற்பத்தி, கொள்முதல், வழங்கீடு, பகிர்ந்தளிப்பு மற்றும் அத்தகைய சரக்குகளின் விலைகளைக் கட்டுப்படுத்துதல்;

[1][(ஏ) குத்தகை, அதனை ஒழுங்குறுத்துதல் மற்றும் கட்டாள்கை செய்தல் மற்றும் நிலக்கிழார்களின் மற்றும் குத்தகைக்காரர்களின் உரிமை, உரிமை மூலம் மற்றும் உரித்தம் உள்ளடங்கலாக குத்தகையுரிமை எழு வினாக்கள்];

[2][(ஐ)] (அ) முதல் [3][(ஏ)] வரையுள்ள உட்கூறுகளில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்த சட்டங்களுக்கு எதிராகச் செய்யப்படும் குற்றச்செயல்கள் மற்றும் அந்தப் பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்த கட்டணங்கள்;

[2][(ஒ)] (அ) முதல் [4][(ஐ)] வரையுள்ள உட்கூறுகளில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளில் எதனையும் சார்ந்த பொருட்பாடு.

---

1. 1993ஆம் ஆண்டு அரசமைப்புச் (எழுபத்தைந்தாம் திருத்தம்) சட்டத்தினால் புகுத்தப்பட்டது. 2ஆம் பிரிவினால் (15–5–1994 முதல் செல்திறம் பெறுமாறு).
2. (எ) மற்றும் (ஐ) கூறுகள் மேற்படி சட்டத்தின் பிரிவு 2 ஆல் (15–5–1994 முதல் செல்திறம் பெறுமாறு) (ஐ) மற்றும் (ஒ) என மறு எழுத்திடப்பட்டது.
3. "(எ)" என்பதற்கு மேற்படி சட்டத்தின் 2ஆம் பிரிவினால் (15–5–1994 முதல் செல்திறம் பெறுமாறு) மாற்றாக அமைக்கப்பட்டது.
4. "(ஏ)" என்பதற்கு மேற்படி சட்டத்தின் 2ஆம் பிரிவினால் (15–5–1994 முதல் செல்திறம் பெறுமாறு) மாற்றாக அமைக்கப்பட்டது.

(3) (1)ஆம் கூறின்படி இயற்றப்படும் ஒரு சட்டம்–

(அ) தீர்ப்பாயங்களை படிநிலை அமைப்பில் நிறுவுவதற்காக வகை செய்யலாம்;

(ஆ) மேற்சொன்ன தீர்ப்பாயங்கள் ஒவ்வொன்றும் செலுத்துவதாகும் அதிகார வரம்பு (அவமதிப்புக்காகத் தண்டிக்கும் அதிகாரம் உள்ளடங்கலான) அதிகாரங்கள், அதிகாரஅடைவு ஆகியவற்றைக் குறித்துரைக்கலாம்;

(இ) மேற்சொன்ன தீர்ப்பாயங்கள் பின்பற்றவேண்டிய (காலவரம்பு, சான்று பற்றிய விதிகள் ஆகியவை குறித்த வகையங்கள் உள்ளடங்கலான) நெறிமுறைக்கு வகைசெய்யலாம்;

(ஈ) 136ஆம் உறுப்பின்படி உச்ச நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம் நீங்கலாக, மேற்சொன்ன தீர்ப்பாயங்களின் அதிகாரவரம்புக்குள் வரும் பொருட்பாடுகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் பொறுத்துப் பிற நீதிமன்றங்கள் அனைத்திற்கும் உள்ள அதிகாரத்தை விலக்கிவிடலாம்;

(உ) அத்தகைய நிருவாகப் பணித் தீர்ப்பாயம் நிறுவப்படுவதை ஒட்டி முன்பு நீதிமன்றம் அல்லது பிற அதிகாரஅமைப்பு எதிலும் முடிவுறாநிலையிலுள்ள வழக்குகள் எவற்றையும், அவற்றில் அடங்கும் உரிமைவழக்குகளுக்கோ நடவடிக்கைகளுக்கோ ஆதாரமான வழக்குமூலங்கள், மேற்சொன்ன தீர்ப்பாயம் நிறுவப்பட்டதன் பின்பு எழுந்திருக்குமாயின், எந்தத் தீர்ப்பாயத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டனவாக இருந்திருக்குமோ அந்தத் தீர்ப்பாயத்திற்கு மாற்றுவதற்கு வகை செய்யலாம்;

(ஊ) அத்தகைய தீர்ப்பாயங்கள் திறம்படச் செயற்படுவதற்காகவும், அவற்றால் வழக்குகள் விரைவாகத் தீர்க்கப்படுவதற்காகவும், அவற்றின் ஆணைகளைச் செயலுறுத்துவதற்காகவும் தேவையென உரிய சட்டமன்றம் கருதும் (கட்டணங்கள் பற்றிய வகையங்கள் உள்ளடங்கலான) துணைவுறு, சார்வுறு மற்றும் விளைவுறு வகையங்களைக் கொண்டிருக்கலாம்.

(4) இந்த அரசமைப்பின் பிற வகையம் எதிலும் அல்லது நிகழுறு காலத்தில் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் எது எவ்வாறிருப்பினும், இந்த உறுப்பின் வகையங்களே செல்திறன் உடையன ஆகும்.

விளக்கம்.– இந்த உறுப்பில், பொருட்பாடு எதன் தொடர்பாகவும், '' உரிய சட்டமன்றம்'' என்பது அத்தகைய பொருட்பாடு பொறுத்து XI ஆம் பகுதியின் வகையங்களுக்கிணங்க சட்டங்கள் இயற்றுவதற்குத் தகுதிறம் உள்ள நாடாளுமன்றம் அல்லது, நேர்வுக்கேற்ப, ஒரு மாநிலச் சட்டமன்றம் என்று பொருள்படும்.

பகுதி XV

தேர்தல்கள்

324. தேர்தல்களைக் கண்காணிப்பதும், நெறிப்படுத்துவதும் கட்டாள்கை புரிவதும் தேர்தல் ஆணையத்திடம் உற்றமைந்திருக்கும் :

(1) நாடாளுமன்றம், மாநிலம் ஒவ்வொன்றின் சட்டமன்றம் இவற்றிற்கான தேர்தல்கள் அனைத்திற்கும், வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பது, அத்தேர்தல்களை நடத்துவது, இந்த அரசமைப்பின்படி, குடியரசுத்தலைவர், துணைத் தலைவர் ஆகியோரின் பதவிகளுக்கான தேர்தல்களை நடத்துவது, இவற்றைக் கண்காணிப்பதும் நெறிப்படுத்துவதும் கட்டாள்கை புரிவதும் (இந்த அரசமைப்பில் தேர்தல் ஆணையம் எனச் சுட்டப்படும்) ஓர் ஆணையத்திடம் உற்றமைந்திருக்கும்.

(2) தேர்தல் ஆணையமானது, தலைமைத் தேர்தல் ஆணையரையும், குடியரசுத்தலைவர் அவ்வப்போது குறித்திடும் எண்ணிக்கையிலான பிற தேர்தல் ஆணையர்கள், எவரேனுமிருப்பின், அவர்களையும் கொண்டிருக்கும்; மேலும், தலைமைத் தேர்தல் ஆணையர், பிற தேர்தல் ஆணையர்கள் ஆகியோர், நாடாளுமன்றம் இதன்பொருட்டு இயற்றும் சட்டம் ஒன்றன் வகையங்களுக்கு உட்பட்டு, குடியரசுத்தலைவரால் அமர்த்தப்பெறுவர்.

(3) பிற தேர்தல் ஆணையர் எவரும் அவ்வாறு அமர்த்தப்பெறும்போது தேர்தல் ஆணையத்தின் தலைவராகத் தலைமைத் தேர்தல் ஆணையர் செயலுறுவார்.

(4) மக்களவைக்கும், மாநிலம் ஒவ்வொன்றின் சட்டமன்றப் பேரவைக்குமான ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்பும் சட்டமன்ற மேலவை உள்ள மாநிலம் ஒவ்வொன்றிலும் முதலாம் பொதுத் தேர்தலுக்கு முன்பும் அதன்பின்பு நடைபெறும் அம்மேலவைக்கான ஈராண்டுமுறைத் தேர்தல் ஒவ்வொன்றுக்கும் முன்பும், குடியரசுத்தலைவர் தேர்தல் ஆணையத்துடன் கலந்தாய்வு செய்த பின்பு, (1) ஆம் கூறினால் அந்த ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள செயற்பணிகள் புரிவதில் தேர்தல் ஆணையத்திற்கு உற்றுதவி செய்வதற்குத் தேவையெனத் தாம் கருதும் மண்டல ஆணையர்களையும் அமர்த்தலாம்.

(5) நாடாளுமன்றம் இயற்றும் சட்டம் எதனின் வகையங்களுக்கும் உட்பட்டு, தேர்தல் ஆணையர்கள், மண்டல ஆணையர்கள் ஆகியோரின் பணி வரைக்கட்டுகளும் பதவியுரிமைக்காலமும், குடியரசுத்தலைவர் வகுக்கும் விதிகளின் வழித் தீர்மானிக்கிறவாறு இருக்கும்:

வரம்புரையாக: உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவரை அகற்றுவதுபோல் அதே முறையிலும் அதே காரணங்களின்மீதும் அன்றி, தலைமைத் தேர்தல் ஆணையரை அவருடைய பதவியிலிருந்து அகற்றுதல் ஆகாது; மேலும், தலைமைத் தேர்தல் ஆணையரின் பணிவரைக்கட்டுகள், அவர் அமர்த்தப்பெற்ற பின்பு அவருக்குப் பாதகமான வகையில் மாற்றப்படுதல் ஆகாது:

மேலும் வரம்புரையாக: பிற தேர்தல் ஆணையர் அல்லது மண்டல ஆணையர் எவரையும் தலைமைத் தேர்தல் ஆணையரின் பரிந்துரையின்மீது அன்றி, பதவியிலிருந்து அகற்றுதல் ஆகாது.

(6). (1)ஆம்கூறின்படி தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள செயற்பணிகளை ஆற்றுவதற்குத் தேவைப்படும் பணியாளர் தொகுதியைத் தேர்தல் ஆணையம் வேண்டும்போது அத்தேர்தல் ஆணையத்திற்கு அல்லது மண்டல ஆணையருக்குக் குடியரசுத்தலைவர் அல்லது ஒரு மாநில ஆளுநர் கிடைக்குமாறு செய்வார்.

325. சமயம், இனம், சாதி அல்லது பாலினம் காரணமாக, வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கோ, தனியுறு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமெனக் கோருவதற்கோ எவரும் தகுமையற்றவர் ஆகார் :

நாடாளுமன்ற ஈரவைகளில் எதற்கும் அல்லது ஒரு மாநிலச் சட்டமன்ற அவைக்கு அல்லது சட்டமன்ற ஈரவைகளில் எதற்கும் நடைபெறும் தேர்தலுக்காக, நிலவரைத் தேர்தல் தொகுதி ஒவ்வொன்றுக்கும் பொதுவியலான வாக்காளர் பட்டியல் ஒன்று இருக்கும்; மேலும், சமயம், இனம், சாதி, பாலினம் மட்டுமே அல்லது அவற்றுள் ஏதொன்றையும் மட்டுமே காரணமாகக்கொண்டு அத்தகைய பட்டியலில் சேர்க்கப்படுவதற்கோ, அத்தேர்தல் தொகுதிக்கென தனியுறு வாக்காளர் பட்டியல் ஒன்றில் சேர்க்கப்படவேண்டுமெனக் கோருவதற்கோ எவரும் தகுமையற்றவர் ஆகார்.

326. மக்களவைக்கும், மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளுக்குமான தேர்தல்கள் வயதுவந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் இருக்கும் :

மக்களவைக்கும், ஒவ்வொரு மாநிலத்தின் சட்டமன்றப் பேரவைக்குமான தேர்தல்கள் வயதுவந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் இருக்கும்; அதாவது இந்தியாவின் குடிமகனாகவும், உரிய சட்டமன்றம் இயற்றிய சட்டத்தாலோ அதன் வழியாலோ அதன் பொருட்டுக் குறித்திடப்படும் தேதியன்று பதினெட்டு வயதுக்குக் குறையாதவராகவும், இந்த அரசமைப்பின்படி அல்லது உரிய சட்டமன்றம் இயற்றிய சட்டம் எதன்படியும் குடியிருப்பின்மை, பித்துநிலை, குற்றம் புரிதல் அல்லது தேர்தலில் ஒழுங்கீனமான அல்லது சட்டமுரணான நடவடிக்கை காரணமாகப் பிறவாறு தகுதிக்கேடுறாதவராகவும் உள்ள ஒவ்வொருவரும், அத்தகைய தேர்தல் எதிலும் வாக்காளராகப் பதிவு செய்யப்படுவதற்கு உரிமை கொண்டவர் ஆவார்.

327. சட்டமன்றங்களுக்கான தேர்தல்கள் பொறுத்து வகைசெய்வதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம் :

இந்த அரசமைப்பின் வகையங்களுக்குட்பட்டு, நாடாளுமன்ற ஈரவைகளில் எதற்கும் அல்லது ஒரு மாநிலச் சட்டமன்ற அவைகளின் அல்லது அதன் ஈரவைகளில் எதற்குமான தேர்தல்களைப் பொறுத்து அல்லது அவை தொடர்பாக வாக்காளர் பட்டியல்கள் தயாரித்தல், தேர்தல் தொகுதிகளை வரையறுத்தல் அத்தகைய அவையை அல்லது அவைகளை உரியவாறு அமைப்பதற்குத் தேவையான பிற பொருட்பாடுகள் ஆகிய அனைத்தையும் பொறுத்து நாடாளுமன்றம் அவ்வப்போது சட்டத்தினால் வகைசெய்யலாம்.

328. ஒரு மாநிலத்தின் சட்டமன்றத்திற்கான தேர்தல்கள் பொறுத்து வகைசெய்வதற்கு அச்சட்டமன்றத்திற்குள்ள அதிகாரம் :

இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டும் நாடாளுமன்றத்தால் இதன்பொருட்டு வகைசெய்யப்பட்டிராத அளவுக்கும், ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் அவைக்கான அல்லது அதன் ஈரவைகளில் எதற்குமான தேர்தல்களைப் பொறுத்து அல்லது அவை தொடர்பாக வாக்காளர் பட்டியல்கள் தயாரித்தல், அத்தகைய அவையை அல்லது அவைகளை அமைப்பதற்குத் தேவையான பிற பொருட்பாடுகள் ஆகிய அனைத்தையும் பொறுத்து அந்த மாநிலச் சட்டமன்றம் அவ்வப்போது சட்டத்தினால் வகைசெய்யலாம்.

329. தேர்தல் பற்றிய பொருட்பாடுகளில் நீதிமன்றங்கள் தலையிடுவதற்குத் தடை:

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்–

(அ) தேர்தல் தொகுதிகளை வரையறுத்தல் அல்லது அத்தகைய தொகுதிகளுக்குப் பதவியிடங்களைப் பகிர்ந்தொதுக்குதல் தொடர்பாக, 327ஆம் உறுப்பின்படி அல்லது 328ஆம் உறுப்பின்படி இயற்றப்பட்டுள்ள அல்லது இயற்றப்பட்டதாகக் கருதப்படுகிற சட்டம் ஒன்றின் செல்லுந்தன்மையை எதிர்த்து நீதிமன்றம் எதிலும் வாதிடுதல் ஆகாது;

(ஆ) நாடாளுமன்ற ஈரவைகளில் எதற்கும் அல்லது ஒரு மாநிலச் சட்டமன்ற அவைக்கான அல்லது அதன் ஈரவைகளில் எதற்குமான தேர்தல் எதனையும், உரிய சட்டமன்றம் இயற்றிய சட்டத்தாலோ அதன் வழியாலோ வகைசெய்யப்பட்டுள்ளவாறான அதிகாரஅமைப்பிற்கு, அவ்வாறான முறையில் முன்னிடப்படும் ஒரு தேர்தல் மனு வாயிலாக அன்றி, எதிர்த்து வாதிடுதல் ஆகாது.

[1][329.அ * * * *]

பகுதி XVI

குறித்தசில வகுப்பினர் தொடர்பான தனியுறு வகையங்கள்

330. பட்டியலில் கண்ட சாதியினருக்கும் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கும் மக்களவையில் பதவியிடங்களை ஒதுக்கீடுசெய்தல்:

(1) மக்களவையில்–

(அ) பட்டியலில் கண்ட சாதியினர்,

(ஆ) அசாமின் தன்னாட்சி மாவட்டங்களிலுள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினர் அல்லாத பிற பட்டியலில் கண்ட பழங்குடியினர்,

(இ) அசாமின் தன்னாட்சி மாவட்டங்களிலுள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினர்

ஆகியோருக்காகப் பதவியிடங்கள் ஒதுக்கீடுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரை எதிலும் உள்ள பட்டியலில் கண்ட சாதியினருக்கு அல்லது பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கு, (1)ஆம் கூறின்படி ஒதுக்கப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கைக்கும் மக்களவையில் அந்த மாநிலத்திற்கு அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்குப் பகிர்ந்தொதுக்கப்படும் பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கைக்கும் இடையிலான வீதஅளவானது, கூடுமானவரையில், அவ்வாறு பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும் அந்த மாநிலத்திலுள்ள அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரையிலுள்ள பட்டியலில் கண்ட சாதியினருடைய அல்லது அந்த மாநிலத்தில் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த மாநிலத்தின் பகுதியில் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் பகுதியில் உள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினருடைய மக்கள்தொகைக்கும் அந்த மாநிலத்தில் அல்லது ஒன்றியத்து ஆட்சி நிலவரையிலுள்ள மொத்த மக்கள்தொகைக்கும் இடையிலான அதே வீத அளவில் இருத்தல் வேண்டும்.

(3) (2)ஆம் கூறில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அசாமின் தன்னாட்சி மாவட்டங்களிலுள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினருக்காக மக்களவையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பதவியிடங்களின் எண்ணிக்கைக்கும் அந்த மாநிலத்திற்குப் பகிர்ந்தொதுக்கப்பட்டுள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கைக்கும் இடையிலான வீதஅளவானது, அந்தத் தன்னாட்சி மாவட்டங்களிலுள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினரின் மக்கள் தொகைக்கும் அந்த மாநிலத்தின் மொத்த மக்கள்தொகைக்கும் இடையிலான வீதஅளவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

---

[1][1978 ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து நான்காம் திருத்தம்) சட்டத்தின் 36 ஆம் பிரிவில் நீக்கறவு செய்யப்பட்டது]

விளக்கம்:– இந்த உறுப்பிலும் 332ஆம் உறுப்பிலும் ''மக்கள் தொகை'' என்னும் சொல் மக்கள் கணக்கெடுப்பின் தொகை விவரங்கள் கண்டறிந்து வெளியிடப்பட்டுள்ள கடைசி முறை மக்கள் கணக்கெடுப்பின்படியான மக்கள் தொகை என்று பொருள்படும்.

வரம்புரையாக: இந்த விளக்கத்தில் தொகை விவரங்கள் வெளியிடப்பட்டுள்ள கடைசி முறை மக்கள் கணக்கெடுப்பு என்பது [1][2026]ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதலாவதாக எடுக்கப்படும் மக்கள் கணக்கெடுப்பின்படியான தொகை விவரங்கள் வெளியிடப்படும் வரையிலும் [2][2001]ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பைச் சுட்டுவதாகவே பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

331. மக்களவையில் ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தினருக்குச் சார்பாற்றம் :

81ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், குடியரசுத்தலைவர், மக்களவையில் ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தினர் போதிய அளவு சார்பாற்றம் பெற்றிருக்கவில்லையெனக் கருதுவாராயின், அச்சமூகத்தினரில் இருவருக்கு மேற்படாதவர்களை மக்களவைக்கு உறுப்பினர்களாக நியமனம் செய்யலாம்.

332. பட்டியலில் கண்ட சாதியினருக்கும் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கும் மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளில் பதவியிடங்களை ஒதுக்கீடு செய்தல் :

(1) ஒவ்வொரு மாநிலத்தின் சட்டமன்றப் பேரவையிலும், பட்டியலில் கண்ட சாதியினருக்கும் அசாமின் தன்னாட்சி மாவட்டங்களிலுள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினர் அல்லாத பிற பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கும் பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) அசாம் மாநிலச் சட்டமன்றப் பேரவையில், தன்னாட்சி மாவட்டங்களுக்காகவும் பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) மாநிலம் ஒன்றன் சட்டமன்றப் பேரவையில் பட்டியலில் கண்ட சாதியினருக்கு அல்லது பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கு (1) ஆம் கூறின்படி ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கைக்கும் அப்பேரவையில் உள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கைக்கும் இடையிலான வீதஅளவானது, கூடுமானவரையில், அவ்வாறு பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும் அந்த மாநிலத்திலுள்ள பட்டியலில் கண்ட சாதியினருடைய அல்லது அந்த மாநிலத்தில் அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த மாநிலத்தின் பகுதியில் உள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினருடைய மக்கள் தொகைக்கும் அந்த மாநிலத்தின் மொத்த மக்கள் தொகைக்கும் இடையிலான அதே வீதஅளவில் இருத்தல் வேண்டும்.

(3அ). (3)ஆம் கூறில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 2000ஆம் ஆண்டுக்குப் பின்பு எடுக்கப்படும் முதலாம் மக்கள் கணக்கெடுப்பின் அடிப்படையில் அருணாசலப்பிரதேச, மேகாலயா, மிசோரம், நாகலாந்து ஆகிய மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளிலுள்ள பதவியிடங்களின் எண்ணிக்கையில் செய்யப்படும் மறுநேரமைவானது 170ஆம் உறுப்பின்படி செல்திறம் பெறும்வரையில், அத்தகைய மாநிலம் எதனின் சட்டமன்றப் பேரவையிலும் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கென ஒதுக்கீடு செய்யப்படவேண்டிய பதவியிடங்கள் கீழ்க்கண்டவாறு இருத்தல்வேண்டும்.

(அ) 1987ஆம் ஆண்டு அரசமைப்பு (ஐம்பத்தேழாம் திருத்தம்) சட்டம் செல்லாற்றல்பெறும் தேதியன்று, அந்த மாநிலத்தில் (இந்தக் கூறில் இதன் பின்பு நிலவுறும் சட்டமன்றப் பேரவை எனச் சுட்டப்படும்) நிலவுறும் சட்டமன்றப் பேரவையிலுள்ள பதவியிடங்கள் அனைத்தும் பட்டியலில் கண்ட பழங்குடி உறுப்பினர்களால் வகித்து வரப்படுமாயின், அவற்றில் ஒரு பதவியிடம் தவிர, பிற பதவியிடங்கள் அனைத்தும்:

---

1. 2001ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து நான்காம் திருத்தம்) சட்டத்தால் மாற்றாக அமைக்கப்பட்டது.
2. 2003ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து ஏழாம் திருத்தம்) சட்டத்தால் மாற்றாக அமைக்கப்பட்டது.

(ஆ) பிற நேர்வு எதிலும், (மேற்சொன்ன தேதியன்று) நிலவுறும் சட்டமன்றப் பேரவையில் பட்டியலில் கண்ட பழங்குடியினரின் எண்ணிக்கை, நிலவுறும் அச்சட்டமன்றப் பேரவையிலுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் எந்தவீத அளவில் உள்ளதோ அந்த வீதஅளவிற்குக் குறையாத எண்ணிக்கையுள்ள பதவியிடங்கள்.

[1][(3ஆ). (3)ஆம் கூறில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் [3][2026]ஆம் ஆண்டுக்குப் பின்பு எடுக்கப்படும் முதலாம் மக்கள் கணக்கெடுப்பின் அடிப்படையில் திரிபுரா மாநிலத்தின் சட்டமன்றப் பேரவையிலுள்ள பதவியிடங்களின் எண்ணிக்கையில் செய்யப்படும் மறுநேரமைவானது, 170ஆம் உறுப்பின்படி செல்திறம் பெறும் வரையில், சட்டமன்றப் பேரவையில் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கென ஒதுக்கீடு செய்யப்படவேண்டிய பதவியிடங்கள், 1992ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்திரண்டாம் திருத்தம்) சட்டம் செயலாற்றல் பெறும் தேதியன்று நிலவுறும் சட்டமன்றப்பேரவையில் பட்டியலில் கண்ட பழங்குடியினரின் எண்ணிக்கை, மேற்சொன்ன தேதியில் அந்தப் பேரவையிலுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் எந்த வீத அளவில் உள்ளதோ அந்த வீத அளவிற்குக் குறையாத எண்ணிக்கையுள்ள பதவியிடங்களாக இருத்தல்வேண்டும்.]

(4) அசாம் மாநிலச் சட்டமன்றப் பேரவையிலுள்ள மொத்தப் பதவியிடங்களின் எண்ணிக்கையில் ஒரு தன்னாட்சி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கையின் வீதஅளவானது, அந்த மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் அந்த மாவட்டத்தின் மக்கள்தொகையின் வீதஅளவிற்குக் குறையாமல் இருத்தல்வேண்டும்.

(5) அசாமின் தன்னாட்சி மாவட்டம் எதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பதவியிடங்களுக்கான தேர்தல் தொகுதிகளில் அந்த மாவட்டத்திற்கு வெளியேயுள்ள பரப்பிடம் எதுவும் அடங்குவதில்லை.

(6) அசாம் மாநிலத்தின் தன்னாட்சி மாவட்டம் ஒன்றன் பட்டியலில் கண்ட பழங்குடியைச் சேர்ந்தவராக இல்லாத எவரும், அந்த மாவட்டத்தின் தேர்தல் தொகுதி எதிலிருந்தும் அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்குத் தகுமையுடையவர் ஆகார் :

[2][வரம்புரையாக: அசாம் மாநிலச் சட்டமன்றப் பேரவைக்கான தேர்தல்களுக்காக, அவ்வாறு அறிவிக்கை செய்யப்பட்ட, போடோலாந்து ஆட்சிநிலவரைப் பகுதிகள் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள மற்றும் போடோலாந்து ஆட்சிநிலவரைகள் பகுதிகள் மாவட்டத்தினை அமைப்பதற்கு முன்பு இருந்துவந்த தொகுதிகளில் பட்டியலில் கண்ட பழங்குடியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் அல்லாதவருக்கான சார்பாற்றம் தொடர்ந்து இருந்துவருதல் வேண்டும்.]

333. மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளில் ஆங்கிலோ-இந்தியர் சமூகத்தினருக்குச் சார்பாற்றம் :

170ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், ஒரு மாநில ஆளுநர், அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையில் ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தினருக்குச் சார்பாற்றம் தேவைப்படுகிறது என்றும் அதில் அந்தச் சமூகத்தினர் போதிய சார்பாற்றம் பெற்றிருக்கவில்லை என்றும் கருதுவாராயின், அச்சமூகத்தினரில் ஒருவரை அப்பேரவைக்கு உறுப்பினராக நியமனம் செய்யலாம்.

---

1. 1992ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து இரண்டாம் திருத்தம்) சட்டத்தால் புகுத்தப்பட்டது.
2. 2003ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூறாம் திருத்தம்) சட்டத்தால் புகுத்தப்பட்டது.
3. 2001ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து நான்காம் திருத்தம்) சட்டத்தின் 7ஆம் பிரிவினால் "2000" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

334. பதவியிடங்களை ஒதுக்கீடு செய்தலும் தனியுறு சார்பாற்றம் அளித்தலும் [1][அறுபது] ஆண்டுகளுக்குப் பின்பு அற்றுப்போதல் :

இந்தப் பகுதியின் மேலே கண்ட வகையங்களில் எது எவ்வாறிருப்பினும்—

(அ) மக்களவையிலும் மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளிலும் பட்டியலில் கண்ட சாதியினருக்கும் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கும் பதவியிடங்களை ஒதுக்கீடு செய்தல்,

(ஆ) மக்களவையிலும் மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளிலும் நியமனம் வாயிலாக ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தினருக்குச் சார்பாற்றம் அளித்தல்,

ஆகியவை தொடர்பான இந்த அரசமைப்பின் வகையங்கள், இந்த அரசமைப்பின் தொடக்க நிலையிலிருந்து [1][அறுபது] ஆண்டுக் காலஅளவு கழிவுற்றதும் செல்திறம் அற்றுப் போகும்:

வரம்புரையாக: அப்போது நிலவுறும் மக்களவை அல்லது, நேர்வுக்கேற்ப, ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவை கலைக்கப்படும் வரையில், இந்த உறுப்பிலுள்ள எதுவும், மக்களவையில் அல்லது அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையிலுள்ள சார்பாற்றம் எதனையும் பாதித்தல் ஆகாது.

335. பணியங்களுக்கும் பணியடைகளுக்கும் பட்டியலில் கண்ட சாதியினர், பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஆகியோரின் கோருரிமைகள்:

ஒன்றியத்தின் அல்லது ஒரு மாநிலத்தின் அலுவற்பாடுகள் தொடர்பான பணியங்களுக்கும் பணியடைகளுக்கும் அமர்த்தங்கள் செய்யுங்கால், நிருவாகத் திறப்பாட்டினைப் பேணுவதற்கு ஒவ்வும் வகையில், பட்டியலில் கண்ட சாதியினர் பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஆகியோரின் கோருரிமைகளைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்:

[2][**வரம்புரையாக:** ஒன்றியத்தின் அல்லது மாநிலம் ஒன்றின் அலுவற்பாடுகளுடன் தொடர்புடைய பணியங்களின் அல்லது பணியடைகளின் வகை எதிலும் அல்லது வகைகள் எவற்றிலும் பதவி உயர்வு குறித்த பொருட்பாடுகளில் ஒதுக்கீடு செய்வதற்காக தேர்வு எதிலும் தகுதிப்பாடுடைய மதிப்பெண்களைத் தளர்த்துவதன் வாயிலாக அல்லது மதிப்பீட்டுத்தரமுறைகளை தாழ்த்துவதன் வாயிலாக பட்டியலில் கண்ட சாதிகளின் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடிகளின் உறுப்பினர்கள் சார்பாக வகையம் எதனையும் செய்வதற்கு இந்த உறுப்பில் உள்ள எதுவும் தடையூறு ஆவதில்லை]

336. குறித்தசில பணியங்களில் ஆங்கிலோ-இந்தியர் சமூகத்தினருக்கான தனியுறு வகையம்:

(1) இந்த அரசமைப்பின் தொடக்க நிலைக்குப் பின்பு முதல் ஈராண்டுகளின்போது, இருப்பூர்தியம், சுங்கம், அஞ்சல், தந்தி ஆகிய ஒன்றியத்துப் பணியங்களிலுள்ள பணியடைகளுக்கு ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தினரின் அமர்த்துகை, 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு பதினைந்தாம் நாளை ஒட்டி முன்பு இருந்த அதே அடிப்படையில் செய்யப்படுதல் வேண்டும்.

அதற்கு அடுத்துப் பின்வரும் ஒவ்வோர் ஈராண்டுக் காலஅளவின்போதும் மேற்சொன்ன பணியங்களில் அச்சமூகத்தினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பணியடைகளின் எண்ணிக்கை, அதற்கு ஒட்டி முந்தைய ஈராண்டுக் காலஅளவின் போது அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட எண்ணிக்கையைவிட ஏறத்தாழப் பத்து விழுக்காடு குறைவாயிருக்கும்:

---

1. 1999ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து ஒன்பதாம் திருத்தம்) சட்டத்தால் மாற்றாக அமைக்கப்பட்டது.
2. 2000ஆம் ஆண்டு அரசமைப்புச்(எண்பத்து இரண்டாம் திருத்தம்) சட்டத்தால் புகுத்தப்பட்டது.

வரம்புரையாக: இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலிருந்து பத்தாண்டுகள் முடிவுற்றதும், அத்தகைய ஒதுக்கீடுகள் அனைத்தும் அற்றுப்போகும்.

(2) ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தினரைப் பிற சமூகத்தினருடன் ஒப்பிடுகையில், திறமையின் அடிப்படையில் அமர்த்தப்பெறுவதற்கு அவர்கள் தகுதிப்பாடுடையவர்களாக இருக்குமிடத்து, (1)ஆம் கூறிலுள்ள எதுவும், அந்தக் கூறின்படி அச்சமூகத்தினருக்கென ஒதுக்கீடு செய்யப்படும் பணியடைகள் அல்லாத பிற பணியடைகளுக்கோ அதற்கும் கூடுதலான பணியடைகளுக்கோ அச்சமூகத்தினரை அமர்த்துவதற்குத் தடையாக இருப்பதில்லை.

337. ஆங்கிலோ-இந்தியர் சமூகத்தினரின் நலனுக்காகக் கல்வி மானியங்கள் பொறுத்த தனியுறு வகையம்:

இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்குப் பின்பு முதல் மூன்று நிதியாண்டுகளின்போது கல்வி பொறுத்து, ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தினரின் நலனுக்காக, 1948 மார்ச்சு முப்பத்தொன்றாம் நாளுடன் முடிவடைந்த நிதியாண்டில் அளிக்கப்பட்டுவந்த மானியங்கள், எவையேனுமிருப்பின், அவை ஒன்றியத்தினாலும் ஒவ்வொரு மாநிலத்தினாலும் அளிக்கப்பட்டு வருதல் வேண்டும்.

அதற்கு அடுத்துப் பின்வரும் ஒவ்வொரு மூன்றாண்டுக் காலஅளவின் போதும் அந்த மானியங்கள், அதற்கு ஒட்டி முந்தைய மூன்றாண்டுக் காலஅளவிற்கு வழங்கப்பட்ட மானியங்களைவிடப் பத்து விழுக்காடு குறைவாக இருக்கலாம்:

வரம்புரையாக: இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலிருந்து பத்தாண்டுகள் முடிவுற்றதும், அத்தகைய மானியங்கள், அவை ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தினருக்கான ஒரு தனியுறு சலுகையாக இருக்கின்ற அளவுக்கு அற்றுப்போகும்:

மேலும் வரம்புரையாக: கல்வி நிறுவனம் எதிலும் ஆண்டுதோறும் சேர்க்கப்பெறுபவர்களில் குறைந்தது நூற்றுக்கு நாற்பது பேர் ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தினர் அல்லாத பிற சமூகத்தினராக இருந்தாலன்றி, அக்கல்வி நிறுவனம் இந்த உறுப்பின்படி மானியம் எதனையும் பெறுவதற்கு உரிமைகொண்டது ஆகாது.

338. [1][பட்டியலில் கண்ட சாதியினருக்கான தேசிய ஆணையம்]:

[1][(1) பட்டியலில் கண்ட சாதியினருக்கான தேசிய ஆணையம் என்று அழைக்கப்பெறும் ஆணையம் ஒன்று பட்டியலில் கண்ட சாதியினருக்காக இருத்தல் வேண்டும்.

(2) நாடாளுமன்றத்தினால் இதன்பொருட்டு இயற்றப்படும் சட்டம் ஒன்றன் வகையங்களுக்கு உட்பட்டு, தலைவர், துணைத்தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாக இந்த ஆணையம் இருக்கும், மேலும், அவ்வாறு அமர்த்தப்பெறும் தலைவர், துணைத் தலைவர், பிற உறுப்பினர்கள் ஆகியோரின் பணி வரைக்கட்டுகளும் பதவிக்காலமும் குடியரசுத் தலைவர் வகுக்கும் விதிகளின்படி இருக்கும்.

(3) ஆணையத்தின் தலைவர் துணைத்தலைவர், பிற உறுப்பினர்கள் ஆகியோரை குடியரசுத்தலைவர், தம் கையொப்பமும் முத்திரையும் கொண்ட அதிகார ஆணையின்வழி அமர்த்துவார்.

(4) ஆணையம், தனக்குரிய நெறிமுறையை ஒழுங்குறுத்த அதிகாரம் உடையது ஆகும்.

(5) பின்வருவன ஆணையத்தின் கடமைகள் ஆகும்—

(அ) இந்த அரசமைப்பின்படி அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் ஒன்றன்படி அல்லது அரசாங்க ஆணை ஒன்றன்படி பட்டியலில் கண்ட சாதியினருக்கு [2][*****] வகை செய்யப்பட்டுள்ள காப்பணைவுகள் தொடர்பான பொருட்பாடுகள் அனைத்தையும் ஆய்ந்து காணுதல் மற்றும் கண்காணித்தல்; மேலும், அந்தக் காப்பணைவுகளின் செயற்பாட்டு விளைபயனைக் கணித்தல்;

(ஆ) பட்டியலில் கண்ட சாதியினரின் [2][******] உரிமைகளும் காப்பணைவுகளும் பறிக்கப்படுவது பற்றிய குறிப்பிட்ட முறையீடுகளை விசாரணை செய்தல்;

---

1. 2003ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து ஒன்பதாம் திருத்தம்) சட்டத்தினால் மாற்றாக அமைக்கப்பட்டது.
2. "மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர்கள்" என்ற சொற்கள் 2003ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து ஒன்பதாம் திருத்தம்) சட்டத்தினால் விட்டுவிடப்பட்டது.

(இ) பட்டியலில் கண்ட சாதியினரின் [1][*****] சமூக–பொருளியல் வளர்ச்சிக்கான திட்டமிடு செய்முறையில் பங்கேற்றல் மற்றும் அறிவுரை வழங்குதல்; மேலும், ஒன்றியத்திலும் மாநிலம் எதிலும் அவர்கள் வளர்ச்சியில் ஏற்படும் முன்னேற்றத்தைக் கணித்தல்;

(ஈ) அந்தக் காப்பணைவுகளின் செயற்பாடு பற்றிய அறிக்கைகளை ஆண்டுதோறும் மற்றும் ஆணையம் பொருத்தமெனக் கருதும் பிற் காலங்களிலும் குடியரசுத்தலைவரிடம் முன்னிடுதல்;

(உ) பட்டியலில் கண்ட சாதியினருக்கான [1][*****] காப்பணைவுகளையும் அவர்களுடைய பாதுகாப்பு, நல்வாழ்வு, சமூக–பொருளியல் வளர்ச்சி ஆகியவற்றிற்கான பிற நடவடிக்கைகளையும் திறம்படச் செயற்படுத்துவதற்காக, ஒன்றியம் அல்லது ஒரு மாநிலம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அத்தகைய அறிக்கைகளில் பரிந்துரைகள் செய்தல்; மற்றும்

(ஊ) பட்டியலில் கண்ட சாதியினருக்கான [1][*****] பாதுகாப்பு, நல்வாழ்வு, வளர்ச்சி, மேம்பாடு ஆகியவை தொடர்பாக நாடாளுமன்றம் இயற்றும் சட்டம் ஒன்றின் வகையங்களுக்கு உட்பட்டு, குடியரசுத்தலைவர் வகுக்கும் விதிகளின்படி செயற்பணிகளை ஆற்றுதல்.

(6) அத்தகைய அறிக்கைகள் அனைத்துடனும், ஒன்றியம் தொடர்பான பரிந்துரைகளின்மீது எடுக்கப்படும் அல்லது எடுக்கக் கருதப்படும் நடவடிக்கையையும் அத்தகைய பரிந்துரைகளில் எவையும் ஏற்றுக்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்களையும் விளக்குகின்ற விவரக்குறிப்புடன் சேர்த்து, நாடாளுமன்ற ஈரவைகளின் முன்பும் வைக்குமாறு குடியரசுத்தலைவர் செய்விப்பார்.

(7) அத்தகைய அறிக்கை எதுவும் அல்லது அதன் பகுதி எதுவும், ஒரு மாநில அரசாங்கம் தொடர்புடைய பொருட்பாடு குறித்ததாயிருக்குமிடத்து, அத்தகைய அறிக்கையின் படியொன்று, மாநில ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும், அவர், அத்தகைய அறிக்கையுடன் மாநிலம் தொடர்பான பரிந்துரைகளின் மீது எடுக்கப்படும் அல்லது எடுக்கக் கருதப்படும் நடவடிக்கையையும், அத்தகைய பரிந்துரைகளில் எவையும் ஏற்றுக்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்களையும் விளக்குகின்ற விவரக்குறிப்புடன் சேர்த்து, மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்குமாறு செய்விப்பார்.

(8) ஆணையமானது, 5ஆம் கூறின் (அ) உட்கூறில் சுட்டப்பட்ட பொருட்பாடு எதனையும் ஆய்ந்து காண்கையில் அல்லது (ஆ) உட்கூறில் சுட்டப்பட்ட முறையீடு எதனையும் விசாரணை செய்கையில், உரிமைவழக்கு ஒன்றை விசாரணை செய்யும் ஓர் உரிமையியல் நீதிமன்றம், குறிப்பாகப் பின்வரும் பொருட்பாடுகளைப் பொறுத்து கொண்டிருக்கும் அனைத்து அதிகாரங்களையும் உடையது ஆகும்:–

(அ) இந்தியாவின் எந்தவொரு பகுதியிலிருந்தும் நபர் எவரையும் அழைப்பாணை அனுப்பித் தன்முன் வரவழைத்தல் மற்றும் ஆணைமொழியின் மீது அவரை விசாரணை செய்தல்;

(ஆ) ஆவணம் எதனையும் வெளிக்கொணர்ந்து முன்னிலைப்படுத்துமாறு வேண்டுறுத்தல்;

(இ) ஆணையுறுதி ஆவணங்களைச் சான்றாக ஏற்றல்;

(ஈ) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் அரசுப் பதிவணம் அல்லது அதன்படி எதனையும் பெறுவதற்கு வேண்டுதலாணை இடுதல்;

(உ) சாட்சிகளை விசாரணை செய்வதற்காகவும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்காகவும் பணிப்பாணைகளைப் பிறப்பித்தல்;

---

[1] 2003ஆம் ஆண்டு அரசமைப்புச் (எண்பத்து ஒன்பதாம் திருத்தம்) சட்டத்தால் விட்டுவிடப்பட்டது.

(ஊ) குடியரசுத்தலைவர், வகுக்கும் விதிகளில் கூறப்படும் பிற பொருட்பாடுகள்.

(9) ஒன்றியமும், ஒவ்வொரும் மாநில அரசாங்கமும் பட்டியலில் கண்ட சாதியினரைப் [1][* * *] பாதிக்கும் முக்கியமான கொள்கைகள் அனைத்திலும் ஆணையத்தைக் கலந்தாய்வு செய்தல் வேண்டும்.

(10) இந்த உறுப்பில், பட்டியலில் கண்ட சாதிகள் [1][* * *] என்னும் சுட்டுரைகள், குடியரசுத்தலைவர் 340ஆம் உறுப்பின் (1)ஆம் கூறுன்படி அமர்த்தப்படும் ஓர் ஆணையத்தின் அறிக்கையைப் பெற்றதன் மேல், ஆணையின்வழி குறித்துரைக்கும் பிற பிற்பட்ட வகுப்புகளையும், அத்துடன் ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தினையும் குறிப்பதாகப் பொருள் கொள்ளப்படும்.

[2][**338அ. பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கான தேசிய ஆணையம்:**]

(1) பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் என்று அழைக்கப்பெறும் ஆணையம் ஒன்று பட்டியலில் கண்ட பழங்குடியினருக்காக இருத்தல்வேண்டும்.

(2) நாடாளுமன்றத்தினால் இதன்பொருட்டு இயற்றப்படும் சட்டம் ஒன்றன் வகையங்களுக்கு உட்பட்டு, தலைவர், துணைத்தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாக இந்த ஆணையம் இருக்கும்; மேலும், அவ்வாறு அமர்த்தப்பெறும் தலைவர், துணைத்தலைவர், பிற உறுப்பினர்கள் ஆகியோரின் பணி வரைக்கட்டுகளும் பதவிக்காலமும் குடியரசுத்தலைவர் வகுக்கும் விதிகளின்படி இருக்கும்.

(3) ஆணையத்தின் தலைவர், துணைத்தலைவர், பிற உறுப்பினர்கள் ஆகியோரை குடியரசுத்தலைவர், தம் கையொப்பமும் முத்திரையும் கொண்ட அதிகார ஆணையின் வழி அமர்த்துவார்.

(4) ஆணையம், தனக்குரிய நெறிமுறையை ஒழுங்குறுத்த அதிகாரம் உடையது ஆகும்.

(5) பின்வருவன ஆணையத்தின் கடமைகள் ஆகும்–

(அ) இந்த அரசமைப்பின்படி அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் ஒன்றன்படி அல்லது அரசாங்க ஆணை ஒன்றன்படி பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கு வகைசெய்யப்பட்டுள்ள காப்பணைவுகள் தொடர்பான பொருட்பாடுகள் அனைத்தையும் ஆய்ந்து காணுதல் மற்றும் கண்காணித்தல்; மேலும், அந்தக் காப்பணைவுகளின் செயற்பாட்டு விளைபயனைக் கணித்தல்;

(ஆ) பட்டியலில் கண்ட பழங்குடியினரின் உரிமைகளும் காப்பணைவுகளும் பறிக்கப்படுவது பற்றிய குறிப்பிட்ட முறையீடுகளை விசாரணை செய்தல்;

(இ) பட்டியலில் கண்ட பழங்குடியினரின் சமூக–பொருளியல் வளர்ச்சிக்கான திட்டமிடு செய்முறையில் பங்கேற்றல் மற்றும் அறிவுரை வழங்குதல்; மேலும், ஒன்றியத்திலும் மாநிலம் எதிலும் அவர்கள் வளர்ச்சியில் ஏற்படும் முன்னேற்றத்தைக் கணித்தல்;

(ஈ) அந்தக் காப்பணைவுகளின் செயற்பாடு பற்றிய அறிக்கைகளை ஆண்டுதோறும் மற்றும் ஆணையம் பொருத்தமெனக் கருதும் பிற காலங்களிலும் குடியரசுத்தலைவரிடம் முன்னிடுதல்;

(உ) பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கான காப்பணைவுகளையும் அவர்களுடைய பாதுகாப்பு, நல்வாழ்வு, சமூக–பொருளியல் வளர்ச்சி ஆகியவற்றிற்கான பிற நடவடிக்கைகளையும் திறம்படச் செயற்படுத்துவதற்காக, ஒன்றியம் அல்லது ஒரு மாநிலம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அத்தகைய அறிக்கைகளில் பரிந்துரைகள் செய்தல்; மற்றும்

---

1. 2003ஆம் ஆண்டு அரசமைப்புச் (எண்பத்து ஒன்பதாம் திருத்தம்) சட்டத்தால் விட்டுவிடப்பட்டது.
2. மேற்படி சட்டத்தால் புகுத்தப்பட்டது.

(ஊ) பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கான பாதுகாப்பு, நல்வாழ்வு, வளர்ச்சி, மேம்பாடு ஆகியவை தொடர்பாக, நாடாளுமன்றம் இயற்றும் சட்டம் ஒன்றின் வகையங்களுக்கு உட்பட்டு, குடியரசுத்தலைவர் வகுக்கும் விதிகளின்படி செயற்பணிகளை ஆற்றுதல்.

(6) அத்தகைய அறிக்கைகள் அனைத்துடனும், ஒன்றியம் தொடர்பான பரிந்துரைகளின்மீது எடுக்கப்படும் அல்லது எடுக்கக் கருதப்படும் நடவடிக்கையையும் அத்தகைய பரிந்துரைகளில் எவையும் ஏற்றுக்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்களையும் விளக்குகின்ற விவரக்குறிப்புடன் சேர்த்து, நாடாளுமன்ற ஈரவைகளின் முன்பும் வைக்குமாறு குடியரசுத் தலைவர் செய்விப்பார்.

(7) அத்தகைய அறிக்கை எதுவும் அல்லது அதன் பகுதி எதுவும், ஒரு மாநில அரசாங்கம் தொடர்புடைய பொருட்பாடு குறித்ததாயிருக்குமிடத்து, அத்தகைய அறிக்கையின் படியொன்று, மாநில ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்படுதல்வேண்டும், அவர், அத்தகைய அறிக்கையுடன் மாநிலம் தொடர்பான பரிந்துரைகளின் மீது எடுக்கப்படும் அல்லது எடுக்கக் கருதப்படும் நடவடிக்கையையும், அத்தகைய பரிந்துரைகளில் எவையும் ஏற்றுக்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்களையும் விளக்குகின்ற விவரக்குறிப்புடன் சேர்த்து, மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்குமாறு செய்விப்பார்.

(8) ஆணையமானது, (5)ஆம் கூறின் (அ) உட்கூறில் சுட்டப்பட்ட பொருட்பாடு எதனையும் ஆய்ந்து காண்கையில் அல்லது (ஆ) உட்கூறில் சுட்டப்பட்ட முறையீடு எதனையும் விசாரணை செய்கையில், உரிமை வழக்கு ஒன்றை விசாரணை செய்யும் ஓர் உரிமையியல் நீதிமன்றம், குறிப்பாக பின்வரும் பொருட்பாடுகளைப் பொறுத்து கொண்டிருக்கும் அனைத்து அதிகாரங்களையும் உடையது ஆகும்:–

(அ) இந்தியாவின் எந்தவொரு பகுதியிலிருந்தும் நபர் எவரையும் அழைப்பாணை அனுப்பித் தன் முன் வரவழைத்தல் மற்றும் ஆணைமொழியின் மீது அவரை விசாரணை செய்தல்;

(ஆ) ஆவணம் எதனையும் வெளிக்கொணர்ந்து முன்னிலைப்படுத்துமாறு வேண்டுறுத்தல்;

(இ) ஆணையுறுதி ஆவணங்களைச் சான்றாக ஏற்றல்;

(ஈ) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் அரசுப் பதிவணம் அல்லது அதன் படி எதனையும் பெறுவதற்கு வேண்டுதலாணை இடுதல்;

(உ) சாட்சிகளை விசாரணை செய்வதற்காகவும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்காகவும் பணிப்பாணைகளைப் பிறப்பித்தல்;

(ஊ) குடியரசுத்தலைவர் வகுக்கும் விதிகளில் கூறப்படும் பிற பொருட்பாடுகள்.

(9) ஒன்றியமும், ஒவ்வொரு மாநில அரசாங்கமும் பட்டியலில் கண்ட பழங்குடியினரைப் பாதிக்கும் முக்கியமான கொள்கைகள் அனைத்திலும் ஆணையத்தைக் கலந்தாய்வு செய்தல் வேண்டும்.]

339. பட்டியல் வரையிடங்களின் நிருவாகம், பட்டியலில் கண்ட பழங்குடியினரின் நல்வாழ்வு ஆகியவற்றின்மீது ஒன்றியத்திற்குள்ள கட்டாள்கை :

(1) குடியரசுத்தலைவர், ஆணையின்வழி மாநிலங்களிலுள்ள பட்டியல் வரையிடங்களின் நிருவாகம் குறித்தும் பட்டியலில் கண்ட பழங்குடியினரின் நல்வாழ்வு பற்றியும் அறிக்கை அளிப்பதற்காக ஆணையம் ஒன்றை எச்சமயத்திலும் அமர்த்தலாம்: ஆனால், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலிருந்து பத்தாண்டுகள் கழிவுற்றதும் அத்தகைய ஆணையத்தை அமர்த்துதல் வேண்டும்.

அந்த ஆணையத்தின் கட்டமைப்பு, அதிகாரங்கள், நெறிமுறை ஆகியவற்றை அந்த ஆணை வரையறை செய்யலாம்; மேலும், குடியரசுத்தலைவர் தேவையென அல்லது உகந்ததெனக் கருதும் சார்வுறு மற்றும் துணைவுறு வகையங்களையும் அந்த ஆணை கொண்டிருக்கலாம்.

(2) ஒரு மாநிலத்திலுள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினரின் நல்வாழ்விற்கு இன்றியமையாதவை எனப் பணிப்புரையில் குறித்துரைக்கப்படும் திட்டங்களை வகுப்பது பற்றியும், அவற்றை நிறைவேற்றுவது குறித்தும் அந்த மாநிலத்திற்குப் பணிப்புரைகள் இடுவதும் ஒன்றியத்து ஆட்சி அதிகாரத்தில் அடங்கும்.

340. பிற்பட்ட வகுப்பினரின் நிலைமைகளை ஆய்ந்து காண்பதற்கு ஆணையம் ஒன்றை அமர்த்துதல் :

(1) இந்திய ஆட்சிநிலவரையிலுள்ள சமூக நிலையிலும் கல்வி நிலையிலும் பிற்பட்ட வகுப்பினரின் நிலைமைகளையும் அவர்களை உழற்றும் இடர்ப்பாடுகளையும் ஆய்ந்து காண்பதற்கும் அத்தகைய இடர்ப்பாடுகளை அகற்றி, அவர்களின் நிலைமையை மேம்படுத்துவதற்கு ஒன்றியம் அல்லது மாநிலம் எதுவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அதன்பொருட்டு ஒன்றியம் அல்லது ஒரு மாநிலம் அளிக்கவேண்டிய மானியங்கள் பொறுத்தும் அம்மானியங்கள் எந்த வரைக்கட்டுகளுக்குட்பட்டு அளிக்கப்படவேண்டும் என்பது பற்றியும் பரிந்துரைகள் செய்வதற்கும், குடியரசுத்தலைவர் ஆணையின்வழி, தாம் தக்கவர்களெனக் கருதுபவர்களைக் கொண்ட ஆணையம் ஒன்றை அமர்த்தலாம்; அத்தகைய ஆணையத்தை அமர்த்துகிற ஆணையானது, அந்த ஆணையம் பின்பற்றவேண்டிய நெறிமுறைகளையும் வரையறை செய்யும்.

(2) அவ்வாறு அமர்த்தப்பட்ட ஆணையம், தனக்குக் குறித்தனுப்பப்பட்டுள்ள பொருட்பாடுகளை ஆய்வுசெய்து தான் கண்டறிந்த பொருண்மைகளை விவரித்துத் தான் ஏற்புடையவை எனக் கருதும் பரிந்துரைகளுடன் ஓர் அறிக்கையைக் குடியரசுத்தலைவரிடம் அளித்தல் வேண்டும்.

(3) அவ்வாறு அளிக்கப்பட்ட அறிக்கையின் ஒரு படியினை, அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை விளக்கும் விவரக்குறிப்புடன் சேர்த்து, குடியரசுத்தலைவர், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்குமாறு செய்வார்.

341. பட்டியலில் கண்ட சாதிகள் :

(1) மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரை எதனைப் பொறுத்தும், அது ஒரு மாநிலமாக இருக்குமிடத்து அதன் ஆளுநரைக் கலந்தாய்வு செய்தபின்பு, அந்த மாநிலம் அல்லது, நேர்வுக்கேற்ப, ஒன்றியத்து ஆட்சிநிலவரை தொடர்பாக, இந்த அரசமைப்பினைப் பொறுத்தவரை பட்டியலில் கண்ட சாதிகள் என்று கொள்ளப்படவேண்டிய சாதிகள், இனங்கள் அல்லது பழங்குடிகள் எவை என்றும், சாதிகளில், இனங்களில் அல்லது பழங்குடிகளில் உள்ள பகுதிகள் அல்லது தொகுதிகள் எவை என்றும் குடியரசுத்தலைவர் பொது அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாம்.

(2) நாடாளுமன்றம் சட்டத்தினால், சாதி, இனம் அல்லது பழங்குடி எதனையும் அல்லது சாதியில், இனத்தில் அல்லது பழங்குடியில் உள்ள பகுதிகள் அல்லது தொகுதிகள் எவற்றையும், (1)ஆம் கூறின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒன்றில் குறித்துரைக்கப்பட்ட பட்டியலில் கண்ட சாதிகளின் வரிசைத் தொகுப்பில் சேர்க்கலாம் அல்லது அத் தொகுப்பிலிருந்து நீக்கிவிடலாம்; ஆனால், மேலே கண்டவாறன்றி, மேற்சொன்ன கூறின்படி பிறப்பிக்கப்பட்ட ஓர் அறிவிக்கையானது பிந்திய அறிவிக்கை எதனாலும் மாறுதல் செய்யப்படுதல் ஆகாது.

342. பட்டியலில் கண்ட பழங்குடிகள் :

(1) மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரை எதனைப் பொறுத்தும், அது ஒரு மாநிலமாக இருக்குமிடத்து அதன் ஆளுநரைக் கலந்தாய்வு செய்த பின்பு, அந்த மாநிலம் அல்லது, நேர்வுக்கேற்ப, ஒன்றியத்து ஆட்சிநிலவரை தொடர்பாக, இந்த அரசமைப்பினைப் பொறுத்தவரை பட்டியலில் கண்ட பழங்குடிகள் என்று கொள்ளப்படவேண்டிய பழங்குடிகள், பழங்குடிச் சமூகங்கள் எவை என்றும், பழங்குடிகளில் அல்லது பழங்குடிச் சமூகங்களில் உள்ள பகுதிகள் அல்லது தொகுதிகள் எவை என்றும் குடியரசுத்தலைவர் பொது அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாம்.

(2) நாடாளுமன்றம், சட்டத்தினால் பழங்குடி அல்லது பழங்குடிச் சமூகம் எதனையும் அல்லது அந்த பழங்குடி அல்லது பழங்குடி சமூகம் எதிலும் உள்ள பகுதிகள் அல்லது தொகுதிகள் எவற்றையும், (1)ஆம் கூறின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒன்றில் குறித்துரைக்கப்பட்ட பட்டியலில் கண்ட பழங்குடிகளின் வரிசைத் தொகுப்பில் சேர்க்கலாம் அல்லது அத்தொகுப்பிலிருந்து நீக்கிவிடலாம்; ஆனால், மேலே கண்டவாறன்றி, மேற்சொன்ன கூறின்படி பிறப்பிக்கப்பட்ட ஓர் அறிவிக்கையானது, பிந்திய அறிவிக்கை எதனாலும் மாறுதல் செய்யப்படுதல் ஆகாது.

பகுதி XVII

அரசு அலுவல் மொழி

அத்தியாயம் I

ஒன்றியத்தின் மொழி

343. ஒன்றியத்து அரசு அலுவல் மொழி :

(1) தேவநாகரி வரிவடிவிலுள்ள இந்தி, ஒன்றியத்து அரசு அலுவல் மொழியாக இருக்கும்.

ஒன்றியத்து அரசு அலுவல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய எண்களின் வடிவம், இந்திய எண்களின் பன்னாட்டு வடிவமாக இருக்கும்.

(2) (1)ஆம் கூறில் எது எவ்வாறிருப்பினும், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலிருந்து பதினைந்து ஆண்டுக் காலஅளவிற்கு ஆங்கில மொழியே, இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு பயன்படுத்தப்பட்டவாறு ஒன்றியத்து அரசு அலுவல் நோக்கங்கள் அனைத்திற்கும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வரும்:

வரம்புரையாக: மேற்சொன்ன காலஅளவின்போது, ஒன்றியத்து அரசுஅலுவல் நோக்கங்களில் எதற்கும் ஆங்கில மொழியோடும்கூட இந்தி மொழியையும், இந்திய எண்களின் பன்னாட்டு வடிவத்தோடுங்கூட, அந்த எண்களின் தேவநாகரி வடிவத்தையும் பயன்படுத்துவதற்கு, குடியரசுத்தலைவர் ஆணையின்வழி அதிகாரமளிக்கலாம்.

(3) இந்த உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், மேற்சொன்ன பதினைந்து ஆண்டுக் காலஅளவிற்குப் பின்பும், நாடாளுமன்றம் சட்டத்தினால் அந்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்படும் நோக்கங்களுக்காக—

(அ) ஆங்கில மொழியினை, அல்லது

(ஆ) எண்களின் தேவநாகரி வடிவத்தினைப்

பயன்படுத்துவதற்கு வகைசெய்யலாம்.

344. அரசு அலுவல் மொழிக்கான ஆணையமும் நாடாளுமன்றக் குழுவும் :

(1) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலிருந்து ஐந்தாண்டுகள் கழிவுறும்போதும் அதன்பின்பு அத்தகைய தொடக்கநிலையிலிருந்து பத்தாண்டுகள் கழிவுறும்போதும், குடியரசுத்தலைவர் ஆணையின்வழி, ஒரு தலைவரையும், எட்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வெவ்வேறு மொழிகளுக்குச் சார்பாற்றுநர்களாகக் குடியரசுத்தலைவரால் அமர்த்தப்பெறும் பிற உறுப்பினர்களையும் கொண்ட ஓர் ஆணையத்தை அமைப்பார்; மேலும், அந்த ஆணையம் பின்பற்றவேண்டிய நெறிமுறையையும் அந்த ஆணை வரையறை செய்யும்.

(2) குடியரசுத்தலைவருக்குப் பின்வருவனபற்றி பரிந்துரைகள் செய்வது அந்த ஆணையத்தின் கடமை ஆகும்—

(அ) ஒன்றியத்து அரசுஅலுவல்களுக்காக மேன்மேலும் இந்திமொழியைப் பயன்படுத்துதல்;

(ஆ) ஒன்றியத்து அரசுஅலுவல்கள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் ஆங்கிலமொழியைப் பயன்படுத்துவதை வரையறுத்தல்;

(இ) 348ஆம் உறுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும் பயன்படுத்தப்படவேண்டிய மொழி;

(ஈ) குறித்துரைக்கப்படும் ஒன்றியத்து நோக்கங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்குப் பயன்படுத்தப்படவேண்டிய எண்களின் வடிவம்;

(உ) ஒன்றியத்து அரசுஅலுவல் மொழி, ஒன்றியத்திற்கும் ஒரு மாநிலத்திற்கும் இடையே அல்லது ஒரு மாநிலத்திற்கும் மற்றொன்றிற்கும் இடையே செய்தித் தொடர்புக்கான மொழி, அவற்றின் பயன்பாடு ஆகியவை பற்றி குடியரசுத்தலைவர் ஆணையத்திற்குக் குறித்தனுப்பும் பிற பொருட்பாடு எதுவும்.

(3) இந்த ஆணையம் (2)ஆம் கூறின்படி தனது பரிந்துரைகளைச் செய்கையில், இந்தியாவின் தொழில் துறை, பண்பாடு, அறிவியல் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கும் அரசுப் பணியங்களைப் பொறுத்து இந்தி பேசாத பகுதிகளைச் சார்ந்தவர்களின் நலன்களுக்கும் நேரிய கோரிக்கைகளுக்கும் உரிய மதிப்புக் கொடுத்தல் வேண்டும்.

(4) முப்பது உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்படும்; அக்குழு ஒற்றைமாற்று வாக்கு என்னும் முறையில் வீதச் சார்பாற்று முறைக்கிணங்க, மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய மக்களவை உறுப்பினர்கள் இருபது பேரையும் மாநிலங்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய மாநிலங்களவை உறுப்பினர்கள் பத்துபேரையும் கொண்டிருக்கும்.

(5). (1) ஆம் கூறின்படி அமைக்கப்படும் ஆணையத்தின் பரிந்துரைகளை ஆராய்ந்து, அவற்றின் மீதான தன் கருத்தினைக் குடியரசுத்தலைவருக்கு அறிவித்தல் அந்தக் குழுவின் கடமை ஆகும்.

(6). 343ஆம் உறுப்பில் எது எவ்வாறிருப்பினும், குடியரசுத்தலைவர், (5)ஆம் கூறில் சுட்டப்பட்டுள்ள அறிக்கையை ஒர்வுசெய்த பின்பு, அந்த அறிக்கை முழுவதற்கும் அல்லது அதன் பகுதி எதற்கும் இணங்க பணிப்புரைகளை இடலாம்.

அத்தியாயம் II

மண்டல மொழிகள்

345. மாநிலத்து அரசு அலுவல்மொழி அல்லது மொழிகள் :

346, 347 ஆகிய உறுப்புகளின் வகையங்களுக்கு உட்பட்டு, ஒரு மாநிலச் சட்டமன்றம், அந்த மாநிலத்தில் பயன்பாட்டிலுள்ள மொழிகளில் ஏதேனும் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை அல்லது இந்தியை அந்த மாநிலத்தின் அரசு அலுவல்கள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் பயன்படுத்தப்படுவதற்கான மொழியாக அல்லது மொழிகளாகச் சட்டத்தினால் ஏற்று மேற்கொள்ளலாம் :

வரம்புரையாக: அந்த மாநிலச் சட்டமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்கிற வரையில், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு அந்த மாநிலத்திற்குள் ஆங்கிலமொழி பயன்படுத்தப்பட்டுவந்த அரசு அலுவல்களுக்கு அம்மொழியே தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுவரும்.

346. ஒரு மாநிலத்திற்கும் மற்றொன்றிற்கும் இடையே அல்லது ஒரு மாநிலத்திற்கும் ஒன்றியத்திற்கும் இடையே செய்தித் தொடர்புக்கான அரசு அலுவல் மொழி :

ஒன்றியத்தின் அரசு அலுவல்களுக்குப் பயன்படுத்துவதற்கென அப்போதைக்கு அதிகாரம் பெற்ற மொழியே, ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் இடையேயும், ஒரு மாநிலத்திற்கும் ஒன்றியத்திற்கும் இடையேயும் செய்தித் தொடர்புக்கான அரசு அலுவல் மொழியாக இருக்கும்:

வரம்புரையாக: இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்கள், தங்களுக்கிடையே செய்தித் தொடர்புக்கான அரசு அலுவல் மொழியாக இந்திமொழி இருத்தல் வேண்டுமென ஒத்துக்கொள்ளுமாயின், அத்தகைய செய்தித் தொடர்புக்காக அந்த மொழியே பயன்படுத்தப்படலாம்.

347. ஒரு மாநில மக்கள் தொகையில் ஒரு பகுதியினர் பேசும் மொழி பொறுத்த தனியுறு வகையம் :

ஒரு மாநில மக்கள்தொகையில் கணிசமான பகுதியினர், தாங்கள் பேசும் மொழியின் பயன்பாட்டிற்கு அந்த மாநிலம் ஏற்பளிக்க வேண்டுமென விரும்புகிறார்கள் என்பதை, அதற்கென விடுக்கப்பட்ட ஒரு கோரிக்கையின்மீது குடியரசுத்தலைவர் தெளிவுறக்காண்பாராயின், அவர், தாம் குறித்துரைக்கும் நோக்கத்திற்காக, அந்த மாநிலம் எங்கனும் அல்லது அதன் பகுதி எதிலும், அந்த மொழிக்கும் அதிகாரமுறையில் ஏற்பளிக்க வேண்டுமெனப் பணிக்கலாம்.

அத்தியாயம் III

உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் முதலியவற்றின் மொழி

348. உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் ஆகியவற்றிலும் சட்டங்கள், சட்டமுன் வடிவுகள் முதலியவற்றிற்கும் பயன்படுத்த வேண்டிய மொழி :

(1) இந்தப் பகுதியின் மேலே கண்ட வகையங்களில் எது எவ்வாறிருப்பினும், நாடாளுமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகை செய்யும் வரை–

(அ) உச்ச நீதிமன்றத்தின் மற்றும் ஒவ்வோர் உயர் நீதிமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளும்,

(ஆ) *(i)* நாடாளுமன்ற ஈரவைகளில் எதிலும் அல்லது மாநிலச் சட்டமன்ற அவையில் அல்லது ஈரவைகளில் எதிலும் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் சட்டமுன்வடிவுகள் அல்லது முன்மொழியப்படவிருக்கும் அனைத்துத் திருத்தங்கள்,

(ii) நாடாளுமன்றத்தால் அல்லது ஒரு மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் அனைத்துச் சட்டங்கள், குடியரசுத்தலைவரால் அல்லது ஒரு மாநில ஆளுநரால் சாற்றம் செய்யப்படும் அனைத்து அவசரச் சட்டங்கள்,

(iii) இந்த அரசமைப்பின்படி அல்லது நாடாளுமன்றத்தால் அல்லது ஒரு மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டம் எதன்படியும் பிறப்பிக்கப்படும் அனைத்து ஆணைகள், விதிகள், ஒழுங்குறுத்தும் விதிகள், துணைவிதிகள்

ஆகியவற்றின் அதிகாரஉறுதிபெற்ற வாசகங்களும் ஆங்கில மொழியில் இருத்தல் வேண்டும்.

(2). (1) ஆம் கூறின் (அ) உட்கூறில் எது எவ்வாறிருப்பினும் ஒரு மாநில ஆளுநர், குடியரசுத்தலைவரின் முன் இசைவுடன், அந்த மாநிலத்தில் தலைமை அமர்கையிடம் கொண்டுள்ள உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளில் இந்தி மொழியை அல்லது அந்த மாநிலத்து அரசு அலுவல்கள் எவற்றிற்கும் பயன்படுத்தப்படும் பிற மொழி எதனையும் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கலாம்:

வரம்புரையாக: இந்தக் கூறிலுள்ள எதுவும், அத்தகைய உயர் நீதிமன்றம் வழங்கும் அல்லது பிறப்பிக்கும் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதற்கும் பொருந்துறுதல் ஆகாது.

(3). (1) ஆம் கூறின் (ஆ) உட்கூறில் எது எவ்வாறிருப்பினும், ஒரு மாநிலச் சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் சட்டமுன்வடிவுகளில் அல்லது அந்தச் சட்டமன்றம் நிறைவேற்றும் சட்டங்களில் அல்லது அந்த மாநில ஆளுநர் சாற்றம் செய்யும் அவசரச்சட்டங்களில் அல்லது அந்த உட்கூறின் (iii)ஆம் பத்தியில் சுட்டப்பட்டுள்ள ஆணை, விதி, ஒழுங்குறுத்தும்விதி அல்லது துணைவிதி எதிலும் பயன்படுத்துவதற்காக, ஆங்கில மொழி அல்லாத பிற மொழி எதனையும் அந்த மாநிலச் சட்டமன்றம் வகுத்துரைத்துள்ளவிடத்து அந்த மாநிலத்தின் *அதிகாரமுறை அரசிதழில்* அந்த மாநில ஆளுநரின் அதிகாரத்தின்படி ஆங்கில மொழியில் வெளியிடப்படும் அதன் மொழிப்பெயர்ப்பானது, இந்த உறுப்பின்படி ஆங்கில மொழியில் அதன் அதிகாரஉறுதிபெற்ற வாசகமாகக் கொள்ளப்படும்.

349. மொழி தொடர்பாகக் குறித்தசில சட்டங்களை இயற்றுவதற்கான தனியுறு நெறிமுறை :

இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலிருந்து பதினைந்தாண்டுக் காலஅளவின்போது 348ஆம் உறுப்பின் (1)ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களில் எதற்கும் பயன்படுத்தப்பட வேண்டிய மொழிக்காக வகை செய்யும் சட்டமுன்வடிவு அல்லது திருத்தம் எதுவும், குடியரசுத்தலைவரின் முன் ஒப்பளிப்பு இன்றி, நாடாளுமன்ற ஈரவைகளில் எதிலும் அறிமுகப்படுத்தப்படுதலோ முன்மொழியப்படுதலோ ஆகாது; மேலும், குடியரசுத்தலைவர், 344 ஆம் உறுப்பின் (1)ஆம் கூறின்படி அமைக்கப்பட்ட ஆணையத்தின் பரிந்துரைகளையும் அந்த உறுப்பின் (4)ஆம் கூறின்படி அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையையும் ஓர்வுசெய்த பின்பு தவிர, அத்தகைய சட்டமுன்வடிவு எதனையும் அறிமுகப்படுத்துவதற்கு அல்லது திருத்தம் எதனையும் முன்மொழிவதற்குத் தமது ஒப்பளிப்பை அளித்தல் ஆகாது.

அத்தியாயம் IV

தனியுறு நெறியுரைகள்

350. குறைகளைத் தீர்ப்பதற்கான உரையீடுகளில் பயன்படுத்தப்படவேண்டிய மொழி :

ஒன்றியத்தின் அல்லது ஒரு மாநிலத்தின் அலுவலர் எவரிடமும் அல்லது அதிகார அமைப்பு எதனிடமும், குறை எதனையும் தீர்ப்பதற்கான ஓர் உரையீட்டினை அந்த ஒன்றியத்தில் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத்தில் பயன்படுத்தப்படும் மொழிகள் எதனிலும் அளிப்பதற்கு ஒவ்வொருவரும் உரிமை கொண்டவர் ஆவார்.

[1][350அ. தொடக்கநிலையில் தாய்மொழியில் கல்வி கற்பிப்பதற்கான வசதிகள் :

மொழிச் சிறுபான்மைக் குழுமங்களைச் சார்ந்த குழந்தைகள் தொடக்கநிலையில் தாய்மொழியில் கல்வி கற்கப் போதிய வசதிகள் செய்து கொடுக்க ஒவ்வொரு மாநிலமும் அந்த மாநிலத்திற்குள் உள்ள உள்ளாட்சி அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும் முனைந்து முயலுதல் வேண்டும்: மேலும், குடியரசுத்தலைவர் அத்தகைய வசதிகளை உறுதி செய்வதற்குத் தேவையானவை அல்லது முறையானவை என்று தாம் கருதும் பணிப்புரைகளை மாநிலம் எதற்கும் பிறப்பிக்கலாம்.

350ஆ. மொழிச் சிறுபான்மையினருக்கான தனி அலுவலர்:

(1) மொழிச் சிறுபான்மையினருக்கென குடியரசுத்தலைவரால் அமர்த்தப்பெறும் தனி அலுவலர் ஒருவர் இருப்பார்.

(2) இந்த அரசமைப்பின்படி மொழிச் சிறுபான்மையினருக்காக வகை செய்யப்பட்டுள்ள பாதுகாப்புகள் தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளையும் ஆராய்ந்து, அந்தப் பொருட்பாடுகளின்மீது குடியரசுத்தலைவர் பணிக்கும் காலங்களில் குடியரசுத்தலைவருக்கு அறிக்கை அளிப்பது அந்தத் தனி அலுவலரின் கடமை ஆகும்; மேலும், குடியரசுத்தலைவர், அத்தகைய அறிக்கைகள் அனைத்தையும் நாடாளுமன்ற ஈரவைகளின் முன்பும் வைக்கும்படியும் தொடர்புடைய மாநிலங்களின் அரசாங்கங்களுக்கு அனுப்பும்படியும் செய்வார்.]

351. இந்தி மொழி வளர்ச்சிக்கான நெறியுரை:

இந்தி மொழியைப் பரப்புவதற்கு ஊக்கமளிப்பதும், இந்தியாவின் கலப்புருவான பண்பாட்டின் எல்லாக் கூறுகளையும் எடுத்துக்காட்டும் சாதனமாக இருக்கும்வண்ணம் அதனை வளர்ப்பதும், அதன் தனி நீர்மையைக் கலைக்காது இந்துஸ்தானியிலும் எட்டாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பிற இந்திய மொழிகளிலும் பயன்படுத்தப்படும் வடிவமைவுகள், நடையமைவுகள், உரையமைவுகள் ஆகியவற்றைத் தன்மயமாக்குவதன் மூலமும், அதன் சொல்வளத்திற்குத் தேவையாகவோ விரும்பத் தகுந்ததாகவோ உள்ள இடத்தெல்லாம் முதலில் சமஸ்கிருதத்திலிருந்தும் இரண்டதாவதாகப் பிற மொழிகளிலிருந்தும் சொற்களைப் பெற்றுக்கொள்வதன் மூலமும், அதனை வளப்படுத்த முயல்வதும் ஒன்றியத்தின் கடமை ஆகும்.

---

[1] 1956 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் 21ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது.

பகுதி XVIII

நெருக்கடிநிலை பற்றிய வகையங்கள்

352. நெருக்கடிநிலைச் சாற்றாணை:

(1) போர் அல்லது அயல்நாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதந்தாங்கியோரின் கிளர்ச்சி காரணமாக, இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிநிலவரைப் பகுதி எதனின் பாதுகாப்பிற்கும் ஆபத்து விளைவிக்கும் கடுமையான நெருக்கடிநிலை எழுந்துள்ளது எனக் குடியரசுத்தலைவர் தெளிவுறக்காண்பாராயின், அவர், சாற்றாணையின்வழி, இந்தியா முழுவதிலுமோ அச்சாற்றாணையில் குறித்துரைக்கப்படும் அதன் ஆட்சிநிலவரைப் பகுதி எதிலுமோ, அத்தகைய நிலை எழுந்துள்ளது என விளம்பலாம்.

விளக்கம்.–போர் அல்லது அயல்நாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதந்தாங்கியோரின் கிளர்ச்சி காரணமாக இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிநிலவரைப் பகுதி எதனின் பாதுகாப்பிற்கும் உடனடி ஆபத்து உள்ளது எனக் குடியரசுத்தலைவர் தெளிவுறக் காண்பாராயின், அவர், அத்தகைய போர் அல்லது ஆக்கிரமிப்பு அல்லது கிளர்ச்சி உள்ளபடியே நிகழ்வதற்கு முன்பேகூட, அவ்வாறான உடனடி ஆபத்து விளைந்துள்ளது என விளம்புகிற நெருக்கடிநிலைச் சாற்றாணை ஒன்றைப் பிறப்பிக்கலாம்.

(2) (1) ஆம் கூறின்படி பிறப்பிக்கப்பட்ட ஒரு சாற்றாணை பிந்திய சாற்றாணை ஒன்றினால் மாறுதலோ முறித்தறவோ செய்யப்படலாம்.

(3) (1) ஆம் கூறின்படியான ஒரு சாற்றாணையை அல்லது அத்தகைய சாற்றாணையை மாறுதல் செய்கிற ஒரு சாற்றாணையை அத்தகைய சாற்றாணை ஒன்று பிறப்பிக்கப்படலாம் என்கிற ஒன்றியத்து அமைச்சரவையின் (அதாவது, 75ஆம் உறுப்பின்படி அமர்த்தப்பெற்ற தலைமை அமைச்சரையும் அமைச்சரவைப் படிநிலையிலுள்ள பிற அமைச்சர்களையும் கொண்ட அமைச்சரவையின்) முடிவு எழுத்துவடிவில் குடியரசுத்தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவர் பிறப்பித்தல் ஆகாது.

(4) இந்த உறுப்பின்படி பிறப்பிக்கப்படும் சாற்றாணை ஒவ்வொன்றும் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் முன்னிடப்படுதல் வேண்டும்; மேலும், முந்திய சாற்றாணையை முறித்தறவு செய்வதல்லாத சாற்றாணை எதுவும், ஒரு மாதக் காலஅளவு கழிவுறுவதற்கு முன்பே, நாடாளுமன்ற ஈரவைகளும் தீர்மானங்கள் வாயிலாக அதற்கு ஒப்பேற்பு அளித்திருந்தாலன்றி, அக்காலஅளவு கழிவுற்றதும், செயற்பாடு அற்றுப்போகும்:

வரம்புரையாக: (முந்திய சாற்றாணையை முறித்தறவு செய்வதல்லாத) சாற்றாணை எதுவும், மக்களவை கலைக்கப்பட்டிருக்கும் காலத்தின்போது பிறப்பிக்கப்படுகிறது என்றாலும் அல்லது இந்தக் கூறில் சுட்டப்பட்ட ஒரு மாதக் காலஅளவின்போது மக்களவையின் கலைப்பு நிகழ்கிறது என்றாலும், அச்சாற்றாணைக்கு ஒப்பேற்பளிக்கும் தீர்மானம் ஒன்று மாநிலங்களவையால் நிறைவேற்றப்பட்டிருந்து, ஆனால், அக்காலஅளவு கழிவுறுவதன் முன்பு அச்சாற்றாணை பொறுத்த தீர்மானம் எதுவும் மக்களவையால் நிறைவேற்றப்படவில்லை என்றாலும், மக்களவை, அதன் மறுஅமைப்புக்குப் பின்பு முதன்முறையாக அமரும் தேதியிலிருந்து முப்பது நாள் கழிவுறுவதற்கு முன்பு அச்சாற்றாணைக்கு ஒப்பேற்பளிக்கும் தீர்மானம் ஒன்று மக்களவையால் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, அச்சாற்றாணை, அத்தேதியிலிருந்து முப்பது நாள் காலஅளவு கழுவுற்றதும் செயற்பாடு அற்றுப்போகும்.

(5) மேற்கண்டவாறு ஒப்பேற்பளிக்கப்பட்ட சாற்றாணை ஒன்று முறித்தறவு செய்யப்பட்டாலன்றி, (4)ஆம் கூறின்படி அச்சாற்றாணைக்கு ஒப்பேற்பளிக்கிற தீர்மானங்களில் இரண்டாம் தீர்மானம் நிறைவேற்றப்படும் தேதியிலிருந்து ஆறு மாதக் காலஅளவு கழிவுறுவதன்மேல், அது செயற்பாடு அற்றுப் போகும்:

வரம்புரையாக: அத்தகைய சாற்றாணை ஒன்று தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வருவதற்கு ஒப்பேற்பளிக்கும் ஒரு தீர்மானம், நாடாளுமன்ற ஈரவைகளாலும் நிறைவேற்றப்படுமாயின், அவ்வாறு நிறைவேற்றப்படுந்தோறும், அந்தச் சாற்றாணை முறித்தறவு செய்யப்பட்டிருந்தாலன்றி, இந்தக் கூறின்படி பிறவாறு அது செயற்பாடு அற்றுப்போயிருக்கும் தேதியிலிருந்து மேற்கொண்டும் ஓர் ஆறு மாதக் காலஅளவுக்குத் தொடர்ந்து செல்லாற்றலில் இருந்துவரும்:

மேலும் வரம்புரையாக: அத்தகைய ஆறு மாதக் காலஅளவின்போது மக்களவை கலைக்கப்பட்டு அத்தகைய சாற்றாணை தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வருவதற்கு ஒப்பேற்பளிக்கும் தீர்மானம் ஒன்று மாநிலங்களவையால் நிறைவேற்றப்பட்டு ஆனால் அச்சாற்றாணை தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வருவதற்கான தீர்மானம் எதுவும் மேற்சொன்ன காலஅளவின்போது மக்களவையால் நிறைவேற்றப்படாமலிருப்பின், மக்களவை, அதன் மறு அமைப்புக்கு பின்பு முதன் முறையாக அமரும் தேதியிலிருந்து முப்பது நாள் கழிவுறுவதற்கு முன்பு, அச்சாற்றாணை தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வருவதற்கு ஒப்பேற்பளிக்கும் தீர்மானம் ஒன்று மக்களவையால் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, அச்சாற்றாணை அத்தேதியிலிருந்து முப்பது நாள் காலஅளவு கழிவுற்றதும் செயற்பாடு அற்றுப்போகும்.

(6). (4), (5) ஆகிய கூறுகளின் நோக்கங்களைப் பொறுத்தவரை, நாடாளுமன்ற ஈரவைகளில் எதனாலும், அந்த அவையின் மொத்த உறுப்பினர்களில் பொரும்பான்மையும் அந்த அவையில் வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினருக்குக் குறையாத பெரும்பான்மையும் பெற்றிருந்தால் மட்டுமே அத்தீர்மானம் நிறைவேற்றப்படலாம்.

(7) மேலேகண்ட கூறுகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், (1)ஆம் கூறின்படி பிறப்பிக்கப்பட்ட ஒரு சாற்றாணைக்கு ஒப்பேற்பளிக்க அல்லது, நேர்வுக்கேற்ப, அச்சாற்றாணை தொடர்ந்து செல்லாற்றலிலிருந்து வருவதற்கு ஒப்பேற்பளிக்க மறுக்கிற தீர்மானம் ஒன்றை மக்களவை நிறைவேற்றுமாயின், குடியரசுத்தலைவர், அத்தகைய சாற்றாணையை அல்லது அத்தகைய சாற்றாணையில் மாறுதல் செய்யும் சாற்றாணையை முறித்தறவு செய்தல்வேண்டும்.

(8). (1) ஆம் கூறின்படி பிறப்பிக்கப்பட்ட ஒரு சாற்றாணைக்கு அல்லது அத்தகைய சாற்றாணையில் மாறுதல் செய்யும் ஒரு சாற்றாணைக்கு ஒப்பேற்பளிக்க மறுப்பதற்கு அல்லது, நேர்வுக்கேற்ப, அது தொடர்ந்து செல்லாற்றலிலிருந்து வருவதற்கு ஒப்பேற்பளிக்க மறுப்பதற்கு ஒரு தீர்மானத்தைக் கொணர்வதற்கான தங்கள் கருத்தைத் தெரிவித்து, மக்களவை மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பத்திலொரு பகுதிக்குக் குறையாதவர்கள் கையொப்பமிட்ட எழுத்துவடிவிலான ஓர் அறிவிப்பு–

(அ) அவையின் கூட்டத்தொடர் தொடர்நிலையிலிருந்தால், அவைத்தலைவருக்கு, அல்லது

(ஆ) அவையின் கூட்டத்தொடர் தொடர்நிலையில் இல்லாதிருந்தால், குடியரசுத்தலைவருக்கு

அளிக்கப்பட்டிருக்குமிடத்து, அவைத்தலைவர் அல்லது, நேர்வுக்கேற்ப, குடியரசுத்தலைவர் அத்தகைய அறிவிப்பைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அத்தகைய தீர்மானத்தை ஓர்வு செய்வதற்காக அவையின் தனி அமர்வு ஒன்று நடத்தப்படுதல் வேண்டும்.

(9) இந்த உறுப்பின்படி குடியரசுத்தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தில், (1)ஆம் கூறின்படி குடியரசுத்தலைவரால் ஒரு சாற்றாணை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருந்து, அத்தகைய சாற்றாணை செயற்பாட்டில் இருப்பினும் இல்லாவிடினும் போரோ அயல்நாட்டு ஆக்கிரமிப்போ ஆயுதந்தாங்கியோரின் கிளர்ச்சியோ ஏற்பட்டுள்ளது அல்லது போரோ அயல்நாட்டு ஆக்கிரமிப்போ ஆயுதந்தாங்கியோரின் கிளர்ச்சியோ உடனடியாக ஏற்படக்கூடிய ஆபத்து நிலை உள்ளது என்கிற வெவ்வேறு காரணங்களின்மீது வெவ்வேறான சாற்றாணைகள் பிறப்பிப்பதற்கான அதிகாரமும் அடங்கும்.

353. நெருக்கடிநிலைச் சாற்றாணையின் விளைவு:

நெருக்கடிநிலைச் சாற்றாணை ஒன்று செயற்பாட்டில் இருக்குங்கால்–

(அ) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், மாநிலம் ஒன்றன் ஆட்சி அதிகாரம் எம்முறையில் செலுத்தப்படவேண்டும் என்று பணிப்புரைகள் இடுவதற்கான அதிகாரமும் ஒன்றியத்து ஆட்சி அதிகாரத்தில் அடங்கும்.

(ஆ) எந்தப் பொருட்பாடு பொறுத்தும் சட்டங்கள் இயற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரமானது, ஒன்றியத்துப் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள ஒன்றாக அந்தப் பொருட்பாடு இல்லாதிருப்பினுங்கூட ஒன்றியத்திற்கு அல்லது ஒன்றியத்தின் அலுவலர்களுக்கும் அதிகாரஅமைப்புகளுக்கும் அந்தப் பொருட்பாடு பொறுத்து அதிகாரங்களை வழங்குதல், கடமைகளை விதித்தல் ஆகியவற்றிற்கான சட்டங்களை அல்லது அவ்வாறு அதிகாரங்களை வழங்கவும் கடமைகளை விதிக்கவும் அதிகாரமளிப்பதற்கான சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரத்தையும் உள்ளடக்கும்:

வரம்புரையாக: நெருக்கடிநிலைச் சாற்றாணை ஒன்று, இந்திய ஆட்சிநிலவரையின் ஒரு பகுதியில் மட்டுமே செயற்பாட்டில் இருக்குமிடத்து—

(i) (அ) கூறின்படி பணிப்புரைகள் இடுவதற்கு ஒன்றியத்திற்குள்ள ஆட்சி அதிகாரமும்,

(ii) (ஆ) கூறின்படி சட்டங்களியற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரமும்,

நெருக்கடிநிலைச் சாற்றாணை செயற்பாட்டிலுள்ள இந்திய ஆட்சிநிலவரையின் அப்பகுதியில் நடைபெறும் அல்லது அதன் தொடர்பாக நடைபெறும் செயல்களால், இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிநிலவரைப் பகுதி எதனின் பாதுகாப்பிற்கும் ஆபத்து எழுமாயின், அவ்வாறு எழும் அளவிற்கு, நெருக்கடிநிலைச் சாற்றாணை செயற்பாட்டிலிருக்கிற மாநிலமாகவோ அதன் பகுதி எதுவுமாகவோ இல்லாத பிற மாநிலம் எதனையுங்கூட அளாவி நிற்கும்.

354. நெருக்கடிநிலைச் சாற்றாணை ஒன்று செயற்பாட்டில் இருக்குங்கால் வருவாய்களைப் பகிர்ந்தளித்தல் தொடர்பான வகையங்கள் பொருந்துறுதல்:

(1) நெருக்கடிநிலைச் சாற்றாணை ஒன்று செயற்பாட்டில் இருக்குங்கால், குடியரசுத் தலைவர், ஆணையின்வழி, 268 முதல் 279 வரையுள்ள உறுப்புகளின் வகையங்கள் அனைத்தும் அல்லது அவற்றில் எதுவும், தாம் தக்கதெனக் கருதும் விதிவிலக்குகள் அல்லது மாற்றமவுகளுக்கு உட்பட்டு எந்நேர்விலும், அந்தச் சாற்றாணை செயற்பாடு அற்றுப்போகும் நிதியாண்டு முடிவடையும் காலத்திற்கு மேற்படாமல், அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் காலஅளவிற்குச் செல்திறம் உடையன ஆகும் எனப் பணிக்கலாம்.

(2). (1) ஆம் கூறின்படி பிறப்பிக்கப்படும் ஆணை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடுமான விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் முன்னிடப்படுதல் வேண்டும்.

355. அயல்நாட்டு ஆக்கிரமிப்பிலிருந்தும் உள்நாட்டுக் குழப்பத்திலிருந்தும் மாநிலங்களைப் பாதுகாப்பதற்கு ஒன்றியத்திற்குள்ள கடமை:

மாநிலம் ஒவ்வொன்றையும் அயல்நாட்டு ஆக்கிரமிப்பிலிருந்தும் உள்நாட்டுக் குழப்பத்திலிருந்தும் பாதுகாப்பதும், இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு இணங்க ஒவ்வொரு மாநில அரசாங்கத்தையும் நடத்திச் செல்வதை உறுதிசெய்வதும் ஒன்றியத்தின் கடமை ஆகும்.

356. மாநிலங்களில் அரசமைப்பின் இயங்குமுறை செயலற்றுப்போகும் நேர்வில், அதற்கான ஏற்பாடுகள்:

(1) குடியரசுத்தலைவர், ஒரு மாநில ஆளுநரிடமிருந்து அறிக்கை ஒன்றைப் பெறுவதன்மேல் அல்லது பிறவாறு, இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு இணங்க மாநில அரசாங்கத்தை நடத்திச் செல்ல இயலாத ஒரு நிலைமை எழுந்துள்ளதெனத் தெளிவுறக்காண்பாராயின், குடியரசுத்தலைவர் ஒரு சாற்றாணையின் வழி—

(அ) அந்த மாநில அரசாங்கத்தின் செயற்பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும், அந்த மாநில ஆளுநரிடம் அல்லது அந்த மாநிலத்திலுள்ள அந்த மாநிலச் சட்டமன்றம் அல்லாத பிற குழுமம் அல்லது அதிகாரஅமைப்பு எதனிடமும் உற்றமைந்த அல்லது அவர்களால் செலுத்தப்படுவதாகும் அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் தாமே மேற்கொள்ளலாம்;

(ஆ) அந்த மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்கள், நாடாளுமன்றத்தின் அதிகாரத்தாலோ அதன் வழியாலோ செலுத்தப்படுவதாகும் என விளம்பலாம்;

(இ) அந்த மாநிலத்திலுள்ள குழுமம் அல்லது அதிகாரஅமைப்பு தொடர்பாக உள்ள இந்த அரசமைப்பின் வகையங்களில் எதன் செயற்பாட்டையும் முழுவதுமாகவோ பகுதியாகவோ தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளடங்கலாக, இந்தச் சாற்றாணையின் நோக்கங்களைச் செயற்படுத்துவற்குத் தேவையென அல்லது உகந்தவையெனக் குடியரசுத்தலைவருக்குத் தோன்றும் சார்வுறு மற்றும் விளைவுறு ஏற்பாடுகளைச் செய்யலாம்:

வரம்புரையாக: இந்தக் கூறிலுள்ள எதுவும், ஓர் உயர் நீதிமன்றத்திடம் உற்றமைந்துள்ள அல்லது அதனால் செலுத்தப்படுவதாகும் அதிகாரங்களில் எதனையும் தாமே மேற்கொள்ளவோ, உயர் நீதிமன்றங்கள் தொடர்பான இந்த அரசமைப்பின் வகையம் எதனின் செயற்பாட்டையும் முழுவதுமாக அல்லது பகுதியாக, தற்காலிகமாக நிறுத்திவைக்கவோ குடியரசுத்தலைவருக்கு அதிகாரமளிப்பதில்லை.

(2) அத்தகைய சாற்றாணை எதுவும், பிந்திய சாற்றாணை ஒன்றினால் முறித்தறவோ மாறுதலோ செய்யப்படலாம்.

(3) இந்த உறுப்பின்படி பிறப்பிக்கப்படும் சாற்றாணை ஒவ்வொன்றும், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் முன்னிடப்படுதல் வேண்டும்; மேலும், முந்திய சாற்றாணை ஒன்றை முறித்தறவு செய்வதல்லாத சாற்றாணை எதுவும், இரண்டு மாதம் கழுவுறுவதற்கு முன்பே நாடாளுமன்ற ஈரவைகளும் தீர்மானங்கள் வாயிலாக அதற்கு ஒப்பேற்பு அளித்திருந்தாலன்றி, அக்காலஅளவு கழிவுற்றதும் செயற்பாடு அற்றுப்போகும்:

வரம்புரையாக: (முந்திய சாற்றாணையை முறித்தறவு செய்வதல்லாத) சாற்றாணை எதுவும் மக்களவை கலைக்கப்பட்டிருக்கும் காலத்தின்போது பிறப்பிக்கப்படுகிறது என்றாலும் அல்லது இந்தக் கூறில் சுட்டப்பட்ட இரண்டு மாதக் காலஅளவின்போது மக்களவையின் கலைப்பு நிகழ்கிறது என்றாலும், அந்தச் சாற்றாணைக்கு ஒப்பேற்பளிக்கும் தீர்மானம் ஒன்று மாநிலங்களவையால் நிறைவேற்றப்பட்டிருந்து, 'ஆனால்' அக்காலஅளவு கழிவுறுவதன் முன்பு, அச்சாற்றாணை பொறுத்த தீர்மானம் எதுவும் மக்களவையால் நிறைவேற்றப்படவில்லை என்றாலும், மக்களவை, அதன் மறுஅமைப்புக்குப் பின்பு, முதன்முறையாக அமரும் தேதியிலிருந்து முப்பது நாள் கழிவுறுவதற்கு முன்பு, அச்சாற்றாணைக்கு ஒப்பேற்பளிக்கும் தீர்மானம் ஒன்று மக்களவையால் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, அச்சாற்றாணை அத்தேதியிலிருந்து முப்பது நாள் காலஅளவு கழிவுற்றதும் செயற்பாடு அற்றுப்போகும்.

(4) மேற்கண்டவாறு ஒப்பேற்பளிக்கப்பட்ட சாற்றாணை ஒன்று முறித்தறவு செய்யப்பட்டிருந்தாலன்றி, அச்சாற்றாணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதக் காலஅளவு கழிவுற்றதும், அது செயற்பாடு அற்றுப்போகும்:

வரம்புரையாக: அத்தகைய சாற்றாணை ஒன்று தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வருவதற்கு ஒப்பேற்பளிக்கும் ஒரு தீர்மானம் நாடாளுமன்ற ஈரவைகளாலும் நிறைவேற்றப்படுமாயின், அவ்வாறு நிறைவேற்றப்படுந்தொறும் அந்தச் சாற்றாணை முறித்தறவு செய்யப்பட்டாலன்றி, இந்தக் கூறின்படி பிறவாறு அது செயற்பாடு அற்றுப்போயிருக்கும் தேதியிலிருந்து மேற்கொண்டும் ஓர் ஆறு மாதக் காலஅளவுக்குத் தொடர்ந்து செல்லாற்றலில் இருந்துவரும்; ஆனால், அத்தகைய சாற்றாணை எதுவும், எந்நேர்விலும், மூன்றாண்டுகளுக்கு மேல் செல்லாற்றலில் இருந்துவருதல் ஆகாது:

மேலும் வரம்புரையாக: அத்தகைய ஆறு மாதக் காலஅளவின்போது மக்களவை கலைக்கப்பட்டு அத்தகைய சாற்றாணை தொடர்ந்து செல்லாற்றலில் இருந்துவருவதற்கு ஒப்பேற்பளிக்கும் தீர்மானம் ஒன்று மாநிலங்களவையால் நிறைவேற்றப்பட்டு ஆனால், அச்சாற்றாணை தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வருவதற்கான தீர்மானம் எதுவும் மேற்சொன்ன காலஅளவின்போது மக்களவையால் நிறைவேற்றப்படாமலிருப்பின், மக்களவை, அதன் மறுஅமைப்புக்குப் பின்பு முதன்முறையாக அமரும் தேதியிலிருந்து முப்பதுநாள் கழிவுறுவதற்கு முன்பு அச்சாற்றாணை தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வருவதற்கு ஒப்பேற்பளிக்கும் தீர்மானம் ஒன்று மக்களவையால் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, அச்சாற்றாணை, அத்தேதியிலிருந்து முப்பதுநாள் காலஅளவு கழிவுற்றதும் செயற்பாடு அற்றுப்போகும்:

பின்னும் வரம்புரையாக: பஞ்சாப் மாநிலத்தைப் பொறுத்து, 1987 மே 11ஆம் நாளன்று (1)ஆம் கூறின்படி பிறப்பிக்கப்பட்ட சாற்றாணையைப் பொறுத்தவரை, இந்தக் கூறின் முதலாம் வரம்புரையில் "மூன்று ஆண்டுகள்" என்று சுட்டப்படுவது, "[ஐந்து ஆண்டுகள்]" என்று சுட்டப்படுவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

---

[1] 1991 ஆம் ஆண்டு அரசமைப்பு (அறுபத்து எட்டாம் திருத்தம்) சட்டத்தால் மாற்றாக அமைக்கப்பட்டது.

(5). (4) ஆம் கூறில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், (3)ஆம் கூறின்படி ஒப்பேற்பளிக்கப்பட்ட ஒரு சாற்றாணையை, அச்சாற்றாணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு கழிவுற்ற பின்னரும் ஒரு காலஅளவுக்குத் தொடர்ந்து செல்லாற்றலில் இருந்துவருமாறு செய்வதற்கான ஒரு தீர்மானம்—

(அ) அத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்படும்போது, இந்தியா முழுவதிலும் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலம் முழுவதிலும் அல்லது அதன்பகுதி எதிலும், ஒரு நெருக்கடிநிலைச் சாற்றாணை செயற்பாட்டில் இருந்தாலன்றியும்,

(ஆ) தொடர்புடைய மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குப் பொதுத் தேர்தல்கள் நடத்துவதில் எழும் இடர்ப்பாடுகள் காரணமாக, (3)ஆம் கூறின்படி ஒப்பேற்பளிக்கப்பட்ட சாற்றாணை அத்தகைய தீர்மானத்தில் குறித்துரைக்கப்படும் காலஅளவுக்குத் தொடர்ந்து செல்லாற்றலில் இருத்தல் தேவையாகிறது எனத் தேர்தல் ஆணையம் உறுதிச்சான்றளித்தாலன்றியும்

நாடாளுமன்ற ஈரவைகளில் எதனாலும் நிறைவேற்றப்படுதல் ஆகாது:

வரம்புரையாக: இந்தக் கூறிலுள்ள எதுவும், பஞ்சாப் மாநிலத்தைப் பொறுத்து, 1987 மே 11 ஆம் நாளன்று, (1)ஆம் கூறின்படி பிறப்பிக்கப்பட்ட சாற்றாணைக்குப் பொருந்துறுதல் ஆகாது.

357. 356ஆம் உறுப்பின்படி பிறப்பிக்கப்பட்ட சாற்றாணையின் வழி சட்டமியற்றும் அதிகாரங்களைச் செலுத்துதல்:

(1) 356ஆம் உறுப்பின் (1)ஆம் கூறின்படி பிறப்பிக்கப்பட்ட சாற்றாணையின் வழி, ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்கள், நாடாளுமன்றத்தின் அதிகாரத்தாலோ அதன்வழியாலோ செலுத்தப்படுவதாகும் என்று விளம்புகை செய்யப்படுகிறவிடத்து—

(அ) சட்டங்கள் இயற்றுவதற்கான அந்த மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரத்தைக் குடியரசுத்தலைவருக்கு வழங்கவும், அவ்வாறு அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைத் தாம் பொருத்தமெனக் கருதி விதிக்கும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, அதன்பொருட்டுத் தாம் குறித்துரைக்கும் பிற அதிகாரஅமைப்பு எதற்கும் ஒப்படைவு செய்வதற்குக் குடியரசுத்தலைவருக்கு அதிகாரமளிக்கவும் நாடாளுமன்றத்திற்குத் தகுதிறம் உண்டு;

(ஆ) ஒன்றியத்திற்கு அல்லது அதன் அலுவலர்களுக்கும் அதிகாரஅமைப்புக்கும் அதிகாரங்களை வழங்குதல், கடமைகளை விதித்தல் ஆகியவற்றிற்கான சட்டங்களையும், அதிகாரங்களை வழங்கவும் கடமைகளை விதிக்கவும் அதிகாரமளிப்பதற்கான சட்டங்களையும் இயற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கும் அல்லது (அ) உட்கூறின்படி சட்டங்கள் இயற்றுவதற்கான அத்தகைய அதிகாரம் உற்றமைந்திருக்கிற குடியரசுத்தலைவருக்கும் பிற அதிகாரஅமைப்பிற்கும் தகுதிறம் உண்டு;

(இ) மக்களவையின் கூட்டத்தொடர், தொடர்நிலையில் இல்லாதிருக்கும்போது, நாடாளுமன்றம், மாநிலத் திரள்நிதியத்திலிருந்து செய்யப்படும் செலவினத்திற்கு ஒப்பளிப்பு வழங்கும் வரையில், அச்செலவினம் பொறுத்து அதிகாரமளிப்பதற்குக் குடியரசுத்தலைவருக்குத் தகுதிறம் உண்டு.

(2) நாடாளுமன்றத்திற்கு அல்லது குடியரசுத்தலைவருக்கு அல்லது (1) ஆம் கூறின் (அ) உட்கூறில் சுட்டப்பட்ட பிற அதிகாரஅமைப்பிற்கு 356ஆம் உறுப்பின்படி பிறப்பிக்கப்பட்ட சாற்றாணையின்வழி மாநிலச் சட்டமன்றத்தின் சட்டமியற்று அதிகாரம் அளிக்கப்பட்டு, அதன்படி நாடாளுமன்றம் அல்லது குடியரசுத்தலைவர் அல்லது பிற அதிகாரஅமைப்பு எதுவும் சட்டம் இயற்றியிருப்பின், அச்சட்டமானது அச்சாற்றாணை செயற்பாட்டிலிருப்பது அற்றுப்போனதன் பின்பும் ஒரு தகுதிறமுள்ள சட்டமன்றத்தினால் அல்லது பிற அதிகாரஅமைப்பினால் மாற்றமோ நீக்கறவோ திருத்தமோ செய்யப்படும்வரையில், தொடர்ந்து செல்லாற்றலில் இருந்துவரும்.

358. நெருக்கடிநிலைகளின்போது 19ஆம் உறுப்பின் வகையங்களைத் தற்காலிகமாக நிறுத்திவைத்தல் :

போர் அல்லது அயல்நாட்டு ஆக்கிரமிப்பு காரணமாக இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிநிலவரைப்பகுதி எதனின் பாதுகாப்பிற்கும் ஆபத்து விளைந்துள்ளது என விளம்புகிற நெருக்கடி நிலைச்சாற்றாணை ஒன்று செயற்பாட்டிலிருக்குங்கால், 19ஆம் உறுப்பில் உள்ள எதுவும், III ஆம் பகுதியில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான அரசு, அந்தப்பகுதியில் அடங்கியுள்ள வகையங்கள் இல்லாதிருந்தால், சட்டங்களை இயற்றுவதற்கும் ஆட்சித் துறை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எவ்வாறு தகுதிறம் கொண்டிருக்குமோ அவ்வாறே சட்டங்களை இயற்றுவதற்கும் ஆட்சித் துறை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அரசுக்குள்ள அதிகாரத்தை வரையறுப்பதில்லை; ஆனால், அவ்வாறு இயற்றப்பட்ட சட்டம் எதுவும், அந்தச் சாற்றாணையின் செயற்பாடு அற்றுப்போன உடனேயே அரசின் தகுதிறமின்மையின் அளவுக்குச் செல்திறம் அற்றுப்போகும்; எனினும், அவ்வாறு அச்சட்டம் செல்திறம் அற்றுப் போவதற்கு முன்பு செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எதுவும் பாதிக்கப்படுவதில்லை:

வரம்புரையாக: அத்தகைய நெருக்கடிநிலைச் சாற்றாணை இந்திய ஆட்சிநிலவரையின் ஒரு பகுதியில் மட்டுமே செயற்பாட்டில் இருக்குமிடத்து, அந்த நெருக்கடிநிலைச் சாற்றாணை செயற்பாட்டிலுள்ள இந்திய ஆட்சி நிலவரையின் அப்பகுதியில் நடைபெறும் அல்லது அதன் தொடர்பாக நடைபெறும் செயல்களால், இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிநிலவரைப்பகுதி எதனின் பாதுகாப்பிற்கும் ஆபத்து எழுமாயின், அவ்வாறு எழும் அளவிற்கு, அந்த நெருக்கடிநிலைச் சாற்றாணை செயற்பாட்டில் இல்லாதிருக்கிற மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஒன்றில் அல்லது அதன் பகுதி எதிலும் அல்லது அதன் தொடர்பாக, இந்த உறுப்பின்படி அத்தகைய சட்டம் எதுவும் இயற்றப்படலாம்; அல்லது அத்தகைய ஆட்சித் துறை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படலாம்.

(2). (1) ஆம் கூறில் உள்ள எதுவும்–

(அ) சட்டம் ஒன்று இயற்றப்படும்போது செயற்பாட்டிலிருக்கும் நெருக்கடிநிலைச் சாற்றாணைக்கு அச்சட்டம் தொடர்புடையது என்ற ஒரு வாசகத்தினைக் கொண்டிராத அத்தகைய சட்டம் எதற்கும், அல்லது

(ஆ) அத்தகைய வாசகத்தினைக் கொண்டிருக்கும் ஒரு சட்டத்தின்படி அல்லாமல் பிறவாறு மேற்கொள்ளப்பட்ட ஆட்சித் துறை நடவடிக்கை எதற்கும் பொருந்துறுவதில்லை.

359. நெருக்கடிநிலைகளின் போது IIIஆம் பகுதியினால் வழங்கப்படும் உரிமைகள் செயலுறுத்தப்படுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் :

(1) நெருக்கடிநிலைச் சாற்றாணை ஒன்று செயற்பாட்டிலிருக்குமிடத்து, குடியரசுத் தலைவர், ஆணையின்வழி, (20, 21 ஆகிய உறுப்புகளைத் தவிர்த்து) IIIஆம் பகுதியினால் வழங்கப்படும் உரிமைகளில், அந்த ஆணையில் குறிப்பிடப்படும் உரிமைகளைச் செயலுறுத்துவதற்கென நீதிமன்றம் எதிலும் நடவடிக்கை தொடர்வதற்குள்ள உரிமையும், அவ்வாறு குறிப்பிடப்பட்ட உரிமைகளைச் செயலுறுத்துவதற்கென நீதிமன்றம் எதிலும் முடிவுறாநிலையிலுள்ள நடவடிக்கைகள் அனைத்தும், அச்சாற்றாணை செல்லாற்றலிலுள்ள காலஅளவுக்கு அல்லது அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் குறைந்த காலஅளவுக்குத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் என விளம்பலாம்.

(1அ). (20, 21 ஆகிய உறுப்புகளைத் தவிர்த்து) IIIஆம் பகுதியினால் வழங்கப்படும் உரிமைகளில் எதனையும் குறிப்பிட்டு (1)ஆம் கூறின்படி பிறப்பிக்கப்படும் ஓர் ஆணை செயற்பாட்டிலிருக்குங்கால், அந்த உரிமைகளை வழங்குகிற அப்பகுதியிலுள்ள எதுவும், மேற்சொன்ன IIIஆம் பகுதியில் பொருள்வரையறைசெய்யப்பட்டவாறான அரசு, அப்பகுதியில் அடங்கியுள்ள வகையங்கள் இல்லாதிருந்தால், சட்டங்களை இயற்றுவதற்கும் ஆட்சித் துறை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எவ்வாறு தகுதிறம் கொண்டிருக்குமோ அவ்வாறே சட்டங்களை இயற்றுவதற்கும் ஆட்சித் துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும், அந்த அரசிற்குள்ள அதிகாரத்தை வரையறுப்பதில்லை; ஆனால், அவ்வாறு இயற்றப்பட்ட சட்டம் எதுவும், மேற்சொன்ன ஆணை செயற்படுவது அற்றுப்போனவுடனேயே, அரசின் தகுதிறமின்மையின் அளவுக்கு, செல்திறம்

அற்றுப்போகும், எனினும் அவ்வாறு அச்சட்டம் செல்திறம் அற்றுப் போவதற்கு முன்பு செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எதுவும் பாதிக்கப்படுவதில்லை:

வரம்புரையாக: நெருக்கடிநிலைச் சாற்றாணை இந்திய ஆட்சிநிலவரையின் ஒரு பகுதியில் மட்டுமே செயற்பாட்டில் இருக்குமிடத்து, அந்த நெருக்கடிநிலைச் சாற்றாணை செயற்பாட்டிலுள்ள இந்திய ஆட்சிநிலவரையின் அப்பகுதியில் நடைபெறும் அல்லது அதன் தொடர்பாக நடைபெறும் செயல்களால், இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிநிலவரைப் பகுதி எதனின் பாதுகாப்பிற்கும் ஆபத்து எழுமாயின், அவ்வாறு எழும் அளவிற்கு, அந்த நெருக்கடிநிலைச் சாற்றாணை செயற்பாட்டில் இல்லாதிருக்கிற மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஒன்றில் அல்லது அதன் பகுதி எதிலும் அல்லது அதன் தொடர்பாக, இந்த உறுப்பின்படி அத்தகைய சட்டம் எதுவும் இயற்றப்படலாம்; அல்லது அத்தகைய ஆட்சித் துறை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படலாம்.

(1ஆ), (1அ) கூறில் உள்ள எதுவும்—

(அ) ஒரு சட்டம் இயற்றப்படும்போது செயற்பாட்டிலிருக்கும் நெருக்கடிநிலைச் சாற்றாணைக்கு அச்சட்டம் தொடர்புடையது என்ற ஒரு வாசகத்தினைக் கொண்டிராத அத்தகைய சட்டம் எதற்கும், அல்லது

(ஆ) அத்தகைய வாசகத்தினைக் கொண்டிருக்கும் ஒரு சட்டத்தின்படி அல்லாமல் பிறவாறு மேற்கொள்ளப்பட்ட ஆட்சித் துறை நடவடிக்கை எதற்கும்

பொருந்துறுவதில்லை.

(2) மேற்சொன்னவாறு பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணை, இந்திய ஆட்சி நிலவரை முழுவதையுமோ அதன் பகுதி எதனையுமோ அளாவி நிற்கலாம்:

வரம்புரையாக: நெருக்கடிநிலைச் சாற்றாணை இந்திய ஆட்சிநிலவரையின் ஒரு பகுதியில் மட்டுமே செயற்பாட்டிலிருக்குமிடத்து, அந்த நெருக்கடிநிலைச் சாற்றாணை செயற்பாட்டிலுள்ள இந்திய ஆட்சிநிலவரையின் அப்பகுதியில் நடைபெறும் அல்லது அதன் தொடர்பாக நடைபெறும் செயல்களால் இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிநிலவரைப் பகுதி எதனின் பாதுகாப்பிற்கும் ஆபத்து எழுந்துள்ளதெனக் குடியரசுத்தலைவர் தெளிவுறக்கண்டு, அத்தகைய ஆணை எதனையும் இந்திய ஆட்சிநிலவரையின் பிற பகுதி எதற்கும் அளாவச் செய்வது அவசியமெனக் கருதினாலன்றி, அந்த ஆணை அத்தகைய பிற பகுதி எதனையும் அளாவி நிற்காது.

(3) (1) ஆம் கூறின்படி பிறப்பிக்கப்படும் ஆணை ஒவ்வொன்றும் அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடுமான விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் முன்னிடப்படுதல் வேண்டும்.

[1][359அ * * * *]

---

1. 1989 ஆம் ஆண்டு அரசமைப்பு (அறுபத்து மூன்றாம் திருத்தம்) சட்டத்தினால் நீக்கறவு செய்யப்பட்டது.

360. நிதி நிலை நெருக்கடி பற்றிய வகையங்கள்:

(1) இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிநிலவரைப் பகுதி எதனின் நிதி பொறுத்த நிலைத்திறத்திற்கு அல்லது நிதிமதிப்பு நிலைக்கு ஆபத்து விளைவிக்கும் நிலை எழுந்துள்ளது எனக் குடியரசுத்தலைவர் தெளிவுறக்காண்பாராயின், அவர், ஒரு சாற்றாணையின் வழி, அத்தகைய நிலை எழுந்துள்ளதென விளம்பலாம்.

(2). (1) ஆம் கூறின்படி பிறப்பிக்கப்படும் சாற்றாணை எதுவும்–

(அ) பிந்திய சாற்றாணை ஒன்றினால் முறித்தறவோ மாறுதலோ செய்யப்படலாம்;

(ஆ) நாடாளுமன்ற ஈரவைகளின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்:

(இ) இரண்டு மாதக் காலஅளவு கழிவுறுவதற்கு முன்பே, நாடாளுமன்ற ஈரவைகளும் தீர்மானங்கள் வாயிலாக ஒப்பேற்பு அளித்திருந்தாலன்றி, அக்காலஅளவு கழிவுற்றதும் செயற்பாடு அற்றுப் போகும்:

வரம்புரையாக: அத்தகைய சாற்றாணை எதுவும், மக்களவை கலைக்கப்பட்டிருக்கும் காலத்தின்போது பிறப்பிக்கப்படுகிறது அல்லது (இ) உட்கூறில் சுட்டப்பட்டுள்ள இரண்டு மாதக் காலஅளவின்போது மக்களவையின் கலைப்பு நிகழ்கிறது என்றாலும், அந்தச் சாற்றாணைக்கு ஒப்பேற்பளிக்கும் தீர்மானம் ஒன்று மாநிலங்களவையால் நிவைவேற்றப்பட்டிருந்து, ஆனால் அக்காலஅளவு கழிவுறுவதன் முன்பு, அச்சாற்றாணை பொறுத்து தீர்மானம் எதுவும் மக்களவையால் நிறைவேற்றப்படவில்லை என்றாலும், மக்களவை, அதன் மறு அமைப்புக்குப் பின்பு முதன்முதலாக அமரும் தேதியிலிருந்து முப்பது நாள் கழிவுறுவதற்கு முன்பு, அச்சாற்றாணைக்கு ஒப்பேற்பளிக்கும் தீர்மானம் ஒன்று மக்களவையால் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, அச்சாற்றாணை மேற்சொன்ன அந்த முப்பது நாள் காலஅளவு கழிவுற்றதும் செயற்பாடு அற்றுப்போகும்.

(3). (1) ஆம் கூறில் குறிப்பிடப்பட்டுள்ள சாற்றாணை எதுவும் செயற்பாட்டிலிருக்கும் காலஅளவின்போது, ஒன்றியத்து ஆட்சி அதிகாரமானது, அதன் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்படும் நிதிநெறி விதிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு மாநிலம் எதற்கும் பணிப்புரைகள் இடுவதையும் அதற்குத் தேவை எனவும், ஏற்றவை எனவும் குடியரசுத்தலைவர் கருதும் பிற பணிப்புரைகளை இடுவதையும் அளாவி நிற்கும்.

(4) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்–

(அ) அத்தகைய பணிப்புரை எதுவும்–

(i) ஒரு மாநிலத்து அலுவற்பாடுகள் தொடர்பாக பணிபுரிகிறவர்கள் அனைவரின் அல்லது அவர்களில் ஒரு வகையினரின் வரையூதியங்களையும் படித்தொகைகளையும் குறைப்பதை வேண்டுறுத்தும் வகையம் ஒன்றை உள்ளடக்கலாம்;

(ii) பணச்சட்ட முன்வடிவுகள் அனைத்தும் அல்லது 207ஆம் உறுப்பின் வகையங்கள் பொருந்துறுகிற பிற சட்டமுன்வடிவுகள் அந்த மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பின்பு குடியரசுத்தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென வேண்டுறுத்துகிற வகையம் ஒன்றை உள்ளடக்கலாம்.

(ஆ) இந்த உறுப்பின்படி பிறப்பிக்கப்படும் சாற்றாணை எதுவும் செயற்பாட்டிலிருக்கும் காலஅளவின்போது உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் நீதிபதிகள் உள்ளடங்கலாக, ஒன்றியத்து அலுவற்பாடுகள் தொடர்பாகப் பணிபுரிபவர்கள் அனைவரின் அல்லது அவர்களின் ஒரு வகையினரின் வரையூதியங்களையும் படித்தொகைகளையும் குறைப்பதற்கான பணிப்புரைகள் இடுவதற்குக் குடியரசுத்தலைவர் தகுதிறம் உடையவர் ஆவார்.

பகுதி XIX

பல்வகை

361. குடியரசுத்தலைவர், ஆளுநர்கள், இராஜப்பிரமுகர்கள் ஆகியோருக்குக் காப்பளிப்பு:

(1) குடியரசுத்தலைவர் அல்லது ஒரு மாநிலத்தின் ஆளுநர் அல்லது இராஜப்பிரமுகர் தமது பதவியின் அதிகாரங்களைச் செலுத்துவதற்காகவும் கடமைகளைப் புரிவதற்காகவும், அல்லது அந்த அதிகாரங்களைச் செலுத்துவதிலும் கடமைகளைப் புரிவதிலும் அவர் செய்த அல்லது செய்ததாகக் கருதப்படும் செயல் எதனையும் குறித்து நீதிமன்றம் எதற்கும் காரணங்கூறும் பொறுப்புடையவர் ஆகார்:

வரம்புரையாக: 61 ஆம் உறுப்பின்படியான ஒரு குற்றச்சார்த்தினை விசாரிப்பதற்காக நாடாளுமன்றத்தின் ஈரவைகளில் எதனாலும் அமர்த்தப்பட்ட அல்லது குறித்திடப்பட்ட நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது குழுமம் எதனாலும் குடியரசுத்தலைவரின் நடத்தை ஆய்வு செய்யப்படுவதற்காக கொண்டுவரப்படலாம்:

மேலும் வரம்புரையாக: இந்தக் கூறிலுள்ள எதுவும், இந்திய அரசாங்கத்திற்கு அல்லது ஒரு மாநில அரசாங்கத்திற்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு எவருக்கும் உள்ள உரிமையை வரையறை செய்வதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

(2) குடியரசுத்தலைவரின் அல்லது ஒரு மாநில ஆளுநரின் பதவிக் காலத்தின்போது, அவருக்கு எதிராக நீதிமன்றம் எதிலும் எவ்வகையான குற்றவியல் நடவடிக்கையும் தொடரப்படுதலோ தொடர்ந்து நடத்தப்படுதலோ ஆகாது.

(3) குடியரசுத்தலைவரின் அல்லது ஒரு மாநில ஆளுநரின் பதவிக் காலத்தின்போது அவரைக் கைதுசெய்வதற்கோ சிறையிடுவதற்கோ நீதிமுறைக் கட்டளை எதுவும், நீதிமன்றம் எதிலிருந்தும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(4) குடியரசுத்தலைவராக அல்லது ஒரு மாநில ஆளுநராக ஒருவர் பதவி ஏற்பதற்கு முன்போ பின்போ தமது சொந்தமுறையில் செய்த அல்லது செய்ததாகக் கருதப்படுகிற செயல் எதற்காகவும், குடியரசுத்தலைவருக்கு அல்லது அந்த ஆளுநருக்கு எதிராகத் தீருதவி கோரும் உரிமையியல் நடவடிக்கை எதுவும், அவரது பதவிக்காலத்தின்போது அந்நடவடிக்கையின் தன்மை, அதற்கான வழக்குமூலம், அந்நடவடிக்கையினைத் தொடரவிருக்கும் தரப்பினரின் பெயர், விவரம், உறைவிடம், அவர் கோரும் தீருதவி ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுத்துமூலமாக அறிவிப்பு ஒன்று குடியரசுத்தலைவரிடம் அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த ஆளுநரிடம் ஒப்புவிக்கப்பட்டதற்கு அல்லது அவரது அலுவலகத்தில் சேர்ப்பிக்கப்பட்டதற்கு அடுத்துப் பின்பு இரண்டு மாதம் கழிவுற்றதன்மேலன்றி, நீதிமன்றம் எதிலும் தொடரப்படுதல் ஆகாது.

361அ. நாடாளுமன்றம், மாநிலச் சட்ட மன்றங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை வெளியிடுவதற்குக் காப்பளிப்பு:

(1) நாடாளுமன்ற ஈரவைகளில் ஒன்றன் அல்லது மாநிலம் ஒன்றன் சட்டமன்றப் பேரவை அல்லது, நேர்வுக்கேற்ப, சட்டமன்ற ஈரவைகளில் ஒன்றன் நடவடிக்கைகள் எவற்றையும் பற்றி உறுபொருளின் உண்மையான அறிக்கையைச் செய்தித்தாளில் வெளியிட்டது பொறுத்து, அது தீய நோக்குடன் வெளியிடப்பட்டிருப்பதாக மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, நீதிமன்றம் எதிலும் எவரொருவரும் உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை எதற்கும் உள்ளாகமாட்டார்:

வரம்புரையாக: இந்தக் கூறிலுள்ள எதுவும், நாடாளுமன்ற ஈரவைகளில் ஒன்றன் அல்லது மாநிலம் ஒன்றன் சட்டமன்றப்பேரவை அல்லது, நேர்வுக்கேற்ப, சட்டமன்ற ஈரவைகளின் ஒன்றன் இரகசிய அமர்வின் நடவடிக்கைகள் பற்றிய் அறிக்கை எதனையும் வெளியிடுவதற்குப் பொருந்துறுவதில்லை.

(2). (1) ஆம் கூறு, ஒரு செய்தித்தாளில் வெளியிடப்பட்ட அறிக்கைகள் அல்லது பொருட்பாடுகள் தொடர்பாகப் பொருந்துறுவது போன்றே, ஓர் ஒலிபரப்பு நிலைய நிகழ்ச்சியின் அல்லது பணியின் பகுதியாகக் கம்பியில்லாத் தந்தி மூலம் ஒலிபரப்பப்படும் அறிக்கைகள் அல்லது பொருட்பாடுகள் தொடர்பாகவும் பொருந்துறுவதாகும்.

விளக்கம்.–இந்த உறுப்பில் ''செய்தித்தாள்'' என்பது, செய்தித் தாளில் வெளியிடுவதற்கான தகவல்கள் அடங்கிய செய்தி நிறுவன அறிக்கையையும் உள்ளடக்கும்.

[1][361ஆ. ஊதியம் வழங்கதக்க அரசியல் பணியடையில் அமர்த்துவதற்கான தகுதிக்கேடு:

பத்தாம் இணைப்புப்பட்டியலின் 2ஆம் பத்தியின்படி அவை ஒன்றின் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதிக்கேடுற்றவராக இருக்கிற, அரசியல்கட்சி எதனையும் சார்ந்துள்ள, அவை ஒன்றின் உறுப்பினர் ஒருவர், அவர் தகுதிக்கேடுற்ற தேதியிலிருந்து தொடங்கி அத்தகைய உறுப்பினராக அவருடைய பதவிக்காலம் கழிவுறும் தேதி வரையில் அல்லது அவை ஒன்றுக்கான தேர்தலில் அவர் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக விளம்புகை செய்யப்பட்ட தேதி வரையில், இவற்றில் எது முந்தியதோ அதுவரையில் ஊதியம் வழங்கத்தக்க அரசியல் பணியடை எதனையும் கூட வகிப்பதற்குத் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

விளக்கம்.–இந்த உறுப்பின் நோக்கங்களுக்காக,–

(அ) ''அவை'' என்ற சொல், பத்தாம் இணைப்புப்பட்டியலின் 1ஆம் பத்தியின் (அ)கூறில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருளை உடையதாகும்;

(ஆ) ''ஊதியம் வழங்கத்தக்க அரசியல் பணியடை'' என்னும் சொற்றொடர்.–

(i) இந்திய அரசின் கிழோ அல்லது ஒரு மாநில அரசின்கீழோ உள்ள பதவி எதற்கும், அத்தகைய பதவிக்கான வரையூதியமும் அல்லது பதவியூதியம், இந்திய அரசின் அல்லது நேர்வுக்கேற்ப, ஒரு மாநில அரசின் பொது வருவாயிலிருந்து, வழங்கப்படுகிறவிடத்து; அல்லது

(ii) ஒரு குழுமத்தின் கீழுள்ள பதவி எதற்கும், அந்தக் குழுமம் கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் அல்லது இந்திய அரசால் அல்லது ஒரு மாநில அரசால் முழுமையாக அல்லது பகுதியாகச் சொந்தமாகக் கொண்டிருக்கப்பட்டு, அத்தகைய பதவிக்கான வரையூதியம் அல்லது பதவியூதியம், அத்தகைய குழுமத்தால் வழங்கப்படுகிறவிடத்து

வழங்கப்பட்ட வரையூதியம் அல்லது பதவியூதியம் ஈடுசெய்யும் தன்மையதாக இருக்கிறவிடத்து தவிர, அத்தகைய பதவி எதுவும் என்று பொருள்படும்.

[2][362. * * * *]

363. குறித்தசில உடன்படிக்கைகள், உடன்பாடுகள், முதலியவற்றிலிருந்து எழும் பூசல்களில் நீதிமன்றங்களின் தலையீட்டிற்குத் தடையுறுத்தம்:

(1) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், 143ஆம் உறுப்பின் வகையங்களுக்கு உட்பட்டு இந்த அரசமைப்பின் தொடக்க நிலைக்கு முன்பு இந்தியக் குறுநில அரசர் ஒருவரால் செய்துகொள்ளப்பட்டு அல்லது எழுதிக்கொடுக்கப்பட்டு, இந்தியத் தன்னாட்சிய அரசாங்கம் அல்லது அதற்கு முன்பிருந்த அரசாங்கங்களில் எதுவும் ஒரு தரப்பினராயிருந்து அத்தகைய தொடக்கநிலைக்குப் பின்பும் செயற்பாட்டில் தொடர்ந்திருக்கிறதான அல்லது தொடர்ந்திருந்து வந்திருக்கிற உடன்படிக்கை, உடன்பாடு இணக்கஒப்பந்தம், உறுதிவாக்கேற்பு, சன்னது அல்லது அது போன்ற பிற முறையாவணம் ஒன்றின் வகையம் எதிலிருந்தும் எழுகிற பூசல் எதிலும், அத்தகைய உடன்படிக்கை, உடன்பாடு இணக்கஒப்பந்தம், உறுதி வாக்கேற்பு, சன்னது அல்லது அது போன்ற பிற முறையாவணம் தொடர்பாக உள்ள இந்த அரசமைப்பின் வகையங்களில் எதன்படியும் சேர்ந்தடையும் உரிமை எதனையும் அல்லது அவ்வகையங்களில் எதிலிருந்தும் எழுகிற பொறுப்படைவு அல்லது கடமைப்பாடு எதனையும் பொறுத்த பூசல் எதிலும் உச்ச நீதிமன்றம் அல்லது பிற நீதிமன்றம் எதுவும் அதிகாரம் உடையது ஆகாது.

---

1. 2003ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று-ஒன்றாம் திருத்தம்) சட்டத்தினால் புகுத்தப்பட்டது.
2. 1971ஆம் ஆண்டு அரசமைப்பு (இருபத்தாறாம் திருத்தம்) சட்டத்தின் 2ஆம் பிரிவினால் நீக்கறவு செய்யப்பட்டது.

(2) இந்த உறுப்பில்–

(அ) ''இந்தியக் குறுநிலம்'' என்பது, அத்தகைய குறுநிலம் என இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு மாட்சிமை தங்கிய மன்னரால் அல்லது இந்தியத் தன்னாட்சிய அரசாங்கத்தால் ஏற்பளிக்கப்பட்ட ஆட்சிநிலவரை எதுவும் என்று பொருள்படும்;

(ஆ) ''அரசர்'' என்பது, அத்தகைய தொடக்கநிலைக்கு முன்பு இந்தியக் குறுநிலம் ஒன்றன் அரசர் என மாட்சிமை தங்கிய மன்னரால் அல்லது இந்தியத் தன்னாட்சிய அரசாங்கத்தால் ஏற்பளிக்கப்பட்ட மன்னரை, குடித்தலைவரை அல்லது பிறர் ஒருவரை உள்ளடக்கும்.

363அ. இந்தியக் குறுநில அரசர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த ஏற்பளிப்பு அற்றுப்போதல் மற்றும் மன்னர் மானியங்கள் ஒழிக்கப்படுதல்:

இந்த அரசமைப்பில் அல்லது நிகழுறு காலத்தில் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதிலும் எது எவ்வாறிருப்பினும்,

(அ) 1971ஆம் ஆண்டு அரசமைப்பு (இருபத்தாறாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்பு, எச்சமயத்திலேனும், இந்தியக் குறுநிலம் ஒன்றன் அரசர் எனக் குடியரசுத்தலைவரால் ஏற்பளிக்கப்பட்ட மன்னர், குடித்தலைவர் அல்லது பிறர் ஒருவர் அல்லது அத்தகைய தொடக்கநிலைக்கு முன்பு எச்சமயத்திலேனும் அத்தகைய அரசரின் வழி வந்தவர் எனக் குடியரசுத் தலைவரால் ஏற்பளிக்கப்பட்ட எவரும், அத்தகைய தொடக்கநிலையிலிருந்தும் அது முதற்கொண்டும் அத்தகைய அரசராக அல்லது அத்தகைய அரசரின் வழி வந்தவர் என ஏற்பளிக்கப்பட்டது அற்றுப்போகும்.

(ஆ) 1971 ஆம் ஆண்டு அரசமைப்பு (இருபத்தாறாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலையிலிருந்தும், அது முதற்கொண்டும் மன்னர் மானியம் ஒழிக்கப்படுகிறது; அத்துடன், மன்னர் மானியம் பொறுத்த உரிமைகள், பொறுப்படைவுகள், கடமைப்பாடுகள், அனைத்தும் இறுதியுறுகின்றன; மேலும், அதற்கிணங்க (அ) கூறில் சுட்டப்பட்ட அரசர் அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த அரசருக்குப் பின்னர் பதவிக்கு அடுத்து வந்தவர் அல்லது பிறர் எவருக்கும் மன்னர் மானியமாகத் தொகை எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

364. பெருந்துறைமுகங்கள், வானூர்தி நிலையங்கள் ஆகியவை குறித்த தனியுறு வகையங்கள்:

(1) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், குடியரசுத்தலைவர், பொது அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் தேதியிலிருந்து–

(அ) நாடாளுமன்றத்தால் அல்லது ஒரு மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் எதுவும், பெருந்துறைமுகம் அல்லது வானூர்திநிலையம் எதற்கும் பொருந்துறுவதாகாது என்றோ, அந்த அறிவிக்கையில் குறிந்துரைக்கப்படும் விதிவிலக்குகளுக்கு அல்லது மாற்றமைவுகளுக்கு உட்பட்டு அதற்குப் பொருந்துறுவதாகும் என்றோ பணிக்கலாம்; அல்லது

(ஆ) நிலவுறும் சட்டம் எதுவும், மேற்சொன்ன தேதிக்கு முன்பு செய்யப்பட்டவை அல்லது செய்யாது விடப்பட்டவை பொறுத்துத் தவிர, பெருந்துறைமுகம் அல்லது வானூர்திநிலையம் எதிலும் செல்திறம் அற்றுப்போகும் என்றோ, அது அத்தகைய துறைமுகம் அல்லது வானூர்திநிலையத்திற்குப் பொருந்துறுவதில், அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் விதிவிலக்குகளுக்கு அல்லது மாற்றமைகளுக்கு உட்பட்டுச் செல்திறம்பெறும் என்றோ பணிக்கலாம்.

(2) இந்த உறுப்பில்–

(அ) "பெருந்துறைமுகம்" என்பது நாடாளுமன்றம் இயற்றிய சட்டம் எதனாலுமோ அதன் வழியாலோ அல்லது நிலவுறும் சட்டம் எதனாலுமோ அதன் வழியாலோ, பெருந்துறைமுகம் என விளம்பப்பட்டுள்ள ஒரு துறைமுகம் என்று பொருள்படும்; மேலும், அப்போதைக்கு அத்தகைய துறைமுகத்தின் எல்லைகளுக்குள் அடங்கியுள்ள பரப்பிடங்கள் அனைத்தையும் அது உள்ளடக்கும்;

(ஆ) "வானூர்திநிலையம்" என்பது, வானூர்தியங்கள், வானூர்திகள், வான்வழிச் செலுத்தம் ஆகியவை தொடர்பான சட்டங்களின் பொருட்டு பொருள்வரையறை செய்யப்பட்ட வானூர்திநிலையம் என்று பொருள்படும்.

365. ஒன்றியத்தின் பணிப்புரைகளுக்கு இணங்கி நடக்கவோ அவற்றைச் செல்திறப்படுத்தவோ தவறுமிடத்து ஏற்படும் விளைவு:

இந்த அரசமைப்பின் வகையங்களில் எதன்படியும் ஒன்றியத்து ஆட்சி அதிகாரத்தைச் செலுத்துகையில் இடப்படும் பணிப்புரைகள் எவற்றுக்கும் இணங்கி நடக்கவோ அவற்றைச் செல்திறப்படுத்தவோ மாநிலம் எதுவும் தவறியிருக்குமிடத்து, அந்த மாநிலத்தின் அரசாங்கத்தை இந்த அரசமைப்பின் வகையங்களின்படி நடத்த இயலாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது எனக் குடியரசுத்தலைவர் முடிவு செய்தால், அது சட்டமுறையானது ஆகும்.

366. பொருள்வரையறைகள் :

இந்த அரசமைப்பில் தறுவாயின்தேவை வேறானாலன்றி, பின்வரும் சொற்றொடர்கள் அவற்றுக்கு முறையே ஈங்கிதனால் குறித்தளிக்கப்படும் பொருள்களை உடையன ஆகும்; அவையாவன:–

(1) "வேளாண் வருமானம்" என்பது, இந்திய வருமானவரி தொடர்பான சட்டங்களின் பொருட்டு பொருள்வரையறை செய்யப்பட்ட வேளாண் வருமானம் என்று பொருள்படும்;

(2) "ஓர் ஆங்கிலோ இந்தியர்" என்பது, தம்முடைய தந்தையோ பிற ஆண்வழி மூதாதையர் எவருமோ ஐரோப்பியக் குடிவழியினராய் இருப்பவராகவும் அல்லது இருந்தவராகவும், ஆனால், இந்திய ஆட்சிநிலவரைக்குள் நிலைவாழ்வகம் உடையவராகவும் இருப்பதுடன் தற்காலிக நோக்கங்களுக்காக மட்டுமின்றி அத்தகைய ஆட்சிநிலவரையிலேயே வழக்கமாகக் குடியிருக்கும் பெற்றோருக்கு அந்த ஆட்சிநிலவரைக்குள் பிறக்கின்றவராகவும் அல்லது பிறந்தவராகவும் உள்ள ஒருவர் என்று பொருள்படும்;

(3) "உறுப்பு" என்பது, இந்த அரசமைப்பின் ஓர் உறுப்பு என்று பொருள்படும்;

(4) "கடன் பெறுதல்" என்பது, ஆண்டுத் தொகைகள் வழங்குவதன் வாயிலாகப் பணம் திரட்டுவதை உள்ளடக்கும், மேலும், "பெறுகடன்" என்பதும் அவ்வாறே பொருள்கொள்ளப்படுதல் வேண்டும் :

(5) "கூறு" என்பது, அந்தச் சொல் இடம் பெறுகிற உறுப்பின் ஒரு கூறு என்று பொருள்படும்;

(6) "கூட்டுரும வரி" என்பது, நிறுமங்களால் செலுத்தப்பட வேண்டிய வரியாகவும், பின்வரும் வரைக்கட்டுகளுக்கு இயைபுடைய வரியாகவும் உள்ள அளவிற்கு வருமானத்தின் மீதான வரி எதுவும் என்று பொருள்படும்:–

(அ) அது வேளாண் வருமானம் மீது சார்ந்தத்தக்கதாக இல்லாமை;

(ஆ) நிறுமங்கள் செலுத்தும் வரியின் வகைக்காக, அந்நிறுமங்களால் தனிநபர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய பங்கு ஆதாயங்களிலிருந்து கழித்துக் கொள்வதற்கு அந்த வரிக்குப் பொருந்துறும் சட்டங்களில் எதுவும் அதிகாரமளிக்காமை;

(இ) இந்திய வருமான வரியைப் பொறுத்தவரை, அத்தகைய பங்கு ஆதாயங்களைப் பெறும் தனிநபர்களுடைய மொத்த வருமானத்தைக் கணக்கிடுவதில் அல்லது அத்தகைய தனி நபர்கள் செலுத்த வேண்டிய அல்லது அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய இந்திய வருமான வரியைக் கணக்கிடுவதில், அவ்வாறு செலுத்தப்பட்ட வரியைக் கணக்கில் எடுத்துக் கொள்வதற்கான வகையம் எதுவும் இல்லாமை;

(7). ''நேரிணையான மாகாணம்'', ''நேரிணையான இந்தியக் குறுநிலம்'' அல்லது "நேரிணையான மாநிலம்'' என்பது, ஐயப்பாடான நேர்வுகளில் பிரச்சனையிலுள்ள குறிப்பிட்ட நோக்கத்திற்காக நேர்வுக்கேற்ப, நேரிணையான மாகாணம், நேரிணையான இந்தியக் குறுநிலம் அல்லது நேரிணையான மாநிலம் எனக் குடியரசுத்தலைவரால் தீர்மானிக்கப்படும் மாகாணம், இந்தியக் குறுநிலம் அல்லது மாநிலம் என்று பொருள்படும்;

(8) ''உறுகடன்'' என்பது, ஆண்டுத் தொகைகள் வாயிலாக மூலதனத் தொகைகளைத் திருப்பிச் செலுத்தும் கடமைப்பாடு பொறுத்த பொறுப்படைவு எதனையும், பொறுப்புறுதி எதற்கும் உட்பட்ட பொறுப்படைவு எதனையும் உள்ளடக்கும்; மேலும், ''உறுகடன் செலவீடுகள்'' என்பதற்கும் அதற்கிணங்கப் பொருள்கொள்ளுதல் வேண்டும்;

(9) ''இறங்குசொத்துத் தீர்வை'' என்பது, ஒருவரது இறப்பின் பேரில் இறங்குகிற அல்லது நாடாளுமன்றத்தால் அல்லது ஒரு மாநிலத்தின் சட்டமன்றத்தால் அத்தீர்வை தொடர்பாக இயற்றப்படும் சட்டங்களின் வகையங்களின்படி அவ்வாறு இறங்குவதாகக் கொள்ளப்படுகிற சொத்து அனைத்திற்கும் அச்சட்டங்களாலோ அவற்றின் வழியாலோ வகுக்கப்படும் விதிகளுக்கு இணங்கக் கண்டறிந்த மூலதன மதிப்பின்மீது அல்லது அதனை அடிப்படையாகக்கொண்டு கணிக்கப்பட வேண்டிய தீர்வை என்று பொருள்படும்;

(10) ''நிலவுறும் சட்டம்'' என்பது, இந்த அரசமைப்பின் தொடக்க நிலைக்கு முன்பு சட்டம், அவசரச்சட்டம், ஆணை, துணைவிதி, விதி அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனையும் இயற்றுவதற்கு அதிகாரம் உடையதாக இருந்த சட்டமன்றம், அதிகாரஅமைப்பு எதனாலும் அல்லது நபர் எவராலும் இயற்றப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட சட்டம், அவசரச் சட்டம், ஆணை, துணைவிதி, விதி அல்லது ஒழுங்குறுத்தும்விதி என்று பொருள்படும்;

(11) ''கூட்டாட்சிய நீதிமன்றம்'' என்பது, 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட கூட்டாட்சி நீதிமன்றம் என்று பொருள்படும்;

(12) ''சரக்குகள்'' என்பது, பொருள்கள், பண்டங்கள், உருப்பொருட்கள் அனைத்தையும் உள்ளடக்கும்;

(13) ''பொறுப்புறுதி'' என்பது, இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு ஒரு பொறுப்பேற்பு நிறுவனத்தின் ஆதாயங்கள், குறித்துரைக்கப்படும் ஒரு தொகைக்குக் குறையுமாயின், அத்தொகையை செலுத்துவதாகப் பொறுப்பேற்றுக்கொண்ட கடமைப்பாடு எதனையும் உள்ளடக்கும்;

(14) ''உயர் நீதிமன்றம்'' என்பது, இந்த அரசமைப்பினைப் பொறுத்தவரை, மாநிலம் எதற்குமான ஓர் உயர் நீதிமன்றமாகக் கொள்ளப்படுகிற நீதிமன்றம் எதுவும் என்று பொருள்படும்; மேலும்,

அது–

(அ) இந்த அரசமைப்பின்படி இந்திய ஆட்சிநிலவரையில் ஓர் உயர் நீதிமன்றமாக அமைக்கப்பட்ட அல்லது மறுஅமைப்பு செய்யப்பட்ட நீதிமன்றம் எதனையும்; மற்றும்

(ஆ) இந்த அரசமைப்பின் நோக்கங்கள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும் ஓர் உயர் நீதிமன்றம் என நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்பும் இந்திய ஆட்சிநிலவரையிலுள்ள பிற நீதிமன்றம் எதனையும் உள்ளடக்கும்;

(15) "இந்தியக் குறுநிலம்" என்பது, இந்தியத் தன்னாட்சிய அரசாங்கத்தால் அத்தகையதொரு குறுநிலமாக ஏற்பளிக்கப்பட்ட ஆட்சிநிலவரை எதுவும் என்று பொருள்படும்;

(16) "பகுதி" என்பது, இந்த அரசமைப்பின் ஒரு பகுதி என்று பொருள்படும்;

(17) ''ஓய்வூதியம்'' என்பது, பங்களிப்பு முறையிலாயினும் இல்லாவிடினும், ஒருவருக்கு அல்லது அவர் பொறுத்துச் செலுத்தப்பட வேண்டிய எவ்வகையானதுமான ஓர் ஓய்வூதியம் என்று பொருள்படும்; மேலும், அது அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய ஓய்வுக்காலச் சம்பளத்தையும், அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய ஒரு பணிக்கொடையையும், வருங்கால வைப்பு நிதியம் ஒன்றுக்கான தொகையளிப்புகளை அவற்றின் மீதான வட்டியுடனோ இன்றியோ அல்லது பிறதொகை எதனையும் சேர்த்தோ அவ்வாறு திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய தொகை எதனையும் அல்லது தொகைகளையும் உள்ளடக்கும்;

(18) ''நெருக்கடிநிலைச் சாற்றாணை''என்பது, 352ஆம் உறுப்பின் (1)ஆம் கூறின்படி பிறப்பிக்கப்படும் ஒரு சாற்றாணை என்று பொருள்படும்;

(19) ''பொது அறிவிக்கை'' என்பது, இந்திய அரசிதழில் அல்லது, நேர்வுக்கேற்ப, ஒரு மாநிலத்தின் அதிகாரமுறை அரசிதழில் உள்ள ஓர் அறிவிக்கை என்று பொருள்படும்;

(20) ''இருப்பூர்தியம்'' என்பது,–

(அ) முற்றிலும் ஒரு நகராட்சிப் பகுதிக்குள் அமைந்த காந்த வண்டிப்பாதையை; அல்லது

(ஆ) முற்றிலும் ஒரே மாநிலத்திற்குள் அமைந்துள்ளதும், இருப்பூர்தியம் அல்லாதது என நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்புகிறதுமான பிற போக்குவரத்துப் பாதை எதனையும் உள்ளடக்காது;

[1][*(21)*. * * *]

(22) ''அரசர்'' என்பது, 1971ஆம் ஆண்டு அரசமைப்பு (இருபத்தாறாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்பு எச்சமயத்திலேனும் இந்தியக் குறுநிலம் ஒன்றன் அரசர் எனக் குடியரசுத்தலைவரால் ஏற்பளிக்கப்பட்ட மன்னர், குடித்தலைவர் அல்லது பிறர் ஒருவர் என்றோ, அத்தகைய தொடக்கநிலைக்கு முன்பு எச்சமயத்திலேனும், அத்தகைய அரசரின் வழிவந்தவர் எனக் குடியரசுத்தலைவரால் ஏற்பளிக்கப்பட்டவர் என்றோ பொருள்படும்;

(23) ''இணைப்புப்பட்டியல்'' என்பது, இந்த அரசமைப்பின் ஓர் இணைப்புப்பட்டியல் என்று பொருள்படும்;

(24) ''பட்டியலில் கண்ட சாதிகள்'' என்பது, இந்த அரசமைப்பினைப் பொறுத்தவரை, 341 ஆம் உறுப்பின்படி பட்டியலில் கண்ட சாதிகள் எனக் கொள்ளப்படுகின்ற சாதிகள், இனங்கள் அல்லது பழங்குடிகள் அல்லது அத்தகைய சாதிகள், இனங்கள், பழங்குடிகள் இவற்றின் பகுதிகள் அல்லது தொகுதிகள் என்று பொருள்படும்;

(25) ''பட்டியலில் கண்ட பழங்குடிகள்'' என்பது, இந்த அரசமைப்பினைப் பொறுத்தவரை, 342ஆம் உறுப்பின்படி பட்டியலில் கண்ட பழங்குடிகள் எனக் கொள்ளப்படுகிற பழங்குடிகள் அல்லது பழங்குடிச் சமூகங்கள், அத்தகைய பழங்குடிகள் அல்லது பழங்குடிச் சமூகங்கள் இவற்றின் பகுதிகள் அல்லது தொகுதிகள் என்று பொருள்படும்;

(26) ''காப்புறுதிகள்'' என்பது, பங்கு மூலதனத்தையும் உள்ளடக்கும்;

(27) ''உட்கூறு'' என்பது, அச்சொல் இடம்பெறுகிற கூறின் ஓர் உட்கூறு என்று பொருள்படும்;

(28) ''வரிவிதிப்பு'' என்பது, பொதுவியலான அல்லது உள்ளாட்சிக்குற்ற அல்லது தனிவகையான வரி அல்லது தீர்வை எதனையும் விதிப்பதை உள்ளடக்கும்; மேலும் ''வரி" என்பதும், அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படும்;

(29) ''வருமானம் மீதான வரி'' என்பது, ஒரு மிகை ஆதாய வரி போல்வதான ஒரு வரியையும் உள்ளடக்கும்;

---

1. 1956ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் 29ஆம் பிரிவினாலும் இணைப்புப்பட்டியலினாலும் விட்டுவிடப்பட்டது;

(29 அ) "சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினை மீதான வரி" என்பது–

(அ) உடன் பணத்திற்காக, பின் செலுத்தத்திற்காக அல்லது வேறுவகை மதிப்புள்ள மறுபயனுக்காக ஓர் ஒப்பந்தம் எதனையும் பின்பற்றியல்லாமல் பிறவாறு சரக்குகள் எவற்றிலும், சொத்து உரிமைமாற்றம் செய்வதன் மீதான வரி;

(ஆ) ஒரு பணிமான ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் உள்ளடங்கும் (சரக்குகளாகவோ பிறவடிவிலோ இருக்கும்) சரக்குகள் எவற்றிலும், சொத்து உரிமைமாற்றம் செய்வதன் மீதான வரி;

(இ) தவணைமுறைக் கொள்வினை அல்லது தவணைச் செலுத்தமுறை வாயிலாகச் சரக்குகளை ஒப்படைவு செய்வதன் மீதான வரி;

(ஈ) உடன் பணத்திற்காக, பின் செலுத்தத்திற்காக அல்லது வேறு வகை மதிப்புள்ள மறுபயன் எதற்காகவும் (குறித்த ஒரு கால அளவுக்காயினும், இல்லாவிடினும்) சரக்குகள் எவற்றையும் பயன்படுத்தும் உரிமையினை மாற்றம் செய்வதன் மீதான வரி;

(உ) கூட்டுருமாக இல்லாத கழகம் அல்லது நபர்களின் குழுமம் எதனாலும் அதன் உறுப்பினர் ஒருவருக்கு உடன் பணம், பின்செலுத்தம் அல்லது வேறுவகை மதிப்புள்ள மறுபயனுக்காக வழங்கப்படும் சரக்குகள் மீதான வரி;

(ஊ) உடன் பணத்திற்காக, பின் செலுத்தத்திற்காக அல்லது வேறு வகை மதிப்புள்ள மறுபயனுக்காக, பயன்தரு பணியாகவோ அதன் பகுதியாகவோ வேறு முறையிலோ வழங்கப்படும் அல்லது மக்கள் நுகரும் பிற பொருள், அல்லது (போதையூட்டுவதாகவோ அல்லாததாகவோ உள்ள) குடிவகைகள், இவ்வகைச் சரக்குகள் மீதான வரி

ஆகியவற்றை உள்ளடக்கும்; மேலும், சரக்குகள் எவற்றையும் அவ்வாறு உரிமைமாற்றம், ஒப்படைவு அல்லது வழங்குதல் செய்வது எதுவும், அந்த உரிமைமாற்றத்தை, ஒப்படைவினை அல்லது வழங்குதலைச் செய்தவரால் செய்யப்படும் அச்சரக்குகளின் ஒரு விற்பனை எனவும், அந்த உரிமைமாற்றத்தை, ஒப்படைவை அல்லது வழங்குதலைப் பெறுபவரால் செய்யப்படும் அச்சரக்குகளின் கொள்வினை எனவும் கொள்ளப்படும்;

(30) ''ஒன்றியத்து ஆட்சிநிலவரை'' என்பது, முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒன்றியத்து ஆட்சிநிலவரை என்று பொருள்படும், மேலும், அது இந்திய ஆட்சிநிலவரையினுள் அடங்கியுள்ள, ஆனால் அந்த இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டிராத பிற ஆட்சிநிலவரை எதனையும் உள்ளடக்கும்.

367. பொருள்கோள் :

(1) தறுவாயின் தேவை வேறானாலன்றி, 1897ஆம் ஆண்டு பொது வகையங்கள் விளக்கச் சட்டமானது, இந்தியத் தன்னாட்சியச் சட்ட மன்றத்துச் சட்டம் எதனையும் பொருள்காண்பதற்குப் பொருந்துறுவது போன்றே, அதில், 372ஆம் உறுப்பின்படி செய்யப்படும் தழுவமைவுகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு, இந்த அரசமைப்பினைப் பொருள்காண்பதற்கும் பொருந்துறுவதாகும்.

(2) நாடாளுமன்றத்தின் அல்லது அதனால் செய்யப்பட்ட இயற்றுச்சட்டங்கள் அல்லது சட்டங்கள் அல்லது ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் அல்லது அதனால் செய்யப்பட்ட இயற்றுச்சட்டங்கள் அல்லது சட்டங்கள் என இந்த அரசமைப்பில் சுட்டப்பட்டிருப்பது எதுவும், குடியரசுத்தலைவரால் பிறப்பிக்கப்பட்ட அவசரச்சட்டம் அல்லது, நேர்வுக்கேற்ப, ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட அவசரச்சட்டம் எனச் சுட்டுவதையும் உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளுதல்வேண்டும்.

(3) இந்த அரசமைப்பினைப் பொறுத்தவரை,''அயல் நாட்டு அரசு'' என்பது, இந்தியா அல்லாத பிற அரசு எதுவும் என்று பொருள்படும்:

வரம்புரையாக: நாடாளுமன்றம் இயற்றிய சட்டம் எதனின் வகையங்களுக்கும் உட்பட்டு, குடியரசுத்தலைவர், ஆணையின்வழி, அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் நோக்கங்களுக்காக, அரசு எதுவும் அயல் நாட்டு அரசு ஆவதில்லை என விளம்பலாம்.

பகுதி XX

அரசமைப்பின் திருத்தம்

368. அரசமைப்பினைத் திருத்துவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரமும் அதற்கான நெறிமுறையும்:

(1) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், இந்த உறுப்பில் விதிக்கப்பட்டுள்ள நெறிமுறைக்கு இணங்க, நாடாளுமன்றம், தனது அரசமைப்பியற்று அதிகாரத்தைச் செலுத்தி, இந்த அரசமைப்பின் வகையம் எதிலும் சேர்த்தல், மாறுதல் செய்தல் அல்லது எதனையும் நீக்கறவு செய்தல் வாயிலாகத் திருத்தம் செய்யலாம்.

(2) இந்த அரசமைப்பின் திருத்தம் எதுவும், அதற்கென ஒரு சட்ட முன்வடிவை நாடாளுமன்ற ஈரவைகளில் ஒன்றில் அறிமுகப்படுத்துவதன் வாயிலாக மட்டுமே தொடங்குறப்பெறும்; அச்சட்டமுன்வடிவு, ஒவ்வோர் அவையிலும் அதன் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையும், மேலும், அந்த அவை உறுப்பினர்களில் வந்திருந்து வாக்களிப்பவர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையும் கொண்ட உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டதன்மேல், அது குடியரசுத்தலைவரிடம் முன்னிடப்படுதல் வேண்டும்; அவர் அச்சட்டமுன்வடிவிற்கு ஏற்பிசைவு அளிப்பார்; அதன்மேல் அச்சட்ட முன்வடிவில் கண்ட வரைவுரைகளுக்கு இணங்க அரசமைப்பு திருத்தம் பெற்றது ஆகும்:

வரம்புரையாக: அத்தகைய திருத்தம்–

(அ) 54 ஆம் உறுப்பு, 55 ஆம் உறுப்பு, 73 ஆம் உறுப்பு, 162ஆம் உறுப்பு அல்லது 241 ஆம் உறுப்பு, அல்லது

(ஆ) V ஆம் பகுதியின் IVஆம் அத்தியாயம், VIஆம் பகுதியின் V ஆம் அத்தியாயம், அல்லது XI ஆம் பகுதியின் I ஆம் அத்தியாயம், அல்லது

(இ) ஏழாம் இணைப்புப்பட்டியலில் உள்ள பட்டியல்களில் ஒன்று, அல்லது

(ஈ) நாடாளுமன்றத்தில் மாநிலங்களுக்குள்ள சார்பாற்றம், அல்லது

(உ) இந்த உறுப்பின் வகையங்கள்

ஆகியவற்றில் மாற்றம் எதனையும் செய்ய முற்படுமாயின், அத்திருத்தத்திற்கு வகைசெய்யும் சட்டமுன்வடிவு, குடியரசுத்தலைவரின் ஏற்பிசைவுக்காக முன்னிடப்படுவதற்கு முன்பு, அத்திருத்தமானது, மாநிலங்களில் ஒரு பாதிக்குக் குறையாதவற்றின் சட்டமன்றங்களால் அதுகுறித்து நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் வாயிலாக ஏற்புறுதி செய்யப்படுவதும் வேண்டுறுவதாகும்.

(3). 13 ஆம் உறுப்பிலுள்ள எதுவும் இந்த உறுப்பின்படி செய்யப்படும் திருத்தம் எதற்கும் பொருந்துறுவதில்லை.

(4). 1976 ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்திரண்டாம் திருத்தம்) சட்டத்தின் 55 ஆம் பிரிவின் தொடக்கநிலைக்கு முன்போ பின்போ இந்த உறுப்பின்படி செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிற (III ஆம் பகுதியின் வகையங்கள் உள்ளடங்கலாக) இந்த அரமைப்பின் திருத்தம் எதுவும் எக்காரணத்தைக் கொண்டும் நீதிமன்றம் எதிலும் எதிர்த்து வாதிடப்படுதல் ஆகாது.

(5) இந்த உறுப்பின்படி சேர்த்தல், மாறுதல் செய்தல் அல்லது நீக்கறவு செய்தல் வாயிலாக இந்த அரசமைப்பின் வகையங்களில் திருத்தம் செய்வதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அரசமைப்பியற்று அதிகாரத்தின்மீது எந்தவிதமான வரையிறுத்தமும் இருத்தல் ஆகாது என ஈங்கிதனால் ஐயப்பாடுகளை அகற்றும் வகையில் விளம்பப்படுகிறது.

பகுதி XXI

தற்காலிகமான, மாறும் இடைக்காலத்திற்கான மற்றும் தனியுறு வகையங்கள்

369. மாநிலப் பட்டியலிலுள்ள குறித்தசில பொருட்பாடுகளைப் பொறுத்து அவை ஒருங்கியல் பட்டியலிலுள்ள பொருட்பாடுகளாக இருந்தாற்போன்றே சட்டங்கள் இயற்றவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள தற்காலிக அதிகாரம்:

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், நாடாளுமன்றம் இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலிருந்து ஐந்து ஆண்டுக் காலஅளவின்போது, பின்வரும் பொருட்பாடுகளைப் பொறுத்து, அவை ஒருங்கியல் பட்டியலில் எண்ணிடப்பட்டுள்ள பொருட்பாடுகளாக இருந்தாற்போன்றே, சட்டங்கள் இயற்றுவதற்கு அதிகாரம் உடையது ஆகும்.–

(அ) பருத்தி மற்றும் கம்பளி நெசவங்கள் (கொட்டை நீக்கப்பட்ட பருத்தி மற்றும் கொட்டை நீக்கப்படாத பருத்தி அல்லது கழிவுப் பருத்தி உள்ளடங்கலான) கச்சாப் பருத்தி, பருத்திக் கொட்டை (செய்தியிதழ், அச்சுத்தாள் உள்ளடங்கலான) தாள், (உண்தகு எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் உள்ளடங்கலான) உணவுப்பொருட்கள், (பிண்ணாக்குகளும் பிற செறிமங்களும் உள்ளடங்கலான) கால்நடைத் தீவனம், (கல்கரி மற்றும் நிலக்கரியின் வழிப்பொருட்கள் உள்ளடங்கலான) நிலக்கரி, இரும்பு, உருக்கு, அப்பிரகம் ஆகியவற்றில், ஒரு மாநிலத்திற்குள் நடைபெறும் வணிகமும் வாணிபமும்; மேலும், அவற்றின் உற்பத்தி, வழங்கீடு, பகிர்ந்தளிப்பு ஆகியவை;

(ஆ) (அ) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்த சட்டங்களுக்கு எதிரான குற்றச்செயல்கள், அப்பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்து உச்ச நீதிமன்றம் தவிர்த்து, பிற நீதிமன்றங்கள் அனைத்தின் அதிகாரவரம்பும் அதிகாரங்களும், மற்றும் அப்பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்து, நீதிமன்றம் எதிலும் பெறப்படும் கட்டணங்கள் நீங்கலான பிற கட்டணங்கள்;

ஆனால், இந்த உறுப்பின் வகையங்கள் இல்லாதிருந்தால் எவ்வகைச் சட்டத்தை இயற்றுவதற்கு நாடாளுமன்றம் தகுதிறம் கொண்டிருக்காதோ அவ்வகைச் சட்டம் எதனையும் நாடாளுமன்றம் இயற்றியிருக்குமாயின், அந்தச் சட்டம், மேற்சொன்ன காலஅளவு கழிவுற்றதும், நாடாளுமன்றத்தின் தகுதிறமின்மையின் அளவுக்குச் செல்திறம் அற்றுப்போகும்; எனினும், அக்காலஅளவு கழிவுறுவதற்கு முன்பு செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எதுவும் பாதிக்கப்படுவதில்லை.

370. ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பொறுத்த தற்காலிக வகையங்கள்:

(1) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்–

(அ) 238 ஆம் உறுப்பின் வகையங்கள், ஜம்மு–காஷ்மீர் மாநிலம் தொடர்பாகப் பொருந்துறுவதில்லை;

(ஆ) மேற்சொன்ன மாநிலத்திற்குச் சட்டங்கள் இயற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ள அதிகாரம் பின்வரும் வரம்பிற்குள் அடங்கியதாக இருக்கும்;

(i) இந்தியத் தன்னாட்சியத்துடன் அந்த மாநிலத்தின் இணைப்பை நெறிப்படுத்தும் இணைப்பு முறையாவணத்தில் தன்னாட்சியச் சட்டமன்றம் அந்த மாநிலத்தைப் பொறுத்துச் சட்டங்கள் இயற்றலாம் எனக் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்பாடுகளுக்கு நேரிணையானவை என்று ஒன்றியத்துப் பட்டியலிலும் ஒருங்கியல் பட்டியலிலும் உள்ள பொருட்பாடுகளில் எவற்றை அந்த மாநில அரசாங்கத்துடன் கலந்தாய்வு செய்த பின்பு குடியரசுத்தலைவர் விளம்புகின்றாரோ அந்தப் பொருட்பாடுகள்; மற்றும்

(ii) அந்த மாநில அரசாங்கத்தின் ஒருங்கிசைவுடன், குடியரசுத்தலைவர் ஆணையின்வழி குறித்துரைக்கும் மேற்சொன்ன பட்டியல்களிலுள்ள பிற பொருட்பாடுகள்.

விளக்கம்.–இந்த உறுப்பினைப் பொறுத்தவரை, அந்த மாநிலத்தின் அரசாங்கம் என்பது, 1948 மார்ச் ஐந்தாம் தேதியிட்ட ஜம்மு–காஷ்மீர் மகாராஜாவின் சாற்றாணையின்படி அப்போதைக்குப் பதவியிலுள்ள அமைச்சரவையின் தேர்வுரையின்மீது செயலுறுகின்ற அதன் மகாராஜாவாகக் குடியரசுத்தலைவரால் அப்போதைக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ள ஒருவர் என்று பொருள்படும்.

(இ) 1ஆம் உறுப்பின் வகையங்களும் இந்த உறுப்பின் வகையங்களும் அந்த மாநிலம் தொடர்பாகப் பொருந்துறுவன ஆகும்;

(ஈ) குடியரசுத்தலைவர் ஆணையின்வழி குறித்துரைக்கும் இந்த அரசமைப்பின் பிற வகையங்கள், அவர், அந்த ஆணையின்வழி குறித்துரைக்கும் விதிவிலக்குகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு அந்த மாநிலம் தொடர்பாகப் பொருந்துறுவன ஆகும்:

வரம்புரையாக: அந்த மாநில அரசாங்கத்துடன் கலந்தாய்வு செய்த பின்பு அன்றி, *(ஆ)* உட்கூறின் (i) ஆம் பத்தியில் சுட்டப்பட்டுள்ள அந்த மாநிலம் இணைவதற்கான முறையாவணத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்பாடுகள் தொடர்பான அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது:

மேலும் வரம்புரையாக: கடைசி முந்திய வரம்புரையில் சுட்டப்பட்டவை அல்லாத பிற பொருட்பாடுகள் தொடர்பான ஆணை எதுவும், அந்த அரசாங்கத்தின் ஒருங்கிசைவுடன் அல்லாமல் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2). (1) ஆம் கூறின் (ஆ) உட்கூறின் (ii) ஆம் பத்தியில், அல்லது அந்தக் கூறின் (ஈ) உட்கூறின் இரண்டாம் வரம்புரையில் சுட்டப்பட்டுள்ள அந்த மாநில அரசாங்கத்தின் ஒருங்கிசைவானது, அந்த மாநிலத்தின் அரசமைப்பை உருவாக்கும் நோக்கத்திற்காக அரசமைப்புப் பேரவை கூட்டப்படுவதற்கு முன்பே கொடுக்கப்பட்டிருப்பின், அத்தகைய பேரவை அதன்மீது எடுக்கும் முடிபுக்கென அப்பேரவையில் அது வைக்கப்படும்.

(3) இந்த உறுப்பின் மேலே கண்ட வகையங்களில் எது எவ்வாறிருப்பினும், குடியரசுத்தலைவர், பொது அறிவிக்கை வாயிலாக, தாம் குறித்துரைக்கும் தேதியிலிருந்து இந்த உறுப்பு செயற்படுவது அற்றுப்போகும் என்றோ அவ்வாறு குறித்துரைக்கும் விதிவிலக்குகளுடனும் மாற்றமைவுகளுடனும் மட்டுமே செயற்படும் என்றோ விளம்பலாம்:

வரம்புரையாக: குடியரசுத்தலைவர் அத்தகைய ஓர் அறிவிக்கையைப் பிறப்பிப்பதற்கு முன்பு, (2)ஆம் கூறில் சுட்டப்பட்டுள்ள அந்த மாநிலத்தின் அரசமைப்புப் பேரவையின் பரிந்துரை அவசியமாகும்.

371. மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களைப் பொறுத்த தனியுறு வகையகங்கள் :

(1) [1][* * * *]

(2) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிப்பினும், குடியரசுத்தலைவர், மகாராஷ்டிரம் அல்லது குஜராத் மாநிலம் பொறுத்துத் தாம் பிறப்பிக்கும் ஆணையின்வழி–

(அ) விதர்பா, மராத்வாடா, மகாராஷ்டிரத்தின் எஞ்சிய பகுதி ஆகியவற்றிற்காக அல்லது, நேர்வுக்கேற்ப, சௌராஷ்டிரம், கட்சு, குஜராத்தின் எஞ்சிய பகுதி ஆகியவற்றிற்காக, தனித்தனியாக வளர்ச்சி வாரியங்களை, அவ்வாரியங்கள் ஒவ்வொன்றின் செயல்முறை பற்றிய அறிக்கை ஒன்று ஆண்டுதோறும் மாநிலச் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படும் என்னும் வகையத்துடன், நிறுவுவதற்காகவும்,

(ஆ) அந்த மாநிலம் முழுவதற்குமான தேவைகளுக்கு உட்பட்டு, மேற்சொன்ன பரப்பிடங்களின் வளர்ச்சிக்குரிய செலவினத்திற்கான நிதிகளை நேரிய முறையில் பகிர்ந்தொதுக்குவதற்காகவும்,

(இ) அந்த மாநிலம் முழுவதற்குமான தேவைகளுக்கு உட்பட்டு, மேற்சொன்ன அனைத்துப் பரப்பிடங்களையும் பொறுத்து, தொழில் நுட்பக் கல்வி, உறுதொழில் பயிற்சி ஆகியவற்றிற்குப் போதிய வசதிகளையும், மாநில அரசாங்கத்தின் கட்டாள்கையின்கீழுள்ள பணியங்களில் வேலையமர்த்தத்திற்குப் போதிய வாய்ப்புநலன்களையும் அளிக்கும் ஒரு நேரிய ஏற்பாடு செய்வதற்காகவும்

ஆளுநருக்குத் தனிப்பொறுப்பு எதுவும் அளித்து வகைசெய்யலாம்.

---

1. 1973ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்திரண்டாம் திருத்தம்) சட்டத்தின் 2ஆம் பிரிவினால் (1–7–1974 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.

371அ. நாகாலாந்து மாநிலம் பொறுத்த தனியுறு வகையம்:

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்,–

(அ) *(i)* நாகர்களின் சமய அல்லது சமுதாய ஒழுகலாறுகள்,

(ii) நாகர் மரபுவழக்குச் சட்டம் மற்றும் நெறிமுறை,

(iii) நாகர் மரபுவழக்குச் சட்டத்தின்படியான முடிபுகள் உள்ளடங்கிய உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதி நிருவாகம்,

(iv) நிலத்தின் சொத்துரிமை, உரிமைமாற்றம் மற்றும் அதன் வள ஆதாரங்கள்

ஆகியவை பொறுத்த நாடாளுமன்றச் சட்டம் எதுவும், நாகாலாந்து மாநிலச் சட்டமன்றப் பேரவை ஒரு தீர்மானத்தின் வாயிலாக நாகாலாந்து மாநிலத்திற்குப் பொருந்துறுதல் வேண்டும் என முடிபு செய்திருந்தாலன்றி, அவ்வாறு பொருந்துறுதல் ஆகாது;

(ஆ) நாகாலாந்து ஆளுநர், அந்த மாநிலம் உருவாக்கப்பட்டதற்கு ஒட்டிமுன்பு, நாகர் குன்றுகள்–துயென்சாங் பரப்பிடத்தில் நடைபெற்ற உள்நாட்டுக் குழப்பங்கள், அதில் அல்லது அதன் பகுதி எதிலும் தொடர்ந்து நிகழ்வதாகக் கருதப்படுகிற காலம் வரையில், நாகாலாந்து மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு பொறுத்துத் தனிப் பொறுப்பு உடையவர் ஆவார்; மேலும், அது தொடர்பாகத் தம் பதவிப்பணிகளை ஆற்றுகையில், ஆளுநர், தாம் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து அமைச்சரவையைக் கலந்தாய்வு செய்த பின்பு, தாம் முடிபு செய்கிறபடியே செயற்படுவார்:

வரம்புரையாக: பொருட்பாடு ஒன்று, ஆளுநர் தாமே முடிபு செய்கிறபடியே செயற்படுமாறு வேண்டுறுத்தப்பட்டதா இல்லையா என்பதைப் பொறுத்துப் பிரச்சினை எதுவும் எழுமாயின், ஆளுநர், தம் உளத்தேர்வின்படி செய்யும் முடிபே அறுதியானது ஆகும்; மேலும், ஆளுநர், தாமே முடிபு செய்கிறபடி செயற்பட்டிருக்க வேண்டும் அல்லது கூடாது என்பதைக் காரணமாகக் காட்டி, அவரால் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மையையும் எதிர்த்து வாதிடுதல் ஆகாது:

மேலும் வரம்புரையாக: குடியரசுத்தலைவர், ஆளுநரிடமிருந்து ஓர் அறிக்கையைப் பெற்றதன்மேல் அல்லது பிறவாறு, நாகாலாந்து மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு பொறுத்து ஆளுநர் தனிப் பொறுப்பு உடையவராக இருப்பது இனிமேற்கொண்டு தேவையில்லை என்று தெளிவுறக் காண்பாராயின், அவர், ஆணையின்வழி, அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் தேதியிலிருந்து செல்திறம் பெறுமாறு, ஆளுநர் அத்தகைய பொறுப்பு உடையவராயிருப்பது அற்றுப்போகும் என்று பணிக்கலாம்;

(இ) நாகாலாந்து ஆளுநர், ஒரு மானியத்திற்கான கோரிக்கை எதனையும் பொறுத்துத் தமது பரிந்துரைகளைச் செய்கையில், குறிப்பிட்ட பணியம் அல்லது நோக்கம் எதற்கும் இந்தியத் திரள்நிதியத்திலிருந்து இந்திய அரசாங்கத்தினால் அளிக்கப்படும் பணத்தொகை எதுவும், பிற கோரிக்கை எதிலும் சேர்க்கப்படாமல், அந்தப் பணியம் அல்லது நோக்கம் தொடர்பான ஒரு மானியத்திற்கான கோரிக்கையிலேயே சேர்க்கப்படுமாறு செய்வார்;

(ஈ) நாகாலாந்து ஆளுநர், பொது அறிவிக்கை வாயிலாக, இதன்பொருட்டு குறித்துரைக்கும் தேதியிலிருந்து, துயென்சாங் மாவட்டத்திற்கென முப்பத்தைந்து உறுப்பினர்களைக் கொண்ட வட்டார மன்றம் ஒன்று அமைக்கப்படும்; மேலும், ஆளுநர் தமது உளத்தேர்வின்படி பின்வருவனவற்றுக்கு விதிகள் வகுப்பார்:—

(i) வட்டார மன்றத்தின் கட்டமைப்பு, அந்த வட்டார மன்றத்தின் உறுப்பினர்களைத் தெரிந்தெடுக்கும் முறை:

வரம்புரையாக: துயென்சாங் மாவட்டத்தின் துணை ஆணையர், அந்த வட்டார மன்றத்தின் பதவிவழித் தலைவராக இருப்பார்; மேலும், அந்த வட்டார மன்றத்தின் உறுப்பினர்கள், தங்களிடமிருந்து அதன் துணைத்தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள்;

(ii) வட்டார மன்றத்தின் உறுப்பினர்களாகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கும் உறுப்பினர்களாக இருப்பதற்குமான தகுதிப்பாடுகள்;

(iii) வட்டார மன்றத்தின் பதவிக்காலம், அதன் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வரையூதியங்களும் படித்தொகைகளும், எவையேனுமிருப்பின், அவை;

(iv) வட்டார மன்றத்தின் அலுவல் நெறிமுறை; அதன் அலுவல் நடத்துமுறை;

(v) வட்டார மன்றத்தின் அலுவலர்களையும் பணியாளர் தொகுதியினையும் அமர்த்துதல்; மேலும் அவர்களுடைய பணிவரைக்கட்டுகள்; மற்றும்

(vi) வட்டார மன்றத்தை அமைப்பதற்கும் அது முறையாகச் சொயலாற்றுவதற்கும் விதிகள் வகுப்பது பொறுத்துத் தேவைப்படுகிற பிற பொருட்பாடு எதுவும்.

(2) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், நாகாலாந்து மாநிலம் உருவான தேதியிலிருந்து பத்து ஆண்டுக் காலஅளவுக்கு அல்லது ஆளுநர், வட்டார மன்றத்தின் பரிந்துரையின்மீது, இதன்பொருட்டு பொது அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கும் கூடுதலான காலஅளவிற்கு—

(அ) துயென்சாங் மாவட்டத்தின் நிருவாகம், ஆளுநரால் நடத்தப் பெறுதல் வேண்டும்;

(ஆ) நாகாலாந்து மாநிலம் முழுவதற்குமான தேவைகளை நிறைவுறுத்துவதற்கு இந்திய அரசாங்கத்தினால் நாகாலாந்து அரசாங்கத்திற்குப் பணத்தொகை எதுவும் அளிக்கப்படுகிறவிடத்து, ஆளுநர், தமது உளத்தேர்வின்படி, துயென்சாங் மாவட்டத்திற்கும் அந்த மாநிலத்தின் எஞ்சிய பகுதிகளுக்கும் இடையே அந்தப் பணத்தொகையை நேரிய முறையில் பகிர்ந்தொதுக்குவதற்கு ஏற்பாடு செய்வார்;

(இ) ஆளுநர், வட்டார மன்றத்தின் பரிந்துரையின்மீது, பொது அறிவிக்கை வாயிலாக, நாகாலாந்து சட்டமன்றத்தின் சட்டம் எதுவும் துயென்சாங் மாவட்டத்திற்குப் பொருந்துறும் எனப் பணித்தாலன்றி, அச்சட்டம் அவ்வாறு அந்த மாவட்டத்திற்கும் பொருந்துறுவதில்லை மேலும், அத்தகைய சட்டம் எதனையும் பொறுத்து ஆளுநர் அத்தகைய பணிப்புரையை இடுங்கால், அச்சட்டம் துயென்சாங் மாவட்டத்திற்கு அல்லது அதன் பகுதி எதற்கும் பொருந்துறுவதில், வட்டார மன்றத்தின் பரிந்துரையின்மீது, ஆளுநர் தாம் குறித்துரைக்கும் விதிவிலக்குகளுக்கு அல்லது மாற்றமைவுகளுக்கு உட்பட்டு செல்திறம் பெறும் என்று பணிக்கலாம்:

வரம்புரையாக: இந்த உட்கூறின்படி இடப்படும் பணிப்புரை எதுவும், முன்மேவு செல்திறம் பெறுமாறு இடப்படலாம்;

(ஈ) ஆளுநர், துயென்சாங் மாவட்டத்தின் அமைதி, முன்னேற்றம், தன்னாட்சி ஆகியவற்றிற்காக ஒழுங்குறுத்தும் விதிகளை வகுக்கலாம்; மேலும், அவ்வாறு வகுக்கப்படும் ஒழுங்குறுத்தும் விதிகள், நாடாளுமன்றச் சட்டம் எதனையும் அல்லது அந்த மாவட்டத்திற்கு அப்போதைக்குப் பொருந்துறுகிற பிற சட்டம் எதனையும், தேவைப்படுமாயின் முன்மேவு செல்திறம் பெறுமாறு நீக்கறவு செய்யலாம் அல்லது திருத்தம் செய்யலாம்;

(உ) (i) நாகாலாந்து சட்டமன்றப் பேரவையில் துயென்சாங் மாவட்டத்தைத் சார்பாற்றம் செய்கின்ற உறுப்பினர்களில் ஒருவர் ஆளுநரால், முதலமைச்சரின் தேர்வுரையின் பேரில், துயென்சாங் அலுவற்பாடுகளுக்கான அமைச்சராக அமர்த்தப்பெறுவார்; மேலும், முதலமைச்சர் தமது தேர்வுரையை வழங்குங்கால், மேற்சொன்ன உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் பரிந்துரையின்மீது செயலுறுவார்;

(ii) துயென்சாங் அலுவற்பாடுகளுக்கான அமைச்சர், துயென்சாங் மாவட்டம் தொடர்பான பொருட்பாடுகள் அனைத்தின்மீதும் நடவடிக்கை எடுப்பார்; மேலும், அவற்றைப் பொறுத்து ஆளுநருடன் நேரடித் தொடர்பு கொண்டு இயங்குவார்; ஆனால், அது குறித்து அவர் முதலமைச்சருக்குத் தெரிவித்து வருதல் வேண்டும்;

(ஊ) இந்தக் கூறின் மேலே கண்ட வகையங்களில் எது எவ்வாறிருப்பினும், துயென்சாங் மாவட்டம் தொடர்பான பொருட்பாடுகள் அனைத்தையும் பற்றிய அறுதியான முடிவினை ஆளுநர் தமது உளத்தேர்வின்படி எடுப்பார்;

(எ) 54, 55 ஆகிய உறுப்புகளிலும், 80 ஆம் உறுப்பின்(4)ஆம் கூறிலும், ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையின் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களை அல்லது அத்தகைய உறுப்பினர் ஒவ்வொருவரையும் பற்றிய சுட்டுகைகள், இந்த உறுப்பின்படி நிறுவப்பெற்ற வட்டார மன்றத்தால் நாகாலாந்து சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களையும் அல்லது உறுப்பினரையும் சுட்டுவதாகும்;

(ஏ). 170ஆம் உறுப்பில்–

(i) (1) ஆம் கூறு, நாகாலாந்து சட்டமன்றப் பேரவை தொடர்பாக, ''அறுபது'' என்னும் சொல்லுக்கு மாற்றாக ''நாற்பத்தாறு'' என்னும் சொல் அமைக்கப்பட்டிருந்தாற்போன்று செல்திறம் பெறும்;

(ii) மேற்சொன்ன கூறில், அந்த மாநிலத்திலுள்ள நிலவரைத் தேர்தல் தொகுதி களிலிருந்தான நேரடித் தேர்தல் பற்றிய சுட்டுகை, இந்தக் கூறின்படி நிறுவப் பெற்ற வட்டார மன்றத்தின் உறுப்பின்ர்களால் நடத்தப்படும் தேர்தலையும் சுட்டுவதாகும்;

(iii). (2), (3) ஆகிய கூறுகளில் நிலவரைத் தேர்தல்தொகுதிகள்பற்றிய சுட்டுகைகள், கோஹிமா, மோகோக்சுங் ஆகிய மாவட்டங்களிலுள்ள நிலவரைத் தேர்தல் தொகுதிகளையும் சுட்டுவதாகப் பொருள்படும்.

(3) இந்த உறுப்பின் மேலேகண்ட வகையங்களில் எதனையும் செல்திறப்படுத்துவதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், குடியரசுத்தலைவர், ஆணையின்வழி, அந்த இடர்ப்பட்டினை அகற்றுவதற்குத் தேவையெனத் தமக்குத் தோன்றுகிற (பிற உறுப்பு எதனின் தழுவமைவு அல்லது மாற்றமைவு உள்ளடங்கலான) எதனையும் செய்யலாம்:

வரம்புரையாக: நாகாலாந்து மாநிலம் உருவாக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகள் கழிவுற்ற பின்பு, அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

விளக்கம்.—இந்த உறுப்பில், கோஹிமா, மோகோக்சுங், துயென்சாங் ஆகிய மாவட்டங்கள், 1962ஆம் ஆண்டு நாகாலாந்து மாநிலச் சட்டத்திலுள்ள அதே பொருளினை உடையன ஆகும்.

371.ஆ. அசாம் மாநிலம் பொறுத்த தனியுறு வகையம் :

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், குடியரசுத்தலைவர், அசாம் மாநிலம் பொறுத்துத் தாம் பிறப்பிக்கும் ஆணையின்வழி, ஆறாம் இணைப்புப்பட்டியலின் 20ஆம் பத்தியில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் I ஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள பழங்குடி வரையிடங்களிலிருந்து அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெறும் உறுப்பினர்களையும், அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் எண்ணிக்கையுள்ள அப்பேரவையின் பிற உறுப்பினர்களையும் கொண்ட அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையின் குழு ஒன்றினை அமைப்பதற்கும் அக்குழுவின் செயற்பணிகளுக்கும், அத்தகைய குழுவினை அமைப்பதற்காகவும் அது முறையாகச் செயற்பணியாற்றுவதற்காகவும் அந்தப் பேரவையின் நெறிமுறை விதிகளில் செய்யப்படவேண்டிய மாற்றமைவுகளுக்கும் வகை செய்யலாம்.

371இ. மணிப்பூர் மாநிலம் பொறுத்த தனியுறு வகையம் :

(1) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், குடியரசுத்தலைவர் மணிப்பூர் மாநிலம் பொறுத்துத் தாம் பிறப்பிக்கும் ஆணையின்வழி, அந்த மாநிலத்தின் குன்றுப் பகுதிகளிலிருந்து அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெறும் உறுப்பினர்களைக் கொண்ட அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையின் குழு ஒன்றினை அமைப்பதற்கும் அக்குழுவின் செயற்பணிகளுக்கும், அத்தகைய குழு முறையாகச் செயற்பணியாற்றுமாறு செய்வதற்கென அந்த மாநில அரசாங்கத்தின் அலுவல்முறை விதிகளிலும் சட்டமன்றப் பேரவையின் நெறிமுறை விதிகளிலும் செய்யப்படவேண்டிய மாற்றமைவுகளுக்கும், ஆளுநருக்கான தனிப்பொறுப்பு எதற்கும் வகைசெய்யலாம்.

(2) ஆளுநர், ஆண்டுதோறும் அல்லது குடியரசுத்தலைவர் வேண்டுறுத்துதோறும், மணிப்பூர் மாநிலத்திலுள்ள குன்றுப் பகுதிகளின் நிருவாகம் பொறுத்து குடியரசுத்தலைவருக்கு ஓர் அறிக்கையை அளிப்பார்; மேலும், ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரத்தில் மேற்சொன்ன பகுதிகளில் நிருவாகம் குறித்து அந்த மாநிலத்திற்குப் பணிப்புரைகள் இடுவதும் அடங்கும்.

விளக்கம்.—இந்த உறுப்பில், ''குன்றுப் பகுதிகள்'' என்னும் சொற்றொடர், குடியரசுத்தலைவரால், ஆணையின்வழி, குன்றுப் பகுதிகள் என விளம்பப்படும் பகுதிகள் என்று பொருள்படும்.

371ஈ. ஆந்திரப் பிரதேச மாநிலம் பொறுத்த தனியுறு வகையங்கள் :

(1) குடியரசுத்தலைவர், ஆந்திரப் பிரதேச மாநிலம் பொறுத்துத் தாம் பிறப்பிக்கும் ஆணையின்வழி, அந்த மாநிலம் முழுவதற்குமான தேவைகளைக் கருத்திற்கொண்டு அரசு வேலையமர்த்தம் பற்றிய பொருட்பாடுகளிலும் கல்வி பற்றிய பொருட்பாடுகளிலும், அந்த மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளைச் சார்ந்த மக்களின் நேர்தகவான வாய்ப்புநலன்களுக்கும் வசதிகளுக்கும் வகைசெய்யலாம்; மேலும், அந்த மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்காக வெவ்வேறு முறைகளில் வகை செய்யப்படலாம்.

(2). (1) ஆம் கூறின்படி பிறப்பிக்கப்படும் ஓர் ஆணை, குறிப்பாக—

(அ) அந்த மாநிலத்தில் ஒரு குடியியல் பணியத்திலுள்ள பணியடைகளின் வகையை அல்லது வகைகளை அல்லது அந்த மாநிலத்தின் கீழுள்ள பணியடைகளின் வகையை அல்லது வகைகளை, அந்த மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கான வெவ்வேறு உள்ளமை பணிநிலைப் பிரிவுகளாக அமைக்கும்படியும், அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் நெறிகளுக்கும் நெறிமுறைகளுக்கும் இணங்க அத்தகைய பணியடைகளை வகித்துவருபவர்களை, அவ்வாறு அமைக்கப்பட்ட உள்ளமை பணிநிலைப் பிரிவுகளுக்குப் பகிர்ந்தொதுக்கும்படியும் அந்த மாநில அரசாங்கத்தை வேண்டுறுத்தலாம்;

(ஆ). *(i)* அந்த மாநில அரசாங்கத்தின் கீழுள்ள (இந்த உறுப்பின்படியான ஓர் ஆணையை ஒட்டி அமைக்கப்பட்ட அல்லது பிறவாறு அமைக்கப்பட்ட) உள்ளமை பணிநிலைப் பிரிவு எதிலுமுள்ள பணியடைகளுக்கு நேரடியாக ஆளெடுப்பதற்காகவும்,

(ii) அந்த மாநிலத்திலுள்ள உள்ளாட்சி அதிகாரஅமைப்பு எதனின் கீழுமுள்ள பணி நிலைப் பிரிவு எதற்குமான பணியடைகளுக்கு நேரடியாக ஆளெடுப்பதற்காகவும்,

(iii) அந்த மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகம் எதிலும் அல்லது அந்த மாநில அரசாங்கத்தின் கட்டாள்கையிலுள்ள பிற கல்வி நிறுவனம் எதிலும் மாணவர்களைச் சேர்ப்பதற்கான நோக்கங்களுக்காகவும்,

உள்ளாட்சிப் பரப்பிடமாகக் கருதப்படவேண்டுமென அந்த மாநிலத்தின் பகுதி எதனையும் அல்லது பகுதிகள் எவற்றையும் குறித்துரைக்கலாம்;

(இ). (i) அந்த ஆணையில் இதற்கெனக் குறித்துரைக்கப்படுகிறவாறு (ஆ) உட்கூறில் சுட்டப்பட்டுள்ள அத்தகைய பணிநிலைப் பிரிவிலுள்ள பணியடைகளுக்கு நேரடியாக ஆளெடுப்பது பற்றிய பொருட்பாட்டில்,

(ii) அந்த ஆணையில் இதற்கெனக் குறித்துரைக்கப்படுகிறவாறு (ஆ) உட்கூறில் சுட்டப்பட்டுள்ள அத்தகைய பல்கலைக்கழகத்தில் அல்லது பிற கல்வி நிறுவனத்தில் மாணவர்களைச் சேர்ப்பது பற்றிய பொருட்பாட்டில்,

நேர்வுக்கேற்ப, அத்தகைய பணிநிலைப் பிரிவினை, பல்கலைக்கழகத்தை அல்லது பிற கல்வி நிறுவனத்தைப் பொறுத்து, அந்த உள்ளாட்சிப் பரப்பிடத்தில், அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் காலஅளவு எதன்போதும் தங்கியிருந்துள்ள அல்லது படித்துள்ள மாணவர்களுக்கு அல்லது அவர்களுக்குச் சாதகமாக எந்த அளவுக்கு, எந்த முறையில் எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு முன்னுரிமை அளிக்கப்படலாம் அல்லது ஒதுக்கீடு செய்யப்படலாம் என்பதைக் குறித்துரைக்கலாம்.

(3) குடியரசுத்தலைவர், ஆணையின்வழி, ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்காக, அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் 1973ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்திரண்டாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு(உச்ச நீதிமன்றம் அல்லாத பிற) நீதிமன்றம் எதனாலும் அல்லது தீர்ப்பாயம் அல்லது பிற அதிகாரஅமைப்பு எதனாலும் செலுத்தத்தக்கதாக இருந்த அதிகாரவரம்பு, அதிகாரம், அதிகாரஅடைவு எதுவும் உள்ளடங்கலாக அத்தகைய அதிகாரவரம்பு, அதிகாரம் அதிகாரஅடைவு ஆகியவற்றைப் பின்வரும் பொருட்பாடுகளைப் பொறுத்துச் செலுத்துவதற்கென ஒரு நிருவாகப்பணித் தீர்ப்பாயத்தை அமைப்பதற்காக வகைசெய்யலாம்:–

(அ) அந்த ஆணையில் குறித்துரைக்கப்படுகிறவாறு அந்த மாநிலத்தின் குடியியல் பணியம் எதிலுமுள்ள பணியடைகளின் வகையை அல்லது வகைகளைப் பொறுத்து அல்லது அந்த மாநிலத்தின்கீழுள்ள குடியியல் பணியடைகளின் வகையை அல்லது வகைகளைப் பொறுத்து அல்லது அந்த மாநிலத்திலுள்ள உள்ளாட்சி அதிகாரஅமைப்பு ஒன்றன் கட்டாள்கையிலுள்ள பணியடைகளின் வகையை அல்லது வகைகளைப் பொறுத்து அமர்த்துதல், பகிர்ந்தொதுக்குதல் அல்லது பதவியுயர்வு அளித்தல்;

(ஆ) அந்த ஆணையில் குறித்துரைக்கப்படுகிறவாறு அந்த மாநிலத்தின் குடியியல் பணியம் எதிலுமுள்ள பணியடைகளின் வகைக்கு அல்லது வகைகளுக்கு அல்லது அந்த மாநிலத்தின்கீழுள்ள குடியியல் பணியடைகளின் வகைக்கு அல்லது வகைகளுக்கு அல்லது அந்த மாநிலத்திலுள்ள உள்ளாட்சி அதிகாரஅமைப்பு ஒன்றன் கட்டாள்கையிலுள்ள பணியடைகளின் வகைக்கு அல்லது வகைகளுக்கு அமர்த்தப்பெற்றவர்களின் பகிர்ந்தொதுக்கப்பெற்றவர்களின் அல்லது பதவியுயர்வு அளிக்கப்பெற்றவர்களின் பணிமுதுநிலை;

(இ) அந்த ஆணையில் குறித்துரைக்கப்படுகிறவாறு அந்த மாநிலத்தின் குடியியல் பணியம் எதிலுமுள்ள பணியடைகளின் வகைக்கு அல்லது வகைகளுக்கு அல்லது அந்த மாநிலத்தின்கீழுள்ள குடியியல் பணியடைகளின் வகைக்கு அல்லது வகைகளுக்கு அல்லது அந்த மாநிலத்திலுள்ள உள்ளாட்சி அதிகார அமைப்பு ஒன்றன் கட்டாள்கையிலுள்ள பணியடைகளின் வகைக்கு அல்லது வகைகளுக்கு அமர்த்தப்பெற்றவர்களின், பகிர்ந்தொதுக்கப் பெற்றவர்களின் அல்லது பதவியுயர்வு அளிக்கப்பெற்றவர்களின் பிற பணிவரைக்கட்டுகள்.

(4). (3)ஆம் கூறின்படி பிறப்பிக்கப்படும் ஓர் ஆணை–

(அ) அந்த நிருவாகப்பணித் தீர்ப்பாயத்தின் அதிகாரவரம்பினுள் அடங்கிய பொருட்பாடுகளில், அந்த ஆணையில் குடியரசுத்தலைவரால் குறித்துரைக்கப்படும் பொருட்பாடு எதன் தொடர்பாகவும் உள்ள குறைகளைத் தீர்ப்பதற்கான உரையீடுகளைப் பெறுவதற்கும், அவற்றின்மீது அத்தீர்ப்பாயம் தான் பொருத்தமெனக் கருதும் ஆணைகளைப் பிறப்பிப்பதற்கும் அதிகாரமளிக்கலாம்;

(ஆ) நிருவாகப்பணித் தீர்ப்பாயத்தின் அதிகாரங்கள், அதிகார அடைவுகள், நெறிமுறை ஆகியவை பொறுத்துக் குடியரசுத்தலைவர் தேவையெனக் கருதும் (தன்னை அவமதித்ததற்காகத் தண்டனை விதிப்பதற்கு அந்த நிருவாகப்பணித் தீர்ப்பாயத்திற்கு உள்ள அதிகாரங்கள் பொறுத்த வகையங்கள் உள்ளடங்கலான) வகையங்களைக் கொண்டிருக்கலாம்;

(இ) அந்த நிருவாகப்பணித் தீர்ப்பாயத்தின் அதிகாரவரம்பினுள் அடங்கிய பொருட்பாடுகள் தொடர்பானவையாகவும், அந்த ஆணையின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு (உச்ச நீதிமன்றம் அல்லாத பிற) நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் அல்லது பிற அதிகாரஅமைப்பு எதன் முன்பும் முடிவுறாநிலையிலுமுள்ள நடவடிக்கைகளில் அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் நடவடிக்கைகளின் வகைகளை அத்தீர்ப்பாயத்திற்கு மாற்றுவதற்கு வகைசெய்யலாம்;

(ஈ) குடியரசுத்தலைவர் தேவையெனக் கருதும் (கட்டணங்கள், காலவரம்பு, சான்று ஆகியவைபற்றியோ அல்லது விதிவிலக்குகள் அல்லது மாற்றமைவுகள் எவற்றுக்கும் உட்பட்டு, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதனையும் பொருந்துறச் செய்வதற்கோ உள்ள வகையங்கள் உள்ளடங்கலாக) துணையுறு, சார்வுறு மற்றும் விளைவுறு வகையங்களைக் கொண்டிருக்கலாம்.

(5) நிருவாகப்பணித் தீர்ப்பாயம் வழக்கு எதனையும் இறுதியாகத் தீர்வு செய்து பிறப்பிக்கும் ஆணையானது, மாநில அரசாங்கம் அதனை உறுதிசெய்வதன்மீது அல்லது அந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதம் கழிவுறுவதன்மீது இதில் எது முந்தியதோ அது முதற்கொண்டு, செல்திறம் பெறும்:

வரம்புரையாக: மாநில அரசாங்கம் பிறப்பிக்கும் எழுத்துவடிவிலான தனியுறு ஆணைபின்வழி, அதில் குறித்துரைக்கப்படும் காரணங்களுக்காக, நிருவாகப்பணித் தீர்ப்பாயத்தின் ஆணை எதனையும், அது செல்திறம் பெறுவதற்கு முன்னரே மாற்றமைவோ அழித்தறவோ செய்யலாம்; அத்தகைய ஒரு நேர்வில், நிருவாகப்பணித் தீர்ப்பாயத்தின் ஆணையானது, அத்தகைய மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் பெறும் அல்லது செல்திறம் இல்லாது போகும்.

(6). (5)ஆம் கூறுக்கான வரம்புரையின்படி மாநில அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்படும் தனியுறு ஆணை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடுமான விரைவில், அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையின் ஈரவைகளின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

(7) அந்த மாநிலத்திற்கான உயர் நீதிமன்றம், அந்த நிருவாகப்பணித் தீர்ப்பாயத்தைக் கண்காணிப்பதற்கான அதிகாரங்கள் உடையது ஆகாது; மேலும், (உச்ச நீதிமன்றம் அல்லாத பிற நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் எதுவும், அந்த நிருவாகப்பணித் தீர்ப்பாயத்தின் அல்லது அதன் தொடர்பான அதிகாரவரம்புக்கு, அதிகாரத்திற்கு அல்லது அதிகாரஅடைவுக்கு உட்பட்ட பொருட்பாடு எதனையும் பொறுத்து அதிகாரவரம்பு, அதிகாரம் அல்லது அதிகார அடைவு எதனையும் செலுத்துதல் ஆகாது.

(8) குடியரசுத்தலைவர், அந்த நிருவாகப்பணித் தீர்ப்பாயம் தொடர்ந்து இருந்துவரத் தேவையில்லை எனத் தெளிவுறக்காண்பாராயின், ஆணையின்வழி, அந்நிருவாகப்பணித் தீர்ப்பாயத்தை ஒழித்துவிடலாம்; மேலும், அவ்வாறு ஒழிப்பதை ஒட்டிமுன்பு அந்தத் தீர்ப்பாயத்தின்முன்பு முடிவுறாநிலையிலுள்ள வழக்குகளை மாற்றுவதற்கும் தீர்வு செய்வதற்கும் அத்தகைய ஆணையில் தாம் தக்கதெனக் கருதும் வகையங்களைச் செய்யலாம்.

(9) நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது பிற அதிகாரஅமைப்பு ஒன்றன் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதுவும் இருந்தபோதிலும்–

(அ). *(i)* 1956 நவம்பர் 1 ஆம் நாளுக்கு முன்பு, அந்த நாளுக்கு முன்னர் இருந்த ஐதராபாத் குறுநில அரசாங்கத்தின் அல்லது அதிலிருந்த உள்ளாட்சி அதிகாரஅமைப்பு ஒன்றன் கீழிருந்த பணியடை எதற்கும்,

(ii) 1973ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்திரண்டாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்க்நிலைக்கு முன்பு ஆந்திரப் பிரதேச மாநில அரசாங்கத்தின் அல்லது அதிலிருந்த உள்ளாட்சி அல்லது பிற அதிகாரஅமைப்பு ஒன்றன் கீழிருந்த பணியடை எதற்கும் செய்யப்பட்ட எவரொருவரின் அமர்த்தம், பணியிடம் குறித்தல், பதவியுயர்வு அல்லது மாற்றம் எதுவும்,

(ஆ). *(அ)* உட்கூறில் சுட்டப்பட்டுள்ள எவராலும் அல்லது அவர் முன்பு எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது செய்யப்பட்ட செயல் எதுவும்

அத்தகைய அமர்த்தம், பணியிடம் குறித்தல், பதவியுயர்வு அல்லது மாற்றம் பொறுத்து ஐதராபாத் குறுநிலத்தில் அல்லது, நேர்வுக்கேற்ப, ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் பகுதி எதிலும் உறைவிடம் குறித்த வேண்டுறுத்தம் எதற்கும் வகைசெய்து அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதற்கும் இணங்கியவாறு அத்தகையவரின் அமர்த்தம், பணியிடம் குறித்தல், பதவியுயர்வு அல்லது மாற்றம் செய்யப்படவில்லை என்னும் காரணத்தின்பேரில் மட்டுமே சட்ட முரணானது அல்லது இல்லாநிலையது அல்லது எப்போதேனும் சட்டமுரணானதாகிவிட்டது அல்லது இல்லாநிலையதாகிவிட்டது என்று கொள்ளப்படுதல் ஆகாது.

(10) இந்த அரசமைப்பின் பிற வகையம் எதிலும் அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் எது எவ்வாறிருப்பினும், இந்த உறுப்பின் வகையங்களும் இந்த உறுப்பின்படி குடியரசுத்தலைவரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றன் வகையங்களும் செல்திறம் உடையன ஆகும்.

371உ. ஆந்திரப் பிரதேசத்தில் மையப் பல்கலைக்கழகத்தை நிறுவுதல் :

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்காக நாடாளுமன்றம் சட்டத்தின்வழி வகை செய்யலாம்.

371ஊ. சிக்கிம் மாநிலம் பொறுத்த தனியுறு வகையங்கள் :

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்—

(அ) சிக்கிம் மாநிலச் சட்டமன்றப் பேரவையானது முப்பதுக்கும் குறையாத உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்;

(ஆ) 1975ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தாறாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து (குறித்திட்ட நாள் என இதன் பின்பு இந்த உறுப்பில் சுட்டப்படுவது)—

(i) 1974 ஏப்ரலில் சிக்கிமில் நடைபெற்ற தேர்தலின் விளைவாக அத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பெற்ற பதவியிலிருக்கும் உறுப்பினர்கள் என (இதன் பின்பு சுட்டப்பெறும்) முப்பத்திரண்டு உறுப்பினர்களுடன் உருவாக்கப்பட்ட சிக்கிமிற்கான சட்டமன்றப் பேரவையானது, இந்த அரசமைப்பின்படி உரியவாறு அமைக்கப்பட்ட சிக்கிம் மாநிலச் சட்டமன்றப் பேரவையாகக் கொள்ளப்படும்;

(ii) பதவியிலிருக்கும் உறுப்பினர்கள், இந்த அரசமைப்பின்படி உரியவாறு தேர்ந்தெடுக்கப்பெற்ற சிக்கிம் மாநிலச் சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களாகக் கொள்ளப்பெறுவர்;

(iii) மேற்சொன்ன சிக்கிம் மாநிலச் சட்டமன்றப் பேரவையானது, இந்த அரசமைப்பின்படி ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையின் அதிகாரங்களைச் செலுத்திவருவதோடு, பதவிப்பணிகளையும் புரிந்துவரும்;

(இ). (ஆ) கூறின்படி சிக்கிம் மாநிலச் சட்டமன்றப் பேரவை எனக் கொள்ளப்படும் பேரவையைப் பொறுத்தவரை, 172ஆம் உறுப்பின் (1)ஆம் கூறிலுள்ள ஐந்து ஆண்டுக் காலஅளவைக் குறிக்கும் சுட்டுகைகள், நான்கு ஆண்டுக் காலஅளவைக் குறிக்கும் சுட்டுகைகளாகப் பொருள்கொள்ளப்படும்; மேலும், குறித்திட்ட நாளிலிருந்து மேற்சொன்ன நான்கு ஆண்டுக் காலஅளவு தொடங்குவதாகக் கொள்ளப்படும்;

(ஈ) நாடாளுமன்றம் சட்டத்தினால் பிற ஏற்பாடுகள் செய்யும் வரையில் மக்களவையில் சிக்கிம் மாநிலத்திற்கு ஒரு பதவியிடம் ஒதுக்கப்படும்; மேலும், சிக்கிம் மாநிலம், சிக்கிமிற்கான நாடாளுமன்றத் தேர்தல் தொகுதி என வழங்கும் ஒரு நாடாளுமன்றத் தேர்தல் தொகுதியாக அமையும்;

(உ) மக்களவைக்கான சிக்கிம் மாநிலத்தின் சார்பாற்றுநர், குறித்திட்ட நாளன்று நிலவுறும் சிக்கிம் மாநிலச் சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பெறுவார்;

(ஊ) நாடாளுமன்றம், சிக்கிம் மக்களின் வெவ்வேறு பிரிவினரின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு, அத்தகைய பிரிவினரைச் சார்ந்த வேட்பாளர்களால் நிரப்பப்படும் சிக்கிம் மாநிலச் சட்டமன்றப் பேரவையிலுள்ள பதவியிடங்களின் எண்ணிக்கையை நிருணயிப்பதற்கும், சிக்கிம் மாநிலச் சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் அத்தகைய பிரிவினரைச் சார்ந்த வேட்பாளர்கள் மட்டுமே நிற்கக் கூடிய, பேரவைத் தேர்தல் தொகுதிகளை வரையறை செய்வதற்கும் வகைசெய்யலாம்;

(எ) சிக்கிமின் ஆளுநர், அமைதிகாப்பதற்கும், சிக்கிம் மக்களின் வெவ்வேறு பிரிவினரின் சமுதாய மற்றும் பொருளியல் முன்னேற்றத்தை உறுதிசெய்வதற்காக ஒரு நேரிய ஏற்பாடு செய்வதற்கும் தனிப்பொறுப்பு உடையவர் ஆவார்; மேலும் சிக்கிமின் ஆளுநர் இந்தக் கூறின்படி தம் தனிப்பொறுப்பை நிறைவேற்றுகையில், குடியரசுத்தலைவர், அப்போதைக்கு இடுவதற்குப் பொருத்தமெனக் கருதும் பணிப்புரைகளுக்கு உட்பட்டு, தம் உளத் தேர்வின்படிச் செயலுறுவர்;

(ஏ) குறித்திட்ட நாளை ஒட்டிமுன்பு சிக்கிம் அரசாங்கத்திடம் அல்லது சிக்கிம் அரசாங்கத்திற்காக பிற அதிகாரஅமைப்பு எதனிடமும் அல்லது எவரொருவரிடமும் உற்றமைந்திருந்த (சிக்கிம் மாநிலத்தில் அடங்கியுள்ள ஆட்சிநிலவரைகளுக்குள்ளாயினும் அல்லது வெளியிலாயினும் இருந்த) சொத்து மற்றும் சொத்திருப்புகள் அனைத்தும் குறித்திட்ட நாளிலிருந்து சிக்கிம் மாநில அரசாங்கத்திடம் உற்றமைந்திருக்கும்;

(ஐ) சிக்கிம் மாநிலத்தில் அடங்கியுள்ள ஆட்சிநிலவரைகளில் குறித்திட்ட நாளை ஒட்டிமுன்பு செயற்பணியாற்றிவந்த உயர் நீதிமன்றம், குறித்திட்ட நாளன்றும் அது முதற்கொண்டும் சிக்கிம் மாநிலத்திற்கான உயர் நீதிமன்றமாகக் கொள்ளப்படும்;

(ஒ) சிக்கிம் மாநிலத்தின் ஆட்சிநிலவரை எங்கணும் உள்ள உரிமையியல், குற்றவியல் மற்றும் வருவாய்த் துறை அதிகாரவரம்புடைய நீதிமன்றங்கள் அனைத்தும், அதிகாரஅமைப்புகள் அனைத்தும், நீதித் துறை, ஆட்சித் துறை மற்றும் அலுவலகப் பணித் துறை அலுவலர்கள் அனைவரும், குறித்திட்ட நாளன்றும் அது முதற்கொண்டும், இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, அவரவர் தம் பதவிப்பணிகளைத் தொடர்ந்து புரிந்து வருதல் வேண்டும்;

(ஓ) சிக்கிம் மாநிலத்தில் அடங்கியுள்ள ஆட்சிநிலவரைகளில் அல்லது அவற்றின் பகுதி எதிலும் குறித்திட்ட நாளை ஒட்டிமுன்பு செல்லாற்றலிலிருந்த சட்டங்கள் அனைத்தும், தகுதிறம் கொண்ட சட்டமன்றத்தால் அல்லது தகுதிறம்கொண்ட பிற அதிகாரஅமைப்பால் திருத்தமோ நீக்கறவோ செய்யப்படும் வரையில், தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வரும்;

(ஔ) சிக்கிம் மாநிலத்தின் நிருவாகம் தொடர்பாக *(�ஔ)* கூறில் சுட்டப்பட்ட சட்டம் எதுவும் பொருந்துறுவதற்கு வழிவகுப்பதற்காகவும் அத்தகைய சட்டம் ஒன்றன் வகையங்களை இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு இணங்கியிருக்குமாறு செய்வதற்காகவும் குடியரசுத்தலைவர், குறித்திட்ட நாளிலிருந்து ஈராண்டுகளுக்குள் ஆணையின்வழி, நீக்கறவு அல்லது திருத்தம் என்னும் முறையில், தேவையென அல்லது உகந்ததெனக் கருதும் தழுவமைவுகளை அல்லது மாற்றமைவுகளைச் செய்யலாம்; மற்றும், அதன்மேல், அத்தகைய சட்டம் ஒவ்வொன்றும், அவ்வாறு செய்யப்பட்ட தழுவமைவுகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு, செல்திறம் உடையது ஆகும்; மேலும், அத்தகைய தழுவமைவு அல்லது மாற்றமைவு எதனையும் நீதிமன்றம் எதிலும் எதிர்த்து வாதிடுதல் ஆகாது;

(க) இந்திய அரசாங்கம் அல்லது அதற்கு முன்பிருந்த அரசாங்கங்களில் எதுவும் ஒரு தரப்பினராக இருந்து, குறித்திட்ட நாளுக்கு முன்பு செய்துக்கொள்ளப்பட்ட அல்லது எழுதிக்கொடுக்கப்பட்ட சிக்கிம் தொடர்பான உடன்படிக்கை, உடன்பாடு, ஒப்புறுதி அல்லது அவைபோன்ற பிற முறையாவணம் எதனின்றும் எழும் பூசல் அல்லது பிற பொருட்பாடு எதனையும் பொறுத்து உச்ச நீதிமன்றமோ பிற நீதிமன்றம் எதுவுமோ அதிகாரம் உடையது ஆகாது; ஆனால், இந்தக் கூறிலுள்ள எதுவும், 143ஆம் உறுப்பின் வகையங்களைத் திறக்குறைவு செய்வதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது;

(ங) குடியரசுத்தலைவர், பொது அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கைத் தேதியில் இந்தியாவிலுள்ள மாநிலம் ஒன்றில் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதனையும், தாம் தக்கதெனக் கருதும் வரையறைகளுடன் அல்லது மாற்றமைவுகளுடன் சிக்கிம் மாநிலத்திற்கு அளாவச் செய்யலாம்;

(ச) இந்த உறுப்பின் மேலேகண்ட வகையங்களில் எதனையும் செல்திறப்படுத்துவதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், குடியரசுத்தலைவர், ஆணையின்வழி, அந்த இடர்ப்பாட்டினை அகற்றுவதற்குத் தேவையெனத் தமக்குத் தோன்றுகிற (பிற உறுப்பு எதனின் தழுவமைவு அல்லது மாற்றமைவு உள்ளடங்கலாக) எதனையும் செய்யலாம்:

வரம்புரையாக: அத்தகைய ஆணை எதுவும், குறித்திட்ட நாளிலிருந்து ஈராண்டுகள் கழிவுற்ற பின்பு பிறப்பிக்கப்படுதல் ஆகாது;

(ஞ) குறித்திட்ட நாளிலிருந்து, 1975ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தாறாம் திருத்தம்) சட்டம் குடியரசுத்தலைவரின் ஏற்பிசைவினைப் பெறுகிற தேதியை ஒட்டி முன்பு முடிவடைகிற இடைக்கால அளவின்போது, சிக்கிம் மாநிலத்தில் அல்லது அதில் அடங்கியுள்ள ஆட்சிநிலவரைகளில் அல்லது அது தொடர்பாகச் செய்யப்பட்ட செயல்கள் அனைத்தும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும், 1975ஆம் - ஆண்டு அரசமைப்பு (முப்பத்தாறாம் திருத்தம்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட இந்த அரசமைப்பின் வகையங்களுடன் அவை இணங்கியிருக்குமளவுக்கு அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட அந்த அரசமைப்பின்படி செல்லுந்தன்மையுடன் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாக அனைத்து நோக்கங்களுக்காகவும் கொள்ளப்படுதல் வேண்டும்.

371எ. மிசோரம் மாநிலம் பொறுத்த தனியுறு வகையம்:

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்–

(அ) *(i)* மிசோ மக்களின் சமய அல்லது சமுதாய ஒழுகலாறுகள்,

(ii) மிசோ மக்கள் வழக்காற்றுச் சட்டம் மற்றும் நெறிமுறை,

(iii) மிசோ மக்கள் வழக்காற்றுச் சட்டத்தின்படியான முடிவுகள் உள்ளடங்கிய உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதி நிருவாகம்,

(iv) நிலத்தின்மீதான சொத்துரிமை மற்றும் நிலத்தின் உரிமை மாற்றம்

ஆகியவை பொறுத்த நாடாளுமன்றச் சட்டம் எதுவும், மிசோரம் மாநிலத்திற்குப் பொருந்துறுதல் வேண்டும் என்று மிசோரம் மாநிலச் சட்டமன்றப் பேரவை ஒரு தீர்மானத்தின் வாயிலாக முடிவு செய்திருந்தாலன்றி, அவ்வாறு பொருந்துறுதல் ஆகாது:

வரம்புரையாக: இந்தக் கூறிலுள்ள எதுவும் 1986ஆம் ஆண்டு அரசமைப்பு (ஐம்பத்து மூன்றாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, ஒன்றியத்து ஆட்சிநிலவரையாகிய மிசோரத்தில் செல்லாற்றலிலிருந்த மைய அரசுச் சட்டம் எதற்கும் பொறுந்துறுதல் ஆகாது;

(ஆ) மிசோரம் மாநிலச் சட்டமன்றப் பேரவையானது நாற்பதுக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

371.ஏ. அருணாசலப் பிரதேச மாநிலம் பொறுத்த தனியுறு வகையம் :

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்—

(அ) அருணாசலப்பிரதேச ஆளுநர், அருணாசலப் பிரதேச மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு பொறுத்துத் தனிப் பொறுப்பு உடையவர் ஆவார்; மேலும், அது தொடர்பாகத் தம் பதவிப்பணிகளை ஆற்றுகையில், ஆளுநர், தாம் எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து, அமைச்சரவையைக் கலந்தாய்வு செய்தபின்பு தாமே முடிவுசெய்வார்:

வரம்புரையாக: ஒரு பொருட்பாடு, இந்தக் கூறின்படி ஆளுநர் தாமே முடிவுசெய்கிறபடி செயற்பட வேண்டுறுத்தப்பட்ட ஒரு பொருட்பாடா இல்லையா என்பதைப் பொறுத்துப் பிரச்சனை எதுவும் எழுமாயின், ஆளுநர் தம் உளத்தேர்வின்படி செய்யும் முடிவே அறுதியானது ஆகும்; ஆளுநர் தாம் முடிவுசெய்கிறபடி செயற்பட்டிருக்கவேண்டும் அல்லது கூடாது என்பதைக் காரணமாகக் காட்டி, அவரால் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மையையும் எதிர்த்து வாதிடுதல் ஆகாது:

மேலும் வரம்புரையாக: குடியரசுத்தலைவர், ஆளுநரிடமிருந்து ஓர் அறிக்கையைப் பெற்றதன்மேல் அல்லது பிறவாறு அருணாசலப் பிரதேச மாநிலத்தின் சட்டம், ஒழுங்கு பொறுத்து ஆளுநர் தனிப்பொறுப்பு உடையவராயிருப்பது இனித் தேவையில்லை என்று தெளிவுறக்கான்பாராயின், அவர், ஆணையின்வழி, அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் தேதியிலிருந்து செல்திறம் பெறுமாறு ஆளுநர் அத்தகைய பொறுப்பு உடையவராயிருப்பது அற்றுப் போகும் என்று பணிக்கலாம்.

(ஆ) அருணாசப் பிரதேச மாநிலச் சட்டமன்றப் பேரவையானது முப்பதுக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

371ஐ. கோவா மாநிலம் பொறுத்த தனியுறு வகையம் :

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், கோவா மாநிலச் சட்டமன்றப் பேரவையானது முப்பதுக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

372. நிலவுறும் சட்டங்கள் தொடர்ந்து செல்லாற்றலில் இருத்தல் மற்றும் அவற்றின் தழுவமைவு :

(1). 395ஆம் உறுப்பில் சுட்டப்பட்டுள்ள சட்டங்கள் இந்த அரசமைப்பினால் நீக்கறவு செய்யப்பட்டிருப்பினும், இந்த அரசமைப்பின் பிற வகையங்களுக்கு உட்பட்டு, இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு இந்திய ஆட்சிநிலவரையில் செல்லாற்றலிலிருந்த சட்டங்கள் அனைத்தும், தகுதிறமுள்ள ஒரு சட்டமன்றத்தினால் அல்லது தகுதிறமுள்ள பிற அதிகாரஅமைப்பினால் மாற்றமோ நீக்கறவோ திருத்தமோ செய்யப்படும் வரையில் தொடர்ந்து செல்லாற்றலில் இருந்துவரும்.

(2) இந்திய ஆட்சிநிலவரையில் செல்லாற்றலிலுள்ள சட்டம் ஒன்றன் வகையங்களை, இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு இணங்கியிருக்குமாறு செய்வதற்காக, குடியரசுத் தலைவர், ஆணையின்வழி, நீக்கறவு அல்லது திருத்தம் என்னும் முறையில் தேவையென அல்லது உகந்ததெனக் கருதும் தழுவமைவுகளையும் மாற்றமைவுகளையும் அச்சட்டத்தில் செய்யலாம்; மேலும், அந்தச் சட்டம் அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் தேதியிலிருந்து, அவ்வாறு செய்யப்பட்ட தழுவமைவுகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டுச் செல்திறம் உடையதாகும் என்று வகைசெய்யலாம்; அத்தகைய தழுவமைவு அல்லது மாற்றமைவு எதனையும் குறித்து நீதிமன்றம் எதிலும் எதிர்த்து வாதிடுதல் ஆகாது.

(3). (2)ஆம் கூறிலுள்ள எதுவும்–

(அ) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலிருந்து மூன்று ஆண்டுகள் கழிவுற்ற பின்பு, சட்டம் எதிலும் தழுவமைவு அல்லது மாற்றமைவு எதனையும் செய்வதற்குக் குடியரசுத்தலைவருக்கு அதிகாரமளிப்பதாகவோ,

(ஆ) மேற்சொன்ன கூறின்படி குடியரசுத்தலைவரால் தழுவமைவு அல்லது மாற்றமைவு செய்யப்பட்ட சட்டம் எதனையும் தகுதிறமுள்ள சட்டமன்றம் அல்லது தகுதிறமுள்ள பிற அதிகாரஅமைப்பு எதுவும் நீக்கறவு அல்லது திருத்தம் செய்வதைத் தடையூறு செய்வதாகவோ

கொள்ளப்படுதல் ஆகாது.

விளக்கம் I.– இந்த உறுப்பில் ''செல்லாற்றலிலுள்ள சட்டம்" என்னும் சொற்றொடர், இந்திய ஆட்சிநிலவரையிலுள்ள ஒரு சட்டமன்றத்தினால் அல்லது தகுதிறமுள்ள பிறவகை அதிகாரஅமைப்பினால் இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு நிறைவேற்றப்பட்டு அல்லது இயற்றப்பட்டு முன்னரே நீக்கறவு செய்யப்படாத ஒரு சட்டத்தை, அத்தகைய சட்டம் எதுவும் அல்லது அதன் பகுதிகள் எவையும் அப்போது முற்றிலுமோ குறிப்பிட்ட பரப்பிடங்களிலோ செயற்பாட்டில் இல்லாதிருப்பினும், உள்ளடக்கும்.

விளக்கம் II.– இந்திய ஆட்சிநிலவரையில் ஒரு சட்டமன்றத்தினால் அல்லது தகுதிறமுள்ள பிற அதிகாரஅமைப்பினால் நிறைவேற்றப்பட்டு அல்லது இயற்றப்பட்டு இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு அந்த ஆட்சிநிலவரையைக் கடந்து செல்திறமும், அத்துடன் இந்திய ஆட்சிநிலவரையில் செல்திறமும் உடைய சட்டம் எதுவும், மேற்சொன்ன அத்தகைய தழுவமைவுகள், மாற்றமைவுகள் எவற்றிற்கும் உட்பட்டு, ஆட்சிநிலவரையைக் கடந்த செல்திறனைத் தொடர்ந்து உடையது ஆகும்.

விளக்கம் III.– இந்த உறுப்பிலுள்ள எதுவும் செல்லாற்றலிலுள்ள தற்காலிகச் சட்டம் எதனையும், அது கழிவுறுவதற்கென நிருணயிக்கப்பட்ட தேதிக்கு பின்பு அல்லது இந்த அரசமைப்பு செல்லாற்றலுக்கு வராதிருக்குமாயின், அது கழிவுற்றிருக்கவேண்டிய தேதிக்குப் பின்பு தொடர்ந்திருக்கச் செய்வதாகப் பொருள்கொள்ளுப்படுதல் ஆகாது.

விளக்கம் IV.– 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் 88ஆம் பிரிவின்படி ஒரு மாகாண ஆளுநரால் சாற்றம் செய்யப்பட்டு, இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு செல்லாற்றலிலிருந்த ஓர் அவசரச்சட்டம், அந்த மாகாணத்திற்கு நேரிணையான மாநிலத்தின் ஆளுநரால் முன்னதாகத் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய தொடக்கநிலைக்குப் பின்பு 382 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்படி செயலுறுகிற அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்திலிருந்து ஆறு வாரங்கள் கழிவுற்றதும் செயற்படுவது அற்றுப்போகும்; மேலும், இந்த உறுப்பிலுள்ள எதுவும் செல்லாற்றலிலுள்ள அத்தகைய அவசரச்சட்டம் எதனையும் மேற்சொன்ன காலஅளவிற்கு பின்பும் தொடர்ந்திருக்கச் செய்வதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

372அ. சட்டங்களைத் தழுவமைவு செய்வதற்குக் குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரம்:

(1) 1956ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு இந்தியாவில் அல்லது அதன் பகுதி எதிலும் செல்லாற்றலிலிருந்த சட்டம் ஒன்றன் வகையங்களை அந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு இணங்கி இருக்குமாறு செய்வதற்காகக் குடியரசுத்தலைவர், 1957 நவம்பர் முதல் நாளுக்கு முன்பு பிறப்பிக்கப்பட்ட ஆணையின்வழி நீக்கறவு அல்லது திருத்தம் என்னும்முறையில் தேவையென அல்லது உகந்ததெனக் கருதும் தழுவமைவுகளையும் மாற்றமைவுகளையும் அச்சட்டத்தில் செய்யலாம்; மேலும், அந்தச் சட்டம் அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் தேதியிலிருந்து, அவ்வாறு செய்யப்பட்ட தழுவமைவுகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு,செல்திறம் உடையதாக இருக்க வகைசெய்யலாம்; அத்தகைய தழுவமைவு அல்லது மாற்றமைவு எதனையும் குறித்து நீதிமன்றம் எதிலும் எதிர்த்து வாதிடுதல் ஆகாது.

(2). (1) ஆம் கூறிலுள்ள எதுவும், மேற்சொன்ன கூறின்படி குடியரசுத்தலைவரால் தழுவமைவு அல்லது மாற்றமைவு செய்யப்பட்ட சட்டம் எதனையும் தகுதிறமுள்ள சட்டமன்றமோ பிற அதிகார அமைப்போ நீக்கறவு அல்லது திருத்தம் செய்வதைத் தடுப்பதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

373. தடுப்புக் காவலில் உள்ளவர்களைப் பொறுத்து, குறித்தசில நேர்வுகளில் ஆணை பிறப்பிப்பதற்குக் குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரம் :

22 ஆம் உறுப்பின் (7)ஆம் கூறின்படி நாடாளுமன்றத்தால் வகைசெய்யப்படுதல், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலிருந்து ஓராண்டு கழிவுறுதல், இவற்றில் எது முந்தியதோ அதுவரையில், மேற்சொன்ன உறுப்பின் (4), (7) ஆகிய கூறுகளில் நாடாளுமன்றம் என்ற சுட்டுகைக்கு மாற்றாக குடியரசுத்தலைவர் என்ற சுட்டுகை அமைந்திருந்தாற்போன்றும், அந்தக் கூறுகளில் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் என்ற சுட்டுகைக்கு மாற்றாக குடியரசுத்தலைவரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை என்ற சுட்டுகை அமைந்திருந்தாற்போன்றும் அந்த உறுப்பு செல்திறம் உடையது ஆகும்.

374. கூட்டாட்சிய நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் கூட்டாட்சிய நீதிமன்றத்தில் அல்லது மன்றத்தமர் மாட்சிமைதங்கிய மன்னர் முன்பு முடிவுறாநிலையிலுள்ள நடவடிக்கைகள் பற்றிய வகையங்கள்:

(1) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு பதவிவகித்த கூட்டாட்சிய நீதிமன்ற நீதிபதிகள், பிறவாறு அவர்கள் தேர்ந்து ஏற்றிருந்தாலன்றி, அத்தகைய தொடக்கநிலையில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக ஆவர்; அதன்மேல் உச்ச நீதிமன்ற நீதிபதிகளைப் பொறுத்து 125ஆம் உறுப்பின்படி வகைசெய்யப்பட்டுள்ள வரையூதியங்களுக்கும் படித்தொகைகளுக்கும் வாராமை விடுப்பு ஓய்வூதியம் பொறுத்த உரிமைகளுக்கும் அவர்கள் உரிமைகொண்டவர்கள் ஆவர்.

(2) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையில் கூட்டாட்சிய நீதிமன்றத்தில் முடிவுறாநிலையிலுள்ள உரிமையியல் அல்லது குற்றவியல் சார்ந்த வழக்குகள், மேன்முறையீடுகள், நடவடிக்கைகள் அனைத்தும் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்படும்; உச்ச நீதிமன்றம், கேட்பு நல்கி அவற்றை முடிவு செய்யும் அதிகாரவரம்பு உடையது ஆகும்; மேலும், இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு கூட்டாட்சிய நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரைகள் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகள், அவை உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருந்தாற்போன்று அல்லது பிறப்பிக்கப்பட்டிருந்தாற்போன்று அதே செல்லாற்றலும் செல்திறமும் உடையன ஆகும்.

(3) இந்த அரசமைப்பிலுள்ள எதுவும், இந்திய ஆட்சிநிலவரைக்குள் உள்ள நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலுமிருந்தும் அல்லது எதனைப் பொறுத்தும் எழுகின்ற மேன்முறையீடுகளையும் மனுக்களையும் தீர்வுசெய்வதற்காக மன்றத்தமர் மாட்சிமைதங்கிய மன்னர் எந்த அளவு அதிகாரம் பெற்றிருக்கிறாரோ அந்த அளவுக்கு அதிகாரம் செலுத்தப்படுவதைச் செல்லுந்தன்மையற்றதாக்கும் வகையில் செயற்படுதல் ஆகாது; மேலும், இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்குப் பின்பு அத்தகைய மேன்முறையீடு அல்லது மனு எதன்மீதும் பிறப்பிக்கப்பட்ட மன்றத்தமர் மாட்சிமை தங்கிய மன்னர் பிறப்பித்த ஆணை எதுவும், இந்த அரசமைப்பினால் உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துகையில், அத்தகைய நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையாக அல்லது தீர்ப்பாணையாக இருப்பது போன்று, அனைத்து நோக்கங்களுக்காகவும் செல்திறம் உடையது ஆகும்.

(4) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையிலும் அது முதற்கொண்டும், முதலாம் இணைப்புப்பட்டியலின் ஆ பகுதியில் குறித்துரைக்கப்பட்ட ஒரு மாநிலத்திலுள்ள நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலிருந்தும் அல்லது அதனைப் பொறுத்து எழுகின்ற மேன்முறையீடுகளையும் மனுக்களையும் ஏற்றுக்கொள்வதற்கும் தீர்வுசெய்வதற்கும் அந்த மாநிலத்தின் அரசப்பேராயமாகச் செயற்பணியாற்றும் அதிகார அமைப்பிற்குள்ள அதிகாரம் அற்றுப்போகும்; மேலும், அத்தகைய தொடக்கநிலையில் மேற்சொன்ன அதிகாரஅமைப்பின் முன்பு முடிவுறாநிலையிலுள்ள மேன்முறையீடுகள், பிற நடவடிக்கைகள் அனைத்தும் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அதனால் தீர்வு செய்யப்படும்.

(5) இந்த உறுப்பின் வகையங்களைச் செல்திறப்படுத்துவதற்காக, நாடாளுமன்றம் சட்டத்தினால் மேற்கொண்டும் வகைசெய்யலாம்.

375. நீதிமன்றங்களும் அதிகாரஅமைப்புகளும் அலுவலர்களும் இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு தொடர்ந்து செயற்பணியாற்றுதல் :

இந்திய ஆட்சிநிலவரையில் எங்கணுமுள்ள உரிமையியல், குற்றவியல் மற்றும் வருவாய்த் துறை அதிகாரவரம்புடைய நீதிமன்றங்கள் அனைத்தும், அதிகாரஅமைப்புகள் அனைத்தும், நீதித் துறை, ஆட்சித் துறை, அலுவலகப் பணித் துறை ஆகியவற்றின் அலுவலர்கள் அனைவரும், இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, அவரவர் தம் பதவிப்பணிகளைத் தொடர்ந்து புரிந்துவருதல் வேண்டும்.

376. உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் பற்றிய வகையங்கள் :

(1). 217ஆம் உறுப்பின் (2)ஆம் கூறில் எது எவ்வாறிருப்பினும், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, மாகாணம் எதிலும் பதவி வகித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள், பிறவாறு அவர்கள் தேர்ந்து ஏற்றிருந்தாலன்றி, அத்தகைய தொடக்கநிலையில் அந்த மாகாணத்திற்கு நேரிணையான மாநிலத்தின் உயர் நீதிமன்ற நீதிபதிகளாக ஆவர்; அதன்மேல் அத்தகைய உயர் நீதிமன்ற நீதிபதிகளைப் பொறுத்து 221ஆம் உறுப்பின்படி வகைசெய்யப்பட்டுள்ள வரையூதியங்களுக்கும் படித்தொகைகளுக்கும், வாராமை விடுப்பு, ஓய்வூதியம் பொறுத்த உரிமைகளுக்கும் அவர்கள் உரிமைகொண்டவர்கள் ஆவர், அத்தகைய நீதிபதி எவரும் இந்தியாவின் குடிமகனாக இல்லாதிருப்பினும், அத்தகைய உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக அல்லது பிற உயர் நீதிமன்றம் ஒன்றின் தலைமை நீதிபதியாக அல்லது பிற நீதிபதியாக அமர்த்தப்படுவதற்குத் தகுமையுடையவர் ஆவார்.

(2) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, முதலாம் இணைப்புப்பட்டியலின் ஆ பகுதியில் குறித்துரைக்கப்பட்ட மாநிலம் எதற்கும் நேரிணையான இந்தியக் குறுநிலம் எதிலும் பதவி வகித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள், பிறவாறு அவர்கள் தேர்ந்து ஏற்றிருந்தாலன்றி, அத்தகைய தொடக்கநிலையின் போது அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட மாநிலத்திலுள்ள உயர் நீதிமன்ற நீதிபதிகளாக ஆவர்; மேலும், 217ஆம் உறுப்பின் (1), (2) ஆகிய கூறுகளில் எது எவ்வாறிருப்பினும், அந்த உறுப்பின் (1) ஆம் கூறின் வரம்புரைக்கு உட்பட்டு, குடியரசுத் தலைவர் ஆணையின்வழித் தீர்மானிக்கும் காலஅளவு கழிவுறும் வரையில் அவர்கள் தொடர்ந்து பதவி வகித்து வருவர்.

(3) இந்த உறுப்பில் ''நீதிபதி'' என்ற சொல், ஒரு செயலமர் நீதிபதியை அல்லது ஒரு கூடுதல் நீதிபதியை உள்ளடக்காது.

377. இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர் பற்றிய வகையங்கள் :

இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு பதவி வகித்த இந்தியத் தலைமைத் தணிக்கையர், பிறவாறு அவர் தேர்ந்துஏற்றிருந்தாலன்றி, அத்தகைய தொடக்கநிலையில் இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர் ஆவார்; அதன்மேல் இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர் பொறுத்து 148ஆம் உறுப்பின் (3)ஆம் கூறின்படி வகைசெய்யப்பட்ட வரையூதியங்களுக்கும், வாராமை விடுப்பு, ஓய்வுதியம் பொறுத்த உரிமைகளுக்கும் உரிமைகொண்டவர் ஆவார்; மேலும், அத்தகைய தொடக்கநிலையை ஒட்டி முன்பு அவருக்குப் பொருந்துறுவனவாயிருந்த வகையங்களின்படி தீர்மானிக்கப்பட்ட அவருடைய பதவிக்காலம் கழிவுறும் வரையில் அவர் தொடர்ந்து பதவி வகித்துவர உரிமை கொண்டவர் ஆவார்.

378. அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் பற்றிய வகையங்கள் :

(1) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு இந்தியத் தன்னாட்சியத்திற்கான அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் பதவி வகித்த உறுப்பினர்கள், பிறவாறு அவர்கள் தேர்ந்து ஏற்றிருந்தாலன்றி, அத்தகைய தொடக்கநிலையில் ஒன்றியத்து அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர்களாக ஆவர்; மேலும், 316 ஆம் உறுப்பின் (1), (2) ஆகிய கூறுகளில் எது எவ்வாறிருப்பினும் அந்த உறுப்பின் (2)ஆம் கூறின் வரம்புரைக்கு உட்பட்டு, அத்தகைய தொடக்கநிலையை ஒட்டிமுன்பு அத்தகைய உறுப்பினர்களுக்குப் பொருந்துறுவனவாயிருந்த விதிகளின்படி தீர்மானிக்கப்பட்ட அவர்களுடைய பதவிக்காலம் கழிவுறும் வரையில் அவர்கள் தொடர்ந்து பதவி வகித்து வருவர்.

(2) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, ஒரு மாகாணத்தின் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் பதவி வகித்த உறுப்பினர்கள் அல்லது மாகாணங்களின் தொகுதி ஒன்றின் தேவைகளை நிறைவுறுத்துவதற்காகப் பணிபுரிகிற அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர்கள், பிறவாறு அவர்கள் தேர்ந்து ஏற்றிருந்தாலன்றி, அந்த மாகாணத்திற்கு நேரிணையான மாநிலத்திற்கான அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர்களாக அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த மாகாணங்களுக்கு நேரிணையான மாநிலங்களின் தேவைகளை நிறைவுறுத்துவதற்காகப் பணிபுரிகிற கூட்டு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர்களாக ஆவர்; மேலும், 316ஆம் உறுப்பின் (1), (2) ஆகிய கூறுகளில் எது எவ்வாறிருப்பினும் அந்த உறுப்பின் (2)ஆம் கூறின் வரம்புரைக்கு உட்பட்டு அத்தகைய தொடக்கநிலையை ஒட்டி முன்பு அந்த உறுப்பினர்களுக்குப் பொருந்துறுவனயிருந்த விதிகளின்படி தீர்மானிக்கப்பட்ட அவர்களுடைய பதவிக்காலம் கழிவுறும் வரையில் அவர்கள் தொடர்ந்து பதவி வகித்து வருவர்.

378அ. ஆந்திரப் பிரதேசச் சட்டமன்றப் பேரவையின் காலஅளவு பற்றிய தனியுறு வகையம் :

172 ஆம் உறுப்பில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 1956ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுஅமைப்புச் சட்டத்தின் 28, 29ஆகிய பிரிவுகளின் வகையங்களின்படி அமைக்கப்பட்ட ஆந்திரப் பிரதேச மாநிலச் சட்டமன்றப் பேரவை, முன்னதாகவே கலைக்கப்பட்டாலன்றி, மேற்சொன்ன 29ஆம் உறுப்பில் சுட்டப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டு காலஅளவிற்குத் தொடர்ந்திருந்துவரும்; ஆனால், அதற்கு மேலும் இருத்தலாகாது; மேலும், மேற்சொன்ன காலஅளவு கழிவுறுங்கால் அந்தச் சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டதாக ஆகிவிடும்.

[1][**379–391.** * * * *]

392. இடர்ப்பாடுகளை அகற்றுவதற்குக் குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரம் :

(1) இடர்ப்பாடுகள் எவற்றையும், குறிப்பாக, 1935 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் வகையங்களிலிருந்து இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு மாறும் இடைக்காலம் தொடர்பானவற்றை அகற்றுவதற்காக, குடியரசுத்தலைவர், ஆணையின்வழி, அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் காலஅளவின்போது மாற்றமைவு, சேர்க்கை அல்லது விடுகை என்னும் முறையில் தாம் தேவையென அல்லது உகந்ததெனக் கருதும் தழுவமைவுகளுக்கு உட்பட்டு இந்த அரசமைப்பு செல்திறம் உடையது ஆகும் என்று பணிக்கலாம்:

வரம்புரையாக: அத்தகைய ஆணை எதுவும் V ஆம் பகுதியின் II ஆம் அத்தியாயத்தின்படி உரியவாறு அமைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்திற்குப் பின்பு பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2). (1) ஆம் கூறின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும் நாடாளுமன்றத்தின்முன் வைக்கப்படுதல் வேண்டும்.

(3) இந்த உறுப்பினாலும், 324 ஆம் உறுப்பினாலும், 367ஆம் உறுப்பின் (3)ஆம் கூறினாலும், 391ஆம் உறுப்பினாலும் குடியரசுத்தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு இந்திய தன்னாட்சியத்தின் தலைமை ஆளுநரால் செலுத்தத்தகுவன ஆகும்.

---

[1] 1956ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் 29 ஆம் பிரிவினாலும் இணைப்புப்பட்டியலினாலும் நீக்கறவு செய்யப்பட்டன.

பகுதி XXII

குறுந்தலைப்பு, தொடக்கம், அதிகார உறுதிபெற்ற இந்திமொழி வாசகம் மற்றும் நீக்கறவுகள்

393. குறுந்தலைப்பு :

இந்த அரசமைப்பு, இந்திய அரசமைப்பு என்று வழங்கப்பெறும்.

394. தொடக்கம் :

இந்த உறுப்பும், 5, 6, 7, 8, 9, 60, 324, 366, 367, 379, 380, 388, 391, 392, 393 ஆகிய உறுப்புகளும் உடனடியாகச் செல்லாற்றல் பெறும்; இந்த அரசமைப்பின் தொடக்கம் என இந்த அரசமைப்பில் சுட்டப்படும் நாளான 1950 ஜனவரி இருபத்தாறாம் நாளன்று இந்த அரசமைப்பின் எஞ்சிய வகையங்கள் செல்லாற்றல் பெறும்.

394அ. அதிகார உறுதிபெற்ற இந்திமொழி வாசகம் :

(1) குடியரசுத்தலைவர்,—

(அ) அரசமைப்புப் பேரவைஉறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ள, இந்த அரசமைப்பின் இந்தி மொழிபெயர்ப்பினை, இந்தி மொழியிலுள்ள மைய அரசுச் சட்டங்களின் அதிகாரஉறுதிபெற்ற வாசகங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழி, நடையமைவு, சொற்றொடர் அமைவு ஆகியவற்றுக்கு ஏற்றவாறு செய்வதற்குத் தேவையாகும் மாற்றமைவுகளையும், அதனை வெளியிடுவதற்கு முன்பு செய்யப்படும் இந்த அரசமைப்பின் அனைத்துத் திருத்தங்களையும் அதில் ஒருங்கிணைத்து அந்த மொழிபெயர்ப்பினையும்,

(ஆ) ஆங்கிலமொழியில் இந்த அரசமைப்பிற்குச் செய்யப்பட்ட திருத்தம் ஒவ்வொன்றின் இந்தி மொழிபெயர்ப்பினையும்

தம்முடைய அதிகாரத்தின்படி வெளியிடுமாறு செய்வார்.

(2). (1) ஆம் கூறின்படி வெளியிடப்படும் இந்த அரசமைப்பின் மற்றும் அதன் திருத்தம் ஒவ்வொன்றின் மொழிபெயர்ப்பும், அதன் மூலப்படிவத்தில் கண்ட அதே பொருளை உடையதாகப் பொருள்கொள்ளப்படும்; மேலும் அத்தகைய மொழிபெயர்ப்பின் பகுதி எதனையும் அவ்வாறு பொருள்கொள்ளுவதில் இடர்பாடு எதுவும் எழுமாயின், குடியரசுத்தலைவர், அதனை ஏற்ற வகையில் திருத்தியமைக்குமாறு செய்வார்.

(3) இந்த உறுப்பின்படி வெளியிடப்படும் இந்த அரசமைப்பின் மற்றும் அதன் திருத்தம் ஒவ்வொன்றின் மொழிபெயர்ப்பும், அனைத்து நோக்கங்களுக்காகவும், அதிகாரஉறுதிபெற்ற அதன் இந்தி மொழி வாசகமாக கொள்ளப்படும்.

395. நீக்கறவுகள் :

1947ஆம் ஆண்டு இந்திய விடுதலைச் சட்டமும், 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டமும், இவற்றுள் பிந்திய சட்டத்தைத் திருத்தும் அல்லது துணைவுறு சட்டங்கள் அனைத்துடனும் சேர்த்து, ஆனால் 1949ஆம் ஆண்டு அரசப் பேராயத்தின் அதிகாரவரம்பு ஒழிப்புச் சட்டம் நீங்கலாக, ஈங்கிதனால் நீக்குறவுசெய்யப்படுகின்றன.

முதலாம் இணைப்புப்பட்டியல்

(1, 4 ஆகிய உறுப்புகள்)

I. மாநிலங்கள்

பெயர் *(1)*	*ஆட்சிநிலவரைகள்* *(2)*
1. ஆந்திரப் பிரதேசம்	.. 1953 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவிலும் 1956ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுஅமைப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவிலும், 1959 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசம் மற்றும் சென்னை (எல்லைகள் மாற்றுகை) சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலிலும், 1968ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசம் மற்றும் மைசூர் (ஆட்சிநிலவரை மாற்றுச்) சட்டத்தின் இணைப்புப்பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள், ஆனால் 1959ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசம் மற்றும் சென்னை எல்லைகள் மாற்றுகை சட்டத்தின் இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள் நீங்கலாக.
2. அசாம்	.. இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு அசாம் மாகாணம், காஸி குறுநிலங்கள் மற்றும் அசாம் பழங்குடியினர் வரையிடங்களில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரைகள், ஆனால் 1951ஆம் ஆண்டு அசாம் (எல்லைகள் மாற்றுகை) சட்டத்தின் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள் மற்றும் 1962ஆம் ஆண்டு நாகாலாந்து மாநிலச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப் பட்டுள்ள ஆட்சிநிலவரைகள் மற்றும் 1971ஆம் ஆண்டு வடகிழக்கு வரையிடங்கள் (மறுஅமைப்பு) சட்டத்தின் 5, 6, 7 ஆகிய பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள் நீங்கலாக.
3. பீகார்	.. இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு பீகார் மாகாணத்தில் அடங்கியிருந்த அல்லது அந்த மாகாணத்தின் ஒரு பகுதியாக அவை அமைந்திருந்தாற்போன்று நிருவாகம் செய்யப்பட்டு வந்த ஆட்சிநிலவரைகள் மற்றும் 1968 ஆம் ஆண்டு பீகார் மற்றும் உத்தரப்பிரதேசம் (எல்லைகள் மாற்றுகை) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சி நிலவரைகள், ஆனால், 1956ஆம் ஆண்டு பீகார் மற்றும் மேற்கு வங்காளம் (ஆட்சிநிலவரைகள் மாற்றுச்) சட்டத்தின் 3ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சி நிலவரைகளும் முதலில் சொல்லப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளும் [1][2000 ஆம் ஆண்டு பீகார் மறுஅமைப்புச் சட்டத்தின் 3ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளும் நீங்கலாக].
4. குஜராத்	.. 1960 ஆம் ஆண்டு பம்பாய் மறுஅமைப்புச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள்.
5. கேரளம்	.. 1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுஅமைப்புச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள

---

1. 2000 ஆம் ஆண்டு பீகார் மறுஅமைப்புச் சட்டத்தின் (30/2000) 5ஆம் பிரிவால் சேர்க்கப்பட்டது (15–11–2000 முதல் செல்திறம் பெறுமாறு).

பெயர் (1)	*ஆட்சிநிலவரைகள்* (2)
6. மத்தியப் பிரதேசம்	.. 1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுஅமைப்புச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும் 1959 ஆம் ஆண்டு ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசம் (ஆட்சிநிலவரைகள் மாற்றுச்) சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள் [1][ஆனால், 2000 ஆம் ஆண்டு மத்தியப் பிரேதசம் மறுஅமைப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆட்சிநிலவரைகள் நீங்கலாக].
7. தமிழ்நாடு	.. இந்திய அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, சென்னை மாகாணத்தில் அடங்கியிருந்த அல்லது அந்த மாகாணத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்தாற்போன்று நிருவாகம் செய்யப்பட்டு வந்த ஆட்சிநிலவரைகள் மற்றும் 1956ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுஅமைப்புச் சட்டத்தின் 4ஆம் பிரிவிலும் 1959 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசம் மற்றும் சென்னை (எல்லைகள் மாற்றுகை) சட்டத்தின் இரண்டாம் இணைப்புப்பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள், ஆனால், 1953 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவிலும் 4ஆம் பிரிவின்(1)ஆம் உட்பிரிவிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளும் 1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுஅமைப்புச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) கூறிலும் 6 ஆம் பிரிவிலும் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) கூறிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளும் 1959 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசம் மற்றும் சென்னை (எல்லைகள் மாற்றுகை) சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளும் நீங்கலாக.
8. மகாராஷ்டிரம்	.. 1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுஅமைப்புச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள், ஆனால், 1960 ஆம் ஆண்டு பம்பாய் மறுஅமைப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள் நீங்கலாக.
9. கர்நாடகம்	.. 1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுஅமைப்புச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சி நிலவரைகள், ஆனால், 1968 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசம் மற்றும் மைசூர் (ஆட்சிநிலவரை மாற்றுச்) சட்டத்தின் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரை நீங்கலாக.
10. ஒரிசா	.. இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு ஒரிசா மாகாணத்தில் அடங்கியிருந்த அல்லது அந்த மாகாணத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்தாற் போன்று நிருவாகம் செய்யப்பட்டு வந்த ஆட்சிநிலவரைகள்.

---

1. 2000 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச மறுஅமைப்புச் சட்டத்தின் (28/2000) 5ஆம் பிரிவால் சேர்க்கப்பட்டது (1–11–2000 முதல் செல்திறம் பெறுமாறு).

பெயர் (1)		ஆட்சிநிலவரைகள் (2)
11. பஞ்சாப்	..	1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுஅமைப்புச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள் மற்றும் 1960 ஆம் ஆண்டு கையகப்படுத்தப்பட்ட ஆட்சிநிலவரைகள் (ஒன்றுகை) சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலின் II ஆம் பகுதியில் சுட்டப்பட்டுள்ள ஆட்சி நிலவரைகள், ஆனால், 1960 ஆம் ஆண்டு அரசமைப்பு (ஒன்பதாம் திருத்தம்) சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலின் II ஆம் பகுதியில் சுட்டப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள், மற்றும் 1966 ஆம் ஆண்டு பஞ்சாப் மறுஅமைப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும் 4 ஆம் பிரிவிலும் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள் நீங்கலாக.
12. ராஜஸ்தான்	..	1956ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுஅமைப்புச் சட்டத்தின் 10ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள், ஆனால், 1959ஆம் ஆண்டு ராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் (ஆட்சிநிலவரைகள் மாற்றுச்) சட்டத்தின் முதலாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள் நீங்கலாக.
13. உத்தரப்பிரதேசம்	..	இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, ஐக்கிய மாகாணங்கள் என வழங்கப்பட்ட மாகாணத்தில் அடங்கியிருந்த அல்லது அந்த மாகாணத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்தாற்போன்று நிருவாகம் செய்யப்பட்டு வந்த ஆட்சி நிலவரைகள் மற்றும் 1968 ஆம் ஆண்டு பீகார் மற்றும் உத்தரப்பிரதேசம் (எல்லைகள் மாற்றுகை) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளும் [1][மற்றும் 2000 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேசம் மறுஅமைப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளும்] மற்றும் 1979 ஆம் ஆண்டு அரியானா மற்றும் உத்தரப்பிரதேசம் (எல்லைகள் மாற்றுகை) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) கூறில் குறித்துரைக்கப் பட்டுள்ள ஆட்சிநிலவரைகளும் நீங்கலாக.
14. மேற்கு வங்காளம்	..	இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, மேற்கு வங்காள மாகாணத்தில் அடங்கியிருந்த அல்லது அந்த மாகாணத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்தாற்போன்று நிருவாகம் செய்யப்பட்டு வந்த ஆட்சிநிலவரைகள் மற்றும் 1954 ஆம் ஆண்டு சந்திர நாகூர் (ஒன்றுகை) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (இ) கூறில் வரையறை செய்யப்பட்ட சந்திர நாகூர் ஆட்சிநிலவரை, அத்துடன் 1956 ஆம் ஆண்டு பீகார் மற்றும் மேற்கு வங்காளம் (ஆட்சிநிலவரை மாற்றுச் சட்டத்தின்) 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளுங்கூட
15. ஜம்மு–காஷ்மீர்	..	இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, இந்தியக் குறுநிலமான ஜம்மு–காஷ்மீரில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரை.
16. நாகாலாந்து	..	1962 ஆம் ஆண்டு நாகாலாந்து மாநிலச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள்.

---

1. 2000 ஆம் ஆண்டு உத்திரப்பிரதேச மறுஅமைப்புச் சட்டத்தின் (29/2000) 5ஆம் பிரிவால் புகுத்தப்பட்டது (9–11–2000 முதல் செல்திறம் பெறுமாறு).

பெயர் (1)		ஆட்சிநிலவரைகள் (2)
17. அரியானா	..	1966 ஆம் ஆண்டு பஞ்சாப் மறுஅமைப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள் மற்றும் 1979 ஆம் ஆண்டு அரியானா மற்றும் உத்தரப்பிரதேசம் (எல்லைகள் மாற்றுகை) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள் ஆனால், அந்த சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையிடங்கள் நீங்கலாக.
18. இமாச்சலப் பிரதேசம்	..	இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, இமாச்சலப் பிரதேசம் மற்றும் பிலாஸ்பூர் என்னும் பெயர்களில் தலைமை ஆணையர்களின் மாகாணங்கள் போன்று நிருவாகம் செய்யப்பட்டுவந்த ஆட்சிநிலவரைகள் மற்றும் 1966 ஆம் ஆண்டு பஞ்சாப் மறுஅமைப்புச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள்.
19. மணிப்பூர்	..	இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, மணிப்பூர் என்னும் பெயரில் ஒரு தலைமை ஆணையர் மாகாணமாக இருந்தாற்போன்று நிருவாகம் செய்யப்பட்டுவந்த ஆட்சிநிலவரை.
20. திரிபுரா	..	இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, திரிபுரா என்னும் பெயரில் ஒரு தலைமை ஆணையர் மாகாணமாக இருந்தாற்போன்று நிருவாகம் செய்யப்பட்டு வந்த ஆட்சிநிலவரை.
21. மேகலாயா	..	1971 ஆம் ஆண்டு வட-கிழக்கு வரையிடங்கள் (மறுஅமைப்பு) சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள்.
22. சிக்கிம்	..	1975 ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தாறாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, சிக்கிமில் அடங்கியிருந்த ஆட்சி நிலவரைகள்.
23. மிசோரம்	..	1971 ஆம் ஆண்டு வட–கிழக்கு வரையிடங்கள் (மறு அமைப்பு) சட்டத்தின் 6 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சி நிலவரைகள்.
24. அருணாச்சலப் பிரதேசம்	..	1971 ஆம் ஆண்டு வட–கிழக்கு வரையிடங்கள் (மறுஅமைப்பு) சட்டத்தின் 6 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள்.
25. கோவா	..	1987 ஆம் ஆண்டு கோவா, தமண் மற்றும் டையூ மறு அமைப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சி நிலவரைகள்.
[1][26. சட்டீஸ்கர்	..	2000 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச மறுஅமைப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள்.]
[2][27. உத்திராஞ்சல்	..	2000 ஆம் ஆண்டு உத்திரப்பிரதேச மறுஅமைப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள்.]
[3][28. ஜார்கண்ட்	..	2000 ஆம் ஆண்டு பீகார் மறுஅமைப்புச் சட்டத்தின் 3ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள்.]

---

1. 2000 ஆம் ஆண்டு மத்தியப்பிரதேச மறுஅமைப்புச் சட்டத்தின் (28/2000) புகுத்தப்பட்டது
2. 2000 ஆம் ஆண்டு உத்திரப்பிரதேச மறுஅமைப்புச் சட்டத்தின் (29/2000) புகுத்தப்பட்டது
3. 2000 ஆம் ஆண்டு பீகார் மறுஅமைப்புச் சட்டத்தின் (30/2000) புகுத்தப்பட்டது

II. ஒன்றியத்து ஆட்சிநிலவரைகள்

பெயர் (1)		பரப்பிடம் (2)
1. தில்லி	..	இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, தில்லித் தலைமை ஆணையர் மாகாணத்தில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரை.
2. அந்தமான்–நிக்கோபார்த் தீவுகள்	..	இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, அந்தமான் நிக்கோபார்த் தீவுகள் தலைமை ஆணையர் மாகாணத்தில் அடங்கியிருந்த ஆட்சி நிலவரை.
3. இலட்சத் தீவுகள்	..	1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுஅமைப்பு சட்டத்தின் 6 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சி நிலவரைகள்.
4. தாத்ரா–நாகர் ஹவேலி	..	1961 ஆம் ஆண்டு ஆகஸ்டு பதினோராம் நாளினை ஒட்டிமுன்பு, சுதந்திர தாத்ரா–நாகர் ஹவேலியில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரை.
5. தமண் மற்றும் டையூ	..	1987 ஆம் ஆண்டு கோவா, தமண் மற்றும் டையூ மறுஅமைப்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள்.
6. பாண்டிச்சேரி	..	1962 ஆம் ஆண்டு ஆகஸ்டு பதினாறாம் நாளினை ஒட்டிமுன்பு, பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி மற்றும் ஏனாம் என வழங்கப்பட்ட இந்தியாவிலுள்ள பிரெஞ்சுக் குடியேற்ற அமைப்புகளில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரைகள்.
7. சண்டிகர்	..	1966 ஆம் ஆண்டு பஞ்சாப் மறுஅமைப்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சி நிலவரைகள்.

இரண்டாம் இணைப்புப்பட்டியல்

[59 (3), 65 (3), 75 (6), 97, 125, 148 (3), 158 (3), 164(5), 186, 221 ஆகிய உறுப்புகள்]

பகுதி அ

குடியரசுத்தலைவர் மற்றும் மாநிலங்களின் ஆளுநர்கள் குறித்த வகையங்கள்

1. குடியரசுத்தலைவருக்கும் மாநிலங்களின் ஆளுநர்களுக்கும் மாதம் ஒன்றுக்குப் பின்வரும் பதவியூதியங்கள் வழங்கப்படுதல் வேண்டும்:—

குடியரசுத்தலைவர்	..	*10,000 ரூபாய்
ஒரு மாநிலத்தின் ஆளுநர்	..	**5,500 ரூபாய்

2. இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, முறையே இந்தியத் தன்னாட்சியத்தின் தலைமை ஆளுநருக்கும் நேரிணையான மாகாணங்களின் ஆளுநர்களுக்கும் வழங்கப்பட்டதான படித்தொகைகள், குடியரசுத்தலைவருக்கும் மாநிலங்களின் ஆளுநர்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

3. குடியரசுத்தலைவரும் மாநிலங்களின் ஆளுநர்களும் தம் பதவிக்காலங்கள் முழுவதிலும் இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, முறையே தலைமைஆளுநரும் நேரிணையான மாகாணங்களின் ஆளுநர்களும் கொண்டிருந்த மதிப்புரிமைகளுக்கு உரிமைகொண்டவர்கள் ஆவர்.

4. குடியரசுத் துணைத்தலைவர் அல்லது பிறர் எவரும் குடியரசுத்தலைவரின் பதவிப்பணிகளை ஆற்றிவரும்போதோ குடியரசுத்தலைவராகச் செயலுறும் போதோ அல்லது எவர் ஒருவரும் ஆளுநரின் பதவிபணிகளை ஆற்றி வரும் போதோ அவர், குடியரசுத்தலைவராக அல்லது ஆளுநராகப் பதவிப்பணிகளை ஆற்றிவரும்போது அல்லது செயலுறும்போது, அந்தந்தப் பதவிக்குரிய ஊதியங்களையும் படித்தொகைகளையும் மதிப்புரிமைகளையும் பெறுவதற்கு உரிமைகொண்டவர் ஆவார்.

[பகுதிஆ–1956 ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் 29 ஆம் பிரிவினாலும் இணைப்புப்பட்டியலினாலும் விட்டுவிடப்பட்டது.]

பகுதி இ

மக்களவைத் தலைவர், துணைத்தலைவர், மாநிலங்களவைத் தலைவர், துணைத் தலைவர், ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவைத்தலைவர், துணைத் தலைவர், சட்டமன்ற மேலவைத்தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் குறித்த வகையங்கள் :

7. மக்களவைத் தலைவருக்கும் மாநிலங்களவைத் தலைவருக்கும், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, இந்தியத் தன்னாட்சியத்தின் அரசமைப்புப் பேரவைத்தலைவருக்கு வழங்கப்பட்டதான பதவியூதியங்களும் படித்தொகைகளும் வழங்கப்படுதல் வேண்டும்; மேலும், மக்களவைத் துணைத் தலைவருக்கும் மாநிலங்களவைத் துணைத்தலைவருக்கும், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, இந்தியத் தன்னாட்சியத்தின் அரசமைப்புப் பேரவைத் துணைத்தலைவருக்கு வழங்கப்பட்டதான பதவியூதியங்களும் படித்தொகைகளும் வழங்கப்படுதல் வேண்டும்.

---

* 25/1998 சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் ரூ.50,000 ஆக உயர்த்தப்பட்டது. (1-1–1996 முதல் செல்திறம் பெறுமாறு)

** 27/1998 சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் ரூ.36,000 ஆக உயர்த்தப்பட்டது (1-1-1996 முதல் செல்திறம் பெறுமாறு)

8. ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவைத்தலைவருக்கும் துணைத்தலைவருக்கும், சட்டமன்ற மேலவைத் தலைவருக்கும் துணைத்தலைவருக்கும் இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, முறையே நேரிணையான மாகாணத்தின் சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும், சட்டமன்ற மேலவைத் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் வழங்கப்பட்டதான வரையூதியங்களும் படித்தொகைகளும் வழங்கப்படுதல் வேண்டும்; மேலும், அத்தகைய தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, நேரிணையான மாகாணம், சட்டமன்ற மேலவை எதனையும் கொண்டிறாதவிடத்து, அந்த மாநிலச்சட்டமன்ற மேலவைத்தலைவருக்கும் துணைத்தலைவருக்கும் அந்த மாநில ஆளுநர் தீர்மானிக்கும் வரையூதியங்களும் படித்தொகைகளும் வழங்கப்படுதல் வேண்டும்.

பகுதி ஈ

உச்ச நீதிமன்றத்தின் மற்றும் உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் குறித்த வகையங்கள்

9. *(1)* உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு, உள்ளபடியே பணியில் இருந்த காலத்தைப் பொறுத்து மாதம் ஒன்றுக்குப் பின்வரும் வீதங்களில் வரையூதியம் வழங்கப்படுதல் வேண்டும்:–

தலைமை நீதிபதி	..	*10,000 ரூபாய்
பிற நீதிபதி	..	**9,000 ரூபாய்

வரம்புரையாக: உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவர், அவருடைய அமர்த்துகைக் காலத்தில் இந்திய அரசாங்கத்தின் கீழோ அதற்கு முன்பிருந்த அரசாங்கங்களில் எதன்கீழுமோ ஒரு மாநில அரசாங்கத்தின்கீழோ அதற்கு முன்பிருந்த அரசாங்களில் எதன்கீழுமோ ஆற்றிய முந்தைய பணி எதனையும் பொறுத்து (ஏலாமைக்கான அல்லது உடற்காயத்திற்கான ஓய்வூதியம் அல்லாத பிற) ஓய்வூதியம் பெற்று வருவாராயின், உச்ச நீதிமன்றப் பணியைப் பொறுத்து அவரது வரையூதியம்–

(அ) அந்த ஓய்வூதியத் தொகையின் அளவுக்கும்,

(ஆ) அத்தகைய முந்தைய பணியைப் பொறுத்து அவருக்கு உரிய ஓய்வூதியத்தின் ஒரு பகுதிக்கு மாற்றாக, அதன் மாற்று மதிப்பை அத்தகைய அமர்த்துகைக்கு முன்பு அவர் பெற்றிருப்பாராயின், ஓய்வூதியத்தின் அந்தப் பகுதித் தொகையின் அளவுக்கும்,

(இ) அத்தகைய அமர்த்துகைக்கு முன்பு அத்தகைய முந்தைய பணியைப் பொறுத்து அவர் ஓய்வுப் பணிக்கொடை பெற்றிருப்பாராயின், அந்தப் பணிக்கொடையின் ஓய்வூதியத்திற்குச் சமன்மையான அளவுக்கும்

குறைக்கப்படுதல் வேண்டும்.

(2) உச்ச நீதிமன்ற நீதிபதி ஒவ்வொருவரும், தம் பதவிக்குரிய உறைவிடத்தில் வாடகை ஏதுமின்றி உறைவதற்கு உரிமைகொண்டவர் ஆவார்.

(3) இந்த அரசமைப்பின் தொடக்க நிலையை ஒட்டிமுன்பு–

(அ) கூட்டாட்சிய நீதிமன்றத் தலைமை நீதிபதியாகப் பதவி வகித்திருந்து அத்தகைய தொடக்கநிலையில் 374 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்படி உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாக ஆகியிருக்கிற, அல்லது

(ஆ) கூட்டாட்சிய நீதிமன்றத்தின் பிறிதோர் நீதிபதியாகப் பதவி வகித்திருந்து, அத்தகைய தொடக்கநிலையில் மேற்சொன்ன கூறின்படி உச்ச நீதிமன்றத்தின் (தலைமை நீதிபதி அல்லாத பிற) நீதிபதி ஒருவராக ஆகியிருக்கிற

ஒரு நீதிபதிக்கு, அத்தகைய தலைமை நீதிபதியாகவோ பிற நீதிபதியாகவோ அவர் பதவி வகித்திருக்கிற கால அளவின்போது இந்தப் பத்தியின் (2) ஆம் உள்பத்தியில் உள்ள எதுவும் பொருந்துறுதல் ஆகாது; மேலும், அவ்வாறு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாகவோ பிற

---

* 18/1998 சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் ரூ. 33,000 ஆக உயர்த்தப்பட்டது. (1-1-1996 முதல் செல்திறம் பெறுமாறு)

** 18/1998 சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் ரூ. 30,000 ஆக உயர்த்தப்பட்டது. (1-1-1996 முதல் செல்திறம் பெறுமாறு)

நீதிபதியாகவோ ஆகிற ஒவ்வொரு நீதிபதியும், நேர்வுக்கேற்ப, அத்தகைய தலைமை நீதிபதியாகவோ பிற நீதிபதியாகவோ உள்ளபடியே பணியில் இருந்த காலத்தைப் பொறுத்து, இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையூதியத்துடன், அவ்வாறு குறித்துரைக்கப்பட்டுள்ள வரையூதியத்திற்கும் அத்தகைய தொடக்கநிலையை ஒட்டிமுன்பு அவர் பெற்றுவந்த வரையூதியத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டின் அளவிற்குச் சமன்மையான ஒரு தொகையைச் சிறப்பு வரையூதியமாகப் பெறுவதற்கு உரிமைகொண்டவர் ஆவார்.

(4) உச்ச நீதிமன்ற நீதிபதி ஒவ்வொருவரும் இந்திய ஆட்சிநிலவரைக்குள் பணிசார்ந்த பயணத்தின்போது செய்ய நேரிட்ட செலவுகளை ஈடு செய்வதற்காக, குடியரசுத்தலைவர் அவ்வப்போது வகுத்துரைக்கும் தகுமான படித்தொகைகளைப் பெறுவார்; மேலும், பயணஞ்செய்தல் தொடர்பாக, குடியரசுத்தலைவர் அவ்வப்போது வகுத்துரைக்கும் தகுமான வசதிகளும் அவருக்குச் செய்து கொடுக்கப்படுதல் வேண்டும்.

(5) உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் (விடுப்புப் படித்தொகைகள் உள்ளடங்கலாக) வாராமை விடுப்பு, ஓய்வூதியம் ஆகியவற்றைப் பொறுத்த உரிமைகள், இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, கூட்டாட்சிய நீதிமன்ற நீதிபதிகளுக்குப் பொருந்துறுவனவாக இருந்த வகையங்களுக்கு இணங்க இருந்து வரும்.

10. (1) உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு, உள்ளபடியே பணியில் இருந்த காலத்தைப் பொறுத்து, மாதம் ஒன்றுக்குப் பின்வரும் வீதங்களில் வரையூதியம் வழங்கப்படுதல் வேண்டும் :—

தலைமை நீதிபதி	..	*9,000 ரூபாய்
பிற நீதிபதி	..	**8,000 ரூபாய்

வரம்புரையாக: உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் அவருடைய அமர்த்துகைக் காலத்தில் இந்திய அரசாங்கத்தின் கீழோ அதற்கு முன்பிருந்த அரசாங்கங்களில் எதன் கீழுமோ ஒரு மாநில அரசாங்கத்தின்கீழோ அதற்கு முன்பிருந்த அரசாங்கங்களில் எதன் கீழோ ஆற்றிய முந்தைய பணி எதனையும் பொறுத்து (ஏலாமைக்கான அல்லது உடற்காயத்திற்கான ஓய்வூதியம் அல்லாத பிற) ஓய்வூதியம் பெற்று வருவாராயின், உயர் நீதிமன்றப் பணியைப் பொறுத்து அவருடைய வரையூதியம்—

(அ) அந்த ஓய்வூதியத் தொகையின் அளவுக்கும்,

(ஆ) அத்தகைய முந்தைய பணியைப் பொறுத்து, அவருக்கு உரிய ஓய்வூதியத்தின் ஒரு பகுதிக்கு மாற்றாக, அதன் மாற்று மதிப்பை அத்தகைய அமர்த்துகைக்கு முன்பு அவர் பெற்றிருப்பாராயின், ஓய்வூதியத்தின் அந்த பகுதித் தொகையின் அளவுக்கும்,

(இ) அத்தகைய அமர்த்துகைக்கு முன்பு அத்தகைய முந்தைய பணியைப் பொறுத்து அவர் ஓய்வுப் பணிக்கொடை பெற்றிருப்பாராயின் அந்தப் பணிக்கொடையின் ஓய்வூதியத்திற்குச் சமன்மையான அளவுக்கும்

குறைக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு—

(அ) மாகாணம் எதிலும் ஓர் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாகப் பதவி வகித்திருந்து, அத்தகைய தொடக்கநிலையில் 376 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்படி நேரிணையான மாநிலத்தில் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக ஆகியிருக்கிற, அல்லது

(ஆ) மாகாணம் எதிலும் ஓர் உயர் நீதிமன்றத்தின் பிறிதோர் நீதிபதியாகப் பதவி வகித்திருந்து அத்தகைய தொடக்கநிலையில் மேற்சொன்ன கூறின்படி நேரிணையான மாநிலத்தில் (தலைமை நீதிபதியல்லாத பிற) நீதிபதி ஒருவராக ஆகியிருக்கிற

ஒவ்வொருவரும், அவர் அத்தகைய தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ளதற்கும் மிகுதியான ஒரு வீதத்தில் வரையூதியம் பெற்று வந்திருப்பாராயின், அத்தகைய தலைமை நீதிபதியாகவோ பிறிதோர் நீதிபதியாகவோ உள்ளபடியே பணியில் இருந்த காலத்தைப் பொறுத்து மேற்சொன்ன உள்பத்தியில்

* 18/1998 சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் ரூ. 30,000 ஆக உயர்த்தப்பட்டது. (1-1-1996 முதல் செல்திறம் பெறுமாறு)
** 18/1998 சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் ரூ. 26,000 ஆக உயர்த்தப்பட்டது. (1-1-1996 முதல் செல்திறம் பெறுமாறு)

குறித்துரைக்கப்பட்டுள்ள வரையூதியத்துடன் அவ்வாறு குறித்துரைக்கப்பட்டுள்ள வரையூதியத்திற்கும் அத்தகைய தொடக்கநிலையை ஒட்டிமுன்பு அவர் பெற்றுவந்த வரையூதியத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டின் அளவிற்குச் சமன்மையான ஒரு தொகையைச் சிறப்பு வரையூதியமாகப் பெறுவதற்கு உரிமைகொண்டவர் ஆவார்.

(3). 1956 ஆம் ஆண்டு அரசமைப்புச் (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு முதலாம் இணைப்புப்பட்டியலின் ஆ பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு மாநில உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாகப் பதவி வகித்திருந்து, அத்தகைய தொடக்கநிலையில், அந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட மேற்சொன்ன இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு மாநில உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக ஆகியிருக்கிற எவரும், அத்தகைய தொடக்கநிலையை ஒட்டிமுன்பு அவருடைய வரையூதியத்துடன், படித்தொகையாக ஏதேனும் தொகையைப் பெற்றுவந்திருப்பாராயின், அத்தகைய தலைமை நீதிபதியாக உள்ளபடியே பணியில் இருந்த காலத்தைப் பொறுத்து, இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையூதியத்துடன், அதே தொகையைப் படித்தொகையாகப் பெறுவதற்கு உரிமை கொண்டவர் ஆவார்.

11. இந்தப் பகுதியில், தறுவாயின் தேவை வேறானாலன்றி—

(அ) "தலைமை நீதிபதி" என்னும் சொற்றொடர், செயலமர் தலைமை நீதிபதி ஒருவரை உள்ளடக்கும்; மற்றும் ஒரு 'நீதிபதி" என்பது, குறித்தபணி நீதிபதியையும் உள்ளடக்கும்;

(ஆ) "உள்ளபடியான பணி" என்பது—

(i) நீதிபதி ஒருவர், ஒரு நீதிபதிப் பணியை ஆற்றுகிற காலத்தையும் அல்லது குடியரசுத்தலைவரின் வேண்டுகோளின்படி அவர் ஆற்றுவதற்குப் பொறுப்பேற்கும் பிற பதவிப்பணிகளைப் புரிகிற காலத்தையும்,

(ii) அந்த நீதிபதியின் வாராமை விடுப்புக்காலம் எதுவும் நீங்கலாக உள்ள பருவ விடுமுறைக் காலங்களையும்,

(iii) ஓர் உயர் நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றத்திற்கோ ஓர் உயர் நீதிமன்றத்திலிருந்து மற்றொன்றிற்கோ மாற்றுதல் செய்வதால் ஏற்படும் பணிசேர் இடைக்காலத்தையும்

உள்ளடக்கும்.

பகுதி உ

இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர் குறித்த வகையங்கள்

12 (1) இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையருக்கு மாதம் ஒன்றுக்கு ஒன்பதாயிரம் ரூபாய் * என்னும் வீதத்தில் வரையூதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, இந்தியத் தலைமைத் தணிக்கையராகப் பதவி வகித்திருந்து, அத்தகைய தொடக்கநிலையில் 377 ஆம் உறுப்பின்படி இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையராக ஆகியிருக்கிற ஒருவர், இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையூதியத்துடன், அவ்வாறு குறித்துரைக்கப்பட்டுள்ள வரையூதியத்திற்கும், அத்தகைய தொடக்கநிலையை ஒட்டிமுன்பு இந்தியத் தலைமைத் தணிக்கையராக அவர் பெற்றுவந்த வரையூதியத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டின் அளவிற்குச் சமமான ஒரு தொகையைச் சிறப்பு வரையூதியமாகப் பெறுவதற்கு உரிமை கொண்டவர் ஆவார்.

(3) இந்தியக் கணக்காய்வர்–தலைலமைத் தணிக்கையருக்கு வாராமை விடுப்பு, ஓய்வூதியம் ஆகியவை பொறுத்த உரிமைகளும் பிற பணி வரைக்கட்டுகளும் இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு இந்தியத் தலைமைத் தணிக்கையருக்குப் பொருந்துறுவனவாக இருந்த வகையங்களுக்கிணங்க இருத்தலோ இருந்துவருதலோ வேண்டும்; மேலும், அந்த வகையங்களில், தலைமை ஆளுநர் பற்றிய சுட்டுகைகள் அனைத்தும் குடியரசுத்தலைவர் பற்றிய சுட்டுகைகளாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

---

* 56/1971 சட்டத்தின் 3 ஆம் பிரிவின் மூலம் இந்த வரையூதியம், உச்ச நீதிமன்ற நீதிபதியின் வரையூதியமான ரூ. 30,000 ஆக இருக்கும். (18/1998 சட்டத்தின் 7ஆம் பிரிவினைக் காணவும்.) (1-1-1996 முதல் செல்திறம் பெறுமாறு)

மூன்றாம் இணைப்புப்பட்டியல்

[75 (4), 99, 124 (6), 148 (2), 164 (3), 188, 219 ஆகிய உறுப்புகள்]

ஆணைமொழிகளின் அல்லது உறுதிமொழிகளின் சொன்முறைகள்

I

ஒன்றியத்து அமைச்சருக்கான பதவி ஆணைமொழியின் சொன்முறை:–

"அ.ஆ. ஆகிய நான், சட்டமுறையில் அமைவுற்ற இந்திய அரசமைப்பின்பால் உண்மையான நம்பிக்கையும் பற்றும் பூண்டிருப்பேன் என்றும் இந்தியாவின் இறையாண்மையும் ஒருமைப்பாடும் நிலைபெறுமாறு செய்வேன் என்றும் ஒன்றியத்து அமைச்சர் என்னும் முறையில் என்னுடைய கடமைகளை அகத்தூய்மையுடனும் மனச்சான்றின்படியும் ஆற்றுவேன் என்றும், அரசமைப்பு முறைக்கும் சட்ட நெறிக்கும் இணங்க அச்சம், கண்ணோட்டம் இன்றியும், விருப்பு வெறுப்பு இன்றியும், பல்திற மக்களுக்கும் தகுவன புரிவேன் என்றும் கடவுளை முன்னிறுத்தி ஆணைமொழிகிறேன்".

உள்ளார்ந்து உறுதிமொழிகிறேன்."

II

ஒன்றியத்து அமைச்சருக்கான மறைகாப்பு ஆணைமொழியின் சொன்முறை:—

"அ. ஆ. ஆகிய நான், ஒன்றியத்து அமைச்சர் என்னும் முறையில் என் ஓர்வுக்காக வைக்கப்படும் அல்லது எனக்குத் தெரியவரும் பொருட்பாடு எதனையும், அத்தகு அமைச்சர் என்னும் முறையில் என் கடமைகளை முறைப்படி ஆற்றுவதற்கு வேண்டியவாறன்றி, பிறவாறு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ எந்த நபருக்கும் அல்லது நபர்களுக்கும் தெரிவிக்கவோ வெளிப்படுத்தவோ மாட்டேன் *என்று கடவுளை முன்னிறுத்தி ஆணைமொழிகிறேன்."*

உள்ளார்ந்து உறுதிமொழிகிறேன்."

III

அ

நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளரால் செய்யப்படவேண்டிய ஆணை மொழியின் அல்லது உறுதிமொழியின் சொன்முறை:–

"அ.ஆ. ஆகிய நான், மாநிலங்களவையில் (அல்லது மக்களவையில்) ஒரு பதவியிடத்தை நிரப்புவதற்கான வேட்பாளராக நியமிக்கப்பெற்றுள்ள நிலையில் சட்டமுறையில் அமைவுற்ற இந்திய அரசமைப்பின்பால் உண்மையான நம்பிக்கையும் பற்றும் பூண்டிருப்பேன் என்றும் இந்தியாவின் இறையாண்மையும் ஒருமைப்பாடும் நிலைபெறுமாறு செய்வேன் என்றும் கடவுளை முன்னிறுத்தி ஆணைமொழிகிறேன்."

உள்ளார்ந்து உறுதிமொழிகிறேன்."

ஆ

நாடாளுமன்ற உறுப்பினரால் செய்யப்படவேண்டிய ஆணைமொழியின் அல்லது உறுதிமொழியின் சொன்முறை:—

"அ.ஆ. ஆகிய நான், மாநிலங்களவையின் (அல்லது மக்களவையின்) ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள (அல்லது நியமிக்கப்பெற்றுள்ள) நிலையில், சட்ட முறையில் அமைவுற்ற இந்திய அரசமைப்பின்பால் உண்மையான நம்பிக்கையும் பற்றும் பூண்டிருப்பேன் என்றும் இந்தியாவின் இறையாண்மையும் ஒருமைப்பாடும் நிலைபெறுமாறு செய்வேன் என்றும், ஏற்கவுள்ள கடமையினை அகத்தூய்மையுடன் ஆற்றுவேன் என்றும் கடவுளை முன்னிறுத்தி ஆணைமொழிகிறேன்."

உள்ளார்ந்து உறுதிமொழிகிறேன்."

IV

உச்ச நீதிமன்ற நீதிபதிகளாலும், இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையராலும் செய்யப்பட வேண்டிய ஆணைமொழியின் அல்லது உறுதிமொழியின் சொன்முறை:–

"அ.ஆ. ஆகிய நான், இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாக (அல்லது நீதிபதியாக) (அல்லது இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையராக) அமர்த்தப்பெற்றுள்ள நிலையில், சட்டமுறையில் அமைவுற்ற இந்திய அரசமைப்பின்பால் உண்மையான நம்பிக்கையும் பற்றும் பூண்டிருப்பேன் என்றும் இந்தியாவின் இறையாண்மையும் ஒருமைப்பாடும் நிலைபெறுமாறு செய்வேன் என்றும், அச்சம், கண்ணோட்டம் இன்றியும், விருப்பு வெறுப்பு இன்றியும், முறையாகவும் அகத்தூய்மையுடனும் என் முழுவினைத்திறனும் அறிவுத்திறனும் தேர்வுத்திறனும் கொண்டு என் பதவிக்குற்ற கடமைகளை ஆற்றிவருவேன் என்றும் நான் அரசமைப்பு முறையையும் சட்டநெறிகளையும் நிலைபெறச் செய்வேன் என்றும் கடவுளை முன்னிறுத்தி ஆணைமொழிகிறேன்."

உள்ளார்ந்து உறுதிமொழிகிறேன்."

V

மாநில அமைச்சருக்கான பதவி ஆணைமொழியின் சொன்முறை:—

"அ.ஆ. ஆகிய நான், சட்டமுறையில் அமைவுற்ற இந்திய அரசமைப்பின்பால் உண்மையான நம்பிக்கையும் பற்றும் பூண்டிருப்பேன் என்றும், இந்தியாவின் இறையாண்மையும் ஒருமைப்பாடும் நிலைபெறுமாறு செய்வேன் என்றும். . . . . மாநில அமைச்சர் என்னும் முறையில் என்னுடைய கடமைகளை அகத்தூய்மையுடனும் மனச்சான்றின்படியும் ஆற்றிவருவேன் என்றும் அரசமைப்புமுறைக்கும் சட்டநெறிக்கும் இணங்க அச்சம், கண்ணோட்டம் இன்றியும் விருப்பு வெறுப்பு இன்றியும், பல்திற மக்களுக்கும் தகுவன புரிவேன் என்றும் கடவுளை முன்னிறுத்தி ஆணைமொழிகிறேன்."

உள்ளார்ந்து உறுதிமொழிகிறேன்."

VI

மாநில அமைச்சருக்கான மறைகாப்பு ஆணைமொழியின் சொன்முறை:—

"அ.ஆ. ஆகிய நான் . . . . . மாநில அமைச்சர் என்னும் முறையில் என் ஓர்வுக்காக வைக்கப்படும் அல்லது எனக்குத் தெரியவரும் பொருட்பாடு எதனையும், அத்தகு அமைச்சர் என்னும் முறையில் என் கடமைகளை முறைப்படி ஆற்றுவதற்கு வேண்டியவாறன்றி, பிறவாறு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ எந்த நபருக்கும் அல்லது நபர்களுக்கும் தெரிவிக்கவோ வெளிப்படுத்தவோ மாட்டேன் என்று கடவுளை முன்னிறுத்தி ஆணைமொழிகிறேன்."

உள்ளார்ந்து உறுதிமொழிகிறேன்."

VII

அ

மாநிலச் சட்டமன்றத் தேர்தல் வேட்பாளரால் செய்யப்பட வேண்டிய ஆணை மொழியின் அல்லது உறுதிமொழியின் சொன்முறை:–

"அ.ஆ. ஆகிய நான், சட்டமன்றப் பேரவையில் (அல்லது சட்டமன்ற மேலவையில்) ஒரு பதவியிடத்தை நிரப்புவதற்கான வேட்பாளராக நியமிக்கப்பெற்றுள்ள நிலையில் சட்டமுறையில் அமைவுற்ற இந்திய அரசமைப்பின்பால் உண்மையான நம்பிக்கையும் பற்றும் பூண்டிருப்பேன் என்றும் இந்தியாவின் இறையாண்மையும் ஒருமைப்பாடும் நிலைபெறுமாறு செய்வேன் என்றும் கடவுளை முன்னிறுத்தி ஆணைமொழிகிறேன்."

உள்ளார்ந்து உறுதிமொழிகிறேன்."

ஆ

மாநிலச் சட்டமன்ற உறுப்பினரால் செய்யப்படவேண்டிய ஆணைமொழியின் அல்லது உறுதிமொழியின் சொன்முறை:—

"அ.ஆ. ஆகிய நான், சட்டமன்றப் பேரவையில் (அல்லது சட்டமன்ற மேலவையில்) ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள (அல்லது நியமிக்கப்பெற்றுள்ள) நிலையில், சட்டமுறையில் அமைவுற்ற இந்திய அரசமைப்பின்பால் உண்மையான நம்பிக்கையும் பற்றும் பூண்டிருப்பேன் என்றும் இந்தியாவின் இறையாண்மையும் ஒருமைப்பாடும் நிலைபெறுமாறு செய்வேன் என்றும் ஏற்கவுள்ள கடமையினை அகத்தூய்மையுடன் ஆற்றுவேன் என்றும் கடவுளை முன்னிறுத்தி ஆணைமொழிகிறேன்."

உள்ளார்ந்து உறுதிமொழிகிறேன்.

VIII

உயர் நீதிமன்ற நீதிபதிகளால் செய்யப்படவேண்டிய ஆணைமொழியின் அல்லது உறுதிமொழியின் சொன்முறை:—

"அ.ஆ. ஆகிய நான், ... இல் உள்ள, அல்லது . . . . . இன் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக (அல்லது நீதிபதியாக) அமர்த்தப்பெற்றுள்ள நிலையில், சட்டமுறையில் அமைவுற்ற இந்திய அரசமைப்பின்பால் உண்மையான நம்பிக்கையும் பற்றும் பூண்டிருப்பேன் என்றும் இந்தியாவின் இறையாண்மையும் ஒருமைப்பாடும் நிலைபெறுமாறு செய்வேன் என்றும் அச்சம் கண்ணோட்டம் இன்றியும், விருப்பு வெறுப்பு இன்றியும், முறையாகவும் அகத்தூய்மையுடனும், என் முழுவினைத்திறனும் அறிவுத்திறனும் தேர்வுத்திறனும் கொண்டு என் பதவிக்குற்ற கடமைகளை ஆற்றிவருவேன் என்றும் நான் அரசமைப்பு முறையையும் சட்டநெறிகளையும் நிலைபெறச் செய்வேன் என்றும் கடவுளை முன்னிறுத்தி ஆணைமொழிகிறேன்."

உள்ளார்ந்து உறுதிமொழிகிறேன்."

நான்காம் இணைப்புப்பட்டியல்

[4(1), 80(2) ஆகிய உறுப்புகள்]

மாநிலங்களவையில் பதவியிடங்களைப் பகிர்ந்தொதுக்குதல்

பின்வரும் அட்டவணையின் முதலாம் பத்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஒவ்வொன்றிற்கும், இரண்டாம் பத்தியில், அந்த மாநிலத்திற்கு அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்கு நேராகக் குறித்துரைக்கப்பட்டுள்ள எண்ணிக்கையுடைய பதவியிடங்கள் பகிர்ந்தொதுக்கப்படும்:—

அட்டவணை	
1. ஆந்திரப்பிரதேசம்	18
2. அசாம்	7
3. பீகார்	[1][16]
[2][4. ஜார்கண்ட்	6]
[3][5. கோவா	1]
6. குஜராத்	11
7. அரியானா	5
8. கேரளம்	9
9. மத்தியப்பிரதேசம்	[3][11]
[4][10. சட்டீஸ்கர்	5]
11. தமிழ்நாடு	18
12. மகாராஷ்டிரம்	19
13. கர்நாடகம்	12
14. ஒரிசா	10
15. பஞ்சாப்	7
16. ராஜஸ்தான்	10
17. உத்தரப்பிரதேசம்	[5][31]
[6][18. உத்தராஞ்சல்	3]
19. மேற்கு வங்காளம்	16
20. ஜம்மு காஷ்மீர்	4
21. நாகாலாந்து	1
22. இமாச்சலப்பிரதேசம்	3
23. மணிப்பூர்	1
24. திரிபுரா	1
25. மேகாலயா	1
26. சிக்கிம்	1
27. மிசோரம்	1
28. அருணாச்சலப் பிரதேசம்	1
29. தில்லி	3
30. பாண்டிச்சேரி	1
மொத்தம் ..	233

1. 2000 ஆம் ஆண்டு பீகார் மறுஅமைப்பு சட்டத்தால் "22" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.
2. 2000 ஆம் ஆண்டு பீகார் மறுஅமைப்பு சட்டத்தால் புகுத்தப்பட்டது.
3. 1987ஆம் ஆண்டு கோவா, டாமன் மற்றும் டையூ மறுஅமைப்பு சட்டத்தால் புகுத்தப்பட்டது.
4. 2000 ஆம் ஆண்டு மத்திய பிரதேச மறுஅமைப்பு சட்டத்தால் புகுத்தப்பட்டது.
5. 2000 ஆம் ஆண்டு உத்திரப் பிரதேச மறுஅமைப்பு சட்டத்தால் மாற்றாக அமைக்கப்பட்டது.
6. மேற்படி சட்டத்தால் புகுத்தப்பட்டது.

ஐந்தாம் இணைப்புப்பட்டியல்

[244(1) ஆம் உறுப்பு]

பட்டியல் வரையிடங்களுக்கும் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்குமான நிருவாகம் மற்றும் கட்டாள்கை குறித்த வகையங்கள்

பகுதி அ

பொதுவியல்

1. பொருள்கோள் :

இந்த இணைப்புப்பட்டியலில், தறுவாயின் தேவை வேறானாலன்றி, "மாநிலம்" என்னும் சொல், அசாம், மேகாலயா, திரிபுரா, மிசோரம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்குவதில்லை.

2. பட்டியல் வரையிடங்களில் மாநில ஆட்சி அதிகாரம் :

இந்த இணைப்புப்பட்டியலின் வகையங்களுக்கு உட்பட்டு, ஒரு மாநிலத்தின் ஆட்சி அதிகாரம், அதிலுள்ள பட்டியல் வரையிடங்களை அளாவிநிற்கும்.

3. பட்டியல் வரையிடங்களின் நிருவாகம் பற்றி குடியரசுத்தலைவருக்கு ஆளுநரின் அறிக்கை :

பட்டியல் வரையிடங்களைக் கொண்ட மாநிலம் ஒவ்வொன்றின் ஆளுநரும் ஆண்டுதோறும் அல்லது குடியரசுத்தலைவரால் வேண்டுறுத்தப்படுகிறபோதெல்லாம், அந்த மாநிலத்திலுள்ள பட்டியல் வரையிடங்களின் நிருவாகம் பற்றி குடியரசுத்தலைவருக்கு அறிக்கை அளித்தல் வேண்டும்; மேலும், மேற்சொன்ன வரையிடங்களின் நிருவாகம் குறித்து அந்த மாநிலத்திற்குப் பணிப்புரைகள் இடுவதும் ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரத்தில் அடங்கும்.

பகுதி ஆ

பட்டியல் வரையிடங்களுக்கும் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்குமான நிருவாகம் மற்றும் கட்டாள்கை

4. பழங்குடியினர் ஆய்வுரை மன்றம் :

(1) பட்டியல் வரையிடங்களைக் கொண்ட மாநிலம் ஒவ்வொன்றிலும், குடியரசுத்தலைவர் பணிப்பாராயின், பட்டியலில் கண்ட பழங்குடியினரைக் கொண்ட, ஆனால், பட்டியல் வரையிடங்களைக் கொண்டிராத மாநிலம் எதிலும், இருபதுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் பழங்குடியினர் ஆய்வுரை மன்றம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும்; அவர்களில் கூடுமான வரையில், நான்கில் மூன்று பகுதியினர் அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையில் பட்டியலில் கண்ட பழங்குடியினரின் சார்பாற்றுநர்களாக இருத்தல் வேண்டும்:

வரம்புரையாக: மாநிலச் சட்டமன்றப் பேரவையில் பட்டியலில் கண்ட பழங்குடியினரின் சார்பாற்றுநர்களின் எண்ணிக்கையானது, பழங்குடியினர் ஆய்வுரை மன்றத்தில் அத்தகைய சார்பாற்றுநர்களால் நிரப்பப்படவேண்டிய பதவியிடங்களின் எண்ணிக்கையை விடக் குறைவாக இருப்பின், எஞ்சியுள்ள பதவியிடங்கள், அந்தப் பழங்குடியினரின் பிற உறுப்பினர்களால் நிரப்பப்படுதல் வேண்டும்.

(2) மாநிலத்திலுள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினரது நலப்பாட்டையும் முன்னேற்றத்தையும் பொறுத்து ஆளுநரால் குறித்தனுப்பப்படும் பொருட்பாடுகளின்மீது ஆய்வுரை கூறுவது பழங்குடியினர் ஆய்வுரை மன்றத்தின் கடமை ஆகும்.

(3) ஆளுநர் பின்வருவனவற்றை வகுத்துரைக்கும் அல்லது, நேர்வுக்கேற்ப, ஒழுங்குறுத்தும்விதிகளைச் செய்யலாம்:—

(அ) மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, அவர்களை அமர்த்தும் முறை; மேலும், மன்றத்தின் தலைவர், அதன் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரை அமர்த்துதல்;

(ஆ) அதன் கூட்டங்களை நடத்துதல் மற்றும் அதன் பொதுவியலான நெறிமுறை; மற்றும்

(இ) பிற சார்வுறு பொருட்பாடுகள் அனைத்தும்.

5. பட்டியல் வரையிடங்களுக்குப் பொருந்துறும் சட்டம் :

(1) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், ஆளுநர் பொது அறிவிக்கை வாயிலாக, நாடாளுமன்றத்தின் அல்லது மாநிலச் சட்டமன்றத்தின் குறிப்பிட்ட சட்டம் எதுவும், மாநிலத்தில் ஒரு பட்டியல் வரையிடம் அல்லது அதன் பகுதி எதற்கும் பொருந்துறுதல் ஆகாது என்றோ, அவர் அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கும் விதிவிலக்குகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு, அந்த மாநிலத்தில் ஒரு பட்டியல் வரையிடம் அல்லது அதன் பகுதி எதற்கும் பொருந்துறுதல் ஆகும் என்றோ பணிக்கலாம்; மேலும், இந்த உள்பத்தியின்படி இடப்படும் பணிப்புரை எதுவும் முன்மேவு செல்திறம் பெறுமாறு இடப்படலாம்.

(2) ஆளுநர் ஒரு மாநிலத்தில் அப்போதைக்கு ஒரு பட்டியல் வரையிடமாக இருக்கிற வரையிடம் எதனின் அமைதிக்காகவும் நல்லாட்சிக்காகவும் ஒழுங்குறுத்தும்விதிகளை வகுக்கலாம்.

குறிப்பாகவும் மேலேகண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய ஒழுங்குறுத்தும்விதிகள்—

(அ) அத்தகைய வரையிடத்தில் பட்டியலில் கண்ட பழங்குடியினரின் உறுப்பினர்களால் அல்லது அவர்களிடையே நிலம் உரிமைமாற்றம் செய்யப்படுவதைத் தடைசெய்யலாம் அல்லது வரையறைப்படுத்தலாம்;

(ஆ) அத்தகைய வரையிடத்தில் பட்டியலில் கண்ட பழங்குடியினரின் உறுப்பினர்களுக்கு நிலத்தைப் பகிர்ந்தொதுக்குவதை ஒழுங்குறுத்தலாம்;

(இ) அத்தகைய வரையிடத்தில் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்குக் கடன் கொடுப்பவர்களாகத் தொழில் புரிபவர்களின் வட்டித் தொழிலை ஒழுங்குறுத்தலாம்.

(3) இந்தப் பத்தியின் (2) ஆம் உள்பத்தியில் குறிப்பிடப்படும் ஒழுங்குறுத்தும்விதி எதனையும் வகுக்குங்கால், தொடர்புடைய வரையிடத்திற்கு அப்போதைக்குப் பொருந்துறும் நாடாளுமன்றச் சட்டம் அல்லது மாநிலச் சட்டம் எதனையும் அல்லது நிலவுறும் சட்டம் எதனையும் ஆளுநர் நீக்கறவு செய்யலாம் அல்லது திருத்தம் செய்யலாம்.

(4) இந்தப் பத்தியின்படி வகுக்கப்படும் ஒழுங்குறுத்தும்விதிகள் அனைத்தும், குடியரசுத்தலைவருக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்; மேலும், அவரால் ஏற்பிசைவளிக்கப்படும் வரையில், அவை செல்திறம் பெறுவதில்லை.

(5) ஆளுநர் ஒழுங்குறுத்தும்விதிகளை வகுக்குங்கால், மாநிலத்திற்காகப் பழங்குடியினர் ஆய்வுரை மன்றம் ஒன்று இருக்கும் நேர்வில், அத்தகைய மன்றத்தைக் கலந்தாய்வு செய்திருந்தாலன்றி, இந்தப் பத்தியின்படி ஒழுங்குறுத்தும்விதி எதுவும் வகுக்கப்படுதல் ஆகாது.

பகுதி இ

பட்டியல் வரையிடங்கள்

6. பட்டியல் வரையிடங்கள் :

(1) இந்த அரசமைப்பில் "பட்டியல் வரையிடங்கள்" என்னும் சொற்றொடர், பட்டியல் வரையிடங்கள் எனக் குடியரசுத்தலைவர் ஆணையின்வழி விளம்பும் வரையிடங்கள் எனப் பொருள்படும்.

(2) குடியரசுத்தலைவர், ஆணையின்வழி, எந்தச் சமயத்திலும்—

(அ) ஒரு பட்டியல் வரையிடமாக உள்ளது முழுவதுமோ குறித்துரைக்கப்படும் அதன் பகுதி எதுவுமோ, அத்தகைய பட்டியல் வரையிடமாக அல்லது அதன் பகுதியாக இருப்பது அற்றுப்போதல் வேண்டும் என்று பணிக்கலாம்;

(அஅ) ஒரு மாநிலத்தில் உள்ள பட்டியல் வரையிடம் எதனின் பரப்பிடத்தையும், அந்த மாநிலத்தின் ஆளுநரைக் கலந்தாய்வு செய்த பின்பு விரிவுப்படுத்தாலம்;

(ஆ) பட்டியல் வரையிடம் எதனையும், எல்லைகளைத் திருத்தமைவு செய்வதன் வாயிலாக மட்டுமே மாறுதல் செய்யலாம்;

(இ) ஒரு மாநிலத்தினுடைய எல்லைகளில் மாறுதல் எதுவும் செய்யும் போது அல்லது ஒரு புதிய மாநிலத்தை ஒன்றியத்திற்குள் சேர்த்துக் கொள்ளும்போது அல்லது நிறுவும்போது, மாநிலம் எதிலும் முன்னதாகவே உள்ளடங்கியிராத ஆட்சிநிலவரை எதனையும், ஒரு பட்டியல் வரையிடமாகவோ ஒரு பட்டியல் வரையிடத்தின் பகுதியாகவோ விளம்பலாம்;

(ஈ) மாநிலம் எதனின் அல்லது மாநிலங்கள் எவற்றின் தொடர்பாகவும், இந்தப் பத்தியின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனையும் அல்லது ஆணைகள் எவற்றையும் அழித்தறிவு செய்யலாம்; மேலும், தொடர்புடைய மாநில ஆளுநரைக் கலந்தாய்வு செய்து, பட்டியல் வரையிடங்களாக இருக்க வேண்டிய வரையிடங்களை மறுவரையறைசெய்யும் புதிய ஆணைகளைப் பிறப்பிக்கலாம்;

அத்தகைய ஆணை எதுவும், தேவையானவையாகவும் முறையானவையாகவும் குடியரசுத்தலைவருக்குத் தோன்றும் சார்வுறு மற்றும் விளைவுறு வகையங்களைக் கொண்டிருக்கலாம்; ஆனால், மேற்கூறப்பட்டவாறல்லாமல், இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை, பிந்திய ஆணை எதனாலும் மாறுதல் செய்யப்படுதல் ஆகாது.

பகுதி ஈ

இணைப்புப்பட்டியலின் திருத்தம்

7. இணைப்புப்பட்டியலின் திருத்தம் :

(1) நாடாளுமன்றம் அவ்வப்போது சட்டங்களினால் எதனையும் சேர்த்தல், மாறுதல்செய்தல் அல்லது நீக்கறவுசெய்தல் என்னும் வகையில் இந்த இணைப்புப்பட்டியலின் வகையங்களில் எதனையும் திருத்தம் செய்யலாம்; மேலும், இந்த இணைப்புப்பட்டியல் அவ்வாறு திருத்தம் செய்யப்படும்போது, இந்த அரசமைப்பில் இந்த இணைப்புப்பட்டியல் பற்றிய சுட்டுகை எதுவும், அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட இணைப்புப்பட்டியல் பற்றிய சுட்டுகையாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியில் குறிப்பிடப்பட்ட சட்டம் எதுவும், 368ஆம் உறுப்பைப் பொறுத்து இந்த அரசமைப்பின் ஒரு திருத்தம் எனக் கொள்ளப்படுதல் ஆகாது.

ஆறாம் இணைப்புப்பட்டியல்

[244 (2), 275 (1) ஆகிய உறுப்புகள்]

அசாம், மேகாலயா, திரிபுரா, மிசோரம் ஆகிய மாநிலங்களில் உள்ள பழங்குடியினர் வரையிடங்களின் நிருவாகம் குறித்த வகையங்கள்

1. தன்னாட்சி மாவட்டங்கள் மற்றும் தன்னாட்சி வட்டாரங்கள் :

(1) இந்தப் பத்தியின் வகையங்களுக்கு உட்பட்டு, இந்த இணைப்புப்பட்டியலின் 20 ஆம் பத்திக்குப் பிற்சேர்க்கையாயுள்ள அட்டவணையின் I, II, II அ, III ஆகிய பகுதிகளில் கண்டுள்ளவை ஒவ்வொன்றிலுமுள்ள பழங்குடியினர் வரையிடங்கள், ஒரு தன்னாட்சி மாவட்டமாக இருக்கும்.

(2) ஒரு தன்னாட்சி மாவட்டத்தில் வெவ்வேறு பட்டியல் பழங்குடியினர் இருப்பார்களாயின், ஆளுநர், பொது அறிவிக்கை வாயிலாக, அவர்கள் வாழ்விடமாகக் கொண்டுள்ள வரையிடத்தை அல்லது வரையிடங்களைத் தன்னாட்சி வட்டாரங்களாகப் பிரிக்கலாம் :

[1][வரம்புரையாக: இந்த உள்பத்தியில் அடங்கியுள்ள எதுவும், போடோலாந்து ஆட்சி நிலவரை வரையிடப்பகுதிகள் மாவட்டத்திற்குப் பொருந்தாது.]

(3) ஆளுநர், பொது அறிவிக்கை வாயிலாக,—

(அ) மேற்சொன்ன அட்டவணையின் பகுதிகளில் எதிலும் வரையிடம் எதனையும் சேர்க்கலாம்;

(ஆ) மேற்சொன்ன அட்டவணையின் பகுதிகளில் எதிலுமிருந்து வரையிடம் எதனையும் நீக்கலாம்;

(இ) ஒரு புதிய தன்னாட்சி மாவட்டத்தை உருவாக்கலாம்;

(ஈ) தன்னாட்சி மாவட்டம் எதனின் வரையிடத்தையும் விரிவுபடுத்தலாம்;

(உ) தன்னாட்சி மாவட்டம் எதனின் பரப்பிடத்தையும் குறைக்கலாம்;

(ஊ) இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட தன்னாட்சி மாவட்டங்களை அல்லது அவற்றின் பகுதிகளை ஒரே தன்னாட்சி மாவட்டமாக அமையுமாறு இணைக்கலாம்;

(ஊஉஊ) தன்னாட்சி மாவட்டம் எதனின் பெயரையும் மாற்றலாம்;

(எ) தன்னாட்சி மாவட்டம் எதனின் எல்லைகளையும் வரையறுக்கலாம்:

வரம்புரையாக: இந்த இணைப்புப்பட்டியலின் 14ஆம் பத்தியின் (1)ஆம் உள்பத்தியின்படி அமர்த்தப்பட்ட ஆணையம் ஒன்றின் அறிக்கையை ஓர்வு செய்த பின்பல்லாமல், இந்த உள்பத்தியின் (இ), (ஈ), (உ), (ஊ) ஆகிய கூறுகளின்படி, ஆளுநர் ஆணை எதனையும் பிறப்பித்தல் ஆகாது;

மேலும் வரம்புரையாக: இந்த உள்பத்தியின்படி ஆளுநர் பிறப்பித்த ஆணை எதுவும், அந்த ஆணையின் வகையங்களைச் செல்திறப்படுத்துவதற்குத் தேவையென ஆளுநருக்குத் தோன்றுகிற (20 ஆம் பத்தியின், மற்றும் மேற்சொன்ன அட்டவணையின் பகுதிகளில் எதிலும் உள்ள இனம் எதனின் திருத்தம் உள்ளடங்கலாக) சார்வுறு மற்றும் விளைவுறு வகையங்களைக் கொண்டிருக்கலாம்.

2. மாவட்ட மன்றங்களையும் வட்டார மன்றங்களையும் அமைத்தல் :

(1) தன்னாட்சி மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் முப்பதுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மாவட்ட மன்றம் இருக்கும்; அந்த உறுப்பினர்களில் நால்வருக்கு மேற்படாதவர்கள் ஆளுநரால் நியமிக்கப்பெறுவர்; எஞ்சிய உறுப்பினர்கள், வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பெறுவர் :

---

[1] 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு ஆறாம் இணைப்புப்பட்டியல் (திருத்தம்) சட்டத்தினால் (44/2003) புகுத்தப்பட்டது.

[1][**வரம்புரையாக:** போடோலாந்து ஆட்சிநிலவரை வரையிடமன்றமானது நாற்பத்தாறுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். அவர்களில் நாற்பது உறுப்பினர்கள் வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பெறுவர், அவர்களில் முப்பது, பட்டியல் பழங்குடியினருக்காகவும் ஐந்து, பழங்குடியினத்தவர் அல்லாதவருக்காகவும் ஒதுக்கப்படும், ஐந்து அனைத்து இனத்தினருக்கும் உரியதாகும் மற்றும் எஞ்சியுள்ள ஆறு உறுப்பினர்கள் போடோலாந்து ஆட்சிநிலவரை வரையிடப்பகுதிகள், மாவட்டத்தில் சார்பாற்றம் செய்யப்படாத இனத்தவர்களுக்கிடையேயிருந்து வாக்களிக்கும் உரிமைகள் உள்ளடங்கலாக, பிற உறுப்பினர்களைப் போன்றே அதே உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் கொண்டவர்களாக ஆளுநரால் நியமிக்கப்படுவர். அவர்களில் குறைந்தது இருவர், பெண்களாக இருத்தல் வேண்டும்.]

(2) இந்த இணைப்புப்பட்டியலின் 1ஆம் பத்தியின் (2)ஆம் உள்பத்தியின்படி ஒரு தன்னாட்சி வட்டாரமாக அமைக்கப்பட்ட வரையிடம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே ஒரு வட்டார மன்றம் இருக்கும்.

(3) மாவட்ட மன்றம் ஒவ்வொன்றும், வட்டார மன்றம் ஒவ்வொன்றும் முறையே, "(மாவட்டத்தின் பெயர்) மாவட்ட மன்றம்", "(வட்டாரத்தின் பெயர்) வட்டார மன்றம்" என்னும் பெயரில் ஒரு கூட்டுருமமாக இருக்கும்; அது தொடர்ந்த நிலைப்பாட்டையும் ஒரு தனியுறு இலட்சினையையும் கொண்டிருக்கும்; மேற்சொன்ன பெயரால் அது வழக்கிடுதலும் அதன்மீது வழக்கிடப்படுதலும் ஆகும்.

[1][**வரம்புரையாக:** வடக்கு கச்சார் குன்றுகள் மாவட்டத்திற்காக அமைக்கப்பட்ட மாவட்ட மன்றம், வடக்கு கச்சார் குன்றுகள் தன்னாட்சி மன்றம் என்று அழைக்கப்பெறும் மற்றும் கர்பி ஆங்கலாங்கு மாவட்டத்திற்காக அமைக்கப்பட்ட மாவட்ட மன்றம், கர்பி ஆங்கலாங்கு தன்னாட்சி மன்றம் என்று அழைக்கப்பெறும்.]

[2][**மேலும் வரம்புரையாக:** போடோலாந்து ஆட்சிநிலவரை வரையிடப்பகுதிகள் மாவட்டத்திற்காக அமைக்கப்பட்ட மாவட்ட மன்றம், போடோலாந்து ஆட்சிநிலவரை மன்றம் என்று அழைக்கப்பெறும்.]

(4) இந்த இணைப்புப்பட்டியலின் வகையங்களுக்கு உட்பட்டு, ஒரு தன்னாட்சி மாவட்டத்தின் நிருவாகம், அத்தகைய மாவட்டத்திற்குள் உள்ள வட்டாரமன்றம் எதனிடமும் இந்த இணைப்புப்பட்டியலின்படி உற்றமையாதிருக்கிற அளவுக்கு, அத்தகைய மாவட்டத்திற்கான மாவட்ட மன்றத்திடம் உற்றமைந்திருக்கும்; மேலும், ஒரு தன்னாட்சி வட்டாரத்தின் நிருவாகம், அத்தகைய வட்டாரத்திற்கான வட்டார மன்றத்திடம் உற்றமைந்திருக்கும்.

(5) வட்டார மன்றங்களைக் கொண்ட ஒரு தன்னாட்சி மாவட்டத்தில், மாவட்ட மன்றத்திற்கு, அந்த வட்டார மன்றத்தின் அதிகாரத்தின் கீழுள்ள வரையிடங்களைப் பொறுத்தவரை, இந்த இணைப்புப்பட்டியலின் வழி வழங்கப்படும் அதிகாரங்களோடுங்கூட, அத்தகைய வரையிடங்களுக்காக அந்த வட்டார மன்றத்தினால் அதனிடம் ஒப்படைவு செய்யப்படும் அதிகாரங்களை மட்டுமே அந்த மாவட்ட மன்றம் உடையது ஆகும்.

(6) ஆளுநர், தன்னாட்சி மாவட்டங்களிலோ வட்டாரங்களிலோ நிலவுறும் பழங்குடியினர் மன்றங்களை அல்லது சார்பாற்றம் வாய்ந்த பிற பழங்குடியினர் அமைவனங்களைக் கலந்தாய்வு செய்து, மாவட்ட மன்றங்களையும் வட்டார மன்றங்களையும் முதல் முறையாக அமைப்பதற்கு விதிகளை செய்வார்; அத்தகைய விதிகளில் பின்வருவனவற்றிற்கு வகைசெய்யப்படும்:—

(அ) மாவட்ட மன்றங்கள், வட்டார மன்றங்கள் ஆகியவற்றின் கட்டமைப்பு மற்றும் அவற்றில் பதவியிடங்களைப் பகிர்ந்தொதுக்குதல்;

(ஆ) அந்த மன்றங்களுக்கான தேர்தல்களுக்காக நிலவரைத் தேர்தல் தொகுதிகளை வரையறுத்தல்;

---

1. 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு ஆறாம் இணைப்புப்பட்டியல் (திருத்தம்) சட்டத்தினால் (44/2003) புகுத்தப்பட்டது.
2. 1995ஆம் ஆண்டு அரசமைப்பின் ஆறாம் இணைப்புப்பட்டியல் (திருத்தம்) சட்டத்தால் (42/1995) புகுத்தப்பட்டது.

(இ) அத்தகைய தேர்தல்களில் வாக்களிப்பதற்கான தகுதிப்பாடுகள்; அந்தத் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல்;

(ஈ) அத்தகைய தேர்தல்களில் அந்த மன்றங்களின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெறுவதற்கான தகுதிப்பாடுகள்;

(உ) வட்டார மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம்;

(ஊ) அத்தகைய மன்றங்களுக்கான தேர்தல்கள் அல்லது நியமனங்கள் தொடர்பான அல்லது அவை குறித்த பிற பொருட்பாடுகள்;

(எ) மாவட்ட மற்றும் வட்டார மன்றங்களின் (காலியிடம் எதுவும் இருப்பினும் செயலுறுவதற்கான அதிகாரம் உள்ளடங்கலாக) நெறிமுறையும் அலுவல் நடத்துமுறையும்;

(ஏ) மாவட்ட மற்றும் வட்டார மன்றங்களின் அலுவலர்களையும் பணியாளர் தொகுதியினரையும் அமர்த்துதல்.

(6அ). மாவட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பெறும் உறுப்பினர்கள், அந்த மன்றத்திற்கான பொதுத் தேர்தல்களுக்குப் பின்பு அந்த மன்றத்தின் முதல் கூட்டத்திற்கெனக் குறித்திட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கு, அந்த மாவட்ட மன்றம் 16ஆம் பத்தியின்படி அதற்கு முன்னரே கலைக்கப்பட்டாலன்றி, பதவி வகிப்பவர்கள்; மேலும், நியமனம் செய்யப்பெற்ற ஓர் உறுப்பினர், ஆளுநர் விழையுமளவும் பதவி வகிப்பார்:

வரம்புரையாக: நெருக்கடிநிலைச் சாற்றாணை ஒன்று செயற்பாட்டில் இருக்குங்கால் அல்லது ஆளுநரின் கருத்தின்படி தேர்தல்கள் நடத்துவதை நடைமுறையில் இயலாததாக்கும் சூழ்நிலைகள் நிலவுமாயின், ஒரு தடவையில் ஓராண்டுக்கு மேற்படாத காலஅளவுக்கும் ஒரு நெருக்கடிநிலைச் சாற்றாணை செயற்பாட்டிலிருக்குமிடத்து எந்நேர்விலும், அச்சாற்றாணை செயற்படுவது அற்றுப்போன பின்பு ஆறுமாதக் காலஅளவுக்கு மேற்படாத ஒரு காலஅளவுக்கும், மேற்சொன்ன ஐந்தாண்டுக் காலஅளவு ஆளுநரால் நீட்டிக்கப்படலாம்;

மேலும் வரம்புரையாக: இடையெழும் காலியிடத்தை நிரப்புவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பெறும் ஓர் உறுப்பினர், எந்த உறுப்பினரின் இடத்திற்கு அவர் தேர்ந்தெடுக்கப்பெறுகிறாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் எஞ்சியுள்ள காலத்திற்கு மட்டுமே பதவி வகிப்பார்.

(7) மாவட்ட அல்லது வட்டார மன்றம், அது முதன்முறையாக அமைக்கப்பட்ட பின்பு, ஆளுநரின் ஒப்பேற்புடன், இந்தப் பத்தியின் (6)ஆம் உள்பத்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்பாடுகள் குறித்து விதிகளை வகுக்கலாம்; மேலும், அத்தகைய ஒப்பேற்புடன், பின்வருவனவற்றை ஒழுங்குறுத்துவதற்கான விதிகளை வகுக்கலாம்:—

(அ) கீழுமை உள்வரை மன்றங்களையோ வாரியங்களையோ உருவாக்குதல்; அவற்றின் நெறிமுறையும் அவற்றின் அலுவல் நடத்துமுறையும்; மற்றும்

(ஆ) பொதுவாக, மாவட்டத்தின் அல்லது, நேர்வுக்கேற்ப, வட்டாரத்தின் நிருவாகம் சார்ந்த அலுவல்களை நடத்துவது பற்றியபொருட்பாடுகள் அனைத்தும் :

வரம்புரையாக: இந்த உள்பத்தியன்படி மாவட்ட அல்லது வட்டார மன்றத்தினால் விதிகள் வகுக்கப்படும் வரையில், அத்தகைய மன்றம் ஒவ்வொன்றுக்குமான தேர்தல்கள், அதன் அலுவலர்கள், பணியாளர் தொகுதி, நெறிமுறை, அலுவல் நடத்துமுறை ஆகியவற்றைப் பொறுத்து இந்தப் பத்தியின் (6) ஆம் உள்பத்தியின்படி ஆளுநரால் வகுக்கப்பட்ட விதிகள் செல்திறம் உடையன ஆகும்.

3. சட்டங்களியற்றுவதற்கு மாவட்ட மன்றங்களுக்கும் வட்டார மன்றங்களுக்கும் உள்ள அதிகாரங்கள் :

(1) ஒரு தன்னாட்சி வட்டாரத்திற்கான வட்டார மன்றம், அத்தகைய வட்டாரத்திற்குள் உள்ள அனைத்து வரையிடங்களைப் பொறுத்தும், ஒரு தன்னாட்சி மாவட்டத்திற்கான மாவட்ட மன்றம், அந்த மாவட்டத்திற்குள் வட்டார மன்றங்கள், எவையேனுமிருப்பின், அவற்றின் அதிகாரத்தின் கீழுள்ள வரையிடங்கள் நீங்கலாக, அந்த மாவட்டத்திற்குள் உள்ள அனைத்து வரையிடங்களைப் பொறுத்தும், பின்வருவன குறித்துச் சட்டங்களியற்ற அதிகாரம் உடையன ஆகும்:—

(அ) வேளாண்மை அல்லது மேய்ச்சல் அல்லது குடியிருப்பு நோக்கங்களுக்காகவோ வேளாண்மையல்லாத பிற நோக்கங்களுக்காகவோ, ஊர் அல்லது நகரம் எதிலும் வாழ்வோரின் நலன்களை மேம்படுத்தக்கூடிய பிற நோக்கம் எதற்காகவோ, ஒதுக்குறுத்தப்பட்ட காட்டுநிலமில்லாத பிற நிலம் எதனையும் பகிர்ந்தொதுக்குதல், கையடைவு கொள்ளுதல் அல்லது பயன்படுத்துதல் அல்லது ஒதுக்கிவைத்தல்:

வரம்புரையாக: அத்தகைய சட்டங்களிலுள்ள எதுவும், கையடைவிலுள்ளதாகவோ கையடைவிலில்லாததாகவோ உள்ள நிலம் எதனையும், பொது நோக்கங்களுக்கெனக் கட்டாயமாகக் கையகப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கும் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டத்திற்கு இணங்கத் தொடர்புடைய மாநில அரசாங்கம் அவ்வாறு கையகப்படுத்துவதற்குத் தடையுறு ஆவதில்லை;

(ஆ) ஒதுக்குறுத்தப்பட்ட காடாக இல்லாத காடு எதனின் மேலாண்மை;

(இ) வேளாண்மைக்காகக் கால்வாய் அல்லது நீரோடை எதனின் பயன்பாடு;

(ஈ) ஜூம் அல்லது பிற வகை மாற்றுமுறை பயிரிடும் பழக்கத்தை முறைப்படுத்துதல்;

(உ) ஊராட்சி அல்லது நகராட்சிக் குழுக்களையோ மன்றங்களையோ நிறுவுதல், அவற்றின் அதிகாரங்கள்;

(ஊ) ஊர் அல்லது நகரக் காவல் துறை, மக்கள் நல்வாழ்வு, துப்புரவு ஆகியவை உள்ளடங்கலாக, ஊர் அல்லது நகர நிருவாகம் தொடர்பான பிற பொருட்பாடுகள்;

(எ) குடித்தலைவர்களை அல்லது நாட்டாண்மைக்காரர்களை அமர்த்துதல், அவர்கள் வாரிசுரிமை;

(ஏ) சொத்திற்கான மரபுரிமை;

(ஐ) திருமணம் மற்றும் மணமுறிவு;

(ஒ) சமுதாய வழக்கங்கள்.

(2) இந்தப் பத்தியில், ஓர் "ஒதுக்குறுத்தப்பட்ட காடு" என்பது, 1891 ஆம் ஆண்டு அசாம் காடு ஒழுகுறுத்தும்விதிகளின்படியோ அல்லது தொடர்புள்ள வரையிடத்தில் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதனின்படியோ ஓர் ஒதுக்குறுத்தப்பட்ட காடாக இருக்கிற வரையிடம் என பொருள்படும்.

[1][(3) 3அ பத்தியின் (2)ஆம் உள்பத்தியில் அல்லது 3ஆ பத்தியின் (2)ஆம் உள்பத்தியில் பிறவாறு வகைசெய்யப்பட்டிருப்பது நீங்கலாக இந்தப் பத்தியின் அல்லது 3அ பத்தியின் (1)ஆம் உள்பத்தியின் அல்லது 3ஆ பத்தியின் (1)ஆம் உள்பத்தியின்படி வகுக்கப்பட்ட சட்டங்கள் அனைத்தும் ஆளுநருக்கு உடனடியாகப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும். மேலும், அவரால் இசைவளிக்கப்படும் வரை செல்திறம் இல்லாததாகும்.]

---

[1] 2003 ஆம் ஆண்டு அரசமைப்பின் ஆறாம் இணைப்புப்பட்டியல் (திருத்தம்) சட்டத்தால் (44/2003) மாற்றாக அமைக்கப்பட்டது.

[1][3.அ. சட்டங்களியற்றுவதற்கு வடக்கு கச்சார் குன்றுகள் தன்னாட்சி மன்றங்களின் மற்றும் கர்பி ஆங்குலாங்கு தன்னாட்சி மன்றங்களின் கூடுதல் அதிகாரங்கள் :

(1). 3ஆம் பிரிவின் வகையங்களுக்குப் குந்தகமின்றி, வடக்கு கச்சார் குன்றுகள் தன்னாட்சி மன்றம், மற்றும் கர்பி ஆங்குலாங்கு தன்னாட்சி மன்றம், முறையே தத்தம் மாவட்டங்களில்—

(அ) ஏழாம் இணைப்புப்பட்டியலின் பத்தி 1 இன் 7, 52 ஆகிய பதிவுகளின் வகையங்களுக்கு உட்பட்டு, தொழில்கள்;

(ஆ) போக்குவரவு இணையங்கள், அதாவது, சாலைகள், பாலங்கள், தோணித்துறைகள் மற்றும் ஏழாம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பட்டியலில் குறித்துரைக்கப்படாத பிற போக்குவரவு இணையங்கள், நகராட்சி காந்தவண்டிப் பாதைகள், கம்பிவடவழிகள், உள்நாட்டு நீர் வழிகள், அத்தகைய நீர்வழிகள் பொறுத்து, ஏழாம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பட்டியலின் மற்றும் II ஆம் பட்டியலின் வகையங்களுக்கு உட்பட்டு, அதன் போக்குவரத்து, இயந்திரத்தால் இயக்கப்படும் ஊர்தியல்லாத பிற ஊர்திகள்;

(இ) கால்நடைகளைப் பேணுதல், பாதுகாத்தல், மேம்படுத்துதல், விலங்கு நோய்த்தடுப்பு, விலங்கின மருத்துவப் பயிற்சியும் தொழிலும்; கால்நடைப் பட்டிகள்;

(ஈ) முதனிலை மற்றும் இடைநிலைக் கல்வி;

(உ) வேளாண் கல்வி, ஆராய்ச்சி பூச்சிக் கொல்லிகளுக்கு எதிரான பாதுகாப்பு, பயிர் நோய்த் தடுப்பு உள்ளடங்கலாக, வேளாண்மை.

(ஊ) மீனளங்கள்;

(எ) நீர், அதாவது, ஏழாம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பட்டியலிலுள்ள 56 ஆம் பதிவிலுள்ள வகையங்களுக்கு உட்பட்டு, நீர்வழங்குதல், பாசனம், கால்வாய்கள், சாக்கடை வசதி, கரையணைகள், நீர்த்தேக்கங்கள், புனல்மின்விசை ஆகியவை;

(ஏ) சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூகக் காப்பீடு; வேலை வாய்ப்பு மற்றும் வேலையின்மை;

(ஐ) கிராமம், நெல் வயல்கள், அங்காடிகள், நகரங்கள் முதலானவற்றைப் பாதுகாப்பதற்கான (தொழில் நுட்பத்தன்மையல்லாத) வெள்ளக்கட்டுப்பாடு திட்டங்கள்;

(ஒ) திரையரங்கு மற்றும் நாடக நிகழ்ச்சிகள், ஏழாம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பட்டியலின் 60 ஆம் பதிவின் வகையங்களுக்கு உட்பட்டு, திரைப்படங்கள், விளையாட்டுகள், கேளிக்கைகள், பொழுதுபோக்குகள்;

(ஓ) பொதுநலம் மற்றும் துப்புரவு, மருத்துவமனைகள், மருத்துவ இல்லங்கள்;

(ஔ) சிறுபாசனம்;

(க) உணவுப்பொருட்கள், கால்நடைத்தீவனம், பஞ்சு, சணல் போன்றவற்றை உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் பங்கீடு செய்தல்; மேலும் இவற்றில் வணிகம் மற்றும் வாணிபம்;

(ங) மாநிலத்தின் கட்டாள்கையிலுள்ள அல்லது மாநிலத்தின் நிதி உதவி பெறுகிற நூலகங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் இவையன்ன பிற நிறுவனங்கள்; தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தாலோ அதன் வழியாலோ விளம்பப்படுபவை நீங்கலாக, தொன்மையுடையவை, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பிற நினைவுச் சின்னங்கள்: மற்றும்

(ச) நிலத்தைப் பிறர்க்குரிமை மாற்றம் செய்தல்;

ஆகியவை பொறுத்து சட்டங்கள் இயற்றுவதற்கு அதிகாரம் கொண்டிருக்கும்.

---

[1] 1995 ஆம் ஆண்டு அரசமைப்பின் ஆறாம் இணைப்புப்பட்டியலுக்கான (திருத்தம்) சட்டத்தால் (42/1995) புகுத்தப்பட்டது.

(2) வடக்கு கச்சார் தன்னாட்சி மன்றத்தாலும் கர்பி ஆங்குலாங்கு தன்னாட்சி மன்றத்தாலும் 3ஆம் பத்தியின்படி அல்லது இந்தப் பத்தியின்படி வகுக்கப்பட்ட விதிகள் அனைத்தும் ஏழாம் இணைப்புப்பட்டியலின் III ஆம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளுக்கு அவை எந்த அளவுக்குத் தொடர்புடையதாக இருக்குமோ அந்த அளவுக்கு, ஆளுநரிடம் உடனடியாகப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும், அவர் அதை குடியரசுத்தலைவரின் ஓர்வுக்காக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) அந்தச் சட்டம் குடியரசுத்தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கி வைக்கப்படும் போது, மேற்சொன்ன சட்டத்திற்குத் தான் இசைவளிப்பதாக அல்லது இசைவளிப்பதை நிறுத்தி வைப்பதாக குடியரசுத்தலைவர் விளம்புதல் வேண்டும்.

வரம்புரையாக: குடியரசுத்தலைவர், வடக்குகச்சார் குன்றுகள் தன்னாட்சி மன்றம் அல்லது நேர்வுக்கேற்ப கர்பி–ஆங்குலாங்கு தன்னாட்சி மன்றத்திற்கு அந்தச் சட்டத்தை திருப்பியனுப்புமாறு, மேற்சொன்ன மன்றம் அந்தச் சட்டத்தை அல்லது அதன் குறித்துரைக்கப்பட்ட வகையங்களுள் எவற்றையும் ஓர்வு செய்தல் வேண்டும் என்ற தகவலுடன் சேர்த்து ஆளுநரைப் பணிக்கலாம் மற்றும் குறிப்பாக அந்தத் தகவலில் அவர் பரிந்துரை செய்யலாகும் திருத்தங்கள் எவற்றையும் கொணரும் விருப்பத்தினை ஓர்வு செய்யுமாறும் அந்தச் சட்டம் திருப்பியனுப்பப்படும்போது மேற்சொன்ன மன்றம், அந்தத் தகவலினை அவர் பெற்ற தேதியிலிருந்து ஆறு மாத காலஅளவிற்குள் அதற்கேற்ப அந்தச் சட்டத்தைப் ஓர்வு செய்தல் வேண்டும் மற்றும் திருத்தத்துடனோ, திருத்தமின்றியோ அந்த மேற்சொன்ன மன்றத்தால் அந்தச் சட்டம் மீண்டும் பிறப்பிக்கப்பட்டால், அது மீண்டும் ஓர்வுக்காக குடியரசுத்தலைவருக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.]

[1][3ஆ. சட்டங்களியற்றுவதற்கு போடோலாந்து ஆட்சிநிலவரை மன்றத்திற்குள்ள கூடுதல் அதிகாரங்கள் :

(1) 3ஆம் பத்தியின் வகையங்களுக்குக் குந்தகமின்றி, போடோலாந்து ஆட்சிநிலவரை மன்றம், அதன் வரையிடங்களுக்குள், பின்வருவன குறித்து சட்டங்களியற்ற அதிகாரம் உடையது ஆகும்:—

(i) வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி, பூச்சிக்கொல்லிகளுக்கு எதிரான பாதுகாப்பு, பயிர் நோய்த் தடுப்பு உள்ளடங்கலாக, வேளாண்மை;

(ii) கால்நடைப் பேணுகை மற்றும் கால்நடை மருத்துவம், அதாவது, கால்நடைகளைப் பேணுதல், பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் விலங்கு நோய்த்தடுப்பு, விலங்கின மருத்துவப் பயிற்சியும் தொழிலும், கால்நடைப் பட்டித்தொழுவங்கள்;

(iii) கூட்டுறவு;

(iv) பண்பாடு பற்றிய பொருட்பாடுகள்;

(v) கல்வி, அதாவது தொடக்கக்கல்வி, உறுதொழில் பயிற்சி உள்ளடங்கலாக உயர் கல்வி, முதிர்வயதினர் கல்வி, கல்லூரிக் கல்வி (பொது);

(vi) மீனளங்கள்;

(vii) கிராமம், நெல் வயல்கள், அங்காடிகள், நகரங்கள் முதலானவற்றைப் பாதுகாப்பதற்காக (தொழில் நுட்பத் தன்மையதல்லாத) வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல்

(viii) உணவு மற்றும் குடிமை நுகர்பொருள்கள் வழங்கல்;

---

[1] 2003 ஆம் ஆண்டு அரசமைப்பின் ஆறாம் இணைப்புப்பட்டியலுக்கான (திருத்தம்) சட்டத்தால் (44/20003) புகுத்தப்பட்டது.

(ix) காடுகள் (ஒதுக்குறுத்தப்பட்ட காடுகள் அல்லாதவை);

(x) கைத்தறி மற்றும் நெசவங்கள்;

(xi) நலவாழ்வு மற்றும் குடும்ப நல்வாழ்வு;

(xii) ஏழாம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பட்டியலின் 84 ஆம் பதிவின் வகையங்களுக்கு உட்பட்டு வெறியூட்டும் மதுக்குடிவகைகள், அபின் மற்றும் அதன் வழிப் பொருள்கள்;

(xiii) பாசனம்;

(xiv) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு;

(xv) நிலம் மற்றும் வருவாய்;

(xvi) நூலகப் பணிகள் (மாநில அரசாங்கத்தினால் நிதியுதவியளிக்கப்பட்டு கட்டாள்கை செய்யப்படுபவை);

(xvii) பரிசுச் சீட்டுகள் (ஏழாம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பட்டியலின் 40 ஆம் பதிவின் வகையங்களுக்கு உட்பட்டவை); காட்சி அரங்குகளும், நாடக நிகழ்ச்சிகளும், மற்றும் திரைப்படங்கள் (ஏழாம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பட்டியலின் 60 ஆம் பதிவின் வகையங்களுக்கு உட்பட்டவை;)

(xviii) அங்காடிகளும், பொருட்காட்சிகளும்;

(xix) மாநகராட்சி, மேம்பாட்டுப் பொறுப்பமைவுகள், மாவட்டக் கழகங்கள் மற்றும் பிற உள்ளாட்சி அதிகாரஅமைப்புகள்;

(xx) அருங்காட்சியகம் மற்றும் மாநிலத்தினால் கட்டாள்கை செய்யப்படும் அல்லது நிதியுதவியளிக்கப்படும், தொல்பொருளாய்வு அமைவனங்கள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையென நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தாலோ அதன் வழியாலோ விளம்பப்படுபவை அல்லாத பிற தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த நினைவுச் சின்னங்களும் பதிவணங்களும்;

(xxi) ஊராட்சி மற்றும் ஊரக வளர்ச்சி;

(xxii) திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சி;

(xxiii) அச்சகம் மற்றும் எழுதுபொருள்;

(xxiv) மக்கள் நலவாழ்வு பொறியியல்;

(xxv) பொதுப் பணித் துறை;

(xxvi) விளம்பரம் மற்றும் மக்கள் தொடர்பு;

(xxvii) பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவு செய்தல்;

(xxviii) தீருதவி மற்றும் மறுவாழ்வளிப்பு;

(xxix) பட்டுப்புழு வளர்ப்பு;

(xxx) ஏழாம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பட்டியலின் 7 ஆம் மற்றும் 52 ஆம் பதிவுகளின் வகையங்களுக்கு உட்பட்ட சிறு, குடிசை மற்றும் ஊரகத் தொழில்;

(xxxi) சமூக நலன்;

(xxxii) மண்வளப் பாதுகாப்பு;

(xxxiii) விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்;

(xxxiv) புள்ளிவிவரங்கள்;

(xxxv) சுற்றுலா;

(xxxvi) கொண்டு செல்லுதல், ஏழாம் இணைப்புப் பட்டியலின் I ஆம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டிராத சாலைகள், பாலங்கள், தோணித்துறைகள் மற்றும் பிற செய்தி தொடர்பு சாதனங்கள் நகராட்சிக் காந்தவண்டிப் பாதைகள், கம்பிவடப்பாதைகள், உள்நாட்டு நீர்வழிகள் மற்றும் அத்தகைய நீர்வழிகள், எந்திரத்தால் உந்தப்படும் ஊர்திகள் அல்லாத பிற ஊர்திகள் குறித்து ஏழாம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பட்டியல் மற்றும் IIIஆம் பட்டியலின் வகையத்திற்கு உட்பட்டு அதன்மீதான போக்குவரத்து);

(xxxvii) மாநில அரசாங்கத்தினால் கட்டாள்கை செய்யப்படுவதும் நிதியுதவியளிக்கப் படுவதுமான பழங்குடியினர் ஆராய்ச்சி நிறுவனம்;

(xxxviii) நகர்ப்புற வளர்ச்சி, நகர மற்றும் ஊர் அமைப்பு;

(xxxix) ஏழாம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பட்டியலின் 50 ஆம் பதிவின் வகையங்களுக்கு உட்பட்ட எடைகள் மற்றும் அளவுகள்; மற்றும்

(xl) சமவெளிப் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல்வாழ்வு:

வரம்புரையாக: அத்தகைய சட்டங்களிலுள்ள எதுவும்,—

(அ) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியில் குடிமகன் ஒருவரின், அவரது நிலம் பொறுத்து, நிலவுறும் உரிமைகளையும், மதிப்புரிமைகளையும் ஒழித்துவிடுதலோ மாற்றிவிடுதலோ ஆகாது; மற்றும்

(ஆ) மரபு வழியுரிமை, ஒதுக்கீடு, அறுதிசெய்தல் வாயிலாவோ அல்லது வேறு ஏதேனும் உரிமை மாற்றம் வாயிலாகவோ குடிமகன் ஒருவரை, அந்தக் குடிமகன், போடோலாந்து ஆட்சி நிலவரை வரையிடங்கள் மாவட்டத்திற்குள், அத்தகைய நிலக்கையகப்படுத்துதலுக்குப் பிறவாறாக தகுமையுடையவராயின், நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு குடிமகன் எவருக்கும் அனுமதியளிக்க மறுக்காது.

(2) 3ஆம் பத்தியின்படியோ, இந்த பத்தியின்படியோ இயற்றப்படும் அனைத்து சட்டங்களும், அவை ஏழாம் இணைப்புப்பட்டியலின் III ஆம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளுக்குத் தொடர்புடையதாக இருக்கும் வரை, உடனடியாக, ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும், அவர் அதனை குடியரசுத்தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கி வைப்பார்.

(3) சட்டம் ஒன்று, குடியரசுத்தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதன் பேரில் குடியரசுத்தலைவர், தாம் மேற்சொன்ன சட்டத்துக்கு ஏற்பிசைவு அளிப்பதாகவோ அதற்கு ஏற்பிசைவு அளிக்க மறுப்பதாகவோ விளம்புவார்:

வரம்புரையாக: அச்சட்டத்தையோ அதனின் குறித்துரைக்கப்பட்ட வகையங்களில் எவற்றையுமோ, போடோலாந்து ஆட்சிநிலவரை மன்றம் மறுஓர்வு செய்யுமாறும், குறிப்பாக தாம் பரிந்துரைக்கும் திருத்தங்கள் எவற்றையும் அறிமுகப்படுத்துவது விரும்பத்தகுந்ததா என்பதைக் குறித்து ஓர்வு செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்ற செய்தியுரையுடன், அச்சட்டத்தை, அந்த மன்றத்துக்குத் திருப்பியனுப்பிவைக்குமாறு குடியரசுத்தலைவர் ஆளுநரைப் பணிக்கலாம்; அவ்வாறு ஒரு சட்டம் திருப்பியனுப்பப்பட்டிருக்கும்போது, மேற்சொன்ன மன்றம், அதன்படியே, அந்தச் செய்தியுரை கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து ஆறு மாத காலஅளவுக்குள் ஓர்வு செய்தல் வேண்டும், மேலும், மேற்சொன்ன மன்றத்தில் அச்சட்டம், திருத்தத்துடனோ திருத்தமின்றியோ மீண்டும் நிறைவேற்றப்படுமாயின் மீண்டும் குடியரசுத்தலைவரிடம் அவரது ஏற்பிசைவுக்காக முன்னிடப்படுதல் வேண்டும்.]

4. தன்னாட்சி மாவட்டங்களிலும் தன்னாட்சி வட்டாரங்களிலும் நீதி நிருவாகம்:

(1) ஒரு தன்னாட்சி வட்டாரத்திற்கான வட்டார மன்றம், அத்தகைய வட்டாரத்திற்குள் உள்ள வரையிடங்களைப் பொறுத்தும், ஒரு தன்னாட்சி மாவட்டத்திற்கான மாவட்ட மன்றம், அந்த மாவட்டத்திற்குள் வட்டார மன்றங்கள், எவையேனுமிருப்பின், அவற்றின் அதிகாரத்தின் கீழுள்ள வரையிடங்கள் நீங்கலாக அந்த மாவட்டத்திற்குள் உள்ள பிற வரையிடங்களைப் பொறுத்தும், அத்தகைய வரையிடங்களிலுள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினர் மட்டுமே தரப்பினர்களாகவுள்ள, இந்த இணைப்புப்பட்டியலின் 5ஆம் பத்தியின் (1)ஆம் உள்பத்தியின் வகையங்கள் பொருந்துறும் உரிமைவழக்குகளும் பிற வழக்குகளும் அல்லாத பிற உரிமைவழக்குகளையும், வழக்குகளையும் விசாரணை செய்வதற்காக, அந்த மாநிலத்திலுள்ள பிற நீதிமன்றங்களை விலக்கும் வகையில் ஊராட்சி மன்றங்களை அல்லது ஊர் நீதிமன்றங்களை அமைக்கலாம்; மற்றும், தக்கவர்களை அத்தகைய ஊராட்சி மன்றங்களின் உறுப்பினர்களாகவோ அத்தகைய நீதிமன்றங்களின் தலைமை வகிக்கும் அலுவலர்களாகவோ அமர்த்தலாம்; மேலும், இந்த இணைப்புப்பட்டியலின் 3ஆம் பத்தியின்படி இயற்றப்பட்ட சட்டங்களை நிருவகிப்பதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் அமர்த்தலாம்.

(2) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், ஒரு தன்னாட்சி வட்டாரத்திற்கான வட்டார மன்றமோ வட்டார மன்றத்தால் அதற்கென அமைக்கப்பட்ட நீதிமன்றமோ, ஒரு தன்னாட்சி மாவட்டத்திலுள்ள வரையிடம் எதற்கும் ஒரு வட்டார மன்றம் இல்லாதிருப்பின், அத்தகைய மாவட்டத்திற்கான மாவட்ட மன்றமோ, மாவட்ட மன்றத்தால் அதற்கென அமைக்கப்பட்ட நீதிமன்றமோ, இந்த பத்தியின் (1)ஆம் உள்பத்தியின்படி அத்தகைய வட்டாரத்திற்குள் அல்லது, நேர்வுக்கேற்ப, வரையிடத்திற்குள் அமைக்கப்பட்ட ஊராட்சி மன்றம் அல்லது ஊர் நீதிமன்றம் ஒன்றினால் விசாரணை செய்யத் தகுவதான, ஆனால், இந்த இணைப்புப்பட்டியலின் 5ஆம் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின் வகையங்கள் பொருந்துறுவனவாக அல்லாத உரிமைவழக்குகள், வழக்குகள் அனைத்தையும் பொறுத்து, ஒரு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்களைச் செலுத்தி வரும்; மேலும், அத்தகைய உரிமைவழக்குகள் அல்லது வழக்குகள் பொறுத்து, உயர் நீதிமன்றமும் உச்சநீதிமன்றமும் தவிர, பிற நீதிமன்றம் எதுவும் அதிகாரம் உடையது ஆகாது.

(3) இந்தப் பத்தியின் (2) ஆம் உள்பத்தியின் வகையங்கள் பொருந்துகிற உரிமைவழக்குகளின் மீதும் பிற வழக்குகளின் மீதும், ஆளுநர், அவ்வப்போது ஆணையின் வழிக் குறித்துரைக்கும் அதிகாரவரம்பினை உயர் நீதிமன்றம் கொண்டதாகி, அதனைச் செலுத்திவரும்.

(4) ஒரு வட்டார மன்றம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாவட்ட மன்றம், ஆளுநரின் முன் ஒப்பேற்புடன், பின்வருவனவற்றை ஒழுங்குறுத்துவதற்கான விதிகளைச் செய்யலாம்:—

(அ) ஊராட்சி மன்றங்களையும் ஊர் நீதிமன்றங்களையும் அமைத்தல்; இந்தப் பத்தியின்படி அவற்றால் செலுத்தப்படவேண்டிய அதிகாரங்கள்;

(ஆ) இந்தப் பத்தியின் (1)ஆம் உள்பத்தியின்படி, உரிமைவழக்குகளையும் பிற வழக்குகளையும் விசாரணை செய்கையில் ஊராட்சி மன்றங்களாலும் ஊர் நீதிமன்றங்களாலும் பின்பற்றப்படவேண்டிய நெறிமுறை;

(இ) இந்தப் பத்தியின் (2) ஆம் உள்பத்தியின்படி மேன்முறையீடுகளிலும் பிற நடவடிக்கைகளிலும், வட்டார மன்றத்தால் அல்லது மாவட்ட மன்றத்தால் அல்லது அத்தகைய மன்றத்தால் அமைக்கப்படும் நீதிமன்றம் எதனாலும் பின்பற்றப்படவேண்டிய நெறிமுறை;

(ஈ) அத்தகைய மன்றங்கள், நீதிமன்றங்கள் ஆகியவற்றின் முடிபுகளையும் ஆணைகளையும் செல்லுறுத்துதல்;

(உ) இந்தப் பத்தியின் (1), (2) ஆகிய உள்பத்திகளின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக உள்ள பிற சார்வுறு பொருட்பாடுகள் அனைத்தும்.

(5) குடியரசுத்தலைவர், தொடர்புடைய மாநில அரசாங்கத்தினைக் கலந்தாய்வு செய்தபின்பு, அறிவிக்கையின் வாயிலாக இதற்கெனக் குறித்திடும் தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தப் பத்தி, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் தன்னாட்சி மாவட்டம் அல்லது வட்டாரம் தொடர்பாக–

(*i*). (1) ஆம் உள்பத்தியில் "அத்தகைய வரையிடங்களிலுள்ள பட்டியலில் கண்ட பழங்குடியினர் மட்டுமே தரப்பினர்களாகவுள்ள, இந்த இணைப்புப்பட்டியலின் 5ஆம் பத்தியின் (1)ஆம் உள்பத்தியின் வகையங்கள் பொருந்துறும் உரிமை வழக்குகளும் பிற வழக்குகளும் அல்லாத பிற" என்னும் சொற்களுக்கு மாற்றாக, "ஆளுநர் இதற்கெனக் குறித்துரைக்கும் இந்த இணைப்புப்பட்டியலின் 5ஆம் பத்தியின் (1)ஆம் உள்பத்தியில் சுட்டப்பட்டுள்ளவை போல்வதான தன்மையுடைய உரிமைவழக்குகளும் பிற வழக்குகளும் அல்லாத" என்னும் சொற்கள் அமைக்கப்பட்டிருந்தாற் போன்றும்,

(*ii*). (2), (3) ஆகிய உள்பத்திகள் விட்டுவிடப்பட்டிருந்தாற்போன்றும்,

(*iii*). (4)ஆம் உள்பத்தியில்—

(அ) "ஒரு வட்டார மன்றம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாவட்ட மன்றம் ஆளுநரின் முன் ஒப்பேற்புடன் பின்வருவனவற்றை ஒழுங்குறுத்துவதற்கான விதிகளைச் செய்யலாம்" என்னும் சொற்களுக்கு மாற்றாக, "ஆளுநர் பின்வருவனவற்றை ஒழுங்குறுத்துவதற்கான விதிகளைச் செய்யலாம்" என்னும் சொற்கள் அமைக்கப்பட்டிருந்தாற்போன்றும்,

(ஆ). (அ) கூறுக்கு மாற்றாகப் பின்வரும் கூறு, அதாவது, "(அ) ஊராட்சி மன்றங்களையும் ஊர் நீதிமன்றங்களையும் அமைத்தல் இந்தப் பத்தியின்படி அவற்றால் செலுத்தப்பட வேண்டிய அதிகாரங்கள்; மேலும், ஊராட்சி மன்றங்கள், ஊர் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் முடிபுகளிலிருந்து செய்து கொள்ளப்படும் மேன்முறையீடுகளுக்கான நீதிமன்றங்கள்" என்னும் கூறு அமைக்கப்பட்டிருந்தாற்போன்றும்.

(இ). (இ) கூறுக்கு மாற்றாகப் பின்வரும் கூறு, அதாவது, "(இ). (5)ஆம் உள்பத்தியின்படி குடியரசுத்தலைவரால் குறித்திட்ட தேதியை ஒட்டி முன்பு வட்டார அல்லது மாவட்ட மன்றத்தின் முன்பு, அல்லது அத்தகைய மன்றத்தினால் அமைக்கப்பட்ட பிற நீதிமன்றம் எதன் முன்பும் முடிவுறாநிலையிலுள்ள மேன்முறையீடுகளையும் பிற நடவடிக்கைகளையும் மாற்றல் செய்தல்" என்னும் கூறு அமைக்கப்பட்டிருந்தாற்போன்றும், மற்றும்

(ஈ). (உ) கூறில், "(1), (2) ஆகிய உள்பத்திகளின்" என்னும் சொற்களுக்கும் அடைப்புக்குறிகளுக்கும் இலக்கங்களுக்கும் மாற்றாக, "(1) ஆம் உள்பத்தியின்" என்னும் சொற்களும் அடைப்புக்குறிகளும் இலக்கமும் அமைக்கப்பட்டிருந்தாற்போன்றும்

செல்திறம் பெறும்.

[1][(6) இந்தப் பத்தியிலுள்ள எதுவும், இந்த இணைப்புப்பட்டியலின் 2 ஆம் பத்தியின் (3)ஆம் உள்பத்தியின் வரம்புரையின்படி அமைக்கப்பட்ட போடோலாந்து வரையிட மன்றத்திற்குப் பொருந்தாது.]

---

[1]. 2003 ஆம் ஆண்டு அரசமைப்பின் ஆறாம் இணைப்புப்பட்டியலுக்கான (திருத்தம்) சட்டத்தால் (44/2003) புகுத்தப்பட்டது.

5. 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டம், [1]1898 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டம் ஆகியவற்றின்படி குறித்த சில உரிமை வழக்குகளையும் பிற வழக்குகளையும் குற்றச்செயல்களையும் விசாரிப்பதற்காக வட்டார மற்றும் மாவட்ட மன்றங்களுக்கும் குறித்தசில நீதிமன்றங்களுக்கும் அலுவலர்களுக்கும் அதிகாரங்கள் வழங்குதல் :

(1) ஒரு தன்னாட்சி மாவட்டம் அல்லது வட்டாரம் எதிலும் செல்லாற்றலிலுள்ளதும், ஆளுநரால் இதற்கெனக் குறித்துரைக்கப்பட்டுள்ளதுமான சட்டம் எதிலிருந்தும் எழுகின்ற உரிமைவழக்குகளை அல்லது பிற வழக்குகளை விசாரிப்பதற்காக அல்லது இந்தியத் தண்டனைத் தொகுப்புச்சட்டத்தின்படி அல்லது அத்தகைய மாவட்டத்திற்கு அல்லது வட்டாரத்திற்கு அப்போதைக்குப் பொருந்துறும் பிறிதொரு சட்டத்தின்படி மரண தண்டனை, ஆயுள் தண்டனை அல்லது ஐந்தாண்டுக் காலத்திற்குக் குறையாத சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவதாகும் குற்றச்செயல்களைப் பற்றி விசாரிப்பதற்காக அல்லது அத்தகைய மாவட்டத்தின் அல்லது வட்டாரத்தின் மீது அதிகாரம் உடைய மாவட்ட மன்றத்திற்கோ வட்டார மன்றத்திற்கோ அத்தகைய மாவட்ட மன்றத்தால் அமைக்கப்பட்ட நீதிமன்றங்களுக்கோ ஆளுநரால் அமர்த்தப்பெற்ற அலுவலருக்கோ, ஆளுநர், 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டத்தின் அல்லது, நேர்வுக்கேற்ப, [1][1898 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டத்தின்படி] உள்ள அதிகாரங்களில் தாம் பொருத்தமாகுமெனக் கொள்ளுகிறவற்றை வழங்கலாம்; அதன் மேல், அந்த மன்றம், நீதிமன்றம் அல்லது அலுவலர், அவ்வாறு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி அந்த உரிமைவழக்குகளை, பிற வழக்குகளை, அல்லது குற்றச்செயல்களை விசாரணை செய்தல் வேண்டும்.

(2) மாவட்ட மன்றத்திற்கோ வட்டார மன்றத்திற்கோ நீதிமன்றத்திற்கோ அலுவலருக்கோ இந்தப் பத்தியின் (1)ஆம் உள்பத்தியின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களில் எதனையும், ஆளுநர் விலக்கிக்கொள்ளலாம் அல்லது மாற்றமைவு செய்யலாம்.

(3) இந்தப் பத்தியில் தெளிவுற வகைசெய்யப்பட்டவாறல்லாமல், இந்தப் பத்தியின் வகையங்கள் பொருந்துறுகிற தன்னாட்சி மாவட்டம் ஒன்றில் அல்லது தன்னாட்சி வட்டாரம் எதிலுமுள்ள உரிமை வழக்குகள், பிற வழக்குகள் அல்லது குற்றச்செயல்கள் எவற்றையும் விசாரணை செய்வதற்கு, 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டமும், [1][1898 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டமும்] பொருந்துறுவதில்லை.

(4) தன்னாட்சி மாவட்டம் அல்லது தன்னாட்சி வட்டாரம் எதன் தொடர்பாகவும், 4 ஆம் பத்தியின் (5) ஆம் உள்பத்தியின்படி குடியரசுத்தலைவர் குறித்திட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தப் பத்தியில் அடங்கியுள்ள எதுவும், அந்த மாவட்டத்திற்கோ வட்டாரத்திற்கோ பொருந்துறுகையில், மாவட்ட மன்றத்திற்கோ வட்டார மன்றத்திற்கோ மாவட்ட மன்றத்தினால் அமைக்கப்பட்ட நீதிமன்றங்களுக்கோ இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியில் சுட்டப்பட்டுள்ள அதிகாரங்களில் எதனையும் வழங்க ஆளுநருக்கு அதிகாரமளிப்பதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

6. தொடக்கப் பள்ளிகள் முதலியனவற்றை அமைக்க மாவட்ட மன்றத்திற்குள்ள அதிகாரங்கள் :

(1) ஒரு தன்னாட்சி மாவட்டத்திற்கான மாவட்ட மன்றம், அந்த மாவட்டத்தில் தொடக்கப் பள்ளிகள், மருந்தகங்கள், அங்காடிகள், கால்நடைப் பட்டித் தொழுவங்கள், தோணித் துறைகள், மீனளங்கள், சாலைகள், சாலைப் போக்குவரத்து, நீர்வழிகள் ஆகியவற்றை அமைக்கலாம், கட்டலாம் அல்லது மேலாண்மை செய்யலாம்; மேலும், ஆளுநரின் முன் ஒப்பேற்புடன், அவற்றை ஒழுங்குறுத்துவதற்காகவும் கட்டாள்கை செய்வதற்காகவும் ஒழுங்குறுத்தும் விதிகளைச் செய்யலாம்; குறிப்பாக அந்த மாவட்டத்திலுள்ள தொடக்கப் பள்ளிகளில் தொடக்கக் கல்வி கற்பிக்கப்படவேண்டிய மொழியையும் முறையையும் வகுத்துரைக்கலாம்.

---

[1] இப்போது, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தைக் (சட்ட எண் 2/1974) காண்க.

(2) ஆளுநர் மாவட்ட மன்றம் ஒன்றன் இசைவுடன், வேளாண்மை, கால்நடைப் பேணுகை, சமூக நலத் திட்டங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சமுதாய நலப்பாடு, ஊரமைப்புத் திட்டம் அல்லது மாநிலத்தின் ஆட்சித்துறை அதிகாரம் அளாவுகின்ற பிற பொருட்பாடுகள் தொடர்பான செயற்பணிகளை, அந்த மன்றத்திடம் அல்லது அதன் அலுவலர்களிடம், வரைக்கட்டுடனோ வரைக்கட்டின்றியோ ஒப்படைக்கலாம்.

7. மாவட்ட மற்றும் வட்டார நிதியங்கள் :

(1) தன்னாட்சி மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் ஒரு மாவட்ட நிதியமும், தன்னாட்சி வட்டாரம் ஒவ்வொன்றிற்கும் ஒரு வட்டார நிதியமும் ஏற்படுத்தப்படும்; இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு இணங்க, அத்தகைய மாவட்டத்தின் அல்லது, நேர்வுக்கேற்ப, வட்டாரத்தின் நிருவாகத்தின்போது, முறையே அந்த மாவட்டத்திற்கான மாவட்ட மன்றத்தினாலும் அந்த வட்டாரத்திற்கான வட்டார மன்றத்தினாலும் பெறப்படும் பணம் அனைத்தும், அந்தந்த நிதியத்தில் வரவு வைக்கப்படும்.

(2) ஆளுநர், மாவட்ட நிதியத்தை அல்லது, நேர்வுக்கேற்ப, வட்டார நிதியத்தை மேலாண்மை செய்வதற்காகவும் மேற்சொன்ன நிதியத்தில் பணம் செலுத்துவதையும், அதிலிருந்து பணம் எடுப்பதையும் அதிலுள்ள பணத்தைக் கையடைவில் கொள்ளுவதையும், மேற்கூறப்பட்ட பொருட்பாடுகளுக்குத் தொடர்புடைய அல்லது துணைமையான பிற பொருட்பாடுகளையும் பொறுத்துப் பின்பற்றப்படவேண்டிய நெறிமுறை குறித்து, ஆளுநர் விதிகளை வகுக்கலாம்.

(3) மாவட்ட மன்றத்தின் அல்லது, நேர்வுக்கேற்ப, வட்டார மன்றத்தின் கணக்குகள், குடியரசுத்தலைவரின் ஒப்பேற்புடன் இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர் வகுத்துரைக்கும் படிவத்தில் வைத்து வரப்படுதல் வேண்டும்.

(4) கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர், மாவட்ட மற்றும் வட்டார மன்றங்களின் கணக்குகளைத் தாம் பொருத்தமெனக் கருதுகிற முறையில் தணிக்கை செய்விப்பார்; மேலும், அத்தகைய கணக்குகள் தொடர்பாக, கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரின் அறிக்கைகளை ஆளுநருக்கு அனுப்புவார்; அவர் அவற்றை மன்றத்தின் முன்பு வைக்குமாறு செய்வார்.

8. நில வருவாயை மதிப்பீடு செய்வதற்கும் ஈட்டுவதற்கும் வரிகளை விதிப்பதற்குமான அதிகாரங்கள் :

(1) ஒரு தன்னாட்சி வட்டாரத்திற்கான வட்டார மன்றம் அத்தகைய வட்டாரத்திற்குள் உள்ள நிலங்கள் அனைத்தையும் பொறுத்து ஒரு தன்னாட்சி மாவட்டத்திற்கான மாவட்ட மன்றம், அந்த மாவட்டத்திற்குள் வட்டார மன்றங்கள், எவையேனுமிருப்பின், அவற்றின் அதிகாரத்தின் கீழுள்ள வரையிடங்களில் உள்ளவை நீங்கலாக, அந்த மாவட்டத்திற்குள் உள்ள நிலங்கள் அனைத்தையும் பொறுத்து அந்த மாநிலத்தில் பொதுவாக நில வருவாய் நோக்கத்திற்காக நிலங்களை மதிப்பீடு செய்வதில் மாநில அரசாங்கத்தினால் அப்போதைக்குப் பின்பற்றப்பட்டுவரும் நெறிகளுக்கு இணங்கியவாறு, அத்தகைய நிலங்களைப் பொறுத்து வருவாயை மதிப்பீடு செய்வதற்கும் ஈட்டுவதற்கும் அதிகாரங்கள் உடையன ஆகும்.

(2) ஒரு தன்னாட்சி வட்டாரத்திற்கான வட்டார மன்றம், அத்தகைய வட்டாரத்திற்குள் உள்ள வரையிடங்களைப் பொறுத்தும் ஒரு தன்னாட்சி மாவட்டத்திற்கான மாவட்ட மன்றம், அத்தகைய மாவட்டத்திற்குள் வட்டார மன்றங்கள், எவையேனுமிருப்பின், அவற்றின் அதிகாரத்தின் கீழுள்ள வரையிடங்கள் நீங்கலாக, அந்த மாவட்டத்திற்குள் உள்ள அனைத்து வரையிடங்களைப் பொறுத்தும் நிலங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றின் மீதான வரிகளையும் அத்தகைய வரையிடங்களுக்குள் குடியிருப்பவர்களின் மீதான சுங்க வரிகளையும் விதிக்கவும் ஈட்டவும் அதிகாரம் உடையது ஆகும்.

(3) ஒரு தன்னாட்சி மாவட்டத்திற்கான மாவட்ட மன்றம், அந்த மாவட்டத்திற்குள்ளே பின்வரும் வரிகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும், விதிக்கவும் ஈட்டவும் அதிகாரம் உடையது ஆகும்; அவையாவன–

(அ) விழைத்தொழில்கள், வணிகங்கள், கொள்பணிகள், வேலையமர்த்தங்கள் ஆகியவற்றின் மீதான வரிகள்;

(ஆ) விலங்குகள், ஊர்திகள், படகுகள் ஆகியவற்றின் மீதான வரிகள்;

(இ) ஓர் அங்காடிக்குள் பண்டங்களை விற்பனைக்காகக் கொண்டு செல்வதன் மீதான வரிகள்; தோணிகளில் ஏற்றிச் செல்லப்படும் பயணிகள், பண்டங்கள் மீதான சுங்கவரிகள்; மற்றும்

(ஈ) பள்ளிகளை, மருந்தகங்களை அல்லது சாலைகளைப் பேணிவருவதற்கான வரிகள்.

(4) வட்டார மன்றம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாவட்ட மன்றம், இந்தப் பத்தியின் (2), (3) ஆகிய உள்பத்திகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரிகள் எவற்றையும் விதித்து ஈட்டுவதற்கு வகைசெய்வதற்கான ஒழுங்குறுத்தும்விதிகளை வகுக்கலாம்; மேலும், அத்தகைய ஒழுங்குறுத்தும்விதி ஒவ்வொன்றும் உடனடியாக ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்; மேலும், அவரால் ஏற்பிசைவளிக்கப்படும் வரையில் அவை செல்திறம் பெறுவதில்லை.

[1]**9. கனிமங்களைக் கண்டறிவதற்கான அல்லது அவற்றைப் பிரித்தெடுப்பதற்கான உரிமங்கள் அல்லது குத்தகைகள் :**

(1) ஒரு தன்னாட்சி மாவட்டத்திற்குள் உள்ள வரையிடம் எதிலும், கனிமங்களைக் கண்டறிவதற்காக அல்லது பிரித்தெடுப்பதற்காக, மாநில அரசாங்கத்தினால் வழங்கப்படும் உரிமங்களிலிருந்து அல்லது குத்தகைகளிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் வந்தடைகின்ற உரிமத் தொகைகளில், மாநில அரசாங்கமும் அத்தகைய மாவட்டத்தின் மாவட்ட மன்றமும் இடையே ஒப்பியவாறான பங்கு, அந்த மாவட்ட மன்றத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(2) ஒரு மாவட்ட மன்றத்திற்கு மாற்றி வழங்கப்பட வேண்டிய அத்தகைய உரிமத்தொகைப் பங்கு பற்றி பூசல் எதுவும் எழுமாயின், அது பற்றித் தீர்மானம் செய்வதற்காக அது ஆளுநருக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும்; மேலும், ஆளுநரால் அவரது உளத்தேர்வின்படி தீர்மானிக்கப்படும் தொகை, இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின்படி மாவட்ட மன்றத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; இதில் ஆளுநரின் முடிபே அறுதியானது ஆகும்.

[2]**10. பழங்குடியினர் அல்லாதவர் வட்டித் தொழில் செய்வதையும், வணிகம் செய்வதையும் கட்டாள்கை செய்வதற்கான ஒழுங்குறுத்தும்விதிகளை வகுக்க மாவட்ட மன்றத்திற்குள்ள அதிகாரம் :**

(1) ஒரு தன்னாட்சி மாவட்டத்தின் மாவட்ட மன்றம், அந்த மாவட்டத்தில் குடியிருக்கிற பட்டியலில் கண்ட பழங்குடியினர் அல்லாத பிறர், அந்த மாவட்டத்திற்குள் வட்டித் தொழில் அல்லது வணிகம் செய்வதை ஒழுங்குறுத்துவதற்கும் கட்டாள்கை செய்வதற்குமான ஒழுங்குறுத்தும்விதிகளை வகுக்கலாம்.

(2) குறிப்பாகவும் மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகம் இன்றியும், அத்தகைய ஒழுங்குறுத்தும்விதிகள்—

(அ) வட்டித் தொழிலை, அதற்கென வழங்கப்பட்ட உரிமம் ஒன்றைக் கொண்டிருப்பவரைத் தவிர, பிறர் எவரும் நடத்தலாகாது என வகுத்துரைக்கலாம்;

(ஆ) வட்டித் தொழில் நடத்துபவர் ஒருவரால் விதிக்கப்படும் அல்லது பெறப்படும் மேல்வரை வட்டி வீதத்தினை வகுத்துரைக்கலாம்;

---

1. திரிபுரா, மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கு ஆறாம் இணைப்புப்பட்டியல் பொருந்துறுமாறு 9 ஆம் பத்தியானது 1988, ஆம் ஆண்டு அரசமைப்பு (திருத்தம்) சட்டத்தின் (67/1988) 2 ஆம் பிரிவினால் (2) ஆம் உள்பத்திக்குப் பின்னர், பின்வரும் உள்பத்தியைப் புகுத்துவதன் மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது:–

"(3) இந்தப் பத்தியின்படி மாவட்ட மன்றத்திற்கு வழங்கப்பட வேண்டிய உரிமத்தொகைப்பங்கு, (1) ஆம் உள்பத்தியின்படி செய்துகொள்ளப்படும் உடன்பாடு எதனின் அல்லது, நேர்வுக்கேற்ப, (2) ஆம் உள்பத்தியின்படி செய்யப்படும் தீர்மானம் எதனின் தேதியிலிருந்து ஓராண்டுக் காலஅளவுக்குள், அந்த மன்றத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும் என்று ஆளுநர் ஆணையின்வழி பணிக்கலாம்."

2. திரிபுரா, மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கு ஆறாம் இணைப்புப்பட்டியல் பொருந்துறுமாறு, 10 ஆம் பத்தியானது, 1988 ஆம் ஆண்டு அரசமைப்பு (திருத்தம்) சட்டத்தின் (67/1988) 2 ஆம் பிரிவினால், பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது:–

(அ) தலைப்பில் "பழங்குடியினர் அல்லாதவர்" என்ற சொற்கள் விட்டுவிடப்படும் :

(ஆ) (1)ஆம் பத்தியில் "பட்டியலில் கண்ட பழங்குடியினர் அல்லாத பிறர்" என்ற சொற்கள் விட்டுவிடப்படும் :

(இ) (2)ஆம் பத்தியில், (ஈ) கூறுக்கு மாற்றாகப் பின்வரும் கூறு அமைக்கப்படும் :—

"(ஈ) அந்த மாவட்டத்தில் குடியிருக்கிற எவரும், அந்த மாவட்ட மன்றத்தினால் இதற்கென வழங்கப்படும் உரிமத்தின்படி அல்லாமல் மொத்தமாகவோ சில்லறையாகவோ வணிகம் எதனையும் செய்தலாகாது என வகுத்துரைக்கலாம்."

(இ) வட்டித் தொழில் நடத்துவோரால் கணக்குகள் வைத்து வரப்படுவதற்கும் மாவட்ட மன்றம் இதற்கென அமர்த்தும் அலுவலர்களால் அத்தகைய கணக்குகள் ஆய்வு செய்யப்படுவதற்கும் ஏற்பாடு செய்யலாம்;

(ஈ) அந்த மாவட்டத்தில் குடியிருக்கிற பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஒருவராக இல்லாத எவரும், அந்த மாவட்ட மன்றத்தினால் இதற்கென வழங்கப்படும் உரிமத்தின்படி அல்லாமல், எந்தப் பண்டத்தையும் மொத்தமாகவோ சில்லறையாகவோ ஆகுதொழில் செய்தலாகாது என வகுத்துரைக்கலாம்;

வரம்புரையாக: இந்தப் பத்தியின்படி ஒழுங்குறுத்தும்விதிகள் எவையும், மாவட்ட மன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் நான்கில் மூன்று பகுதியினருக்குக் குறையாத பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட்டாலன்றி, வகுக்கப்படுதல் ஆகாது;

மேலும் வரம்புரையாக: அத்தகைய ஒழுங்குறுத்தும்விதிகள் வகுக்கப்படுவதற்கு முன்பிருந்தே அந்த மாவட்டத்திற்குள் தொழில் நடத்தி வருகிற வட்டித்தொழில் நடத்துவோருக்கோ வணிகருக்கோ அத்தகைய ஒழுங்குறுத்தும்விதிகளின்படி உரிமம் வழங்க மறுத்தல் ஆகாது.

(3) இந்தப் பத்தியின்படி வகுக்கப்படும் ஒழுங்குறுத்தும்விதிகள் அனைத்தும் உடனடியாக ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்; மேலும், அவரால் ஏற்பிசைவளிக்கப்படும் வரையில், அவை செல்திறம் பெறுவதில்லை.

[1][(4) இந்தப் பத்தியிலுள்ள எதுவும் இந்த இணைப்புப்பட்டியலின் 2ஆம் பத்தியின் (3)ஆம் உள்பத்தியின் வரம்புரையின்படி அமைக்கப்பட்ட போடோலாந்து ஆட்சிநிலவரை மன்றத்திற்குப் பொருந்தாது.]

11. இந்த இணைப்புப்பட்டியலின்படி இயற்றப்படும் சட்டங்கள், விதிகள், ஒழுங்குறுத்தும் விதிகள் ஆகியவற்றை வெளியிடுதல் :

ஒரு மாவட்ட மன்றத்தாலோ ஒரு வட்டார மன்றத்தாலோ இந்த இணைப்புப்பட்டியலின்படி இயற்றப்படும் சட்டங்கள், விதிகள், ஒழுங்குறுத்தும்விதிகள் அனைத்தும், உடனடியாக மாநிலத்தின் அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்; மேலும், அவ்வாறு வெளியிடப்படுவதன் மேல் அவை சட்டத்தின் செல்லாற்றல் உடையன ஆகும்.

12. அசாம் மாநிலத்திலுள்ள தன்னாட்சி மாவட்டங்கள், தன்னாட்சி வட்டாரங்கள் ஆகியவற்றிற்கு நாடாளுமன்றச் சட்டங்களும் அசாம் மாநிலச் சட்டமன்றச் சட்டங்களும் பொருந்துறுதல் :

(1) இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்—

(அ) எந்தப் பொருட்பாடுகளைப் பொறுத்து ஒரு மாவட்ட மன்றம் அல்லது வட்டார மன்றம் சட்டங்களை இயற்றுவதற்குரியவை என இந்த இணைப்புப்பட்டியலின் 3ஆம் பத்தியில் [2][அல்லது 3அ பத்தியில்] [2][அல்லது 3ஆ பத்தியில்] குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்த, அசாம் மாநிலச் சட்டமன்றச் சட்டம் எதுவும், காய்ச்சிவடிக்கப்படாத வெறியம் கலந்த மதுக்குடிவகை எதனையும் உட்கொள்ளுவதைத் தடைசெய்கிற அல்லது கட்டுப்படுத்துகிற அசாம் மாநிலச் சட்டமன்றச் சட்டம் எதுவும், அத்தகைய மாவட்டத்திற்கான அல்லது அத்தகைய வட்டாரத்தின் மீது அதிகாரவரம்பு கொண்டுள்ள மாவட்ட மன்றம், பொது அறிவிக்கை வாயிலாக, இரு நேர்வுகளில்

---

[1] 1995 ஆம் ஆண்டு அரசமைப்பு ஆறாம் இணைப்புப்பட்டியலுக்கான (திருத்தம்) சட்டத்தினால் (42/1995) புகுத்தப்பட்டது.

[2] 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு ஆறாம் இணைப்புப்பட்டியலுக்கான (திருத்தம்) சட்டத்தினால் (44/2003) புகுத்தப்பட்டது.

எதிலும், அவ்வாறு பணித்தாலன்றி, அந்த மாநிலத்திற்குள் உள்ள தன்னாட்சி மாவட்டம் அல்லது தன்னாட்சி வட்டாரம் எதற்கும் பொருந்துறுதல் ஆகாது; மேலும், அந்த மாவட்ட மன்றம் அத்தகைய சட்டம் எதனையும் பொறுத்து அவ்வாறு பணிக்கும்போது, அந்தச் சட்டத்தினை அத்தகைய மாவட்டத்திற்கோ வட்டாரத்திற்கோ அவற்றின் பகுதி எதற்குமோ பொருந்துறச் செய்கையில் அந்த மாவட்ட மன்றம் தக்கதெனக் கருதுகிற விதிவிலக்குகளுக்கு அல்லது மாற்றமைவுகளுக்கு உட்பட்டு, அது செல்திறம் பெறும் எனப் பணிக்கலாம்;

(ஆ) ஆளுநர், பொது அறிவிக்கை வாயிலாக, இந்த உள்பத்தியின் (அ) கூறின் வகையங்கள் பொருந்துறாத நாடாளுமன்றச் சட்டம் எதுவும் அல்லது அசாம் மாநிலச் சட்டமன்றச் சட்டம் எதுவும், அந்த மாநிலத்தில் உள்ள தன்னாட்சி மாவட்டத்திற்கு அல்லது தன்னாட்சி வட்டாரத்திற்குப் பொருந்துறாது என்றோ அல்லது அந்த அறிவிக்கையில் அவர் குறித்துரைக்கும் விதிவிலக்குகளுக்கு அல்லது மாற்றமைவுகளுக்கு உட்பட்டு, அத்தகைய மாவட்டம் அல்லது வட்டாரம் அல்லது அதன் பகுதி எதற்கும் பொருந்துறும் என்றோ பணிக்கலாம்.

(2) இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின்படியான பணிப்புரை எதுவும், முன்மேவு செல்திறம் பெறுமாறு இடப்படலாம்.

12அ. மேகாலயா மாநிலத்தில் உள்ள தன்னாட்சி மாவட்டங்கள், தன்னாட்சி வட்டாரங்கள் ஆகியவற்றிற்கு நாடாளுமன்றச் சட்டங்களும் மேகாலயா மாநிலச் சட்ட மன்றச் சட்டங்களும் பொருந்துறுதல் :

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்—

(அ) இந்த இணைப்புப்பட்டியலின் 3ஆம் பத்தியின் (1)ஆம் உள்பத்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்பாடு எதனையும் பொறுத்து, மேகாலயா மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்ட அல்லது வட்டார மன்றத்தினால் இயற்றப்படும் ஒரு சட்டத்தின் வகையம் எதுவும் அல்லது இந்த இணைப்புப்பட்டியலின் 8 ஆம் பத்தியின் அல்லது 10 ஆம் பத்தியின்படி அந்த மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்ட மன்றத்தினாலோ ஒரு வட்டார மன்றத்தினாலோ இயற்றப்படும் ஒழுங்குறுத்தும்விதி ஒன்றன் வகையம் எதுவும், அந்தப் பொருட்பாடு பொறுத்து மேகாலயா மாநிலச் சட்டமன்றத்தினால் இயற்றப்படும் ஒரு சட்டத்தின் வகையம் எதற்கும் முரணாக இருக்குமிடத்து, அந்த மாவட்ட மன்றத்தினால் அல்லது, நேர்வுக்கேற்ப, வட்டார மன்றத்தினால் இயற்றப்படும் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி, மேகாலயா மாநிலச் சட்டமன்றத்தினால் இயற்றப்படும் சட்டத்திற்கு முன்போ பின்போ இயற்றப்பட்டிருப்பினும், முரண்பாடு உள்ள அளவுக்கு, இல்லாநிலையது ஆகும்; மேலும், மேகாலயா மாநிலச் சட்டமன்றத்தினால் இயற்றப்படும் சட்டமே மேலோங்கி நிற்கும்;

(ஆ) குடியரசுத்தலைவர், நாடாளுமன்றச் சட்டம் எதனையும் பொறுத்து அறிவிக்கை வாயிலாக, மேகாலயா மாநிலத்தில் உள்ள ஒரு தன்னாட்சி மாவட்டத்திற்கு அல்லது தன்னாட்சி வட்டாரத்திற்கு அது பொருந்துறாது என்றோ அந்த அறிவிக்கையில் அவர் குறித்துரைக்கும் விதிவிலக்குகளுக்கு அல்லது மாற்றமைவுகளுக்கு உட்பட்டு, அத்தகைய மாவட்டத்திற்கு அல்லது வட்டாரத்திற்கு அல்லது அதன் பகுதி எதற்கும் பொருந்துறும் என்றோ பணிக்கலாம்; மேலும், அத்தகைய பணிப்புரை எதுவும் முன்மேவு செல்திறம் பெறுமாறு இடப்படலாம்.

12அஅ. திரிபுரா மாநிலத்தில் உள்ள தன்னாட்சி மாவட்டம், தன்னாட்சி வட்டாரங்கள் ஆகியவற்றிற்கு நாடாளுமன்றச் சட்டங்களும் திரிபுரா மாநிலச் சட்டமன்றச் சட்டங்களும் பொருந்துறுதல் :

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்—

(அ) ஒரு மாவட்ட மன்றம் அல்லது வட்டார மன்றம் சட்டங்களை இயற்றுவதற்குரியவை என இந்த இணைப்புப்பட்டியலின் 3 ஆம் பத்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்த திரிபுரா மாநிலச் சட்டமன்றச் சட்டம் எதுவும், காய்ச்சிவடிக்கப்படாத வெறியம் கலந்த மதுக்குடிவகை எதனையும் உட்கொள்வதைத் தடை செய்கிற அல்லது கட்டுப்படுத்துகிற திரிபுரா மாநிலச் சட்டமன்றச் சட்டம் எதுவும், அத்தகைய மாவட்டத்திற்கான அல்லது அத்தகைய வட்டாரத்தின்மீது அதிகாரவரம்பு கொண்டுள்ள மாவட்ட மன்றம் பொது அறிவிக்கையின் வாயிலாக, இரு நேர்வுகளில் எதிலும், அவ்வாறு பணித்தாலன்றி, அந்த மாநிலத்திற்குள் உள்ள தன்னாட்சி மாவட்டம் அல்லது தன்னாட்சி வட்டாரம் எதற்கும் பொருந்துறுதல் ஆகாது; மேலும், அந்த மாவட்ட மன்றம் அத்தகைய சட்டம் எதனையும் பொறுத்து அவ்வாறு பணிக்கும்போது, அந்தச் சட்டத்தினை அத்தகைய மாவட்டத்திற்கோ வட்டாரத்திற்கோ அவற்றின் பகுதி எதற்குமோ பொருந்துறச் செய்கையில், அந்த மாவட்ட மன்றம் தக்கதெனக் கருதுகிற விதிவிலக்குகளுக்கு அல்லது மாற்றமைவுகளுக்கு உட்பட்டு, அது செல்திறம் பெறும் எனப் பணிக்கலாம்;

(ஆ) ஆளுநர், பொது அறிவிக்கை வாயிலாக, இந்த உள்பத்தியின் (அ) கூறின் வகையங்கள் பொருந்துறாத திரிபுரா மாநிலச் சட்டமன்றச் சட்டம் எதுவும், அந்த மாநிலத்தில் உள்ள தன்னாட்சி மாவட்டத்திற்கு அல்லது தன்னாட்சி வட்டாரத்திற்குப் பொருந்துறாது என்றோ அல்லது அந்த அறிவிக்கையில் அவர் குறித்துரைக்கும் விதிவிலக்குகளுக்கு அல்லது மாற்றமைவுகளுக்கு உட்பட்டு, அத்தகைய மாவட்டம் அல்லது வட்டாரம் அல்லது அதன் பகுதி எதற்கும் பொருந்துறும் என்றோ பணிக்கலாம்.

(இ) குடியரசுத்தலைவர், நாடாளுமன்றச் சட்டம் எதனையும் பொறுத்து, அறிவிக்கை வாயிலாக, திரிபுரா மாநிலத்தில் உள்ள ஒரு தன்னாட்சி மாவட்டத்திற்கு அல்லது தன்னாட்சி வட்டாரத்திற்கு அது பொருந்துறாது என்றோ அல்லது அந்த அறிவிக்கையில் அவர் குறித்துரைக்கும் விதிவிலக்குகளுக்கு அல்லது மாற்றமைவுகளுக்கு உட்பட்டு, அத்தகைய மாவட்டத்திற்கு அல்லது வட்டாரத்திற்கு அல்லது அதன்பகுதி எதற்கும் பொருந்துறும் என்றோ பணிக்கலாம்; மேலும், அத்தகைய பணிப்புரை எதுவும் முன்மேவு செல்திறம் பெறுமாறு இடப்படலாம்.

12ஆ. மிசோரம் மாநிலத்தில் உள்ள தன்னாட்சி மாவட்டங்கள், தன்னாட்சி வட்டாரங்கள் ஆகியவற்றிற்கு நாடாளுமன்றச் சட்டங்களும் மிசோரம் மாநிலச் சட்டமன்றச் சட்டங்களும் பொருந்துறுதல் :

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும்—

(அ) இந்த இணைப்புப்பட்டியலின் 3ஆம் பத்தியில் ஒரு மாவட்ட மன்றம் அல்லது வட்டார மன்றம் சட்டங்களை இயற்றுவதற்குரியவை எனக் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்த மிசோரம் மாநிலச் சட்டமன்றச் சட்டம் எதுவும், காய்ச்சிவடிக்கப்படாத வெறியம் கலந்த மதுக்குடிவகை எதனையும் உட்கொள்வதைத் தடைசெய்கிற அல்லது கட்டுப்படுத்துகிற மிசோரம் மாநிலச் சட்டமன்றச் சட்டம் எதுவும், அத்தகைய மாவட்டத்திற்கான அல்லது அத்தகைய வட்டாரத்தின்மீது அதிகாரவரம்பு கொண்டுள்ள மாவட்ட மன்றம், பொது அறிவிக்கையின் வாயிலாக, இருநேர்வுகளில் எதிலும், அவ்வாறு பணித்தாலன்றி, அந்த மாநிலத்திற்குள் உள்ள தன்னாட்சி மாவட்டம் அல்லது தன்னாட்சி வட்டாரம் எதற்கும் பொருந்துறுதல் ஆகாது; மேலும், அந்த மாவட்ட மன்றம், அத்தகைய சட்டம் எதனையும் பொறுத்து அவ்வாறு பணிக்கும்போது, அந்தச் சட்டத்தினை அத்தகைய மாவட்டத்திற்கோ வட்டாரத்திற்கோ அவற்றின் பகுதி எதற்குமோ பொருந்துறச்செய்கையில், அந்த மாவட்ட மன்றம் தக்கதெனக் கருதுகிற விதிவிலக்குகளுக்கு அல்லது மாற்றமைவுகளுக்கு உட்பட்டு, அது செல்திறம் பெறும் எனப் பணிக்கலாம்;

(ஆ) ஆளுநர், பொது அறிவிக்கை வாயிலாக, இந்த உள்பத்தியின் (அ) கூறின் வகையங்கள் பொருந்துறாத மிசோரம் மாநிலச் சட்டமன்றச் சட்டம் எதுவும், அந்த மாநிலத்தில் உள்ள தன்னாட்சி மாவட்டத்திற்கு அல்லது தன்னாட்சி வட்டாரத்திற்குப் பொருந்துறாது என்றோ அந்த அறிவிக்கையில் அவர் குறித்துரைக்கும் விதிவிலக்குகளுக்கு அல்லது மாற்றமைவுகளுக்கு உட்பட்டு, அத்தகைய மாவட்டம் அல்லது வட்டாரம் அல்லது அதன் பகுதி எதற்கும் பொருந்துறும் என்றோ பணிக்கலாம்;

(இ) குடியரசுத்தலைவர், நாடாளுமன்றச் சட்டம் எதனையும் பொறுத்து, அறிவிக்கை வாயிலாக, மிசோரம் மாநிலத்தில் உள்ள ஒரு தன்னாட்சி மாவட்டத்திற்கு அல்லது தன்னாட்சி வட்டாரத்திற்கு அது பொருந்துறாது என்றோ அந்த அறிவிக்கையில் அவர் குறித்துரைக்கும் விதிவிலக்குகளுக்கு அல்லது மாற்றமைவுகளுக்கு உட்பட்டு, அத்தகைய மாவட்டத்திற்கு அல்லது வட்டாரத்திற்கு அல்லது அதன் பகுதி எதற்கும் பொருந்துறும் என்றோ பணிக்கலாம்; மேலும், அத்தகைய பணிப்புரை எதுவும் முன்மேவு செல்திறம் பெறுமாறு இடப்படலாம்.

13. தன்னாட்சி மாவட்டங்களைச் சார்ந்த மதிப்பீட்டு வரவு செலவினம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தனித்தனியாகக் காட்டப்படுதல் வேண்டும் :

ஒரு தன்னாட்சி மாவட்டத்தைச் சார்ந்ததாகவும் மாநிலத்தின் திரள் நிதியத்தில் செலுத்தப்பட அல்லது திரள்நிதியத்திலிருந்து செய்யப்பட வேண்டியதாகவும் உள்ள மதிப்பீட்டு வரவு செலவினம், முதலில் மாவட்ட மன்றத்தின் முன்பு கலந்தாய்வுக்கு வைக்கப்பட்டு, அத்தகைய கலந்தாய்வுக்குப் பின்பு, 202ஆம் உறுப்பின்படி மாநிலச்சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்பட வேண்டிய மாநில ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தனித்தனியாகக் காட்டப்படுதல் வேண்டும்.

14. தன்னாட்சி மாவட்டங்கள், தன்னாட்சி வட்டாரங்கள் ஆகியவற்றின் நிருவாகம் பற்றி விசாரணை செய்யவும், அறிக்கை அளிக்கவும் ஆணையத்தை அமர்த்துதல் :

(1) ஆளுநர், எச்சமயத்திலும், மாநிலத்திலுள்ள தன்னாட்சி மாவட்டங்கள், தன்னாட்சி வட்டாரங்கள் ஆகியவற்றின் நிருவாகம் தொடர்பாக இந்த இணைப்புப்பட்டியலில் 1ஆம் பத்தியின் (3)ஆம் உள்பத்தியின் (இ), (ஈ), (உ), (ஊ) ஆகிய கூறுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்பாடுகள் உள்ளடங்கலாக அவரால் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடு எதனையும் விசாரணை செய்து அறிக்கை அளிப்பதற்கென ஓர் ஆணையத்தை அமர்த்தலாம் அல்லது பொதுவியலாக அந்த மாநிலத்தில் உள்ள தன்னாட்சி மாவட்டங்கள், தன்னாட்சி வட்டாரங்கள் ஆகியவற்றின் நிருவாகம் பற்றியும், குறிப்பாக–

(அ) அத்தகைய மாவட்டங்களிலும் வட்டாரங்களிலும் கல்வி–மருத்துவ வசதிகளுக்கும் தொடர்பு இணைப்புகளுக்கும் செய்யப்படும் ஏற்பாடு,

(ஆ) அத்தகைய மாவட்டங்களை அல்லது வட்டாரங்களைப் பொறுத்து, புதிய அல்லது தனியுறு சட்டம் எதற்குமான தேவைப்பாடு,

(இ) மாவட்ட மற்றும் வட்டார மன்றங்களால் இயற்றப்பட்ட சட்டங்கள், விதிகள், ஒழுங்குறுத்தும்விதிகள் ஆகியவற்றின் நிருவாகம்

இவற்றைப் பற்றியும் விசாரணை செய்யவும் அவ்வப்போது அறிக்கை அளிக்கவும் ஓர் ஆணையத்தை அமர்த்தலாம்; மேலும், அத்தகைய ஆணையத்தால் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறையை வரையறை செய்யலாம்.

(2) அத்தகைய ஒவ்வோர் ஆணையத்தின் அறிக்கையும், [1][**********,] மாநில அரசாங்கம் அதன்மீது மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கை பற்றிய ஒரு விளக்கக் குறிப்புரையுடன், உரிய அமைச்சரால் மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

---

[1] 1995 ஆம் ஆண்டு அரசமைப்பு ஆறாம் இணைப்புப்பட்டியலுக்கான (திருத்தம்) சட்டத்தினால் விட்டுவிடப்பட்டது (42/1995).

(3) ஆளுநர், தம் அமைச்சர்களுக்கிடையே மாநில அரசாங்கத்தின் அலுவல்களைப் பகிர்ந்தொதுக்குகையில், தம்முடைய அமைச்சர்களில் ஒருவரை, அந்த மாநிலத்தில் உள்ள தன்னாட்சி மாவட்டங்கள், தன்னாட்சி வட்டாரங்கள் ஆகியவற்றின் நலப்பாட்டிற்கு, தனியுறு பொறுப்பு வகிப்பவராக அமர்த்தலாம்.

[1]**15. மாவட்ட மற்றும் வட்டார மன்றங்களின் செயல்களையும் தீர்மானங்களையும் அழித்தல் செய்தல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் :**

(1) ஆளுநர், எச்சமயத்திலேனும், ஒரு மாவட்ட அல்லது ஒரு வட்டார மன்றத்தின் ஒரு செயலோ தீர்மானமோ இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்கக்கூடும் என்றோ பொது ஒழுங்கமைதிக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியது என்றோ தெளிவுறக்காண்பாராயின், அத்தகைய செயலை அல்லது தீர்மானத்தை அவர் அழித்தறவு செய்யலாம் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்; மேலும், அத்தகைய செயல் செய்யப்படுவதையோ தொடர்ந்து செய்யப்படுவதையோ அத்தகைய தீர்மானத்தைச் செல்திறப்படுத்துவதையோ தடையுறுத்துவதற்கு (மன்றம் தற்காலிகமாக நிறுத்திவைப்பதும், அந்த மன்றத்திடம் உற்றமைந்திருக்கும் அல்லது அதனால் செலுத்தப்படுவதாகும் அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் தாமே மேற்கொள்ளுவதும் உள்ளடங்கலாக) தாம் தேவையெனக் கருதுகிற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

(2) இந்தப் பத்தியின் (1)ஆம் உள்பத்தியின்படி ஆளுநரால் இடப்பட்ட ஆணை எதுவும், அதற்கான காரணங்களுடன், இயன்ற அளவு விரைவில், மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மேலும், அந்த ஆணை, அவரால் பின்னறவு செய்யப்பட்டாலன்றி, அந்த ஆணை அவ்வாறு இடப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு மாதக் காலஅளவுக்குத் தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வரும்:

வரம்புரையாக: அத்தகைய ஆணை தொடர்ந்து செல்லாற்றலில் இருப்பதற்கு ஒப்பேற்பளிக்கும் ஒரு தீர்மானம், மாநிலச் சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டாலும் நிறைவேற்றப்படுந்தோறும், அந்த ஆணை ஆளுநரால் நீக்கறவு செய்யப்பட்டாலன்றி, இந்தப் பத்தியின்படி அது பிறவாறு செயற்படுவது அற்றுபோயிருந்திருக்கும் தேதியிலிருந்து மேலும் பன்னிரெண்டு மாதக் காலஅளவுக்குத் தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வரும்.

[2]**16. ஒரு மாவட்ட அல்லது வட்டார மன்றத்தைக் கலைத்தல் :**

(1) இந்த இணைப்புப்பட்டியலின் 14ஆம் பத்தியின்படி அமர்த்தப்பட்ட ஓர் ஆணையத்தின் பரிந்துரையின்மீது, ஆளுநர், பொது அறிவிக்கை வாயிலாக, ஒரு மாவட்ட அல்லது வட்டார மன்றத்தைக் கலைப்பதற்கு ஆணையிடலாம்; மேலும்—

(அ) மன்றத்தின் மறுஅமைப்புக்காகப் புதியதொரு பொதுத் தேர்தல் உடனடியாக நடத்தப்படுதல் வேண்டும் என்று பணிக்கலாம்; அல்லது

(ஆ) மாநிலச் சட்டமன்றத்தின் முன்ஒப்பேற்புக்கு உட்பட்டு, அந்த மன்றத்தின் அதிகாரத்தின்கீழுள்ள வரையிடத்தின் நிருவாகத்தைத் தாமே மேற்கொள்ளலாம் அல்லது பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலஅளவுக்கு, அத்தகைய வரையிடத்தின் நிருவாகத்தை, மேற்சொன்ன பத்தியின்கீழ் அமர்த்தப்பட்டுள்ள ஆணையத்தின்கீழோ தம்மால் தக்கதெனக் கருதப்படும் பிற குழுமம் எதன்கீழுமோ விட்டுவைக்கலாம்:

---

1. திரிபுரா, மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கு ஆறாம் இணைப்புப்பட்டியல் பொருந்துறுமாறு, 15 ஆம் பத்தியானது, 1988 ஆம் ஆண்டு அரசமைப்பு (திருத்தம்) சட்டத்தின் (67/1988) 2ஆம் பிரிவினால் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது:—
(அ) தொடக்கப் பத்தியில் "மாநிலச் சட்டமன்றத்தால்" என்ற சொற்களுக்கு மாற்றாக "அவரால்" என்ற சொற்கள் அமைக்கப்படும்;
(ஆ) வரம்புரை விட்டுவிடப்படும்;

2. திரிபுரா, மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கு ஆறாம் இணைப்புப்பட்டியல் பொருந்துறுமாறு, 16 ஆம் பத்தியானது, 1988 ஆம் ஆண்டு அரசமைப்பு (திருத்தம்) சட்டத்தின் (67/1988) 2ஆம் பிரிவின்படி பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது:—
(அ) (1)ஆம் உள்பத்தியின் (ஆ) கூறில் "மாநிலச் சட்டமன்றத்தின் முன் ஒப்பேற்புக்கு உட்பட்டு" என்ற சொற்களும், இரண்டாம் வரம்புரையும் விட்டுவிடப்படும்;
(ஆ) (3)ஆம் உள்பத்திக்கு மாற்றாக, பின்வரும் உள்பத்தி அமைக்கப்படும்:—
"(3) இந்தப் பத்தியின் (1)ஆம் உள்பத்தியின்படி அல்லது (2)ஆம் உள்பத்தியின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அதற்கான காரணங்களுடன் மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்".

வரம்புரையாக: இந்தப் பத்தியின் (அ) கூறின்படி ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கும்போது, ஆளுநர், புதியதொரு பொதுத் தேர்தல் வாயிலாக அந்த மன்றத்தை மறுஅமைப்பு செய்யும் வரையில், தொடர்புள்ள வரையிடத்தின் நிருவாகம் பொறுத்து, இந்தப் பத்தியின் (ஆ) கூறில் சுட்டப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்ளலாம்:

மேலும் வரம்புரையாக: மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு தம் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு, மாவட்ட மன்றத்திற்கு அல்லது, நேர்வுக்கேற்ப, வட்டார மன்றத்திற்கு ஒரு வாய்ப்பளிக்காமல், இந்தப் பத்தியின் (ஆ) கூறின்படி நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படுதல் ஆகாது.

(2) ஒரு தன்னாட்சி மாவட்டத்தின் அல்லது வட்டாரத்தின் நிருவாகத்தை இந்த இணைப்புப்பட்டியலின் வகையங்களுக்கு இணங்க நடத்த இயலாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று ஆளுநர், எச்சமயத்திலேனும், தெளிவுறக்காண்பாராயின், அவர், பொது அறிவிக்கை வாயிலாக, அந்த மாவட்ட மன்றத்திடம் அல்லது, நேர்வுக்கேற்ப, வட்டார மன்றத்திடம் உற்றமைந்துள்ள செயற்பணிகள் அல்லது அதனால் செலுத்தப்படத்தக்க அதிகாரங்கள் அனைத்தையுமோ அவற்றில் எதனையுமோ ஆறு மாதத்திற்கு மேற்படாத ஒரு காலஅளவுக்குத் தாமே மேற்கொள்ளவோ இதற்கென அவர் குறித்துரைக்கும் நபரால் அல்லது அதிகாரஅமைப்பால் அத்தகைய செயற்பணிகள் அல்லது அதிகாரங்கள் செலுத்தத்தக்கவை என விளம்பவோ செய்யலாம்:

வரம்புரையாக: ஆளுநர், தாம் பிறப்பித்த முதல் ஆணையின் செயற்பாட்டை மேலும் ஓர் ஆணையின் அல்லது ஆணைகளின் வழி, ஒவ்வொரு நிகழ்விலும் ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலஅளவுக்கு நீட்டிக்கலாம்.

(3) இந்தப் பத்தியின் (2) ஆம் உள்பத்தியின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அதற்கான காரணங்களுடன், மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்: மேலும், அந்த ஆணை இடப்பட்ட பின்பு மாநிலச் சட்டமன்றம் முதலில் அமருகிற தேதியிலிருந்து முப்பது நாட்கள் கழிவுறுவதன்மேல், அந்தக் காலஅளவு கழிவுறுவதற்கு முன்பே அதற்கு மாநிலச் சட்டமன்றத்தால் ஒப்பேற்பளிக்கப்பட்டிருந்தாலன்றி, அந்த ஆணையின் செயற்பாடு அற்றுப்போய்விடும்.

17. தன்னாட்சி மாவட்டங்களில் தேர்தல் தொகுதிகளை உருவாக்குகையில் அந்த மாவட்டங்களிலிருந்து வரையிடங்களை நீக்கிவிடுதல் :

அசாம் அல்லது மேகாலயா அல்லது திரிபுரா அல்லது மிசோரம் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்தல் நடத்துவது பொறுத்து, ஆளுநர், ஆணையின்வழி, நேர்வுக்கேற்ப, அசாம் அல்லது மேகாலயா அல்லது திரிபுரா அல்லது மிசோரம் மாநிலத்தில் உள்ள ஒரு தன்னாட்சி மாவட்டத்திற்குள் அமைந்த வரையிடம் எதுவும், அத்தகைய மாவட்டம் ஒன்றுக்குப் பேரவையில் ஒதுக்கப்பட்ட ஒரு பதவியிடத்தை அல்லது பதவியிடங்களை நிரப்புவதற்கான தேர்தல் தொகுதி எதன் பகுதியாகவும் அமைதல் ஆகாது என்றும், ஆனால் அந்த மாவட்டத்திற்கென ஒதுக்கப்படாதது என அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் பேரவைப் பதவியிடத்தை அல்லது பதவியிடங்களை நிரப்புவதற்கான ஒரு தேர்தல் தொகுதியின் பகுதியாக அமைதல் வேண்டும் என்றும் விளம்பலாம்.

[1][**வரம்புரையாக:** இந்தப் பத்தியிலுள்ள எதுவும், போடாலாந்து ஆட்சிநிலவரையிடப் பகுதிகள் மாவட்டத்திற்குப் பொருந்தாது.]

---

[1] 2003 ஆம் ஆண்டு அரசமைப்பின் ஆறாம் இணைப்புப்பட்டியலுக்கான (திருத்தம்) சட்டத்தினால் (44/2003) புகுத்தப்பட்டது

[1][18. * * * *]

19. மாறும் இடைக்காலத்திற்கான வகையங்கள் :

(1) இந்த அரசமைப்பின் தொடக்கநிலைக்குப் பின்பு, ஆளுநர், கூடிய விரைவில், மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு தன்னாட்சி மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட மன்றத்தை இந்த இணைப்புப்பட்டியலின்படி அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்; மேலும், ஒரு தன்னாட்சி மாவட்டத்திற்கு, மாவட்ட மன்றம் அமைக்கப்படுகிற வரையில், அத்தகைய மாவட்டத்தின் நிருவாகம் ஆளுநரிடம் உற்றமையும்; இந்த இணைப்புப்பட்டியலின் மேலே கண்ட வகையங்களுக்கு மாற்றாகப் பின்வரும் வகையங்கள் அத்தகைய மாவட்டத்தில் உள்ள வரையிடங்களின் நிருவாகத்திற்குப் பொருந்துறும்:—

(அ) ஆளுநர், பொது அறிவிக்கை வாயிலாகப் பணித்தாலன்றி, நாடாளுமன்றச் சட்டம் அல்லது மாநிலச் சட்டமன்றச் சட்டம் எதுவும், அத்தகைய வரையிடம் எதற்கும் பொருந்துறுதல் ஆகாது; ஆளுநர், சட்டம் எதனையும் பொறுத்து அவ்வாறு பணிப்புரை இடும்போது, அத்தகைய வரையிடத்திற்கு அல்லது குறித்த பகுதி எதற்கும் அந்தச் சட்டத்தைப் பொருந்துறச் செய்கையில், அவர் தாம் கருதுகிற விதிவிலக்குகளுக்கு அல்லது மாற்றமைவுகளுக்கு உட்பட்டு, அது செல்திறம் பெறும் எனப் பணிக்கலாம்;

(ஆ) அத்தகைய வரையிடம் எதன் அமைதிக்காகவும் நல்லாட்சிக்காகவும் ஆளுநர் ஒழுங்குறுத்தும்விதிகளைச் செய்யலாம்; மேலும், அவ்வாறு வகுக்கப்பட்ட ஒழுங்குறுத்தும்விதிகள் எவையும், அத்தகைய வரையிடத்திற்கு அப்போதைக்குப் பொருந்துறுவதான நாடாளுமன்றச் சட்டம் அல்லது மாநிலச் சட்டமன்றச் சட்டம் எதனையும் அல்லது நிலவுறும் சட்டம் எதனையும் நீக்கறவு செய்யலாம் அல்லது திருத்தம் செய்யலாம்.

(2) இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின் (அ) கூறின்படி ஆளுநரால் இடப்படுகிற பணிப்புரை எதுவும், முன்மேவு செல்திறம் பெறுமாறு இடப்படலாம்.

(3) இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின் (ஆ) கூறின்படி வகுக்கப்பட்ட ஒழுங்குறுத்தும் விதிகள் அனைத்தும் உடனடியாக குடியரசுத்தலைவருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்; மேலும், அவரால் ஏற்பிசைவளிக்கப்படும் வரையில், அவை செல்திறம் பெறுவதில்லை.

[2][(4) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பிறகு கூடியவிரைவில், அசாமில் உள்ள போடோலாந்து ஆட்சிநிலவரை வரையிடங்கள் மாவட்டத்திற்கான இடைக்கால நிர்வாக மன்றம், உடன்பாட்டு விதிக்குறிப்பில் கையொப்பமிடப்பட்டவர்கள் உள்ளடங்கலாக, போடோ இயக்கத் தலைவர்களிடையேயிருந்து ஆளுநரால் அமைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அந்த வரையிடத்திலுள்ள பழங்குடியினத்தவர்கள் அல்லாதவர்களுக்கு போதிய சார்பாற்றத்திற்கு வகை செய்தல் வேண்டும் :

வரம்புரையாக: இடைக்கால மன்றமானது, ஆறு மாத காலஅளவிற்கானதாக இருக்கும், அக்காலஅளவின்போது மன்றத்திற்கு தேர்தல் நடத்த முனைந்து முயற்சிகள் செய்யப்படுதல் வேண்டும்.

விளக்கம்: இந்த உள்பத்தியின் நோக்கங்களுக்காக உடன்பாட்டு விதிக்குறிப்பு என்பது,— இந்திய அரசு, அசாம் அரசு, மற்றும் போடோ விடுதலைப்புலிகள் ஆகியவர்களுக்கிடையே 2003, பிப்ரவரி 10 ஆம் நாளன்று கையொப்பமிடப்பட்ட விதிக்குறிப்பு என்று பொருள்படும்.]

---

1. 1971 ஆம் ஆண்டு வடகிழக்கு வரையிடங்கள் (மறு அமைப்பு) சட்டத்தின் 71(i) பிரிவினாலும் எட்டாம் இணைப்புப் பட்டியலினாலும் (21–1–1972 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.

2. 2003 ஆம் ஆண்டு அரசமைப்பின் ஆறாம் இணைப்புப்பட்டியலுக்கான (திருத்தம்) சட்டத்தினால் (44/2003) புகுத்தப்பட்டது.

20. பழங்குடியினர் வரையிடங்கள் :

(1) கீழ்க்கண்ட அட்டவணையிலுள்ள I, II, IIஅ, III ஆகிய பகுதிகளில் குறித்துரைக்கப் பட்டுள்ள வரையிடங்கள், முறையே அசாம் மாநிலம், மேகாலயா மாநிலம், திரிபுரா மாநிலம், மிசோரம் மாநிலம் ஆகியவற்றில் உள்ள பழங்குடியினர் வரையிடங்களாக இருக்கும்.

(2) கீழ்க்கண்ட அட்டவணையின் I ஆம் பகுதியில், II ஆம் பகுதியில் அல்லது IIIஆம் பகுதியில், மாவட்டம் பற்றிய சுட்டுகை எதுவும், 1971 ஆம் ஆண்டு வடகிழக்கு வரையிடங்கள் (மறு அமைப்பு) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (ஆ) கூறின்படி குறித்திடப்பட்ட நாளை ஒட்டிமுன்பு நிலவிவந்த அதே பெயரை உடைய தன்னாட்சி மாவட்டத்திற்குள் உள்ளடங்கியிருக்கும் ஆட்சிநிலவரைகள் பற்றிய சுட்டுகை எனப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும் :

வரம்புரையாக: இந்த இணைப்புப்பட்டியலின் 3 ஆம் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின் (உ), (ஊ) ஆகிய கூறுகள், 4 ஆம் பத்தி, 5ஆம் பத்தி, 6 ஆம் பத்தி, 8 ஆம் பத்தியின் (2) ஆம் உள்பத்தி, (3) ஆம் உள்பத்தியின் (அ), (ஆ), (ஈ) ஆகிய கூறுகள், (4) ஆம் உள்பத்தி, 10 ஆம் பத்தியின் (2) ஆம் உள்பத்தியின் (ஈ) கூறு ஆகியவை பொறுத்து, ஷில்லாங் நகராட்சியில் உள்ளடங்கியிருக்கும் வரையிடத்தின் பகுதி எனவும் காஸிக் குன்றுகள் மாவட்டத்திற்குள் உள்ளதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

(3) கீழ்க்கண்ட அட்டவணையில் IIஅ பகுதியில் "திரிபுரா பழங்குடியினர் வரையிடங்கள் மாவட்டம்" என்னும் சுட்டுகை, 1978 ஆம் ஆண்டு திரிபுரா பழங்குடியினர் வரையிடங்கள் தன்னாட்சி மாவட்ட மன்றச் சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பழங்குடியினர் வரையிடங்களை உள்ளடக்கிய ஆட்சிநிலவரையைச் சுட்டுவதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

அட்டவணை

பகுதி I

1. வட கச்சார் குன்றுகள் மாவட்டம்.
2. கார்பி ஆங்குலாங்கு குன்றுகள் மாவட்டம்.
[1][3. போடோலாந்து ஆட்சிநிலவரையிடப் பகுதிகள் மாவட்டம்]

பகுதி II

1. காஸிக் குன்றுகள் மாவட்டம்.
2. ஜயந்தியா குன்றுகள் மாவட்டம்.
3. காரோ குன்றுகள் மாவட்டம்.

பகுதி IIA

திரிபுரா பழங்குடியினர் வரையிடங்கள் மாவட்டம்.

பகுதி III

1. சக்மா மாவட்டம்.
2. மாரா மாவட்டம்.
3. லயீ மாவட்டம்.

---

[1] 2003 ஆம் ஆண்டு அரசமைப்பின் ஆறாம் இணைப்புப்பட்டியல் (திருத்தம்) சட்டத்தினால் (44/2003) புகுத்தப்பட்டது.

20அ. மிசோ மாவட்ட மன்றத்தைக் கலைத்தல் :

(1) இந்த இணைப்புப்பட்டியலில் எது எவ்வாறிருப்பினும், குறித்திடப்பட்ட தேதியை ஒட்டிமுன்பு நிலவிவந்த (இதில் இதன்பின்பு மிசோ மாவட்ட மன்றம் எனச் சுட்டப்படும்) மிசோ மாவட்டத்தினுடைய மாவட்ட மன்றம் கலைக்கப்பட்டு இல்லாததாகிவிடும்.

(2) மிசோரம் ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் ஆளுகையர் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ அவற்றில் எதற்குமோ ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆணைகளின்வழி வகைசெய்யலாம்:—

(அ) மிசோ மாவட்ட மன்றத்தின் (அதனால் செய்யப்பட்ட ஒப்பந்தம் எதன்படியுமான உரிமைகளும் கடப்பாடுகளும் உள்ளடங்கலாக), சொத்திருப்புகளையும் உரிமைகளையும் கடப்பாடுகளையும் முழுவதுமாகவோ பகுதியாகவோ ஒன்றியத்திற்கு அல்லது பிற அதிகாரஅமைப்பு எதற்கும் மாற்றல் செய்தல்;

(ஆ) மிசோ மாவட்ட மன்றம் ஒரு தரப்பினராக உள்ள சட்ட நடவடிக்கை எதிலும் மிசோ மாவட்ட மன்றத்திற்கு மாற்றாக ஒன்றியம் அல்லது பிற அதிகாரஅமைப்பு எதனையும் ஒரு தரப்பினராக அமைத்தல் அல்லது சேர்த்தல்;

(இ) மிசோ மாவட்ட மன்றத்தில் பணிபுரிபவர்கள் எவரும், ஒன்றியத்திற்கு அல்லது பிற அதிகாரஅமைப்பு எதற்கும் மாற்றல் செய்யப்படுதல் அல்லது அதனால் மீண்டும் வேலைக்கமர்த்தப்படுதல் அவ்வாறு மாற்றல் செய்ததன் அல்லது மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்டதன் பின்பு அத்தகைய பணிபுரிபவர்களுக்குப் பொருந்துறுவதாகும் பணிவரையுரைகள் மற்றும் பணிவரைக்கட்டுகள்;

(ஈ) மிசோ மாவட்ட மன்றத்தினால் இயற்றப்பட்டு, அது கலைக்கப்பட்டதை ஒட்டிமுன்புவரை செல்லாற்றலில் இருந்த சட்டங்கள், அத்தகைய சட்டங்கள் தகுதிறம்வாய்ந்த சட்டமன்றத்தினால் அல்லது தகுதிறம்வாய்ந்த பிற அதிகாரஅமைப்பினால் மாற்றமோ நீக்கறவோ திருத்தமோ செய்யப்படும் வரையில், நீக்கறவு அல்லது திருத்தம் செய்தல் வாயிலாக இதற்கென ஆளுகையர் செய்யும் தழுவமைவுகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டுத் தொடர்ந்து இருந்து வருதல்:

(உ) ஆளுகையர் தேவையெனக் கருதுகிற சார்வுறு, விளைவுறு மற்றும் துணைவுறு பொருட்பாடுகள்.

விளக்கம்:—இந்த இணைப்புப்பட்டியலின் இந்தப் பத்தியிலும், 20ஆ பத்தியிலும் உள்ள "குறித்திடப்பட்ட தேதி" என்னும் சொற்றொடர், 1963 ஆம் ஆண்டு ஒன்றியத்து ஆட்சிநிலவரைகள் அரசாங்கச் சட்டத்தின் வகையங்களின்படியும், அவற்றிற்கு இணங்கியவாறும் மிசோரம் ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் சட்டமன்றப் பேரவை முறையாக அமைக்கப்பட்ட தேதி எனப் பொருள்படும்.

20ஆ மிசோரம் ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் இருந்த தன்னாட்சி வட்டாரங்கள் தன்னாட்சி மாவட்டங்களாக இருத்தலும், அதற்கு விளைவுறுதலான மாறும் இடைக்கால வகையங்களும்.

(1) இந்த இணைப்புப்பட்டியலில் எது எவ்வாறிருப்பினும்—

(அ) குறித்திடப்பட்ட தேதியை ஒட்டிமுன்பு மிசோரம் ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் நிலவிவந்த ஒவ்வொரு தன்னாட்சி வட்டாரமும், அந்தத் தேதியன்றும்

அதுமுதற்கொண்டும் அந்த ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் (இதன்பின்பு நேரிணையான புதிய மாவட்டம் எனச் சுட்டப்படும்) ஒரு தன்னாட்சி மாவட்டமாக இருக்கும்; மேலும், அதன் ஆளுகையர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆணைகளின்வழி, இந்தக் கூறின் வகையங்களைச் செல்திறப்படுத்தத் தேவையான விளைவுறு திருத்தங்கள் இந்த இணைப்புப்பட்டியலின் (அந்தப் பத்திக்குப் பிற்சேர்க்கையாகவுள்ள அட்டவணையின் IIIஆம் பகுதி உள்ளடங்கலாக) 20 ஆம் பத்தியில் செய்யப்பட வேண்டும் எனப் பணிக்கலாம்; அதன்பின், மேற்சொன்ன பத்தியும் மேற்சொன்ன IIIஆம் பகுதியும் அதற்கிணங்கத் திருத்தப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படும்;

(ஆ) குறித்திடப்பட்ட தேதியை ஒட்டிமுன்பு மிசோரம் ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் நிலவிவந்த ஒரு தன்னாட்சி வட்டாரத்தின் (இதில் இதன்பின்பு நிலவுறும் வட்டார மன்றம் எனச் சுட்டப்படும்) வட்டார மன்றம் ஒவ்வொன்றும், அந்தத் தேதியன்றும் அதுமுதற்கொண்டும், நேரிணையான புதிய மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட மன்றம் முறையாக அமைக்கப்படுகிற வரையில், அந்த மாவட்டத்தின் (இதில் இதன்பின்பு நேரியணையான புதிய மாவட்ட மன்றம் எனச் சுட்டப்படும்) மாவட்ட மன்றம் எனக் கொள்ளப்படும்.

(2) நிலவுறும் வட்டார மன்றத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் தேர்ந்தெடுக்கப்பெற்றிருப்பினும் அல்லது நியமனஞ்செய்யப்பெற்றிருப்பினும், நேரிணையான புதிய மாவட்ட மன்றத்திற்கு அவர் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கிறார் அல்லது நியமனஞ்செய்யப்பெற்றிருக்கிறார் எனக் கொள்ளப்படுவார்; மேலும், நேரிணையான புதிய மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட மன்றம் இந்த இணைப்புப்பட்டியலின்படி முறையாக அமைக்கப்படுகிற வரையில், அவர் பதவி வகிப்பார்.

(3) நேரிணையான புதிய மாவட்ட மன்றத்தினால் இந்த இணைப்புப்பட்டியலின் 2ஆம் பத்தியின் (7) ஆம் உள்பத்தியின்படியும், 4ஆம் பத்தியின் (4)ஆம் உள்பத்தியின்படியும் விதிகள் வகுக்கப்படுகிற வரையில், நிலவுறும் வட்டார மன்றத்தினால் மேற்சொன்ன வகையங்களின்படி வகுக்கப்பட்டு, குறித்திடப்பட்ட தேதியை ஒட்டிமுன்பு செல்லாற்றலில் இருந்த விதிகள், மிசோரம் ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் ஆளுகையரால் அவற்றில் செய்யப்படுகிற தழுவமைவுகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு, நேரிணையான புதிய மாவட்ட மன்றம் தொடர்பாகச் செல்திறம் உடையன ஆகும்.

20ஆ பத்திக்குப் பின்பு, பின்வரும் பத்தி, திரிபுரா, மிசோரம் ஆகிய மாநிலங்களுக்குப் பொருந்துறுமாறு, ஆறாம் இணைப்புப்பட்டியலில், 1988 ஆம் ஆண்டு அரசமைப்பு (திருத்தம்) சட்டத்தின் (67/1988) 2ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது :–

"20ஆஆ. ஆளுநர் தமது பதவிப் பணிகளை ஆற்றுகையில் தமது உளத்தேர்வுப்படியான அதிகாரங்களைச் செலுத்துதல் :

ஆளுநர் இந்த இணைப்புப்பட்டியலின் 1ஆம் பத்தியின் (2), (3) ஆகிய உள்பத்திகள் (2)ஆம் பத்தியின் (1), (7) ஆகிய உள்பத்திகள், (3)ஆம் பத்தியின் (3)ஆம் உள்பத்தி, 4ஆம் பத்தியின் (4)ஆம் உள்பத்தி, 5ஆம் பத்தி, 6ஆம் பத்தியின் (1)ஆம் உள்பத்தி, 7ஆம் பத்தியின் (2)ஆம் உள்பத்தி, 9ஆம் பத்தியின் (3)ஆம் உள்பத்தி, 14ஆம் பத்தியின் (1)ஆம் உள்பத்தி, 15ஆம் பத்தியின் (1)ஆம் உள்பத்தி, 16ஆம் பத்தியின் (1), (2) ஆகிய உள்பத்திகள் ஆகியவற்றின்படி தனது பதவிப்பணிகளை ஆற்றுகையில், அமைச்சரவையும் தாம் தேவையெனக் கருதினால் தொடர்புடைய மாவட்ட மன்றங்களையும் அல்லது வட்டார மன்றங்களையும் கலந்தாய்வு செய்தபின்பு, தம் உளத்தேர்வின்படி தேவையென தாம் கருதுகிற நடவடிக்கையை எடுப்பார்."

(4) மிசோரம் ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் ஆளுகையர், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ அவற்றில் எதற்குமோ ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆணைகளின் வழிவகைசெய்யலாம்:—

(அ) நிலவுறும் வட்டார மன்றத்தின் (அதனால் செய்யப்பட்ட ஒப்பந்தம் எதன்படியுமான உரிமைகளும் கடப்பாடுகளும் உள்ளடங்கலாக) சொத்திருப்புகளையும் உரிமைகளையும் கடப்பாடுகளையும் முழுவதுமாகவோ பகுதியாகவோ, நேரிணையான புதிய மாவட்ட மன்றத்திற்கு மாற்றல் செய்தல்;

(ஆ) நிலவுறும் வட்டார மன்றம் ஒரு தரப்பினராக உள்ள சட்ட நடவடிக்கையில், நிலவுறும் வட்டார மன்றத்திற்கு மாற்றாக நேரிணையான புதிய மாவட்ட மன்றத்தை ஒரு தரப்பினராக அமைத்தல்;

(இ) நிலவுறும் வட்டார மன்றத்தில் பணிபுரிபவர்கள் எவரும், நேரிணையான புதிய மாவட்ட மன்றத்திற்கு மாற்றல் செய்யப்படுதல் அல்லது அதனால் மீண்டும் வேலைக்கமர்த்தப்படுதல்; அவ்வாறு மாற்றல் செய்ததன் அல்லது மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்டதன் பின்பு அத்தகைய பணிபுரிபவர்களுக்குப் பொருந்துறுவதாகும் பணிவரையுரைகள் மற்றும் பணிவரைக்கட்டுகள்;

(ஈ) நிலவுறும் வட்டார மன்றத்தினால் இயற்றப்பட்டு குறித்திடப்பட்ட தேதியை ஒட்டி முன்பு செல்லாற்றலில் இருந்த சட்டங்கள்; அத்தகைய சட்டங்கள் தகுதிறம்வாய்ந்த சட்டமன்றத்தினால் அல்லது தகுதிறம்வாய்ந்த பிற அதிகாரஅமைப்பினால் மாற்றமோ நீக்கறவோ திருத்தமோ செய்யப்படும் வரையில், நீக்கறவு அல்லது திருத்தம் செய்தல் வாயிலாக இதற்கென ஆளுகையர் செய்யும் தழுவமைவுகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு, தொடர்ந்து இருந்து வருதல்;

(உ) ஆளுகையர் தேவையெனக் கருதுகிற சார்வுறு, விளைவுறு மற்றும் துணைவுறு பொருட்பாடுகள்.

[1][20ஆஅ. ஆளுநர் தனது பதவிப்பணிகளை ஆற்றுகையில் தன் உளத்தேர்வின் படியான அதிகாரங்களைச் செலுத்துதல் :

ஆளுநர் இந்த இணைப்புப்பட்டியலின் 1ஆம் பத்தியின் (2), (3) ஆகிய உள்பத்திகள் (2)ஆம் பத்தியின் (1), (6) ஆகிய உள்பத்திகள் முதல் வரம்புரை நீங்கலாக (6அ) உள்பத்தி, (7)ஆம் உள்பத்தி, 3ஆம் பத்தியின் (3)ஆம் உள்பத்தி, 4ஆம் பத்தியின் (4)ஆம் உள்பத்தி, 5ஆம் பத்தி, 6ஆம் பத்தியின் (1)ஆம் உள்பத்தி, 7ஆம் பத்தியின் (2)ஆம் உள்பத்தி, 8ஆம் பத்தியின் (4)ஆம் உள்பத்தி, 10ஆம் பத்தியின் (3)ஆம் உள்பத்தி, 14ஆம் பத்தியின் (1)ஆம் உள்பத்தி, 15ஆம் பத்தியின் (1)ஆம் உள்பத்தி, 16ஆம் பத்தியின் (1), (2) ஆகிய உள்பத்திகள் ஆகியவற்றின்படி தனது பதவிப்பணிகளை ஆற்றுகையில், அமைச்சரவையும் வடக்கு கச்சாக்குன்றுகள் தன்னாட்சி மன்றத்தையும் அல்லது நேர்வுக்கேற்ப கர்பி ஆங்குலாங்கு தன்னாட்சி மன்றத்தையும் கலந்தாய்வு செய்தபிறகு தன் உளத்தேர்வுக்கேற்ப தான் தேவையென கருதுகிற நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.]

---

1. 1995 ஆம் ஆண்டு அரசமைப்பின் ஆறாம் இணைப்புப் பட்டியலுக்கான (திருத்தம்) சட்டத்தினால் (42/1995) புகுத்தப்பட்டது.

20இ. பொருள்கோள் :

இதற்கெனச் செய்யப்பட்ட வகையம் எதற்கும் உட்பட்டு, இந்த இணைப்புப்பட்டியலின் வகையங்கள் மிசோரம் ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்குப் பொருந்துறுகையில்—

(1) ஆளுநரையும் மாநில அரசாங்கத்தையும் பற்றிய சுட்டுகைகள், 239ஆம் உறுப்பின்படி அமர்த்தப்பெற்ற ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் ஆளுகையரைப் பற்றிய சுட்டுகைகளாக இருந்தாற்போன்றும் ("மாநில அரசாங்கம்" என்னும் சொற்றொடரில் தவிர) மாநிலம் பற்றிய சுட்டுகைகள், மிசோரம் ஒன்றியத்து ஆட்சிநிலவரை பற்றிய சுட்டுகைகளாக இருந்தாற்போன்றும், மாநிலச் சட்டமன்றம் பற்றிய சுட்டுகைகள் மிசோரம் ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் சட்டமன்றப்பேரவை பற்றிய சுட்டுகைகளாக இருந்தாற்போன்றும்,

(2) (அ). (4) ஆம் பத்தியின் (5)ஆம் உள்பத்தியில் தொடர்புடைய மாநில அரசாங்கத்துடன் கலந்தாய்வு செய்வதற்கான வகையம் விட்டுவிடப்பட்டிருந்தாற்போன்றும்,

(ஆ). (6) ஆம் பத்தியின் (2)ஆம் உள்பத்தியில் "மாநிலத்தின் ஆட்சி அதிகாரம் அளாவுகின்ற" என்னும் சொற்களுக்கு மாற்றாக, "மிசோரம் ஒன்றியத்து ஆட்சி நிலவரையின் சட்டமன்றப்பேரவை சட்டங்களை இயற்ற அதிகாரம் உடைய" என்னும் சொற்கள் அமைக்கப்பட்டிருந்தாற்போன்றும்,

(இ) 13ஆம் பத்தியில் "202ஆம் உறுப்பின்படி" என்னும் இலக்கங்களும் சொற்களும் விட்டுவிடப்பட்டிருந்தாற் போன்றும்

செல்திறம் உடையன ஆகும்.

21. இணைப்புப்பட்டியலின் திருத்தம் :

(1) இந்த இணைப்புப்பட்டியலின் வகையங்களில் எதனையும் சேர்த்தல், மாறுதல்செய்தல் அல்லது நீக்கறவு செய்தல் வாயிலாக, நாடாளுமன்றம் சட்டத்தினால் அவ்வப்போது திருத்தம் செய்யலாம்; மேலும், இந்த இணைப்புப்பட்டியல் அவ்வாறு திருத்தம் செய்யப்படுகிறபோது இந்த அரசமைப்பில் இந்த இணைப்புப்பட்டியல் பற்றிய சுட்டுகை எதுவும், அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட இணைப்புப்பட்டியல் பற்றிய சுட்டுகையாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) இந்தப் பத்தியின் (1)ஆம் உள்பத்தியில் குறிப்பிடப்பட்ட சட்டம் எதுவும், 368ஆம் உறுப்பினைப் பொறுத்தவரை, இந்த அரசமைப்பின் ஒரு திருத்தம் எனக் கொள்ளப்படுதல் ஆகாது.

ஏழாம் இணைப்புப்பட்டியல்

[246 ஆம் உறுப்பு]

பட்டியல் I—ஒன்றியத்துப்பட்டியல்

1. இந்தியாவிற்கும் அதன் ஒவ்வொரு பகுதிக்குமான புறக்காப்பு புறக்காப்பிற்கான முன்னேற்பாடும், போர்க்காலங்களில் போரை நடத்துவதற்கும் போர் முடிவுற்ற பின்பு திறமான படைக்கலைப்பிற்கும் உதவுகின்ற செயல்கள் அனைத்தும் உள்ளடங்கலாக.

2. கடல், தரை மற்றும் வான் படைகள்; ஒன்றியத்தின் பிற ஆயுதப்படைகள்.

2அ. மாநிலம் எதிலும் குடியியல் அதிகாரத்திற்கு உதவும் வகையில், ஒன்றியத்து ஆயுதப்படை எதனையுமோ ஒன்றியத்தின் கட்டாள்கைக்கு உட்பட்ட பிற படை எதனையுமோ அதன் படைப்பிரிவு அல்லது உறுப்பு எதனையுமோ செலுத்துதல்; அவ்வாறு செலுத்தப்பட்டிருக்குங்கால், அத்தகைய படைகளின் உறுப்பினர்களுக்குள்ள அதிகாரங்கள், அதிகாரவரம்பு, சிறப்புரிமைகள் மற்றும் பொறுப்புடைவுகள்.

3. பாளைய வரையிடங்களை வரையறுத்தல், அத்தகைய வரையிடங்களில் உள்வரைத் தன்னாட்சியையும், அத்தகைய வரையிடங்களுக்குள்ளே பாளைய அதிகாரஅமைப்புகளையும் அமைத்தல்; அவற்றின் அதிகாரங்கள்; மற்றும் அத்தகைய வரையிடங்களில் (வாடகைக் கட்டுப்பாடு உள்ளடங்கலாக) வீட்டுவசதியினை ஒழுங்குறுத்தல்.

4. கடல், தரை மற்றும் வான் படைகள் தொடர்பான பணிமங்கள்.

5. ஆயுதங்கள், சுடுகருவிகள், படைத்தளவாடங்கள் மற்றும் வெடிபொருள்கள்.

6. அணுவாற்றல் மற்றும் அதனை உண்டாக்குவதற்குத் தேவையான கனிம வள ஆதாரங்கள்.

7. நாட்டின் புறக்காப்பிற்கு அல்லது போர் நடத்துவதற்குத் தேவையானவை என நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்பும் விசைத்தொழில்கள்.

8. வேவுச்செய்தி மற்றும் புலனாய்வுக்கான மையத் துறையகம்.

9. நாட்டின் புறக்காப்பு, அயல்நாட்டு அலுவற்பாடுகள் அல்லது இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பான காரணங்களுக்காகத் தடுப்புக் காவலில் வைத்தல்; அத்தகைய காவலில் வைக்கப்பட்டவர்கள்.

10. அயல்நாட்டு அலுவற்பாடுகள்; அயல்நாடு எதனுடனும் ஒன்றியத்தைத் தொடர்புறுத்தும் பொருட்பாடுகள் அனைத்தும்.

11. அரசுத் தூதக, குடிவணிக நலத் தூதக மற்றும் வணிகச்சார்பாற்றம்.

12. ஐக்கிய நாடுகள் அமைவனம்.

13. பன்னாட்டிடை மாநாடுகள், கழகங்கள், பிற குழுமங்கள் ஆகியவற்றில் பங்குகொள்ளுதல்; மேலும், அவற்றில் எடுக்கப்படும் முடிபுகளைச் செயல்முறைப்படுத்துதல்.

14. அயல்நாடுகளுடன் உடன்படிக்கைகளையும் உடன்பாடுகளையும் செய்துகொள்ளுதல்; மேலும், அயல்நாடுகளுடனான உடன்படிக்கைகள், உடன்பாடுகள், இணங்காறுகள் ஆகியவற்றைச் செயல்முறைப்படுத்துதல்.

15. போரும் போர்நிறுத்தமும்.

16. அயல்நாட்டு அதிகாரவரம்பு.

17. குடிமை, குடிமையாக்கம் மற்றும் அயலவர்கள்.

18. அயல்நாட்டிடம் ஒப்படைப்பு.

19. இந்தியாவிற்குள் வர அனுமதித்தல் இந்தியாவிலிருந்து குடிபெயர்தல் மற்றும் வெளியேற்றுதல்; கடவுச்சீட்டுகள் மற்றும் அயலக நுழைவிசைவு.

20. இந்தியாவிற்கு வெளியேயுள்ள இடங்களுக்கு மேற்கொள்ளும் புனிதப் பயணங்கள்.

21. ஆழ்கடலிலோ வானிலோ இழைக்கப்படும் கொள்ளைகளும் குற்றங்களும்; நாட்டிடைச் சட்டத்திற்கு எதிராக நிலத்திலோ ஆழ்கடலிலோ வானிலோ இழைக்கப்படும் குற்றச்செயல்கள்.

22. இருப்பூர்தியங்கள்.

23. நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தாலோ அதன் வழியாலோ தேசிய நெடுஞ்சாலைகள் என விளம்பப்படும் நெடுஞ்சாலைகள்.

24. எந்திரத்தால் உந்தப்படும் கலங்கள் தொடர்பாக நாடாளுமன்றம் சட்டத்தினால் தேசிய நீர்வழிகள் என விளம்பும் உள்நாட்டு நீர்வழிகளில் கப்பல் போக்குவரத்தும் கப்பல் செலுத்தமும்; அத்தகைய நீர்வழித் தட விதிகள்.

25. ஏற்றவற்றக் கடல்நீர்மீதான கப்பல் போக்குவரத்தும் கப்பல் செலுத்தமும் உள்ளடங்கலாக, கடல்வழிக் கப்பல் போக்குவரத்தும் கப்பல் செலுத்தமும்; வாணிகக் கப்பல் மாலுமிகளுக்கான கல்விக்கும் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்தல்; மற்றும் மாநிலங்களும் பிற முகமைகளும் அளிக்கும் அத்தகைய கல்வியையும் பயிற்சியையும் ஒழுங்குறுத்துதல்.

26. விளக்குக்கப்பல்கள் உள்ளடங்கலாக கலங்கரைவிளக்கங்கள், வழிகாட்டும் அவிரொளிகள்; மற்றும் கப்பல் போக்குவரத்து, வானூர்திகள் ஆகியவற்றின் பாதுக்காப்பிற்கான பிறவகை ஏற்பாடுகள்.

27. நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தாலோ அதன் வழியாலோ அல்லது நிலவுறும் சட்டத்தாலோ பெருந்துறைமுகங்கள் என விளம்பப்பட்ட துறைமுகங்கள், அவற்றின் எல்லைகளை வரையறுத்தல் உள்ளடங்கலாக; அவற்றில் துறைமுக அதிகாரஅமைப்புகளை அமைத்தலும் அவற்றின் அதிகாரங்களும்.

28. துறைமுகத்தில் தொற்றுநோய்த்தடை ஒதுக்கம் அதன் தொடர்பான மருத்துவமனைகள் உள்ளடங்கலாக; கடலோடிகள் மற்றும் கடல்துறை மருத்துவமனைகள்.

29. வானூர்தியங்கள், வான்கலம் மற்றும் வான்வழிச் செலுத்தம்; வானூர்தி நிலையங்கள் அமைத்தல்; வான்வழிப் போக்குவரத்தையும், வானூர்தி நிலையங்களையும் ஒழுங்குறுத்துதலும் சீரமைத்தலும்; வானூர்திவியல் கல்விக்கும் பயிற்சிக்கும் ஏற்பாடுசெய்தல் மற்றும் மாநிலங்களும் பிற முகமைகளும் அளிக்கும் அத்தகைய கல்வியையும் பயிற்சியையும் ஒழுங்குறுத்துதல்.

30. பயணிகளையும் பண்டங்களையும் இருப்பூர்தியம், கடல், வான் வழியாகவோ அல்லது எந்திரத்தால் உந்தப்படும் கலங்களில் தேசிய நீர்வழிகளின் வழியாகவோ ஏற்றிச்செல்லுதல்.

31. அஞ்சல் மற்றும் தந்தி; தொலைபேசிகள், கம்பியில்லாத் தந்தி, ஒலிபரப்பு மற்றும் இவைபோன்ற பிற செய்தித் தொடர்பு இணைவங்கள்.

32. ஒன்றியத்தின் சொத்தும் அதிலிருந்து கிடைக்கும் வருவாயும்—ஆனால் ஒரு மாநிலத்தில் அமைந்துள்ள சொத்தினைப் பொறுத்தவரை, நாடாளுமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்திருந்தாலன்றி, அந்த மாநிலச் சட்டங்களுக்கு உட்பட்டது ஆகும்.

[1][33. * * *]

34. இந்தியக் குறுநில அரசர்களின் சொத்திற்கான காப்பாயங்கள்.

35. பொதுமக்களிடம் ஒன்றித்தின் உறுகடன்.

36. பணச் செலாவணி, நாணயமடித்தல், சட்டமுறையான செலாவணி; அயல்நாட்டுச் செலாவணி மாற்றுவீதம்.

37. அயல்நாட்டுப் பெறுகடன்கள்.

38. இந்தியச் சேம வங்கி.

39. அஞ்சலகச் சேமிப்பு வங்கி.

40. இந்திய அரசாங்கத்தினாலோ ஒரு மாநில அரசாங்கத்தினாலோ நடத்தப்படும் பரிசுச்சீட்டுகள்.

41. அயல்நாடுகளுடன் வணிகமும் வாணிபமும்; சுங்க எல்லைகளிகந்த இறக்குமதியும் ஏற்றுமதியும்; சுங்க எல்லைகளை வரையறுத்தல்.

---

[1] 1956 ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் 26ஆம் பிரிவினாலும் இணைப்புப்பட்டியலினாலும் விட்டுவிடப்பட்டது.]

42. மாநிலங்களிடையிலான வணிகமும் வாணிபமும்.

43. கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாக, வங்கித்தொழில், காப்பீட்டு மற்றும் நிதியியல் கூட்டுருமங்கள் உள்ளடங்கலாக, வணிகக் கூட்டுருமங்களைக் கூட்டுருமமாகப் பதிவுசெய்தல், ஒழுங்குறுத்துதல் மற்றும் முடிவுறுத்துதல்.

44. பல்கலைக் கழகங்கள் நீங்கலாக, ஒரு மாநிலத்திற்கு என்று மட்டுமே இல்லாத குறிக்கோள்களைக்கொண்ட கூட்டுருமங்கள்—அவை வணிகம் செய்வனவாயினும் அல்லனவாயினும்; அவற்றைக் கூட்டுருமமாகப் பதிவுசெய்தல், ஒழுங்குறுத்துதல் மற்றும் முடிவுறுத்துதல்.

45. வங்கித்தொழில்.

46. மாற்றுச்சீட்டுகள், காசோலைகள், கடனுறுதிச் சீட்டுகள் மற்றும் இவையன்ன பிற முறைபாவணங்கள்.

47. காப்பீடு.

48. பங்குமாற்றகங்கள் மற்றும் எதிர்கோள் வாணிபம்.

49. புதுப்புனைவு உரிமைகள், புதுக்கண்டுபிடிப்புகள் மற்றும் வடிவமைப்புகள்; பதிப்புரிமை; வணிகக் குறிகள் மற்றும் வணிகப்பண்டகக் குறிகள்.

50. எடை, அளவு இவற்றின் தரநிலைகளை நிருமித்தல்.

51. இந்தியாவிற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படவிருக்கும் அல்லது ஒரு மாநிலத்திலிருந்து மற்றொன்றிற்குக் கொண்டு செல்லப்படவிருக்கும் சரக்குகளுக்கான நயத் தரநிலைகளை நிருமித்தல்.

52. விசைத்தொழில்கள், அதாவது, ஒன்றியத்தின் கட்டாள்கையிலிருப்பது பொதுநலனுக்கு உகந்ததென நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்புபவை.

53. எண்ணெய் வயல்களையும் கனிம எண்ணெய் வளஆதாரங்களையும் ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்; கல்எண்ணெய்யும், கல்எண்ணெய்யின் ஆகுபொருள்களும்; தீப்பற்றும் அபாயம் கொண்டவை என நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்பும் பிற நீர்மங்களும் பொருள்களும்.

54. சுரங்கங்களை ஒழுங்குறுத்துவதும் கனிமத்தை மேம்படுத்துவதும் ஒன்றியத்தின் கட்டாள்கையில் இருப்பது பொதுநலனுக்கு உகந்ததென நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்புகின்ற அளவுக்கு, அவற்றை ஒழுங்குறுத்துதலும் மேம்படுத்துதலும்.

55. சுரங்கங்களிலும் எண்ணெய் வயல்களிலும் தொழிலாளர் நிலையையும் பாதுகாப்பையும் ஒழுங்குறுத்துதல்.

56. மாநிலங்களிடையேயான ஆறுகளையும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளையும் ஒழுங்குறுத்துவதும் மேம்படுத்துவதும் ஒன்றியத்தின் கட்டாள்கையில் இருப்பது பொதுநலனுக்கு உகந்ததென நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்புகின்ற அளவுக்கு, அவற்றை ஒழுங்குறுத்துதலும் மேம்படுத்துதலும்.

57. ஆட்சிநிலவரை சார்ந்த கடலுக்கு அப்பால் மீன்பிடித்தலும் மீனளங்களும்.

58. ஒன்றியத்து முகமைகளால் உப்பு விளைவிக்கப்படுதல், வழங்கப்படுதல் மற்றும் பகிர்ந்தளிக்கப்படுதல்; பிற முகமைகளால் உப்பு விளைவிக்கப்படுதல், வழங்கப்படுதல், பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகியவற்றை ஒழுங்குறுத்துதலும் கட்டாள்கை செய்தலும்.

59. அபினைப் பயிர்செய்தல், உற்பத்திசெய்தல் மற்றும் ஏற்றுமதிக்காக விற்பனைசெய்தல்.

60. திரைப்படங்களைத் திரையிட்டுக் காட்டுவதற்கு ஒப்பிசைவு அளித்தல்.

61. ஒன்றியத்தின்கீழ் பணிபுரிவோர் தொடர்பான தொழில்துறைப் பூசல்கள்.

62. இந்த அரசமைப்பின் தொடக்கநிலையின்போது, தேசிய நூலகம், இந்திய அருங்காட்சியகம், பேரரசுப் போர் அருங்காட்சியகம், விக்டோரியா நினைவகம், இந்தியப்போர் நினைவகம் என வழங்கப்பட்ட நிறுவனங்கள்; மற்றும் இவைபோன்று, இந்திய அரசாங்கத்தினால் முழுவதுமாகவோ பகுதியாகவோ நிதி உதவியளிக்கப்பட்டு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனம் என நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்பும் பிற நிறுவனம் எதுவும்.

63. இந்த அரசமைப்பின் தொடக்கநிலையின்போது, காசி இந்துப் பல்கலைக்கழகம், அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகம், தில்லிப் பல்கலைக்கழகம் என வழங்கப்பட்ட நிறுவனங்கள்; 371உ உறுப்பின்படி நிறுவப்பட்ட பல்கலைக்கழகம்; தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனம் என நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்பும் பிற நிறுவனம் எதுவும்.

64. இந்திய அரசாங்கத்தினால் முழுவதுமாகவோ பகுதியாகவோ நிதி உதவியளிக்கப்பட்டு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் என நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்பும் அறிவியல் அல்லது தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள்.

65. (அ) காவல்துறை அலுவலர்களுக்கான பயிற்சி உள்ளடங்கலாக, விழைதொழிலில், உறுதொழிலில் அல்லது தொழில் நுட்பத்தில் பயிற்சி; அல்லது

(ஆ) சிறப்புக் கல்விப்பயில்வுகளின் அல்லது ஆராய்ச்சியின் வளர்ப்பாடு; அல்லது

(இ) குற்றத்தைப் புலனாய்வு செய்வதில் அல்லது துப்பறிவதில் அறிவியல் அல்லது தொழில்நுட்ப உதவி இவற்றிற்கான ஒன்றியத்து முகமைகளும் நிறுவனங்களும்.

66. உயர் கல்விக்கான அல்லது ஆராய்ச்சிக்கான நிறுவனங்களிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களிலும் தரநிலைகளை ஒருங்கிணைத்தலும் நிருணயித்தலும்.

67. தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையென நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தாலோ அதன் வழியாலோ விளம்பப்படும் தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த நினைவுச் சின்னங்களும் பதிவணங்களும் மற்றும் தொல்பொருளாய்விடங்களும் தொல்பொருள் சிதைவுகளும்.

68. இந்திய நிலஅளவைத் துறை மற்றும் புவியமைப்பியல், தாவர இயல், விலங்கியல், மானிடவியல் ஆகியவற்றிற்கான இந்திய அளவைத் துறைகள்; வானிலை ஆராய்ச்சி அமைவனங்கள்.

69. மக்கள் கணக்கெடுப்பு.

70. ஒன்றியத்து அரசுப் பணியங்கள்; அனைத்திந்தியப் பணியங்கள்; ஒன்றியத்து அரசுப் பணியாளர் தேர்வாணையம்.

71. ஒன்றியத்து ஓய்வூதியங்கள், அதாவது, இந்திய அரசாங்கத்தினாலோ இந்தியத் திரள்நிதியத்திலிருந்தோ வழங்கப்படும் ஓய்வூதியங்கள்.

72. நாடாளுமன்றத்திற்கும் மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கும், குடியரசுத்தலைவர், குடியரசுத் துணைத்தலைவர் பதவிகளுக்குமான தேர்தல்கள்; தேர்தல் ஆணையம்.

73. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்களவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர், மக்களவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோரின் வரையூதியங்களும் படித்தொகைகளும்.

74. நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிற்கும், ஒவ்வோர் அவையின் உறுப்பினர்களுக்கும், குழுக்களுக்கும் உள்ள அதிகாரங்களும் மதிப்புரிமைகளும் காப்புரிமைகளும்; நாடாளுமன்றக் குழுக்களின் முன்பு அல்லது நாடாளுமன்றத்தால் அமர்த்தப்பெற்ற ஆணையங்களின் முன்பு சான்றளிப்பதற்காகவோ ஆவணங்களை முன்னிலைப்படுத்துவதற்காகவோ நபர்களை வருமாறு செய்வித்தல்.

75. குடியரசுத்தலைவர், ஆளுநர்கள் ஆகியோரின் பதவியூதியங்கள், படித்தொகைகள், மதிப்புரிமைகள் மற்றும் வாராமை விடுப்புப் பொறுத்த உரிமைகள்; ஒன்றியத்து அமைச்சர்களின் வரையூதியங்கள் மற்றும் படித்தொகைகள்; கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரின் வரையூதியங்கள், படித்தொகைகள், வாராமை விடுப்புப் பொறுத்த உரிமைகள் மற்றும் பிற பணி வரைக்கட்டுகள்.

76. ஒன்றியம், மாநிலங்கள் ஆகியவற்றின் கணக்குகளின் தணிக்கை.

77. உச்ச நீதிமன்றத்தின் அமைப்பு, செயலமைப்பு, அதிகாரவரம்பு, மற்றும் (அந்நீதிமன்ற அவமதிப்பு உள்ளடங்கலான) அதிகாரங்கள், அங்கு பெறப்படும் கட்டணங்கள்; உச்ச நீதிமன்றத்தின் முன்பு வழக்குரைஞராகத் தொழிலாற்றுவதற்கு உரிமைகொண்டவர்கள்.

78. உயர் நீதிமன்றங்களின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் குறித்த ஏற்பாடுகள் நீங்கலாக (பருவ விடுமுறைகள் உள்ளடங்கலாக) உயர் நீதிமன்றங்களின் அமைப்பும் செயலமைப்பும்; உயர் நீதிமன்றங்களின் முன்பு வழக்குரைஞராகத் தொழிலாற்றுவதற்கு உரிமைகொண்டவர்கள்.

79. ஒன்றியத்து ஆட்சிநிலவரை எதற்கும் ஓர் உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை அளாவச் செய்வதும் அந்நிலவரையிலிருந்து ஓர் உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை விலக்குவதும்.

80. மாநிலம் எதனையும் சேர்ந்த காவற்படை உறுப்பினர்களின் அதிகாரங்களையும் அதிகாரவரம்பையும், அந்த மாநிலத்திற்கு வெளியேயுள்ள வரையிடம் எதற்கும் அளாவச்செய்தல்; ஆனால், அவ்வாறு அளாவச்செய்வது, ஒரு மாநிலத்தின் காவல் துறையினர், அந்த மாநிலத்திற்கு வெளியேயுள்ள வரையிடத்தில் தம் அதிகாரத்தையும் அதிகாரவரம்பையும் அந்த வரையிடம் அமைந்துள்ள மாநில அரசாங்கத்தின் இசைவின்றிச் செலுத்துவதற்கு இயல்விப்பதாகாது; மற்றும், மாநிலம் எதனையும் சேர்ந்த காவற்படை உறுப்பினர்களின் அதிகாரங்களையும் அதிகாரவரம்பையும், அந்த மாநிலத்திற்கு வெளியேயுள்ள இருப்பூர்திய வரையிடங்களுக்கு அளாவச் செய்தல்.

81. மாநிலம் விட்டு மாநிலம் குடிபெயர்தல்; மாநிலங்களிடையே தொற்றுநோய்த்தடை ஒதுக்கம்.

82. வேளாண் வருமானம் அல்லாத பிற வருமானத்தின் மீதான வரிகள்.

83. ஏற்றுமதித் தீர்வைகள் உள்ளடங்கலான சுங்கத் தீர்வைகள்.

84. இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது உண்டாக்கப்பட்ட புகையிலை மீதும் பிற சரக்குகளின் மீதுமான ஆயத்தீர்வைகள்—

(அ) மனிதர் உட்கொள்வதற்கான வெறியம் கலந்த மதுக்குடி வகைகள்.

(ஆ) அபின், இந்தியக் கஞ்சா மற்றும் பிற மயக்க மருந்துப் பொருள்களும் மயக்கப் பொருள்களும் நீங்கலாக;

ஆனால், வெறியம் அல்லது இந்தப் பதிவின் (ஆ) உள்பத்தியில் சேர்க்கப்பட்டுள்ள பொருள் எதுவும் அடங்கிய மருந்துக்கும் ஒப்பனைக்குமான தயாரிப்புகள் உள்ளடங்கலாக.

85. கூட்டுருமவரி.

86. வேளாண் நிலம் நீங்கலாக, தனிப்பட்டவர்களின் மற்றும் நிறுமங்களின் சொத்திருப்புகளின் மூலதன மதிப்பு மீதான வரிகள்; நிறுமங்களின் மூலதனம் மீதான வரிகள்;

87. வேளாண் நிலம் அல்லாத பிற சொத்தினைப் பொறுத்த இறங்கு சொத்துத் தீர்வை.

88. வேளாண் நிலம் அல்லாத பிற சொத்திற்கு வாரிசுரிமை பொறுத்த தீர்வைகள்.

89. இருப்பூர்தியம், கடல் அல்லது வான் வழியாக ஏற்றிச் செல்லப்படும் சரக்குகள் அல்லது பயணிகள் மீதான சேர்முனைவரிகள்; இருப்பூர்தியப் பயணக்கட்டணங்கள், சரக்குக் கட்டணங்கள் ஆகியவற்றின் மீதான வரிகள்.

90. பங்குமாற்றங்களிலும் எதிர்கோள் வாணிபங்களிலும் நடைபெறும் செயல்மானங்கள் மீது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வைகள் அல்லாத பிற வரிகள்.

91. மாற்றுச்சீட்டுகள், காசோலைகள், கடனுறுதிச் சீட்டுகள், கப்பல் சரக்குப் பட்டியல்கள், நாணய உறுதிக் கடிதங்கள், காப்பீட்டு ஆவணங்கள், பங்குகள் உரிமைமாற்றம், கடனீட்டு ஆவணங்கள், மாற்றாள் அமர்த்து ஆவணங்கள், வரவுச்சீட்டுகள் ஆகியவை பொறுத்த முத்திரைத் தீர்வை வீதங்கள்.

92. செய்தித்தாள்களின் விற்பனை அல்லது கொள்வினை மீதும், அவற்றில் வெளியிடப்படும் விளம்பரங்கள் மீதுமான வரிகள்.

92அ. செய்திதாள்கள் அல்லாத பிற சரக்குகளின் விற்பனையோ கொள்வினையோ மாநிலங்களுக்கிடையேயுள்ள வணிகத்தின் அல்லது வாணிபத்தின் போது நிகழுமிடத்து, அந்த விற்பனையின் அல்லது கொள்வினையின் மீதான வரிகள்.

92ஆ. சரக்குகளின் அனுப்புகை (அனுப்புகைசெய்பவருக்காயினும் பிற எவருக்காயினும்) மாநிலங்களிடையேயுள்ள வணிகத்தின் அல்லது வாணிபத்தின் போது நிகழுமிடத்து, அத்தகைய சரக்குகளை அனுப்புகையின் மீதான வரிகள்.

[1][92இ. பணியங்களின் மீதான வரிகள்.]

93. இந்தப் பட்டியலிலுள்ள பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்த சட்டங்களுக்கு எதிரான குற்றச்செயல்கள்.

94. இந்தப் பட்டியலிலுள்ள பொருட்பாடுகளின் நோக்கத்திற்கான விசாரணைகள், அளவை ஆய்வுகள் மற்றும் புள்ளிவிவரங்கள்.

95. இந்தப் பட்டியலில் உள்ள பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்து, உச்ச நீதிமன்றம் தவிர, அனைத்து நீதிமன்றங்களுக்குமான அதிகாரவரம்பும் அதிகாரங்களும்; கடலாண்மை அதிகாரவரம்பு.

96. இந்தப் பட்டியலிலுள்ள பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்த கட்டணங்கள், ஆனால் இவற்றில் நீதிமன்றம் எதிலும் பெறப்படும் கட்டணங்கள் நீங்கலாக.

97. IIஆம் பட்டியலில் அல்லது IIIஆம் பட்டியலில் குறிப்பிடப்பட்டிராத வரி எதுவும் உள்ளடங்கலாக, அவ்விரு பட்டியல்களில் எதிலும் எண்ணிடப்பட்டிராத பிற பொருட்பாடு எதுவும்.

பட்டியல் II—மாநிலத்துப் பட்டியல்

1. பொது ஒழுங்கமைதி (ஆனால், கடல், தரை அல்லது வான் படை எதனையும் அல்லது ஒன்றியத்தின் பிற ஆயுதப்படை எதனையும் அல்லது ஒன்றியத்தின் கட்டாள்கைக்கு உட்பட்ட பிற படை எதனையும் அல்லது அதன் படைப்பிரிவு அல்லது உறுப்பு எதனையும் குடியியல் அதிகாரத்திற்கு உதவும் வகையில் பயன்படுத்துவது இதில் உள்ளடங்காது.)

2. காவல்படை (இருப்பூர்தியக் காவல்படை மற்றும் கிராமக்காவல் படை உள்ளடங்கலாக) Iஆம் பட்டியலின் 2அ பதிவின் வகையங்களுக்கு உட்பட்டதாகும்.

3. உயர் நீதிமன்றத்தின் அலுவலர்களும் பணியாளர்களும்; குத்தகை மற்றும் வருவாய்த்துறை நீதிமன்றங்களில் நெறிமுறை; உச்ச நீதிமன்றம் நீங்கலாக, பிற நீதிமன்றங்கள் அனைத்திலும் பெறப்படும் கட்டணங்கள்.

4. சிறைகள், சீர்திருத்த நிலையங்கள், இளங்குற்றவாளிகள் சீர்திருத்த நிறுவனங்கள் மற்றும் இவை போல்வதான பிற நிறுவனங்கள்; அவற்றில் காவலில் வைக்கப்படுபவர்கள்; சிறைகள், பிற நிறுவனங்கள் இவற்றைப் பயன்படுத்துவதற்குப் பிற மாநிலங்களுடனான ஏற்பாடுகள்.

5. உள்ளாட்சி, அதாவது, உள்வரைத் தன்னாட்சியின் அல்லது ஊராட்சியின் நோக்கமைந்த மாநகராட்சிகள், மேம்பாட்டுப் பொறுப்பமைவுகள், மாவட்டக் கழகங்கள், சுரங்கக் குடியிருப்பு அதிகாரஅமைப்புகள், பிற உள்ளாட்சி அதிகாரஅமைப்புகள் ஆகியவற்றின் அமைப்பும் அதிகாரங்களும்.

6. மக்கள் நல்வாழ்வும் துப்புரவும்; மருத்துவமனைகளும் மருந்தகங்களும்.

7. புனிதப்பயணங்கள், இந்தியாவுக்கு வெளியேயுள்ள பிற இடங்களுக்கான புனிதப்பயணங்கள் நீங்கலாக.

8. வெறியூட்டும் மதுக்குடிவகைகள், அதாவது, வெறியூட்டும் மதுக்குடி வகைகளை உண்டாக்குதல், உற்பத்திசெய்தல், உடைமையில் வைத்திருத்தல், கொண்டுசெல்லுதல், கொள்வினை மற்றும் விற்பனை.

9. ஊனமுற்றோர்களுக்கும் வேலையமர்த்தம்பெற இயலாதவர்களுக்கும் தீருதவி.

10. புதைத்தலும் இடுகாடுகளும்; எரியூட்டுதலும் சுடுகாடுகளும்.

[2][11. * * * *]

---

1. 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து எட்டாம் திருத்தம்) சட்டத்தால் புகுத்தப்பட்டது.
2. 1976ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்திரண்டாம் திருத்தம்) சட்டத்தினால் (3–1–1977 முதல் செல்திறம் பெறுமாறு) 11ஆம் பதிவு விட்டுவிடப்பட்டது.]

12. மாநிலத்தின் கட்டாள்கையிலுள்ள அல்லது மாநிலத்தின் நிதி உதவி பெறுகிற நூலகங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் இவையன்ன பிற நிறுவனங்கள்; தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தாலோ அதன் வழியாலோ விளம்பப்படுபவை நீங்கலான, தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த பிற நினைவுச்சின்னங்கள்.

13. போக்குவரவு இணைவங்கள், அதாவது, சாலைகள், பாலங்கள், தோணித்துறைகள் மற்றும் I ஆம் பட்டியலில் குறித்துரைக்கப்படாத பிற போக்குவரவு இணைவங்கள்; நகராட்சிக் காந்தவண்டிப் பாதைகள் கம்பி வடப்பாதைகள்; நீர்வழிகள் குறித்து I ஆம் பட்டியலிலும் IIIஆம் பட்டியலிலும் உள்ள வகையங்களுக்கு உட்பட்டு, உள்நாட்டு நீர்வழிகளும் அவற்றின் வழியான போக்குவரத்தும்; எந்திரத்தால் உந்தப்படும் ஊர்திகள் அல்லாத பிற ஊர்திகள்.

14. வேளாண்மை, வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி, பயிர்க்கொல்லிகளுக்கு எதிரான பாதுகாப்பு, பயிர் நோய்த்தடுப்பு உள்ளடங்கலாக.

15. கால்நடைகளைப் பேணுதல், பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் விலங்கு நோய்த்தடுப்பு; விலங்கின மருத்துவப் பயிற்சியும் தொழிலும்.

16. பட்டித்தொழுவங்களும் கால்நடை அத்துமீறல் தடுப்பும்.

17. நீர், அதாவது, Iஆம் பட்டியலின் 56ஆம் பதிவின் வகையங்களுக்கு உட்பட்டு, நீர் வழங்குதல், பாசனம் மற்றும் கால்வாய்கள், வடிகாலும் கரையணைகளும், நீர்த்தேக்கங்களும் புனல் மின்விசையும்.

18. நிலம், அதாவது, நிலத்திலுள்ளதான அல்லது நிலத்தின்மீதான உரிமைகள், நிலக்கிழார் மற்றும் குத்தகையாளர் தொடர்பு உள்ளடங்கலாக நிலப்பிடிமான முறைகள், குத்தகைகளை ஈட்டுதல்; வேளாண் உரிமையை மாற்றுதலும் மாற்றாக்கம் செய்தலும்; நில மேம்பாடும் வேளாண் பெறுகடன்களும்; குடியமர்த்தம்.

[1][19–20. * * * * *]

21. மீனளங்கள்.

22. Iஆம் பட்டியலின் 34ஆம் பதிவின் வகையங்களுக்கு உட்பட்டு, காப்பாயங்கள்; வில்லங்கத்திற்குட்படுத்தப்பட்ட மற்றும் பற்றுகை செய்யப்பட்ட சொத்துக்கள்.

23. ஒன்றியத்தின் கட்டாள்கையின்கீழ் ஒழுங்குறுத்துவதையும் மேம்படுத்துவதையும் பொறுத்து I ஆம் பட்டியலிலுள்ள வகையங்களுக்கு உட்பட்டு, சுரங்கங்களையும் கனிமவள மேம்பாட்டையும் ஒழுங்குறுத்துதல்.

24. விசைத் தொழில்கள்–I ஆம் பட்டியலின் 7 மற்றும் 52 ஆகிய பதிவுகளின் வகையங்களுக்கு உட்பட்டு.

25. எரிவாயு மற்றும் எரிவாயு உற்பத்திச்சாலை.

26. IIIஆம் பட்டியலின் 33ஆம் பதிவின் வகையங்களுக்கு உட்பட்டு, மாநில எல்லைக்குள்ளான வணிகமும் வாணிபமும்.

27. IIIஆம் பட்டியலின் 33 ஆம் பதிவின் வகையங்களுக்கு உட்பட்டு, சரக்குகளை உற்பத்தி செய்தலும் வழங்குதலும் பகிர்ந்தளித்தலும்.

28. அங்காடிகளும் சந்தைகளும்.

[1][29. * * * *]

30. வட்டித்தொழிலும் வட்டித்தொழில் நடத்துவோரும்; வேளாண் கடன் சுமைத் தீருதவி.

---

1. 19, 20 ஆகிய பதிவுகள் 1976ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்திரண்டாம் திருத்தம்) சட்டத்தினால் (3–1–1977 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.

31. வழிப்போக்கர் விடுதிகளும் வழிப்போக்கர் விடுதி நடத்துவோரும்.

32. I ஆம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவை அல்லாத கூட்டுருமங்களைக் கூட்டுருமங்களாகப் பதிவுசெய்தல், ஒழுங்குறுத்துதல் மற்றும் முடிவுறுத்துதல்; மேலும், பல்கலைக்கழகங்கள்; கூட்டுருமமாகப் பதிவு செய்யப்படாத வணிக, இலக்கிய, அறிவியல், சமய மற்றும் பிற சங்கங்களும் கழகங்களும்; கூட்டுறவுச் சங்கங்கள்.

33. காட்சி அரங்குகளும் நாடக நிகழ்ச்சிகளும்; I ஆம் பட்டியலின் 60ஆம் பதிவின் வகையங்களுக்கு உட்பட்டு திரைப்படங்கள்; போட்டி விளையாட்டுகளும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் களிப்பூட்டும் நிகழ்ச்சிகளும்.

34. பந்தயங்கட்டுதலும் சூதாடுதலும்.

35. மாநிலத்திடம் உற்றமைந்துள்ள அல்லது அதன் உடைமையிலுள்ள கட்டுமான வேலைகள், நிலங்கள் மற்றும் கட்டடங்கள்.

[1][36. * * * *]

37. நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு மாநிலச் சட்டமன்றத்திற்கான தேர்தல்கள்.

38. மாநிலச் சட்டமன்றத்தின் உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர், துணைத்தலைவர் மற்றும் சட்டமன்ற மேலவை இருக்குமாயின், அதன் தலைவர், துணைத்தலைவர், ஆகியோரின் வரையூதியங்களும் படித்தொகைகளும்.

39. சட்டமன்றப் பேரவைக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் குழுக்களுக்கும், சட்டமன்ற மேலவை இருக்குமாயின், அந்த மேலவைக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் குழுக்களுக்கும் உள்ள அதிகாரங்களும் மதிப்புரிமைகளும் காப்புரிமைகளும்; மாநிலச் சட்டமன்றக் குழுக்களின் முன்பு சான்றளிப்பதற்காகவோ ஆவணங்களை முன்னிலைப்படுத்துவதற்காகவோ நபர்களை வருமாறு செய்வித்தல்.

40. மாநில அமைச்சர்களின் வரையூதியங்களும் படித்தொகைகளும்.

41. மாநில அரசுப்பணியங்கள்; மாநில அரசுப்பணியாளர் தேர்வாணையம்.

42. மாநில ஓய்வூதியங்கள், அதாவது, மாநிலத்தினாலோ மாநிலத்தின் திரள்நிதியத்திலிருந்தோ வழங்கப்படும் ஓய்வூதியங்கள்.

43. பொதுமக்களிடம் மாநிலத்தின் உறுகடன்.

44. புதையற்பொருள்.

45. வருவாயைக் கணித்தலும் ஈட்டுதலும் உள்ளடங்கலாக, நிலவருவாய்; நிலப் பதிவணங்களைப் பேணிவருதல்; வருவாய் நோக்கங்களுக்கான நில அளவை; உரிமைகளின் பதிவணங்கள்; மற்றும் வருவாயை மாற்றாக்கம் செய்தல்.

46. வேளாண் வருமானத்தின் மீதான வரிகள்.

47. வேளாண் நிலத்திற்கு வாரிசுரிமை பொறுத்த தீர்வைகள்.

48. வேளாண் நிலம் பொறுத்த இறங்குசொத்துத் தீர்வை.

49. நிலங்கள் மற்றும் கட்டடங்கள் மீதான வரிகள்.

50. கனிம வள மேம்பாடு தொடர்பாக நாடாளுமன்றம் சட்டத்தினால் விதிக்கும் வரம்புகள் எவற்றிற்கும் உட்பட்டு, கனிம உரிமைகள் மீதான வரிகள்.

---

[1] 36ஆம் பதிவு, 1956ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் 26ஆம் பிரிவினால் விட்டுவிடப்பட்டது.

51. மாநிலத்தில் உற்பத்திசெய்யப்பட்ட அல்லது உண்டாக்கப்பட்ட பின்வரும் சரக்குகள் மீதான ஆயத் தீர்வைகளும், இந்தியாவின் பிற இடங்களில் உற்பத்திசெய்யப்பட்ட அல்லது உண்டாக்கப்பட்ட இவை போன்ற சரக்குகளின் அதே வீதத்தில் அல்லது அதைவிடக் குறைந்த வீதத்தில் விதிக்கப்படும் எதிரீட்டுத் தீர்வைகளும்:–

(அ) மனிதர் உட்கொள்வதற்கான வெறியம் கலந்த மதுக்குடி வகைகள்;

(ஆ) அபின், இந்தியக் கஞ்சா மற்றும் பிற மயக்க மருந்துப் பொருள்களும் மயக்கப் பொருள்களும்; ஆனால், வெறியம் அல்லது இந்தப் பதிவின் (ஆ) உள்பத்தியில் சேர்க்கப்பட்டுள்ள பொருள் எதுவும் அடங்கிய மருந்துக்கும் ஒப்பனைக்குமான தயாரிப்புகள் இதில் உள்ளடங்குவதில்லை.

52. நுகர்மானத்திற்காக, பயன்பாட்டிற்காக அல்லது விற்பனைக்காக வட்டாரப் பகுதிக்குள் வரும் சரக்குகள் மீதான வரிகள்.

53. மின்விசை நுகர்மானம் அல்லது விற்பனை மீதான வரிகள்.

54. Iஆம் பட்டியலின் 92அ பதிவின் வகையங்களுக்கு உட்பட்டு செய்தித் தாள்கள் அல்லாத பிற சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினை மீதான வரிகள்.

55. செய்தித் தாள்களில் வெளியிடப்படும் விளம்பரங்கள், வானொலியின் அல்லது தொலைக்காட்சியின் வழி செய்யப்படும் விளம்பரங்கள் ஆகியவை அல்லாத விளம்பரங்கள் மீதான வரிகள்.

56. சாலை அல்லது உள்நாட்டு நீர்வழிகள் வழியாக ஏற்றிச் செல்லப்படும் சரக்குகள் மற்றும் பயணிகள் மீதான வரிகள்.

57. III ஆம் பட்டியலின் 35ஆம் பதிவின் வகையங்களுக்கு உட்பட்டு, காந்த வண்டிகள் உள்ளடங்கலாக, சாலைகளின்மீது பயன்படுத்துவதற்குப் பொருத்தமானவையாகவும் எந்திரத்தால் அல்லது எந்திரமின்றி உந்தப்படுவனவாகவும் உள்ள ஊர்திகள் மீதான வரிகள்.

58. விலங்குகள் மற்றும் படகுகள் மீதான வரிகள்.

59. சுங்கக் கட்டணங்கள்.

60. விழைதொழில்கள், வணிகங்கள், கொள்பணிகள் மற்றும் வேலையமர்த்தங்கள் மீதான வரிகள்.

61. தலைக்கட்டு வரிகள்.

62. பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், களிப்பூட்டும் நிகழ்ச்சிகள் பந்தயங்கட்டுதல், சூதாடுதல் ஆகியவற்றின் மீதான வரிகள் உள்ளடங்கலாக ஆடம்பரப்பொருட்கள் மீதான வரிகள்.

63. முத்திரைத்தீர்வை வீதங்கள் பற்றி I ஆம் பட்டியலின் வகையங்களில் குறித்துரைக்கப்படாத ஆவணங்களைப் பொறுத்த முத்திரைத்தீர்வை வீதங்கள்.

64. இந்தப் பட்டியலிலுள்ள பொருட்பாடுகள் எவற்றையும் பொறுத்து, சட்டங்களுக்கு எதிரான குற்றச்செயல்கள்.

65. இந்தப் பட்டியலிலுள்ள பொருட்பாடுகள் எவற்றையும் பொறுத்து, உச்ச நீதிமன்றம் அல்லாத பிற அனைத்து நீதிமன்றங்களின் அதிகாரவரம்பும் அதிகாரங்களும்.

66. இந்தப் பட்டியலிலுள்ள பொருட்பாடுகள் எவற்றையும் பொறுத்த கட்டணங்கள், ஆனால், நீதிமன்றம் எதிலும் பெறப்படும் கட்டணங்கள் நீங்கலாக.

பட்டியல் III—ஒருங்கியல் பட்டியல்

1. குற்றவியல் சட்டம்–இந்த அரசமைப்பின் தொடக்கநிலையில் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தில் உள்ளடங்கிய அனைத்துப் பொருட்பாடுகளும் உள்ளடங்கலாக, ஆனால் I ஆம் பட்டியலிலோ IIஆம் பட்டியலிலோ குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகள் எவற்றையும் பொறுத்த சட்டங்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் நீங்கலாக மற்றும் குடியியல் அதிகாரத்திற்கு உதவும் வகையில் கடல், தரை அல்லது வான் படைகளை அல்லது ஒன்றியத்துப் பிற ஆயுதப் படைகள் எவற்றையும் பயன்படுத்துதல் நீங்கலாக.

2. குற்றவியல் நெறிமுறை—இந்த அரசமைப்பின் தொடக்கநிலையில் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டத்தில் உள்ளடங்கிய அனைத்துப் பொருட்பாடுகளும் உள்ளடங்கலாக.

3. தடுப்புக்காவல்—ஒரு மாநிலத்தின் பாதுகாப்பு, பொது ஒழுங்கமைதி பேணுதல் அல்லது சமுதாயத்திற்கு இன்றியமையாத பொருள்களை வழங்குவதையும் பணியங்களையும் பேணிவருதல் தொடர்பான காரணங்களுக்காகத் தடுப்புக்காவலில் வைத்தல்; அத்தகைய காவலில் வைக்கப்பட்டவர்கள்.

4. கைதிகளையும் குற்றஞ்சார்த்தப்பெற்றவர்களையும், இந்தப் பட்டியலின் 3ஆம் பதிவில் குறித்துரைக்கப்பட்ட காரணங்களுக்காகத் தடுப்புக் காவலில் வைக்கப்பெற்றவர்களையும், ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுதல்.

5. திருமணமும் மணமுறிவும்; குழந்தைகளும் இளவர்களும்; மகவேற்பு; விருப்புறுதிகள் விருப்புறுதியற்ற நிலை மற்றும் உரிமைஇறக்கம்; கூட்டுக் குடும்பமும் பாகப்பிரிவினையும்; இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, நீதிமுறை நடவடிக்கைகளில் தரப்பினர்களாக இருந்தவர்கள் எந்தப் பொருட்பாடுகள் பொறுத்துத் தங்கள் இனமுறைச் சட்டத்திற்கு உட்பட்டவர்களாக இருந்தார்களோ அந்தப் பொருட்பாடுகள் அனைத்தும்.

6. வேளாண் நிலம் அல்லாத பிற சொத்தின் உரிமைமாற்றம் ஒப்பாவணங்களையும் ஆவணங்களையும் பதிவு செய்தல்.

7. ஒப்பந்தங்கள்—கூட்டாண்மை முகமை, ஏற்றிச் செல்லும் ஊர்தி ஒப்பந்தங்கள், பிற தனியுறு ஒப்பந்த வகைகள் உள்ளடங்களாக, ஆனால், வேளாண் நிலம் தொடர்பான ஒப்பந்தங்கள் நீங்கலாக.

8. வழக்குத் தொடர்வதற்குற்ற தீங்குகள்.

9. சிலவகை வணிகத்தில் நொடிப்புநிலை மற்றும் நொடிப்புநிலை.

10. பொறுப்புக்கட்டளைகளும் பொறுப்புக்கட்டளையர்களும்.

11. தலைமைக் காப்பாட்சியாளர்கள் மற்றும் அரசுப் பொறுப்புக்கட்டளையர்கள்.

11.அ. நீதி நிருவாகம்; உச்ச நீதிமன்றமும் உயர் நீதிமன்றங்களும் நீங்கலாக, அனைத்து நீதிமன்றங்களின் அமைப்பும் செயலமைப்பும்.

12. சான்றும் ஆணைமொழிகளும்; சட்டங்கள், அரசுச் செயல்கள், அரசுப் பதிவணங்கள், நீதிமுறை நடவடிக்கைகள் ஆகியவை குறித்த சான்றேற்பு.

13. உரிமையியல் நெறிமுறை–இந்த அரசமைப்பின் தொடக்க நிலையில் உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தில் உள்ளடங்கிய பொருட்பாடுகள் அனைத்தும் உள்ளடங்கலாக, காலவரம்பு மற்றும் பொதுவர்தீர்ப்பு.

14. நீதிமன்ற அவமதிப்பு, ஆனால் உச்ச நீதிமன்ற அவமதிப்பு நீங்கலாக.

15. நாடோடியாகத் திரிதல்; நிலையின்றி இடம் பெயரும் பழங்குடியினர்.

16. பித்துநிலை மற்றும் மனநலக்கேடு—பித்தர்கள், மனநலக்கேடுடையவர்கள் ஆகியவர்களை ஏற்றுக்காப்பதற்கான அல்லது அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கான இடங்கள் உள்ளடங்கலாக.

17. விலங்குகளுக்குக் கொடுமை இழைப்பதைத் தடுத்தல்.

17அ. வனங்கள்.

17ஆ. வன விலங்குகளையும் பறவைகளையும் பாதுகாத்தல்.

18. உணவுப் பொருள்களிலும் பிற சரக்குகளிலும் கலப்படம்.

19. மருந்துப் பொருள்களும் நச்சுப் பொருள்களும், அபினைப் பொறுத்தவரை, I ஆம் பட்டியலின் 59 ஆம் பதிவிலுள்ள வகையங்களுக்கு உட்பட்டு.

20. பொருளாதார மற்றும் சமுதாயத் திட்டமிடுதல்.

20அ. மக்கள்தொகைக் கட்டுப்பாடு மற்றும் குடும்பநலத் திட்டம்.

21. வாணிப மற்றும் தொழில்துறையில் ஒரு தனியுரிமை நிறுவகங்கள்; இணையங்கள் மற்றும் பொறுப்புக்கட்டளைகள்.

22. தொழிற்சங்கங்கள்; தொழில்துறை மற்றும் தொழிலாளர் பூசல்கள்;

23. சமுதாயப் பாதுகாப்பு மற்றும் சமுதாயக் காப்பீடு ; வேலையமர்த்தம் மற்றும் வேலையின்மை.

24. தொழிலாளர் நல்வாழ்வு—வேலை நிலைமைகள், வருங்காலக் காப்பு நிதியங்கள், வேலைக்கமர்த்துவோரின் கடப்பாடு, உழைப்பாளர்களுக்கான சரியீடு, உடல்ஊனம் மற்றும் முதுமைக்கால ஓய்வூதியங்கள், மகப்பேறுகால நலன்கள் உள்ளடங்கலாக.

25. கல்வி : I ஆம் பட்டியலின் 63, 64, 65, 66 ஆகிய பதிவுகளின் வகையங்களுக்கு உட்பட்டு தொழில்நுட்பக்கல்வி, மருத்துவக் கல்வி, பல்கலைக்கழகங்கள் உள்ளடங்கலாக; தொழிலாளருக்கு உறுதிதொழிற்பயிற்சியும் தொழில்நுட்பப் பயிற்சியும்.

26. சட்ட, மருத்துவ மற்றும் பிற விழைதொழில்கள்.

27. இந்தியா மற்றும் பாகிஸ்தான் தன்னாட்சியங்கள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக முன்பிருந்த உறைவிடத்திலிருந்து இடம்பெயர்ந்து சென்றவர்களுக்கான தீருதவி மற்றும் மறுவாழ்வளிப்பு.

28. அறப்பணிகள் மற்றும் அறப்பணி நிறுவனங்கள்; அறப்பணி மற்றும் சமயக் கட்டளைகள்; சமய நிறுவனங்கள்.

29. மனிதரை, விலங்குகளை அல்லது செடியினங்களைப் பீடிக்கும் தொற்று நோய்கள் அல்லது ஒட்டுநோய்கள் அல்லது நச்சுப்பூச்சிகள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொன்றிற்குப் பரவுவதைத் தடுத்தல்.

30. பிறப்பு—இறப்புப் புள்ளிவிவரங்கள்; பிறப்பு இறப்புகளைப் பதிவு செய்தல் உள்ளடங்கலாக.

31. துறைமுகங்கள்—நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தாலோ அதன் வழியாலோ அல்லது நிலவுறும் சட்டத்தாலோ அதன் வழியாலோ பெருந்துறைமுகங்கள் என விளம்பப்பட்டவை நீங்கலாக.

32. எந்திரத்தால் உந்தப்படும் கலங்களைப் பொறுத்து, உள்நாட்டு நீர் வழிகளில் கப்பல் போக்குவரத்தும் கப்பல் பயணமும் அத்தகைய நீர்வழித் தடவிதிகளும்; மற்றும் தேசிய நீர்வழிகளைப் பொறுத்து I ஆம் பட்டியலின் வகையங்களுக்கு உட்பட்டு, உள்நாட்டு நீர்வழிகளில் பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்லுதல்.

33. (அ) ஒன்றியத்தின் கட்டாள்கையில் இருப்பது பொது நலனுக்கு உகந்தது என நாடாளுமன்றம் சட்டத்தினால் விளம்பும் விசைத்தொழில் எதனின் ஆகுபொருள்கள் மற்றும் அதே ஆகுபொருள்களின் வகையைச் சேர்ந்த இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகள்,

(ஆ) உண்தகு எண்ணெய் வித்துக்களும் எண்ணெய்களும் உள்ளடங்கலான உணவுப்பொருள்கள்.

(இ) பிண்ணாக்கு மற்றும் பிற செறிமங்கள் உள்ளடங்கலான கால்நடைத் தீவனம்,

(ஈ) கொட்டை நீக்கப்பட்டதாகவோ கொட்டை நீக்கப்படாதாகவோ உள்ள பண்படுத்தப்படாத பருத்தி மற்றும் பருத்திக்கொட்டை,

(உ) பண்படுத்தப்படாத சணல்.

இவற்றில் வணிகமும் வாணிபமும், இவற்றை விளைவித்தலும் வழங்குதலும் பகிர்ந்தளித்தலும்.

33அ. எடைகளும் அளவுகளும்–தரநிலைகளை நிருமிப்பது நீங்கலாக.

34. விலைவாசிக் கட்டுப்பாடு.

35. எந்திரத்தால் உந்தப்படும் ஊர்திகள்–அத்தகைய ஊர்திகள் மீதான வரிகள் விதிக்கப்படவேண்டிய நெறிகள் உள்ளடங்கலாக.

36. தொழிற்சாலைகள்.

37. கொதிகலன்கள்.

38. மின்விசை.

39. செய்தித்தாள்கள், நூல்கள் மற்றும் அச்சகங்கள்.

40. தொல்பொருளாய்விடங்களும் சிதைவுகளும்–நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தாலோ அதன் வழியாலோ தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என விளம்பப்பட்டவை நீங்கலாக.

41. நாடுவிட்டு அகன்றோர் சொத்து எனச் சட்டத்தினால் விளம்பப்பட்ட (வேளாண் நிலம் உள்ளடங்கலான) சொத்தினைக் கையடைவு கொள்ளல், மேலாண்மை செய்தல் மற்றும் அயலடைவு செய்தல்.

42. சொத்தினைக் கையகப்படுத்தலும் வேண்டுறுத்திப் பெறுதலும்.

43. வரிகளையும், ஒரு மாநிலத்திற்கு வெளியே எழுகின்ற நில வருவாய் நிலுவைகளும் அத்தகைய நிலுவைகளாக வசூலிக்கத்தக்க பணத்தொகைகளும் உள்ளடங்கலாக அரசுக்கு வரவேண்டியவற்றைப் பொறுத்துக் கோரப்படும் தொகைகளையும் அந்த மாநிலத்தில் வசூலித்தல்.

44. நீதிமன்ற முத்திரைத்தாள் வகையில் ஈட்டப்படும் தீர்வைகள் அல்லது கட்டணங்கள், முத்திரைத் தீர்வைகள், ஆனால், முத்திரைத் தீர்வை வீதங்கள் நீங்கலாக.

45. IIஆம் பட்டியலில் அல்லது IIIஆம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்த விசாரணைகளும் புள்ளிவிவரங்களும்.

46. இந்தப் பட்டியலிலுள்ள பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்து, உச்ச நீதிமன்றம் நீங்கலாக, அனைத்து நீதிமன்றங்களின் அதிகாரவரம்பும் அதிகாரங்களும்.

47. இந்தப் பட்டியலிலுள்ள பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்த கட்டணங்கள், ஆனால், நீதிமன்றம் எதிலும் பெறப்படும் கட்டணங்கள் நீங்கலாக.

எட்டாம் இணைப்புப்பட்டியல்

[344(1), 351 ஆகிய உறுப்புகள்]

மொழிகள்

1. அசாமியம்

2. வங்காளி

[1][3. போடோ

4. தோக்ரி]

[2][5]. குஜராத்தி

[3][6]. இந்தி

[3][7]. கன்னடம்

[3][8]. காஷ்மீர்

[3][9]. கொங்கணி

[4][10. மைதிலி]

[5][11]. மலையாளம்

[6][12]. மணிப்புரி

[6][13]. மராத்தி

[6][14]. நேப்பாளி

[6][15]. ஒரியா

[6][16]. பஞ்சாபி

[6][17]. சமஸ்கிருதம்

[7][18. சந்தாலி]

[8][19]. சிந்தி

[9][20]. தமிழ்

[9][21]. தெலுங்கு

[9][22]. உருது

---

1. 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று இரண்டாம் திருத்தம்) சட்டத்தால் புகுத்தப்பட்டது.
2. பதிவு 3, மேற்படி சட்டத்தால் பதிவு 5 என மறு எண்ணிடப்பட்டது.
3. பதிவுகள் 4 முதல் 7 வரை, மேற்படி சட்டத்தால் பதிவுகள் 6 முதல் 9 வரை என மறு எண்ணிடப்பட்டது.
4. மேற்படி சட்டத்தால் புகுத்தப்பட்டது.
5. பதிவு 8, மேற்படி சட்டத்தால் பதிவு 11 என மறு எண்ணிடப்பட்டது.
6. பதிவுகள் 9 முதல் 14 வரை, மேற்படி சட்டத்தால் பதிவுகள் 12 முதல் 17 வரை என மறு எண்ணிடப்பட்டது.
7. மேற்படி சட்டத்தால் புகுத்தப்பட்டது.
8. பதிவு 15, மேற்படி சட்டத்தால் பதிவு 19 என மறு எண்ணிடப்பட்டது.
9. பதிவுகள் 16 முதல் 18 வரை, மேற்படி சட்டத்தால் பதிவுகள் 20 முதல் 22 வரை என மறு எண்ணிடப்பட்டது.

ஒன்பதாம் இணைப்புப்பட்டியல்

(31ஆ உறுப்பு)

1. 1950ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்த்திருத்தங்கள் சட்டம் (பீகார் சட்டம் XXX/1950).
2. 1948 ஆம் ஆண்டு பம்பாய் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் சட்டம் (பம்பாய் சட்டம் LXVII/1948).
3. 1949ஆம் ஆண்டு பம்பாய் மாலிகி நிலப்பிடிமானமுறை ஒழிப்புச் சட்டம் (பம்பாய் சட்டம் LXI/1949).
4. 1949ஆம் ஆண்டு பம்பாய் தாலுக்தாரி நிலப்பிடிமானமுறை ஒழிப்புச் சட்டம் (பம்பாய் சட்டம் LXII/1949).
5. 1949 ஆம் ஆண்டு பஞ்ச் மஹல்கள் மேஹ்வாசி நிலப்பிடிமானமுறை ஒழிப்புச் சட்டம் (பம்பாய் சட்டம் LXIII/1949).
6. 1950ஆம் ஆண்டு பம்பாய் கோதீ ஒழிப்புச் சட்டம் (பம்பாய் சட்டம் VI/1950).
7. 1950ஆம் ஆண்டு பம்பாய் பரகானா மற்றும் குல்கர்னி வதன் ஒழிப்புச் சட்டம் (பம்பாய் சட்டம் LX/1950).
8. 1950ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச நிலவுடைமை உரிமைகள் ஒழிப்பு (உரிமை நிலச் சொத்துக்கள், மஹல்கள், மாற்றாக்கம் செய்யப்பட்ட நிலங்கள்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் I/1951).
9. 1948 ஆம் ஆண்டு சென்னை உரிமைநிலச் சொத்துகள் (ஒழிப்பு மற்றும் நேர்க்குடிவாரமுறையாக நிலைமாற்றம்) சட்டம் (சென்னைச் சட்டம் XXVI/1948).
10. 1950 ஆம் ஆண்டு சென்னை உரிமைநிலச் சொத்துகள் (ஒழிப்பு மற்றும் நேர்க்குடிவாரமுறையாக நிலைமாற்றம்) திருத்தச் சட்டம் (சென்னைச் சட்டம் I/1950).
11. 1950 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச ஜமீன்தாரி ஒழிப்பு மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் I/1951).
12. 1358 ஆம் பசலி ஐதராபாத் (ஜாகீர்கள் ஒழிப்பு) ஒழுங்குறுத்தும்விதி (எண் LXIX/ 1358 பசலி).
13. 1359 ஆம் பசலி ஐதராபாத் ஜாகீர்கள் (இனமாற்றுதல்) ஒழுங்குறுத்தும்விதி (எண் XXV/1359 பசலி).
14. 1950 ஆம் ஆண்டு பீகார் இடம் பெயர்ந்தவர்களின் மறுவாழ்வளிப்பு (நிலம் கையகப்படுத்துதல்) சட்டம் (பீகார் சட்டம் XXXVIII/1950)
15. 1948 ஆம் ஆண்டு ஐக்கிய மாகாணங்கள் நிலம் கையகப்படுத்துதல் (அகதிகள் மறுவாழ்வளிப்பு) சட்டம் (ஐ.மா. சட்டம் XXVI/1948).
16. 1948 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்தவர்களின் மறுகுடியமர்வு (நிலம் கையகப்படுத்துதல்) சட்டம் (சட்டம் LX/1948).
17. 1938 ஆம் ஆண்டு காப்பீடு சட்டத்தின் (சட்டம் IV/1938) 52அ முதல் 52எ வரை உள்ள பிரிவுகள்—1950 ஆம் ஆண்டு காப்பீடு (திருத்தம்) சட்டத்தின் (சட்டம் XLVII/ 1950) 42ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது.
18. 1951 ஆம் ஆண்டு இருப்பூர்திய நிறுமங்கள் (நெருக்கடிநிலை வகையங்கள்) சட்டம் (சட்டம் I/1951).

19. 1951 ஆம் ஆண்டு விசைத்தொழில்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குறுத்தம்) சட்டத்தின் (சட்டம் LXV/1951) அத்தியாயம் IIIஅ, 1953ஆம் ஆண்டு விசைத்தொழில்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குறுத்தம்) திருத்தச் சட்டத்தின் (சட்டம் XXVI/1953) 13 ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது.

20. 1948 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நில மேம்பாடு மற்றும் திட்டமிடுதல் சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXI/1948) மேற்கு வங்காளச் சட்டம் XXIX/1951 ஆல் திருத்தம் செய்யப்பட்டது.

21. 1961 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்புச் சட்டம் (ஆந்திரப் பிரதேசச் சட்டம் X/1961).

22. 1961 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச (தெலுங்கானா பரப்பிடம்) குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் (செல்லுந்தன்மையாக்குதல்) சட்டம் (ஆந்திரப் பிரதேசச் சட்டம் XXI/1961).

23. 1961 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச (தெலுங்கானா பரப்பிடம்) இஜாரா மற்றும் கௌலி நிலம் முறைகேடான பட்டாக்கல் நீக்கறவு செய்தல் மற்றும் சலுகைத் தீர்வை ஒழித்தல் சட்டம் (ஆந்திரப் பிரதேசச் சட்டம் XXXVI/1961).

24. 1959 ஆம் ஆண்டு பொதுத் தன்மையதான சமய அல்லது அற நிறுவனத்துக்கு உரிய நிலங்களை அசாம் அரசு கையகப்படுத்துதல் சட்டம் (அசாம் சட்டம் IX/1961).

25. 1953 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் XX/1954).

26. 1961 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்புப் பரப்பிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகையான நிலத்தைக் கையகப்படுத்துதல்) சட்டம் (பீகார் சட்டம் XII/1962) (இந்தச் சட்டத்தின் 28ஆம் பிரிவு தவிர).

27. 1954 ஆம் ஆண்டு பம்பாய் தாலுக்தாரி நிலப்பிடிமானமுறை ஒழிப்பு (திருத்தம்) சட்டம் (பம்பாய் சட்டம் I/1955).

28. 1957 ஆம் ஆண்டு பம்பாய் தாலுக்தாரி நிலபிடிமானமுறை ஒழிப்பு (திருத்தம்) சட்டம் (பம்பாய் சட்டம் XVIII/1958).

29. 1958 ஆம் ஆண்டு பம்பாய் இனாம்கள் (கட்ச் பரப்பிடம்) ஒழிப்புச் சட்டம் (பம்பாய் சட்டம் XCVIII/1958).

30. 1960 ஆம் ஆண்டு பம்பாய் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் (குஜராத் திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் XVI/1960).

31. 1960 ஆம் ஆண்டு வேளாண் நிலங்கள் உச்சவரம்புச் சட்டம் (குஜராத் சட்டம் XXVII/1961).

32. 1962 ஆம் ஆண்டு சக்பாரா மற்றும் மேஹ்வாசி உரிமைநிலச் சொத்துக்கள் (நிலவுடைமை உரிமைகள் ஒழிப்பு முதலியன) ஒழுங்குறுத்தும்விதி (குஜராத் ஒழுங்குறுத்தும்விதி I/1962).

33. 1963 ஆம் ஆண்டு குஜராத் எஞ்சிய மாற்றாக்கங்கள் ஒழிப்புச் சட்டம் (குஜராத் சட்டம் XXXIII/1963) அதன் 2ஆம் பிரிவின் (3)ஆம் கூறின் (ஈ) உட்கூறில் குறிப்பிடப்பட்ட மாற்றாக்கத்திற்கு இந்தச் சட்டம் தொடர்புடையதாயிருக்கிற அளவுக்குத் தவிர.

34. 1961 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைபற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXVII/1961).

35. 1961 ஆம் ஆண்டு ஐதராபாத் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் (மறுசட்டமியற்றல், செல்லுந்தன்மையதாக்குதல் மற்றும் கூடுதல் திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XLV/1961).

36. 1950 ஆம் ஆண்டு ஐதராபாத் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் சட்டம் (ஐதராபாத் சட்டம் XXI/1950).

37. 1960 ஆம் ஆண்டு ஜன்மீகரம் செலுத்தம் (ஒழிப்பு) சட்டம் (கேரளச் சட்டம் III/1961).

38. 1961 ஆம் ஆண்டு கேரள நிலவரிச் சட்டம் (கேரளச் சட்டம் XIII/1961).

39. 1963 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (கேரளச் சட்டம் I/1964).

40. 1959 ஆம் ஆண்டு மத்தியப்பிரதேச நில வருவாய்த் தொகுப்புச்சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் XX/1959).

41. 1960 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச வேளாண் கைபற்று நிலங்கள் மீதான உச்சவரம்புச் சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் XX/1960).

42. 1955 ஆம் ஆண்டு சென்னை பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டம் (சென்னைச் சட்டம் XXV/1955).

43. 1956 ஆம் ஆண்டு சென்னை பயிரிடும் குத்தகைக்காரர்கள் (நியாயமான குத்தகைத் தொகைச் செலுத்தம்) சட்டம் (சென்னைச் சட்டம் XXIV/1956).

44. 1961 ஆம் ஆண்டு சென்னைக் குடியிருப்புக் கையுடைமையாளர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்டம் (சென்னைச் சட்டம் XXXVIII/1961).

45. 1961 ஆம் ஆண்டு சென்னைப் பொதுப் பொறுப்பமைவுகள் (வேளாண் நிலங்களை நிருவகிப்பதை ஒழுங்குறுத்துதல்) சட்டம் (சென்னைச் சட்டம் LVII/1961).

46. 1961 ஆம் ஆண்டு சென்னை நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பு நிருணயித்தல்) சட்டம் (சென்னைச் சட்டம் LVIII/1961).

47. 1952 ஆம் ஆண்டு மைசூர் குத்தகையுரிமைச் சட்டம் (மைசூர் சட்டம் XIII/1952).

48. 1957 ஆம் ஆண்டு குடகு குத்தகைக்காரர்கள் சட்டம் (மைசூர் சட்டம் XIV/1957).

49. 1961 ஆம் ஆண்டு மைசூர் ஊர் அலுவலர் பதவிகள் ஒழிப்புச் சட்டம் (மைசூர் சட்டம் XIV/1961).

50. 1961 ஆம் ஆண்டு ஐதராபாத் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் (செல்லுந்தன்மையதாக்குதல்) சட்டம் (மைசூர் சட்டம் XXXVI/1961).

51. 1961 ஆம் ஆண்டு மைசூர் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (மைசூர் சட்டம் X/1962).

52. 1960 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (ஒரிசாச் சட்டம் XVI/1960).

53. 1963 ஆம் ஆண்டு ஒரிசா ஒருங்கிணைந்த ஆட்சிநிலவரைகள் (ஊர் அலுவலர் பதவிகள் ஒழிப்பு) சட்டம் (ஒரிசாச் சட்டம் X/1963).

54. 1953 ஆம் ஆண்டு பஞ்சாப் நிலப்பிடிமான முறைகள் காப்புறுதிச் சட்டம் (பஞ்சாப் சட்டம் X/1953).

55. 1955 ஆம் ஆண்டு ராஜஸ்தான் குத்தகையுரிமைச் சட்டம் (ராஜஸ்தான் சட்டம் III/1955).

56. 1959 ஆம் ஆண்டு ராஜஸ்தான் ஜமீன்தாரி மற்றும் விஸ்வேதாரி ஒழிப்புச் சட்டம் (ராஜஸ்தான் சட்டம் VIII/1959).

57. 1960 ஆம் ஆண்டு ஹுமாயூன் மற்றும் உத்தரகண்ட் ஜமீன்தாரி ஒழிப்பு மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் XVII/1960).

58. 1960 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச கைபற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு விதித்தல் சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் I/1961).

59. 1953 ஆம் ஆண்டு மேற்கு வங்காள உரிமை நிலச் சொத்துகள் கையகப்படுத்துதல் சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் I/1954).

60. 1955 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் X/1956).

61. 1954 ஆம் ஆண்டு தில்லி நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (தில்லிச் சட்டம் III/1954).

62. 1960 ஆம் ஆண்டு தில்லி கைப்பற்று நிலங்கள் (உச்சவரம்பு) சட்டம் (மையச் சட்டம் 24/1960).

63. 1960 ஆம் ஆண்டு மணிப்பூர் நில வருவாய் மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (மையச் சட்டம் 33/1960).

64. 1960 ஆம் ஆண்டு திரிபுரா நில வருவாய் மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (மையச் சட்டம் 43/1960).

65. 1969 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 35/1969).

66. 1971 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 25/1971).

67. 1973 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச நிலச் சீர்திருத்தங்கள் (வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) சட்டம் (ஆந்திரப் பிரதேசச் சட்டம் I/1973).

68. 1972 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்புப் பரப்பிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகை நிலம் கையகப்படுத்துதல்) (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் I/1973).

69. 1973 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்புப் பரப்பிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகை நிலம் கையகப்படுத்துதல்) (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் IX/1973).

70. 1972 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் V/1972).

71. 1972 ஆம் ஆண்டு குஜராத் வேளாண் நிலங்கள் உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் 2/1974).

72. 1972 ஆம் ஆண்டு அரியானா கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்புச் சட்டம் (அரியானாச் சட்டம் 26/1972).

73. 1972 ஆம் ஆண்டு இமாச்சலப் பிரதேசக் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்புச் சட்டம் (இமாச்சலப் பிரதேசச் சட்டம் 19/1973).

74. 1972 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 17/1972).

75. 1972 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 12/1974).

76. 1972 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 13/1974).

77. 1973 ஆம் ஆண்டு மைசூர் நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கர்நாடகச் சட்டம் 1/1974).

78. 1972 ஆம் ஆண்டு பஞ்சாப் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (பஞ்சாப் சட்டம் 10/1973).

79. 1973 ஆம் ஆண்டு ராஜஸ்தான் வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு விதித்தல் சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 11/1973).

80. 1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜென்மம் உரிமைநிலச் சொத்துகள் (ஒழிப்பு மற்றும் நேர்க்குடிவார முறையாக நிலைமாற்றம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1969).

81. 1972 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XII/1972).

82. 1964 ஆம் ஆண்டு மேற்கு வங்காள உரிமை நிலச் சொத்துகள் கையகப்படுத்துதல் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXII/1964).

83. 1973 ஆம் ஆண்டு மேற்கு வங்காள உரிமை நிலச் சொத்துகள் கையகப்படுத்துதல் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXXIII/1973).

84. 1972 ஆம் ஆண்டு பம்பாய் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் (குஜராத் திருத்தம்) சட்டம் 5/1973).

85. 1974 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 9/1974).

86. 1974 ஆம் ஆண்டு திரிபுரா நில வருவாய் மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (திரிபுரா சட்டம் 7/1974).

[1][87. * * *]

88. 1951 ஆம் ஆண்டு விசைத்தொழில்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குறுத்தம்) சட்டம் (மையச் சட்டம் 65/1951).

89. 1952 ஆம் ஆண்டு நிலையியல் சொத்தினை வேண்டுறுத்திக் கையகப்படுத்துதல் சட்டம் (மையச் சட்டம் 30/1952).

90. 1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குறுத்தம் மற்றும் மேம்பாடு) சட்டம் (மையச் சட்டம் 67/1957).

91. 1969 ஆம் ஆண்டு ஒருதனியுரிமைகள் மற்றும் வரையறுக்கப்பட்ட வாணிகப் பழக்கங்கள் சட்டம் (மையச் சட்டம் 54/1969).

[1][92. * * *]

93. 1971 ஆம் ஆண்டு கல்கரிக்கான நிலக்கரிச் சுரங்கங்கள் (நெருக்கடி நிலை வகையங்கள்) சட்டம் (மையச் சட்டம் 64/1971).

94. 1972 ஆம் ஆண்டு கல்கரிக்கான நிலக்கரிச் சுரங்கங்கள் (தேசிய மயமாக்குதல்) சட்டம் (மையச் சட்டம் 36/1972).

95. 1972 ஆம் ஆண்டு பொதுவான காப்பீட்டுத் தொழில் (தேசியமயமாக்குதல்) சட்டம் (மையச் சட்டம் 57/1972).

96. 1972 ஆம் ஆண்டு இந்தியச் செப்புக் கூட்டுருமம் (பொறுப்பேற்பு நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்டம் (மையச் சட்டம் 58/1972).

97. 1972 ஆம் ஆண்டு நலிவுற்ற நெசவுப் பொறுப்பேற்பு நிறுவனங்கள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) சட்டம் (மையச் சட்டம் 72/1972).

98. 1973 ஆம் ஆண்டு நிலக்கரிச் சுரங்கங்கள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) சட்டம் (மையச் சட்டம் 15/1973).

[1. 1978 ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து நான்காம் திருத்தம்) சட்டத்தின் 44 ஆம் பிரிவினால் (20–6–1979 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.]

99. 1973 ஆம் ஆண்டு நிலக்கரிச் சுரங்கங்கள் (தேசியமயமாக்குதல்) சட்டம் (மையச் சட்டம் 26/1973).

100. 1973 ஆம் ஆண்டு அயல்நாட்டு நாணயமாற்று ஒழுங்குறுத்தம் சட்டம் (மையச் சட்டம் 46/1973).

101. 1973 ஆம் ஆண்டு அல்காக் ஆஷ்டவுன் நிறுமம் வரம்பிடப்பட்டது (பொறுப்பேற்பு நிறுவனங்களைக் கையகப்படுத்துதல்) சட்டம் (மையச் சட்டம் 56/1973).

102. 1974 ஆம் ஆண்டு நிலக்கரிச் சுரங்கங்கள் (பேணிக்காத்தல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம் (மையச் சட்டம் 28/1974).

103. 1974 ஆம் ஆண்டு கூடுதல் பதவியூதியங்கள் (கட்டாய வைப்பீடு) சட்டம் (மையச் சட்டம் 37/1974).

104. 1974 ஆம் ஆண்டு அயல்நாட்டு நாணயமாற்றைப் பேணிக்காத்தல் மற்றும் கள்ளக்கடத்தல் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (மையச் சட்டம் 52/1974).

105. 1974 ஆம் ஆண்டு நலிவுற்ற நெசவப் பொறுப்பேற்பு நிறுவனங்கள் (தேசியமயமாக்குதல்) சட்டம் (மையச் சட்டம் 57/1974).

106. 1964 ஆம்ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) சட்டம் (மகாரஷ்டிரச் சட்டம் XVI/1965).

107. 1965 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXXII/1965).

108. 1968 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) (மகாராஷ்டிரச் சட்டம் XVI/1968).

109. 1968 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXXIII/1968).

110. 1969 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXXVII/1969).

111. 1969 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXXVIII/1969).

112. 1970 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXVII/1970).

113. 1972 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XIII/1972).

114. 1973 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம L/1973).

115. 1965 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 13/1965).

116. 1966ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 8/1967).

117. 1967 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 13/1967).

118. 1969 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 13/1969).

119. 1970 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 18/1970).

120. 1972 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசக் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு விதித்தல் (திருத்தம்) சட்டம் (உத்தரப் பிரதேசச் சட்டம் 18/1973).

121. 1974 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசக் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு விதித்தல் (திருத்தம்) சட்டம் (உத்தரப் பிரதேசச் சட்டம் 2/1975).

122. 1975 ஆம் ஆண்டு திரிபுரா நில வருவாய் மற்றும் நிலச் சீர்த்திருத்தங்கள் (மூன்றாம் திருத்தம்) சட்டம் (திரிபுரா சட்டம் 3/1975).

123. 1971 ஆம் ஆண்டு தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி நிலச் சீர்த்திருத்தங்கள் ஒழுங்குறுத்தும்விதி (3/1971).

124. 1973 ஆம் ஆண்டு தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) ஒழுங்குறுத்தும்விதி (5/1973).

125. 1939 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் 66அ பிரிவு மற்றும் அத்தியாயம் IVஅ (மையச் சட்டம் 4/1939).

126. 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பண்டங்கள் (மையச் சட்டம் 10/1955).

127. 1976 ஆம் ஆண்டு கள்ளக்கடத்தல்காரர்கள் மற்றும் அயல்நாட்டு நாணயமாற்றுப் புரட்டுச்செய்வோர் (சொத்துப்பறிமுதல்) சட்டம் (மையச் சட்டம் 13/1976).

128. 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டம் (மையச் சட்டம் 19/1976).

129. 1976 ஆம் ஆண்டு அயல்நாட்டு நாணயமாற்றைப் பேணிகாத்தல் மற்றும் கள்ளக்கடத்தல் நடவடிக்கைகள் தடுப்பு (திருத்தம்) சட்டம் (மையச் சட்டம் 20/1976).

[1][130. * * * *]

131. 1976 ஆம் ஆண்டு கட்டாய கொள்முதல் சர்க்கரை விலை சமன் மையாக்கு நிதியச் சட்டம் (மையச் சட்டம் 31/1976).

132. 1976 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குறுத்தம்) சட்டம் (மையச் சட்டம் 33/1976).

133. 1976 ஆம் ஆண்டு ஒன்றியத்துக் கணக்குகள் துறைப்படுத்தப்படுதல் (பணியாளர்களை மாற்றுதல்) சட்டம் (மையச் சட்டம் 59/1976).

134. 1956 ஆம் ஆண்டு அசாம் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு நிர்ணயித்தல் சட்டம் (அசாம் சட்டம் I/1957).

135. 1958 ஆம் ஆண்டு பம்பாய் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் (விதர்பா வட்டாரம்) சட்டம் (பம்பாய் சட்டம் XCIX/1958).

136. 1972 ஆம் ஆண்டு குஜராத் தனியார் காடுகள் (கையகப்படுத்துதல்) சட்டம் (குஜராத் சட்டம் 14/1973).

---

[1] 1978 ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து நான்காம் திருத்தம்) சட்டத்தின் 44ஆம் பிரிவினால் (20–6–1979 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.

137. 1976 ஆம் ஆண்டு அரியாணாக் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (அரியாணாச் சட்டம் 17/1976).

138. 1972 ஆம் ஆண்டு இமாச்சலப் பிரதேசக் குத்தகையுரிமை மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (இமாச்சலப் பிரதேசச் சட்டம் 8/1974).

139. 1974 ஆம் ஆண்டு இமாச்சலப் பிரதேச ஊர்ப் பொது நிலங்கள் உற்றமைதல் மற்றும் பயன்பாட்டுச் சட்டம் (இமாச்சலப் பிரதேசச் சட்டம் 18/1974).

140. 1974 ஆம் ஆண்டு கர்நாடக நிலச் சீர்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம் மற்றும் பல்வகை வகையங்கள்) சட்டம் (கர்நாடகச் சட்டம் 31/1974).

141. 1976 ஆம் ஆண்டு கர்நாடக நிலச் சீர்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (கர்நாடகச் சட்டம் 27/1976).

142. 1966 ஆம் ஆண்டு கேரள வெளியேற்றுகைத் தடுப்புச் சட்டம் (கேரளச் சட்டம் 12/1966).

143. 1969 ஆம் ஆண்டு திருப்புவாராச் செலுத்தம் (ஒழிப்பு) சட்டம் (கேரளச் சட்டம் 19/1969).

144. 1969 ஆம் ஆண்டு ஸ்ரீபாதம் நிலங்கள் விடுவிப்புச் சட்டம் (கேரளச் சட்டம் 20/1969).

145. 1971 ஆம் ஆண்டு ஸ்ரீபண்டாரவகை நிலங்கள் (உற்றமைதல் மற்றும் விடுவிப்பு) சட்டம் (கேரளச் சட்டம் 20/1971).

146. 1971 ஆம் ஆண்டு கேரளா தனியார் காடுகள் (உற்றமைதல் மற்றும் குறித்தளித்தல்) சட்டம் (கேரளச் சட்டம் 26/1971).

147. 1974 ஆம் ஆண்டு கேரள வேளாண் உழைப்பாளர்கள் சட்டம் (கேரளச் சட்டம் 18/1974.)

148. 1974 ஆம் ஆண்டு கேரள முந்திரித் தொழிற்சாலைகள் (கையகப்படுத்துதல்) சட்டம் (கேரளச் சட்டம் 29/1974).

149. 1975 ஆம் ஆண்டு கேரளச் சீட்டுகள் சட்டம் (கேரளச் சட்டம் 23/1975).

150. 1975 ஆம் ஆண்டு கேரளப் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (நிலங்களின் உரிமைமாற்றல் மீதான வரையறை மற்றும் மாற்றாக்கம் செய்யப்பட்ட நிலங்களின் மீட்டளிப்பு) சட்டம் (கேரளச் சட்டம் 31/1975).

151. 1976 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 15/1976).

152. 1976 ஆம் ஆண்டு காணம் குத்தகையுரிமை ஒழிப்புச் சட்டம் (கேரளச் சட்டம் 16/1976).

153. 1974 ஆம் ஆண்டு மத்தியப்பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (மத்தியப்பிரதேசச் சட்டம் 20/1974).

154. 1975 ஆம் ஆண்டு மத்தியப்பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (மத்தியப்பிரதேசச் சட்டம் 2/1976).

155. 1961 ஆம் ஆண்டு மேற்கு காந்தேஷ் மேஹ்வாசி உரிமை நிலச் சொத்துகள் (நிலவுடைமை உரிமைகள் ஒழிப்பு முதலியன) ஒழுங்குறுத்தும்விதி (மகாராஷ்டிர ஒழுங்குறுத்தும்விதி 1/1962).

156. 1974 ஆம் ஆண்டு மகாராஷ்டிர பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கு நிலங்கள் மீட்டளிப்புச் சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XIV/1975).

157. 1972 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பைக் குறைத்தல்) மற்றும் (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXI/1975).

158. 1975 ஆம் ஆண்டு மகாராஷ்டிரத் தனியார் காடுகள் (கையகப்படுத்துதல்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXIX/1975).

159. 1975 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பைக் குறைத்தல்) மற்றும் (திருத்தம்) திருத்தச் சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XLVII/1975).

160. 1975 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் II/1976).

161. 1951 ஆம் ஆண்டு ஒரிசா உரிமைநிலச் சொத்துகள் ஒழிப்புச் சட்டம் (ஒரிசாச் சட்டம் I/1952).

162. 1954 ஆம் ஆண்டு ராஜஸ்தான் குடியேற்றச் சட்டம் (ராஜஸ்தான் சட்டம் XXVII/1954).

163. 1963 ஆம் ஆண்டு ராஜஸ்தான் நிலச் சீர்த்திருத்தங்கள் மற்றும் நில உரிமையாளர்களின் உரிமை நிலச்சொத்துகள் கையகப்படுத்துதல் சட்டம் (ராஜஸ்தான் சட்டம் II/1964).

164. 1976 ஆம் ஆண்டு ராஜஸ்தான் வேளாண் கைப்பற்று நிலங்கள் மீது உச்சவரம்பு விதித்தல் (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 8/1976).

165. 1976ஆம் ஆண்டு ராஜஸ்தான் குத்தகையுரிமை (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 12/1976).

166. 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பு குறைப்பு) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 17/1970).

167. 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 41/1971).

168. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1972).

169. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/1972).

170. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) மூன்றாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 37/1972).

171. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) நான்காம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 39/1972).

172. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) ஆறாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 7/1974).

173. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) ஐந்தாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1974).

174. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1974).

175. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) மூன்றாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1974).

176. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/1974).

177. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1975).

178. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1975).

179. 1971 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச நிலச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் 21/1971), 1974 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச நிலச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் 34/1974) ஆகியவற்றினால், 1950 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச ஜமீன்தாரி ஒழிப்பு மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் சட்டத்திற்கு (உத்தரப்பிரதேசச் சட்டம் I/1951) செய்யப்பட்ட திருத்தங்கள்.

180. 1976ஆம் ஆண்டு உத்தரப்பிரதேசக் கைப்பற்று நிலங்கள் மீது உச்சவரம்பு விதித்தல் (திருத்தம்) சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் 20/1976).

181. 1972ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXVIII/1972).

182. 1973ஆம் ஆண்டு மேற்கு வங்காளம் மாற்றாக்கம் செய்யப்பட்ட நிலத்தின் மீட்டளிப்புச் சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXIII/1973).

183. 1974ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXXIII/1974).

184. 1975ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXIII/1975).

185. 1976ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XII/1976).

186. 1976ஆம் ஆண்டு தில்லிக் கைப்பற்று நிலங்கள் (உச்சவரம்பு) திருத்தச் சட்டம் (மையச் சட்டம் 15/1976).

187. 1975ஆம் ஆண்டு கோவா, தமண் மற்றும் டையூ முண்ட்கார்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்டம் (கோவா, தமண் மற்றும் டையூ சட்டம் 1/1976).

188. 1973ஆம் ஆண்டு பாண்டிச்சேரி நிலச் சீர்திருத்தங்கள் (நிலஉச்சவரம்பு நிருணயித்தல்) சட்டம் (பாண்டிச்சேரி சட்டம் 9/1974).

189. 1971ஆம் ஆண்டு அசாம் (தற்காலிகமாகக் குடியமர்த்தப்பட்ட பரப்பிடங்கள்) குத்தகையுரிமைச் சட்டம் (அசாம் சட்டம் XXIII/1971).

190. 1974ஆம் ஆண்டு அசாம் (தற்காலிகமாகக் குடியமர்த்தப்பட்ட பரப்பிடங்கள்) குத்தகையுரிமை (திருத்தம்) சட்டம் (அசாம் சட்டம் XVIII/1974).

191. 1974 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்புப் பரப்பிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகைநிலம் கையகப்படுத்துதல்) (திருத்தம்) திருத்துச் சட்டம் (பீகார் சட்டம் 13/1976).

192. 1976 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்புப் பரப்பிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகைநிலம் கையகப்படுத்துதல்) (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 22/1976).

193. 1978 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்புப் பரப்பிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகை நிலம் கையகப்படுத்துதல்) (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் VII/1978).

194. 1979 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (பீகார் திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 2/1980).

195. 1977 ஆம் ஆண்டு அரியானா கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (அரியானா சட்டம் 14/1977).

196. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1978).

197. 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1979).

198. 1978 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் 15/1978).

199. 1978 ஆம் ஆண்டு மேற்கு வங்காளம் மாற்றாக்கம் செய்யப்பட்ட நிலத்தை மீட்டளிக்கும் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXIV/1978).

200. 1980 ஆம் ஆண்டு மேற்கு வங்காளம் மாற்றாக்கம் செய்யப்பட்ட நிலத்தை மீட்டளிக்கும் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் LVI/1980).

201. 1964 ஆம் ஆண்டு கோவா, தமண் மற்றும் டையூ வேளாண் குத்தகையுரிமைச் சட்டம் (கோவா, தமண் மற்றும் டையூ சட்டம் 7/1964).

202. 1976 ஆம் ஆண்டு கோவா, தமண் மற்றும் டையூ வேளாண் குத்தகையுரிமை (ஐந்தாம் திருத்தம்) சட்டம் (கோவா, தமண் மற்றும் டையூ சட்டம் 17/1976).

203. 1959 ஆம் ஆண்டு ஆந்திப் பிரதேசப் பட்டியல் வரையிடங்கள் சார்ந்த நில உரிமைமாற்றம் பற்றிய ஒழுங்குறுத்தும்விதி (ஆந்திரப் பிரதேச ஒழுங்குறுத்தும்விதி 1/1959).

204. 1963 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசப் பட்டியல் வரையிடங்கள் சார்ந்த சட்டங்கள் (நீட்டிப்பு மற்றும் திருத்தம்) ஒழுங்குறுத்தும்விதி (ஆந்திரப் பிரதேச ஒழுங்குறுத்தும்விதி 2/1963).

205. 1970 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசப் பட்டியல் வரையிடங்கள் சார்ந்த நில உரிமைமாற்றம் (திருத்தம்) ஒழுங்குறுத்தும்விதி (ஆந்திரப் பிரதேச ஒழுங்குறுத்தும்விதி 1/1970).

206. 1971 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசப் பட்டியல் வரையிடங்கள் சார்ந்த நில உரிமைமாற்றம் (திருத்தம்) ஒழுங்குறுத்தும்விதி (ஆந்திரப் பிரதேச ஒழுங்குறுத்தும்விதி 1/1971).

207. 1978 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசப் பட்டியல் வரையிடங்கள் சார்ந்த நில உரிமைமாற்றம் (திருத்தம்) ஒழுங்குறுத்தும்விதி (ஆந்திரப் பிரதேச ஒழுங்குறுத்தும்விதி 1/1978).

208. 1985 ஆம் ஆண்டு பீகார் குத்தகையுரிமைச் சட்டம் (பீகார் சட்டம் 8/1985).

209. 1908 ஆம் ஆண்டு சோட்டா நாகபுரி குத்தகையுரிமைச் சட்டம் (வங்காளச் சட்டம் 6/1908) (அத்தியாயம் VIII–46, 47, 48, 48அ, 49 ஆகிய பிரிவுகள்; அத்தியாயம் X–71, 71அ, 71ஆ ஆகிய பிரிவுகள் மற்றும் அத்தியாயம் XVIII–240, 241, 242 ஆகிய பிரிவுகள்).

210. 1949 ஆம் ஆண்டு சந்தல் பர்கானாக்கள் குத்தகையுரிமை (துணைவுறு வகையங்கள்) சட்டம் (பீகார் சட்டம் 14/1949), 53ஆம் பிரிவு நீங்கலாக.

211. 1969 ஆம் ஆண்டு பீகார் பட்டியல் வரையிடங்கள் சார்ந்த ஒழுங்குறுத்தும்விதி (பீகார் ஒழுங்குறுத்தும்விதி 1/1969).

212. 1982 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்பு வரையிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகை நிலத்தை கையகப்படுத்தல்) (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 55/1982).

213. 1969 ஆம் ஆண்டு குஜராத் தேவஸ்தானம் இனாம்கள் ஒழிப்புச் சட்டம் (குஜராத் சட்டம் 16/1969).

214. 1976 ஆம் ஆண்டு குஜராத் குத்தகையுரிமைச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் 37/1976).

215. 1976 ஆம் ஆண்டு குஜராத் வேளாண் நிலங்கள் உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (குடியரசுத்தலைவரின் சட்டம் 43/1976).

216. 1977 ஆம் ஆண்டு குஜராத் தேவஸ்தானம் இனாம்கள் ஒழிப்பு (திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் 27/1977).

217. 1977 ஆம் ஆண்டு குஜராத் குத்தகையுரிமைச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் 30/1977).

218. 1980 ஆம் ஆண்டு பம்பாய் நில வருவாய் (குஜராத் இரண்டாம் திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் 37/1980).

219. 1982 ஆம் ஆண்டு பம்பாய் நிலவருவாய்த் தொகுப்புச் சட்டம் மற்றும் நிலப்பிடிமானமுறை ஒழிப்புச்சட்டங்கள் (குஜராத் திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் 8/1982).

220. 1968 ஆம் ஆண்டு இமாச்சலப் பிரதேச நில உரிமைமாற்றம் (ஒழுங்குறுத்தம்) சட்டம் (இமாச்சலப் பிரதேசச் சட்டம் 15/1969).

221. 1986 ஆம் ஆண்டு இமாச்சலப் பிரேதச நில உரிமைமாற்றம் (ஒழுங்குறுத்தம்) (திருத்தம்) சட்டம் (இமாச்சலப் பிரதேசச் சட்டம் 16/1986).

222. 1978 ஆம் ஆண்டு கர்நாடகப் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (குறித்த சில நிலங்கள் உரிமை மாற்றத்தைத் தடைசெய்தல்) சட்டம் (கர்நாடகச் சட்டம் 2/1979).

223. 1978 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 13/1978).

224. 1981 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 19/1981).

225. 1976 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச நிலவருவாய்த் தொகுப்புச் சட்டம் (மூன்றாம் திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 61/1976).

226. 1980 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச நிலவருவாய்த் தொகுப்புச் சட்டம் (திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 15/1980).

227. 1981 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச அக்ரிஷிக் ஜாட் உச்சாட்டம் சீமா அதிநியம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 11/1981).

228. 1976 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 1/1984).

229. 1984 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 14/1984).

230. 1989 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 8/1989).

231. 1966ஆம் ஆண்டு மகாராஷ்டிரா நிலவருவாய்த் தொகுப்புச் சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் 41/1966) 36, 36அ, 36ஆ ஆகிய பிரிவுகள்.

232. 1976ஆம் ஆண்டு மகாராஷ்டிரா நிலவருவாய்த் தொகுப்புச் சட்டம் மற்றும் மகாராஷ்டிரப் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கு நிலங்களை மீட்டளித்தல். (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் 30/1977).

233. 1985ஆம் ஆண்டு மகாராஷ்டிர குறித்தசில நிலங்களிலுள்ள சுரங்கங்கள் மற்றும் கனிமங்களுக்காக இருந்துவரும் உடைமை உரிமைகள் ஒழிப்புச் சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் 16/1985).

234. 1956 ஆம் ஆண்டு ஒரிசா பட்டியல் வரையிடங்கள் சார்ந்த நிலையியல் சொத்தினை (பட்டியிலில் கண்ட பழங்குடியினர்) உரிமைமாற்றம் செய்தல் பற்றிய ஒழுங்குறுத்தும்விதி (ஒரிசா ஒழுங்குறுத்தும்விதி 2/1956).

235. 1975ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 29/1976).

236. 1976 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) (இரண்டாம் திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 30/1976)

237. 1976ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 44/1976).

238. 1984ஆம் ஆண்டு ராஜஸ்தான் குடியேற்றம் (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 12/1984).

239. 1984ஆம் ஆண்டு ராஜஸ்தான் குத்தகையுரிமை (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 13/1984).

240. 1987ஆம் ஆண்டு ராஜஸ்தான் குத்தகையுரிமை (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 21/1987).

241. 1979ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பை நிருணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 8/1980).

242. 1980ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பை நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1980).

243. 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பை நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 59/1981).

244. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பை நிருணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1984).

245. 1982ஆம் ஆண்டு உத்திரப் பிரதேச நிலச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் (உத்தரப் பிரதேசச் சட்டம் 20/1982).

246. 1965ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 18/1965.)

247. 1966ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 11/1966.)

248. 1969ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 23/1969)

249. 1977ஆம் ஆண்டு மேற்கு வங்காள உரிமை நிலச் சொத்தினைக் கையகப்படுத்துதல் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 36/1977).

250. 1979ஆம் ஆண்டு மேற்கு வங்காள கைப்பற்று நிலவருவாய்ச் சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 44/1979).

251. 1980ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 41/1980).

252. 1981ஆம் ஆண்டு மேற்கு வங்காள கைப்பற்று நிலவருவாய் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 33/1981).

253. 1981ஆம் ஆண்டு கல்கத்தா திக்கா குத்தகையுரிமை (கையகப்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துதல்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 37/1981).

254. 1982ஆம் ஆண்டு மேற்கு வங்காளக் கைப்பற்று நிலவருவாய் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 23/1982).

255. 1984 ஆம் ஆண்டு கல்கத்தா திக்கா குத்தகையுரிமை (கையகப்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துதல்) (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 41/1984).

256. 1968 ஆம் ஆண்டு மாகி நிலச் சீர்த்திருத்தங்கள் சட்டம் (பாண்டிச்சேரி சட்டம் 1/1968)

257. 1980 ஆம் ஆண்டு மாகி நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (பாண்டிச்சேரி சட்டம் 1/1981).

[1][257(அ). 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (கல்வி நிறுவனங்களில் பதவியிட ஒதுக்கீடு மற்றும் மாநிலத்தின் கீழுள்ள பணியங்களில் அமர்த்துகைகளில் அல்லது பணியடைகளில் ஒதுக்கீடு) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1994)]

[2][258. 1947 ஆம் ஆண்டு பீகார் மதிப்புரிமை பெற்ற நபர்கள் பண்ணை குத்தகையுரிமைச் சட்டம் (பீகார் சட்டம் 4/1948)]

259. 1956 ஆம் ஆண்டு பீகார் நிலவுடைமைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் சிறு கூறுகளாகப் பிரிப்பதைத் தடைசெய்தல் சட்டம் (பீகார் சட்டம் 22/1956)

260. 1970 ஆம் ஆண்டு பீகார் நிலவுடைமைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் சிறு கூறுகளாகப் பிரிப்பதைத் தடை செய்தல் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 7/1970).

261. 1970 ஆம் ஆண்டு பீகார் மதிப்புரிமை பெற்ற நபர்கள் பண்ணைக் குத்தகையுரிமைச் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 9/1970).

262. 1973 ஆம் ஆண்டு பீகார் நிலவுடைமைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் சிறுகூறுகளாகப் பிரிப்பதைத் தடை செய்தல் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 27/1975).

263. 1981 ஆம் ஆண்டு பீகார் நிலவுடைமைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் சிறு கூறுகளாகப் பிரிப்பதைத் தடை செய்தல் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 35/1982).

264. 1987 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்த்திருத்தங்கள் (உச்சவரம்பு வரையிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகை நிலத்தைக் கையகப்படுத்துல்) (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 21/1987).

265. 1989 ஆம் ஆண்டு பீகார் மதிப்புரிமை பெற்ற நபர்கள் பண்ணைக் குத்தகையுரிமைச் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 11/1989).

266. 1989 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 11/1990)

267. 1984 ஆம் ஆண்டு கர்நாடகப் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் குறித்தசில நிலங்களின் உரிமை மாற்றத்தைத் தடைசெய்தல் (திருத்தம்) சட்டம் (கர்நாடகச் சட்டம் 3/1984).

268. 1989 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 16/1989).

---

1. 1994ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து ஆறாம் திருத்தம்) சட்டத்தால் புகுத்தப்பட்டது.
2. 1995ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து எட்டாம் திருத்தம்) சட்டத்தால் புகுத்தப்பட்டது.

269. 1989 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்த்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (கேரள சட்டம் 2/1989).

270. 1989 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசா சட்டம் 9/1990).

271. 1979 ஆம் ஆண்டு ராஜஸ்தான் குத்தகையுரிமைச் (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 16/1979).

272. 1987 ஆம் ஆண்டு ராஜஸ்தான் குடியேற்றச் (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 2/1987).

273. 1989 ஆம் ஆண்டு ராஜஸ்தான் குடியேற்றச் (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 12/1989).

274. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/1984)

275. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/1986).

276. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4/1988).

277. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) (திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1989).

278. 1981 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 50/1981)

279. 1986 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 5/1986).

280. 1986 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 19/1986)

281. 1986 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (மூன்றாம் திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 35/1986)

282. 1989 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 23/1989)

283. 1990 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 24/1990)

284. 1991 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் தீர்ப்பாயச் சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 12/1991)]

விளக்கம்: 1993 ஆம் ஆண்டு ராஜஸ்தான் குத்தகையுரிமைச் சட்டத்தின்படி (ராஜஸ்தான் சட்டம் III/1995) செய்யப்பட்ட கையகப்படுத்துதல் எதுவும் 31அ உறுப்பின் (i) ஆம் கூறிலுள்ள இரண்டாம் வரம்புரைக்கு முரணாக இருக்குமாயின், முரணாக இருக்கும் அளவுக்கு, அது இல்லா நிலையது ஆகும்.

[1]பத்தாம் இணைப்புப்பட்டியல்

[102 (2), 191(2) ஆகிய உறுப்புகள்]

கட்சிமாறுதல் காரணமாக விளையும் தகுதிக்கேடு குறித்த வகையங்கள்

1. பொருள்கோள் :

இந்த இணைப்புப்பபட்டியலில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) "அவை" என்பது, நாடாளுமன்ற, ஈரவைகளில் ஒன்று அல்லது மாநிலச் சட்டமன்றப் பேரவை அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலச் சட்டமன்ற ஈரவைகளில் ஒன்று என்று பொருள்படும்;

(ஆ) "சட்டமன்றக் கட்சி" என்பது, 2ஆம் பத்தியின் அல்லது [2][*****] 4ஆம் பத்தியின் வகையங்களுக்கு இணங்க அரசியல் கட்சி எதனையும் சேர்ந்துள்ள அவை உறுப்பினர் ஒருவரைப் பொறுத்தவரை, மேற்சொன்ன வகையங்களுக்குக்கிணங்க அப்போதைக்கு அந்த அரசியல் கட்சியைச் சேர்ந்துள்ள அவை உறுப்பினர்கள் அனைவரையும் கொண்டிருக்கிற குழுவம் என்று பொருள்படும்;

(இ) "முதல் சார்பு அரசியல் கட்சி" என்பது, அவை உறுப்பினர் ஒருவரைப் பொறுத்தவரை, 2ஆம் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின் நோக்கங்களுக்காக அவர் சார்ந்துள்ள அரசியல் கட்சி என்று பொருள்படும்;

(ஈ) "பத்தி" என்பது, இந்த இணைப்புப்பட்டியலில் உள்ள ஒரு பத்தி என்று பொருள்படும்.

2. கட்சிமாறுதல் காரணமாக விளையும் தகுதிக்கேடு :

(1) [3][4, 5 ஆகிய பத்திகளின்] வகையங்களுக்கு உட்பட்டு, அரசியல் கட்சி எதனையும் சார்ந்தவரான அவை ஒன்றின் உறுப்பினர்—

(அ) அத்தகைய அரசியல் கட்சியில் தமக்குள்ள உறுப்பினர் பதவியைத் தம்விருப்பாக விட்டிருப்பாராயின், அல்லது

(ஆ) தாம் சார்ந்துள்ள அரசியல் கட்சியோ இதன்பொருட்டு அக்கட்சியினால் அதிகாரமளிக்கப்பெற்ற நபரோ அமைப்போ பிறப்பிக்கும் பணிப்புரை எதற்கும் மாறாக, அந்த அரசியல் கட்சியின், நபரின் அல்லது அமைப்பின் முன் இசைவைப் பெறாமல், அந்த அவையில் வாக்களித்தார் அல்லது வாக்களிக்காதிருந்தார் என்றால், அவ்வாறு வாக்களித்த அல்லது வாக்களிக்காமலிருந்த செயல், அந்த அரசியல் கட்சியினாலோ நபராலோ அமைப்பினாலோ அவ்வாறு வாக்களித்த அல்லது வாக்களிக்காமலிருந்த தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள்ளாக மன்னிக்கப்படவில்லையாயின்

அந்த அவை உறுப்பினராக இருப்பதற்குத் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

விளக்கம்.—இந்த உள்பத்தியினைப் பொறுத்தவரை,—

(அ) தேர்ந்தெடுக்கப்பெற்ற அவை உறுப்பினர் எவரும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பெறுவதற்கு அவரைத் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தி வைத்த அரசியல் கட்சி, ஏதேனுமிருப்பின், அக்கட்சியைச் சார்ந்துள்ள உறுப்பினர் எனக் கொள்ளப்பெறுவார்;

(ஆ) நியமனம் செய்யப்பெற்ற அவை உறுப்பினர் எவரும்,—

(i) அத்தகைய உறுப்பினராக அவர் நியமனம் செய்யப்பெற்ற தேதியன்று அரசியல் கட்சி ஒன்றன் உறுப்பினராக அவர் இருக்கிறவிடத்து, அந்த அரசியல் கட்சியைச் சார்ந்துள்ளவர் எனக் கொள்ளப்பெறுவார்;

---

1. 1985ஆம் ஆண்டு அரசமைப்பு (ஐம்பத்திரண்டாம் திருத்தம்) சட்டத்தின் 6ஆம் பிரிவினால் (1-3-1985முதல் செல்திறம் பெறுமாறு) சேர்க்கப்பட்டது.
2. 2003ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஒன்றாம் திருத்தம்) சட்டத்தினால் விட்டுவிடப்பட்டது.
3. 2003ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஒன்றாம் திருத்தம்) சட்டத்தினால் மாற்றாக அமைக்கப்பட்டது.

(ii) பிற நேர்வு எதிலும், 99ஆம் உறுப்பின் அல்லது, நேர்வுக்கேற்ப, 188ஆம் உறுப்பின் வேண்டுறுத்தங்களுக்கு இணங்கத் தம் பதவியினை ஏற்று அமர்கிற தேதியிலிருந்து ஆறு மாதங்கள் கழிவுறுவதற்கு முன்பு, அவர் உறுப்பினராகச் சேர்கிற அல்லது, நேர்வுக்கேற்ப, முதற்கண் உறுப்பினராகச் சேர்கிற அரசியல் கட்சி எதுவோ அதைச் சார்ந்தவர் எனக் கொள்ளப்பெறுவார்.

(2) அரசியல் கட்சி எதன்சார்பாகவும் நிறுத்திவைக்கப்பெற்ற வேட்பாளராக இல்லாமைலேயே ஓர் அவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற எவரும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெற்ற பின்பு அரசியல் கட்சி எதிலும் சேர்வாராயின், அந்த அவையின் உறுப்பினராக இருந்து வருவதற்கு அவர் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

(3) நியமனம் செய்யப்பெற்ற அவை உறுப்பினர் ஒருவர், 99ஆம் உறுப்பின் அல்லது, நேர்வுக்கேற்ப, 188ஆம் உறுப்பின் வேண்டுறுத்தங்களுக்கு இணங்கத் தம் பதவியினை ஏற்று அமர்கிற தேதியிலிருந்து ஆறு மாதங்கள் கழிவுற்ற பின்பு, அரசியல் கட்சி எதிலும் சேருவாராயின், அந்த அவையின் உறுப்பினராக இருந்து வருவதற்கு அவர் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

(4) இந்தப் பத்தியின் மேலே கண்ட வகையங்களில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 1985ஆம் ஆண்டு அரசமைப்பு (ஐம்பத்திரண்டாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலையில் ஓர் அவையின் (தேர்ந்தெடுக்கப்பெற்ற அல்லது நியமனம் செய்யப்பெற்ற) உறுப்பினராக இருக்கும் ஒருவர்,—

(i) அத்தகைய தெர்டக்கநிலையை ஒட்டிமுன்பு ஓர் அரசியல் கட்சியின் உறுப்பினராக அவர் இருந்திருப்பாராயின், இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியினைப் பொறுத்தவரை, அத்தகைய அரசியல் கட்சியால் வேட்பாளராக நிறுத்தி வைக்கப்பெற்று அந்த அவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றவர் எனக் கொள்ளப்பெறுவார்;

(ii) பிற நேர்வு எதிலும், இந்தப் பத்தியின் (2)ஆம் உள்பத்தியினைப் பொறுத்தவரை, அரசியல் கட்சி எதனாலும் நிறுத்தி வைக்கப்பெற்ற ஒரு வேட்பாளராக இல்லாமலேயே அந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர் எனக் கொள்ளப்பெறுவார் அல்லது, நேர்வுக்கேற்ப, இந்தப் பத்தியின் (3) ஆம் உள்பத்தியினைப் பொறுத்தவரை, அந்த அவையின் ஓர் நியமன உறுப்பினர் எனக் கொள்ளப்பெறுவார்.

3. [1][**********]

4. கட்சிமாறுதல் காரணமாக விளையும் தகுதிக்கேடு, கட்சிகளின் இணைப்பு ஏற்படும் நேர்வில் பொருந்துறாது :

(1) அவை உறுப்பினர் ஒருவர் தம் முதல்சார்பு அரசியல் கட்சி பிறிதோர் அரசியல் கட்சியுடன் இணையுங்கால், தாமும் தம் முதல்சார்பு அரசியல் கட்சியின் பிற உறுப்பினர்கள் எவரும்–

(அ) அந்தப் பிறிதோர் அரசியல் கட்சியின் அல்லது, நேர்வுக்கேற்ப, அவ்வாறு இணைந்ததால் உருவான புதிய அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர்களாக ஆகியிருப்பதாகவோ,

(ஆ) அக்கட்சி இணைப்பை ஏற்றுக்கொள்ளாது தனித்ததொரு குழுவமாகச் செயலுறுவதை விரும்பியேற்றுள்ளதாகவோ

கோருகின்றவிடத்து, 2ஆம் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின்படி தகுதிக் கேடுற்றவர் ஆகார்; மேலும், 2 ஆம் பத்தியின் (1) ஆம் உள்பத்தியினைப் பொறுத்தவரை அத்தகைய பிறிதோர் அரசியல் கட்சி அல்லது, நேர்வுக்கேற்ப, புதிய அரசியல் கட்சி அல்லது குழுவம், அவர் சார்ந்துள்ள அரசியல் கட்சியாகவும், இந்த உள்பத்தியினைப் பொறுத்தவரை அவருடைய முதல்சார்பு அரசியல் கட்சியாகவும் அவ்வாறு கட்சிகளின் இணைப்பு ஏற்பட்ட காலத்திலிருந்து கொள்ளப்படும்.

---

1. 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஒன்றாம் திருத்தம்) சட்டத்தினால் விட்டுவிடப்பட்டது.

(2) இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியினைப் பொறுத்தவரை, அவை உறுப்பினர் ஒருவருடைய முதல்சார்பு அரசியல் கட்சியின் இணைப்பை, அந்தச் சட்டமன்றக் கட்சி உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினருக்குக் குறையாதவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் மட்டுமே அக்கட்சி இணைப்பு ஏற்பட்டிருப்பதாகக் கொள்ளப்படும்.

5. விலக்கு :

இந்த இணைப்புப்பட்டியலில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மக்களவைத் தலைவராகவோ துணைத் தலைவராகவோ அல்லது மாநிலங்களவைத் துணைத் தலைவராகவோ அல்லது ஒரு மாநிலச் சட்டமன்ற மேலவைத் தலைவராகவோ துணைத் தலைவராகவோ அல்லது ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவைத் தலைவராகவோ துணைத் தலைவராகவோ பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒருவர்—

(அ) அத்தகைய பதவிக்குத் தாம் தேர்ந்தெடுக்கப்பெற்றதன் காரணமாக, அவ்வாறு தேர்தெடுக்கப்பெற்றதை ஒட்டிமுன்பு தாம் சார்ந்திருந்த அரசியல் கட்சியின் உறுப்பினர் பதவியைத் தம்விருப்பாக விட்டிருந்து அதன்பின்பு அப்பதவியைத் தாம் தொடர்ந்து வகித்துவரும் காலத்தில் அதே அரசியல் கட்சியில் மீண்டும் சேராதிருந்தாலும் அல்லது பிறிதோர் அரசியல் கட்சியின் உறுப்பினராக ஆகாதிருந்தாலும், அல்லது

(ஆ) அப்பதவிக்குத் தாம் தேர்ந்தெடுக்கப்பெற்றதன் காரணமாக, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெற்றதை ஒட்டிமுன்பு தாம் சார்ந்திருந்த அரசியல் கட்சியின் உறுப்பினராக இருப்பதை விட்டதன்பின், அவ்வாறு தாம் பதவி வகிப்பது அற்றுப்போன நிலையில் அதே அரசியல் கட்சியில் மீண்டும் சேர்ந்தாலும்

இந்த இணைப்புப்பட்டியலின்படி தகுதிகேடுற்றவர் ஆவதில்லை.

6. கட்சிமாறுதல் காரணமாக விளையும் தகுதிக்கேடுகள் குறித்த பிரச்சினைகளின் மீது முடிவு செய்தல் :

(1) அவை உறுப்பினர் ஒருவர், இந்த இணைப்புப்பட்டியலின்படி தகுதிக்கேடுற்றவராகிவிட்டாரா என்பது பற்றிய பிரச்சினை எதுவும் எழுமாயின், அப்பிரச்சினை, மேலவைத் தலைவரின் அல்லது, நேர்வுக்கேற்ப, பேரவைத் தலைவரின் முடிபிற்காக வைக்கப்படவேண்டும்; அவரது முடிபே அறுதியானது ஆகும்:

வரம்புரையாக: மேலவைத்தலைவர் அல்லது பேரவைத்தலைவர் அத்தகைய தகுதிக்கேடுற்றவராகிவிட்டாரா என்ற பிரச்சினை எழுமிடத்து, இதன் பொருட்டு அந்த அவையின் உறுப்பினர் ஒருவரை அவை தேர்ந்தெடுத்து அவரின் முடிபிற்காக அந்தப் பிரச்சினை வைக்கப்படுதல் வேண்டும்; அவரது முடிபே அறுதியானது ஆகும்.

(2) இந்த இணைப்புப்பட்டியலின்படி அவை உறுப்பினர் ஒருவரின் தகுதிக்கேடு குறித்த பிரச்சினை எதன் தொடர்பாகவும், இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின்படியான நடவடிக்கைகள் அனைத்தும், 122 ஆம் உறுப்பில் குறிக்கப்பட்ட நாடாளுமன்ற நடவடிக்கைகளாக அல்லது, நேர்வுக்கேற்ப, 212 ஆம் உறுப்பில் குறிக்கப்பட்ட ஒரு மாநிலச் சட்டமன்ற நடவடிக்கைகளாகக் கொள்ளப்படும்.

7. நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிற்குத் தடை :

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், இந்த இணைப்புப்பட்டியலின்படி அவையின் உறுப்பினர் ஒருவரது தகுதிக்கேடு தொடர்பான பொருட்பாடு எதனையும் பொறுத்து, நீதிமன்றம் எதுவும் அதிகாரவரம்பு உடையது ஆகாது.

8. விதிகள் :

(1) இந்தப் பத்தியின் (2) ஆம் உள்பத்தியின் வகையங்களுக்கு உட்பட்டு, மேலவைத் தலைவர் அல்லது பேரவைத் தலைவர், இந்த இணைப்புப்பட்டியலின் வகையங்களைச் செல்திறப்படுத்துவதற்காக விதிகளை வகுக்கலாம்; மேலும், மேலே கண்டவற்றின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, அத்தகைய விதிகள் குறிப்பாகப் பின்வருவனவற்றிற்கு வகை செய்யலாம்.—

(அ) அவையின் வெவ்வேறு உறுப்பினர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சிகள் இருப்பின் அவை குறித்த பதிவேடுகளை அல்லது பிற பதிவணங்களைப் பேணி வருதல்:

(ஆ) அவையின் உறுப்பினர் ஒருவர் தொடர்பாக, சட்டமன்றக் கட்சித் தலைவர், அந்த உறுப்பினரைப் பொறுத்து 2ஆம் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின் (ஆ) கூறில் சுட்டப்பட்டுள்ள தன்மையதான மன்னிப்பு பற்றி அளிக்கவேண்டியதான அறிக்கை; மற்றும், அந்த அறிக்கை எந்தக்காலத்திற்குள், எந்த அதிகாரஅமைப்பிற்கு அளிக்கப்படவேண்டும் என்பது;

(இ) அவையின் உறுப்பினர்கள் எவரையும் அரசியல் கட்சி ஒன்றில் சேர்த்துக்கொள்வது பற்றி அந்த அரசியல்கட்சி அளிக்கவேண்டியதான அறிக்கைகள்; மேலும், அத்தகைய அறிக்கைகளை அவைப் பதவியாளர் எவருக்கு அளிக்கப்பட வேண்டும் என்பது; மற்றும்

(ஈ) 6ஆம் பத்தியின் (1) ஆம் உள்பத்தியில் சுட்டப்பட்டுள்ள பிரச்சினை எதனையும் முடிபு செய்வதற்காக நடத்தப்படும் விசாரணைக்கான நெறிமுறை உள்ளடங்கலாக, அத்தகைய பிரச்சினையை முடிபு செய்வதற்கான நெறிமுறை.

(2) இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின்படி மேலவைத்தலைவரால் அல்லது பேரவைத் தலைவரால் விதிகள் வகுக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், ஒரு கூட்டத்தொடரிலோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்தக் கூட்டத்தொடர்களிலோ மொத்தம் முப்பது நாட்களுக்கு அவையின்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அந்த விதிகள் அந்த அவையால் மாற்றமைவுகளுடனோ மாற்றமைவுகளின்றியோ, முன்பே ஒப்பேற்பளிக்கப்படவோ அல்லது ஒப்பேற்பு மறுக்கப்படவோ இல்லையெனில், மேற்சொன்ன முப்பது நாட்கள் காலஅளவு கழிவுற்றதும், அவ்விதிகள் செல்திறம் பெறும்; மேலும், அவற்றிற்கு அவ்வாறு ஒப்பேற்பளிக்கப்படுகிறவிடத்து, அந்த அவையின் முன்பு வைக்கப்பட்ட வடிவத்தில் அல்லது, நேர்வுக்கேற்ப, மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் செல்திறம் பெறும்; அந்த விதிகளுக்கு ஒப்பேற்பு மறுக்கப்படுகிறவிடத்து, அவை செல்திறம் இல்லாது போகும்.

(3). 105ஆம் உறுப்பின் அல்லது, நேர்வுக்கேற்ப, 194ஆம் உறுப்பின் வகையங்களுக்கும், இந்த அரசமைப்பின்படி தாம் கொண்டிருக்கும் பிற அதிகாரம் எதற்கும் குந்தகமின்றி, மேலவைத் தலைவர் அல்லது பேரவைத் தலைவர், இந்தப் பத்தியின்படி வகுக்கப்பட்டுள்ள விதிகளை ஒரு நபர் வேண்டுமென்றே மீறுகிறார் எனில், அவர், அவையின் மதிப்புரிமையினை மீறுபவர் மீது எடுக்கப்படும் அதே நடவடிக்கைக்கு உள்ளாவார் என்று பணிக்கலாம்.

[1][பதினொன்றாம் இணைப்புப்பட்டியல்

(243 (எ) உறுப்பு)

1. வேளாண்மை விரிவாக்கம் உள்ளடங்கலாக வேளாண்மை.
2. நில மேம்பாடு, நிலச்சீர்த்திருத்தங்களைச் செயற்படுத்துதல், நில ஒருங்கிணைப்பு மற்றும் மண்வளப்பாதுகாப்பு.
3. குறுநீர்ப்பாசனம், நீர் மேலாண்மை மற்றும் ஆற்றுப்பள்ளத்தாக்கின் மேம்பாடு.
4. கால்நடைப் பராமரிப்பு, பால்பண்ணை, கோழியின் வளர்ப்பு.
5. மீன் வளங்கள்.
6. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள்.
7. சிறுகாடுகளின் விளைபொருள்.
8. உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் உள்ளடங்கலான சிறுதொழில் நிறுவனங்கள்.
9. காதி, கிராம மற்றும் குடிசைத்தொழில்கள்.
10. ஊரக வீட்டுவசதி.
11. குடிநீர்.
12. எரிபொருள் மற்றும் கால்நடைத் தீவனம்.
13. சாலைகள், தரைப்பாலங்கள், பாலங்கள், நீர்வழிகள் மற்றும் போக்குவரவுக்கான பிற வழிகள்.
14. மின்பகிர்மானம் உள்ளடங்கலான, ஊரக மின் வசதி.
15. மரபுசாரா எரிசக்தி வளங்கள்.
16. வறுமை ஒழிப்புத்திட்டம்.
17. முதல்நிலை மற்றும் இடைநிலைப் பள்ளிகள் உள்ளடங்கலாக, கல்வி.
18. தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி.
19. வயதுவந்தோருக்கான மற்றும் முறைசாரா கல்வி.
20. நூலகங்கள்.
21. பண்பாடு சார்ந்த நடவடிக்கைகள்.
22. சந்தைகள் மற்றும் விழாக்கள்.
23. மருத்துவமனைகள், முதன்மை சுகாதார மையங்கள் மற்றும் மருந்தகங்கள் உள்ளடங்கலாக சுகாதாரம் மற்றும் துப்புரவு.
24. குடும்பநலன்.
25. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு.
26. ஊனமுற்றோர் மற்றும் மனச்சீர்கேடுற்றவர்களின் நல்வாழ்வு உள்ளடங்கலாக சமூக நல்வாழ்வு.
27. நலிவடைந்த பிரிவினர்களின் குறிப்பாக, பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினரின் நல்வாழ்வு.
28. பொதுப் பங்கீட்டு முறை.
29. சமுதாய சொத்திருப்புகளைப் பேணி வருதல்.]

---

1. 1992 ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து மூன்றாம் திருத்தம்) சட்டத்தால் (24–4–1993 முதல் செல்திறம் பெறுமாறு) சேர்க்கப்பட்டது.

[1][பன்னிரண்டாம் இணைப்புப்பட்டியல்

(243ய–ஆம் உறுப்பு)

1. நகர்ப்புற திட்டமிடுதல் உள்ளடங்கலான நகரகத் திட்டமிடுதல்.
2. நிலப்பயன்பாட்டை ஒழுங்குறுத்துதல் மற்றும் கட்டடங்களைக் கட்டுதல்.
3. பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்குத் திட்டமிடுதல்.
4. சாலைகளும் பாலங்களும்.
5. வீடு, தொழிற்சாலை, வணிகம் ஆகியவற்றின் நோக்கங்களுக்காக நீர் வழங்குதல்,
6. மக்கள் நல்வாழ்வும் துப்புரவு பேணுதலும் மற்றும் திடக்கழிவு மேலாண்மை.
7. தீயணைப்பு சேவைகள்.
8. நகரகக் காணிகங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு. உயிரின வாழ்க்கைச் சூழல்களை மேம்படுத்துதல்.
9. ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர் உள்ளடங்கலாகச் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கான நலன்களைப் பாதுகாத்தல்.
10. குடிசைப் பகுதி மேம்பாடு மற்றும் தரம் உயர்த்துதல்.
11. நகரக வறுமைத் துயர் தவிப்பு
12. பூங்காக்கள், தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற நகரக வசதிகள் மற்றும் வள வசதிகள்.
13. பண்பாடு, கல்வி, கலை சார்ந்த துறைகளை மேம்படுத்துதல்.
14. புதைத்தலும், இடுகாடுகளும் எரியூட்டுதலும் சுடுகாடுகள் மற்றும் மின்சார சுடுகாடுகள்.
15. கால்நடைத் தொழுவங்கள்; விலங்குகள் கொடுமைப்படுத்தப்படுவதைத் தடுத்தல்.
16. பிறப்பு இறப்புகளைப் பதிவு செய்தல் உள்ளடங்களான பிறப்பு–இறப்பு புள்ளி விவரங்கள்.
17. தெரு விளக்கிடுதல், வண்டி நிறுத்துமிடங்கள், பேருந்து நிறுத்தங்கள், பொதுக் கழிப்பிடங்கள் உள்ளடங்கலான பொது வசதிகள்.
18. இறைச்சிக் கொட்டில்களையும் தோல் பதனிடும் இடங்களையும் ஒழுங்குறுத்துதல்.]

---

1. 1992 ஆம் ஆண்டு அரசமைப்புச் (எழுபத்தி நான்காம் திருத்தம்) சட்டத்தால் (1–6–1993 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.